

श्री देवी भागवत-सार:

ஆசிரியர் 'அண்ணு' உரை எழுதிய எங்கள் நூல்கள்

ஈச கேன-கட உபநிஷதங்கள்	3	00
காலிகோ	5	00
ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள் (பக்கம் 163)	5	00
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)	3	00
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துகளின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன் (மூன்ருவது பதிப்பு) பக்கம் 320	6	00
காலிகோ	9	00
மஹாநாராயண உபநிஷத்து (தைத்ரீய நாராயணவல்லி) பக்கம் 146	5	00

II. பகவத்கீதை

ஸ்ரீமத் பகவத்கீதை	8	00
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	00
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	2	00
ஸ்ரீமத் பகவத்கீதை வெண்பா (முத்து ஐயர் இயற்றியது) பக்கம் 223	2	00
ஸ்ரீ ருத்ரம்—சமகம் (மஹாந்யாஸத்துடன் பக்கம் 296)	6	50
காலிகோ	10	00
தைத்திரீய மந்த்ரகோசம் —		
தமிழில் ஸ்வரத்துடன்	8	00
நாகரத்தில் ஸ்வரத்துடன் முதல் பாகம்	2	50
ஷ இரண்டாம் பாகம்	3	00
ஸ்ரீதேவி மஹாத்மியம்	9	00
,, அட்டை பைண்டு	12	00
ஸ்ரீதேவி மஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்)	5	00

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

॥ श्रीदेवी भागवत सारः ॥

உரையுடன் கூடியது

இரண்டாவது பாகம்

நவாஹக்ரமத்தில் நாலாவது நாள் முதல்
ஆறுவது நாள் முடிவுவரை உள்ள கதை
(5.19—8.17)

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : : சென்னை 600 004

Published by
© The President
Sri Ramakrishna Math
11 Ramakrishna Math Road
Madras 600 004

First Edition
3M 3C – 3 – 1980

Printed in India
at Amra Press
132 L. B. Road
Madras-600 041

பொருளடக்கம்

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

இரண்டாவது பாகம்

நவாஹக்ரமப்படி
நாலாவது நாள்

(5.19—6.18)

ஐந்தாவது நாள்
(6.19—7.18)

ஆருவது நாள்
(7.19—8.17)

ஸ்ரீ:

ஸ்ரீகணேசனுக்கு நமஸ்காரம்

ஸ்ரீதேவீ பாகவத ஸாரம்

இரண்டாவது பாகம்

॥ भगवतीस्तुतिः ॥ १९ ॥

व्यास उवाच —

अथ प्रमुदिताः सर्वे देवा इन्द्रपुरोगमाः ।
महिषं निहतं दृष्ट्वा तुष्टुवुर्जगदम्बिकाम् ॥ १९. १ ॥

19. பகவதீ ஸ்துதி

வியாஸர் கூறியது—

19.1. மகிஷாசுரன் கொல்லப்பட்டதைக் கண்டு மகிழ்ச்சி பொங்கிய தேவர்கள் எல்லோரும் இந்திரனை முன்னிட்டுக்கொண்டு சென்று ஜகதம்பிகையைத் துதித்தார்கள்.

देवा ऊचुः —

ब्रह्मा सृजत्यवति विष्णुरिदं महेशः
शक्त्या तदैव हरते ननु चान्तकाले ।
ईशा न तेऽपि भवन्ति त्वया विहीना-
स्तस्मात्त्वमेव जगतः स्थिति-नाशकर्त्री ॥ १९. २ ॥

कीर्ति-र्मतिः स्मृतिगती करुणा दया त्वं
श्रद्धा धृतिश्च वसुधा कमला जया च ।
पुष्टिः कलाऽथ विजया गिरिजा जया त्वं
तुष्टिः प्रभा त्वमसि बुद्धिरुमा रमा च ॥ १९. ३ ॥

विद्या क्षमा जगति कान्तिरपीह मेधा
सर्वं त्वमेव विदिता भुवनत्रयेऽस्मिन् ।
आभिर्विना तव तु शक्तिभिराशु कर्तुं
को वा क्षमः सकललोक-निवासभूमे ॥ १९. ४ ॥

தேவர்கள் கூறியது—

19.2. பிரம்மா இவ்வுலகைச் சிருஷ்டிப்பதும் விஷ்ணு இரக்ஷிப்பதும் மகேசுவரன் முடிவு காலத்தில் அழிப்பதும் சக்தியாகிய உன்னுடைய பிரபாவத்தாலேயே என்பது நிச்சயம். நீயன்றி அவர்கள் சமர்த்தர்களல்லர். ஆகையால் நீயே உலகின் இருப்பையும் அழிவையும் செய்பவளாகின்றாய்.

19.3. கீர்த்தி, மதி, ஞாபகசக்தி, கதி, கருணை, தயை, சிரத்தை, திடச்சித்தம் எல்லாம் நீயே. பூதேவியும் ஸ்ரீதேவியும், ஜயலக்ஷ்மியும் நீயே. புஷ்டி, கலை, வெற்றி, சந்தோஷம், பிரமாணம், புத்தி ஆகியவையும் நீயே. நீயே பார்வதி (உமா), ரமா எல்லாம்.

19.4. அனைத்துலகிற்கும் உறைவிடமாகியவளே! வித்தை, பொறுமை, ஒளி, புத்தி ஆகிய எல்லாம் இம் மூவுலகிலும் நீயே என உணரப்படுகின்றாய். உன்னுடைய இச்சக்திகளின்றி யார் தான் எக்காரியத்தைத்தான் விரைவில் சாதிக்க வல்லவராவர்?

भोगप्रदाऽसि भवतीह चराचराणां
स्वांशैर्ददासि खलु जीवनमेव नित्यम् ।
स्वीयान् सुरान् जननि पोषयसीह यद्वत्
तद्वत्परानपि च पालयसीति हेतोः ।। १९. ८ ।।

चित्रं त्वयाऽरिजनताऽपि दयार्द्रभावाद्
हत्वा रणे शितशरै-र्गमिता द्युलोकम् ।
नोचेत्स्वकर्मनिचिते निरये नितान्तं
दुःखातिदुःखगति-मापदमापतेत्सा ।। १९. २१ ।।

देवा मखेष्वपि हुतं मुनिभिः स्वभागं
गृह्णीयुरम्ब विधिवत्प्रतिपादितं किम् ।
स्वाहा न चेत्त्वमसि तत्र निमित्तभूता
तस्मात्त्वमेव ननु पालयसीव विश्वम् ।। १९. ३० ।।

19.8. சராசரப் பிரபஞ்சத்திற்கு நீ போகத்தையளிப்பவளாகிருய். உன்னுடைய அம்சத்தாலேயே என்றும் வாழ்வையளிப்பவளாகிருய். தாயே! நீ உன்னையண்டிய தேவர்களைப் போஷிப்பது போலவே பிறரையும் காப்பாற்றுகிருய்.

19.21. பகைவர்களும் போரில் கூரிய பாணங்களால் உன்னுல் கொல்லப்பட்டு உன்னுடைய தயையால் இளகிய சுபாவத்தால் வானுலகிற்கு அனுப்பப்பட்டனர் என்பது வியக்கத்தக்கது. இன்றேல் அவர்களுடைய கர்மத்தின் பயனுய் அவர்கள் கொடிய நரகத்தில் விழ்ந்து முடிவிலாத் துன்பத்தையனுபவிப்பவர்களாயிருக்க வேண்டும்.

19.30. அம்பிகையே! முனிவர்களால் யாகங்களில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிர்ப்பாகங்களை அந்தந்த தேவர்கள் 'ஸ்வாஹா' என்ற மந்திரத்தால் விதிப்படி நீ பூஜிக்கப்படாவிடின் ஏற்றுக் கொள்வார்களா? அதற்கு நீதான் காரணம். ஆகையால் உலகனைத்தையும் நீயே பரிபாலிக்கிருய்.

हत्वाऽसुरं महिषरूपधरं महोग्रं
मातस्त्वया सुरगणः किल रक्षितोऽयम् ।
कां ते स्तुतिं जननि मन्दधियो विदामो
वेदा गतिं तव यथार्थतया न जग्मुः ॥ १९. ३२ ॥

स्मरिष्यामो यथा तेऽम्ब सदैव पदपंकजम् ।
तथा कुरु जगन्मात-र्भक्तिं त्वय्यचंचलाम् ॥ १९. ३७ ॥

अपराध-सहस्राणि मातैव सहते सदा ।
इति ज्ञात्वा जगद्योनिं न भजन्ते कुतो जनाः ॥ १९. ३८ ॥
द्वौ सुपर्णौ तु देहेऽस्मिंस्तयोः सख्यं निरन्तरम् ।
नान्यः सखा तृतीयोऽस्ति योऽपराधं सहेत हि ॥ १९. ३९ ॥

19.32. தாயே! எருமைவடிவைத் தரித்தவனும் மிகக் கொடியவனுமான அசுரனைக் கொன்று உன்னால் இந்த தேவர்களின் சமூகம் காப்பாற்றப்பட்டது. வேதங்களும் உன்னுடைய லீலையை உள்ளபடி அறியாமலிருக்கையில் மந்த புத்திபடைத்த நாங்கள் உன்னைத் துதிக்கும் வகையை எங்ஙனம் அறிவோம்?

19.37. அம்பிகையே! உலகின்ற அன்னையே! உன்னிடம் பிறழாத பக்தியிருக்கும்படியும் எப்பொழுதும் உன்னுடைய திருவடித்தாமரையை நாங்கள் நினைவில் போற்றியிருக்கும்படியும் செய்தருள்வாய்.

19.38. ஆயிரக்கணக்கான பிழைகளைத் தாய்போல் எப்பொழுதும் நீ பொறுத்துக் கொள்கிறாய் என்றுணர்ந்தும் ஏன் ஜனங்கள் உலகமாதாவாகிய உன்னை வழிபடுவதில்லை?

19.39. (விருக்ஷம் போன்ற) இந்த தேகத்தில் அழகிய சிறகுடைய இரண்டு பக்ஷிகள் இருக்கின்றன. அவை என்றும் இணைபிரியாதவை (ஜீவனும் பராசக்தியும்). ஜீவனுடைய பிழைகளைப் பொறுத்துக்கொள்வதற்கு மூன்றாவதாக வேறு ஒரு துணையும் இல்லை.

तस्माज्जीवः सखायं त्वां हित्वा किन्नु करिष्यति ।
पापात्मा मन्दभाग्योऽसौ सुरमानुषयोनिषु ॥ १६. ४० ॥

पाहि नः सततं देवि सर्वैस्तव वरायुधैः ।
अन्यथा शरणं नास्ति त्वत्पदाम्बुजरेणुतः ॥ १६. ४२ ॥

व्यास उवाच —

एवं स्तुता सुरै-र्देवी तत्रैवाऽन्तरधीयत ।
विस्मयं परमं जग्मु-र्देवास्तां वीक्ष्य निर्गताम् ॥ १६. ४३ ॥

जनमेजय उवाच —

हत्वा तं महिषं पापं स्तुता संपूजिता सुरैः ।
क्व गता सा महालक्ष्मीः सर्वतेजः समुद्भवा ॥ २०. १३ ॥

19.40. ஆகையால் துணையாகிய உன்னைவிட்டுப் பிரிந்து பாவத்திலாழ்ந்தவனும் பாக்கியமற்றவனும் தேவப் பிறவி மனிதப்பிறவி முதலியவற்றில் சுழன்று வருபவனுமாகிய ஜீவன் என்ன செய்யக் கூடும்?

19.42. தேவி! உன்னுடைய சிறந்த ஆயுதங்கள் அனைத்தாலும் எப்பொழுதும் எங்களைக் காத்தருள்வாய். உன்னுடைய திருவடித்தாமரையின் துகள்களன்றி எங்களுக்குப் புகலிடம் வேறு இல்லை.

வியாஸர் கூறியது—

19.43. இங்ஙனம் தேவர்களால் துதிக்கப்பட்டபின் தேவியானவள் அங்கேயே மறைந்துவிட்டாள். அவள் மறைந்து விட்டதைக் கண்டு தேவர்கள் மிக்க வியப்படைந்தனர்.

ஜனமேஜயர் கூறியது—

20.13. அந்தப்பாவியாகிய மகிஷாசுரனைக் கொன்றபின் தேவர்களால் துதித்துப் பூஜிக்கப் பெற்றவளும் வீரிய மனைத்தின் தொகுதியாய்த் தோன்றியவளுமான மகாலக்ஷ்மி எங்கு சென்றாள்?

व्यास उवाच —

पूर्वं मया ते कथितं मणिद्वीपं मनोहरम् ।
क्रीडास्थानं सदा देव्या वल्लभं परमं स्मृतम् ॥ २०. १६ ॥

यत्र ब्रह्मा हरिः स्थाणुः स्त्रीभावं ते प्रपेदिरे ।
पुरुषत्वं पुनः प्राप्य स्वानि कार्याणि चक्रिरे ॥ २०. १७ ॥

यः सुधासिन्धुमध्येऽस्ति द्वीपः परमशोभनः ।
नानारूपैः सदा तत्र विहारं कुरुतेऽम्बिका ॥ २०. १८ ॥

स्तुता संपूजिता देवैः सा तत्रैव गता शिवा ।
यत्र संक्रीडते नित्यं मायाशक्तिः सनातनी ॥ २०. १९ ॥

வியாஸர் கூறியது—

20.16. மணித்துவிபம் என ஒன்று உளதென்றும் அது தேவிக்கு மிகவும் பிரியமான விளையாட்டிடமென்றும் அது அனைத்திற்கும் மேலான ஸ்தானமாய்க் கருதப்படுவதென்றும் என்னால் முன்பு உனக்குக் கூறப்பட்டுளது.

20.17. அங்கு பிரம்மாவும் விஷ்ணுவும் ருத்திரரும் பெண்ணுருவையடைந்து பின்பு ஆணுருவை மீண்டும் பெற்றுத் தத்தம் காரியங்களைச் செய்யலாயினர்.

20.18. பரம மங்களமான அந்தத் தீவு திருப்பாற் கடலின் நடுவிலுளது. பலவிதமான வடிவங்களுடன் அம்பிகை அங்கு எப்பொழுதும் லீலை புரிகிறுள்.

20.19. ஸநாதனமான மாயாசக்தியாயும் மங்கள வடிவினளாயும் உள்ள தேவி எப்பொழுதும் லீலை புரியும் அந்த இடத்திற்கே தேவர்களால் துதித்துப் பூஜிக்கப்பெற்ற பின் சென்றுள்.

देवास्तां निर्गतां वीक्ष्य देवीं सर्वेश्वरीं तथा।
रविवंशोद्भवं चक्रु-र्भूमिपालं महाबलम् ॥ २०. २० ॥

अयोध्यातिपतिं वीरं शत्रुघ्नं नाम पार्थिवम्।
सर्वलक्षणसंपन्नं महिषस्याऽऽसने शुभे ॥ २०. २१ ॥

दत्त्वा राज्यं तदा तस्मै देवा इन्द्रपुरोगमाः।
स्वकीयैर्वाहनैः सर्वे जग्मुः स्वान्यालयानि ते ॥ २०. २२ ॥

गतेषु तेषु देवेषु पृथिव्यां पृथिवीपते।
धर्मराज्यं बभूवाऽथ प्रजाश्च सुखितास्तथा ॥ २०. २३ ॥

पर्जन्यः कालवर्षी च धरा धान्यगुणावृता।
पादपाः फलपुष्पाढ्या बभूवुः सुखदाः सदा ॥ २०. २४ ॥

ब्राह्मणा क्षत्रिया वैश्याः शूद्राश्च नृपसत्तम।
देवी-भक्तिपराः सर्वे सम्बभूवुर्धरातले ॥ २०. २६ ॥

20.20–22. ஸர்வேசுவரியான தேவி மறைந்து விட்டதைக் கண்ட தேவர்கள் சிறந்த பலவானும், வீரனும், அரசலக்ஷணங்களனைத்தும் நிறைந்தவனும், அயோத்தியில் அரசு புரிந்தவனுமான சூரியகுல மன்னன் சத்ருக்னனை மகிஷாசுரனுடைய சிம்மாசனத்தில் இருத்திவிட்டு இந்திரனை முன்னிட்டுக் கொண்டு தத்தம் வாகனங்களிலேறி அனைவரும் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

20.23. அரசே! அங்ஙனம் தேவர்கள் சென்ற பின் பூமியில் தர்மராஜ்யம் நடைபெற்றது. மக்கள் இன்புற்று வாழ்ந்தனர்.

20.24. உரிய காலத்தில் மழை பெய்தது; பூமியில் தானியங்கள் நன்ருய் விளைந்தன; மரங்கள் புஷ்பங்களும் பழங்களும் நிறைந்து எப்பொழுதும் இன்பத்தையளித்தன.

20.29. அரசசிரேஷ்டரே! பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் இப்பூதலத்தில் எல்லோரும் தேவியிடம் பக்திமிகுந்தவர்களாயிருந்தனர்.

पतिव्रतधरा नार्यः सुशीलाः सत्यसंयुताः।
पितृभक्तिपराः पुत्रा आसन् धर्मपरायणाः ॥ २०. ३१ ॥

न रोगो न च मात्सर्यं न विरोधः परस्परम्।
सर्वत्र सुखसंपन्ना नरा नार्यः सुखान्विताः ॥ २०. ३५ ॥

महिषे निहते सर्वे सुखिनो वेदतत्पराः।
बभूवु-र्व्रतनिष्णाता दानधर्मपरास्तदा ॥ २०. ४६ ॥

अनुद्वेगः प्रजानां वै सम्बभूव धनागमः।
बहुक्षीराः शुभा गावो नद्यश्चैव बहूदकाः ॥ २०. ४८ ॥

वृक्षा बहु फलाश्चासन्मानवा रोगवर्जिताः।
नाऽऽधयो नेतयः क्वापि प्रजानां दुःखदायकाः ॥ २०. ४९ ॥

20.31. ஸ்திரீகள் பதிவிரதைகளாகவும் நல்ல குணமுடையவர்களாகவும் உண்மையே பேசுபவர்களாகவுமிருந்தனர். புத்திரர்கள் பிதிருபக்தியுடையவர்களாகவும் தருமத்தைப் பின்பற்றி நடப்பவர்களாகவுமிருந்தனர்.

20.35. ஆடவர்களும் பெண்டிர்களும் நோயற்றவர்களாகவும், பொறாமையற்றவர்களாயும், ஒருவர்க்கொருவர் பகைமையற்றவர்களாகவும் எங்கும் இன்பத்துடன் கூடியவர்களாகவு மிருந்தனர்.

20.46. மகிஷாசுரன் கொல்லப்பட்டபின் எல்லோரும் சுகமுடையவர்களாகவும் வேதக்கலையில் ஈடுபட்டவர்களாகவும் விரதங்களைக் கைக்கொண்டவர்களாகவும் தானதர்மங்களைச் செய்பவர்களாகவும் இருந்தனர்.

20.48. மக்களுக்குப் பொருளீட்டுதல் துன்பமின்றி நிகழ்ந்தது. பசுக்கள் நிறையப்பாலுடையவைகளாயிருந்தன. நதிகள் நிறைய நீருடையவையாயிருந்தன.

20.49. மரங்கள் நிறையப் பழங்களையளித்தன. மனிதர்கள் நோயற்றிருந்தனர். மக்களுக்குத் துக்கத்தைத்தரும் மனக்கவலைகளும் ஈதிபாதைகளும் எங்கும் இருக்கவில்லை.

न निधनमुपयान्ति प्राणिनस्तेऽप्यकाले
सकलविभवयुक्ता रोगहीनाः सदैव ।
निगमहविहितधर्मे तत्पराश्चण्डिकाया-
श्चरणसरसिजानां सेवने दत्तचित्ताः ॥ २०. ५० ॥

॥ इति श्रीदेवीभागवते पंचमस्कन्धे विंशोऽध्यायः ॥

॥ भगवतीस्तुतिः समाप्ता ॥

20.50. பிராணிகள் அகாலத்தில் மரணமடையவில்லை. மக்கள் செல்வம் நிறைந்தவர்களாயும், நோயற்றவர்களாயும் எப்பொழுதும் வேதம் விதிக்கும் தருமத்தில் நிலைபெற்றவர்களாயும் சண்டிகையின் பாதகமலச் சேவைக்கு மனதை அர்ப்பணம் செய்தவர்களாகவும் விளங்கினர்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஐந்தாவது ஸ்கந்தத்தில்
இருபதாவது அத்தியாயம் முற்றும்.

பகவதீ ஸ்துதி முற்றும்.

॥ शुंभनिशुंभवधवर्णनम् ॥ २० ॥

व्यास उवाच —

श्रृणु राजन् प्रवक्ष्यामि देव्याश्चरितमुत्तमम् ।
सुखदं सर्वजन्तूनां सर्वपापप्रणाशनम् ॥ २१.१ ॥
यथा शुंभो निशुंभश्च भ्रातरौ बलवत्तरौ ।
बभूवतु-र्महावीराववध्यौ पुरुषैः किल ॥ २१.२ ॥
हताम्बिकया तौ तु संग्रामेऽतीव दारुणे ।
देवानां च हितार्थाय सर्वैः परिचरैः सह ॥ २१.४ ॥

राजोवाच —

कावेतावसुरावादौ कथं तौ बलिनां वरौ ।
कथं च निहतौ सर्वं कथयस्व सविस्तरम् ॥ २१.८ ॥

20. சும்ப நிசும்ப வத வர்ணனை

வியாஸர் கூறியது—

21.1. அரசே! எல்லாப் பிராணிகளுக்கும் இன்பத்தை அளிப்பதும் அவர்களுடைய பாவங்களையெல்லாம் போக்குவதுமான தேவியின் உத்தம சரித்திரத்தைக் கூறுகிறேன். கேளும்.

21.2–4. பலம் மிகுந்தவர்களும் மகாவீரர்களுமான இரு சகோதரர்கள், சும்பன், நிசும்பன் எனப் பெயர்பெற்றவர்கள் எப்படி ஆடவர் எவராலும் கொல்ல முடியாதவர்களாக ஆனார்கள் என்பதையும், அவர்கள் பரிஜனங்கள் அனைவருடனும் கடும்போரில் தேவர்களுக்கு நன்மைபுரிய விரும்பிய அம்பிகையால் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதையும் கூறுகிறேன்.

அரசன் கூறியது—

21.8. அவ்வசுரர்கள் யாவர் என்பதையும் அவர்கள் ஆதியில் எப்படி பலவான்களிற் சிறந்தவர்களானார்கள் என்பதையும் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதையும் விரிவாகக் கூறியருளும்.

व्यास उवाच —

शृणु राजन् कथां दिव्यां सर्वपापप्रणाशिनीम् ।
देव्याश्चरित-संयुक्तां सर्वार्थफलदां शुभाम् ।। २१. ९ ।।
पुरा शुंभनिशुंभौ द्वावसुरौ भूमिमण्डले ।
पातालतश्च संप्राप्तौ भ्रातरौ शुभदर्शनौ ।। २१. १० ।।
तौ प्राप्तयौवनौ चैव चेरतुस्तप उत्तमम् ।
अन्नोदकं परित्यज्य पुष्करे लोकपावने ।। २१. ११ ।।
तयोस्तुष्टोऽभवद्ब्रह्मा सर्वलोकपितामहः ।
तत्राऽऽगतश्च भगवानारुह्य वरटापतिम् ।। २१. १२ ।।
तावुभौ च जगत्स्रष्टा दृष्ट्वा ध्यानपरौ स्थितौ ।
उत्तिष्ठतं महाभागौ तुष्टोऽहं तपसा किल ।। २१. १४ ।।

வியாஸர் கூறியது—

21.9. அரசே! பாவமனைத்தையும் போக்குவதும், எல்லா நற்பயன்களையுமளிப்பதும், மங்களமானதும் தேவியின் லீலைகளை வர்ணிப்பதுமான தெய்வீகக் கதையைக் கேளும்.

21.10. ஆதிகாலத்தில் சும்பன், நிசும்பன் என்ற இரு அசுர சகோதரர்கள், கம்பீரமான தோற்றமுடையவர்கள், பாதாளத்திலிருந்து பூமண்டலத்திற்கு வந்து சேர்ந்தனர்.

21.11. அவர்கள் யௌவன பருவத்தையடைந்ததும் உலகைப் புனிதமாக்கும் புஷ்கரம் சென்று அன்னபானதிகளைத் துறந்து உத்தமமான தவஞ் செய்தனர்.

21.12. உலக பிதாமகராகிய பகவான் பிரம்மா அவர்களுடைய தவத்தால் மகிழ்ந்து ஹம்ஸ வாகனத்தில் ஏறிக்கொண்டு அங்கு எழுந்தருளினர்.

21.14. உலகின் சிருஷ்டிகர்த்தாவாகிய அவர் அவ்விருவரும் தியானத்திலாழ்ந்து நிற்பதைக்கண்டு ‘மகா பாக்கியசாலிகளே! உங்களுடைய தவத்தால் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். எழுந்திருங்கள்’ எனக் கூறினர்.

वांछितं वां वरं कामं ददामि ब्रुवतामिह।
कामदोऽहं समायातौ दृष्ट्वा वां तपसो बलम् ॥ २१. १५ ॥

इति श्रुत्वा वचस्तस्य प्रबुद्धौ तौ समाहितौ।
प्रदक्षिणक्रियां कृत्वा प्रमाणं चक्रतुस्तदा ॥ २१. १६ ॥

दण्डवत्प्रणिपातं च कृत्वा तौ दुर्बलाकृती।
ऊचतु-र्मधुरां वाचं दीनौ गद्गदया गिरा ॥ २१. १७ ॥

देवदेव दयासिन्धो भक्तानामभयप्रद।
अमरत्वं च नौ ब्रह्मन् देहि तुष्टोऽसि चेद्विभो ॥ २१. १८ ॥

ब्रह्मोवाच —

जातस्य हि ध्रुवो मृत्यु-र्ध्रुवं जन्म मृतस्य च।
मर्यादा विहिता लोके पूर्वं विश्वकृता किल ॥ २१. २२ ॥

21.15. 'உங்களுக்குப் பிரியமான வரத்தையளிக்கிறேன், கூறுங்கள். உங்களுடைய தவத்தின் வலிமையைக் கண்டு விரும்பியதையளிக்க நான் வந்துள்ளேன்.'

21.16. இவ்வார்த்தையைக் கேட்டு அவ்விருவரும் எழுந்து வணக்கத்துடன் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தார்கள்.

21.17. தவத்தால் மெலிந்த அவர்கள் தடிபோல் கீழே விழுந்து நமஸ்கரித்து தழுதழுத்த இனிய குரலில் பணிவுடன் பின்வருமாறு கூறினார்கள்.

21.18. 'தேவதேவா! கருணைக்கடலே! பக்தர்களுக்கு அபயமளிக்கும் பிரம்மதேவரே! பிரபுவே! தவத்தால் திருப்தியடைந்திருந்தால் எங்களுக்குச் சாகா வரம் அளியுங்கள்.'

பிரம்மா கூறியது—

21.22. 'பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம். இறந்தவனுக்குப் பிறவியும் நிச்சயம். இது உலகத்தை உண்டாக்கிய பரம்பொருளால் ஆதியில் உலகில் ஏற்படுத்திய வரம்பு.

मर्तव्यं सर्वथा सर्वैः प्राणिभिर्नात्र संशयः।
अन्यं प्रार्थयतं कामं ददामि तंच वांछितम् ॥ २१. २३ ॥

व्यास उवाच —

तदाकर्ण्य वचस्तस्य सुविमृश्य तु दानवौ।
ऊचतुः प्रणिपत्याथ ब्रह्माणं पुरतः स्थितम् ॥ २१. २४ ॥

पुरुषैरमराद्यैश्च मानवैर्मृगपक्षिभिः।
अवध्यत्वं कृपासिन्धो देहि नौ वांछितं वरम् ॥ २१. २५ ॥

नारी बलवती काऽस्ति या नो नाशं करिष्यति।
न बिभीमः स्त्रियः कामं त्रैलोक्ये सचराचरे ॥ २१. २६ ॥

इति श्रुत्वा तयोर्वाक्यं प्रददौ वांछितं वरम्।
ब्रह्मा प्रसन्नमनसा जगामाथ स्वमालयम् ॥ २१. २७ ॥

21.23. 'எல்லாப் பிராணிகளும் எப்படியோ இறந்தே தீரும். இதில் சந்தேகமில்லை. உங்களுக்கு விருப்பமான வேறு வரத்தைக் கேளுங்கள், அளிக்கிறேன்.'

வியாஸர் கூறியது—

21.24. அவ்வசுரர்கள் அவ்வார்த்தையைக் கேட்டு நன்கு ஆலோசித்துத் தம் முன் நின்ற பிரம்மாவை நமஸ்கரித்துவிட்டுக் கூறியதாவது.

21.25. 'கருணைக்கடலே! தேவர்களோ மனிதர்களோ மிருகங்களோ பறவைகளோ எவர்களாயிருந்தாலும் ஆண்பாலால் எங்களுக்குச் சாவு ஏற்படாமலிருக்கும் வரத்தை விரும்புகிறோம். அதை அளியும்.

21.26. 'எங்களை யழிக்கக்கூடிய பலம்படைத்த பெண்பால் எங்கே இருக்கும்? மூவுலகிலும் சராசரத்தில் எந்தப் பெண்பாலிடமிருந்தும் நாங்கள் அஞ்சவில்லை.'

21.27. என்றிங்ஙனம் அவர்கள் கூறியதைக் கேட்டு பிரம்மா திருப்தியான மனதுடன் அவர்களுக்கு விருப்பமான அவ்வரத்தைக் கொடுத்துவிட்டுத் தமதுலகிற்கேகினர்.

गतेऽथ भवने तस्मिन् दानवौ स्वगृहं गतौ।
भृगुं पुरोहितं कृत्वा चक्रतुः पूजनं तदा ॥ २१. २९ ॥

शुभे दिने सुनक्षत्रे जातरूपमयं शुभम्।
कृत्वा सिंहासनं दिव्यं राज्यार्थं प्रददौ मुनिः ॥ २१. ३० ॥

शुम्भाय ज्येष्टभूताय ददौ राज्यासनं शुभम्।
सेवनार्थं तदैवाशु संप्राप्ता दानवोत्तमाः ॥ २१. ३१ ॥

चण्डमुण्डौ महावीरौ भ्रातरौ बलदर्पितौ।
संप्राप्तौ सैन्यसंयुक्तौ रथवाजिगजान्वितौ ॥ २१. ३२ ॥

धूम्रलोचन-नामा च तद्रूपश्चण्डिविक्रमः।
शुंभश्च भूपतिं श्रुत्वा तदागाद् बलसंयुतः ॥ २१. ३३ ॥

21.29. பிரம்மா தமதிருப்பிடம் சென்றபின் அசுரர்களும் தங்கள் வீட்டுக்குச் சென்று பிருகு முனிவரைப் புரோகிதராய்க் கொண்டு அவரைப் பூஜித்தனர்.

21.30. அம்முனிவர் நல்ல நக்ஷத்திரம் கூடிய சுப தினத்தில் அவர்களுக்கு வெள்ளியாலான அழகிய திவ்ய சிம்மாஸனத்தை அரசாட்சிக்காக உண்டாக்கிவைத்தார்.

21.31. மூத்தவனான சும்பனுக்கு சுபமான ஆட்சி பீடத்தை அளித்தார். அப்பொழுது அவனுக்குச் சேவை புரிவதற்காக அசுரசிரேஷ்டர்கள் வந்து கூடினார்கள்.

21.32. மகாவீரர்களான இருசகோதரர்கள் சண்டன், முண்டன் எனப்பெயர் பெற்றவர்கள் பலக் கொழுப்புடனும், தேர், குதிரை, யானை முதலியவற்றுடன் கூடிய சேனையுடனும் வந்து சேர்ந்தனர்.

21.33. தூம்ரலோசனன் எனப்பெயர் பெற்றவனும் பெயருக்கொத்த வடிவும், கொடுமையான பராக்கிரமமும், உடையவனும் சும்பன் ஆட்சிபுரிபவன் எனக்கேட்டுத் தன் சேனைபலத்துடன் வந்தான்.

रक्तबीजस्तथा शूरो वरदानबलाधिकः ।
अक्षौहिणीभ्यां संयुक्त-स्तत्रैवागत्य संगतः ।। २१. ३४ ।।

तस्यैकं कारणं राजन् संग्रामे युध्यतः सदा ।
देहाद्रुधिरसंपातस्तस्य शस्त्राहतस्य च ।। २१. ३५ ।।

जायते च यदा भूमावुत्पद्यन्ते ह्यनेकशः ।
तादृशाः पुरुषाः क्रूरा बहवः शस्त्रपाणयः ।। २१. ३६ ।।

संभवन्ति तदाकारास्तद्रूपास्तत्पराक्रमाः ।
युद्धं पुनस्ते कुर्वन्ति पुरुषा रक्तसंभवाः ।। २१. ३७ ।।

अतः सोऽपि महावीर्यः संग्रामेऽतीव दुर्जयः ।
अवध्यः सर्वभूतानां रक्तबीजो महासुरः ।। २१. ३८ ।।

21.34. வரத்தால் அதிகமான பலம் பெற்ற சூரனுகிய ரக்தபீஜன் என்பவனும் இரண்டு அக்ஷௌஹிணீ சேனைகளுடன் அங்கு வந்து கூடிக் கொண்டான்.

21.35–36. அரசே! அவனுக்கு ரக்தபீஜன் என்ற பெயருக்கு ஒரு காரணம் உண்டு. போர்க்களத்தில் அவன் யுத்தம் புரிகையில் ஆயுதத்தால் அடிபட்டு அவனுடைய உடலிலிருந்து இரத்தம் பூமியில் விழுந்தால் அதிலிருந்து அவனைப்போலவே ஆயுதபாணிகளாயும், கொடியவர்களாயும் பலபேர் தோன்றுவார்கள்.

21.37. அவனைப்போல ஆகிருதியும் உருவமும் பராக்கிரமமும் படைத்தவர்களாய் இரத்தத்திலிருந்து எழுந்த அப்புருஷர்கள் மேலும் யுத்தம் செய்வார்கள்.

21.38. ஆகையால் அக்கொடிய அசுரனுகிய ரக்தபீஜன் எந்த ஜீவனுலும் கொல்லமுடியாதவனுய் மகாவீரனுய்ப் போரில் ஜயிக்க முடியாதவனுய் இருந்தான்.

अन्ये च बहवः शूराश्चतुरंगबलान्विताः।
शुंभं च नृपतिं मत्वा बभूवुस्तस्य सेवकाः ॥ २१. ३९ ॥

असंख्याता तदा जाता सेना शुंभनिशुंभयोः।
पृथिव्याः सकलं राज्यं गृहीतं बलवत्तया ॥ २१. ४० ॥

सेनायोगं तदा कृत्वा निशुंभः परवीरहा।
जगाम तरसा स्वर्गं शचीपति-जयाय च ॥ २१. ४१ ॥

स वज्राभिहतो भूमौ पपात दानवानुजः।
भग्नं बलं तदा तस्य निशुंभस्य महात्मनः ॥ २१. ४२ ॥

भ्रातरं मूर्छितं श्रुत्वा शुंभः परबलार्दनः।
तत्रागत्य सुरान् सर्वांस्ताडयामास सायकैः ॥ २१. ४३ ॥

21.39. இன்னும் பல சூரர்கள் சதுரங்க பலத்துடன் சும்பன் அரசன் என்பதைக் கருதி அவனைச் சேவிப்பவர் களானார்கள்.

21.40. சும்பன், நிசும்பன் ஆகிய இருவருடைய சேனை கணக்கற்றதாயிற்று. அப்படிப்பட்ட பலத்துடன் அவர் களால் உலகிலுள்ள எல்லா அரசுகளும் பிடிக்கப்பட்டன.

21.41. எதிரிகளின் வீரியத்தை யழிக்கவல்ல நிசும்பன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு இந்திரனை ஜயிப்பதற்காக விரைவில் சுவர்க்கம் சென்றான்.

21.42. வஜ்ராயுதத்தால் அடிக்கப்பட்டு இளைய வனாகிய அவ்வசுரன் பூமியில் விழுந்தான். மகாபலசாலி யாகிய அந்த நிசும்பனுடைய சேனாபலமும் சிதறடிக்கப் பட்டது.

21.43. சகோதரன் மூர்ச்சித்து விழுந்தான் என்று கேள்விப்பட்ட பராக்கிரமசாலியான சும்பன் அங்கு சென்று பாணங்களால் தேவர்களையெல்லாம் தாக்கினான்.

कृतं युद्धं महत्तेन शुंभेनाक्लिष्टकर्मणा ।
निर्जितास्तु सुराः सर्वे सेन्द्राः पालाश्च सर्वशः ॥ २१. ४४ ॥

हृताधिकारास्ते सर्वे बभूवु-र्विजने वने ।
निरालम्बा निराधारा निस्तेजस्का निरायुधाः ॥ २१. ५२ ॥

बलवन्तो महाभागा बहुज्ञा धनसंयुताः ।
काले दुःखं तथा दैन्य-माप्नुवन्ति नराधिप ॥ २१. ५४ ॥

मखानां च शतं कृत्वा प्राप्येन्द्रासनमुत्तमम् ।
पुनर्दुःखं परं प्राप्तं कालस्य गतिरीदृशी ॥ २१. ५७ ॥

भ्रष्टराज्यास्ततो देवाश्चिन्तामापुः सुदुस्तरम् ।
गुरुं दुःखातुरास्ते तु पप्रच्छुरिदमादृताः ॥ २२. २ ॥

21.44. எளிதில் செயலாற்றும் சும்பனுல் பெரிய யுத்தம் செய்யப்பட்டது. இந்திரனுடனும் திக்பாலகர் களுடனும் தேவர்களெல்லாம் ஜயிக்கப்பட்டனர்.

21.52. ஆட்சி கவரப்பட்ட அவர்களெல்லோரும் ஜனசஞ்சாரமில்லாத வனத்தில் ஆதாரமற்றவர்களாய்ப் பிடிப்பற்றவர்களாய், ஆயுத மற்றவர்களாய் ஒளியிழந்தவர் களாய் வாழலாயினர்.

21.54. அரசே! பலவான்களும் மகாபாக்கியசாலி களும் நிறையக் கற்றவர்களும் செல்வம் படைத்தவர்களும் கூட காலப்போக்கில் இம்மாதிரி துக்கத்தையும் ஏழ்மை யையும் அடைகிறுர்கள்.

21.57. நூறு யாகங்களைச் செய்து உத்தமமான இந்திரப் பதவியையடைந்தும் மறுபடி மிகுந்த துக்கம், அடையப்பட்டது. காலத்தின் போக்கு இப்படிப்பட்டது.

22.2. அரசிழந்தவர்களும் கடக்க முடியாத கவலை யிலாழ்ந்தவர்களும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவர்களுமான தேவர்கள் தங்கள் குருவை நாடி ஆதரவுடன் பின்வருமாறு வினவினர்.

किं कर्तव्यं गुरो ब्रूहि सर्वज्ञस्त्वं महामुनिः।
उपायोऽस्ति महाभागे दुःखस्य विनिवृत्तये ॥ २२. ३ ॥

बृहस्पतिरुवाच—

पुरा भगवती तुष्टा जघान महिषासुरम्।
युष्माभिस्तु स्तुता देवी वरदानं ददावथ ॥ २२. १५ ॥

आपदं नाशयिष्यामि संस्मृता वा सदैव हि।
यदा यदा वो देवेश आपदो देव संभवाः ॥ २२. १६ ॥

तस्माद्धिमाचले गत्वा पर्वते सुमनोहरे।
आराधनं चण्डिकायाः कुरुध्वं प्रेमपूर्वकम् ॥ २२. १८ ॥

व्यास उवाच —

इति तस्य वचः श्रुत्वा देवास्ते प्रययुर्गिरिम्।
हिमालयं महाराज देवीध्यानपरायणाः ॥ २२. २३ ॥

22.3. 'குருவே! தாங்கள் மகாமுனிவரும் எல்லா மறிந்தவரும் ஆவீர்கள். மகிமைமிக்கவரே! துக்கத்திலிருந்து விடுபடுவதற்கு வழி என்ன? இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?'

பிருஹஸ்பதி கூறியது—

22.15. முன்பு பகவதி உங்களுக்கிரங்கி மகிஷாசுரனை வதைத்தாள். உங்களால் துதிக்கப்பெற்று தேவியானவள் வரமும் அளித்திருக்கிறுள்.

22.16. அவ்வரமாவது 'இந்திரனே! எப்பெப் பொழுது தேவர்களுக்கு ஆபத்து ஏற்படுகிறதோ அப்பொழுது என்னை நினைத்தால் எல்லாக் காலத்திலும் நான் ஆபத்தைப் போக்குகிறேன்' என்பதாம்.

22.18. ஆகையால் மனதிற்கினிய இமயமலை சென்று பக்தியுடன் சண்டிகையின் பூஜையைச் செய்யுங்கள்.

வியாஸர் கூறியது—

22.23. மகாராஜரே! அவருடைய இவ்வார்த் தையைக் கேட்டு தேவர்கள் தேவியை தியானித்துக்கொண்டு இமயமலை சென்றனர்.

मायाबीजं हृदा नित्यं जपन्तः सर्वं एव हि।
नमश्चक्रु-र्महामायां भक्ताना-मभयप्रदाम् ॥
तुष्टुवुः स्तोत्रमन्त्रैश्च भक्त्या परमया युताः ॥ २२. २४ ॥

देवा ऊचुः —

नमो देवि विश्वेश्वरि प्राणनाथे सदानन्दरूपे सुरानन्ददे ते।
नमो दानवान्तप्रदे मानवाना-मनेकार्थदे भक्तिगम्यस्वरूपे
॥ २२. २५ ॥

न ते नामसंख्या न ते रूपमीदृक् तथा कोऽपि वेदादि
देवस्वरूपे।
त्वमेवासि सर्वेषु शक्तिस्वरूपा प्रजासृष्टिसंहारकाले सदैव
॥ २२. २६ ॥

22.24. எல்லோருமே ('ஹ்ரீம்' எனும்) மாயா பீஜ மந்திரத்தை உள்ளத்தில் எப்பொழுதும் ஜபித்துக்கொண்டு பக்தர்களுக்கு பயத்தைப் போக்கும் மகாமாயையை நமஸ்கரித்து மிகுந்த உள்ளன்புடன் ஸ்தோத்ர மந்திரங்களால் துதித்தனர்.

தேவர்கள் கூறியது—

22.25. உலக நாயகி! உயிர்க்குயிராகியவளே! எப்பொழுதும் ஆனந்தவடிவானவளே! தேவர்களுக்கு ஆனந்தத்தையளிப்பவளே! அசுரர்களேயழிப்பவளே! மனிதர்களுக்குப் பலவகைப் பொருள்களேயளிப்பவளே! பக்தியால் அடையக்கூடிய ஸ்வரூபமுடையவளே! உனக்கு நமஸ்காரம்.

22.26. உன்னுடைய நாமங்கள் எண்ணற்றவை. உன் உருவம் இப்படிப்பட்டதென்று கூற இயலாது. ஆதி தெய்வ வடிவினளே! உன்னேயறிந்தவர் யார்? பிரஜைகளின் சிருஷ்டி ஸம்ஹார காலங்களில் எப்பொழுதும் நீயே எல்லாரிடமும் சக்திஸ்வரூபமாயிருக்கின்ருய்.

विना बाणपातै-र्विनामुष्टिघातै-र्विना शूलखड्गै-र्विना शक्तिदण्डैः।
रिपून्हन्तुमेवासि शक्ता विनोदात्तथाऽपीह लोकोपकाराय लीला ॥ २२. ३२ ॥

व्यास उवाच —

एव स्तुता सुरैः सर्वैरम्बिका करुणान्विता।
प्रादुर्बभूव तरसा रूपयौवनसंयुता ॥ २२. ४३ ॥

जाह्नव्यां स्नातुकामा सा निर्गता गिरिगह्वरात्।
दिव्यरूपधरा देवी विश्वमोहनमोहिनी ॥ २२. ४६ ॥

देव्युवाच —

भो भोः सुरवराः काऽत्र भवद्भिः स्तूयते भृशम्।
किमर्थं ब्रूत वः कार्यं चिन्ताविष्टाः कुतः पुनः ॥ २२. ४८ ॥

22.32. பாணம் போடாமலும் முஷ்டியால் தாக்காமலும் சூலம் வாள் சக்தி தண்டம் முதலிய ஆயுதங்களில்லாமலும் பகைவர்களை விளையாட்டாக அழிப்பதற்கு நீ சக்தியுள்ளவள். உலகிற்கு உபகாரம் செய்வது உனது லீலை.

வியாஸர் கூறியது—

22.43. கருணையுடன் கூடிய அம்பிகை தேவர்களனைவராலும் இவ்வாறு துதிக்கப்பட்டு அவர்கள் முன் யௌவன ரூப வடிவத்தில் சீக்கிரமே தோன்றினாள்.

22.46. உலகை மயக்கும் திவ்யமான அழகுடன் கூடிய தேவியானவள் கங்கையில் நீராடும் விருப்பத்துடன் மலைகுகையினின்று வெளிப்போந்தாள்.

தேவி கூறியது—

22.48. ஓ! தேவசிரேஷ்டர்களே! உங்களால் இங்கு வெகுவாய்த் துதிக்கப்படுபவள் எவள்? எதற்காக? உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் என்ன? மேலும் எதனால் நீங்கள் கவலை மிக்கவர்களாயிருக்கிறீர்கள்? கூறுங்கள்.

व्यास उवाच —

तच्छ्रुत्वा भाषितं तस्या मोहिता रूपसम्पदा ।
प्रेमपूर्वं हृदुत्साहास्तामूचुः सुरसत्तमाः ॥ २२. ४९ ॥

देवा ऊचुः —

अद्य शुंभनिशुंभौ द्वावसुरौ घोरदर्शनौ ।
उत्पन्नौ विघ्नकर्तारावहन्यौ पुरुषैः किल ॥ २२. ५३ ॥

रक्तभीजश्च बलवांश्चण्डमुण्डौ तथाऽसुरौ ।
एतैरन्यैश्च देवानां हृतं राज्यं महाबलैः ॥ २२. ५४ ॥

गतिरन्या न चास्माकं त्वमेवाऽसि महाबले ।
कुरु कार्यं सुराणां वै दुःखितानां सुमध्यमे ॥ २२. ५५ ॥

வியாஸர் கூறியது—

22.49. அந்த வார்த்தையைக் கேட்டும் அந்த தேவியினுடைய அழகுச் செல்வத்தால் கவரப்பட்டும் உள்ளத்தில் உற்சாகத்துடனும் பக்தியுடனும் தேவசிரேஷ்டர்கள் பின்வருமாறு பதில் கூறினார்கள்.

தேவர்கள் கூறியது—

22.53. இப்பொழுது சும்பன் நிசும்பன் என்ற இரண்டு கொடிய அசுரர்கள் இடையூறு விளைவிப்பவர்களாய்த் தோன்றியிருக்கிறார்கள். எந்த ஆண் மக்களாலும் அவர்கள் கொல்ல முடியாதவர்கள்.

22.54. ரக்தபீஜன் என்ற ஒரு பலசாலி; சண்ட, முண்டர்கள் என்ற அசுரர்கள்; இவர்களாலும் மகாபலவான்களான பிறராலும் தேவர்களுடைய ஆட்சி கவரப்பட்டுளது.

22.55. மகாவல்லமை வாய்ந்த நீயே எங்களுக்குப் புகலிடம்; வேறு கதியில்லை; இடையழகு வாய்ந்த தேவியே! துன்பத்திலாழ்ந்த தேவர்களின் காரியத்தை நீ செய்தருள வேண்டும்.

सकलभुवनरक्षा देवि कार्या त्वयाऽद्य
स्वकृतमिति विदित्वा विश्वमेतद्युगादौ ।

जननि जगति पीडां दानवा दर्पयुक्ताः
स्वबलमदसमेतास्ते प्रकुर्वन्ति मातः ॥ २२. ५७ ॥

एवं स्तुता तदा देवी दैवतैः शत्रुतापितैः ।
स्वशरीरात्परं रूपं प्रादुर्भूतं चकार ह ॥ २३. १ ॥

पार्वत्यास्तु शरीराद्वै निःसृता चाऽम्बिका यथा ।
कौशिकीति समस्तेषु ततो लोकेषु पठ्यते ॥ २३. २ ॥

निःसृतायां तु तस्यां सा पार्वती तनुव्यत्ययात् ।
कृष्णरूपाऽथ संजाता कालिका सा प्रकीर्तिता ॥ २३. ३ ॥

22.57. தேவியே! உலகெல்லாம் யுகத்தின் ஆதியில் உன்னால் உற்பத்தி செய்யப்பட்டதென்பதை நினைத்து இப்பொழுது அதின் இரக்ஷணை உன்னால் செய்யப்பட வேண்டும். தாயே! கொழுப்பேறிய அசுரர்கள் தங்களுடைய பலத்தின் கர்வத்தால் உலகிற்குப் பீடையை விளைவிக்கின்றனர்.

23.1. பகைவர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்களால் இவ்வாறு துதிக்கப்பெற்ற தேவியானவள் தன்னுடைய சரீரத்திலிருந்து இன்னொரு ரூபம் தோன்றும்படியாகச் செய்தாள்.

23.2. பார்வதீ தேவியின் சரீர கோசத்திலிருந்து தோன்றிய அம்பிகை கௌசிகீ என உலகெங்கும் போற்றப் படுகிறாள்.

23.3. பார்வதியின் சரீரத்திலிருந்து வேறாகப் பிரிந்து கருப்பு வர்ணத்துடன் தோன்றியதால் காளிகா என்று கூறப்படுகிறாள்.

मषीवर्णा महाघोरा दैत्यानां भयवर्धिनी ।
कालरात्रीति सा प्रोक्ता सर्वकामफलप्रदा ॥ २३. ४ ॥

अम्बिकायाः परं रूपं विरराज मनोहरम् ।
सर्वभूषणसंयुक्तं लावण्यगुणसंयुतम् ॥ २३. ५ ॥

ततोऽम्बिका तदा देवानित्युवाच ह सस्मिता ।
तिष्ठन्तु निर्भया यूयं हरिष्यामि रिपूनिह ॥ २३. ६ ॥

इत्युक्त्वा सा तदा देवी सिंहारूढा मदोत्कटा ।
कालिकापार्श्वतः कृत्वा जगाम नगरे रिपोः ॥ २३. ८ ॥

तस्मिन्नवसरे तत्र दानवौ शुंभसेवकौ ।
चण्डमुण्डाभिधौ घोरौ रममाणौ यदृच्छया ॥ २३. ११ ॥

आगतौ ददृशा ते तु तां तदा दिव्यरूपिणीम् ।
अम्बिकां गानसंयुक्तां कालिकां पुरतः स्थिताम् ॥ २३. १२ ॥

23.4. மை வர்ணமாயும் மிகவும் பயங்கரமாயும் அசுரர்களுக்கு பயத்தை வளர்ப்பவளாயும் தோன்றிய அவள் காலராத்ரீ எனவும் கூறப்படுவாள். அவள் (பக்தர்களுக்கு) எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் அளிப்பவள்.

23.5. அம்பிகையின் மற்ற வடிவம் மனதைக் கவர்வதாய் எல்லா ஆபரணங்களுடனும் கூடியதாய் அழகு நிறைந்ததாய் விளங்கிற்று.

23.6. பின்னர் அம்பிகை புன்முறுவலுடன் தேவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்: 'நீங்கள் பயமற்றிருக்கலாம். நான் இங்கு பகைவர்களை யழிக்கிறேன்.'

23.8. தேவியானவள் இவ்வாறு கூறிவிட்டு மிகுந்த கர்வத்துடன் சிங்க வாகனத்திலேறிக்கொண்டு காளிகையைப் பக்கத்திலிருத்திக்கொண்டு பகைவரின் நகரம் சென்றாள்.

23.11–12. அச்சமயம் சும்பர்களின் சேவகர்களும் கொடியவர்களுமான சண்டன் முண்டன் என்பவர்கள் விளையாட்டாக அங்கு வரவே எதிர்பாராதவண்ணம் பாடிக்கொண்டு எதிரே நின்ற திவ்யரூபிணியான அம்பிகையையும் காளிகையையும் கண்டனர்.

दृष्ट्वा तां दिव्यरूपां च दानवौ विस्मयान्वितौ ।
जग्मतुस्तरसा पार्श्वं शुंभस्य नृपसत्तम ॥ २३. १३ ॥

तौ गत्वा तं महासीनं दैत्यानामधिपं गृहे ।
ऊचतु-र्मधुरां वाणीं प्रणम्य शिरसा नृपम् ॥ २३. १४ ॥

राजन् हिमालयात्कामं कामिनी काममोहिनी ।
संप्राप्ता सिंहमारूढा सर्वलक्षणसंयुता ॥ २३. १५ ॥

नेदृशी देवलोकेऽस्ति न गन्धर्वपुरे तथा ।
न दृष्टा न श्रुता क्वापि पृथिव्यां प्रमदोत्तमा ॥ २३. १६ ॥

ज्ञायतां कस्य पुत्रीयं किमर्थमिह चागता ।
गृह्यतां राजशार्दूल तव योग्यास्ति कामिनी
॥ २३. १८ ॥

23.13. அரசசிரேஷ்டரே! திவ்யரூபிணியான அம்பிகையைப் பார்த்து ஆச்சரியம் மிகுந்தவர்களாய் அவ்வசுரர்கள் விரைவில் சும்பனை நாடிச் சென்றனர்.

23.14. தன் மாளிகையில் உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருந்த அசுர ராஜனிடம் அவர்கள் சென்று அவனைத் தலையால் வணங்கி இனியமொழி பேசலாயினர்.

23.15. 'அரசே! எதிர்பாராதவண்ணம் இமயமலையிலிருந்து சிங்க வாகனத்திலேறிக்கொண்டு எல்லா லக்ஷணங்களும் பொருந்தியவளாய்க் காமத்தைப் பெருக்கி மயக்குபவளாய் மனதைக்கவரும் ஒரு ஸ்திரீ வந்துள்ளாள்'.

23.16. 'இவளைப்போன்ற ஒரு உத்தம ஸ்திரீ தேவலோகத்திலும் இல்லை, கந்தர்வ நகரத்திலுமில்லை, பூமியில் எங்கும் கண்டதுமில்லை கேட்டதுமில்லை.

23.18. 'அரசசிரேஷ்டரே! அவள் யாருடைய புத்திரி என்றும் எதற்காக இங்கு வந்துள்ளாள் என்றும் உங்களால் அறியப்படவேண்டும். பின்பு கிரகிக்கப்படவேண்டும். அவள் உங்களுக்குத் தகுதியான பெண்ணரசி.

देवानां सर्वरत्नानि गृहीतानि त्वया नृप ।
कस्मान्नेमां वरारोहां प्रगृह्णासि नृपोत्तम ॥ २३. २० ॥

सर्वाणि ते गृहस्थानि रत्नानि विशदान्यथ ।
अनया सम्भविष्यन्ति रत्नभूतानि भूपते ॥ २३. २९ ॥

इति श्रुत्वा तयोर्वाक्यं मधुरं मधुराक्षरम् ।
प्रसन्नवदनः प्राह सुग्रीवं सन्निधौ स्थितम् ॥ २३. ३१ ॥

गच्छ सुग्रीव दूत त्वं कुरु कार्यं विचक्षण ।
वक्तव्यं च तथा तत्र यथाऽभ्येति कृशोदरी ॥ २३. ३२ ॥

सुग्रीवस्तु वचः श्रुत्वा शुंभोक्तं सुप्रियं पटु ।
जगाम तरसा तत्र यत्रास्ते जगदम्बिका ॥ २३. ३६ ॥

23.20. 'அரசசிரேஷ்டரே! தேவர்களுடைய சிறந்த பொருள்களெல்லாம் உம்மால் கவரப்பட்டுள்ளன. சிறந்த இந்த ஸ்திரீயை நீங்கள் ஏன் கிரகிக்கக்கூடாது?

23.29. 'அரசே! உங்களுடைய மாளிகையிலுள்ள இரத்தினங்களெல்லாம் இவளால்தான் உண்மையில் சிறப்பு மிக்க இரத்தினங்களாகப் போகின்றன.'

23.31. இனியதும் இனிய சொற்களால் கூறப்பட்டது மான அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்ட அவன் தன் முன் நின்ற சுக்ரீவனைப் பார்த்து முகமலர்ச்சியுடன் பின்வருமாறு கூறினன்.

23.32. 'திறமை வாய்ந்த தூதனுகிய சுக்ரீவா! நீ போய்க் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வா. மெல்லி டையாள் எப்படி இங்குவந்து சேருவாளோ அப்படி நீ அங்கு சென்று அவளிடம் பேச வேண்டும்'.

23.36. பிரியமாகவும் சுருக்கமாகவும் சும்பன் கூறிய அவ்வார்த்தையைக் கேட்டு சுக்ரீவன் ஜகதம்பிகை இருந்த அவ்விடத்திற்கு விரைந்து சென்ருன்.

सोऽपश्यत्सुमुखीं कान्तां सिंहस्योपरि संस्थिताम् ।
प्रणम्य मधुरं वाक्यमुवाच जगदम्बिकाम् ॥ २३. ३७ ॥

वरोरु त्रिदशारातिः शुंभः सर्वांगसुन्दरः ।
त्रैलोक्याधिपतिः शूरः सर्वजिद्राजते नृपः ॥ २३. ३८ ॥

तेनाऽहं प्रेषितः कामं त्वत्सकाशं महात्मना ।
त्वद्रूपश्रवणासक्त-चित्तेनातिविदूयता ॥ २३. ३९ ॥

वचनं तस्य तन्वंगि शृणु प्रेमपुरःसरम् ।
प्रणिपत्य यथा प्राह दैत्यानामधिपस्त्वयि ॥ २३. ४० ॥

देवा मया जिताः सर्वे त्रैलोक्याधिपतिस्त्वहम् ।
यज्ञभागानहं कान्ते गृह्णामीह स्थितः सदा ॥ २३. ४१ ॥

23.37. ஒளி வீசும் மலர்ந்த முகத்துடன் சிங்க வாகனத்தின்மேல் வீற்றிருந்த ஜகதம்பிகையைக் கண்டு வணங்கி இனிமையான மொழியை அவன் பேசலானுன்.

23.38. 'அழகிற் சிறந்தவளே! சும்பன் என்ற அரசன் தேவர்களை வென்றவன், எல்லா அங்கங்களிலும் அழகுபடைத்தவன், மூவ்வுலக நாயகன், சூரன், எல்லோரையும் ஜயித்தவனுய் விளங்குபவன்.

23.39. 'அந்த மகாத்மாவால் விரும்பி உன்னிடம் அனுப்பப்பட்டவன் நான். அவன் உன்னுடைய வடிவழகைப்பற்றிக் கேள்வியுற்று உன்னிடம் வைத்த ஆசையால் மிகவும் பீடிக்கப்பட்டுள்ளவன்.

23.40. 'மெல்லிடையாளே! அன்பின் மிகுதியால் அவன் சொல்லியனுப்பிய மொழியைக் கேள். அசுரர் வேந்தனுகிய அவன் உன்னை வணங்கிக் கூறுகிருன்.

23.41. 'காமினி! தேவர்களெல்லாம் என்னுல் ஜயிக்கப்பட்டார்கள். நான் மூவ்வுலகிற்கும் நாயகன். இங்கிருந்து கொண்டு யக்ஞ பாகங்களை எப்பொழுதும் நான் கிரகிக்கிறேன்.

त्वद्गुणैः कर्णमागत्य प्रविश्य हृदयान्तरम् ।
त्वदधीनः कृतः कामं किंकरोऽस्मि करोमि किम् ॥ २३. ४४ ॥

तव चाज्ञाकरः कान्ते भवामि मरणावधि ।
अवध्योऽस्मि वरारोहे सदेवासुर-मानुषैः ॥ २३. ४७ ॥

सदा सौभाग्यसंयुक्ता भविष्यसि वरानने ।
यत्र ते रमते चित्तं तत्र क्रीडस्व सुन्दरि ॥ २३. ४८ ॥

तद्दूतवचनं श्रुत्वा स्मितं कृत्वा सुपेशलम् ।
तं प्राह मधुरां वाचं देवी देवार्थसाधिका ॥ २३. ५० ॥

श्रीदेव्युवाच —

जानाम्यहं निशुंभं च शुभंचाऽतिबलं नृपम् ।
जेतारं सर्वदेवानां हन्तारं चैव विद्विषाम् ॥ २३. ५१ ॥

राशिं सर्वगुणानां च भोक्तारं सर्वसम्पदाम् ।
दातारं चातिशूरं च सुन्दरं मन्मथाकृतिम् ॥ २३. ५२ ॥

23.44. 'என் காதிற்கெட்டி இருதயத்தினுட் புகுந்த உனது குணங்களால் நான் உன் வசமாகி உன் அடிமையாகி விட்டேன். என்ன செய்வேன்?

23.47. 'பிரியே! நான் சாகும்வரை உன் கட்டளைப் படி நடப்பவனுயிருப்பேன். அழகிற் சிறந்தவளே! அசுரர்களாலோ மனிதர்களாலோ எப்பொழுதும் நான் கொல்லு வதற்கியலாதவன்.

23.48. 'சிறந்த முகம் படைத்தவளே! நீ எப்பொழுதுமே சௌபாக்கியமுடையவளாயிருப்பாய். சுந்தரி! உனக்கு எவ்விடத்தில் சித்தம் மகிழ்கிறதோ அவ்விடத்தில் நீ இஷ்டப்படி இன்புற்றிருக்கலாம்.'

23.50. அந்த தூதனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு தேவகாரியத்தைச் சாதிக்க வந்த தேவியானவள் இனிய புன்னகை பூத்து இனிமையான மொழியில் பின் வருமாறு பதிலளித்தாள்.

ஸ்ரீதேவி கூறியது—

23.51–52. நான் நிசும்பனேயும் மிகுந்த பலவானுன சும்பனேயும் அறிவேன். அந்த சும்பன் தேவர்களேயெல்லாம் ஜயித்தவன், பகைவர்களேக் கொன்றவன், எல்லா குணங்களும் நிறைந்தவன், எல்லாச் செல்வங்களேயும் அனுபவிப்பவன், கொடையாளி, மகாசூரன், மன்மதனேப்போல் வடிவழகு படைத்தவன் என்பதெல்லாம் எனக்குத் தெரியும்.

गच्छ दूत महाभाग ब्रूहि शुंभं महाबलम् ।
ममास्ति कारणं किंचिद्विवाहे राक्षसोत्तम ॥ २३. ६१ ॥

बालभावाद्व्रतं किंचित्कृतं राजन्मया पुरा ।
क्रीडन्त्या च वयस्याभिः सहैकान्ते यदृच्छया ॥ २३. ६२ ॥

स्वदेहबलदर्पेण सखीनां पुरतो रहः ।
मत्समानबलः शूरो रणे मां जेष्यति स्फुटम् ॥ २३. ६३ ॥

तं वरिष्याम्यहं कामं ज्ञात्वा तस्य बलाबलम् ।
जहसुर्वचनं श्रुत्वा सख्यो विस्मितमानसाः ॥ २३. ६४ ॥

तस्मात्त्वमपि राजेन्द्र ज्ञात्वा मे हीदृशं बलम् ।
जित्वा मां समरेणात्र विवाहं कुरु सुन्दर ॥ २३. ६६ ॥

23.61–66. தூதனே! மகாபாக்கியசாலியே! மகா பலசாலியான சும்பனிடம் போய்ப் பின்வருமாறு (நான் சொன்னதாய்) சொல்: 'ராக்ஷஸ சிரேஷ்டனே! விவாக விஷயத்தில் எனக்கு ஒரு சிறிய காரணம் உளது. அரசே! முன்பு சிறு வயதில் சமவயதுள்ள தோழிகளுடன் தனிமையில் இஷ்டப்படி விளையாடுகையில் என்னுடைய உடல் வலிமையின் கர்வத்தால் தோழிகளின் முன்னிலையில் இரகசியமாக ஒரு சிறிய விரதத்தைக் கைக்கொண்டேன். எனக்குச் சமானமான பலமுடைய சூரன் எவன் என்னைப் போரில் ஜயிக்கிறானோ அவனுடைய பலாபலத்தை அறிந்து அவனை விரும்பி நான் மணப்பேன் என்பது அவ்விரதம். என்னுடைய தோழிகள் அவ்வார்த்தையைக் கேட்டு வியப்படைந்த மனமுடையவர்களாய்ப் பரிகசித்தார்கள். ஆகையால், அரச சிரேஷ்டரே, அழகியவரே! இப்படிப்பட்ட என் பலத்தை யறிந்து என்னைப்போரில் இங்கு ஜயித்து விவாகம் செய்து கொள்ளலாம்.'

व्यास उवाच—

गत्वा दैत्यपतिं दूतो विचार्य च पुनः पुनः।
प्रणम्य पादयोः प्रह्वः प्रत्युवाच नृपं च तम् ॥ २४. २० ॥

दूत उवाच —

साक्षात्कुतः समायाता कस्य वा किं बलाऽबला।
न ज्ञानगोचरं किंचित् किं ब्रवीमि विचेष्टितम् ॥ २४. २४ ॥

युद्धकामा मया दृष्टा गर्विता कटुभाषिणी।
तया यत्कथितं सम्यक् तच्छृणुष्व महामते ॥ २४. २५ ॥

मया बाल्यात्प्रतिज्ञेयं कृता पूर्वं विनोदतः।
सखीनां पुरतः कामं विवाहं प्रति सर्वथा ॥ २४. २६ ॥

வியாஸர் கூறியது—

24.20. அசுரவேந்தனிடம் சென்று நன்ருக மேன் மேலும் ஆலோசித்துவிட்டு அந்த தூதன் அவனுடைய பாதங்களில் வணங்கி அடக்கத்துடன் பின்வருமாறு கூறினான்.

தூதன் கூறியது—

24.24. அப்பெண்ணரசி உண்மையில் எங்கிருந்து வந்தாள், யாருடையவள், அவளுடைய பலம் எப்படிப் பட்டது என்ற எதுவும் சிறிதுகூட அறிவுக்கெட்டாமலிருக் கிறது. அவளுடைய செயலைப்பற்றி நான் என்ன சொல்லு வேன்?

24.25. அவள் கடுஞ் சொல்லுடையவளாயும், கர்வங் கொண்டவளாயும் போர்புரிய விரும்புபவளாயும் என்னல் காணப்பட்டாள். மதியிற் சிறந்தவரே! அவளால் கூறப் பட்டதைத் தெளிவாய்க் கூறுகிறேன். கேளுங்கள்.

24.26. 'என்னுடைய விவாகத்தைப்பற்றி என் தோழி கள் முன்னிலையில் விளையாட்டாக என் இளமைப் பருவத்தில் நான் முன்பு செய்த பிரதிக்ஞை இதுவாகும்.

यो मां युद्धे जयेदद्धा दर्पंच विधुनोति वै।
तं वरिष्याम्यहं कामं पतिं समबलं किल ॥ २४. २७ ॥

न मे प्रतिज्ञा मिथ्या सा कर्तव्या नृपसत्तम।
तस्माद्युध्यस्व धर्मज्ञ जित्वा मां स्ववशं कुरु ॥ २४. २८ ॥

तथेति व्याहृतं वाक्यं श्रुत्वाऽहं समुपागतः।
यथेच्छसि महाराज तथा कुरु तव प्रियम् ॥ २४. २९ ॥

शुंभ उवाच —

धूम्रलोचन गच्छाशु सैन्येन महताऽऽवृतः।
गृहीत्वाऽऽनयतां मुग्धां स्ववीर्यमदमोहिताम् ॥ २४. ३६ ॥

24.27. 'எவர் என்னைப் போரில் வெல்லுகிறாரோ, என்னுடைய கர்வத்தையும் அடக்குகிறாரோ அவரையே உண்மையில் எனக்கு சமமான பலம் படைத்தவரெனக் கருதி எனது பதியாக வரிப்பேன்.

24.28. 'அரசசிரேஷ்டரே! என்னுடைய பிரதிக்ஞை பொய்யாகிவிடக்கூடாது. தர்மந்தெரிந்தவரே! ஆகையால் நீங்கள் என்னை யுத்தம் செய்து ஜயித்து உங்களுடைய வசமாக்கிக் கொள்ளுங்கள்.'

24.29. அவளால் சொல்லப்பட்ட இவ்வாக்கியத்தைக் கேட்டு நான் திரும்பி வந்துள்ளேன். மகாராஜரே! இனி உங்கள் விருப்பம் எதுவோ அதை இஷ்டப்படி செய்யலாம்.

சும்பன் கூறியது—

24.36. தூம்ரலோசனா! பெரிய சைனியத்தால் சூழப்பெற்று சீக்கிரம் செல். தன்னுடைய வீரியக் கொழுப்பால் மயங்கியிருக்கும் அந்தப் பெண்ணைப் பிடித்துக் கொண்டு வா.

तत्सहायाश्च हन्तव्या ये रणे शस्त्रपाणयः।
सर्वथा सा न हन्तव्या रक्षणीया प्रयत्नतः ॥ २४.४० ॥

व्यास उवाच —

इत्यादिष्टस्तदा राज्ञा तरसा धूम्रलोचनः।
प्रणम्य शुंभं सैन्येन वृतः शीघ्रं ययौ रणे ॥ २४.४१ ॥

दृष्ट्वा तां मृगशावाक्षीं विनयेन समन्वितः।
उवाच वचनं श्लक्ष्णं हेतुमद्रसभूषितम् ॥ २४.४४ ॥

शृणु देवि महाभागे शुंभस्त्वद्विरहातुरः।
दूतं प्रेषितवान् पार्श्वे तव नीतिविशारदः॥
तेनागत्य वचः प्रोक्तं विपरीतं वरानने ॥ २४.४५ ॥

24.40. போர்க்களத்தில் ஆயுத பாணிகளாய் எவர்கள் அவளுக்குதவியாயுள்ளவர்களோ அவர்கள் கொல்லப்பட வேண்டும். அவள் மட்டும் எப்படியாவது கொல்லப் படாமல் கவனத்துடன் இரக்ஷிக்கப்பட வேண்டும்.

வியாஸர் கூறியது—

24.41. இவ்வாறு அரசனுல் கட்டளையிடப்பட்டது. தூம்ரலோசனன் சும்பனை வணங்கிவிட்டு சைனியம் சூழ விரைவில் போருக்குச் சென்ருன்.

24.44. மான்குட்டியின் விழிபடைத்த அவளைப் பார்த்து வணக்கத்துடன் அவன் இனிமையான வார்த்தையைத் தகுந்த காரணங்காட்டிச் சுவையுடன் அலங்காரமாய்ப் பேசினுன்.

24.45. 'மகாபாக்கியசாலியான தேவி! கேட்பாயாக. சும்பன் உன்னிடம் காமத்தால் துன்புற்று உன்னிடம் நீதியில் நிபுணனுன ஒரு தூதனை அனுப்பிவைத்தான். அழகியமுகம் படைத்தவளே! அவன் திரும்பி வந்து விபரீதமான வார்த்தையைக் கூறினுன்.

चतुराऽसि महाभागे शृणु मे वचनं मृदु ।
भज शुंभं त्रिलोकेशं देवदर्पनिबर्हणम् ॥ २४.५३ ॥

प्रत्युवाच तदा काली प्रहस्य ललितं वचः ।
विदूषकोऽसि जाल्म त्वं शैलूष इव भाषसे ॥ २५. २ ॥

क्वासौ मन्दमतिः शुंभः क्व वा विश्वविमोहिनी ।
अयुक्तः खलु संसारे विवाहविधिरेतयोः ॥ २५. ५ ॥

सिंही किं त्वतिकायार्ता जम्बुकं कुरुते पतिम् ।
करिणी गर्दभं वाऽपि गवयं सुरभिः किमु ॥ २५. ६ ॥

गच्छ शुंभं निशुंभं च वद सत्यं वचो मम ।
कुरु युद्धं न चेद्याहि पातालं तरसाऽधुना ॥ २५. ७ ॥

24.53. 'பாக்கியசாலியான நீ சாமர்த்தியம் படைத்தவள். என்னுடைய இன்சொல்லைக் கேட்டு தேவர்களின் கர்வத்தையொடுக்கியவனும் மூவுலகையுமாள்பவனுமான சும்பனை அடைந்துவிடு.'

25.2—5. காளிதேவியானவள் சிரித்துவிட்டு அழகான வார்த்தையால் பதிலளித்தாள். 'நீ மூடன். கூத்தில்வரும் விகடக் கூத்தாடிபோல் பேசுகிறாய். மந்த புத்தியுள்ள இந்த சும்பன் எங்கே! உலகனைத்தையும் மயக்குபவள் எங்கே! இவ்விருவருக்கும் விவாக ஏற்பாடு என்பது இவ்வுலகில் சற்றும் பொருந்தாது.

25.6. ஒரு பெண் சிங்கமானது காமத்தால் பீடிக்கப்பட்டு ஒரு குள்ள நரியை தனக்குக் கணவனாய் ஏற்குமா? ஒரு பெண் யானை ஒரு கழுதையைக் கணவனாய்க் கொள்ளுமா? காமதேனு கவயம் எனும் மிருகத்தைக் கணவனாய்க் கொள்ளுமா?

25.7. நீ அந்தச் சும்ப நிசும்பர்களிடம் போய் என்னுடைய இந்த உண்மையான வார்த்தையைத் தெரிவி: 'யுத்தம் செய்; இல்லையேல் இப்பொழுது விரைந்து பாதாளம் போய்விடு.'

व्यास उवाच —

तच्छ्रुत्वा वचनं दैत्यः संगृह्य कार्मुकं दृढम् ।
कालिकां तां शरासारैर्ववर्षाऽति शिलाशितैः ॥ २५. १२ ॥

तयोः परस्परं युद्धं प्रवृत्तं चातिदारुणम् ।
बाण-खड्ग-गदा-शक्ति-मुसलादिभिरुत्कटम् ॥ २५. १४ ॥

वाचा निर्भर्त्सयन् कालीं करालः कालसन्निभः ।
अद्यैव त्वां हनिष्यामि कुरूपे पिंगलोचने ॥ २५. २१ ॥

इत्युक्त्वा सहसाऽऽगत्य परिघं क्षिपते यदा ।
हुंकारेणैव तं भस्म चकार तरसाऽम्बिका ॥ २५. २२ ॥

दृष्ट्वा भस्मीकृतं दैत्यं सैनिका भयविह्वलाः ।
चक्रुः पलायनं सद्यो हा तातेत्यब्रुवन् पथि ॥ २५. २३ ॥

வியாஸர் கூறியது—

25.12. இவ்வார்த்தையைக் கேட்டதும் அவ்வசுரன் (தூம்ரலோசனன்) தனது திடமான வில்லை எடுத்துக் காளிகாதேவியின் மேல் கூரான பாணங்களைப் பொழிந்தான்.

25.14. அப்பொழுது அவர்களிடை மிகக் கொடிய போர் பாணம், வாள், கதை, சக்தி, முஸலம் முதலியவற்றால் ஏற்பட்டது.

25.21–22. யமனைப் போன்ற அந்த முரடன் காளியை வார்த்தைகளால் பயமுறுத்தி 'குரூபி! பூனைக்கண்ணி! இப்பொழுதே நான் உன்னைக் கொல்லுகிறேன்' என்று கூறிக்கொண்டு விரைந்து வந்து பரிகாயுதத்தை வீசியபொழுது அம்பிகை உடனே ஹுங்காரத்தால் அவனைச் சாம்பலாக்கினாள்.

25.23. அவ்வசுரன் சாம்பலாக்கப்பட்டதைக் கண்ட சேனைகள் பயத்தால் நடுங்கி 'ஐயோ! அப்பா!' என்று வழியில் கதறிக்கொண்டு உடனே ஓட்டம் பிடித்தன.

व्यास उवाच —

तच्छ्रुत्वा वचनं तेषां शुंभः परबलार्दनः।
उवाच वचनं राजा चण्डमुण्डौ पुरः स्थितौ ॥ २५. ५७ ॥

गच्छतं चण्डमुण्डौ द्वौ स्वसैन्यपरिवारितौ।
हन्तुं तामबलां शीघ्रं निर्लज्जां मदगर्विताम् ॥ २५. ५८ ॥

इत्याज्ञप्तौ तदा वीरौ चण्डमुण्डौ महाबलौ ॥
जग्मतुस्तरसेवाऽऽजौ सैन्येन महताऽन्वितौ ॥ २६. १ ॥

दृष्ट्वा तत्र स्थितां देवीं देवानां हितकारिणीम्।
ऊचतुस्तौ महावीर्यौ तदा सामान्वितं वचः ॥ २६. २ ॥

வியாஸர் கூறியது—

25.57. (அவர்கள் வந்து நிகழ்ந்ததைக் கூறவே) அவர்களுடைய வார்த்தையைக் கேட்ட அரசன் சும்பன், பகைவர் பலத்தையொடுக்குபவன், எதிரில் நின்ற சண்டமுண்டர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினான்.

25.58. 'சண்டமுண்டர்களே! நீங்கள் இருவரும் உங்கள் சைனியங்களால் சூழப்பட்டவர்களாய்க் கொழுப்புப் பிடித்து கர்வித்திருப்பவளும் வெட்கங்கெட்டவளும் ஆகிய அவ்வற்பப் பெண்ணைக் கொல்லுவதற்குச் சீக்கிரம் செல்லுங்கள்.'

26.1. மகாபலசாலிகளும் வீரர்களுமாகிய சண்டமுண்டர்கள் இவ்வாறு கட்டளையிடப்பட்டதும் பெரிய சைனியங்களுடன் விரைவில் புறப்பட்டனர்.

26.2. தேவர்களுக்கு நன்மை புரியும் பொருட்டு எழுந்தருளியிருந்த தேவியைக் கண்ணுற்று அம்மகா வீரர்கள் சமாதானமாய்ப் பேசத் தொடங்கினர்.

वृथा गर्वायसे कान्ते कुरु मे वचनं प्रियम् ।
हितं तव विशालाक्षि सुखदं दुःखनाशनम् ॥ २६. ९ ॥

भज शुंभं सुरेशानं जेतारं भुवनेश्वरम् ।
चतुरं सुन्दरं शूरं कामशास्त्रविशारदम् ॥ २६. १६ ॥

ऐश्वर्यं सर्वलोकानां प्राप्स्यसे शुंभशासनात् ।
निश्चयं परमं कृत्वा भर्तारं भज शोभनम् ॥ २६. १७ ॥

इति तस्य वचः श्रुत्वा चान्धस्य जगदम्बिका ।
मेघगम्भीर-निनदं जगर्ज पुनरब्रवीत् ॥ २६. १८ ॥

न मे कश्चित्पतिः कार्यो न कार्यं पतिना सह ।
स्वामिनी सर्वभूताना-महमेव निशामय ॥ २६. १९ ॥

26.9. 'விசாலாட்சி! துன்பத்தைப் போக்குவதும் சுகத்தைத் தருவதும் உனக்கு நன்மை பயப்பதுமான பிரிய வார்த்தையைச் சொல்லுகிறேம். பெண்ணே! அப்படி நட. நீ கர்வப்படுவது வீண்.

26.16. 'தேவர்களை ஜயித்து ஆள்பவனும் உலக நாயகனும் சாமர்த்தியசாலியும் அழகுமிக்கவனும் சூரனும் காமசாஸ்திரத்தில் நிபுணனும் ஆகிய சும்பனை அடைந்துவிடு.

26.17. 'சும்பனுடைய கட்டளையால் எல்லா உலகங்களின் ஐசுவரியத்தையும் அடைவாய். திடமான நிச்சயத்தைச் செய்து கொண்டு மங்களம் நிறைந்த அவனை உன் கணவனுக ஏற்றுக்கொள்.'

26.18. குருட்டு புத்தியுடைய அவன் வார்த்தையைக் கேட்டு ஜகதம்பிகை மேகத்தின் இடிபோல் கர்ஜித்து மறுமொழி கூறினுள்.

26.19. 'எனக்கு எவரும் நாயகராக வேண்டியதில்லே; நாயகரால் ஆகவேண்டிய காரியமும் எனக்கில்லே; நானே எல்லா உயிர்க்கும் நாயகி என்று தெரிந்துகொள்.

शुम्भो मे बहवो दृष्टा निशुम्भाश्च सहस्रशः ।
घातिताश्च मया पूर्वं शतशो दैत्यदानवाः ॥ २६. २० ॥

ममाग्रे देव-वृन्दानि विनष्टानि युगे युगे ।
नाशं यास्यन्ति दैत्यानां यूथानि पुनरद्य वै ॥ २६. २१ ॥

काल एवागतोऽस्त्यत्र दैत्यसंहारकारकः ।
वृथा त्वं कुरुषे यत्नं रक्षणायात्मसन्ततेः ॥ २६. २२ ॥

कुरुयुद्धं वीरधर्मरक्षायै त्वं महामते ।
मरणं भावि दुस्त्याज्यं यशो रक्ष्यं महात्मभिः ॥ २६. २३ ॥

किं ते कार्यं निशुम्भेन शुम्भेन च दुरात्मना ।
वीरधर्मं परं प्राप्य गच्छ स्वर्गं सुरालयम् ॥ २६. २४ ॥

26.20. 'நான் பல சும்பர்களேயும் ஆயிரக்கணக்கான நிசும்பர்களேயும் பார்த்தாயிற்று. நூற்றுக்கணக்கான தைத்தியர்களும் தானவர்களும் என்ஞல் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

26.21. 'என் முன்னிலேயில் யுகந்தோறும் பல தேவ சமூகங்களும் நாசமடைந்திருக்கின்றன. இப்பொழுது மீண்டும் அசுரர்களின் கூட்டங்கள் அழிவடையப்போகின்றன.

26.22. 'அசுரர்களேக் கொன்று தீர்க்கும் யமஞகவே இங்கு நான் வந்திருக்கிறேன். உன் சந்ததியைக் காக்க நீ செய்யும் முயற்சி வீண்.

26.23. 'மதிமிக்கோனே! வீரர்களுடைய தருமத்தைக் காப்பதற்காக நீ போர் புரியலாம். ஆஞல் வரப் போகிற மரணம் தடுக்க முடியாதது. மகான்கள் புகழைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

26.24. 'நிசும்பஞலோ, துராத்மாவான சும்பஞலோ உனக்கு இனி ஆகவேண்டியது என்ன இருக்கிறது? வீர தருமத்தைக் கைக்கொண்டு தேவர்களிருப்பிடமான சுவர்க்கத்திற்குச் செல்லலாம்.

शुम्भो निशुम्भश्चैवान्ये ये चास्त्र तव बान्धवाः।
सर्वे तवानुगाः पश्चादागमिष्यन्ति साम्प्रतम् ॥ २६. २ ५॥
तयेत्थं प्रेरितौ दैत्यौ चण्डमुण्डौ क्रुधान्वितौ।
जयशब्दं तरसा घोरं चक्रतु-र्बलदर्पितौ ॥ २६. ३१ ॥
युद्धं परस्परं तत्र जातं कातरभीतिदम्।
चण्डिका-चण्डयोस्तीव्रं बाणखड्ग-गदादिभिः ॥ २६. ३४ ॥
चण्डमुक्तान् शरान् देवी चिच्छेद निशितैः शरैः।
मुण्डोऽपि सैनिकैः सार्धं पपात तरसा रणे॥
मुमोच बाणवृष्टिं वै क्रुद्धः परमदारुणः ॥ २६. ३७ ॥
बाणजालं महद्दृष्ट्वा क्रुद्धा तत्राम्बिका भृशम्।
कोपेन वदनं तस्या बभूव घनसन्निभम् ॥ २६. ३८ ॥

26.25. 'சும்பனும் நிசும்பனும் உன்னுடைய உறவினர்களான ஏனையோரும் இந்தப் போரிலேயே உன்னைப் பின் தொடர்ந்து வந்து சேருவார்கள்'.

26.31. தேவியால் இவ்வாறு ஏவப்பட்ட சண்ட முண்டர்களாகிய அசுரர்கள் கோபம் மூண்டவர்களாய் பலத்தின் கொழுப்பால் விரைவாகக் கொடிய நாஞெலியைக் கிளப்பினர்.

26.34. சண்டிகைக்கும் சண்டமுண்டர்களுக்கும் இடையில் பாணம், வாள், கதை முதலிய ஆயுதங்களின் தீவிரமான பிரயோகத்துடன் பேடிகளுக்குப் பயத்தைத்தரும் யுத்தம் ஆரம்பமாயிற்று.

26.37. சண்டன் விட்ட பாணங்களை தேவியானவள் கூரிய சரங்களால் அழித்தாள். முண்டனும் சேனையுடன் போரில் இறங்கிக் கொடிய கோபத்துடன் பாணங்களை மழை போல் பொழிந்தான்.

26.38. அந்தப் பெரிய பாணக் கூட்டத்தைக்கண்டு தேவி கடுங்கோபங் கொண்டாள். அவளுடைய முகம் மேகம் போல் கறுத்தது.

निष्क्रान्ता च तदा काली ललाटफलकाद् द्रुतम् ।
व्याघ्रचर्माम्बरा क्रूरा गजचर्मोत्तरीयका ॥ २६. ३९ ॥

मुण्डमालाधरा घोरा शुष्कवापीसमोदरा ॥
विस्तीर्णवदना जिह्वां चालयन्ती मुहुर्मुहुः ॥ २६. ४२ ॥

करे कृत्वा महावीरां स्तरसा सा रुषान्विता ।
मुखे चिक्षेप दैतेयान् पपेष दशनैः शनैः ॥ २६. ४३ ॥

हन्यमानं बलं प्रेक्ष्य चण्डमुण्डौ महासुरौ।
छादयामासतु-र्देवीं बाणसारै-रनन्तरैः ॥ २६. ४६ ॥

तं जघान शरैस्तीक्ष्णै-श्चण्डं चण्डी शिलाशितै : ।
मूर्छितोऽसौ पपातोर्व्यां देवीबाणार्तितो भृशम् ॥ २६. ४९ ॥

26.39. அவளுடைய நெற்றியிலிருந்து காளி வெளிப் போந்தாள். அவள் புலித்தோலையணிந்து யானைத்தோலைப் போர்த்தியிருந்தாள்.

26.42. முண்டமாலையணிந்து கோரமாகவும், உலர்ந்த குளம் போன்ற வயிறுடையவளாகவும் விஸ்தீரண மான வாயுடையவளாகவும், நாக்கை அடிக்கடி துளாபு பவளாகவும் விளங்கினுள்.

26.43. கோபத்துடன் அவள் விரைந்து மகா வீரர்களாகிய அசுரர்களைக் கையில் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு பற்களால் மென்று தின்ருள்.

26.46. சைனியம் அங்ஙனம் கொல்லப்படுவதைக் கண்டு மகா அசுரர்களாகிய சண்டமுண்டர்கள் இடைவிடாது பாணங்களைப் பொழிந்து அந்த தேவியைத் தாக்கினுர்கள்.

26.49. அப்பொழுது சண்டிகாதேவி கூரிய சரங் களால் சண்டனைத் தாக்கினுள். தேவியின் பாணங்களால் மிகவும் தாக்குற்ற அவன் மூர்ச்சித்து பூமியில் விழுந்தான்.

पतितं भ्रातरं वीक्ष्य मुण्डो दुःखार्तदस्तदा ।
चकार शरवृष्टिं च कालिकोपरिकोपतः ॥ २६. ५० ॥

चण्डिका मुण्डनिर्मुक्तां शरवृष्टिं सुदारुणाम् ।
ईषिकास्त्रै-र्बलान्मुक्तैश्चकार तिलशः क्षणात् ॥ २६. ५१ ॥

अर्धचन्द्रेण बाणेन ताडयामास तं पुनः ।
पतितोऽसौ महावीर्यो मेदिन्यां मदवर्जितः ॥ २६. ५२ ॥

विहाय मुर्छां चण्डस्तु संगृह्य महतीं गदाम् ।
तरसा ताडयामास कालिकां दक्षिणे भुजे ॥ २६. ५४ ॥

वंचयित्वा गदाघातं तं बबन्ध महासुरम् ।
तरसा बाणपाशेन मन्त्रमुक्तेन कालिका ॥ २६. ५५ ॥

26.50. சகோதரன் விழுந்ததைக்கண்டு துக்கத்தால் பீடிக்கப்பட்ட முண்டன் கோபத்துடன் காளியின் மேல் அம்புகளைப் பொழிந்தான்.

26.51. சண்டிகை முண்டன் விட்ட கொடிய பாணங்களை ஈஷிகாஸ்திரங்களால் ஒரு நொடியில் எள்ளைப்போல் பொடியாக்கினுள்.

26.52. பின்னர் அர்த்தசந்திர பாணத்தால் அவனை மறுபடி அடிக்கவே மகாவீரியம் படைத்த அவனும் கொழுப் படங்கி பூமியில் விழுந்தான்.

26.54. அப்பொழுது மூர்ச்சை தெளிந்தெழுந்த சண்டன் பெரியதொரு கதாயுதத்தைத் தூக்கி வேகமாகக் காளிகாதேவியை வலது புஜத்தில் அடித்தான்.

26.55. காளிகாதேவி அந்த அடி தன்மேல் படாமல் ஏமாற்றி அக்கொடிய அசுரனை மந்திரத்தால் விடுத்த பாச பாணத்தால் கட்டினுள்.

उत्थितस्तु तदा मुण्डो बद्धं दृष्ट्वाऽनुजं बलात् ।
आजगाम सुसन्नद्धः शक्तिं कृत्वा करे दृढाम् ॥ २६. ५६ ॥

आगच्छन्तं तदा काली दानवं वीक्ष्य सत्वरम् ।
बबन्ध तरसा तं तु द्वितीयं भ्रातरं भृशम् ॥ २६. ५७ ॥

गृहीत्वा तौ महावीर्यौ चण्डमुण्डौ शशाविव ।
कुर्वती विपुलं हास-माजगामाम्बिकां प्रति ॥ २६. ५८ ॥

आगत्य तामथोवाच गृहाणेमौ पशू प्रिये ।
रणयज्ञार्थ-मानीतौ दानवौ रणदुर्जयौ ॥ २६. ५९ ॥

तावानीतौ तदा वीक्ष्य चण्डिका तौ वृकाविव ।
अम्बिका कालिकां प्राह माधुरीसंयुतं वचः ॥ २६. ६० ॥

26.56. அப்பொழுது எழுந்த முண்டன் தனது தம்பி வலியக் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு கையில் திடமான சக்தி ஆயுதத்தை எடுத்துக்கொண்டு எதிர்த்துவந்தான்.

26.57. அங்ஙனம் வந்த அவ்வசுரனைக் காளிதேவி பார்த்து சகோதரர்களில் இரண்டாமவனுகிய அவனையும் விரைவில் வலியக்கட்டினுள்.

26.58. மகா வீரியம் படைத்த சண்டமுண்டர்கள் இருவரையும் முயல்களைப் போல் கட்டியிழுத்துக் கொண்டு அட்டஹாஸத்துடன் அம்பிகையின் முன் வந்தாள்.

26.59. வந்து அம்பிகையிடம் கூறியதாவது: 'பிரியே! போரில் வெல்லுவதற்கரிய அசுரர்களான இவ்விருவர்களையும் யுத்த யக்ஞத்தில் பலியிடும் பிராணிகளாகக் கொண்டு வந்துள்ளேன். ஏற்றுக்கொள்.'

26.60. அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களும் செந்நாய் போன்றவர்களுமான அவர்களைப் பார்த்து அம்பிகையான சண்டிகாதேவி காளியிடம் இனிமையாகப் பின்வரும் வார்த்தையைக் கூறினுள்.

वधं मा कुरु मा मुंच चतुराऽसि रणप्रिये।
देवानां कार्यसंसिद्धिः कर्तव्या तरसा त्वया ॥ २६. ६१ ॥

इति तस्या वचः श्रुत्वा कालिका प्राह तां पुनः।
युद्धयज्ञेऽतिविख्याते खड्गयूपे प्रतिष्ठिते ॥ २६. ६२ ॥

आलंभं च करिष्यामि यथा हिंसा न जायते।
इत्युक्त्वा सा तदा देवी खड्गेन शिरसी तयोः ॥ २६. ६३ ॥

चकर्त तरसा काली पपौच रुधिरं मुदा।
एवं दैत्यौ हतौ दृष्ट्वा मुदितोवाच चाम्बिका ॥ २६. ६४ ॥

कृतं कार्यं सुराणां ते ददाम्यद्य वरं शुभम्।
चण्डमुण्डौ हतौ यस्मात्तस्मात्ते नाम कालिके ॥
चामुण्डेति सुविख्यातं भविष्यति धरातले ॥ २६. ६५ ॥

26.61. 'யுத்தத்தில் பிரியமுள்ளவளே! நீ சாமர்த்தியசாலியல்லவா? இவர்களைக் கொல்லவும் வேண்டாம், விடவும் வேண்டாம். உன்னால் தேவர்களுடைய காரியம் சீக்கிரத்தில் பூர்த்தி செய்விக்கப்படட்டும்.'

26.62–64. அம்பிகையின் இவ்வார்த்தையைக்கேட்டு காளிகை மீண்டும் கூறுவாள்: 'பிரபலமான இந்த யுத்த யக்ஞத்தில் வாளையே யூபஸ்தம்பமாய்க் கருதி ஆலம்பம் செய்கின்றேன். அப்பொழுது வதை கொலையாய்க் கருதப் படமாட்டாது' இப்படிக் கூறிவிட்டுக் காளிதேவி வாளால் அவர்களுடைய தலையை விரைவில் வெட்டினாள். பின்பு மகிழ்ச்சியுடன் இரத்தத்தைப் பருகினாள். இவ்வாறு அசுரர்கள் கொல்லப்பட்டதைப் பார்த்து சந்தோஷத்துடன் அம்பிகை பின்வருமாறு கூறினாள்.

26.65. 'உன்னால் தேவ காரியம் பூர்த்தி செய்யப் பட்டது. இப்பொழுது உனக்கு ஒரு நல்ல வரம் தருகிறேன். காளிகையே! சண்டமுண்டர்களைக் கொன்ற காரணத்தால் பூமியில் உன் பெயர் சாமுண்டா என்று பிரசித்தமாய் விளங்கப்போகிறது.'

हतौ तौ दानवौ दृष्ट्वा हतशेषाश्च सैनिकाः ।
पलायनं ततः कृत्वा जग्मुः सर्वे नृपं प्रति ॥ २७. १ ॥

गत्वा दैत्यपतिं सर्वे चक्रुर्बुम्बारवं मुहुः ।
चित्रं पश्य विधेः कर्म यदधीनं जगत् प्रभो ॥
निहता राक्षसाः सर्वे स्त्रिया पश्यैकयाऽनया ॥ २७. १३ ॥

शुंभ उवाच—

करिष्याम्यद्य संग्रामं यद्भावि तद्भवत्विह ।
जयो वा मरणं वाऽपि स्वीकरोमि यथा तथा ॥ २७. ३५ ॥

रक्तबीज महाबाहो गच्छ त्वं समरांगणे ।
कुरु युद्धं महाभाग यथा ते बलमाहितम् ॥ २७. ४४ ॥

27.1. அவ்வசுரர்கள் கொல்லப்பட்டதைக்கண்டு மடிந்தது போக எஞ்சியிருந்த சேனையானது தங்கள் அரசனை நோக்கி ஓட்டமெடுத்தது.

27.13. அசுர ராஜனிடம் சென்ற அவர்களனைவரும் அடிக்கடி கூக்குரலிட்டுக்கதறி 'பிரபுவே! எந்த விதியின் வசத்தில் உலகுளதோ அதனுடைய வேடிக்கையைப் பாருங்கள். இந்த ஒரே ஒரு ஸதிரீயால் எல்லா ராக்ஷஸர்களும் கொன்று விழ்த்தப்பட்டனர்' என்று முறையிட்டார்கள்.

சும்பன் கூறியது—

27.35. நான் இப்பொழுது யுத்தம் செய்கிறேன். எது வரவேண்டுமோ அது இங்கு வரட்டும். வெற்றியோ மரணமோ எது வந்தாலும் அப்படியே ஏற்றுக்கொள்வேன்.

27.44. பெருந்தோள் படைத்த ரக்தபீஜா! போர்க் களத்திற்கு நீ செல். மகாபாக்கியசாலியே! உன்னுடைய பலத்திற்குத் தக்கபடி யுத்தம் செய்.

रक्तबीज उवाच—

महाराज न ते कार्या चिन्ता स्वल्पतराऽपि वा।
अहमेनां हनिष्यामि करिष्यामि वशे तव ॥ २७. ४५ ॥

व्यास उवाच—

इत्याभाष्य कुरुश्रेष्ठ रक्तबीजो महासुरः।
जगाम रथमारुह्य स्वसैन्यपरिवारितः ॥ २७. ४७ ॥

मुमोच तरसा बाणान् सिंहस्योपरि दारुणान्।
अम्बिका तान् शरान् वीक्ष्य गगने पन्नगोपमान्।
चिच्छेद सायकैस्तीक्ष्णै-र्लघुहस्ततया क्षणात् ॥ २८. ७ ॥

अन्यैर्जघान विशिखै रक्तबीजं महासुरम्।
अम्बिका चापनिर्मुक्तैः कर्णाकृष्टैः शिलाशितैः ॥ २८. ८ ॥

ரக்தபீஜன் கூறியது—

27.45. மகாராஜரே! நீங்கள் கொஞ்சங்கூடக் கவலைப்படவேண்டாம். நான் இவளைக் கொல்லுகிறேன். அல்லது உங்கள் வசமாக்குகிறேன்.

வியாஸர் கூறியது—

27.47. குருசிரேஷ்டனே! மகா அசுரனாகிய ரக்த பீஜன் இவ்வாறு கூறிவிட்டுத் தேரில் ஏறிக்கொண்டு தன் சைனியம் புடைசூழ்ந்துவரப் போர்க்களம் சென்றான்.

28.7. அவன் சிங்கத்தின்மேல் கொடிய பாணங்களை விரைவில் விட்டான். ஆகாயத்தில் பாம்புகளைப்போல் வரும் அந்த பாணங்களைக்கண்டு அம்பிகை தனது இலகுவான கையால் கூரிய பாணங்களைக் கொண்டு அவற்றை ஒரு நொடியில் வெட்டினாள்.

28.8. மகா அசுரனாகிய ரக்தபீஜனை அம்பிகை தனது வில்லில் கூரிய பாணங்களைக் காது வரை இழுத்துவிட்டுத் தாக்கினாள்.

देवीबाणहतः पापो मूर्छमाप रथोपरि ।
पतिते रक्तबीजे तु हाहाकारो महानभूत् ॥ २८. ९ ॥

ततो बुम्बारवं श्रुत्वा शुंभः परमदारुणम् ।
उद्योगं सर्वसैन्यानां दैत्यानामादिदेशह ॥ २८. १० ॥

इत्याज्ञप्तं बलं सर्वं शुंभेन च चतुर्विधम् ।
निर्जगाम मदाविष्टं देवीसमरमण्डले ॥ २८. १२ ॥

तस्मिन्नेवायते युद्धे दारुणे लोमहर्षणे ।
ब्रह्मादीनां च देवानां शक्तयश्चण्डिकां ययुः ॥ २८. १८ ॥

यस्य देवस्य यद्रूपं यथा भूषणवाहनम् ।
तादृग्रूपास्तदा देव्यः प्रययुः समरांगणे ॥ २८. १९ ॥

28.9. தேவிவிட்ட பாணங்களால் அடிப்பட்ட அந்தப் பாவி தேரின்மேல் மூர்ச்சையடைந்தான். ரக்தபீஜன் விழுந்ததும் 'ஹா, ஹா' என்ற பெரிய சப்தம் எழுந்தது.

28.10. மிகவும் பயங்கரமான அப்பெரிய சப்தத்தைக் கேட்டு சும்பன் எல்லாச் சேனைகளும் தயாராகும்படி கட்டளையிட்டான்.

28.12. இவ்வாறு சும்பனால் கட்டளையிடப்பட்ட நான்குவகை சேனைபலம் முழுவதும் போர் வெறியுடன் தேவியின் யுத்த மண்டலத்திற்குக் கிளம்பிச் சென்றது.

28.18. நீண்டதும் மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமாகியதுமான அந்த யுத்தத்தில் பிரம்மா முதலிய தேவர்களின் சக்திகள் அம்பிகையை வந்தடைந்தார்கள்.

28.19. எந்த தேவனுக்கு என்ன ரூபமோ, பூஷணமும் வாகனமும் எப்படியோ அப்படி ரூபத்துடன் போர்க்களத்திற்கு அந்தந்த தேவிகள் வந்தார்கள்.

ब्रह्माणी वरटारूढा साक्षसूत्र-कमण्डलुः ।
आगता ब्रह्मणः शक्तिर्ब्रह्माणीति प्रतिश्रुता ॥ २८. २० ॥

वैष्णवी गरुडारूढा शंखचक्रगदाधरा ।
पद्महस्ता समायाता पीताम्बरविभूषिता ॥ २८. २१ ॥

शांकरी तु वृषारूढा त्रिशूलवरधारिणी ।
अर्धचन्द्रधरा देवी तथाऽहिवलया शिवा ॥ २८. २२ ॥

कौमारी शिखिसंरूढा शक्तिहस्ता वरानना ।
युद्धकामा समायाता का र्तिकेयस्वरूपिणी ॥ २८. २३. ॥

इन्द्राणी सुष्ठुवदना सुश्वेतगजवाहना ।
वज्रहस्ताऽतिरोषाढ्या संग्रामाभिमुखी ययौ ॥ २८. २४ ॥

28.20. பிரம்மாணீ எனப் பெயர் பெற்ற பிரம்மசக்தி பெண் அன்னத்தின் மேலேறிக் கொண்டு அக்ஷமாலேயும் கமண்டலுவும் தாங்கியவளாய் எழுந்தருளினுள்.

28.21. வைஷ்ணவீ கருடன் மேலேறிக்கொண்டு சங்கு சக்கரம் கதை தாமரைப்பூ ஆகியவற்றைத் தரித்தவளாய் பீதாம்பரத்தால் அலங்கரிக்கப்பெற்றவளாய் எழுந்தருளினுள்.

28.22. சிவசக்தியானதேவி சாங்கரீ விருஷப வாகனத்தின்மேல் திரிசூலத்துடன் வரமுத்திரை உடையவளாய் பாதிச்சந்திரனேச் சிரசிலணிந்து பாம்பைக் கங்கணமாய்ப் பூண்டு எழுந்தருளினுள்.

28.23. கார்த்திகேய ஸ்வரூபிணியான கௌமாரீ மயில்வாகனத்தின் மேல் வேலாயுதத்தைக் கைக்கொண்டு சிறந்த முகத்துடன் போரை விரும்புபவளாய் எழுந்தருளினுள்.

28.24. இந்திராணீ தெளிவான முகத்துடன் நல்ல வெள்ளையானை மீதேறிக்கொண்டு வஜ்ராயுதத்தைக் கையிலேந்தி மிகக் கோபத்துடன் போர் முகத்திற்கெழுந்தருளினுள்.

वाराही सूकराकारा प्रौढप्रेतासना मता ।
नारसिंही नृसिंहस्य बिभ्रती सदृशं वपुः ॥ २८. २५ ॥

याम्या च महिषाऽऽरूढा दण्डहस्ता भयप्रदा ।
समायाताऽथ संग्रामे यमरूपा शुचिस्मिता ॥ २८. २६ ॥

तथैव वारुणी शक्तिः कौबेरी च मदोत्कटा ।
एवं विधास्तथाऽऽकारा ययुः स्वस्वबलैर्वृताः ॥ २८. २७ ॥

आगतास्ते समालोक्य देवी मुदमवाप च ।
स्वस्था मुमुदिरे देवा दैत्याश्च भयमापतुः ॥ २८. २८ ॥

ताभिः परिवृतस्तत्र शंकरो लोकशंकरः ।
समागम्य च संग्रामे चण्डिकामित्युवाच ह ॥ २८. २९ ॥

28.25. பன்றியுருக்கொண்ட வாராஹீ திறமைமிக்க பூதவாகனத்தின் மேலும், நாரசிம்மீ நரசிங்கத்திற்கொப் பான உருக்கொண்டவளாகவும் எழுந்தருளினார்கள்.

28.26. யமசக்தியானவள் யமரூபத்தில் சிரித்த முகத்துடன் எருமை வாகனமேறி கையில் தண்டாயுதத் துடன் பயத்தையளிப்பவளாய்ப் போருக்கு வந்து சேர்ந்தாள்.

28.27. அவ்வாறே வாருணீ சக்தியும், மிகுந்த பலம் வாய்ந்த குபேர சக்தியும் அவ்வாறே அந்தந்த வடிவங் களில் தங்கள் தங்கள் சேனைபலத்தால் சூழப்பட்டு எழுந் தருளினார்கள்.

28.28. எழுந்தருளிய அவர்களைப்பார்த்து தேவி யானவள் மகிழ்ச்சியடைந்தாள்; தேவர்கள் கவலை நீங்கி ஸந்தோஷித்தார்கள்; அசுரர்கள் திகிலடைந்தனர்.

28.29. உலகிற்கு மங்களத்தைச் செய்யும் சங்கரர் அச்சக்திகளால் சூழப்பட்டுப் போர்க்களத்திற்கு வந்தவர் சண்டிகையிடம் பின்வருமாறு கூறினார்.

हन्यतामसुराः शीघ्रं देवानां कार्यसिद्धये ।
स्वानि स्वानि च धिष्ण्यानि समागच्छन्तु शक्तयः ॥ २८. ३० ॥

शमं यान्तु तथोत्पाता ईतयश्च तथा पुनः ।
घनाः काले प्रवर्षन्तु कृषिर्बहुफला तथा ॥ २८. ३२ ॥

एवं ब्रुवति देवेशे शंकरे लोकशंकरे।
चण्डिकायाः शरीरात्तु निर्गता शक्तिरद्भुता ॥ २८. ३३ ॥

भीषणाऽतिप्रचण्डा च शिवाशत-निनादिनी ।
घोररूपाऽथ पंचास्यमित्युवाच स्मितानना ॥ २८. ३४ ॥

28.30. 'தேவர்களின் காரியசித்திக்காக அசுரர்கள் சீக்கிரம் கொல்லப்படட்டும். சக்திகள் மீண்டும் அவரவர்கள் ஸ்தானங்களுக்குச் செல்லட்டும்.

28.32. 'ஆபத்துக்கள் விலகட்டும்; ஈதிபாதைகளும் ஒழியட்டும்; மேகங்கள் உரிய காலத்தில் மழை பொழியட்டும்; பயிர்த்தொழில் மிகுந்த பயனையளிக்கட்டும்.'

28.33. உலகிற்கு மங்களத்தையளிப்பவளும் தேவேசுவரருமாகிய சங்கரர் இங்ஙனம் கூறியதும் சண்டிகையின் சரீரத்திலிருந்து அற்புதமான ஒரு சக்தி வெளிப்பட்டாள்.

28.34. பயங்கரமாயும் மிகக் கடுமையாயும் கோர வடிவினளாயும் நூறு நரிகளைப்போல் ஒலி செய்பவளாயும் இருந்த அந்த சக்தி சிரித்த முகத்துடன் சங்கரரிடம் பின் வருமாறு கூறினாள்.

देवदेव व्रजाऽऽशु त्वं दैत्यानामधिपं प्रति ।
दूतत्वं कुरु कामारे ब्रूहि शुंभं स्मराकुलम् ॥ २८. ३५ ॥

निशुंभं च मदोत्सिक्तं वचनान्मम शंकर ।
मुक्त्वा त्रिविष्टपं यात यूयं पातालमाशु वै ॥ २८. ३६ ॥

अथवा बलमास्थाय युद्धेच्छा मरणाय चेत् ।
तदाऽऽगच्छन्तु तृप्यन्तु मच्छिवाः पिशितेन वः ॥ २८. ३९ ॥

इति दैत्यवरान् देवी वाक्यं पीयूषसन्निभम् ।
हितकृच्छ्रावयित्वा स प्रत्यायातश्च शूलभृत् ॥ २८. ४५ ॥

ययाऽसौ प्रेरितः शंभु-र्दूतत्वे दानवान् प्रति ।
शिवदूतीति विख्याता जाता त्रिभुवनेऽखिले ॥ २८. ४६ ॥

28.35–39. 'தேவ தேவரே! காமனை வென்றவரே! காமத்தால் புத்திகெட்ட அசுர வேந்தனுகிய சும்பனிடமும் மதம்பிடித்த நிசும்பனிடமும் நீர் தூதுவராக விரைந்து சென்று நான் கூறும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டும். அதாவது ''தேவலோகத்தைவிட்டு நீங்கள் விரைவில் பாதாளம் செல்லுங்கள். அல்லது உங்கள் பலத்தை நம்பிப் போர் புரிந்து சாக விரும்பினுல் அப்படியே வாருங்கள். உங்களுடைய மாமிசத்தால் என்னுடைய சக்திகள் திருப்தி யடையட்டும்.''

28.45. நன்மை செய்யும் சூலபாணியாகிய சங்கரர் தேவியின் அமுதம் போன்ற இவ்வார்த்தையை அசுர சிரேஷ்டர்கள் காதில் போட்டுவிட்டுத் திரும்பிப் போய் விட்டார்.

28.46. எந்த தேவியால் சம்புவானவர் அசுரர்களிடம் தூதராக அனுப்பப்பட்டாரோ அந்த தேவி முவ்வுலகனைத் திலும் சிவதூதி எனப்பெயர் பெற்றவளானுள்.

तेऽपि श्रुत्वा वचो देव्याः शंकरोक्तं तु दुष्करम् ।
युद्धाय निर्ययुः शीघ्रं दंशिताः शस्त्रपाणयः ॥ २८. ४७ ॥

तरसा रणमागत्य चण्डिकां प्रति दानवाः ।
निर्जघ्नुंश्च शरैस्तीक्ष्णैः कर्णाकृष्टैः शिलाशितैः ॥ २८. ४८ ॥

कालिका शूलपातैस्तान् गदाशक्तिविदारितान् ।
कुर्वन्ती व्यचरत्तत्र भक्षयन्ती च दानवान् ॥ २८. ४९ ॥

एवं मातृगणेनाऽऽजावतिवीर्यपराक्रमम् ।
मर्दितं दानवं सैन्यं पलायनपरं ह्यभूत् ॥ २८. ५९ ॥

गर्जमानांस्तथा देवान् वीक्ष्य दैत्यो महाबलः ।
रक्तबीजस्तु तेजस्वी रणमभ्याययौ तदा ॥ २८. ६२ ॥

28.47. சங்கரர் கூறிய தேவியின் வார்த்தையைக் கேட்ட அசுரர்கள் அப்படிச் செய்ய முடியாதென்று கவசம் பூண்டு ஆயுதபாணிகளாய்ப் போருக்குக் கிளம்பிஞர்கள்.

28.48. அவ்வசுரர்கள் போர்க்களத்திற்கு விரைந்து தேவியை எதிர்த்துக் கூரான அம்புகளேக் காதுவரை இழுத்து அவளேத் தாக்கிஞர்கள்.

28.49. காளிகாதேவி சூலம் சக்தி கதை முதலிய ஆயுதங்களால் அசுரர்களேக் கொன்று வீழ்த்திக் கொண்டும் எடுத்து விழுங்கிக் கொண்டும் போர்க்களத்தில் நடமாடிஞள்.

28.59. அவ்வாறே மாத்ரு கணங்களாலும் போரில் வீரியமும் பராக்கிரமமும் மிகுந்த அசுர சைனியம் தாக்கித் துரத்தப்பட்டது.

28.62. அப்பொழுது தேவர்கள் கர்ஜித்ததைப் பார்த்த மகா தேஜஸ்வியும் பலசாலியுமான ரக்தபீஜாசுரன் போர்க்களத்திற்கு வந்தான்.

स दृष्ट्वा वैष्णवीं शक्तिं गरुडोपरि संस्थिताम्।
शक्त्या जघान दैत्येन्द्रस्तां वै कमललोचनाम् ॥ २९.५ ॥

गदया वारयामास शक्तिः सा शक्तिसंयुता।
अताडयच्च चक्रेण रक्तवीजं महासुरम् ॥ २९. ६ ॥

रथांगहतदेहात्तु बहु सुस्राव शोणितम्।
वज्राहत-गिरेः शृंगान्निर्झरा इव गौरिकाः ॥ २९. ७ ॥

यत्र यत्र यदा भूमौ पतन्ति रक्तबिन्दवः।
समुत्तस्थुस्तदाकाराः पुरुषाश्च सहस्रशः ॥ २९. ८ ॥

ऐन्द्री तमसुरं घोरं वज्रेणाभिजघान च।
रक्तवीजं क्रुधाविष्टा निःससार च शोणितम् ॥ २९. ९ ॥

29.5. அந்த அசுரசிரேஷ்டன் கருடவாகனத்தின் மேலிருந்த வைஷ்ணவீ சக்தியைப் பார்த்துத் தாமரைக் கண்ணியான அவளை வேலாயுதங் கொண்டு தாக்கினான்.

29.6. சக்திவாய்ந்த அவள் அந்த வேலாயுதத்தை கதாயுதத்தால் தடுத்து மகா அசுரனாகிய ரக்தபீஜனைச் சக்ராயுதத்தால் அடித்தாள்.

29.7. வஜ்ராயுதத்தால் அடிபட்ட மலைச்சிகரத்திலிருந்து காவிப்பொடிகள் உதிர்வதுபோல் சக்ராயுதத்தால் அடிபட்ட அவனுடைய உடலிலிருந்து இரத்தம் நிறையப் பெருகிற்று.

29.8. இரத்தத்துளிகள் எப்பெப்பொழுது எங்கெங்கு சிந்தினவோ அங்கெல்லாம் அவனைப் போன்ற உருப் படைத்த புருஷர்கள் ஆயிரக்கணக்கில் கிளம்பினார்கள்.

29.9. கோபத்துடன் இந்திராணி வஜ்ராயுதத்தால் ரக்தபீஜனை அடிக்கவே அவனுடைய இரத்தம் பெருகிற்று.

ततस्तत्क्षतनाज्जाता रक्तबीजाह्यनेकशः।
तद्वीर्याश्च तदाकाराः सायुधा युद्धदुर्मदाः ॥ २९. १० ॥
सोऽपि क्रुद्धः शरासारैर्बिभेद निशितैश्च ताः।
गदाशक्तिप्रहारैस्तु मातॄः सर्वाः पृथक् पृथक् ॥
शक्तयस्तं शराघातैर्विविधुस्तत्प्राकोपिताः ॥ २९. १४ ॥
रक्तबीजैर्जगद्व्याप्तं रुधिरौघसमुद्भवैः।
सन्नादैः सायुधैः कामं कुर्वद्भिर्युद्ध-मद्भुतम् ॥ २९. १७ ॥
प्रहरन्तश्च तान् दृष्ट्वा रक्तबीजाननेकशः।
भयभीताः सुरास्त्रेसु-र्विषण्णाः शोककर्षिताः ॥ २९. १८ ॥
एवं देवा भयोद्विग्नाश्चिन्तामापु-र्महत्तराम्।
यदा तदाम्बिका प्राह कालीं कमललोचनाम् ॥ २९. २२ ॥

29.10. அதனுல் அவனைப்போல் வீரியமும் உருவமும் படைத்தவர்களாய் ஆயுதங்களுடன் கொழுப்புமிக்கவர்களாய் அநேகம் ரக்தபீஜர்கள் தோன்றினுர்கள்.

29.14. ரக்தபீஜனும் கோபங்கொண்டு கூர்மையான பாணங்களால் சக்திகளைத் தாக்கினுன். மாத்ரு கணங்களும் கோபம் மிகுந்தவர்களாய்த் தனித்தனியாக அவனை கதையாலும் பாணங்களாலும் தாக்கினுர்கள்.

29.17. அதனுல் ஏற்பட்ட இரத்த வெள்ளத்தால் உலகம் முழுதும் ரக்தபீஜர்களால் வியாபிக்கப்பட்டதாயிற்று. அவர்கள் கூச்சலிட்டுக்கொண்டு ஆயுதந்தாங்கி அற்புதமாக யுத்தம் செய்யலாயினர்.

29.18. அநேகம் ரக்தபீஜர்கள் தாக்குவதைக்கண்டு தேவர்கள் பயமும் துன்பமும் கவலையும் மேலிட்டவர்களாய் நடுங்கினர்.

29.22. இவ்வாறு எப்பொழுது தேவர்கள் பயத்தால் கலங்கி மிகவும் கவலையடைந்தார்களோ அப்பொழுது அம்பிகை தாமரைக்கண்ணியான காளியைப்பார்த்துப் பின்வருமாறு கூறினுள்.

चामुण्डे कुरु विस्तीर्णं वदनं त्वरिता भृशम् ।
मच्छस्त्रपातसंभूतं रुधिरं पिब सत्वरा ॥ २९. २३ ॥

इत्युक्ताऽम्बिकया देवी चामुण्डा चण्डविक्रमा ।
पपौ च क्षतजं सर्वं रक्तबीजशरीरजम् ॥ २९. २९ ॥

येऽन्ये रुधिरजाः क्रूरा रक्तबीजामहाबलाः ।
तेऽपि निष्पातिताः सर्वे भक्षिता गतशोणिताः ॥ २९. ३२ ॥

कृत्रिमा भक्षिताः सर्वे यस्तु स्वभाविकोऽसुरः ।
सोऽपि प्रपातितो हत्वा खड्गेनाऽतिविखण्डितः ॥ २९. ३३ ॥

रक्तबीजे हते रौद्रे ये चान्ये दानवा रणे ।
पलायनं ततः कृत्वा गतास्ते भयकम्पिताः ॥ २९. ३४ ॥

29.23. 'சாமுண்டீ! மிகவிரைவில் உன் வாயை விரிவாகத் திறந்து கொள். என்னுடைய ஆயுதங்களின் தாக்குதலால் விழும் இரத்தத்தைச் சீக்கிரம் குடித்துவிடு.'

29.29. இவ்வாறு அம்பிகையால் கூறப்பட்டவளும் மகாவிக்கிரமம் படைத்தவளுமான சாமுண்டாதேவி ரக்த பீஜ சரீரத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து பெருகிய இரத்த மனைத்தையும் பருகிவிட்டாள்.

29.32 மற்றும் இரத்தத்திலிருந்து தோன்றியவர்களும் மகா பலசாலிகளுமான ரக்தபீஜர்கள் எவர்கள் உண்டோ அவர்களும் வீழ்த்தப்பட்டு இரத்தத்தையிழந்தவர்களாகி பக்ஷிக்கப்பட்டனர்.

29.33. செயற்கை ரக்தபீஜர்களெல்லாம் பக்ஷிக்கப் பட்டபின் இயற்கை ரக்தபீஜாசுரனும் வாளால் வெட்டிக் கொன்று வீழ்த்தப்பட்டான்.

29.34. கொடிய ரக்தபீஜன் கொல்லப்பட்டதும் போர்க்களத்திலிருந்து ஏனைய அசுரர்கள் பயத்தால் நடுங்கி ஓட்டம்பிடித்து மறைந்தனர்.

हाहेति विब्रुवन्तस्ते शुंभं प्रोचुः सविह्वलाः।
रुधिरारक्तदेहाश्च विगतास्त्रा विचेतसः ॥ २९. ३५ ॥

राजन्नम्बिकया रक्तबीजोऽसौ विनिपातितः।
चामुण्डा तस्य देहात्तु पपौ सर्वंच शोणितम् ॥ २९. ३६ ॥

इति तेषां वचस्तथ्यं श्रुत्वा कालविमोहितः।
मुमूर्षुः प्रत्युवाचेदं शुंभः प्रस्फुरिताधरः ॥ २९. ४८ ॥

शुंभ उवाच —

मरणं त्वनिवार्यं वै प्राणिनां कालकल्पितम्।
तद्भयं जन्मनोपात्तं त्यजेत्को दुर्लभं यशः ॥ २९. ५२ ॥

29.35. ஆயுதங்களேயிழந்து, மனமுடைந்து, இரத்தம் படிந்த மேனியுடன் பயத்தால் நடுங்கிக்கொண்டு அவர்கள் 'ஹா ! ஹா' என்ற கூச்சலுடன் சும்பனேயணுகி அவனிடம் பின்வருமாறு கூறினர்.

29.36. 'அரசே ! அம்பிகையால் ரக்தபீஜன் கொன்று வீழ்த்தப்பட்டான். அவனுடைய உடலிலிருந்து பெருகிய இரத்தமனேத்தையும் சாமுண்டா பருகிவிட்டாள்.'

29.48. இவ்வாறு அவர்கள் உள்ளபடி கூறியதைக் கேட்டு காலத்தால் மதியிழந்தவனும் மரணத்தை நாடுபவனும் ஆகிய சும்பன் கீழுதடு துடிக்கப் பின்வருமாறு பதில் கூறினன்.

சும்பன் கூறியது—

29.52. காலத்தால் கல்பிக்கப்பட்ட மரணம் பிராணிகளால் விலக்க முடியாதது. அந்த பயம் பிறவியுடன் வந்தது. அதற்காக அடைதற்கரிய நற்கீர்த்தியை எவன் துறப்பான் ?

निशुंभाहं गमिष्यामि रथाऽऽरूढो रणाजिरे।
हत्वा तामागमिष्यामि नाऽऽगमिष्यामि चाऽन्यथा
॥ २९. ५३ ॥

निशुंभ उवाच —

अहमद्य हनिष्यामि गत्वा दुष्टां च कालिकाम्।
आगमिष्याम्यहं शीघ्रं गृहीत्वा तामथाऽम्बिकाम् ॥ २९. ५५ ॥

मयि तिष्ठति ते राजन्न युक्तं गमनं रणे।
गत्वाऽऽहमानयिष्यामि तवार्थेवै जयश्रियम् ॥ २९. ५८ ॥

व्यास उवाच —

निशुंभो निश्चयं कृत्वा मरणाय जयाय वा।
सोद्यमः सबलः शूरो रणे देवीमुपाययौ ॥ ३०. १ ॥

29.53. நிசும்பா! நான் தேரில் ஏறிப் போர்க்களம் செல்லுகிறேன். அவளைக் கொன்றுவிட்டு வருகிறேன். வேறு விதமாய் வரமாட்டேன்.

நிசும்பன் கூறியது—

29.55. துஷ்டையான அந்தக் காளிகையை நான் போய்க் கொல்லுகிறேன். நான் சிக்கிரம் போய் அந்த அம்பிகையைப் பிடித்துக் கொண்டு வருகிறேன்.

29.58. அரசே! நான் இருக்கும்பொழுது நீங்கள் போருக்குப் போவது பொருத்தமாகாது. நான் போய் உங்களுக்கு வெற்றிச் செல்வத்தைக் கொண்டுவருகிறேன்.

வியாஸர் கூறியது—

30.1. வெற்றி அல்லது மரணம் என்று நிச்சயித்துக் கொண்டு சூரனுகிய நிசும்பன் அதற்கான முயற்சியுடனும் சைனியத்துடனும் போர்க்களத்திற்கு தேவியை நாடிச் சென்றுன்.

तमाजगाम शुंभोऽपि स्वबलेन समावृतः ।
प्रेक्षकोऽभूद्रणे राजा संग्राम-रसपण्डितः ॥ ३०. २ ॥

निशुंभोऽथ रणे गत्वा धनुराधाय शाङ्‌र्गकम् ।
चकार शरवृष्टिं स भीषयन् जगदम्बिकाम् ॥ ३०. ४ ॥

उवाच कालिकां देवी पश्य मूर्खत्वमेतयोः ।
मरणायागतौ कालि मत्समीप-मिहाधुना ॥ ३०. ६ ॥

दृष्ट्वा दैत्यवधं घोरं रक्तबीजात्ययं तथा ।
जयाशां कुरुतस्त्वेतौ मोहितौ मम मायया ॥ ३०. ७ ॥

आशा बलवती ह्येषा न जहाति नरं क्वचित् ।
भग्नं हृतबलं नष्टं गतपक्षं विचेतनम् ॥ ३०. ८ ॥

30.2. யுத்த ரஸத்தில் பண்டிதனை அரசன் சும்பனும் தன் சைனியத்தால் சூழப்பட்டுப் போர்க்களம் சென்று யுத்தத்தைப் பார்ப்பவனுன்.

30.4. நிசும்பன் போரைத் தொடங்கிக் கொம்பு போன்ற வில்லை எடுத்து அம்பிகையை பயமுறுத்த எண்ணி அம்புகளைப் பொழிந்தான்.

30.6—7. காளிகையைப் பார்த்து தேவி 'இவர் களுடைய முட்டாள் தனத்தைப்பார். காளீ! இவர்கள் அசுரர்களின் அழிவையும் ரக்தபீஜனுடைய முடிவைக் கண்டும் வெற்றியில் ஆசைகொண்டு இவர்கள் என் மாயை யால் மோகமடைந்து இப்பொழுது மரணமடைய இங்கு என் பக்கம் வந்திருக்கின்றனர்.

30.8. 'இந்த ஆசை மிகுந்த பலமுடையது; தோல்வி யடைந்தாலும், பலமிழந்தாலும், நஷ்டமடைந்தாலும், பக்கபலம் போனலும், உணர்விழந்தாலும்கூட அது மனிதனை விடுவதில்லை.

आशापाशनिबद्धौ द्वौ युद्धाय समुपागतौ ।
निहन्तव्यौ मया कालि रणे शुंभनिशुंभकौ ॥ ३०. ९ ॥

इत्युक्त्वा कालिकां चण्डी कर्णाकृष्ट-शरोत्करैः ।
छादयामास तरसा निशुंभं पुरतः स्थितम् ॥ ३०. ११ ॥

दानवोऽपि शरांस्तस्याश्चिच्छेद निशितैः शरैः ।
तयोः परस्परं युद्धं बभूवातिभयानकम् ॥ ३०. १२ ॥

तत्राऽऽजगाम तरसा शुंभः सैन्यसमावृतः ।
निहत्य कालिकां कोपाद् ग्रहीतुं जगदम्बिकाम् ॥ ३०. १७ ॥

धावमानस्तु तरसाऽसिना सिंहं मदोत्कटम् ।
जघानातिबलान्मूर्घ्नि भ्रामयन् जगदम्बिकाम् ॥ ३०. २६ ॥

30.9. 'ஆசையென்னும் கயிற்ருல் பிணிக்கப்பட்ட இவ்விருவரும் யுத்தத்திற்கு வந்திருக்கிருர்கள். காளி! சும்பநிசும்பர்களிருவரும் போரில் என்னுல் கொல்லப்பட வேண்டியவர்கள்.'

30.11. சண்டிகாதேவியானவள் காளியிடம் இவ்வாறு கூறிவிட்டுக் காதுவரை இழுக்கப்பட்டுவிட்ட பாணப் பொழிவால் தன் முன் நின்ற நிசும்பனை வேகமாக மறைத்தாள்.

30.12. அவ்வசுரனும் தேவியின் பாணங்களைத் தனது கூரிய பாணங்களால் வெட்டினுன். மிகவும் பயங்கரமாக அவர்களிடையே யுத்தம் நிகழ்ந்தது.

30.17. சும்பன் கோபத்துடன் காளிகையைத் தாக்கிவிட்டு ஜகதம்பிகையைப் பிடிக்கும் எண்ணத்துடன் தனது படையுடன் அங்கிருந்து விரைந்து வந்தான்.

30.26. வேகமாய் ஓடிவந்து மதவெறிகொண்ட சிங்கத்தின் தலைமேல் அதிகபலத்துடன் வாளைவீசி ஜகதம்பிகையை பிரமிக்கச் செய்தான்.

ततो देवी स्वगदया वंचयित्वासिपातनम्।
ताडयामास तं बाहो-र्मूले परशुना तदा ॥ ३०. २७॥

खड्गेन निहतः सोऽपि बाहुमूले महामदः।
संस्तभ्य वेदनां भूयो जघान चण्डिकां तदा ॥ ३०. २८॥

एवं परस्परं युद्धं बभूवातिभयप्रदम्।
देवानां दानवानां च परस्परजयैषिणाम् ॥ ३०. ३० ॥

पतितान् दानवान् दृष्ट्वा निशुंभोऽतिरुषान्वितः।
प्रययौ चण्डिकां तूर्णं गदामादाय दारुणाम् ॥ ३०. ३३ ॥

सिंहं जघान गदया मस्तके मदगर्वितः।
प्रहृत्य च स्मितं कृत्वा पुनर्देवीमताडयत् ॥ ३०. ३४ ॥

30.27. அப்பொழுது தேவி வாளின் வீச்சைத் தனது கதாயுதத்தால் தடுத்து அவன் தோள்பட்டையில் கோடரியால் அடித்தாள்.

30.28. வாளால் தோள்பட்டையில் அடிக்கப்பட்ட போதிலும் கொழுப்பு மிகுந்த அவன் வேதனையைப் பொறுத்துக்கொண்டு மறுபடியும் சண்டிகையைத் தாக்கினான்.

30.30. இவ்வாறு ஒருவர்க்கொருவர் போர் நிகழ்கையில் தங்கள் தங்கள் வெற்றியை விரும்பும் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அது மிகுந்த பயத்தைத் தருவதாக ஆயிற்று.

30.33. அசுரர்களின் வீழ்ச்சியைக்கண்டு கோபம் மிகுந்த நிசும்பன் கொடிய கதாயுதத்தைத் தூக்கிக்கொண்டு சண்டிகையை நோக்கி விரைந்தான்.

30.34. மதத்தால் கர்வம் பிடித்த அவன் கதையினால் சிங்கத்தைத் தலையில் அடித்துவிட்டுத் சிரித்துக் கொண்டு மீண்டும் தேவியை அடித்தான்.

सा॒ऽपि तं कुपिताऽतीव निशुंभं पुरतः स्थितम् ।
प्रहरन्तं समीक्ष्याऽथ देवी वचनमब्रवीत् ॥ ३०. ३५ ॥

तिष्ठ मन्दमते तावद्यावत्खड्गमिदं तव ।
ग्रीवायां प्रेरयाम्यस्माद् गन्तासि यमसादनम् ॥ ३०. ३६ ॥

इत्युक्त्वा तरसा देवी कृपाणेन समाहिता ।
चिच्छेद मस्तकं तस्य निशुंभस्याऽथ चण्डिका ॥ ३०. ३७ ॥

तस्मिन्निपतिते दैत्ये निशुंभे भीमविक्रमे ।
हाहाकारो महानासीत् तत्सैन्ये भयकम्पिते ॥ ३०. ४० ॥

त्यक्त्वाऽऽयुधानि सर्वाणि सैनिकाः क्षतजाऽऽप्लुताः ।
जग्मुर्बम्बारवं सर्वे कुर्वाणा राजमन्दिरम् ॥ ३०. ४१ ॥

30.35. அப்பொழுது தேவியும் தன் முன் நின்று தாக்கும் நிசும்பனைப் பார்த்து மிகவும் கோபம் மூண்டவளாய்ப் பின்வருமாறு கூறினாள்.

30.36. 'புத்தி மழுங்கியவனே! இந்த என்னுடைய வாளை உன்னுடைய கழுத்தை நோக்கி ஏவுகிறேன்; அதனால் நீ யமஉலகம் செல்வாய்; அதுவரை நில்.'

30.37. சண்டிகாதேவி இவ்வாறு கூறிவிட்டுக் குறி வைத்துக் கத்தியால் நிசும்பனுடைய தலையை வெட்டினாள்.

30.40. பயங்கரமான பராக்கிரமம் படைத்த நிசும்பாசுரன் விழுந்ததும் பயத்தினால் நடுக்கமுற்ற அவனுடைய சேனைகளிடையே 'ஹா! ஹா' என்ற பெருங் கூக்குரல் எழுந்தது.

30.41. சைனியங்களில் இருந்தவர்களெல்லாம் ஆயுதங்களைப் போட்டுவிட்டு இரத்தம் பெருகும் உடல்களுடன் கூக்குரலிட்டுக்கொண்டு அரசமாளிகைக்குச் சென்றனர்.

राजंस्ते निहतो भ्राता शेते समरमूर्धनि।
तया निपातिताः शूरा ये च तेऽप्यनुजानुगाः ॥ ३०. ४२ ॥

इति तेषां वचः श्रुत्वा शुंभो दैत्यपतिस्तथा।
उवाच सैनिकानाशु कोपाकुलितलोचनः ॥ ३१. १ ॥

रथो मे कल्प्यतां शीघ्रं गमिष्यामि रणाजिरे।
जयो वा मरणं वाऽपि भवत्वद्यैव दैवतः ॥ ३१. १४ ॥

इत्युक्त्वा सैनिकाञ्छुम्भो रथमास्थाय सत्वरः।
प्रययावाम्बिका यत्र संस्थिता तु हिमाचले ॥ ३१. १६ ॥

दृष्ट्वा तां मोहमगमच्छुंभः कामविमोहितः।
पंचबाणाहतः कामं मनसा समचिन्तयत् ॥ ३१. २१ ॥

30.42. அரசே! தங்களுடைய சகோதரர் கொல்லப் பட்டு போர்க்களத்தில் விழுந்து கிடக்கிறார். தங்கள் தம்பியைப் பின்பற்றிய சூரர்கள் எவர்களோ அவர்களும் அந்த தேவியால் வீழ்த்தப்பட்டனர்.

31.1. அசுரர்களின் வேந்தனாகிய சும்பன் அவர் களுடைய இவ்வார்த்தையைக் கேட்டுக் கோபத்தால் கலங்கிய சித்தத்துடன் சைனிகர்களிடம் வேகமாய்ப் பின் வருமாறு கூறினான்.

31.14. 'என்னுடைய தேர் விரைவில் சித்தமாகட்டும். நான் போர்க்களம் செல்கிறேன். விதிவசத்தால் இப் பொழுதே வெற்றியோ அல்லது மரணமோ ஏற்படட்டும்.'

31.16. இங்ஙனம் சைனிகர்களிடம் கூறிவிட்டுச் சும்பன் விரைவாகத் தேரிலேறி இமயமலையில் அம்பிகை இருந்த இடத்திற்குச் சென்றான்.

31.21. அம்பிகையைப் பார்த்துக் காமத்தால் மயங்கிய சும்பன் மன்மத பாணங்களால் தாக்குண்டு மதி யிழந்து மனதில் இவ்வாறு சிந்திக்கலானான்.

अहो रूपमिदं सम्यगहो चातुर्यमद्भुतम् ।
सौकुमार्यं च धैर्यं च परस्परविरोधि यत् ।। ३१. २२ ।।

इति संचिन्त्य मनसा शुंभः सत्त्वाश्रितोऽभवत् ।
युद्धाय सुस्थिरो भूत्वा तामुवाच पुरः स्थिताम् ।। ३१. ३४ ।।

देवि युद्धस्व कान्तेऽद्य वृथाऽयं ते परिश्रमः ।
मूर्खासि शस्त्राणि किल नारीणां नाऽयं धर्मः कदाचन
।। ३१. ३५ ।।

वीणानादं परित्यज्य घण्टानादं करोषि यत् ।
रूपयौवनयोः सर्वं विरोधि वरवर्णिनि ।। ३१.४२ ।।

31.22. 'ஐயோ ! இது என்ன அழகு !' அற்புதமான சாதுர்யம்தான் எப்படிப்பட்டது ! இளமையின் மென்மையும் தைரியமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவை.'

31.34. இவ்வாறு மனதால் எண்ணிவிட்டுச் சும்பன் மீண்டும் மனோபலத்தைக் கைக்கொண்டு போர் புரிய நிச்சயித்துத் தன்முன் நின்ற தேவியிடம் பின்வருமாறு கூறினான்.

31.35. 'தேவி ! மனதிற்கினியவளே ! நீ இப்பொழுது போர் புரியலாம். ஆனால் உன்னுடைய இந்த முயற்சி வீண். நீ புத்தியில்லாதவள். ஸ்திரீகளுக்கு ஆயுதமெடுப்பது ஒரு பொழுதும் தர்மமாகாது.

31.42. 'வீணையின் நாதத்தைவிட்டுப் போர் மணியின் நாதத்தைச் செய்கிறாய். அழகிற் சிறந்தவளே ! ரூபத்திற்கும் யௌவனத்திற்கும் இது அனைத்தும் விரோதம்.

यदि ते संगरेच्छाऽस्ति कुरूपा भव भामिनी ।
लम्बोष्ठी कुनखी क्रूरा ध्वाङ्क्षवर्णा विलोचना ।। ३१.४३ ।।

कर्कशं वचनं ब्रूहि ततो युद्धं करोम्यहम् ।
ईदृशीं सुदतीं दृष्ट्वा न मे पाणिः प्रसीदति ।। ३१.४५ ।।

हन्तुं त्वां मृगशाबाक्षि कामकान्तोपमे मृधे ।
इति ब्रुवाणं कामार्तं वीक्ष्य तं जगदम्बिका ।।
स्मितपूर्वमिदं वाक्य-मुवाच भरतोत्तम ।। ३१.४६ ।।

देव्युवाच —

किं विषीदसि मन्दात्मन् कामबाण-विमोहितः ।
प्रेक्षिकाऽहं स्थिता मूढ कुरु कालिकया मृधम् ।। ३१.४७ ।।

31.43–46. 'அழகுமிக்கவளே! உனக்குப் போரில் விருப்பமிருந்தால் தொங்கும் உதடும் அவலக்ஷணமான நகங்களும் கொடிய இயல்பும் காக்கை வர்ணமும் விகாரமான பார்வையும் உடையவளாய்க் குரூபியாகிக் கடுமையாய்ப் பேசு. அப்பொழுது நான் உன்னுடன் யுத்தம் செய்கிறேன். மான் விழியாளே! ரதியைப்போன்றவளே! இப்படிப்பட்ட அழகிய பற்களையுடைய உன்னைக் கண்டு யுத்தத்தில் உன்னைக் கொல்ல என் கை சம்மதிக்கவில்லை' என்று இங்ஙனம் காமத்தால் பீடிக்கப்பட்டுப் பேசும் அவனைப்பார்த்து ஜகதம்பிகை புன்முறுவலுடன் பின்வரும் வாக்கியத்தைக் கூறினாள்.

தேவி கூறியது—

31.47. புத்திமழுங்கியவனே! காமபாணத்தால் மயங்கி ஏன் கலங்குகிறாய்? மூடா! நீ காளிகையுடன் போர்புரி. நான் பார்த்துக்கொண்டு நிற்கிறேன்.

चामुण्डया वा कुर्वंते तव योग्ये रणांगणे ।
प्रहरस्व यथाकामं नाहं त्वां योद्धुमुत्सहे ।। ३१. ४८ ।।

इत्युक्त्वा कालिकां प्राह देवी मधुरया गिरा ।
जह्येनं कालिके क्रूरे कुरूपं प्रियमाहवे ।। ३१. ४९ ।।

व्यास उवाच —

इत्युक्ता कालिका कालप्रेरिता कालरूपिणी ।
गदां प्रगृह्य तरसा तस्थावाजौ कृतोद्यमा ।। ३१. ५० ।।

तयोः परस्परं युद्धं बभूवातिभयानकम् ।
कालिका दैत्यराजानं गदया न्यहनद् भृशम् ।। ३१. ५२ ।।

31.48. அல்லது சாமுண்டாவுடனுவது போர்புரி. இவர்கள் யுத்தகளத்தில் உன்னுடன் போர்புரியத் தகுதியானவர்கள். உன்னிஷ்டப்படி அவர்களை அடிக்கலாம். நான் உன்னுடன் போர்புரிய விரும்பவில்லை.

31.49. இப்படிக் கூறிவிட்டு தேவியானவள் இனிய மொழியில் காளிகையிடம் 'காளிகே! நீ குரூபமுடையவளாயிருப்பதால் யுத்தத்தில் பிரியமுள்ள இவனுடன் போர்புரி' என்றுரைத்தாள்.

வியாஸர் கூறியது—

31.50. இங்ஙனம் கூறப்பட்டவளும் காலனுல் ஏவப்பட்டுக் கால ரூபந்தரித்தவளும் ஆகிய காளிகை விரைவில் கதையைத் தூக்கிக் கொண்டு போர் செய்ய ஆயத்தமாய்ப் போர்க்களத்தில் நின்முள்.

31.52. அவர்களிடையே பயங்கரமான யுத்தம் நிகழ்ந்தது. காளிகை அசுரவேந்தனைக் கதாயுதத்தால் மேன்மேலும் அடித்தாள்.

बभंजास्य रथं चण्डी गदया कनकोज्ज्वलम् ।
खरान् हत्वा जघानाऽऽशु दारुकं दारुणस्वना ॥ ३१. ५३ ॥

स पदातिर्गदां गुर्वीं समाधाय क्रुधाऽन्वितः ।
कालिकामुभयोर्मध्ये प्रहसन्नहनत्तदा ॥ ३१. ५४ ॥

वंचयित्वा गदापातं खड्गमादाय सत्वरा ।
चिच्छेदास्य भुजं सव्यं सायुधं चन्दनार्चितम् ॥ ३१. ५५ ॥

स च्छिन्नबाहुर्विरथो गदापाणिः परिप्लुतः ।
रुधिरेण समागम्य कालिकामहनत्तदा ॥ ३१. ५६ ॥

कालिका च करवालेन भुजं तस्याऽथ दक्षिणम् ।
चिच्छेद प्रहसन्ती सा सगदं किल सांगदम् ॥ ३१. ५७ ॥

31.53. சண்டிகாகாளி பொன்போலொளிரும் அவனுடைய தேரை முறித்துவிட்டுக் கடுமையாய் சப்தம் செய்துகொண்டு அதில் பூட்டியிருந்த கழுதைகளை அடித்துச் சாரதியையும் அடித்தாள்.

31.54. அப்பொழுது அவன் கோபம் பொங்கப் பெரிய கதையை எடுத்துக்கொண்டு காலால் நடந்துவந்து காளிகையை மார்பின் மத்தியை நோக்கிக் கோபச் சிரிப்புடன் அடித்தான்.

31.55. அந்தக் கதையின் தாக்குதலை ஏமாற்றிவிட்டு விரைவில் கத்தியை எடுத்துக் சந்தனம் பூசியதும் ஆயுதம் தாங்கியதுமான அவனுடைய இடது கையை வெட்டினாள்.

31.56. தேரிழந்து கையும் வெட்டப்பட்டு இரத்தம் பெருகுபவனுயினும் மற்றொருகையில் கதையுடன் நெருங்கி வந்து காளிகையை அடித்தான்.

31.57. கதையும் தோள்வளையும் தாங்கிய அவனுடைய வலது கையைக் காளிகையானவள் சிரித்துக்கொண்டே தனது கைவாளால் வெட்டினாள்.

धावमानो ययावाशु कालिकां भीषयन्निव ।
तमागच्छन्त-मालोक्य कालिका कमलोपमम् ॥ ३१. ६० ॥

चकर्त मस्तकं कण्ठाद्रुधिरौघवहं भृशम् ।
छिन्नेऽसौ मस्तके भूमौ पपात गिरिसन्निभः ॥ ३१. ६१ ॥

गतासुं पतितं दैत्यं दृष्ट्वा देवाः सवासवाः ।
तुष्टुवुस्तां तदा देवीं चामुण्डां कालिकां तथा ॥ ३१. ६२ ॥

हतशेषाश्च ये दैत्याः प्रणम्य जगदम्बिकाम् ।
त्यक्त्वाऽऽयुधानि ते सर्वे पातालं प्रययुर्नृप ॥ ३१. ६३ ॥

एतत्ते सर्वमाख्यातं देव्याश्चरित-मुत्तमम् ।
शुंभादीनां वधं चैव सुराणां रक्षणं तथा ॥ ३१. ६४ ॥

31.60–61. காளிகையை பயமுறுத்துபவன் போல் அவன் விரைந்து பாயவே தாமரைபோல் சிவந்திருக்கும் அவனைக் கண்ணுற்று அவனுடைய தலையைக் கழுத்திலிருந்து வெட்டித் தள்ளினுள். இரத்த வெள்ளம் பாய்ந்தது. வெட்டுண்ட தலை பூமியில் ஒரு மலைபோல் விழுந்தது.

31.62. பிராணன் போய் பூமியில் அசுரன் விழுந்ததைக் கண்டு இந்திரனுடன் கூடிய தேவர்கள் அப்பொழுது சாமுண்டா காளிகாதேவியைத் துதித்தார்கள்.

31.63. அரசே! கொல்லப்படாமல் எஞ்சிய அசுரர்கள் ஆயுதங்களை எறிந்துவிட்டு ஜகதம்பிகையை வணங்கிவிட்டு எல்லோரும் பாதாளம் சென்றனர்.

31.64. இவ்வாறு சும்பன் முதலியோரின் வதமும் தேவர்களின் இரக்ஷணமும் தேவியின் உத்தம சரித்திரமும் ஆகிய இதுவெல்லாம் எடுத்துரைக்கப்பட்டது.

एतदाख्यानकं सर्वं पठन्ति भुवि मानवाः ।
शृण्वन्ति च सदा भक्त्या ते कृतार्था भवन्ति हि ॥ ३१. ६६ ॥

31.66. இந்த ஆக்கியானம் முழுவதையும் புவியிலுள்ள எந்த மனிதர்கள் எப்பொழுதும் பக்தியுடன் கேட்கிறார்களோ அவர்கள் வாழ்க்கைப்பயனை எய்தியவர்களாகின்றார்கள்.

॥ इति श्रीदेवीभागवते पंचमस्कन्धे एकत्रिंशोऽध्यायः ॥

॥ शुंभनिशुंभवधवर्णनं समाप्तम् ॥

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஐந்தாவது ஸ்கந்தத்தில் முப்பத்தோராவது அத்தியாயம் முற்றும்.

சும்பநிசும்ப வதவர்ணனை முற்றும்.

॥ भक्तानुग्रहवर्णनम् ॥ २१ ॥

जनमेजय उवाच —

महिमा वर्णितः सम्यक् चण्डिकायास्त्वया मुने ।
केन चाराधिता पूर्वं चरितत्रययोगत: ॥ ३२. १ ॥

प्रसन्ना कस्य वरदा केन प्राप्तं फलं महत् ।
आराध्य कामदां देवीं कथयस्व कृपानिधे ॥ ३२. २ ॥

उपासनाविधिं ब्रह्मंस्तथा पूजाविधिं वद ।
विस्तरेण महाभाग होमस्य च विधिं पुनः ॥ ३२. ३ ॥

21. பக்தானுக்ரஹ வர்ணனே

(ஸுரத மகாராஜனுக்கும் ஸமாதி வைசியனுக்கும் தேவி அருளிய வரலாறு)

ஜனமேஜயர் கூறியது—

32.1. முனிவரே! சண்டிகையின் மகிமை நன்ருக உங்களால் வர்ணிக்கப்பட்டது. மூன்று சரித்திரங்களையும் கேட்டதின் பயனுய் யாரால் முற்காலத்தில் தேவியானவள் ஆராதிக்கப்பட்டாள்?

32.2. கிருபாநிதியே! யாருக்குப் பிரஸன்னமாகி வரமளித்துள்ளாள்? ஆசையை நிறைவேற்றும் தேவியை ஆராதித்து யாரால் சிறப்பான பயன் அடையப்பட்டது கூறியருளும்.

32.3. பிரம்மஸ்வரூபியே! மகாபாக்கியசாலியே! உபாஸனுமார்க்கத்தையும் அவ்வாறே பூஜாவிதியையும், மேலும் ஹோமவிதியையும் விரிவாகக் கூறியருளும்.

सूत उवाच —

इति भूपवचः श्रुत्वा प्रीतः सत्यवतीसुतः।
प्रत्युवाच नृपं कृष्णो महामायाप्रपूजनम् ॥ ३२. ४॥

व्यास उवाच —

स्वारोचिषेऽन्तरे पूर्वं सुरथो नाम पार्थिवः।
बभूव परमोदारः प्रजापालन-तत्परः ॥ ३२. ५ ॥

सत्यवादी कर्मपरो ब्राह्मणानां च पूजकः।
एवं पालयतो राज्यं म्लेच्छाः पर्वतवासिनः ॥ ३२. ७ ॥

बलाच्छत्रुत्वमापन्नाः सैन्यं कृत्वा चतुर्विधम्।
कोलाविध्वंसिनः प्राप्ताः पृथ्वीग्रहणतत्पराः ॥ ३२. ८ ॥

ஸூதர் கூறியது—

32.4. இங்ஙனம் அரசன் கூறியதைக் கேட்ட ஸத்யவதி புத்திரராகிய கிருஷ்ணதுவைபாயனர் பிரீதியடைந்தவராய் மகாமாயையின் வழிபாட்டு முறையை அரசனுக்குக் கூற லானர்.

வியாஸர் கூறியது—

32.5. பூர்வகாலத்தில் ஸ்வாரோசிஷ மன்வந்தரத்தில் ஸுரதன் என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் உயர் குணமுடையவனுகவும் பிரஜைகளைப் பரிபாலிப்பதில் ஊக்கம் மிகுந்தவனுகவும் இருந்தான்.

38.7–8. அவன் ஸத்தியத்தையே பேசுபவன், கருமத்தில் கண்ணுகியவன், பிராம்மணர்களைப் பூஜிப்பவன். இப்படி அரசாட்சி நடத்திவருகையில் மலைவாசிகளான மிலேச்சர்கள் தங்கள் பலத்தால் நான்குவிதமான சேனையைத் திரட்டிக் கொண்டு பூமியை ஜயிப்பதில் ஆர்வமுள்ளவர்களாய்க் கோலாஹலத்துடன் போர்புரிபவர்களாய் ஸுரதனுக்குப் பகைவர்களாய் எதிர்த்து வந்தனர்.

म्लेच्छानां तु बलं स्वल्पं राज्ञस्तद्बलमद्भुतम् ।
तथाऽपि तैर्जितो युद्धे दैवाद्राजा पराजितः ॥ ३२. ११ ॥

मन्त्रिणः शत्रुवशगा मन्त्रयोग्या न ते किल ।
किं करोमीति मनसा भूपतिः समचिन्तयत् ॥ ३२. १४ ॥

इति संचिन्त्य मनसा राजा परमदुर्मनाः ।
एकाकी हयमारुह्य निर्जगाम पुरात्ततः ॥ ३२. १९ ॥

योजनत्रयमात्रे तु मुनेराश्रम-मुत्तमम् ।
ज्ञात्वा जगाम भूपाल-स्तापसस्य सुमेधसः ॥ ३२. २१ ॥

32.11. மிலேச்சர்களுடைய பலம் குறைவு; அரசனுடைய பலம் அற்புதமானது; என்றாலும் யுத்தத்தில் அவர்களால் ஜயிக்கப்பட்டான். அரசன் தோற்கடிக்கப்பட்டது தெய்வச் செயல்.

32.14. 'மந்திரிகள் சத்துருக்களின் வசமாகிவிட்டனர்; இனி அவர்கள் யோசனை கேட்கத்தகுதியற்றவர்கள்; நான் என்ன செய்யலாம்?' என்று அரசன் மனதில் ஆழ்ந்து யோசித்தான்.

32.19. யோசித்தபின் மனமிடிந்த அரசன் தன்னந்தனியனாகக் குதிரைமீதேறிக் கொண்டு பட்டணத்திலிருந்து வெளியேகினான்

32.21. மூன்று யோஜனை தூரத்தில் ஸுமேதஸ் என்ற முனிவரின் உத்தமமான ஆசிரமம் இருப்பதையறிந்து அரசன் அங்கு சென்றான்.

बहुवृक्षसमायुक्तं नदी-पुलिन-संश्रितम्।
निर्वैरश्वापदाकीर्णं कोकिलारावमण्डितम् ॥ ३२. २२ ॥

शिष्याध्ययन-शब्दाढ्यं मृगयूथशतावृतम्।
होमधूमसुगन्धेन प्रीतिदं प्राणिनां सदा ॥ ३२. २४ ॥

आसज्य पादपेऽश्वन्तु जगाम विनयान्वितः।
दृष्ट्वा तं मुनिमासीनं सालच्छायासु संश्रितम् ॥ ३२. २६ ॥

मृगाजिनासनं शीतं तपसाऽतिकृशमृजुम्।
अध्यापयन्तं शिष्यांश्च वेदशास्त्रार्थ-दर्शिनम् ॥ ३२. २७ ॥

तं वीक्ष्य भूपतिर्भूमौ पपात दण्डवत्तदा।
उत्तिष्ठोत्तिष्ठ भद्रं ते तमुवाच तदा मुनिः ॥ ३२. ३० ॥

32.22–24. பல விருக்ஷங்களுடனும் நதிக்கரை மணல் மேடுகளுடனும் வைரமற்ற காட்டு மிருகங்களுடனும் கோகிலங்களின் நாதத்துடனும், சீடர்களின் அத்தியயன சப்தத்துடனும் நூற்றுக்கணக்கான மான் கூட்டங்களுடனும் ஹோமப்புகையின் நல்ல வாசனையால் எப்பொழுதும் பிராணிகளுக்குப் பிரீதியளிப்பதாயும் அது இருந்தது.

32.26. ஒரு ஸால விருக்ஷத்தின் நிழலில் வீற்றிருந்த முனிவரைக் கண்டதும் குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு அரசன் வணக்கத்துடன் அவரை யணுகினன்.

32.27–30. மான்தோல் ஆஸனத்தின் மேல் நேராக அமர்ந்து குளிர்ந்த முகத்துடனும் தவத்தால் மிகவும் மெலிந்த தோற்றத்துடனும் சீடர்களுக்கு வேதாத்தியயனம் செய்விப்பவராயும் சாஸ்திர அர்த்தங்களைப் போதிப்பவராயும் விளங்கிய அவரைக்கண்டு அரசன் தரைமேல் தடிக்கம்பு போல் வீழ்ந்து வணங்கினன்.

शिष्यो ददौ वृसीं तस्मै गुरुणा नोदितस्तदा।
उत्थाय नृपतिस्तस्यां समासीनस्तदाज्ञया ॥ ३२. ३१ ॥

अर्घ्यपाद्यार्हणं चक्रे सुमेधा विधिपूर्वकम्।
पप्रच्छाऽत्र कुतः प्राप्तः कस्त्वं चिन्तापरः कथम् ॥ ३२. ३२ ॥

राजोवाच —

सुरथो नाम राजाऽहं शत्रुभिश्च पराजितः।
त्यक्त्वा राज्यं गृहं भार्यामहं ते शरणं गतः ॥ ३२. ३४ ॥

ऋषिरुवाच —

निर्भयं वस राजेन्द्र नाऽत्र ते शत्रवः किल।
आगमिष्यन्ति बलिनो निश्चयं तपसो वलात् ॥ ३२. ३७ ॥

32.31. ஒரு சீடன் குருவால் ஏவப்பட்டு அவனுக்கு ஆசனமளித்தான். அவருடைய ஆக்ஞைப்படி அரசன் எழுந்து அதில் உட்கார்ந்தான்.

32.32. ஸுமேதஸ் அரசனை அர்க்கியம் பாத்தியம் முதலியவற்றால் முறைப்படி உபசரித்து 'இங்கு வந்த காரணம் என்ன? நீர் யார்? ஏன் கவலை மேலிட்டவராய்க் காண்கிறீர்?' என்று வினவினார்.

அரசன் கூறியது—

32.34. 'நான் ஸுரதன் என்ற அரசன். பகைவர்களால் வெல்லப்பட்டு அரசையும் வீட்டையும் மனைவியையும் துறந்து உங்களைச் சரணடைந்திருக்கிறேன்.'

ரிஷி கூறியது—

32.37. அரச சிரேஷ்டரே! பயமில்லாமல் இங்கே இரும். எனது தவ வலிமையால் பலசாலிகளாகிய உமது பகைவர்கள் இங்கு வர மாட்டார்கள்.

नात्र हिंसा कर्तव्या वनवृत्त्या नृपोत्तम।
कर्तव्यं जीवनं शस्त्रै-र्नीवार-फलमूलकैः ॥ ३२. ३८ ॥

व्यास उवाच —

इति तस्य वचः श्रुत्वा निर्भयः स नृपस्तदा।
उवासाऽऽश्रम एवाऽसौ फलमूलाशनः शुचिः ॥ ३२. ३९ ॥

कदाचित्स नृपस्तत्र वृक्षच्छायां समाश्रितः।
चिन्तयामास चिन्तार्तो गृह एव गताशयः ॥ ३२. ४० ॥

राज्यं मे शत्रुभिः प्राप्तं म्लेच्छैः पापरतैः सदा।
संपीडिताः स्युर्लोकास्तै-र्दुराचारै-र्गतत्रपैः ॥ ३२. ४१ ॥

32.38. அரச சிரேஷ்டரே! இங்கு பிராணிகளை ஹிம்சிக்காமல் சிறந்த வனவிருத்தியால் தானியம், பழம், கிழங்கு முதலியவற்றைக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும்.

வியாஸர் கூறியது—

32.39. அவருடைய இவ்வார்த்தையைக் கேட்டு அரசன் பயம் நீங்கி பழம், கிழங்கு முதலியவற்றைப் புசித்துக்கொண்டு பரிசுத்தனாய் ஆசிரமத்தில் வசித்தான்.

32.40. ஒரு சமயம் அவ்வரசன் அங்கு ஒரு மரத்தின் நிழலில் உட்கார்ந்து கொண்டு வீட்டைப் பற்றிய கவலை மேலிட்டவனாய்ப் பின் வருமாறு எண்ணினான்.

32.41. 'எனது இராஜ்யம் மிலேச்சர்களும் எப்பொழுதும் பாவச்செயலில் பற்றுள்ளவர்களும் பகைவர்களால் வியாபிக்கப்பட்டு வெட்கமற்றவர்களும் கெட்ட நடத்தையுள்ளவர்களுமான அவர்களால் ஜனங்கள் மிகவும் துன்பத்திற்குள்ளாயிருப்பார்கள்.

सेवका मम सर्वेते शत्रूणां वशवर्तिनः।
दुःखिता एव जाताः स्युः पालिता ये मया पुरा ।। ३२. ४३ ।।

धनं मे सुदुराचारैरसद्व्ययपरैः परैः।
द्यूतासव-भुजिष्यादि-स्थानेस्यात् प्रापितं किल ।। ३२. ४४ ।

कोशक्षयं करिष्यन्ति व्यसनैः पापबुद्धयः।
न पात्रदाननिपुणाः म्लेच्छास्ते मन्त्रिणोऽपि मे ।। ३२. ४५ ।।

इति चिन्तापरो राजा वृक्षमूलस्थितो यदा।
तदाऽऽजगाम वैश्यस्तु कश्चिदार्तिपरस्तथा ।। ३२. ४६ ।।

नृपेण पुरतो दृष्टः पार्श्वे तत्रोपवेशितः।
पप्रच्छ तं नृपः कोऽसि कुत एवाऽऽगतो वनम् ।। ३२. ४७ ।।

32.43. 'என்னால் பரிபாலிக்கப்பட்டிருந்த என்னுடைய பணியாட்களெல்லோரும் சத்துருக்களின் வசமானவர்களாகித் துன்பத்திற்குள்ளாயிருப்பார்கள்.

32.44. 'என்னுடைய செல்வம் துராசாரமுடையவர்களும் கெட்டவழியில் பொருளை வீணுக்குபவர்களுமான பகைவர்களால் சூது, குடி, வேசி முதலிய இடங்களில் போய்ச்சேரும்.

32.45. 'பாவச்செயலில் புத்தியைச் செலுத்தும் அந்த மிலேச்சர்களும் என்னுடைய மந்திரிகளும் இடமறிந்து தானம் செய்யும் திறமையற்றவர்கள். தீய வழிகளில் பொக்கிஷத்தை அழிப்பார்கள்.

32.46. என்றிவ்வாறு சிந்தையிலாழ்ந்து அரசன் மரத்தடியிலிருக்கையில் துன்பத்திற்காளான வைசியன் ஒருவன் அங்கு வந்து சேர்ந்தான்.

32.47. அவன் அருகில் வந்து தன் முன்னிருப்பதைக் கண்ட அரசன் 'நீர் யார்? வனத்திற்கு வந்த காரணம் என்ன?' என்று அவனை வினவினான்.

तच्छ्रुत्वा वचनं राज्ञस्तमुवाच विशोत्तमः ।
उपविश्य स्थिरो भूत्वा मत्वा साधुसमागमम् ।। ३२. ४९ ।।

वैश्य उवाच —

मित्राऽहं वैश्यजातीयः समाधिर्नाम विश्रुतः ।
धनवान् धर्मनिपुणः सत्यवागनसूयकः ।। ३२. ५० ।।

पुत्रदारैर्निरस्तोऽहं धनलुब्धै-रसाधुभिः ।
स्वजनेन च सन्त्यक्तः प्राप्तोऽस्मि वनमाशु वै ।
कोऽसि त्वं भाग्यवान् भासि कथयस्व प्रियाधुना ।। ३२. ५१ ।।

32.49. அரசனுடைய அவ்வார்த்தையைக் கேட்டு அவ் வைசிய சிரேஷ்டன் அருகிலமர்ந்து மனதைத் திடப்படுத்திக் கொண்டு அச்சேர்க்கையை நல்ல தெனக்கருதிப் பின்வருமாறு பதிலளித்தான்.

வைசியன் கூறியது—

32.50. 'நண்பரே! நான் பிறப்பில் வைசியன், ஸமாதி எனப் பெயர் பெற்றவன், செல்வம் படைத்தவன், தருமத்தில் தேர்ந்தவன், உண்மை பேசுபவன், பொறுமையில்லாதவன்.

32.51. தீயவர்களும் பொருளில் பேராசை கொண்டவர்களுமான மனைவியாலும் மக்களாலும் நான் கைவிடப் பட்டவனுனேன். சுற்றத்தாராலும் கைவிடப்பட்டவன். ஆகையால் வனத்திற்கு விரைந்து வந்துள்ளேன். நீர் பாக்கியசாலியாகக் காண்கிறீர். பிரியமுள்ளவரே! நீர் யாரென்று கூறும்.

राजोवाच —

सुरथो नाम राजाऽहं दस्युभिः पीडितोऽभवम् ।
प्राप्तोऽस्मि गतराज्योऽत्र मन्त्रिभिः परिवंचितः ।। ३२. ५२ ।।

दिष्ट्या त्वमत्र मित्रं मे मिलितोऽसि विशोत्तम ।
सुखेन विहरिष्यावो वनेऽत्र शुभमापदे ।। ३२. ५३ ।।

वैश्य उवाच —

कुटुंबं मे निरालंबं मया हीनं सुदुःखितम् ।
भविष्यति च चिन्तार्तं व्याधिशोकोपतापितम् ।। ३२. ५५ ।।

कदा द्रक्ष्ये सुतं भार्यां गृहं स्वजनमेव च ।
स्वस्थं न मन्मनो राजन् गृहचिन्ताकुलं भृशम् ।। ३२. ५७ ।।

அரசன் கூறியது—

32.52. 'நான் ஸுரதன் என்ற அரசன். மிலேச்சர்களால் பீடிக்கப்பட்டு, மந்திரிகளால் வஞ்சிக்கப்பட்டு, அரசையிழந்து இங்கு வந்துள்ளேன்.

32.53. 'வைசியசிரேஷ்டரே! அதிருஷ்டவசத்தால் நீர் எனக்கு நண்பராய் வந்து கூடியிருக்கிறீர். ஆபத்தில் நமக்கு நன்மையளிக்கும் இவ்வனத்தில் சுகமாய் நாம் வசிப்போம்'.

வைசியன் கூறியது—

32.55. 'பிடிப்பையிழந்துவிட்ட என் குடும்பம் நானில்லாமல் துக்கத்திலாழ்ந்திருக்கும். கவலையும் வியாதியும் துன்பமும் அதைப் பீடிக்கும்.

32.57. 'என் மகனையும் மனைவியையும் வீட்டையும் உறவினர்களையும் நான் எப்பொழுது காண்பேன்? அரசே! என் மனம் தன் நிலையிலில்லை. வீட்டுக்கவலையால் மிகவும் கலங்கியுள்ளது.'

राजोवाच —

यैर्निरस्तोऽसि पुत्राद्यै रसद्वृत्तैः सुबालिशैः।
तान् दृष्ट्वा किं सुखं तेऽद्य भविष्यति महामते ॥ ३२. ५८ ॥

वैश्य उवाच —

मनो मे न स्थिरं राजन् भवत्यद्य सुदुःखितम्।
चिन्तयाऽत्र कुटुम्बस्य दुस्त्यजस्य दुरात्मभिः ॥ ३२. ६० ॥

राजोवाच —

ममाऽपि राज्यजं दुःखं दुनोति किल मानसम्।
पृच्छावोऽद्य मुनिं शान्तं शोकनाशन-मौषधम् ॥ ३२. ६१ ॥

அரசன் கூறியது—

32.58. 'மதிமிக்கோரே! புத்தியில்லாதவர்களும் தீய வழியில் செல்பவர்களும் உம்மைத் துரத்திவிட்டவர்களுமான புத்திரர் முதலியவர்களைப் பார்த்து இப்பொழுது உமக்கு என்ன சுகம் ஏற்படப் போகிறது?

வைசியன் கூறியது—

32.60. 'அரசே! என்மனம் இப்பொழுது துராத்மாக்களால் விலக்க முடியாத குடும்ப சிந்தையால் துன்பத்தையடைந்து நிலை கொள்ளாமலிருக்கிறது.'

அரசன் கூறியது—

32.61 என்னுடைய மனதையும் தான் அரசாங்கத்தை பற்றிய துக்கம் வாட்டுகிறது. சோகத்தைப் போக்கும் மருந்து போன்றவரும் சாந்தஸ்வரூபியுமான முனிவரிடம் இப்பொழுதே இதைப்பற்றிக் கேட்போம்.

व्यास उवाच —

इति कृत्वा मतिं तौ तु राजा वैश्यश्च जग्मतुः ।
मुनिं तौ विनयोपेतौ प्रष्टुं शोकस्य कारणम् ॥ ३२. ६२ ॥

गत्वा तं प्रणिपत्याऽऽह राजा ऋषिमनुत्तमम् ।
आसीनं सम्यगासीनः शान्तं शान्तिमुपागतः ॥ ३२. ६३ ॥

राजोवाच —

मुने वैश्योऽयमधुना वने मे मित्रतां गतः ।
पुत्रदारै-र्निरस्तोऽयं प्राप्तोऽत्र मम संगमम् ॥ ३३. १ ॥

न शान्ति-मुपयात्येष तथाऽपि मम साम्प्रतम् ।
गतराज्यस्य दुःखेन शोकार्तोऽस्मि महामते ॥ ३३. २. ॥

வியாஸர் கூறியது—

32.62. இங்ஙனம் நிச்சயித்துக் கொண்டு சோகத்தின் காரணத்தைப்பற்றி வினவுவதற்காக அரசனும் வைசியனும் அடக்கத்துடன் முனிவரிடம் சென்றூர்கள்.

32.63. ஒப்புயர்வற்றவரும் சாந்தமாய் வீற்றிருப்ப வருமான அந்த ரிஷியையடைந்து அவரை நமஸ்கரித்து அவர் முன்னமர்ந்து மனதில் அமைதியைப் பெற்று அரசன் பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டான்.

அரசன் கூறியது—

33.1. முனிவரே! இவ்வைசியர் இப்பொழுது வனத்தில் என்னுடன் நட்புக் கொண்டவர். மனைவியாலும் மக்க ளாலும் தள்ளிவிடப்பட்டவர். என்னுடன் இங்கே சந்திப்பை யடைந்துள்ளார்.

33.2. இவருக்கு மனதில் அமைதியில்லை. அவ்வாறே தான் தற்சமயம் என்னுடைய நிலையும் உளது. மதியிற் சிறந்தவரே! அரசை இழந்து நான் துக்கத்தாலும் கவலை யாலும் பிடிக்கப்பட்டுள்ளேன்.

निष्कारणं च मे चिन्ता हृदयान्न निवर्तते।
जानामीदं जगन्मिथ्या स्वप्नवत्सर्वमेव हि ॥ ३३.४॥

स्वामिंस्त्वमसि सर्वज्ञः सर्वसंशयनाशकृत्।
कारणं ब्रूहि मोहस्य ममाऽस्य च दयानिधे॥ ३३.७॥

ऋषिरुवाच —

श्रृणु राजन् प्रवक्ष्यामि कारणं बन्धमोक्षयोः।
महामायेति विख्याता सर्वेषां प्राणिनामिह ॥ ३३.९॥

तया सृष्टमिदं सर्वं जगत्स्थावरजंगमम्।
तद्वशे वर्तते नूनं मोहजालेन यन्त्रितम्॥ ३३.१३॥

33.4. இவ்வுலகம் முழுதும் கனவைப்போல் பொய் என்பதை நான் அறிகிறேன் எனினும் காரணமில்லாத கவலே என் உள்ளத்திலிருந்து விலகவில்லே.

33.7. ஆண்டவரே! தயா நிதியே! நீங்கள் எல்லாம் அறிந்தவர்கள். எல்லாச் சந்தேகங்களேயும் தீர்ப்பவர்கள். என்னுடைய இந்த மதிமயக்கத்திற்கும் பொதுவாகவே மோகத்திற்கும் காரணம் என்னவென்று கூறியருளுங்கள்.

ரிஷி கூறியது—

33.9 அரசே! கூறுகிறேன், கேளும். இங்கு எல்லாப் பிராணிகளின் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மஹாமாயை எனக்கூறப்படுகிருள்.

33.13. அசைவதும் அசையாததுமான இவ்வுலகனைத்தும் அவளாலேயே சிருஷ்டிக்கப்பட்டது. மோஹஜாலத்தால் ஆட்டி வைக்கப்படும் இது அவள் வசத்தில் இயங்கிவருகிற தென்பது நிச்சயம்.

ज्ञानिनामपि चेतांसि मोहयत्यनिशं हि सा।
बलादाकृष्य मोहाय प्रयच्छति महीपते ॥ ३३. ५१ ॥

यया व्याप्तमिदं सर्वं भगवत्या चराचरम्।
मोहदा ज्ञानदा सैव बन्धमोक्षप्रदा सदा ॥ ३३. ५२ ॥

नित्यैव सा परा देवी कारणानां च कारणम्।
वर्तते सर्वभूतेषु शक्तिः सर्वात्मना नृप ॥ ३३. ५५ ॥

शववच्छक्तिहीनस्तु प्राणी भवति सर्वथा।
चिच्छक्तिः सर्वभूतेषु रूपं तस्यास्तदेव हि ॥ ३३. ५६ ॥

आविर्भवति कार्यार्थं स्वेच्छया परमेश्वरी।
दैवाधीना न सा देवी यथा सर्वे सुरा नृप ॥ ३३. ५९ ॥

33.51. அரசே! ஞானிகளுடைய சித்தத்தையும் அவள் இடைவிடாது மயக்குகிருள். பலாத்காரமாய் இழுத்து மோஹத்தில் புகுத்துகிருள்.

33.52. எந்த பகவதியால் இந்தச்சராசரப் பிரபஞ்சம் அனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளதோ அவள் எப்பொழுதும் மதிமயக்கத்தைக் கொடுப்பவளாயினும் ஞானத்தையளிப்ப வளாகவும் பந்தத்தை விளைப்பவளாயினும் மோக்ஷத்தை யருள்பவளாயும் இருக்கிருள்.

33.55. அந்த பரதேவதை எப்பொழுதும் உள்ளவள்; காரணத்திற்கெல்லாம் காரணமாகியவள். அரசே! எவ்வாற் ருனும் எல்லாப் பொருள்களிலும் அவள் சக்தியாக உறைகிருள்.

33.56. சக்தியில்லாத பிராணி எல்லாவகையிலும் பிணம் போலாகிறது. எல்லா உயிர்களிலும் உள்ள அறி வெனும் சக்திதான் அவளுடைய வடிவம்.

33.59. அந்தப் பரமேசுவரி காரியத்தின் பொருட்டு தன்னிச்சையால் தோன்றுகிருள். அரசே! தேவர்களனை வரும் எவ்வாறு விதிக்கு வசமானவர்களோ அப்படிப்பட்ட வளன்று அந்த தேவி.

न कालवशगा नित्यं पुरुषार्थप्रवर्तिनी।
अकर्ता पुरुषो द्रष्टा दृश्यं सर्वमिदं जगत् ॥ ३३. ६० ॥

दृश्यस्य जननी सैव देवी सदसदात्मिका।
पुरुषं रंजयत्येका कृत्वा ब्रह्माण्डनाटकम् ॥ ३३. ६१ ॥

रंजिते पुरुषे सर्वं संहरत्यतिरंहसा।
तथा निमित्तभूतास्ते ब्रह्मविष्णुमहेश्वराः ॥ ३३. ६२ ॥

ते तां ध्यायन्ति देवेशाः पूजयन्ति परां मुदा।
ज्ञात्वा सर्वेश्वरीं शक्तिं सृष्टिस्थिति-विनाशिनीम् ॥ ३३.६४ ॥

33.60. அவள் காலத்திற்கும் வசப்பட்டவளல்லள். எப்பொழுதும் புருஷார்த்தத்தை பிரவர்த்திக்கச் செய்பவள். புருஷன் கர்த்தாவாயில்லாமல் சாக்ஷியாய்ப்பார்த்துக் கொண்டிருக்கும் 'திரஷ்டா'. இவ்வுலகனைத்தும் பார்க்கப் படுவது—'த்ருச்யம்'.

33.61. காரணகாரிய ரூபமாய் விளங்கும் அந்த தேவியே திருச்யப்பிரபஞ்சத்தைப் பிறப்பிப்பவள். பிரும் மாண்ட நாடகத்தைத் தோற்றுவித்து அவள் ஒருத்தியாகவே புருஷனை மகிழ்விக்கிருள்.

33.62. புருஷனை மகிழ்வித்தபின் வெகுவிரைவில் அனைத்தையும் அழிக்கவும் செய்கிருள். பிரும்மாவும் விஷ்ணுவும் மகேசுவரனும் அவளையே காரணமாயுடையவர்கள்,

33.64. தேவர்களின் ஈசுவரர்களாகிய அவர்கள் அப்பராசக்தியைத் தியானம் செய்து அவளைச் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரத்தைச் செய்யும் ஸர்வேசுவரி என்றுணர்ந்து மகிழ்ச்சியுடன் பூஜிக்கின்ருர்கள்.

राजोवाच —

भगवन् ब्रूहि मे सम्यक् तस्याऽऽराधने विधिम्।
पूजाविधिं च मन्त्रांश्च तथा होमविधिं वद ॥ ३४. १ ॥

ऋषिरुवाच —

शृणु राजन् प्रवक्ष्यामि तस्याः पूजाविधिं शुभम्।
कामदं मोक्षदं नृणां ज्ञानदं दुःखनाशनम् ॥ ३४. २ ॥
आदौ स्नानविधिं कृत्वा शुचिः शुक्लाम्बरो नरः।
आचम्य प्रयतः कृत्वा शुभमायतनं निजम् ॥ ३४. ३ ॥
ततोऽवलिप्त भूम्यां तु संस्थाप्याऽऽसनमुत्तमम्।
तत्रोपविश्य विधिवत् त्रिराचम्य मुदाऽन्वितः ॥ ३४. ४ ॥
पूजाद्रव्यं सुसंस्थाप्य यथाशक्त्यनुसारतः।
प्राणायामं ततः कृत्वा भूतशुद्धिं विधाय च ॥ ३४. ५ ॥

அரசன் கூறியது—

34.1. பகவானே! அவளை ஆராதிக்கும் முறையை எனக்கு விளக்கிக் கூறியருளுங்கள், பூஜாவிதியையும் மந்திரங்களையும் அவ்வாறே ஹோம விதியையும் கூறுங்கள்.

ரிஷி கூறியது—

34.2. அரசே! கேளும். மங்களமான அவளுடைய பூஜாவிதியைக் கூறுகிறேன். அது ஆசைகளைப்பூர்த்தி செய்விப்பது, மோக்ஷத்தையளிப்பது, மனிதர்களுக்கு ஞானத்தைத் தருவது, துக்கத்தை நாசம் செய்வது.

34.3–5. முதலில் முறைப்படி ஸ்நானம் செய்து பரிசுத்தனாகி வெள்ளை வஸ்திரம் தரித்து மனதையடக்கி ஆசமனம் செய்து நன்றாய் அலங்கரித்த தன் வீட்டில் கோமயத்தால் சுத்தி செய்த இடத்தில் உத்தமமான ஆசனத்தை ஏற்படுத்திக் கொண்டு அதிலமர்ந்து முறைப்படி மும்முறை ஆசமனம் செய்து மகிழ்ச்சியுடன் கூடியவனாய் தன் சக்திக்கியைந்தவாறு பூஜாதிரவியங்களைச் சேகரித்து அருகில் வைத்துக் கொண்டு பிராணாயாமும் பூத சுத்தியும் செய்து பூஜையைத் தொடங்க வேண்டும்.

कुर्यात् प्राणप्रतिष्ठां तु संभारं प्रोक्ष्य मन्त्रतः।
कालज्ञानं ततः कृत्वा न्यासं कुर्याद्यथाविधि ॥ ३४. ६ ॥

शूभे ताम्रमये पात्रे चन्दनेन सितेन च।
षट्कोणं विलिखेद्यन्त्रं चाऽष्टकोणं ततो बहिः ॥ ३४. ७ ॥

नवाक्षरस्य मन्त्रस्य बीजानि विलिखेत्ततः।
कृत्वा यन्त्रप्रतिष्टां च वेदोक्तं संविधाय च ॥ ३४. ८ ॥

अर्चां वा धातवीं कुर्यात् पूजामन्त्रैः शिवोदितैः।
पूजनं पृथिवीपाल भगवत्याः प्रयत्नतः ॥ ३४. ९ ॥

कृत्वा वा विधिवत्पूजा-मागमोक्तां समाहितः।
जपन्नवाक्षरं मन्त्रं सततं ध्यानपूर्वकम् ॥ ३४. १० ॥

34.6. பிராணப்பிருதிஷ்டை செய்து பூஜா திரவியங்களை மந்திரத்தால் புரோக்ஷித்துத் திதிவாரம் நக்ஷத்திரம் முதலிய கால அறிவுடன் ஸங்கல்பம் செய்து கொண்டு முறைப்படி நியாஸம் செய்ய வேண்டும்.

34.7–8. அழகிய தாமிரத்தட்டில் வெண்மையான சந்தனத்தால் அறுகோணம் வரைந்து அதற்கு வெளியில் எட்டுக் கோணம் அமைத்து அக் கோணங்களில் நவாக்ஷரீ மந்திரத்தின் பீஜங்களை எழுதி வேதத்தில் கூறிய மந்திரங்களால் விதிப்படி யந்திரப் பிரதிஷ்டை செய்யவேண்டும்.

34.9. அரசே! அல்லது உலோகம் முதலிய தாதுவால் விக்கிரகம் செய்து சிவாகமத்தில் கூறியுள்ள பூஜாமந்திரங்களால் பகவதியின் பூஜையை சிரத்தையுடன் செய்யலாம்.

34.10. மனதையடக்கி ஆகம முறைப்படி பூஜையைச் செய்து பின்னர் தியான பூர்வகமாய் நவாக்ஷரீ மந்திரத்தை எப்பொழுதும் ஜபம் செய்ய வேண்டும்.

होमं दशांशतः कुर्याद्दशांशेन च तर्पणम् ।
भोजनं ब्राह्मणानां च तद्दशांशेन कारयेत् ।। ३४. ११ ।।

चरित्रत्रय पाठं च नित्यं कुर्याद्विसर्जयेत् ।
नवरात्रव्रतं चैव विधेयं विधिपूर्वकम् ।। ३४. १२ ।।

आश्विने च तथा चैत्रे शुक्ले पक्षे नराधिप ।
नवरात्रोपवासो वै कर्तव्यः शुभमिच्छता ।। ३४. १३ ।।

होमः सुविपुलः कार्यो जप्यमन्त्रैः सुपायसैः ।
शर्कराघृतमिश्रैश्च मधुयुक्तैः सुसंस्कृतैः ।। ३४. १४ ।।

छागमांसेन वा कार्यो बिल्वपत्रैस्तथा शुभैः ।
हयारिकुसुमै रक्तै स्तिलैर्वा शर्करायुतैः ।। ३४. १५ ।।

34.11. (ஜபத்தில்) பத்தில் ஒரு பங்கு ஹோமமும் அதில் பத்தில் ஒரு பங்கு தர்ப்பணமும் செய்ய வேண்டும். அதில் பத்தில் ஒரு பங்கு பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்தல் வேண்டும்.

34.12. தினந்தோறும் மூன்று சரித்திரங்களேயும் பாராயணம் செய்ய வேண்டும். நவராத்திரி விரதத்தையும் விதிப்படி அனுஷ்டிக்க வேண்டும்.

34.13. அரசே! ஆச்வின (புரட்டாசி—ஐப்பசி) மாதத்திலும் அவ்வாறே சைத்ர (பங்குனி—சித்திரை) மாதத்திலும் சுக்லபக்ஷத்தில் உயர் நலனே விரும்புபவனுல் நவராத்ரி உபவாசம் கைக்கொள்ளப்பட வேண்டும்.

34.14. ஜபம் செய்யும் மந்திரங்களால் சர்க்கரை நெய் தேன் கலந்த பாயஸத்தால் சிறப்பாக ஹோமம் செய்யப்படவேண்டும்.

34.15. அல்லது ஆட்டு மாம்ஸம், பில்வதளம், செவ்வலரிப்பு, சர்க்கரை கலந்த எள் முதலியவற்ருலும் ஹோமம் செய்யலாம்.

अष्टम्यां च चतुर्दश्यां नवम्यां च विशेषतः।
कर्तव्यं पूजनं देव्या ब्राह्मणानां च भोजनम् ॥ ३४. १६ ॥

निर्धनो धनमाप्नोति रोगी रोगात्प्रमुच्यते।
अपुत्रो लभते पुत्राच्छुभांश्च वशवर्तिनः ॥ ३४. १७ ॥

राज्यभ्रष्टोनृपो राज्यं प्राप्नोति सार्वभौमिकम्।
शत्रुभिः पीडितो हन्ति रिपुं मायाप्रसादतः ॥ ३४. १८ ॥

विद्यार्थी पूजनं यस्तु करोति नियतेन्द्रियः।
अनवद्यां शुभां विद्यां विन्दते नाऽत्र संशयः ॥ ३४. १९ ॥

ब्राह्मणो क्षत्रियो वैश्यः शूद्रो वा भक्तिसंयुतः।
पूजयेज्जगतां धात्रीं स सर्वसुखभाग्भवेत् ॥ ३४. २० ॥

34.16. அஷ்டமியிலும் சதுர்த்தசியிலும் நவமியிலும் விசேஷமாக தேவியைப் பூஜித்து பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்தல் வேண்டும்,

34.17. பொருளற்றவன் பொருளேயடைவான்; நோயுற்றவன் நோயிலிருந்து விடுபடுவான்; புத்திரனில்லாதவன் தன் வசப்பட்டொழுகும் நல்ல புத்திரர்களைப் பெறுவான்.

34.18. அரசை இழந்த அரசன் அரசையடைந்து சக்ரவர்த்தியாவான்; பகைவர்களால் பீடிக்கப்பட்டவன் மகாமாயையின் அருளால் பகைவர்களே யழிப்பான்.

34.19. இந்திரியங்களேயடக்கிப் பூஜை செய்யும் வித்யார்த்தியானவன் குற்றமற்ற மங்களமான வித்தையை அடைவான். இதில் சந்தேகமில்லே.

34.20. பிராம்மணனே, க்ஷத்திரியனே, வைசியனே, சூத்திரனே, யாராயிருந்தாலும் பக்தியுடன் ஜகத்தாத்ரியைப் பூஜிப்பவன் எல்லா சுகங்களேயும் அடைபவனுவான்.

नवरात्रीव्रतं कुर्यान्नरनारीगणश्च यः।
वाञ्छितं फल-माप्नोति सर्वदा भक्तितत्परः ॥ ३४. २१ ॥

आश्विने शुक्लपक्षे तु नवरात्रव्रतं शुभम्।
करोति भावसंयुक्तः सर्वान् कामानवाप्नुयात् ॥ ३४. २२ ॥

विधिवन्मण्डलं कृत्वा पूजस्थानं प्रकल्पयेत्।
कलशं स्थापयेत्तत्र वेदमन्त्रविधानतः ॥ ३४. २३ ॥

यन्त्रं सुरुचिरं कृत्वा स्थापयेत्कलशोपरि।
वापयित्वा यवांश्चारून् पार्श्वतः परिवर्तितान् ॥ ३४. २४ ॥

कृत्वोपरि वितानं च पुष्पमाला समावृतम्।
धूपदीपसुसंयुक्तं कर्तव्यं चण्डिकागृहम् ॥ ३४. २५ ॥

34.21. ஆணாயினும் பெண்ணாயினும் பக்தியுடன் எப்பொழுதும் நவராத்ரி விரதத்தை யனுஷ்டிப்பவர் விரும்பிய பயனை எய்துவர்.

34.22. ஆச்வின சுக்லபக்ஷத்தில் சுபமான நவராத்திரி விரதத்தை உள்ளன்புடன் அனுஷ்டிப்பவர் எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் எய்துவர்.

34.23. விதிப்படி ஒரு மண்டலமமைத்து அதில் பூஜாஸ்தானத்தை ஏற்படுத்தி வேதமந்திர முறைப்படி கலசஸ்தாபனம் செய்ய வேண்டும்.

34.24–25. அழகான யந்திரத்தைச் செய்து அதைக் கலசத்தின் மேல் ஸ்தாபிக்க வேண்டும். கலசத்தைச் சுற்றி யருகாமையில் நல்ல யவதானியத்தைப்பரப்பி மேலே விதானம் அமைத்து புஷ்ப மாலைகளால் அலங்கரித்து சண்டிகையின் பூஜாகிருகத்தை தூப தீபங்களுடன் கூடியதாகச் செய்யவேண்டும்.

त्रिकालं तत्र कर्तव्या पूजा शक्त्यनुसारतः।
वित्तशाठ्यं न कर्तव्यं चण्डिकायाश्च पूजने ॥ ३४. २६ ॥

धूपदीपैः सुनैवेद्यैः फलपुष्पैरनेकशः।
गीतवाद्यैःस्तोत्रपाठै-र्वेदपारायणैस्तथा ॥ ३४. २७ ॥

उत्सवस्तत्र कर्तव्यो नानावादित्रसंयुतैः।
कन्यकानां पूजनं च विधेयं विधिपूर्वकम् ॥ ३४. २८ ॥

चन्दनै-र्भूषणै-र्वस्त्रै-र्भक्ष्यैश्च विविधैस्तथा।
सुगन्धतैलमाल्यैश्च मनसा रुचिकारकैः ॥ ३४. २९ ॥

एवं संपूजनं कृत्वा होमं मन्त्रविधानतः।
अष्टम्यां वा नवम्यां वा कारयेद्विधिपूर्वकम् ॥ ३४. ३० ॥

34.26. மூன்று வேளைகளிலும் சக்திக்கியைந்தபடி அங்கு பூஜை செய்யப்பட வேண்டும். சண்டிகையின் பூஜையில் பொருளில் சூது செய்யக் கூடாது.

34.27–29. தூப தீபங்களாலும் பலவிதமான புஷ்பங்களாலும் பழங்களாலும் நைவேத்தியங்களாலும் ஸங்கீதம், ஸ்தோத்திரபாடம், வேத பாராயணம் ஆகியவற்றாலும் பலவித வாத்தியங்களுடனும் உத்ஸவத்தை அங்கு நடத்த வேண்டும். மனதிற்கு இன்பமளிக்கும் சந்தனம், ஆபரணம் வஸ்திரம், பலவித பக்ஷணங்கள், நல்ல வாசனைத்தைலம், மாலைகள் ஆகியவற்றால் விதிப்படி கன்னிகைகளின் பூஜையும் செய்யப்பட வேண்டும்.

34.30. இவ்வாறு பூஜையைச் செய்து அஷ்டமியிலோ நவமியிலோ மந்திர முறைபடி ஹோமம் செய்ய வேண்டும்.

34.31. பிற்பாடு பிராம்மணர்களுக்கு போஜனமளிக்க வேண்டும். தசமி தினத்தில் பாரணை செய்ய வேண்டும். பக்திமிக்க அரசர்களால் சக்திக்கியைந்த படி தானம் செய்யப்படவேண்டும்.

ब्राह्मणान् भोजयेत्पश्चात्पारणं दशमी-दिने ।
कर्तव्यं शक्तिदो दानं देयं भक्तिपरै-र्नृपैः ।। ३४. ३१ ।।

एवं यः कुरुते भक्त्या नवरात्रव्रतं नरः ।
नारी वा सधवा भक्त्या विधवा वा पतिव्रता ।। ३४. ३१ ।।

इह लोके सुखं भोगान् प्राप्नोति मनसेप्सितान् ।
देहान्ते परमं स्थानं प्राप्नोति व्रततत्परः ।। ३४. ३३ ।।

जन्मान्तरेऽम्बिका भक्तिर्भवत्यव्यभिचारिणी ।
जन्मोत्तमकुले प्राप्य सदाचारो भवेद्धि सः ।। ३४. ३४ ।।

नवरात्रव्रतं प्रोक्तं व्रताना-मुत्तमं व्रतम् ।
आराधनं शिवायास्तु सर्वसौख्यकरं परम् ।। ३४. ३५ ।।

अनेन विधिना राजन् समाराधय चण्डिकाम् ।
जित्वा रिपूनस्खलितं राज्यं प्राप्स्यस्यनुत्तमम् ।। ३४. ४६ ।।

34.32–33. இங்ஙனம் பக்தியுடன் நவராத்திரி விரதத்தையனுஷ்டிப்பவர் ஆணுயிருந்தாலும் சுமங்கலிப் பெண்ணுயிருந்தாலும் பதிவிருதையான விதவையாயிருந்தாலும் இவ்வுலகில் மனதால் இச்சித்த போகங்களை சுகமாயடைந்து தேகம் விழுந்தபின் உத்தமமான பதவியையடைவர்.

34.34. அடுத்த பிறவியில் முறை பிறழாத அம்பிகா பக்தி ஏற்படும். உத்தம குலத்தில் பிறந்து அவர்கள் நல்ல ஆசாரசிலர்களாயிருப்பார்கள்.

34.35. விரதங்களில் உத்தமமான நவராத்திரி விரதமும் எல்லா சௌக்கியங்களையும் அளிக்கும் மங்களாம்பிகையின் சிறப்பான ஆராதனையும் இவ்வாறுக வர்ணிக்கப் பட்டது

34.36. அரசே! இம்முறைபடி சண்டிகையை வழிபடு. சத்துருக்களை ஜயித்து குறைவற்ற உத்தமமான அரசையடைவாய்.

सुखं च परमं भूप देहेऽस्मिन् स्वगृहे पुनः ।
पुत्रादारान् समासाद्य लप्स्यसे नाऽत्र संशयः ॥ ३४. ३७ ॥

वैश्योत्तम त्वमेवाऽद्य समाराधय कामदाम् ।
देवीं विश्वेश्वरीं मायां सृष्टिसंहार-कारिणीम् ॥ ३४. ३८ ॥

स्वजनानां च मान्यस्त्वं भविष्यसि गृहे गतः ।
सुखं सांसारिकं प्राप्य यथाभिलषितं पुनः ॥
देवालाके शुभे वासो भविता ते न संशयः ॥ ३४. ३९ ॥

अर्चिता जगतां धात्री यैस्तेऽतीव विलासिनः ।
भवन्ति कृतपुण्यास्ते शक्तिभक्तिपरायणाः ॥ ३४. ४३ ॥

34.37. அரசே! மீண்டும் மனைவிமக்களுடன் கூடி உன் அரண்மனையில் இவ்வுடலில் உத்தமமான சுகத்தை யடைவாய். இதில் சந்தேகமில்லை.

34.38. வைசிய சிரேஷ்டனே! நீயும் இப்பொழுது விரும்பியதையளிப்பவளும் உலகையாக்கி யழிப்பவளும் உலக நாயகியும் மாயை வடிவினளுமாகிய தேவியைப் பூஜிப்பாயாக.

34.39. உன் வீட்டையடைந்து உன்னுடைய மனதில் கருதியபடி மீண்டும் ஸம்ஸார சுகத்தையடைந்து சொந்த ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவனுவாய், முடிவில் மங்களமான தேவி லோகத்தில் உனக்கு வாஸம் ஏற்படும். இதில் சந்தேகமில்லை.

34.43. எவர்களால் உலகநாயகி பூஜிக்கப்படுகின்ருளோ அவர்கள் சக்தியும் பக்தியும் மிக்க புண்ணியவான்களாகவும் மிகுந்த சிறப்புடையவர்களாகவும் விளங்குவார்கள்.

व्यास उवाच —

इति तस्य वचः श्रुत्वा दुःखितौ वैश्यपार्थिवौ ।
प्रणिपत्य मुनिं प्रीत्या प्रश्रयावनतौ भृशम् ॥ ३५. १ ॥

हर्षेणोत्फुल्लनयनावूचतु-र्वाक्यकोविदौ ।
कृतांजलिपुटौ शान्तौ भक्तिप्रवणचेतसौ ॥ ३५. २ ॥

भगवन् पावितावद्य शान्तौ दीनौ शुचान्वितौ ।
तव सूक्तसरस्वत्या गंगयेव भगीरथः ॥ ३५. ३ ॥

साधवः संभवन्तीह परोपकृतितत्पराः ।
अकृत्रिमगुणारामाः सुखदाः सर्वदेहिनाम् ॥ ३५. ४ ॥

வியாஸர் கூறியது—

35.1–2. துக்கப்பட்டுக் கொண்டிருந்த வைசியனும் அரசனும் அவருடைய இவ்வார்த்தைகளைக் கேட்டு அம் முனிவரை பிரீதியுடன் நமஸ்கரித்து அன்பினுல் மிகவும் குழைந்து மகிழ்ச்சியால் கண்கள் மலர்ந்து பேச்சில் திறமை வாய்ந்த அவர்கள் கைமலர் கூப்பிக் கொண்டு சாந்தமாக பக்தி நிறைந்த மனத்துடன் பின்வருமாறு கூறினர்.

35.3. பகவானே! தீனர்களாகவும் துக்கமுடையவர் களாகவுமிருந்த நாங்கள் கங்கையால் பகீரதனைப் போல் தங்களுடைய அருள் மொழியாகிய ஸரஸ்வதியால் சாந்த முடையவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் இப் பொழுது ஆகிவிட்டோம்.

35.4. ஸாதுக்கள் பிறர்க்கு உபகாரம் செய்வதிலேயே நோக்கமுடையவர்களாய் வஞ்சனையற்ற இயற்கை குணங் களில் ரமிப்பவர்களாய் எல்லாப் பிராணிகளுக்கும் சுக மளிப்பவர்களாய் இவ்வுலகில் விளங்குகிறுர்கள்.

पूर्वपुण्यप्रसंगेन प्राप्तोऽयमाश्रमः शुभः ।
तवाऽऽवाभ्यां महाभाग महादुःखविनाशकः ॥ ३५. ५ ॥

भवन्ति मानवा भूमौ बहवः स्वार्थतत्पराः ।
परार्थसाधने दक्षाः केचित्त्वाऽपि भवादृशाः ॥ ३५. ६ ॥

गृहाणस्मत्करौ साधो नय पारं भवार्णवे ।
मग्ना श्रान्ताविति ज्ञात्वा मन्त्रदानेन साम्प्रतम् ॥ ३५. १० ॥

वदनात्तव संप्राप्य देवीमन्त्रं नवाक्षरम् ।
स्मरणं च करिष्यावो निराहारौ धृतव्रतौ ॥ ३५. १२ ॥

इति संचोदितस्ताभ्यां सुमेधा मुनिसत्तमः ।
ददौ मन्त्रं शुभं ताभ्यां ध्यानबीजपुरःसरम् ॥ ३५. १३ ॥

35.5. மஹாபாக்கிய புருஷரே! பெருந்துக்கத்தைப் போக்கும் தங்களுடைய இந்த புண்ணியமான ஆசிரமத்தை எங்களுடைய பூர்வபுண்ணியவசத்தால் அடையப் பெற்ரும்.

35.6. பூமியில் வெகுவாக மனிதர்கள் சுய நலத்திலேயே கருத்தூன்றியவர்களாயிருக்கின்றனர். தங்களைப் போல் பிறர் நலத்தைச் சாதிப்பதில் திறமையுள்ளவர்கள் எங்கோ சிலர் தான் உளர்.

35.10. ஸாதுவே! பிறவிக்கடலில் மூழ்கிக் களைத்தவர்கள் என எங்களை அறிந்து எங்கள் கைகளைப் பிடித்து இப்பொழுது மந்திரோபதேசமளித்து அக்கரை சேர்த்து விடுங்கள்.

35.12. தங்கள் முகத்திலிருந்து நவாக்ஷரீ தேவி மந்திரத்தைப் பெற்று ஆகாரமின்றி திடவிரதத்துடன் அதை ஜபிப்போம்.

35.13. முனிசிரேஷ்டராகிய ஸுமேதஸ் அவர்களால் இங்ஙனம் பிரார்த்திக்கப் பெற்று தியானத்திற்குரிய பீஜத்துடன் அவர்களுக்கு மங்களமான மந்திரத்தையளித்தார்.

तौ च प्राप्य मुनेर्मन्त्रं संमन्त्र्य गुरुदैवतौ ।
जग्मतु-र्वैश्यराजानौ नदीतीर-मनुत्तमम् ।। ३५. १४ ।।

एकान्ते विजने स्थाने कृत्वाऽऽसनपरिग्रहम् ।
उपविष्टौ स्थिरप्रज्ञौ तावतीव कृशोदरौ ।। ३५. १६ ।।

नान्यकार्यपरौ क्वापि बभूवतुः कदाचन ।
देवी ध्यानपरौ नित्यं जपमन्त्ररतौ सदा ।। ३५. १९ ।।

एवं जाते तदा पूर्णे तत्र संवत्सरे नृप ।
बभूवतुः फलाहारं त्यक्त्वा पर्णाशनौ नृप ।। ३५. २० ।।

वर्षमेकं तपस्तत्र चक्रतुर्वैश्यपार्थिवौ ।
शुष्कपर्णाशनौ दान्तौ जपध्यानपरायणौ ।। ३५. २१ ।।

35.14. முனிவரிடமிருந்து மந்திரத்தை பெற்ற வைசியனும் அரசனும் குருவையும் தெய்வத்தையும் மனதில் போற்றிக்கொண்டு ஒப்புயர்வற்ற நதிக்கரைக்குச் சென்றனர்.

35.16–19. ஜனஸஞ்சாரமற்ற தனிமையான இடத்தில் ஆஸனமமைத்துக் கொண்டு அதில் வீற்று வயிற்றை யொடுக்கி மனதை நிலேயில் நிறுத்தி வேறு காரியத்தை எங்கும் ஒரு பொழுதும் கவனியாதவர்களாய் தேவீதியான பரர்களாய் எப்பொழுதும் மந்திரஜபத்தில் பற்றுடையவர் களாய் இருந்தனர்.

35.20. அரசே! இவ்வாறு ஒரு வருஷம் பூர்த்தியான பின் பழங்களே உண்பதையும் விட்டு இலேகளே மட்டும் உட்கொள்பவராயினர்.

35.21. அவ்வாறு உலர்ந்த சருகுகளே ஆகாரமாய்க் கொண்டு இந்திரியங்களே வென்று ஜபத்திலும் தியானத்திலும் ஊன்றியவர்களாய் வைசியனும் அரசனும் ஓராண்டு தவமியற்றினர்,

पूर्णे वर्षद्वये जाते कदाचिद्दर्शनं च तौ।
प्रापतुः स्वप्नमध्ये तु भगवत्या मनोहरम् ॥ ३५. २२ ॥

रक्ताम्बरधरां देवीं चारुभूषणभूषिताम्।
कदाचिन्नृपतिः स्वप्नेऽप्यपश्यज्जगदम्बिकाम् ॥ ३५. २३ ॥

वीक्ष्य स्वप्ने च तौ देवीं प्रीतियुक्तौ बभूवतुः।
जलाहारैस्तृतीये तु स्थितौ संवत्सरे तु तौ ॥ ३५. २४ ॥

तदा भगवती दत्त्वा प्रत्यक्षं दर्शनं तयोः।
प्राह प्रीतिभरोद्-भ्रान्तौ दृष्ट्वा तौ दुःखितौ भृशम्
॥ ३५. ३० ॥

वरं वरय भो राजन् यत्ते मनसि वांछितम्।
तुष्टाऽहं तपसा तेऽद्य भक्तोऽसि त्वं मतो मम ॥ ३५. ३१ ॥

35.22. இரண்டு வருஷம் பூர்த்தியான பொழுது ஒரு சமயம் அவ்விருவரும் கனவின் மத்தியில் பகவதியின் மனதிற்கினிய தரிசனத்தைப் பெற்றனர்.

35.23. இன்னொரு சமயமும் சிவப்பாடை தரித்து அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று விளங்கிய தேவியான ஜகதம்பிகையை அரசன் கனவில் கண்டான்.

35.24. கனவில் அவ்வாறு தேவியைக் கண்டு அவர்கள் திடபக்தி யுடையவர்களாயினர். மூன்ருவது வருஷம் அவர்கள் ஜலத்தை மட்டும் ஆகாரமாய்க் கொண்டு தவமிருந்தனர்.

35.30. அப்பொழுது பகவதி அவர்களுக்குத் தரிசனமளித்தாள். அன்பின் மேலீட்டால் கவலையும் துக்கமும் கொண்டிருந்த அவர்களைக் கடாக்ஷித்து தேவி பின்வருமாறு கூறினுள்.

35.31. 'அரசனே! உன்னுடைய தவத்தால் நான் உன்னிடம் இப்பொழுது சந்தோஷமடைந்துள்ளேன். நீ எனக்குகந்த பக்தனுகிவிட்டாய் மனதில் உள்ள விருப்பப்படி வரனைக் கேட்டுக் கொள்.

वैश्यं प्राह तथा देवी प्रसन्नाऽहं महामते ।
किं तेऽभीष्टं ददाम्यद्य प्रार्थयाऽऽशुमनोगतम् ॥ ३५. ३२ ॥

तच्छ्रुत्वा वचनं राजा तामुवाच मुदान्वितः ।
देहि मेऽद्य निजं राज्यं हतशत्रुबलं बलात् ॥ ३५. ३३ ॥

तमुवाच तदा देवी गच्छ राजन्निजं गृहम् ।
शत्रवः क्षीणसत्त्वास्ते गमिष्यन्ति पराजिताः ॥ ३५. ३४ ॥

कृत्वा राज्यं सुविपुलं वर्षाणामयुतं नृप ।
देहान्ते जन्म संप्राप्य सूर्याच्च भविता मनुः ॥ ३५. ३६ ॥

वैश्यस्तामप्युवाचेदं कृतांजलिपुटः शुचिः ।
न मे गृहेण कार्यं वै न पुत्रेण धनेन वा ॥ ३५. ३७ ॥

35.32. அவ்வாறே வைசியனிடமும் தேவி கூறியது ''புத்தியிற்சிறந்தவனே! நான் உன்னிடம் மகிழ்ச்சியடைந்துள்ளேன். உன்னுடைய விருப்பம் என்ன? மனதிலுள்ளதை இப்பொழுது கேட்டுக்கொள். அளிக்கிறேன்''

35.33. தேவியின் வசனத்தைக் கேட்ட அரசன் மகிழ்ச்சியுடன் கூறியது: ''தேவி! பலத்தால் சத்துரு பலத்தையழித்து எனது அரசு எனக்கு மீண்டும் கிடைக்க அருள் புரிய வேண்டும்.''

35.34. தேவி அவனுக்குக்குக் கூறியது: ''அரசே! நீ உன் அரண்மனைக்குச்செல். உனது சத்துருக்கள் பலமிழந்து உன்னுல் ஜயிக்கப்பட்டவர்களாவார்கள்.

35.36. ''அரசே! ஆயிரம் வருஷம் விசாலமான ராஜ்யத்தை ஆண்டு தேகம் விழுந்தபின் சூரியனிடம் பிறவியடைந்து மனுவாக விளங்குவாய்.''

35.37. பரிசுத்தமான வைசியன் கைகூப்பிக்கொண்டு இவ்வார்த்தையைக் கூறினுன்: 'எனக்கு இனி வீட்டாலோ புத்திரனுலோ பணத்தாலோ ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை.

सर्वं बन्धकरं मातः स्वप्नवन्नश्वरं स्फुटम् ।
ज्ञानं मे देहि विशदं मोक्षदं बन्धनाशनम् ॥ ३५. ३८ ॥

तदाकर्ण्य महामाया वैश्यं प्राह पुरः स्थितम् ।
वैश्यवर्य तव ज्ञानं भविष्यति न संशयः ॥ ३५. ४० ॥

इति दत्त्वा वरं ताभ्यां तत्रैवान्तरधीयत ।
अदर्शनं गतायां तु राजा तं मुनिसत्तमम् ॥ ३५. ४१ ॥

प्रणम्य हयमारुह्य गमनाय मनो दधे ।
तदैव तस्य सचिवास्तत्राऽऽगत्य नृपं प्रजाः ॥ ३५. ४२ ॥

प्रणेमु-र्विनयोपेतास्तमूचुः प्रांजलिस्थिताः ।
राजंस्ते शत्रवः सर्वे पापाच्च निहता रणे ॥ ३५. ४३ ॥

35.38. 'தாயே! எல்லாம் தளேகளே விளேப்பது; கனவைப் போல் அழிந்து போவது என்பது தெளிவு. தளேகளேப் போக்குவதும் மோக்ஷத்தையளிப்பதுமான தெளிவான ஞானத்தை எனக்குக் கொடுத்தருள்வாய்'.

35.40. மகாமாயை அதைக் கேட்டுத் தன்முன் நின்ற வைசியனிடம் பின்வருமாறு கூறினுள். ''வைசிய சிரேஷ்டா! உனக்கு ஞானம் உண்டாகும். சந்தேகமில்லே.''

35.41–44. இங்ஙனம் அவர்களுக்கு வரமளித்து விட்டு தேவி அங்கேயே மறைந்து விட்டாள். அவள் மறைந்த பின் அரசன் முனிசிரேஷ்டரை வணங்கி விட்டுக் குதிரை மீதேறிக் கொண்டு புறப்பட எண்ணிஞன். அதே சமயம் அவனுடைய மந்திரிகளும் பிரஜைகளும் அங்கு வந்து அவனே நமஸ்கரித்து வணக்கத்துடன் கைகூப்பிக் கொண்டு பின் வருமாறு கூறிஞர்கள்: 'அரசே! உங்கள் சத்துருக்கள் அனேவரும் பாவத்திஞல் போரில் மடிந்து விட்டார்கள்.

राज्यं निष्कण्टकं भूप कुरुष्व पुरमास्थितः।
तच्छ्रुत्वा वचनं राजा नत्वा तं मुनिसत्तमम् ॥ ३५. ४४ ॥

आपृच्छ्य निर्ययौ तत्र मन्त्रिभिः परिवारितः।
संप्राप्य च निजं राज्यं दारान् स्वजनबान्धवान् ॥

बुभुजे पृथिवीं सर्वां ततः सागरमेखलाम् ॥ ३५. ४५ ॥
वैश्योऽपि ज्ञानमासाद्य मुक्तसंगः समन्ततः।

कालातिवाहनं तत्र मुक्तबन्धश्चकार ह ॥
तीर्थेषु विचरन् गायन् भगवत्या गुणानथ ॥ ३५. ४७ ॥

एतत्ते कथितं देव्याश्चरितं परमाद्भुतम्।
आराधनफलप्राप्ति-र्यथावद्भूप-वैश्ययोः ॥ ३५. ४८ ॥

35.44–45. 'அரசே! நகரம் வந்து எதிரியற்ற ராஜ்யத்தை ஆளலாம்'. அவ்வார்த்தையைக் கேட்டு அரசன் முனிசிரேஷ்டரை நமஸ்கரித்து விடை பெற்றுக் கொண்டு மந்திரிகள் புடைசூழப் புறப்பட்டான். தனது ராஜ்யத்தையும் மனைவிமக்களையும் உற்றார், உறவினரையும் அடைந்து ஸமுத்திரத்தை ஆடையாய்க் கொண்ட புவியனைத்தையும் அனுபவித்தான்.

35.47. வைசியனும் ஞானத்தையடைந்து முற்றும் பற்றுக்களைத் துறந்து க்ஷேத்ராடனம் செய்து கொண்டும் பகவதியின் குணங்களைக் கீர்த்தனம் செய்து கொண்டும் ஜீவன் முக்தனுய்க் காலத்தைக் கழித்தான்.

35.48. இவ்வாருக உனக்கு பரமாத்புதமான தேவியின் சரித்திரமும் அவளுடைய ஆராதனையால் அரசனும் வைசியனும் அடைந்த பயனும் உள்ளபடி விளக்கிக் கூறப்பட்டது.

दैत्यानां हननं प्रोक्तं प्रादुर्भावस्तदा शुभः ।
एवंप्रभावा सा देवी भक्तानामभयप्रदा ।। ३५. ४९ ।।

यः शृणोति नरो नित्य-मेतदाख्यान-मुत्तमम् ।
स प्राप्नोति नरः सत्यं संसारसुखमद्भुतम् ।। ३५. ५० ।।

ज्ञानदं मोक्षदं चैव कीर्तिदं सुखदं तथा ।
पावनं श्रवणान्नूनं-मेतदाख्यानमुत्तमम् ।। ३५. ५१ ।।

अखिलार्थप्रदे नृणां सर्व-धर्म-समावृतम् ।
धर्मार्थकाममोक्षाणां कारणं परमं मतम् ।। ३५. ५२ ।।

35.49. அசுரர்களின் வதமும் தேவியின் மங்களமான தோற்றமும் கூறப்பட்டன. பக்தர்களுக்கு அபயமளிக்கும் தேவியின் மகிமை அப்படிப்பட்டது.

35.50. இவ்வுத்தமமான வரலாற்றை எந்த மனிதன் நாள்தோறும் கேட்கிருனே அம்மனிதன் அற்புதமான ஸம்ஸாரத்தில் அடைய வேண்டிய சுகத்தை அடைவான் என்பது உண்மை .

35.51. உத்தமமான இந்த ஆக்கியானம் கேட்டமாத்திரத்தில் ஞானத்தையும் மோக்ஷத்தையும் கீர்த்தியையும் சுகத்தையுமளிக்குமென்பது நிச்சயம்.

35.52. தர்மத்துடன் கூடின எல்லாப், பொருள்களேயும் மனிதர்க்கு அளிப்பதாயும், தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் ஆகியவற்றிற்குச் சிறந்த காரணமாயும் இது கருதப்படுகிறது.

सूत उवाच —

जनमेजयेन राज्ञाऽसौ पृष्टः सत्यवतीसुतः ।
उवाच संहितां दिव्यां व्यासः सर्वार्थतत्त्ववित् ॥ ३५. ५३ ॥

चरितं चण्डिकायास्तु शुंभदैत्यवधाश्रितम् ।
कथयामास भगवान् कृष्णः कारुणिको मुनिः ॥ ३५. ५४ ॥

ஸூதர் கூறியது—

35.53. ஜனமேஜய ராஜாவால் கேட்கப் பெற்றவரும் எல்லாப் பொருள்களையுமறிந்தவரும் ஸத்தியவதீ புத்திரருமான வியாஸர் இந்த திவ்ய ஸம்ஹிதையை எடுத்துரைத்தார்.

35.54. சும்பாசுரவதத்தைப் பற்றிய சண்டிகையின் சரித்திரத்தைக் கருணை நிறைந்த முனிவரான பகவான் கிருஷ்ணத்துவைபாயனர் கூறியருளினார்.

॥ इति श्रीदेवीभागवते पंचमस्कन्धे पंचत्रिंशोऽध्यायः
भक्तानुग्रहवर्णनं समाप्तम् ॥

॥ पंचमं स्कन्धं समाप्तम् ॥

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஐந்தாவது
ஸ்கந்தத்தில் முப்பத்தைந்தாவது அத்தியாயம்
முற்றும்

பக்தானுக்ரஹ வர்ணனம் முற்றும்

ஐந்தாவது ஸ்கந்தம் முற்றும்

ஆறுவது ஸ்கந்தம்

॥ षष्ठः स्कन्धः ॥

॥ वृत्रासुरकथा ॥ २२ ॥

ऋषय ऊचु—

सूत सूत महाभाग मिष्टं ते वचनामृतम् ।
न तृप्ताः स्मो वयं पीत्वा द्वैपायनकृतं शुभम् ॥ १.१ ॥

पुनस्त्वां प्रष्टुमिच्छामः कथां पौराणिकीं शुभाम् ।
वेदेऽपि कथितां रम्यां प्रसिद्धां पापनाशिनीम् ॥ १.२ ॥

वृत्रासुर इति ख्यातो वीर्यवांस्त्वष्टुरात्मजः ।
स कथं निहतः संख्ये वासवेन महात्मना ॥ १.३ ॥

22. விருத்ராஸுரன் கதை

(ஆறுவது ஸ்கந்தம்)

ரிஷிகள் கூறியது—

1.1. மகாபாக்கியசாலியான ஸுதரே! துவைபாயன முனிவரால் அருளிச் செய்யப்பெற்ற சுபமான தேவீபாகவதக் கதையாகிய இனிய அமுதத்தை உங்கள் வசனத்தால் செவி கொண்டு பருகி நாங்கள் திருப்தியடைய வில்லை.

1.2. மங்களமான புராணக்கதையை மேலும் கேட்க விரும்புகிறோம். அது அழகியதாயும் வேதத்தில் கூறப் பட்டுப் பிரசித்தமாயும் பாவத்தைப் போக்குவதாயும் உளது.

1.3. த்வஷ்டாவின் புத்திரனும் விருத்ராஸுரன் எனப் பெயர் பெற்றவனுமான அவன் வீரியம் மிக்கவன், மகாத்மாவாகிய இந்திரனால் அவன் எவ்வாறு போரில் கொல்லப்பட்டான்?

किं च त्वया पुरा प्रोक्तं वृत्रासुरवधः कृतः।
श्रीदेव्या इति तच्चापि चित्तं मोहयतीह नः ॥ १. १२ ॥

सूत उवाच —

शृण्वन्तु मुनयो वृत्तं वृत्रासुरवधाश्रयम्।
यथेन्द्रेण च संप्राप्तं दुःखं हत्यासमुद्भवम् ॥ १. १३ ॥
एवमेव पुरा पृष्टो व्यासः सत्यवती-सुतः।
पारीक्षितेन राज्ञाऽपि स यदाह च तद् ब्रुवे ॥ १. १४ ॥

व्यास उवाच —

त्वष्टा प्रजापतिर्ह्यासीद्देवश्रेष्ठो महातपाः।
देवानां कार्यकर्ता च निपुणो ब्राह्मणप्रियः ॥ १. २९ ॥

1.4. மேலும் விருத்ராஸுரவதம் தேவியால் செய்யப் பட்டதென்று நீங்கள் முன்பு கூறியிருக்கிறீர்கள். அதனுலும் எங்கள் மனது சந்தேகத்தை யடைந்துளது.

1.13. விருத்ராஸுரவதத்தைப் பற்றிய வரலாற்றை முனிவர்கள் கேட்கட்டும். பிரம்மஹத்தியால் ஏற்பட்ட துக்கம் இந்திரனுல் எவ்வாறு அடையப்பட்டதென்பதையும் கேட்கட்டும்.

ஸூதர் கூரியது—

1.14. அரசனுகிய பரீக்ஷித்தால் இதே கேள்வி முன்பு ஸத்யவதிகுமாரரான வியாஸரிடம் கேட்கப்பட்டு அவர் என்ன விடையளித்தாரோ அதையே உங்களுக்குக் கூறு கிறேன்.

வியாஸர் கூறியது—

1.29. மகா தபஸ்வியும் பிரஜாபதியும் த்வஷ்டா எனப் பெயர் பெற்றவருமான ஒரு தேவசிரேஷ்டர் இருந்தார். அவர் தேவர்களின் காரியங்களைச் செய்வதில் வல்லவராகவும் பிராம்மணப்பிரியராகவும் இருந்தார்.

स पुत्रं वै त्रिशिरस-मिन्द्रद्वेषात्किलासृजत् ।
विश्वरूपेति विख्यातं नाम्ना रूपेण मोहनम् ॥ १. ३० ॥

त्रिभिः स वदनैः श्रेष्ठै-र्व्यरोचयत मनोहरैः ।
त्रिभिर्भिन्नानि कार्याणि मुखैः समकरोन्मुनिः ॥ १. ३१ ॥

वेदानेकेन सोऽधीते सुरां चैकेन सोऽपिबत् ।
तृतीयेन दिशाः सर्वा युगपच्च निरीक्षते ॥ १. ३२ ॥

त्रिशिरा भोगमुत्सृज्य तपश्चक्रे सुदुष्करम् ।
तपस्वी स मृदुर्दान्तो धर्ममेव समाश्रितः ॥ १. ३३ ॥

तं च दृष्टा तपस्यन्तं खेदमाप शचीपतिः ।
विषादमगमत्तत्र शक्रोऽयं मास्मभूदिति ॥ १. ३६ ॥

1.30. அவர் இந்திரனிடம் ஏற்பட்ட பகைமையால் மூன்று தலைகளையுடைய ஒரு புத்திரனைத் தோற்றுவித்தார். அவன் விசுவரூபன் எனப்பெயர் பெற்றவனாகவும் அழகால் பிறரை மயக்கக் கூடியவனாகவுமிருந்தான்.

1.31. சிறந்த மூன்று முகங்களுடன் மனோகரமாய் விளங்கிய அம்முனிவன் மூன்று முகங்களாலும் வெவ்வேறு காரியங்களைச் செய்தான்.

1.32. ஒரு முகத்தால் அவன் வேதத்தை அத்தியயனம் செய்தான்; ஒரு முகத்தால் மதுவையருந்தினான்; மூன்றாவதால் எல்லாவுலகங்களையும் ஒரே சமயத்தில் காணக் கூடியவனாயிருந்தான்.

1.33. அப்படிப்பட்ட திரிசிரஸ் போகங்களைத் துறந்து செயற்கரிய தவத்தைச் செய்யலானான். தவத்தால் அவன் தர்மத்தைக் கைக் கொண்டவனாயும் இந்திரியங்களை அடக்கியவனாயும் மெதுவான இயல்புடையவனாகவுமிருந்தான்.

1.36. அவன் தவம் செய்வதைக் கண்டு தேவேந்திரன் வருத்தத்தை யடைந்தான்; மனவமைதியையிழந்தான்; இது இப்படியிருக்கவிடக் கூடாதென்று எண்ணினான்.

विसृज्य लोकलज्जां स तथा पापभयं भृशम् ।
चकार पापबुद्धिं तु तद्वधाय महीपते ॥ १. ६० ॥

इति विचिन्त्य पविं परमायुधं
प्रति मुमोच मुनिं तपसि स्थितम् ।
शशिदिवाकर-सन्निभ-माशुगं
त्रिशिरसं सुरसंघपतिः स्वयम् ॥ २. ४ ॥

तदभिघातहतः स धरातले
किल पपात ममार च तापसः ।
शिखरिणं शिखरं कुलिशार्दितं
निपतितं भुवि चाऽद्भुतदर्शनम् ॥ २. ५ ॥

तं श्रुत्वा निहतं त्वष्टा पुत्रं परमधार्मिकम् ।
चुकोपातीव मनसा वचनं चेदमब्रवीत् ॥ २. ३० ॥

1.60. அரசே! அவன் உலகத்திடம் வெட்கத்தை விட்டு, பாவச் செயலில் அச்சத்தையும் ஒழித்து அவனைக் கொன்றுவிடுவதெனக் கொடிய எண்ணத்தைக் கைக்கொண்டான்.

2.4. இங்ஙனம் நிர்மானித்த தேவராஜன் தவத்திலிருந்த முனிவராகிய திரிசிரஸின் மேல் சூரிய சந்திரர்களைப் போல் பிரகாசித்துக் கொண்டு வேகமாய்ச் செல்லும் வஜ்ராயுதத்தைப் பிரயோகித்தான்.

2.5. அதனுல் தாக்கப்பட்டு அந்தத் தபஸ்வி உயிரிழந்து தரையில் விழுந்தான். வஜ்ராயுதத்தால் தாக்குண்டு பூமியில் விழுந்த ஒரு அற்புத மலைச்சிகரம் போல் அவன் காட்சியளித்தான்.

2.30. சிறந்த தார்மிகனுன புத்திரன் கொல்லப்பட்டதைக் கேட்டு த்வஷ்டாவானவர் மனதில் மிகுதியும் கோபமுண்டவராய்ப் பின் வரும் வார்த்தையைச் சொன்னுர்.

अनागसं मुनिं यस्मात्पुत्रं निहतवान्मम ।

तस्मादुत्पादयिष्यामि तद्वधार्थं सुतं पुनः ।। २. ३१ ।।

सुराः पश्यन्तु मे वीर्यं तपसश्च बलं तथा ।

जानातु सर्वं पापात्मा स्वकृतस्य फलं महत् ।। २. ३२ ।।

इत्युक्त्वाऽग्निं जुहावाथ मन्त्रै-राथर्वणोदितैः ।

पुत्रस्योत्पादनार्थाय त्वष्टा क्रोधसमाकुलः ।। २. ३३ ।।

कृते होमेऽष्टरात्रं तु सन्दीप्ताच्च विभावसोः ।

प्रादुर्बभूव तरसा पुरुषः पावकोपमः ।। २. ३४ ।।

2.31. 'பாவமற்றவனும் முனிவனுமாகிய என்னுடைய புத்திரன் கொல்லப்பட்டதால் கொன்றவனையொழிப்பதற்கு இன்னொரு புத்திரனைத் தோற்றுவிப்பேன்.

2.32. 'என்னுடைய வீரியத்தையும் தவத்தின் வலிமையையும் தேவர்கள் பார்க்கட்டும். பாவியாகிய இந்திரன் தன்னுடைய செயலின் பெரிய விளைவு அனைத்தையும் அறிந்து கொள்ளட்டும்'.

2.33. இங ்ஙனம் கூறிவிட்டுக் கோபத்தால் மதிகலங்கிய த்வஷ்டா புத்திரனைத் தோற்றுவிப்பதற்காக அதர்வண வேதத்தில் கூறியுள்ள மந்திரங்களால் அக்னியில் ஹோமம் செய்தார்.

2.34. ஆறு நாட்கள் ஹோமம் செய்தபின் கொழுந்து விட்டெரியும் அக்னியிலிருந்து அக்னி போன்ற ஒரு புருஷன் திடீரென எழுந்தான்.

तं दृष्ट्वाग्रे सुतं त्वष्टा तेजोबलसमन्वितम् ।
वेगात्प्रकटितं वह्नेर्दीप्यमान-मिवाऽनलम् ॥ २. ३५ ॥

उवाच वचनं त्वष्टा सुतं वीक्ष्य पुरः स्थितम् ।
इन्द्रशत्रो विवर्धस्व प्रतापात् तपसो मम ॥ २. ३६ ॥

इत्युक्ते वचने त्वष्ट्रा क्रोधप्रज्वलितेन च ।
सोऽवर्धत दिवं स्तब्ध्वा वैश्वानरसमद्युतिः ॥ २. ३७ ॥

जातः स पर्वताकारः कालमृत्युसमः स्वराट् ।
किं करोमीति तं प्राह पितरं परमातुरम् ॥ २. ३८ ॥

इत्याकर्ण्य वचस्तस्य त्वष्टा पुत्रस्य पेशलम् ।
प्रत्युवाचाऽतिमुदितस्तं सुतं पर्वतोपमम् ॥ २. ४३ ॥

2.35–36. தேஜஸ்ஸும் பலமும் கூடியவனுய் அக்னியில் இருந்து கிளம்பும் ஜோதி போன்று வேகமாய் வெளிப் போந்த அந்தப்புத்திரனைத் தன்னெதிரில் கண்டு த்வஷ்டா 'எனது தவத்தின் வலிமையால் இந்திர சத்துருவாய் வரக்கடவாய்' என்று கூறினுர்.

2.37. கோபத்தால் ஜ்வலிக்கும் த்வஷ்டாவால் இங்ஙனம் கூறப்பட்டதும் அக்னி போன்ற பிரகாசம் பொருந்திய அப்புருஷன் வானுலகை மறைப்பவனுய் வளர்ந்தான்.

2.38. காலமிருத்யுவுக்குச் சமமாயும் மலை போன்ற வடிவுடையவனுயும் தன்னைத்தானே ஆள்பவனுயும் தோன்றிய அவன் மிகவும் துன்புற்றிருந்த தன் பிதாவை நோக்கி 'நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான்.

2.43. அப்புத்திரனுடைய திடமான வார்த்தையைக் கேட்ட த்வஷ்டா மிகவும் மகிழ்ந்து மலை போன்ற மகனை நோக்கிப் பின் வருமாறு கூறினுர்.

वृजिनात् त्रातुमधुना यस्माच्छक्तोऽसि पुत्रक।
तस्माद् वृत्र इति ख्यातं तव नाम भविष्यति ॥ २. ४४ ॥

भ्राता तव महाभाग त्रिशिरा नाम तापसः।
त्रीणि तस्य च शीर्षाणि ह्यभवन्वीर्यवन्ति च ॥ २. ४५ ॥

शक्रेण तु हतः सोऽद्य वज्रघातेन सांप्रतम्।
विनाऽपराधं सहसा छिन्नानि मस्तकानि च ॥ २. ४७ ॥

तस्मात्त्वं पुरुषव्याघ्र जहि शक्रं कृतागसम्।
ब्रह्महत्त्यायुतं पापं निस्त्रपं दुर्मतिं शठम् ॥ २. ४८ ॥

इत्युक्त्वा च तदा त्वष्टा पुत्रशोकसमाकुलः।
आयुधानि च दिव्यानि चकार विविधानि च ॥ २. ४९ ॥

2.44. மகனே! (வ்ருஜிநாத் த்ராதும்) துன்பத்தினின்று காப்பதற்கு நீ இப்பொழுது சக்தியுள்ளவனுயிருப்பதால் உன்னுடைய பெயர் 'வ்ருத்ரன்' என்று பிரசித்தியாகப் போகிறது.

2.45. உன்னுடைய சகோதரன் திரிசிரன் என்று பெயர் படைத்தவனுயிருந்தான். அவன் பெருமை மிக்க வனுகவும் தவவலிமையுடையவனுகவுமிருந்தான். அவனுக்கு வீரியம் மிக்கனவாய்த் தலைகள் மூன்று இருந்தன.

2.47. அவனை இந்திரன் வஜ்ராயுதத்தால் அடித்துச் சமீபத்தில் கொன்றுவிட்டான். ஒரு பிழையும் செய்யாத அவனுடைய தலைகள் திடீரென வெட்டப்பட்டன.

2.48. புருஷர்களிற் சிறந்தவனே! ஆகையால் பாவச் செயல் புரிந்தவனும் மானங்கெட்டவனும், கெடுபுத்தியுடைய வனும், கொடியவனும், பாவியும், பிரும்மஹத்தியால் பீடிக்கப்பட்டவனுமான இந்திரனை நீ கொல்ல வேண்டும்.

2.49. இவ்வாறு கூறிவிட்டுப் புத்திர சோகத்தால் பீடிக்கப்பட்ட த்வஷ்டா பலவகைப்பட்ட தெய்வீக ஆயு தங்களைச் சிருஷ்டித்தார்.

ददावस्मै सहस्राक्षवधाय प्रवलानि च।
खड्गशूल-गदाशक्ति-तोमर-प्रमुखानि च ॥ २. ५० ॥

तूणीरं चाक्षयौ दिव्यौ कवचं चाऽतिसुन्दरम्।
रथं मेघप्रतीकाशं दृढं भार-सहं जवम् ॥ २. ५२ ॥

युद्धोपकरणं सर्वं कृत्वा पुत्राय पार्थिव।
दत्त्वासौ प्रेरयामास त्वष्टा क्रोधसमन्वितः ॥ २. ५३ ॥

कृतस्वस्त्ययनो वृत्रो ब्राह्मणै-र्वेद-पारगैः।
निर्जगाम रथारूढो हन्तुं शक्रं महाबलः ॥ ३. १ ॥

तदैव राक्षसाः क्रूराः पुरा देवपराजिताः।
समाजग्मुश्च सेवार्थं वृत्रं ज्ञात्वा महाबलम् ॥ ३. २ ॥

2.50–52. சக்தி மிகுந்த அவ்வாயுதங்களை இந்திரனுடைய வதத்திற்காக அப்புத்திரனிடம் கொடுத்தார். அவை யாவன:—வாள், சூலம், கதை, சக்தி, தோமரம், குறைவுபடாத திவ்யமான இரு தூணீரங்கள், அழகுமிக்க கவசம், மேகம் போல் பிரகாசிப்பதும், திடமானதும், பாரத்தைத் தாங்குவதும், வேகமானதுமான தேர்.

2.53. அரசே! போர்கருவிகளனைத்தையும் ஆக்கிப் புத்திரனுக்களித்து த்வஷ்டா கோபத்துடன் கூடியவராய் அவனைப் போருக்கு ஏவினார்.

3.1. வேதத்தைக்கரை கண்டவர்களான பிராம்மணர்களால் ஸ்வஸ்திவாசனம் செய்யப் பெற்று மகாபலசாலியான விருத்ரன் தேரிலேறிக் கொண்டு இந்திரனைக் கொல்வதற்குப் புறப்பட்டான்.

3.2. முன்பு தேவர்களிடம் தோல்வியடைந்திருந்த கொடிய அரக்கர்கள் அப்பொழுது விருத்ரன் மகாபலசாலியாயிருப்பதை உணர்ந்து அவனுக்குச் சேவை செய்ய வந்து கூடினர்.

इन्द्रदूतास्तु तं दृष्ट्वा युद्धाय तु समागतम् ।
वेगादागत्य वृत्तान्तं शशंसुस्तस्य चेष्टितम् ॥ ३. ३ ॥

दूता ऊचुः —
स्वामिन् शीघ्रमिहायाति वृत्रो नाम रिपुस्तव ।
बलवान् स्यन्दने रूढ-स्त्वष्टा चोत्पादितः किल ॥ ३. ४ ॥

व्यास उवाच —
इति तेषां वचः श्रुत्वा चिन्तामाप सुरेश्वरः ।
बृहस्पतिं समाहूय पप्रच्छ च मनोगतम् ॥ ३. १७ ॥

इन्द्र उवाच —
कुरु शान्तिं विधानज्ञ शत्रुक्षयविधायिनीम् ।
यथा मे न भवेद्दुःखं तथा कार्यं विधीयताम् ॥ ३. २० ॥

3.3. விருத்ரன் அவ்வாறு போருக்கு வந்ததைக் கண்ட இந்திர தூதர்கள் வேகமாக இந்திரனிடம் சென்று அவனுடைய விருத்தாந்தத்தையும் செயல்களையும் தெரிவித்தனர்.

தூதர்கள் கூறியது—

3.4. ஐயனே! த்வஷ்டாவால் தோற்றுவிக்கப்பட்ட பலவானாகிய விருத்ரன் உங்களுக்குச் சத்துருவாகத் தேரில் ஏறிக் கொண்டு விரைவில் இங்கு வந்து கொண்டிருக்கிறான்.

வியாஸர் கூறியது—

3.17. அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு தேவேந்திரன் கவலைக்குள்ளானான். பிருஹஸ்பதியை அழைத்து அதைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டனன்.

இந்திரன் கூறியது—

3.20. உபாயமறிந்தவரே! பகைவனையழிக்கும் பயனுடைய சாந்தியைச் செய்யும். என்னுடைய துக்கம் எதனால் நீங்குமோ அவ்வகையில் காரியத்தைக் கட்டளையிடும்.

बृहस्पतिरुवाच —

किं करोमि सहस्राक्ष त्वयाऽद्य दुष्कृतं कृतम् ।
अनागसं मुनिं हत्वा किं फलं समुपार्जितम् ॥ ३. २१ ॥

अत्युग्रपुण्यपापानां फलं भवति सत्वरम् ।
न सुखं विन्दते प्राणी परपीडापरायणः ॥ ३. २३ ॥

समागच्छति दुर्धर्षो रथारूढः प्रतापवान् ।
देवेन्द्र प्रलयं कुर्वन्नाऽस्य मृत्युर्भविष्यति ॥ ३. २७ ॥

व्यास उवाच —

कोलाहलस्तदा जातस्तथा ब्रुवति वाक्पतौ ।
तद् दृष्ट्वा महदाश्चर्यं शक्रश्चिन्तापरायणः ।
आज्ञापयामास तदा सेनोद्योगाय सेवकान् ॥ ३. २९ ॥

ப்ருஹஸ்பதி கூறியது—

3.21. ஆயிரங்கண் படைத்தவரே! நான் என்ன செய்யட்டும்? உம்மால் தீச்செயல் செய்யப்பட்டுளது. பாவமற்ற முனிவரைக் கொன்று உம்மால் என்ன பயன் அடையப் பட்டுளது?

3.23. மிகத் திவிரமான புண்ணிய பாவங்களுக்கு உடனே பலன் ஏற்படுகிறது. பிறரைத் துன்புறுத்துவதில் ஈடுபட்ட எந்தப் பிராணியும் சுகத்தையடையாது.

3.27. தேவேந்திரா! வெல்லமுடியாத உமது பகைவன் பிரதாபம் மிக்கவனுய்த் தேரில் ஏறிக்கொண்டு அனைத்தையும் அழித்துக் கொண்டு வரப்போகிறுன். அவனுக்குச் சாவில்லை.

வியாஸர் கூறியது—

3.29. பிருஹஸ்பதி அப்படி கூறிக்கொண்டிருக்கும் பொழுதே இரைச்சலும் கலவரமும் ஏற்பட்டது. அதைக் கண்டு ஆச்சரியம் மேலிட்டு இந்திரன் கவலையிலாழ்ந்தான். சேனையைத் திரட்டும்படிசேவகர்களுக்குக் கட்டளையிட்டான்.

तथैव त्रिदशाः सर्वे स्वं स्वं वाहनमास्थिताः ।
युद्धाय कृतसंकल्पा निर्ययुः शस्त्रपाणयः ॥ ३. ३३ ॥

वृत्रोऽथ दानवैर्युक्तः संप्राप्तो मानसोत्तरम् ।
इन्द्रोऽप्यागत्य संग्रामं चकार मानसोत्तरे ॥ ३. ३५ ॥

वरुणः प्रथमं भग्नस्ततो वायुगणः किल ।
यमो विभावसुः शक्रः सर्वे ते निर्गता रणात् ॥ ३. ३८ ॥

पलायनपरान् दृष्ट्वा देवानिन्द्रपुरोगमान् ।
वृत्रोऽपि पितरं प्रागादाश्रमस्थं मुदाऽन्वितम् ॥ ३. ३९ ॥

प्रणम्य प्राह त्वष्टारं पितुः कार्यं मयाकृतम् ।
देवा विनिर्जिताः सर्वे सेन्द्राः सामरसंस्थिताः ॥ ३. ४० ॥

3.33. அவ்வாறே தேவர்களனைவரும் தத்தம் வாகனங்களில் ஏறிக்கொண்டு ஆயுதபாணிகளாய்ப் போர் புரியுந்திட்டத்துடன் வெளிப்போந்தனர்.

3.35. விருத்திரன் அசுரர்களுடன் கூடி மானஸோத்தர பர்வதத்திற்கு வந்து சேர்ந்தான். இந்திரனும் மானஸோத்தரம் வந்து போர் தொடங்கினான்.

3.38. முதலில் வருணன் தோல்வியுற்றான். பின்பு வாயு கணம் தோல்வியுற்றது. யமனும் அக்னியும் இந்திரனும் எல்லோருமே போர்க்களத்திலிருந்து பின் வாங்கினர்.

3.39. இந்திரனை முன்னிட்ட தேவர்கள் ஓடிவிட்டதைக் கண்ட விருத்திரன் மகிழ்ச்சியுடன் ஆசிரமத்திலிருந்த தந்தையிடம் சென்றான்.

3.40. த்வஷ்டாவை நமஸ்கரித்து, தந்தையின் ‘கட்டளை என்னால் நிறைவேற்றப்பட்டது. இந்திரனை முன்னிட்ட தேவர்கள் அனைவரும் வெல்லப்பட்டனர்’ என்று கூறினான்.

न हतास्ते मया तस्मादयुक्तं भीतमारणम्।
आज्ञापय पुनस्तात किं करोमि तवेप्सितम् ॥ ३. ४३ ॥

इति पुत्रवचः श्रुत्वा त्वष्टा प्राह मुदाऽन्वितः।
पुत्रवानद्य जातोऽस्मि सफलं मम जीवितम् ॥ ३. ४५ ॥

आराध्य द्रुहिणं देवं लब्ध्वा वरमनुत्तमम्।
जहि शक्रं दुराचारं ब्रह्महत्या समायुतम् ॥ ३. ५० ॥

तदाकर्ण्य पितुर्वाक्यं वृत्रः क्रोधयुतस्तदा।
आज्ञामादाय च पितुर्जगाम तपसे मुदा ॥ ३. ५५ ॥

जाते वर्षशते पूर्णे ब्रह्मा लोकपितामहः।
तत्राऽऽजगाम तरसा हंसारूढश्चतुर्मुखः ॥ ४. २ ॥

3.43. 'பயந்து ஓடியவர்களைக் கொல்வது நியாயமன்று என நான் அவர்களைக் கொல்லவில்லை. தந்தையே! இனி நான் என்ன செய்ய வேண்டும் என்று தங்கள் விருப்பத்தின்படி கட்டளையிடுங்கள்'.

3.45. புத்திரனுடைய இவ்வார்த்தையைக் கேட்டு மகிழ்ச்சியுடன் த்வஷ்டா கூறினார்: 'இப்பொழுது நான் உண்மையில் புத்திரனை உடையவனானேன்; என் வாழ்க்கை பயனுடையதாயிற்று.

3.50. 'நீ பிரும்மாவை ஆராதித்து சிறந்த வரத்தைப் பெற்று பிரும்மஹத்தியால் பீடிக்கப்பட்டுள்ளவனும் கெட்ட நடத்தையுடையவனுமான இந்திரனைக் கொன்று விடு.'

3.55. விருத்திரன் தந்தையின் அவ்வார்த்தையைக் கேட்டு இந்திரன் மேல் கோபத்துடன் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதற்காகத் தவம் புரியச் சென்றான்.

4.2. நூறு வருஷம் பூர்த்தியான பின் உலக பிதாமகராகிய நான்முகப்பிரம்மா ஹம்ஸ வாகனத்தின் மேல் அங்கு விரைவில் எழுந்தருளினார்.

वृत्र उवाच —

प्राप्तं मया सकलदेवपदं प्रभोऽद्य
यद्दर्शनं तव सुदुर्लभमाशु जातम्।
वांछास्ति नाथ मनसि प्रवणे दुरापा
तां प्रब्रवीमि कमलासन वेत्सि भावम्॥ ४. ७॥

मृत्युश्च मा भवतु मे किल लोहकाष्ठ-
शुष्कार्द्रवंशनिचयै-रपरैश्च शस्त्रैः।
वृद्धिं प्रयातु मम वीर्यमतीव युद्धे
यस्माद्भवामि सबलै-रमरै-रजेयः॥ ४. ८॥

விருத்ரன் கூறியது—

4.7. பிரபுவே! கிடைத்தற்கரிய தங்களுடைய தரிசனம் எனக்கு விரைவில் இப்பொழுது கிட்டிய காரணத்தால் நான் எல்லா தேவப்பதவிகளேயும் அடைந்தவனுகின்றேன். கமலாஸனரே! என் மனதின் ஆழத்தில் அடைதற்குக் கடின மான ஒரு ஆசை உளது. அதைக் கூறுகிறேன். நீர் எனது கருத்தை உணர்வீர்.

4.8. இரும்பு முதலிய லோகங்களாலும் மரக்கட்டை களாலும், ஈரமானவையோ, மற்ற உலர்ந்தவையோ ஆகிய மூங்கில் முதலியவைகளாலும் மற்ற ஆயுதவகைகளாலும் எனக்குச் சாவு ஏற்படக்கூடாது. எந்த வீரியமிருந்தால் போரில் நான் தேவர்களாலும் அவர்கள் சேனைகளாலும் வெல்லமுடியாதவனுவேனே அப்படிப் பட்ட வீரியம் என்னி டம் விருத்தியடைய வேண்டும்.

ब्रह्मोवाच —

उत्तिष्ठ गच्छ भद्रं ते वांछितं सफलं सदा।
न शुष्केण न चार्द्रेण न पाषाणेन दारुणा॥
भविष्यति च ते मृत्युरिति सत्यं ब्रवीम्यहम्॥ ४. ९॥

व्यास उवाच —

इति दत्त्वा वरं ब्रह्मा जगाम भुवनं परम्।
वृत्रस्तु तं वरं लब्ध्वा मुदितः स्वगृहं ययौ॥ ४. ११॥

शशंस पितुरग्रे तद्वरदानं महामतिः।
त्वष्टा तु मुदितः प्राप्तं पुत्रं प्राप्तवरं तदा॥ ४. १२॥

பிரும்மா கூறியது—

4.9. எழுந்திரு! உனக்கு மங்களமுண்டாகும். நீ செல்லலாம். நீ விரும்பியது பயனுடையதாகும். உலர்ந்த பொருளாலோ ஈரப் பொருளாலோ, கல்லாலோ கட்டையாலோ உனக்கு மரணமேற்படாது என்று நான் உண்மையான வரமளிக்கிறேன்.

வியாஸர் கூறியது—

4.11. இவ்வாறு வரமளித்து விட்டு பிரும்மா தன்னுலகிற்குச் சென்றார். விருத்ரன் அவ்வரத்தைப் பெற்று மகிழ்ச்சியுடன் தன் வீடு திரும்பினான்

4.12. சிறந்த புத்திமானான அவன் தன் தந்தையின் முன்னிலையில் அவ்வரதானம் பெற்றதைத் தெரிவித்தான். த்வஷ்டா வரம் பெற்று வந்த புத்திரனைக் கண்டு மகிழ்ந்தார்.

भव त्वं त्रिदशाधीशः संप्राप्य विजयं रणे ।
ममाऽऽधिं छिन्धि विपुलं पुत्रनाशसमुद्भवम् ॥ ४. १३ ॥

जीवतो वाक्य करणात्क्षयाहे भूरि भोजनात् ।
गयायां पिण्डदानाच्च त्रिभिः पुत्रस्य पुत्रता ॥ ४. १५ ॥

इति तस्य वचः श्रुत्वा पुत्रः परमदुर्जयः ।
रथमारुह्य तरसा निर्जगाम पितुर्गृहात् ॥ ४. १८ ॥

देवदानवयोस्तावत्संग्रामस्तुमुलोऽभवत् ।
वृत्रवासवयोः संख्ये मनसा विजयैषिणोः ॥ ४. २५ ॥

एकतश्च सुराः सर्वे युद्धाय समुपस्थिताः ।
एकतो बलवांस्त्वाष्ट्रः संग्रामे समवर्तत ॥ ४. ४० ॥

4.13. 'போரில் வெற்றியடைந்து நீ தேவர்களுக்கு அதிபனுகிவிடு. புத்திரனையிழந்த சோகத்தால் வருந்தும் எனது மனேவியாதியைப் போக்கிவிடு.

4.15. தந்தை உயிருடனிருக்கையில் அவன் வார்த்தைப்படி நடப்பதாலும், அவன் இறந்த தினத்தில் நிறைய அன்னதானம் செய்வதாலும், கயையில் பிண்டம் போடுவதாலும் இம்மூன்றுலும் ஒரு புத்திரன் புத்திரத் தன்மையை நிலே நாட்டுகிருன்.'

4.18. இப்படி அவர் பேசியதைக் கேட்ட அப்புத்திரனுகிய வீரசிரேஷ்டன் தேரில் ஏறிக் கொண்டு தந்தையின் கிருகத்திலிருந்து விரைவில் வெளிப்போந்தான்.

4.25. விருத்ரனும் இந்திரனும் ஒருவரையொருவர் வெல்லவேண்டுமென்று மனதில் தீர்மானித்து விட்டதால் தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையில் போரின் ஆரவாரம் தொடங்கியது.

4.40. ஒரு புறம் தேவர்களெல்லாம் போருக்கு ஒன்று கூடினர். மறு புறம் பலவானுகிய த்வஷ்டாவின் குமாரன் எதிர்த்து நின்றுன்.

यदा व्यवर्धत रणे वृत्रो वरमदावृतः ।
पराजितस्तदा शक्रस्तेजसा तस्य धर्षितः ॥ ४. ४१ ॥

जग्मुस्त्यक्त्वा रणं सर्वे देवा इन्द्रपुरोगमाः ।
गृहीतं देवसदनं वृत्रेणागत्य रंहसा ॥ ४. ४३ ॥

स्थानभ्रष्टाः सुराः सर्वे गिरिदुर्गेषु संस्थिताः ।
दुःखमापुः परिभ्रष्टा यज्ञभागात्सुरालयात् ॥ ४. ४७ ॥

वृत्रः सुरपदं प्राप्य बभूव मदगर्वितः ।
त्वष्टाऽतीव सुखं प्राप्य मुमोद सुतसंयुतः ॥ ४. ४८ ॥

गत्वा विष्णुपदं देवास्तुष्टुवुः परमेश्वरम् ।
हरिं पुरुषसूक्तेन वेदोक्तेन जगद्गुरुम् ॥ ४. ५६ ॥

4.41–43. வரத்தால் கொழுத்திருந்த விருத்ரன் போரில் வளர்ச்சியுறவே இந்திரன் அவனுடைய வீரியத்தால் தோல்வியடைந்தான். இந்திரனை முன்னிட்ட தேவர்களனை வரும் போர்க்களத்தை விட்டு விலகினர். தேவர்களுடைய இருப்பிடம் விருத்ரனுல் விரைவில் வந்து கைக்கொள்ளப் பட்டது.

4.47. தேவலோகத்தையும் யாகங்களில் பாகங்களை யும் இழந்து துக்கம் மேலிட்டவர்களாய் தேவர்களெல்லாம் மலைகளிலும் அடைய முடியாத இடங்களிலும் சென்று வசிக்கலாயினர்!

4.48. விருத்ரன் தேவர்களின் ஸ்தானத்தைக் கைப் பற்றிய கொழுப்பால் கர்வமடைந்தவனுனன். த்வஷ்டா தன் புத்திரனுடன் கூடி மிகுந்த சுகத்தையடைந்து மகிழ்ந்திருந்தார்.

4.59. தேவர்கள் விஷ்ணுலோகம் சென்று உலக நாயகரும் ஜகத்குருவுமான ஹரியை வேதத்தில் கூறப்பட்ட புருஷஸூக்தத்தால் துதித்தனர்.

प्रत्यक्षोऽभूज्जगन्नाथस्तेषां स कमलापतिः ।
संमान्य च सुरान् सर्वानित्युवाच पुरः स्थितः ॥ ४. ६० ॥

विष्णुरुवाच —

न भेतव्यं सुरवरा वेद्म्युपायं सुसंमतम् ।
तद्वधाय प्रवक्ष्यामि येन सौख्यं भविष्यति ॥ ५. ६ ॥

भवन्तः सहिताः सर्वे देवीं भगवतीं शिवाम् ।
गच्छध्वं शरणं भावैः स्तोत्रमन्त्रैः सुरोत्तमाः ॥ ५. २१ ॥

साहाय्यं सा योगमाया भवतां संविधास्यति ।
वन्दामहे सदा देवीं सात्त्विकीं प्रकृतिं पराम् ॥ ५. २२ ॥

4.60. லக்ஷ்மீபதியான ஜகந்நாதர் அந்த தேவர்கள் அனைவர் முன்பும் தோன்றி அவர்களைப் பெருமைப்படுத்திப் பின்வருமாறு கூறினார்.

விஷ்ணு கூறியது—

5.6. தேவசிரேஷ்டர்களே! நீங்கள் அஞ்சவேண்டாம். அந்த விருத்திரனைக் கொல்வதற்கு ஒரு நல்ல உபாயத்தை நான் அறிவேன். அதைக் கூறுகிறேன் கேளுங்கள். அதனால் நீங்கள் சுகத்தையடைவீர்கள்.

5.21. தேவசிரேஷ்டர்களே! நீங்களனைவரும் மங்கள வடிவினளான பகவதி தேவியை ஸ்தோத்திரங்களாலும் மந்திரங்களாலும் வழிபட்டுச் சரணமடையுங்கள்.

5.22. அந்த யோகமாயை உங்களுக்குச் சகாயம் செய்வாள். பராப்ரகிருதியும் ஸாத்விகியுமான அந்த தேவியைத் தான் நான் எப்பொழுதும் பூஜிக்கிறேன்.

प्रसन्नायां परांबायां सर्व साध्यं भविष्यति ।
नो चेन्मनोरथावाप्तिर्न कस्याऽपि भविष्यति ॥ ५. २५ ॥

पुरा तयाऽपि संग्रामं कृत्वा परमदारुणम् ।
पंचवर्षसहस्राणि निहतौ मधुकैटभौ ॥ ५. २८ ॥

स्तुता मया तदाऽऽत्यर्थं प्रसन्ना प्रकृतिः परा ।
मोहितौ तु तदा दैत्यौ छलेन च मया हतौ ॥ ५. २९ ॥

तथा कुरुध्वं प्रकृते-र्भजनं भावसंयुताः ॥
सर्वथा कार्यसिद्धिं सा करिष्यति सुरोत्तमा ॥ ५. ३० ॥

व्यास उवाच —

एवं ते दत्तमतयो विष्णुना प्रभविष्णुना ।
जग्मुस्ते मेरुशिखरं मन्दारद्रुम-मण्डितम् ॥ ५. ३१ ॥

5.25. அந்தப் பரதேவதை பிரஸன்னமானால் எல்லாக் காரியங்களும் கைகூடும். இன்றேல் எவர்க்கும் எண்ணிய எண்ணங்கள் நிறைவேறமாட்டா.

5.28–29. முன்பு நான் கூட ஐயாயிரம் வருஷங்கள் மதுகைடபர்களுடன் போர்புரிந்து தேவியை மிகவும் வேண்டித்துதித்து பராப்ரக்கிருதியான அவள் பிரசன்னமாகி அவ்வசுரர்களின் மதியை மயக்கியபின்பே தந்திரத்தால் அவர்களைக் கொன்றேன்.

5.30. தேவசிரேஷ்டர்களே! நீங்களும் பக்தியுடன் அப்பிரகிருதி பஜனத்தைச் செய்வீர்களாயின் அவள் எல்லா வகையிலும் உங்களுக்குக் காரியசித்தியை அளிப்பாள்.

வியாஸர் கூறியது—

5.31. ஸர்வ வல்லமை பொருந்திய விஷ்ணுவால் புத்திமதியளிக்கப்பட்ட அவர்கள் மந்தாரவிருக்ஷங்கள் நிறைந்த மேருமலையின் உச்சிக்குச் சென்றனர்.

एकान्ते संस्थिता देवाः कृत्वा ध्यानं जपं तपः ।
तुष्टुवुर्जगतां धात्रीं सृष्टिसंहारकारिणीम् ॥ ५. ३२ ॥

देवा ऊचुः —

देवि प्रसीद परिपाहि सुरान् प्रतप्तान्
वृत्रासुरेण समरे परिपीडितांश्च ।
दीनार्तिनाशनपरे परमार्थतत्त्वे
प्राप्तांस्त्वदंघ्रिकमलं शरणं सदैव ॥ ५. ३४ ॥

पूर्वं त्वया जननि दैत्यपतिर्बलिष्ठो
व्यापादितो महिषरूपधरः किलाऽऽजौ ।
अस्मत्कृते सकललोकभयावहोऽसौ
वृत्रं कथं न भयदं विधुनोषि मातः ॥ ५. ४० ॥

5.32. அந்த தேவர்கள் தனிமையான இடத்தில் இருந்து கொண்டு தியானமும் ஜபமும் தவமும் செய்து உலகையாக்குபவளும் காப்பவளும் அழிப்பவளுமான தேவியைத் துதித்தனர்.

தேவர்கள் கூறியது—

5.34. தேவி! தீனர்களின் துன்பங்களைத் துடைப்பவளே! பரமார்த்த தத்துவஸ்வரூபியே! உனது திருவடித் தாமரையை தேவர்களாகிய நாங்கள் எப்பொழுதும் புகலிடமாய்க் கொண்டுள்ளோம். விருத்ராஸுரனுல் போரில் பிடிக்கப்பட்டு பரிதவிக்கும் எங்களிடம் அருள் சுரந்து எங்களைக் காத்தருள்வாய்.

5.40. தாயே! முன்பு மகாபலசாலியாக எருமை வடிவில் தோன்றிய உலகுக் கெல்லாம் பயத்தை விளைத்த அசுர வேந்தன் உன்னுல் எங்கள் பொருட்டுக் கொல்லப் படவில்லையா? இப்பொழுது பயத்தை விளைக்கும் இந்த விருத்ரனை ஏன் கொல்லாமலிருக்கின்றனை?

शुंभस्तथाऽतिबलवाननुजो निशुंभ-
स्तौ भ्रातरौ तदनुगा निहता हतौ च।
वृत्रं यथा जहि खलं प्रबलं दयार्द्रे
मत्तं विमोहय तथा न भवेद्यथाऽसौ ॥ ५. ४१ ॥

धन्यास्त एव मनुजा हि भजन्ति भक्त्या
पादाम्बुजं तव भवाब्धिजलेषु पोतम्।
यं योगिनोऽपि मनसा सततं स्मरन्ति
मोक्षार्थिनो विगतरागविकारमोहाः ॥ ५. ४७ ॥

ये याज्ञिकाः सकल वेदविदोऽपि नूनं
त्वां संस्मरन्ति सततं किल होमकाले।
स्वाहां तु तृप्तिजननी-ममरेश्वराणां
भूयः स्वधां पितृगणस्य च तृप्तिहेतुम् ॥ ५. ४८ ॥

5.41. தயையால் கனிந்த நெஞ்சுடையவளே! மிகுந்த பலவானான சும்பனும் அவன் தம்பியான நிசும்பனும் ஆக இருசகோதரர்களும் அவர்கள் பரிவாரங்களுடன் கொல்லப் படவில்லையா? துஷ்டனும், பலசாலியும் கொழுப் பேரிய வனும் ஆகிய விருத்ரனை மோகத்திலாழ்த்தி அவனைக் கொன்று இல்லாமல் செய்து விடு.

5.47. பிறவிக்கடலில் தெப்பம் போன்ற எந்த உன்னுடைய திருவடித்தாமரையை மோக்ஷத்தை விரும்புவர் களும் ஆசையும் மதிமயக்கமும் நீங்கியவர்களுமாகிய யோகிகள் எப்பொழுதும் தியானிக்கின்றார்களோ அதை பக்தியுடன் போற்றும் மனிதர்களே பாக்கியசாலிகள்.

5.48. எல்லா வேதங்களையுமறிந்த யாகசிலர்கள் எவர்களோ அவர்கள் ஹோமகாலத்தில் தேவ நாயகர் களுக்குத் திருப்தியை உண்டாக்கும் ஸ்வாஹாகாரவடிவிலும் மேலும் பிதிருகணங்களுக்குத் திருப்திக்கு காரணமான ஸ்வதாகாரவடிவிலும் எப்பொழுதும் உன்னை நன்கு தியானிக் கிறார்கள்.

मेधाऽसि कान्तिरसि शान्तिरपि प्रसिद्धा
बुद्धिस्त्वमेव विशदार्थकरी नराणाम्।
सर्वं त्वमेव विभवं भुवनत्रयेऽस्मिन्
कृत्वा ददासि भजतां कृपया सदैव ॥ ५.५० ॥

व्यास उवाच —

एवं स्तुता सुरै-र्देवी प्रत्यक्षा साऽभवत्तदा।
चारुरूपधरा तन्वी सर्वाभरणभूषिता ॥ ५.५१ ॥
पाशांकुशवराऽभीति-लसद्बाहु चतुष्टया।
रणत्किंकिणिका-जाल-रसनाबद्धसत्कटिः ॥ ५.५२ ॥

5.50. நீ மேதாசக்தியாயிருக்கிறாய், காந்தியாயிருக்கிறாய், சாந்தியாயிருக்கிறாய்; மனிதர்க்கு எல்லாவற்றையும் சாதித்துக் கொடுக்கும் தெளிவான புத்தியும் நீயே என்பது பிரசித்தம்; இந்த மூவுலகிலும் எல்லாச் செல்வத்தையும் உண்டாக்கி உன்னை வழிபடுவோர்க்கு எப்பொழுதும் கிருபையுடன் அளிப்பவளும் நீயே.

வியாஸர் கூறியது—

5.51. இவ்வாறு தேவர்களால் துதிக்கப்பெற்ற தேவி அப்பொழுது அழகிய உருவத்துடன் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவளாய் அவர்கள் முன் பிரத்யக்ஷமானாள்.

5.52. நான்கு கைகளில் பாசம் அங்குசம் என்ற ஆயுதங்களையும் வரம் அபயம் என்ற முத்திரைகளையும் இடுப்பில் சலங்கைகள் ஒலிக்கும் ஒட்டியாணத்தையும்;

कलकण्ठीरवा कान्ता क्वणत्कंकणनूपुरा।
चन्द्रखण्डसमा बद्धरत्न-मौलिविराजिता ॥ ५. ५३ ॥

मन्दस्मिताऽरविन्दास्या नेत्रत्रयविभूषिता।
प्रसादसुमुखी देवी करुणारस-सागरा ॥ ५. ५४ ॥

सर्वशृंगारवेषाढ्या सर्वद्वैतारणि: परा।
सर्वज्ञा सर्वकर्त्री च सर्वाधिष्ठानरूपिणी ॥ ५. ५५ ॥

सर्ववेदान्तसंसिद्धा सच्चिदानन्दरूपिणी।
प्रणेमुस्तां समालोक्य सुरा देवीं पुरः स्थिताम् ॥ ५. ५६ ॥

5.53. கழுத்தில் அழகிய அட்டிகையையும் கரங்களில் ஒலிக்கும் கங்கணங்களையும் பாதங்களில் நூபுரங்களும் தலையில் பிறைச்சந்திரனைப் போன்று ரத்னம் பதித்த கிரீடத்தையும் தரித்தவளாய்;

5.54. புன் சிரிப்புடன் கூடிய தாமரை போன்ற முகமும், மூன்று கண்களும், கருணைக்கடல் போன்று அருள் பொழியும் வதனமும் படைத்தவளாய்;

5.55. சிருங்கார வேஷங்களெல்லாம் நிறைந்தவளாய் துவைதத்தையெல்லாம் எரிக்கும் நெருப்பாய் எல்லாமறிந்தவளாய், எல்லாம் செய்பவளாய், எல்லாவற்றிற்கும் இருப்பிட வடிவினளாய், அனைத்தையுங்கடந்தவளாய்;

5.56. வேதாந்தமனைத்திலும் சித்திக்கும் பொருளாய், ஸச்சிதானந்த ரூபிணியாய் முன்னர் தோன்றிய தேவியைக் கண்டு தேவர்கள் அவளை நமஸ்கரித்தனர்.

देवा ऊचुः —

मोहयैनं रिपुं वृत्रं देवानामतिदुःखदम् ।
आयुधे च बलं देहि हतः स्याद्येन वा रिपुः ॥ ५. ५८ ॥

व्यास उवाच —

तथेत्युक्त्वा भगवती तत्रैवाऽन्तरधीयत ।
स्वानि स्वानि निकेतानि जग्मुर्देवा मुदान्विताः ॥ ५. ५९ ॥

शक्रोऽपि वधकामस्तु तदुपायानचिन्तयत् ।
रन्ध्रान्वेषी समुद्विग्नस्तदाऽऽसीन्मघवा भृशम् ॥ ६. ४० ॥

स कदाचित्समुद्रान्ते तमपश्यन्महासुरम् ।
सन्ध्याकाल उपावृत्ते मुहूर्तेऽतीव दारुणे ॥ ६. ५० ॥

தேவர்கள் கூறியது—

5.58 தேவர்களுக்கு மிகுந்த துக்கத்தை விளைக்கும் இந்தச் சத்துருவாகிய விருத்ராஸுரனை மயக்கிவிடு. அப்பகைவன் எதனுல் கொல்லப்படுவானே அந்த ஆயுதத்தில் பலத்தையும் எங்களுக்குக் கொடுத்தருள்.

வியாஸர் கூறியது—

5.59. 'அவ்வண்ணமே ஆகுக' என்று கூறிவிட்டு பகவதி அங்கேயே மறைந்து போயினள். தேவர்கள் மகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் இருப்பிடத்திற்கேகினர்.

6.40. விருத்ரனைக் கொல்ல விரும்பிய இந்திரன் அவனை எந்த உபாயத்தால் கொல்லலாம் என்று சிந்திப்பவனுய் அதற்குரிய வாய்ப்புக் கிட்டாமல் மிகவும் வருந்திக் கொண்டிருந்தான்.

6.50. ஒரு சமயம் கடற்கரையில் கொடுமையான மாலை நேரத்தில் மகானுகிய அசுரனை இந்திரன் கண்டான்.

ततः संचिन्त्य मघवा वरदानं महात्मनाम् ।
सन्ध्येयं वर्तते रौद्रा न रात्रिर्दिवसो न च ॥ ६. ५२ ॥

हन्तव्योऽयं मया चाद्य बलेनैव न संशयः ।
एवं विचार्य मनसा सस्मार हरिमव्ययम् ॥ ६. ५२ ॥

तत्राऽऽजगाम भगवानदृश्यः पुरुषोत्तमः ।
वज्रमध्ये प्रविश्याऽसौ संस्थितो भगवान् हरिः ॥ ६. ५३ ॥

अपां फेनं तदाऽपश्यत्समुद्रे पर्वतोपमम् ।
नाऽयं शुष्को न चार्द्रोऽयं न च शस्त्रमिदं तथा ॥ ६. ५६ ॥

अपां फेनं तदा शक्रो जग्राह किल लीलया ।
परां शक्तिं स सस्मार भक्त्या परमया युतः ॥ ६. ५७ ॥

6.51. அம்மகாத்மாவின் வரதானத்தையும் அந்த நேரம் இரவாகவோ பகலாகவோ இல்லாமல் கோரமான அந்திப் பொழுதாயிருப்பதையும் எண்ணிப்பார்த்தான்.

6.52. 'இவன் என்றல் இப்பொழுதே என் பலத்தைக் கொண்டு கொல்லப்படவேண்டும்; இதில் சந்தேகமில்லை' என்று மனதில் தீர்மானித்து மாறுபாடற்ற ஹரியை தியானித்தான்.

6.53. அங்கு காணப்படாமலே புருஷோத்தமராகிய பகவான் எழுந்தருளி வஜ்ராயுதத்தின் மத்தியில் புகுந்துறைந்தார்.

6.56–57. அப்பொழுது ஸமுத்ரத்தில் நீரின் நுரை மலைபோல் எழக்கண்டான். 'இது ஈரமுமன்று உலர்ந்ததும் அன்று; இது ஆயுதமுமன்று' என்று எண்ணிக்கொண்டு இந்திரன் விளையாட்டாக அதைக் கையிலெடுத்தான். பரம பக்தியுடன் பராசக்தியை தியானித்தான்.

स्मृतमात्रा तदा देवी स्वांशं फेने न्यधापयत्।
वज्रं तदावृतं तत्र चकार हरिसंयुतम् ॥ ६. ५८ ॥

फेनावृतं पविं तत्र शक्रश्चिक्षेप तं प्रति।
सहसा निपपाताशु वज्राहत इवाऽचलः ॥ ६. ५९ ॥

वासवस्तु प्रहृष्टात्मा बभूव निहते तदा।
देवीं संपूजयामास यत्प्रसादाद्धतो रिपुः ॥ ६. ६० ॥

विष्णुं त्रिभुवनश्रेष्ठं पूजयामास वासवः।
ततो हते महावीर्ये वृत्रे देवभयंकरे ॥ ६. ६५ ॥

इत्थं वृत्रः पराशक्ति-प्रवेशयुतफेननः।
तया कृतविमोहाच्च शक्रेण सहसा हतः ॥ ६. ६७ ॥

6.58. தியானித்தவுடன் தேவியானவள் தன்னுடைய அம்சத்தை அந்நுரையில் புகுத்தினுள். ஹரி புகுந்துறையும் வஜ்ராயுதத்தை இந்திரன் நுறையால் மறைத்தான்.

6.59. நுரையால் மூடப்பட்ட வஜ்ராயுதத்தை இந்திரன் விருத்ரன் மேல் எறிந்தான். வஜ்ரத்தால் தாக்குண்ட மலையைப் போல் அவன் வீழ்ந்தான்.

6.60. அவன் கொல்லப்பட்டதால் இந்திரன் மன மகிழ்ந்து எவளுடைய அருளால் சத்துரு கொல்லப்பட்டானே அந்தத் தேவியை நன்கு பூஜித்தான்.

6.65. தேவர்களுக்குப் பயத்தை விளைவித்தவனும் வீரியம் மிக்கவனுமான விருத்ரன் ஒழிந்தபின் இந்திரன் மூவ்வுலகிலும் சிறந்தவரான விஷ்ணுவையும் பூஜித்தான்.

6.67. இவ்வாறு பராசக்தி நுரையினுட்புகுந்துறைந்ததாலும் விருத்ரன் மனதை மயக்கியதாலும் இந்திரனுல் அவன் விரைவில் கொல்லப்பட்டான்.

ततो वृत्रनिहन्त्रीति देवी लोकेषु गीयते।

शक्रेण निहतत्वाच्च शक्रेण हत उच्यते ॥ ६. ६८ ॥

॥ इति श्रीदेवीभागवते षष्ठस्कन्धे षष्ठोऽध्यायः ॥

॥ वृत्रासुरकथा समाप्ता ॥

6.68. அதனால் தேவியானவள் விருத்திரனைக் கொன்றவள் (வ்ருத்ரநிஹந்த்ரீ) என உலகங்களில் போற்றப்படுகிறாள். இந்திரனால் கொல்லப்பட்டதால் இந்திரனும் விருத்ரனைக் கொன்றவன் எனக் கூறப்படுகிறான்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஆறாவது
ஸ்கந்தத்தில் ஆறாவது அத்தியாயம் முற்றும்.

விருத்ராஸுரன் கதை முற்றும்.

॥ नहुषचरित्रम् ॥ २३ ॥

व्यास उवाच —

त्वष्टा तु निहतं श्रुत्वा पुत्रमिन्द्रेण भारत ।

रुरोद दुःखसन्तप्तो निर्वेदमगमत्पुनः ॥

मेरोः शिखरमास्थाय तपस्तेपे सुदुष्करम् ॥ ७. १६ ॥

जनमेजय उवाच —

हत्वा त्वाष्ट्रं सुरेशोऽथ कामवस्था-मवाप्तवान् ।

सुखं वा दुःखमेवाग्रे तन्मे ब्रूहि पितामह ॥ ७. १७ ॥

23. நஹுஷ சரித்திரம்

வியாஸர் கூறியது—

7.16. பாரதா! த்வஷ்டா தன் புத்திரன் இந்திரனல் கொல்லப்பட்டதைக் கேட்டு துக்கத்தால் கொதித்து வாய் விட்டழுதார். பின்பு வைராக்கியத்தையடைந்து மேரு சிகரம் சென்று செயற்கரிய தவத்தைச் செய்தார்.

ஜனமேஜயர் கூறியது—

7.17. பிதாமஹரே! த்வஷ்டாவின் புத்திரனைக் கொன்ற தேவராஜன் எவ்விதமான மனோநிலையையடைந்தான்? முதலில் இன்பமடைந்தானு துன்பமடைந்தானு, அதைக் கூறும்.

व्यास उवाच —

किं पृच्छसि महाभाग सन्देहः कीदृशस्तव ।
अवश्यमेव भोक्तव्यं कृतं कर्म शुभाशुभम् ॥ ७. १८ ॥

न स्वास्थ्यं प्राप गेहेऽसौ सर्वसिद्धिसमन्विते ।
पौलोमी तं सभाहीनं दृष्ट्वा प्रोवाच वासवम् ॥ ७. ३८ ॥

किं प्रभोऽद्य भयार्तोऽसि मृतस्ते दारुणो रिपुः ।
का चिन्ता वर्तते कान्त तव शत्रुनिषूदन ॥ ७. ३९ ॥

इन्द्र उवाच —

ब्रह्महत्या भयाद्राज्ञि बिभेमि सततं गृहे ।
किं करोमि क्व गच्छामि क्व शर्म मम जायते ॥ ७. ४३ ॥

வியாஸர் கூறியது—

7.18. மகானுபாவனே! என்ன வினவுகின்றாய்? உனக்கு என்ன சந்தேகம் தோன்றிற்று? செய்த கருமம் நல்லதாயினும் கெட்டதாயினும் பயனை அனுபவித்தே தீர வேண்டும்.

7.38. இந்திரன் எல்லாச் செல்வங்களும் நிறைந்த தன் மாளிகையில் நிம்மதியைக் காணவில்லை. சபைக்குச் செல்லாமலிருக்கும் கணவனைப்பார்த்து இந்திராணி பின் வருமாறு கூறினாள்.

7.39. 'உம்முடைய கொடிய சத்துருதான் இறந்து விட்டானே? பிரபுவே! நீர் ஏன் இப்பொழுது பயத்தால் பீடிக்கப்படுகிறீர்? பகையை வெல்பவரே! நாதா! உமக் கென்ன கவலை?'

இந்திரன் கூறியது—

7.43 அரசியே! பிரம்மஹத்திக்கு எப்பொழுதும் அஞ்சி நான் வீட்டிலிருந்தும் நடுங்குகிறேன். என்ன செய்வேன்? எங்கு செல்வேன்? எங்கு போனால் எனக்குச் சுகமுண் டாகும்?

व्यास उवाच —

इत्युक्त्वा वचनं शक्रः प्रियां परमकातराम् ।
निर्जगाम गृहान्मन्दो मानसं सर उत्तमम् ॥ ७. ४५ ॥

पद्मनाले प्रविष्टोऽसौ भयार्तः शोककर्शितः ।
प्रतिच्छन्नो वसत्यप्सु चेष्टमान इवोरगः ॥ ७. ४७ ॥

ततः प्रनष्टे देवेन्द्रे ब्रह्महत्याभयार्दिते ।
सुराश्चिन्तातुराश्चासन्नुत्पाताश्चाभवन्नथ ॥ ७. ४८ ॥

अराजकं जगत्सर्वमभिभूत-मुपद्रवैः ।
अवर्षणं तदा जातं पृथिवी क्षीणवैभवा ॥ ७. ५० ॥

एवं त्वराजके जाते देवता मुनयस्तथा ।
विचार्य नहुषं चक्रुः शक्रं सर्वे दिवौकसः ॥ ७. ५१ ॥

வியாஸர் கூறியது—

7.45. மிகவும் பயந்த மனைவியிடம் இவ்வாறு கூறி விட்டு மதி குறைந்த இந்திரன் வீட்டைவிட்டு உத்தமமான மானஸ ஸரஸிற்குச் சென்றான்.

7.47. பயத்தாலும் சோகத்தாலும் பீடிக்கப்பட்டு ஒரு தாமரைக் கொடியில் புகுந்தொளிந்து பாம்புபோல் தண்ணீரில் வசித்து வந்தான்.

7.48. பிரம்மஹத்தி பயத்தால் பீடிக்கப்பட்ட தேவேந்திரன் காணாமற் போனபின் தேவர் கவலை மேலிட்டவர்களாயினர். கொடிய சகுனங்கள் தோன்றலாயின.

7.50. உலகம் முழுதும் ஆட்சியின்மையால் உபத்ரவங்களால் பீடிக்கப்பட்டதாயிற்று. மழை பெய்யவில்லை. பூமியும் செழிப்பையிழந்தது.

7.51. தேவர்களும் முனிவர்களும் ஆட்சியின்மையைக் குறித்து ஆலோசித்து தேவர்களையாளும் இந்திர பதவியில் நஹுஷனை நியமித்தார்கள்.

संप्राप्य नहुषो राजा धर्मिष्टोऽपि रजोबलात्।
बभूव विषयासक्तः पंचबाणशराहतः ॥ ७. ५२ ॥

अप्सरोभिर्वृतः क्रीडन् देवोद्यानेषु भारत।
शक्रपत्नीगुणाञ्छ्रुत्वा चकमे तां स पार्थिवः ॥ ७. ५३ ॥

ऋषीनाह किमिन्द्राणी नोपगच्छति मां किल।
भवद्भिश्चामरैः सर्वैः कृतोऽहं वासवस्त्विह ॥ ७. ५४ ॥

प्रेषयध्वं सुराः कामं सेवार्थं मम वै शचीम्।
प्रियं चेन्मम कर्तव्यं सर्वथा मुनयोऽमराः ॥ ७. ५५ ॥

तच्छ्रुत्वा दुर्मना देवी बृहस्पतिमुवाच ह।
रक्ष मां नहुषाद्ब्रह्मंस्तवाऽस्मि शरणं गता ॥ ७. ६० ॥

7.52. நஹுஷன் ஆட்சிப்பீடத்தை அடைந்தபின் தருமத்தில் நிலைத்தவனுயிருந்தும் ரஜோகுண மேலிட்டால் சிற்றின்பங்களில் பற்று மிக்கவனுய்க் காமனுடைய கணை களால் பீடிக்கப்பட்டவனுன்.

7.53. பாரதா! தேவலோக உத்யானங்களில் அப்ஸர ஸ்த்ரீகளால் சூழப்பட்டு விளையாடுபவனுய், இந்திரனுடைய மனைவியின் குணங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு அவளிடமும் ஆசை கொள்ளலானுன்.

7.54–55. அவன் ரிஷிகளிடம் கேட்டான்: 'ஏன் இந்திராணி என்னிடம் வருவதில்லை? உங்களாலும் எல்லா தேவர்களாலும் நான் இங்கு இந்திரனுக்கப்பட்டேன். என்னுடைய சேவைக்கு இந்திரபத்தினியான சசிதேவியும் வரும்படி ஏவப்படவேண்டும். முனிவர்களே! தேவர்களே! நீங்கள் எப்படியும் எனக்கிஷ்டமானதைச் செய்ய வேண்டும்.'

7.60. அதைக் கேள்விப்பட்ட சசிதேவி மனங்கலங்கி பிருஹஸ்பதியை நாடி 'நான் உங்களைச் சரணடைகின்றேன். நஹுஷனிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று கூறினுள்.

बृहस्पतिरुवाच —

न भेतव्यं त्वया देवि नहुषात्पापमोहितात् ।
स्वस्था भव पृथुश्रोणि न त्यक्ष्ये त्वां कदाचन ॥ ७. ६२ ॥

त्वमाराधय पौलोमि देवीं भगवतीं शिवाम् ।
दर्शयिष्यति ते नाथं देवी विगतकल्मषम् ॥ ८. ५२ ॥

आराधिता जगद्धात्री नहुषं वारयिष्यति ।
मोहयित्वा नृपं स्थानात्पातयिष्यति चाम्बिका ॥ ८. ५३ ॥

इत्युक्ता सा तदा तेन पुलोमतनया नृप ।
जग्राह मन्त्रं विधिवद्गुरोर्देव्यः ससाधनम् ॥ ८. ५४ ॥

विद्यां प्राप्य गुरोर्देवी देवीं श्रीभुवनेश्वरीम् ।
सम्यगाराधयामास बलिपुष्पार्चनैः शुभैः ॥ ८. ५५ ॥

பிருஹஸ்பதி கூறியது—

7.62. 'தேவி! பாவத்தால் மதிகலங்கிய நஹுஷனிடம் நீ பயப்பட வேண்டாம். கவலையில்லாமலிரு. நான் உன்னை ஒரு பொழுதும் விட்டு விடமாட்டேன்.

8.52. 'பௌலோமி! நீ மங்களவடிவினளான பகவதி தேவியை வழிபடு. பாவம் நீங்கிய உனது பர்த்தாவை தேவியானவள் உனக்குக் காட்டுவிப்பாள்.

8.53. 'ஆராதிக்கப்பட்ட ஜகதம்பிகை நஹுஷனை உன்னையணுகாமற் செய்வாள். ஆட்சிப்பதவியிலிருக்கும் அவனை மயக்கி அந்தப்பதவியிலிருந்து அவனை வீழ்த்துவாள்.'

8.54. அரசே! இப்படி கூறப்பெற்ற புலோம புத்திரி முறைப்படி குருவிடமிருந்து தேவியின் மந்திரத்தை, அதை அனுஷ்டிக்கும் வழியுடன் கற்றுக் கொண்டாள்.

8.55. குருவிடமிருந்து வித்தையைப் பெற்று புவனேசுவரி தேவியை சுபமான புஷ்பார்ச்சனையுடனும் நிவேதனத்துடனும் நன்கு பூஜித்தாள்.

त्यक्तान्यभोगसंभारा तापसी वेषधारिणी ।
चकार पूजनं देव्याः प्रियदर्शनलालसा ॥ ८. ५६ ॥

कालेन कियता तुष्टा प्रत्यक्षं दर्शनं ददौ ।
सौम्यरूपधरा देवी वरदा हंसवाहिनी ॥ ८. ५७ ॥

कोटिसूर्यप्रतीकाशा चन्द्रकोटि-सुशीतला ।
विद्युत्कोटि समानाभा चतुर्वेद-समन्विता ॥ ८. ५८ ॥

पाशांकुशाभयवरान् दधती निजबाहुभिः ।
आपादलंबिनीं स्वच्छां मुक्तामालां च बिभ्रती ॥ ८. ५९ ॥

प्रसन्नस्मेरवदना लोचनत्रयभूषिता ।
आब्रह्मकीटजननी करुणामृतसागरा ॥ ८. ६० ॥

8.56. மற்றெல்லா போக சாதனங்களேயும் விட்டுத் தவ வேஷம் பூண்டு பிரியமான தேவியை தரிசிக்கும் அவா வுடன் பூஜை செய்யலானுன்.

8.57. சிறிது காலத்தில் சந்தோஷமடைந்த தேவி யானவள் அழகிய ரூபந்தரித்து வரமருள்பவளாய் ஹம்ஸ வாகனத்தின் மேல் தரிசனமளித்தாள்.

8.58. கோடி சூரியப்பிரகாசமும் கோடி சந்திரனு டைய குளிர்ச்சியும் கோடி மின்னல் ஒளியும் சேர்ந்தாற் போல் நான்கு வேதங்களுடன் கூடினவளாய்;

8.59. தனது கைகளில் பாசம் அங்குசம் அபய முத்திரை வரமுத்திரை ஆகியவற்றைத் தரிப்பவளாய், பாதம்வரை நீண்டு தொங்கும் வெண்மையான முத்துமாலே யணிந்தவளாய்;

8.60. புன் முறுவலால் மலர்ந்து முக்கண்களால் அலங்கரிக்கப்பட்ட முகத்துடன் பிரும்மாமுதல் புழுவரை யுள்ள உயிர்களின் தாயாகிக் கருணேயெனும் அமுதக் கடல் போன்றவளாய்;

अनन्तकोटिब्रह्माण्डनायिका परमेश्वरी ।
सौम्यानन्तरसै-र्युक्तस्तनद्वयविराजिता ॥ ८. ६१ ॥
सर्वेश्वरी च सर्वज्ञा कूटस्थाऽक्षररूपिणी ।
तामुवाच प्रसन्ना सा शक्रपत्नीं कृतोद्यमाम् ॥ ८. ६२ ॥

देव्युवाच —

वरं वरय सुश्रोणि वांछितं शक्रवल्लभे ।
ददाम्यद्य प्रसन्नास्मि पूजिता सुभृशं त्वया ॥ ८. ६३ ॥

शचीदेव्युवाच —

वांछामि दर्शनं मातः पत्युः परमदुर्लभम् ।
नहुषाद्भयनाशं च स्वपदप्रापणं तथा ॥ ८. ६६ ॥

8.61. எண்ணிலாக் கோடி பிரும்மாண்ட நாயகியாய் பரமேசுவரியாய் மனதிற்கினியவளாய் அளவுகடந்த இன்சுவைகளுடன் கூடிய இரு நகில்களுடன் பிரகாசிப்பவளாய்;

8.62. அனைத்தையும் ஆள்பவளாய், அனைத்தையும் அறிபவளாய், அக்ஷரரூபிணியாய், மறைந்துறைபவளாய் உள்ள தேவியானவள் நன் முயற்சியுடன் கூடிய இந்திர பத்தினிக்குப் பிரசன்னமாகிக் கூறுவாள்.

தேவி கூறியது—

8.63. அழகிய இடைபடைத்த இந்திரபத்தினியே! விரும்பிய வரனைக்கேள். உன்னால் நன்கு பூஜிக்கப்பட்டு மகிழ்வுற்ற நான் இப்பொழுது அதை அளிக்கிறேன்.

சசிதேவி கூறியது—

8.66. தாயே! அடைதற்கு மிகவும் கடினமாயிருக்கும் என் நாயகனுடைய தரிசனத்தை நான் விரும்புகிறேன். நஹுஷனிடமிருந்து ஏற்பட்டிருக்கும் பயத்தைப் போக்கி மீண்டும் எங்கள் பதவியை அடையும்படி அருள் புரிய வேண்டும்.

देव्युवाच —

गच्छ त्वमनया दूत्या सार्द्धं श्रीमानसं सरः।
यत्र मे मूर्तिरचला विश्वकामाभिधामता ॥ ८. ६७ ॥

तत्र पश्यसि शक्रं त्वं दुःखितं भयविह्वलम्।
मोहयिष्यामि राजानं कालेन कियता पुनः ॥ ८. ६८ ॥

स्वस्था भव विशालाक्षि करोमि तव चेप्सितम्।
भ्रंशयिष्यामि च भूपालं मोहितं त्रिदशासनात् ॥ ८. ६९ ॥

व्यास उवाच —

देवीदूती तां गृहीत्वा शक्रपत्नीं त्वरान्विता।
प्रापयामास सान्निध्यं स्वपत्युः परमेश्वरीम् ॥ ८. ७० ॥

தேவி கூறியது—

8.67. எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்வதாய்க் கருதப்படும் எனது அசலமான மூர்த்தி எங்கு உளதோ அந்த ஸ்ரீமானஸம் எனும் நீர்ப்பரப்பிற்கு இந்த உனது தூதியுடன் செல்வாயாக.

8.68. பயத்தால் நடுங்கி துக்கத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் இந்திரனை அங்கு நீ காண்பாய். சிறிது காலத்தில் அரசனாகிய நஹுஷனையும் மீண்டும் புத்திமயங்கச் செய்கிறேன்.

8.69. விசாலாக்ஷி! உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன். கவலையை விடு. புத்திமயங்கிய நஹுஷ பூபதியை, தேவலோக ஆட்சிப் பீடத்திலிருந்து விழும்படி செய்கிறேன்.

வியாஸர் கூறியது—

8.70. தேவநாயகியாகிய இந்திரபத்தினியை விரைவில் அழைத்துப் போய் அவளுடைய தூதியானவள் அவளுடைய பதியின் முன்னர் சேர்ப்பித்தாள்.

सा दृष्ट्वा तं पतिं बाला सुरेशं गुप्तसंस्थितम् ।
मुदिताऽभूद्वरं वीक्ष्य बहुकालाऽभिवांछितम् ॥ ८. ७१ ॥

तां वीक्ष्य विपुलापांगीं रहः शोकसमन्विताम् ।
आखण्डलः प्रियां भार्यां विस्मितश्चाब्रवीत्तदा ॥ ९. १ ॥

कथमत्रागता कान्ते कथं ज्ञातस्त्वयाह्यहम् ।
दुर्ज्ञेयः सर्वभूतानां संस्थितोऽस्मि शुभानने ॥ ९. २ ॥

शच्युवाच —

देवदेव्याः प्रसादेन ज्ञातोस्यद्य भवानिह ।
पुनस्तस्याः प्रसादेन प्राप्तास्मि त्वां दिवस्पते ॥ ९. ३ ॥

8.71. அவளும் மறைந்து கொண்டிருந்தவரும் தான் காண மிகவும் ஏங்கிக் கொண்டிருந்தவருமான தேவ நாயகனுகிய தன் பதியைக் கண்டு மகிழ்வெய்தினுள்.

9.1. இந்திரனும் சோகத்திலாழ்ந்தவளும் தன்னைக் கண்டதால் மலர்ந்த கண்ணுடையவளுமான அன்பு மிக்க மனைவியை இரகசியத்தில் சந்தித்து ஆச்சரியம் மிகுந்தவனுய்ப் பின்வருமாறு கூறினுன்.

9.2. 'பிரியே! நீ எப்படி இங்கு வந்தாய்? என்னை எப்படிக் கண்டு பிடித்தாய்? அழகிய முகத்தினளே! எல்லா பிராணிகளுக்கும் கண்டு கொள்ள முடியாதவனுகவல்லவோ நான் இருக்கிறேன்.'

சசிதேவி கூறியது—

9.3. தேவதேவியின் அருளால் தங்களை நான் இங்கு காணலானேன். தேவநாயகா! அவளுடைய பிரஸாதத்தால் தான் தங்களை நான் மீண்டும் அடைந்துள்ளேன்.

नहुषो नाम राजर्षिः स्थापितो भवदासने।
त्रिदशैर्मुनिभिश्चैव स मां बाधति नित्यशः ॥ ९. ४ ॥

तस्माच्चिन्तास्ति महती नार्यहं वशवर्तिनी।
अनाथा किं करिष्यामि विपरीते विधौ विभो ॥ ९. ११ ॥

इन्द्र उवाच —

उपायं प्रब्रवीम्यद्य तं कुरुष्व वरानने।
शीलं ते दुःखिते काले परित्रातं भविष्यति ॥ ९. १३ ॥

यदा त्वां नहुषो राजा बलादाकर्षयेत् खलः।
तदा त्वां समयं कृत्वा गुप्तं वंचय भूपतिम् ॥ ९. १६ ॥

9.4. தங்களுடைய ஆட்சிப் பீடத்தில் நஹுஷன் என்ற ராஜரிஷி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறார். தேவர்கள் மூலமாகவும் முனிவர்கள் மூலமாகவும் அவர் என்னை வசமாக்கிக் கொள்ள எப்பொழுதும் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்.

9.11. பிரபோ! அப்படியகப்பட்டுக் கொண்டு நான் மிகவும் கவலையில் ஆழ்ந்துள்ளேன். நாதனிடமிருந்து பிரிந்துள்ள பெண் பிள்ளையாகிய நான் விதியின் விபரீதத்தில் என்ன செய்வேன்?

இந்திரன் கூறியது—

9.13. அழகிய முகத்தினளே! இப்பொழுது நான் ஒரு வழி சொல்லுகிறேன். அதன்படி செய்வாயானால் துக்கம் மிகுந்த காலத்தில் உன்னுடைய சீலம் காக்கப் பட்டதாகும்.

9.16. புத்திகெட்ட நஹுஷ மகாராஜா எப்பொழுது உன்னை பலத்தால் இழுக்கக் கருதுகிறானோ அப்பொழுது நீ அவ்வரசனை ஒரு தந்திரத்தைச் செய்து இரகசியத்தில் ஏமாற்றிவிடு.

एकान्ते तत्समीपे त्वं गत्वा वद मदालसे ।
ऋषियानेन दिव्येन मामुपेहि जगत्पते ।। ९. १७ ।।

एवं तव वशे प्रीता भविष्यामीति मे व्रतम् ।
इति तं वद सुश्रोणि तदा तु परिमोहितः ।। ९. १८ ।।

कामान्धः स मुनीन् याने योजयिष्यति पार्थिवः ।
आवश्यं तापसो भूपं शापदग्धं करिष्यति ।। ९. १९ ।।

साहाय्यं जगदम्बा ते करिष्यति न संशयः ।
जगदम्बापदस्मर्तुः संकटं न कदाचन ।। ९. २० ।।

यदि जायेत तच्चापि ज्ञेयं तत्स्वस्तये किल ।
तस्मात्सर्वप्रयत्नेन मणिद्वीपाधिवासिनीम् ।।
भज त्वं भुवनेशानीं गुरुवाक्यानुसारतः ।। ९. २१ ।।

9.17–19. ஒருவருமில்லாத போது நீ அவனிடம் சென்று 'அரசே! ரிஷிகள் பல்லக்குத் தூக்கிவர நீங்கள் என்னிடம் வந்தால் நான் உங்களிடம் அன்பு கொண்டு உங்கள் வசமாவேன் என்பது என் விரதம்' என்று கூறு. இப்படி நீ கூறுவதைக் கேட்டு மதிமயங்கிய அவ்வரசன் காமத்தால் குருடனாகி முனிவர்களைப் பல்லாக்குத் தூக்கச் செய்வான். அப்பொழுது அத்தவசிகள் அவ்வரசனைச் சபித்து நிச்சயமாய் எரித்து விடுவார்கள்.

9.20. ஜகதம்பிகை உனக்குச் சகாயம் செய்வாள். இதில் சந்தேகமில்லை. ஜகதம்பிகையின் திருவடிகளை நினைப்பவர்களுக்கு ஒரு பொழுதும் சங்கடமில்லை.

9.21. ஒரு சமயம் உண்டானாலும் அதுவும் நன்மையாகவே முடியும். ஆகையால் முழு முயற்சியுடன் குருவின் உபதேசப்படி மணித்துவீபத்தில் எழுந்தருளியிருக்கும் புவனேசுவரியை நீ பூஜிப்பாயாக.

व्यास उवाच —

इत्याख्याता शची तेन जगाम नहुषं प्रति ।
नहुषस्तां समालोक्य मुदितो वाक्यमब्रवीत् ॥ ९. २३ ॥

स्वागतं सत्यवचनैस्त्वदधीनोऽस्मि कामिनि ।
कार्यं वद विशालाक्षि करिष्यामि तव प्रियम् ॥ ९. २५ ॥

शच्युवाच —

मनोरथोऽस्ति मे देव शृणु चित्तेऽधुना विभो ।
वांछितं कुरु कल्याण त्वद्वशाऽहमतः परम् ॥ ९. २७ ॥

नहुष उवाच —

अवश्यमेव कर्तव्यं वचनं तव सुन्दरि ।
शपामि सुकृतेनाऽहं यज्ञदानकृतेन वै ॥ ९. ३२ ॥

வியாஸர் கூறியது—

9.23. இப்படி இந்திரனால் கூறப்பெற்ற சசிதேவி யானவள் நஹுஷனிடம் சென்றாள். நஹுஷன் அவளைக் கண்டு களிப்புடன் பின்வருமாறு கூறினான்.

9.25. 'உன் வரவு நல்வரவு. பிரியமானவளே! உண்மையில் நான் உனக்கு அடிமை. விசாலாக்ஷி! உனக்குப் பிரியமான எந்தக் காரியம் செய்ய வேண்டுமோ அதைச் சொல், செய்கிறேன்.'

சசிதேவி கூறியது—

9.27. மங்களவடிவினரே! பிரபுவே! என் சித்தத்திலுள்ள விருப்பத்தைக் கூறுகிறேன். அதைப் பூர்த்தி செய்யும். அதன்பின் நான் உங்களுக்கு வசம்.

நஹுஷன் கூறியது—

9.32. சுந்தரி! உன் வார்த்தையை அவசியம் செய்து முடிப்பேன். நான் செய்த நற்கருமங்களாகிய யக்ஞம், தானம் ஆகியவற்றின் மேல் ஆணை.

शच्युवाच —

इन्द्रस्य हरयो वाहा गजश्चैव रथस्तथा ।
इच्छाम्यहमपूर्वं वै वाहनं ते सुराधिप ॥ ९. ३५ ॥

यन्न विष्णोर्न रुद्रस्य नाऽसुराणां न रक्षसाम् ।
वहन्तु त्वां महाराज मुनयः संशितव्रताः ॥ ९. ३६ ॥

सर्वदेवाधिकं त्वां वै जानामि वसुधाधिप ।
तेन ते तेजसो वृद्धिं वांछाम्यहमतन्द्रिता ॥ ९. ३७ ॥

नहुष उवाच —

सत्यमुक्तं त्वया तन्वि वाहनं रुचिरं मम ।
करिष्यामि सुकेशान्ते वचनं तव सर्वथा ॥ ९. ४० ॥

சசி தேவி கூறியது—

9.35. இந்திரனுக்குக் குதிரைகளும், யானைகளும், தேர்களும் வாகனங்கள். தேவநாயகா! நான் அபூர்வமான வாகனத்தை இச்சிக்கிறேன்.

9.36. மகாராஜரே! விஷ்ணுவுக்கும், ருத்திரனுக்கும் அசுரர்களுக்கும், அரக்கர்களுக்கும் எவர்களுக்குமில்லாத வகையில் தவத்திற்சிறந்த முனிவர்கள் உங்களைச் சுமந்து வரட்டும்.

9.37. அரசே! உங்களை நான் எல்லா தேவர்களுக்கும் மேம்பட்டவரென அறிகிறேன். அதனால் உங்கள் பெருமை யின் விருத்தியை நான் முழுமனத்துடன் விரும்புகிறேன்.

நஹுஷன் கூறியது—

9.40. நீ கூறியது உண்மை. அந்த வாஹனம் எனக்குப் பிரியமே. கேசம் அழகியவளே! எப்படியும் உன் வார்த்தைப் படியே செய்கிறேன்.

सप्तर्षयो मां वक्ष्यन्ति सर्वे देवर्षयस्तथा ।
समर्थं त्रिषु लोकेषु ज्ञात्वा मां तपसाऽधिकम् ॥ ९. ४२ ॥

व्यास उवाच —

इत्युक्त्वा तां सुसन्तुष्टो विससर्ज हरिप्रियाम् ।
आरुह्य शिबिकां रम्यां संस्थितस्त्वरयान्वितः ॥ ९. ५० ॥

वाहान् कृत्वा मुनीन् दिव्यान् सर्प सर्पेति चाऽब्रवीत् ।
कामार्तः सोऽस्पृशन्मूढः पादेन मुनिमस्तकम् ॥ ९. ५१ ॥

अगस्तिं तापसश्रेष्ठं लोपामुद्रापतिं तदा ।
वातापि-भक्षकर्तारं समुद्रस्यापि शोषकम् ॥ ९. ५२ ॥

9.42. ஸப்தரிஷிகளும் எல்லா தேவரிஷிகளும் என்னைத் தவத்தால் மேம்பட்டவனெனவும், மூவுலகிலும் திறமை வாய்ந்தவனெனவும் உணர்ந்து தாங்கிவருவார்கள்.

வியாஸர் கூறியது—

9.50. இங்ஙனம் கூறி இந்திரபத்தினியைச் சந்தோஷத்துடன் அனுப்பிவிட்டு விரைவிலேயே அழகிய சிவிகையிலேறிக் கொண்டு புறப்பட்டான்.

வியாஸர் கூறியது—

9.51–52. தெய்வீக சக்திவாய்ந்த முனிவர்களைச் சிவிகையைச் சுமப்பவர்களாகச் செய்து கொண்டு '(ஸர்ப்ப, ஸர்ப்ப) போங்கள், போங்கள்' என்று கூறினான். காமத்தால் பீடிக்கப்பட்ட அம்மூடன் தவசிரேஷ்டரும், லோபாமுத்திரையின் கணவரும் வாதாபியை பக்ஷித்தவரும், ஸமுத்திரத்தை வற்றடித்தவருமான அகஸ்திய முனிவரின் தலையைத் தன் பாதத்தால் தொடவும் செய்தான்.

अगस्त्य उवाच —

सर्पो भव दुराचार वने घोरवपुर्महान्।
दृष्ट्वा युधिष्टिरं नाम तव मोक्षो भविष्यति ॥ ९. ५५ ॥

व्यास उवाच —

एवं शप्तः स राजर्षिः स्तुत्वा तं मुनिसत्तमम्।
स्वर्गात्पपात सहसा सर्परूपधरोऽभवत् ॥ ९. ५७ ॥

देवाश्च मुनयो दृष्ट्वा नहुषं पतितं भुवि।
जग्मुः सर्वेऽपि तत्रैव यत्रेन्द्रः सरसि स्थितः ॥ ९. ६० ॥

तमाश्वास्य सुराः सर्वे मुनिभिः सहितास्तथा।
स्वर्गे समानयामासु-र्मानपूर्वं शचीपतिम् ॥ ९. ६१ ॥

அகஸ்தியர் கூறியது—

9.55. ஆசாரங் கெட்டவனே! கொடியதும் பருத்தது மான உடல் படைத்த ஸர்ப்பமாகிக் காட்டில் போயிரு. அங்கே பிரசித்திபெற்ற யுதிஷ்டிரரைக் காணும் பொழுது உனக்கு விடுதலை ஏற்படும்!

வியாஸர் கூறியது—

9.57. இங்ஙனம் சபிக்கப்பட்ட அந்த ராஜரிஷியாகிய நஹுஷன் அம்முனிபுங்கவரைத் துதித்துவிட்டு ஸர்ப் பரூபத்தை எடுத்துக் கொண்டு சுவர்க்கத்திலிருந்து கீழே விழுந்தான்.

9.60. நஹுஷன் பூமியில் விழுந்து விட்டதைக் கண்ட எல்லா தேவர்களும் முனிவர்களும் எங்கு இந்திரன் இருந்தானோ அந்த ஸரஸ்ஸிற்குச் சென்றனர்.

9.61. முனிவர்களுடன் கூடிய தேவர்களனைவரும் சசீபதியாகிய இந்திரனுக்கு ஆறுதல் கூறி மரியாதையுடன் சுவர்க்கத்திற்கு அழைத்து வந்தனர்.

समागतं ततः शक्रं सर्वे ते मुनयः सुराः ।
स्थापयित्वाऽऽसने पश्चादभिषेकं दधुः शिवम् ॥ ९. ६२ ॥

एतत्ते सर्वमाख्यातं वृत्रासुरवधाश्रयम् ।
यत्पृष्टोऽहं त्वया राजन् कथानकमनुत्तमम् ॥ ९. ६६ ॥

9.62. அழைத்துவரப்பெற்ற அவனை எல்லா தேவர்களும் முனிவர்களும் ஆஸனத்திலிருத்தி மங்களமான அபிஷேகத்தைச் செய்வித்தனர்.

9.66. அரசே! விருத்ராசுர வதத்தைப்பற்றிய எந்த சிறந்த கதையைக் கூறும்படி நீ கேட்டாயோ அது அனைத்தையும் இவ்வாறாக உனக்குக் கூறியாயிற்று.

॥ इति श्रीदेवीभागवते षष्ठस्कन्धे नवमोऽध्यायः ॥

॥ नहुषचरित्रं समाप्तम् ॥

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதம் ஆறாவது
ஸ்கந்தத்தில் ஒன்பதாவது அத்தியாயம் முற்றும்.

நஹுஷசரித்திரம் முற்றும்.

॥ कर्मगतिवर्णनम् ॥ २४ ॥

जनमेजय उवाच —

कथितं चरितं ब्रह्मञ्छक्रस्याद्भुतकर्मणः ।
स्थानभ्रंशस्तथा दुःखप्राप्तिरुक्ता विशेषतः ॥ १०. १ ॥

यत्र देवाधिदेव्याश्च महिमाऽतीव वर्णितः ।
सन्देहोऽत्र ममाप्यस्ति यच्छक्रोऽपि महातपाः ॥ १०. २ ॥

देवाधिपत्य-मासाद्य दुःखहं दुःखमन्वभूत् ।
एतत्सर्वं समाचक्ष्व कारणं करुणानिधे ॥ १०. ३ ॥

24. கர்மகதிவர்ணனம்.

ஜனமேஜயர் கூறியது—

10.1. பிரம்மஸ்வரூபியே! அற்புதச்செயல் படைத்த இந்திரனுடைய சரித்திரம் கூறப்பட்டது. அவன் பதவியினின்று வீழ்ச்சியுற்றதும், துக்கமடைந்ததும் விசேஷமாய் எடுத்துரைக்கப்பட்டது.

10.2–3. அது சம்பந்தமாக தேவர்களுக்கு அதிதேவதையாய் விளங்கும் தேவியின் மகிமையும் சிறப்பாக வர்ணிக்கப்பட்டது. இதில் எனக்கொரு ஸந்தேகம் உளது. இந்திரன் மகா தபஸ்வியாகவும் துன்பத்தைத் துடைக்கக் கூடிய தேவராஜப்பதவியையடைந்தவனுகவும் இருந்தும் கூட துக்கத்தை அனுபவித்தானல்லவா? கருணாநிதியே! அதற்கென்ன காரணம் என்பதனைத்தையும் விளக்கியருளுங்கள்.

सूत उवाच —

इति पृष्टः स राज्ञा वै तदा सत्यवतीसुतः।
तमाहाऽतिप्रसन्नात्मा यथानुक्रम-मुत्तरम् ॥ १०.६ ॥

व्यास उवाच —

कर्मणस्तु त्रिधा प्रोक्ता गतिस्तत्त्वविदां वरैः।
संचितं वर्तमानं च प्रारब्धमिति भेदतः ॥ १०.८ ॥
अनेकजन्मसंजातं प्राक्तनं संचितं स्मृतम्।
सात्त्विकं राजसं कर्म तामसं त्रिविधं पुनः ॥ १०.९ ॥
क्रियमाणं च यत्कर्म वर्तमानं तदुच्यते।
संचितानां पुनर्मध्यात्समाहृत्य कियान् किल ॥ १०.१२ ॥
देहारंभे च समये कालः प्रेरयतीव तत्।
प्रारब्धं कर्मविज्ञेयं भोगात्तस्य क्षयः स्मृतः ॥ १०.१३ ॥

ஸூதர் கூறியது—

10.6. இங்ஙனம் அரசனால் வினவப்பெற்ற ஸத்தியவதீ புத்திரரான வியாஸர் மிக்க ப்ரீதியுடன் தொடர்ந்து பதிலளிக்கலானார்.

வியாஸர் கூறியது—

10.8. தத்துவமறிந்த உத்தமர்களால் கர்மங்களின் போக்கு ஸஞ்சிதம், வர்த்தமானம், ப்ராரப்தம் எனப் பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

10.9. பல பிறவிகளில் உண்டாகிய பூர்வகர்மம் ஸஞ்சிதம் எனப்படுகிறது. அக்கர்மம் மீண்டும் ஸாத்துவிகம், ராஜஸம், தாமஸம் என மூவகைப்படும்.

10.12–13. இப்பிறவியில் செய்யப்படும் கர்மம் எதுவோ அது வர்த்தமானம் எனப்படும். உடலெடுக்கும் சமயத்தில் காலத்தின் தூண்டுதலால் ஸஞ்சிதத்தின் மத்தியிலிருந்து சிறிதளவெடுத்து இவன் அனுபவித்துச் செலவழிப்பதற்கு அமைந்தது பிராரப்தம் எனப்படும்.

देवैर्मनुष्यै-रसुरै-र्यक्षगन्धर्व-किन्नरैः ।
कर्मैव हि महाराज देहारंभस्य कारणम् ॥ १०. १६ ॥

प्राणिनां देहसंबन्धे गहना कर्मणो गतिः ।
दुर्ज्ञेय सर्वथा देवै-र्मानवानां तु का कथा ॥ १०. ३४ ॥

साधूनामपि चेतांसि युगभावाद् भ्रमन्ति हि ।
पितुर्यथा ते राजेन्द्र बुद्धिर्विप्रावहेलने ॥ ११. ३२ ॥

कृता वै कलिना राजन् धर्मज्ञस्य महात्मनः ।
अन्यथा क्षत्रियो राजा ययातिकुलसंभवः ॥ ११. ३३ ॥

तापसस्य गले सर्पं मृतं कस्मादयोजयत् ।
सर्वं युगबलं राजन् वेदितव्यं विजानता ॥ ११. ३४ ॥

10.16. மகாராஜனே! தேவர்களோ, மனிதர்களோ, அசுரர்களோ, யக்ஷர்களோ. கந்தர்வர்களோ, கிந்நரர்களோ எவராயிருந்தாலும் தேக ஆரம்பத்திற்குக் கர்மமே காரணம்.

10.34. பிராணிகளுடைய தேகசம்பந்தத்தில் கர்ம கதி மறைந்து கிடக்கிறது. தேவர்களாலும் அது எவ்விதத்திலும் அறிவது கடினம். மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டுமா?

11.32. அரசசிரேஷ்டனே! ஸாதுக்களுடைய மனதும் யுகதர்மத்தினுல் மயக்கத்தையடையும் என்பது உன்னுடைய தந்தையின் புத்தியானது பிராம்மணனை அவமதித்ததிலிருந்து காணப்படும்.

11.33–34. அரசே! தருமந்தெரிந்தவராயும், மகாத்மாவாயுமிருந்த அவருடைய புத்தி கலியால் அப்படி செய்யப்பட்டது. இன்றேல், க்ஷத்திரியனுகவும், அரசனுகவும், யயாதி குலத்துதித்தவனுகவுமிருந்த அவர் தபஸ்வியின் கழுத்தில் செத்த பாம்பை எதற்காகப் போடவேண்டும்? அது எல்லாம் யுகபலம் என்று யோசித்து அறிந்து கொள்ள வேண்டியது.

जनमेजय उवाच —

कलावधर्मबहुले नराणां का गतिर्भवेत्।
यद्यस्ति तदुपायश्चे द्दयया तं वदस्व मे ॥ ११. ५६ ॥

व्यास उवाच —

एक एव महाराज तत्रोपायोऽस्ति नाऽपरः।
सर्वदोषनिरासार्थं ध्यायेद्देवीपदाम्बुजम् ॥ ११. ५७ ॥

प्रायश्चित्तं तु पापानां श्रीदेवीनाम-संस्मृतिः।
तस्मात्कलिभयाद्राजन् पुण्यक्षेत्रे वसन्नरः ॥ ११. ५८ ॥

निरन्तरं पराम्बाया नामसंस्मरणं चरेत्।
रहस्यं सर्वशास्त्राणां मया राजन्नुदीरितम् ॥ ११. ६२ ॥

ஜனமேஜயன் கூறியது—

11.56. அதர்மம் மிகுந்துள்ள கலியில் மனிதர்களுக்கு நல்ல கதியடைய உபாயமிருக்குமேயானல் அதை தயை கூர்ந்து உபதேசித்தருளல் வேண்டும்.

வியாஸர் கூறியது—

11.57. மகாராஜனே! அவ்விஷயத்தில் ஒரே உபாயந் தானுளது; அதைத்தவிர வேறு இல்லே. எல்லா தோஷங் களையும் போக்குவதற்கு தேவியின் பாத கமலத்தைத் தான் தியானம் செய்யவேண்டும்.

11.58–62. அரசே! பாவங்களுக்குப் பிராயச்சித்தம் ஸ்ரீதேவியின் நாமஸ்மரணம். ஆகையால் கலிக்கு அஞ்சி புண்ணிய க்ஷேத்திரத்தில் வசித்துக் கொண்டு இடைவிடாது பராம்பிகையின் நாமஜபம் செய்ய வேண்டும். நான் கூறிய இது ஸர்வசாஸ்திரங்களின் ரகசியம்.

अजपां नाम गायत्रीं जपन्ति निखिला जनाः।
महिमानं न जानन्ति मायाया वैभवं महत् ॥ ११. ६३ ॥

गायत्रीं ब्राह्मणाः सर्वे जपन्ति हृदयान्तरे।
महिमानं न जानन्ति मायाया वैभवं महत् ॥ ११. ६४ ॥

तपांसि पुण्यकर्माणि सापेक्षाणि महीपते।
द्रव्यशुद्धिं क्रियाशुद्धिं मनः शुद्धिमपेक्ष्य च ॥ १२. १७ ॥

पावनानि हि तीर्थानि तपांसि च व्रतानि च।
कदाचिद् द्रव्यशुद्धिः स्यात्क्रियाशुद्धिः कदाचन ॥ १२. १८ ॥

दुर्लभा मनसः शुद्धिः सर्वेषां सर्वदा नृप।
मनसस्तु चंचलं राजन्ननेक-विषयाश्रितम् ॥ १२. १९ ॥

11.63. எல்லா ஜனங்களும் பிரசித்தமான அஜபா காயத்ரியை ஜபிக்கிறுர்கள். ஆனுல் அதன் மகிமையை அறிவதில்லே. மாயையின் வைபவம் மகத்தானது.

11.64. பிராம்மணர்களெல்லோரும் இருதயமத்தியில் காயத்ரியை ஜபிக்கிறுர்கள். அதன் மகிமையை அறிவதில்லே. மாயையின் வைபவம் மகத்தானது.

12.17. அரசே! தவங்களும் புண்ணியகர்மங்களும் பயனேயளிப்பது திரவிய சுத்தியையும் க்ரியா சுத்தியையும் மனதின் சுத்தியையும் பொறுத்திருக்கிறது.

12.18. தீர்த்தங்களும் தவங்களும் விருதங்களும் அங்ஙனமே புனிதத்தையளிப்பன. சிலசமயம் திரவியசுத்தி யிருக்கும், சிலசமயம் க்ரியாசுத்தி இருக்கும்.

12.19. எல்லோருக்கும் எல்லாக் காலத்திலும் மனதின் சுத்தி அடைதற்கரிது. அரசே! பலவிஷயங்களேப் பற்றி நிற்கும் மனதோ சஞ்சலமானது.

अहिंसा-सत्य-मस्तेयं शौच-मिन्द्रियनिग्रहः।
स्वधर्मपालनं राजन् सर्वतीर्थफलप्रदम् ।। १२. २१ ।।

देवीनामानि वचसा गृह्णंस्तस्या गुणांस्तुवन्।
ध्यायंस्तस्याः पदाम्भोजं कलिदोषभयार्दितः ।। १३. ५६ ।।

एवं तु कुर्वतस्तस्य न कदाचित्कलेर्भयम्।
अनायासेन संसारान्मुच्यते पातकी जनः ।। १३. ५७ ।।

व्यास उवाच —

कामक्रोधाभिभूताश्च राजानो मुनयस्तथा।
लोभाहंकारसंयुक्ताश्चरन्ति दुश्चरं तपः ।। १४. ९ ।।

12.21. அரசே! அஹிம்சை, ஸத்தியம், கள்ளாமை, சௌசம், இந்திரியநிக்ரஹம், ஸ்வதர்மத்தைப் பரிபாலித்தல் ஆகியவை எல்லாத் தீர்த்தங்களின் பயனையும் அளிக்கக் கூடியவை.

13.56–57. தேவியின் நாமங்களை வாயால் உச்சரித்து அவளுடைய குணங்களைப் போற்றி மனதால் அவளுடைய பாத கமலங்களை தியானித்தால் கலிதோஷத்தால் பயமடைந்தவன் அதனின்று விடுபடுவான். ஒருபொழுதும் அப்படிச் செய்பவனுக்கு கலிபயமிராது. பாவஞ் செய்தவனும் வருந்துதலின்றி எளிதில் பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுவான்.

வியாஸர் கூறியது—

14.9. காமத்தாலும் கோபத்தாலும் ஆக்கிரமிக்கப் பட்டவர்களாய் அரசர்களும் முனிவர்களும் கூட இருக்கிறார்கள். லோபத்துடனும் அகங்காரத்துடனும் கூடியவர்களாய்க் கடுமையான தவத்தையுஞ் செய்கின்றனர்.

यजन्ति क्षत्रिया राजन् रजोगुणसमावृताः।
ब्राह्मणास्तु तथा राजन् न कोऽपि सत्त्वसंयुतः ॥ १४. १० ॥

ऋषिणाऽसौ निमिः शप्तस्तेन शप्तो मुनिः पुनः।
दुःखाद्दुःखतरं प्राप्तावुभावपि विधेर्बलात् ॥ १४. ११ ॥

द्रव्यशुद्धिः क्रियाशुद्धिर्मनसः शुद्धिरुज्ज्वला।
दुर्लभा प्राणिनां भूप संसारे त्रिगुणात्मके ॥ १४. १२ ॥

पराशक्तिप्रभावोऽयं नोल्लंघ्यः केनचित्क्वचित्।
यस्यानुग्रहमिच्छेत्सा मोचयत्येव तं क्षणात् ॥ १४. १३ ॥

14.10. அரசே! ரஜோகுணத்தால் சூழப்பட்டவர்களாய் க்ஷத்திரியர்கள் யாகங்களைச் செய்கிறார்கள்; அப்படியே பிராம்மணர்களும் செய்கிறார்கள்; எவரும் ஸத்துவ குணமுடையவராயில்லை.

14.11. (வசிஷ்ட) ரிஷியால் நிமி (சக்கரவர்த்தி) சபிக்கப்பட்டார்; மீண்டும் நிமியால் முனிவர் சபிக்கப்பட்டார். இருவரும் இங்ஙனம் விதியின் வலிமையால் துக்கத்தின் மேல் துக்கத்தையடைந்தனர்.

14.12. அரசே! திரவியசுத்தியும், கிரியாசுத்தியும், பிரகாசிக்கும் மனோசுத்தியும் முக்குணவடிவான இப்பிறவிச் சுழலில் உயிர்களுக்குண்டாவது துர்லபம்.

14.13. இது பராசக்தியின் மாயாப்பிரபாவம். அதை எவனாலும் எக்காலத்தும் கடக்க முடியாது. எவனுக்கு தேவி அனுக்கிரகம் செய்கிறாளோ அவனை ஒரு நொடியில் விடுவிப்பாள்.

महान्तोऽपि न मुच्यन्ते हरिब्रह्महरादयः।
पामरा अपि मुच्यन्ते यथा सत्यव्रतादयः ॥ १४. १४ ॥

तस्यास्तु हृदयं कोऽपि न वेत्ति भुवनत्रये।
तथापि भक्तवश्येयं भवत्येव सुनिश्चितम् ॥ १४. १५ ॥

इक्ष्वाकुकुलसंभूतो निमिर्नाम नराधिपः।
रूपवान् गुणसंपन्नो धर्मज्ञो लोकरंजकः ॥ १४. १७ ॥

बुद्धिस्तस्य समुत्पन्ना यजेयमिति राजसी।
यज्ञेन बहुकालेन दक्षिणासंयुतेन च ॥ १४. २० ॥

राजा संभृतसंभारः संपूज्य गुरुमात्मनः।
वसिष्ठं प्राह धर्मज्ञो विनयेन समन्वितः ॥ १४. २४ ॥

14.14. மகான்களும் ஹரிஹரப்பிரும்மாதிகளுங் கூட விடுபடாமலிருக்கும் பொழுது ஸத்தியவிரதன் முதலியோர் போன்ற பாமரர்கள் விடுபடுகின்றனர்.

14.15. மூவுலகிலும் எவரும் அவளுடைய இருதயத்தை அறியமாட்டார்கள். என்றாலும் அவள் பக்தர்களுக்கு வச மாகிறாள் என்பது நிச்சயம்.

14.17. இக்ஷ்வாகு குலத்துதித்த நிமி சக்ரவர்த்தி ரூபமும் குணமும் படைத்தவன், தர்மமறிந்தவன், உலகை மகிழ்விப்பவன்.

14.20. தக்ஷிணையுடன் கூடி நெடுங்காலம் செய்யக் கூடிய யாகம் ஒன்றைச் செய்யவேண்டும் என்ற ராஜஸபுத்தி அவனுக்குண்டாயிற்று.

14.24. எல்லாப் பொருள்களையும் சேர்த்துக் கொண்டு தார்மிகனான அவ்வரசன் தன்னுடைய குருவாகிய வசிஷ்டரை மரியாதையுடன் அணுகிப் பின்வருமாறு கூறினான்.

यजेयं मुनिशार्दूल याजयस्व कृपानिधे।
गुरुस्त्वं सर्ववेत्ताऽसि कार्यं मे कुरु सांप्रतम् ॥ १४. २५ ॥

तच्छ्रुत्वाऽसौ निमेर्वाक्यं वसिष्ठः प्राह भूपतिम्।
इन्द्रेणाऽहं वृतः पूर्वं यज्ञार्थं नृपसत्तम ॥ १४. २८ ॥

तस्मात्त्वमन्तरं तावत्प्रतिपालय पार्थिव।
इन्द्रयज्ञे समाप्तेऽत्र कृत्वा कार्यं दिवस्पतेः॥
आगमिष्याम्यहं राजंस्तावत्त्वं प्रतिपालय ॥ १४. ३० ॥

राजाऽपि विमना भूत्वा गौतमं प्रत्यपूजयत्।
इयाज हिमवत्पार्श्वे सागरस्य समीपतः ॥ १४. ३५ ॥

14.25. 'முனிசிரேஷ்டரே! கிருபாநிதியே! நான் யாகம் செய்ய விரும்புகிறேன். நீர் குருவாகவும் அனைத்தையும் அறிந்தவராகவுமிருப்பதால் யாகத்தை நடத்தி வைத்து இந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்விக்கவேண்டும்.'

14.28-30. நிமியினுடைய அவ்வார்த்தையைக் கேட்டு அம் முனிவர் கூறியதாவது: 'அரசசிரேஷ்டரே! இந்திரனால் முன்பே ஒரு யாகத்தின் பொருட்டு நான் வேண்டிக் கொள்ளப்பட்டவனாயிருக்கிறேன் ஆகையால் நீங்கள் கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ளுங்கள். தேவ ராஜனாகிய இந்திரயக்ஞம் முடியும் வரை அதற்கான காரியத்தைக் கவனித்து விட்டு நான் வருகிறேன். அதுவரை பொறுத்துக் கொள்ளுங்கள்.'

14.35. அரசன் மனங்குழம்பியவனாய் கௌதம முனிவரைப் பூஜித்து இமயமலைச்சாரலில் கடலருகில் யாகத்தை நடத்தலானான்.

शक्रयज्ञे समाप्ते तु पंचवर्षशतात्मके ।
आजगाम वसिष्ठस्तु राज्ञः सत्रदिदृक्षया ।। १४. ३८ ।।

आगत्य संस्थितस्तत्र दर्शनार्थं नृपस्य च ।
तदा राजा प्रसुप्तस्तु निद्रयाऽपहृतो भृशम् ।। १४. ३९ ।।

अदर्शनान्निमेस्तत्र चुकोप मुनिसत्तमः ।
शापं च दत्तवांस्तस्मै राज्ञे मन्युवशं गतः ।। १४. ४० ।।

यस्मात्त्वं मां गुरुं त्यक्त्वा कृत्वाऽन्यं गुरुमात्मनः ।
दीक्षितोऽसि बलान्मन्द मामवज्ञाय पार्थिव ।। १४. ४१ ।।

वारितोऽपि मया तस्माद्विदेहस्त्वं भविष्यसि ।
पतत्विदं शरीरं ते विदेहो भव भूपते ।। १४. ४२ ।।

14.38. இந்திரயக்ஞம் முடிந்ததும் ஐநூறு ஆண்டுகளுக்குப் பின் அரசனுடைய ஸத்ரயாகத்தை நடத்துவிக்க வசிஷ்டர் வந்து சேர்ந்தார்.

14.39. அரசனைக்காணும் பொருட்டு அவர் வந்த சமயத்தில் அவன் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான்.

14.40. அவனைக் காணாமையால் முனிவர் அவ்வரசனிடம் கோபங்கொண்டு அவனுக்குச் சாபங்கொடுத்தார்.

14.41–42. 'குருவாகிய என்னைவிட்டு உனக்கு குருவாக வேறொருவரை வைத்துக் கொண்டு என்னை அவமதித்து நீ யாகதீக்ஷை பூண்டமையால் நீ உடலை இழப்பாய் அரசனே. உன் சரீரம் இப்பொழுதே விழக்கடவது. நீ தேகமற்றவனாகப் போ.'

इति तद्व्याहृतं श्रुत्वा राज्ञस्तु परिचारका: ।
सद्य: प्रबोधयामासु-र्मुनिमाहु: प्रकोपितम् ।। १४. ४३ ।।

कुपितं तं समागत्य राजा विगतकल्मष: ।
उवाच वचनं श्लक्ष्णं हेतुगर्भं च युक्तिमत् ।। १४. ४४ ।।

मम दोषो न धर्मज्ञ गतस्त्वं तृष्णयाऽऽकुल: ।
हित्वा मां यजमानं वै प्रार्थितोऽपि मया भृशम् ।। १४. ४५ ।।

वृथा क्रोधपरीतेन मयि शाप: प्रपातित: ।
तवापि च पतत्वद्य देहोऽयं क्रोधसंयुत: ।। १४. ४६ ।।

एवं शप्तो मुनी राज्ञा राजा च मुनिना तथा ।
परस्परं प्राप्य शापं दु:खितौ तौ बभूवतु: ।। १४. ५१ ।।

14.53. அவ்வார்த்தையைக் கேட்டு அரசனுடைய பணியாட்கள் உடனே சென்று அவனை யெழுப்பி முனிவர் வந்து கோபத்துடனிருப்பதைத் தெரிவித்தார்கள்.

14.44. குற்றமற்ற அரசன் குரு கோபித்திருப்பதைக் கேட்டு அவரிடம் வந்து தகுந்த காரணத்துடன் நியாயமாக இனிய குரலில் பின் வருமாறு பேசினான்.

14.45. 'தர்மம் அறிந்தவரே! என்னிடம் குற்றமில்லையே. வெகுவாக என்னால் வேண்டிக் கொள்ளப்பட்டும் யாகம் செய்ய நிச்சயித்திருந்த என்னை விட்டுவிட்டு ஆசை வாய்ப்பாட்டு நீங்கள் சென்று விட்டீர்கள்.

14.29. கோபவசப்பட்டு நீங்கள் எனக்குச் சாபங் கொடுத்து விட்டீர்கள். கோபத்தால் வியாபிக்கப்பட்ட உங்களுடைய இந்த சரீரமும் இப்போதே விழட்டும்.

14.51. இவ்வாறு அரசனால் சபிக்கப்பட்ட முனிவரும் முனிவரால் சபிக்கப்பட்ட அரசனும் ஒருவரால் ஒருவர் சாபத்தையடைந்து துக்கத்திற்காளானார்கள்.

वसिष्ठस्त्वतिचिन्तार्तो ब्रह्माणं शरणं गतः।
निवेदयामास तथा शापं भूपकृतं महत् ॥ १३. ५२ ॥

वसिष्ठस्य वचः श्रुत्वा ब्रह्मा प्रोवाच तं सुतम्।
मित्रावरुणयोस्तेजस्त्वं प्रविश्य स्थिरो भव ॥ १४. ५५ ॥

तस्मादयोनिजः काले भविता त्वं न संशयः।
पुनर्देहं समासाद्य धर्मयुक्तो भविष्यसि ॥ १४. ५६ ॥

एवमुक्तस्तदा पित्रा प्रययौ वरुणालयम्।
विवेश स तयोर्देहे मित्रावरुणयोः किल ॥ १४. ५७ ॥

जीवांशेन वसिष्ठोऽथ त्यक्त्वा देहमनुत्तमम्।
कदाचिदूर्वशी राजन् आगता वरुणालयम् ॥ १४. ५७ ॥

14.52. வசிஷ்டர் மிகுந்த கவலையால் பீடிக்கப்பட்டவராய் பிரம்மாவைச் சரணடைந்தார். அரசனுல் கொடுக்கப்பட்ட பெரிய சாபத்தைத் தெரிவித்தார்.

14.55–56. தன் குமாரனுகிய வசிஷ்டருடைய வார்த்தையைக் கேட்டு பிரம்மா, 'மித்ராவருணர்களுடைய வீரியத்தில் நீ புகுந்து கவலையற்றிரு. நாளடைவில் ஸ்திரீ வயிற்றில் தங்காமலேயே நீ உடலே அடைவாய். இதில் சந்தேகமில்லை. மீண்டும் உடலையடைந்து தர்மத்துடன் கூடியவனுவாய்' எனக் கூறினுர்.

14.57–58. இங்ஙனம் பிதாவால் கூறப்பட்டு வசிஷ்டர் வருணுலயம் சென்ருர். சிறப்பான முன்னுடலை விட்டு விட்ட அவர் ஜீவாம்சமாக மித்ராவருணர்களுடைய உடலில் பிரவேசித்தார். அரசே! ஒரு சமயம் ஊர்வசி வருணுலயம் வந்தாள்.

दृष्ट्वा तामप्सरां दिव्यां रूपयौवनसंयुताम्।
जातौ कामातुरौ देवौ तदा तामूचतुर्नृप ॥ १४. ६१ ॥

आवां त्वमनवद्यांगि वरयस्व समाकुलौ।
विहरस्व यथा कामं स्थानेऽस्मिन् वरवर्णिनि ॥ १४. ६२ ॥

सा गृहीत्वा तयोर्भावं संस्थिता चारुदर्शना।
तयोस्तु पतितं वीर्यं कुंभे दैवादनावृते ॥ १४. ६३ ॥

तस्माज्जातौ मुनी राजन् द्वावेवाऽतिमनोहरौ।
अगस्तिः प्रथमस्तत्र वसिष्ठश्चापरस्तथा ॥ १४. ६४ ॥

मित्रावरुणयो-र्वीर्यात्तापसावृषिसत्तमौ।
प्रथमस्तु वनं प्राप्तो बाल एव महातपाः ॥ १४. ६५ ॥

14.61. அரசே! தெய்வீகரூபமும் யௌவனமும் படைத்த அந்த அப்ஸர ஸ்திரீயைக் கண்ணுற்ற மித்திராவருணர்கள் காமவசப் பட்டார்கள். அந்த தேவர்கள் அப்பொழுது அவளை நோக்கிப் பின்வருமாறு கூறினார்கள்.

14.62. குற்றமற்ற உறுப்புகளைப் படைத்த அழகியே காமத்தால் கலங்கும் எங்களை நாயகர்களாயேற்று இவ்விடத்திலிருந்து கொண்டு இஷ்டப்படி இன்புறுவாயாக.

14.63. கண்ணிற்கினிய அவள் அவர்களுடைய நோக்கத்தை அங்கிகரித்து அங்கு தங்கினாள். அவர்களுடைய வீரியம் தற்செயலாக ஒரு சமயம் திறந்திருந்த ஒரு கும்பத்தில் விழுந்தது.

14.64. அரசே அதனின்று மனதிற்கினிய இருமுனிவர்கள் தோன்றினர்; முதலில் அகஸ்தியர், இரண்டாவதாக வசிஷ்டர்.

14.65. மித்திராவருணர்களுடைய வீரியத்தினின்று தித்த அவர்கள் தவச்செல்வர்களும் ரிஷிசிரேஷ்டர்களுமாயினர். முதல்வர் சிறுவயதிலேயே வனஞ்சென்று சிறந்த தபஸ்வியானார்.

इक्ष्वाकुस्तु वसिष्ठं तं बालं वव्रे पुरोहितम् ।
एतत्ते सर्वमाख्यातं वसिष्ठस्य च कारणम् ।
शापाद्देहान्तरप्राप्ति-मित्रावरुणयोः किल ॥ १४. ६७ ॥

जनमेजय उवाच —

देहप्राप्ति-र्वसिष्ठस्य कथिता भवता किल ।
निमिः कथं पुनर्देहं प्राप्तवानिति मे वद ॥ १५. १ ॥

व्यास उवाच —

वसिष्ठेन च संप्राप्तः पुनर्देहो नराधिप ।
निमिना न तथा प्राप्तो देहः शापादनन्तरम् ॥ १५. २ ॥

यदा शप्तो वसिष्ठेन तदा ते ब्राह्मणाः क्रतौ ।
ऋत्विजो ये वृता राज्ञा ते सर्वे समचिन्तयन् ॥ १४. ३ ॥

14.67. அரசே! வசிஷ்டரை பாலியப் பருவத்தில் இக்ஷ்வாகு புரோகிதராயிருக்கும்படி வேண்டிக்கொண்டார்.

வசிஷ்டர் சாபத்தால் வேறு தேகமடைந்ததும் அவருக்கு மித்ராவருணர் என்று பெயரேற்பட்ட காரணமும் எல்லாம் உனக்கு இங்ஙனம் விளக்கப்பட்டது.

ஜனமேஜயர் கூறியது—

15.1. வசிஷ்டர் வேறு தேகம் அடைந்ததைக் கூறினீர்கள். நிமி எப்படி மீண்டும் தேகத்தையடைந்தான் என்பதையும் கூறவேண்டும்.

வியாஸர் கூறியது—

15.2. அரசே! வசிஷ்டரால் மறுபடி தேகம் அடையப்பட்டாற் போல் சாபத்திற்குப் பிறகு நிமியால் தேகம் அடையப்படவில்லை.

15.3. யாகத்தில் ரித்விக்குகளாய் வரிக்கப்பட்டிருந்த பிராமணர்கள் நிமிசக்ரவர்த்தி வசிஷ்டரால் சபிக்கப்பட்டபொழுது பின்வருமாறு ஆலோசிக்கலாயினர்.

किं कर्तव्यं कार्य-मेतद्विपरीत-मभूत्किल ।
अवश्यंभावि भावत्वादशक्ताः स्म निवारणे ।। १४. ५ ।।

मन्त्रैर्बहुविधै-र्देहं तदा तस्य महात्मनः ।
रक्षितं धारयामासुः किंचिच्छ्वसनसंयुतम् ।। १५. ६ ।।

समाप्ते च क्रतौ तत्र देवाः सर्वे समागताः ।
विज्ञप्ता मुनिभिः स्तोत्रै-र्निर्विण्णात्मानमब्रुवन् ।। १५. ७ ।।

प्रसन्नाः स्म महीपाल वरं वरय सुव्रत ।
यज्ञेनाऽनेन राजर्षे वरं जन्म विधीयते ।। १५. ८ ।।

एवमुक्तो निमेरात्मा सन्तुष्टस्तानुवाच ह ।
न देहे मम वांछास्ति सर्वदैव विनश्वरे ।। १५. १० ।।

15.5. இப்பொழுது என்ன செய்யலாம்? காரியம் விபரீதமாகி விட்டது. (சாபத்தால்) நடக்கப்போவது நடந்தே தீரும். அதை நிவாரணம் செய்ய நாம் சக்தியுடையவர்களல்லர்.

15.6. (என்றிங்ஙனம் எண்ணி யாகம் முடியும்வரை தேகத்தைக் காக்கக்கருதி அவர்கள்) பலவித மந்திரங்களால் அம்மகாத்மாவின் உடலைத் தாற்காலிகமாக ரக்ஷித்துச் சிறிது மூச்சோடிக் கொண்டிருக்கும்படி செய்தனர்.

15.7. அந்த யாகம் முடியும் பொழுது அங்கு எல்லா தேவர்களும் பிரசன்னமாயினர். முனிவர்களால் துதிக்கப் பெற்று வேண்டிக் கொள்ளப்படவே அவர்கள் வெறுப் படைந்திருந்த அரசனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்கள்.

15.8. ‘அரசே! நல்லவிரதம் பூண்டவனே! நாங்கள் பிரசன்னமாயுள்ளோம். வரம் கேட்கலாம். ராஜரிஷியே! இந்த யாகத்தின் பயனாகச்சிறந்த பிறவி விதிக்கப்படுகிறது’

15.10. இங்ஙனம் கூறப்பெற்ற நிமியின் ஜீவன் சந்தோஷித்து அவர்களிடம், ‘அழியும் உடலில் எனக்கு ஒரு பொழுதும் ஆசையில்லை’

वासो मे सर्वसत्त्वानां दृष्टावस्तु सुरोत्तमाः।
नेत्रेषु सर्वभूतानां वायुभूतश्चराम्यहम् ॥ १५. १३ ॥

एवमुक्ताः सुरास्तत्र निमेरात्मान-मब्रुवन्।
प्रार्थय त्वं महाराज देवीं सर्वेश्वरीं शिवाम् ॥ १५. १४ ॥

मखेनानेन सन्तुष्टा सा तेऽभीष्टं विधास्यति।
सदेवैरेवमुक्तस्तु प्रार्थयामास देवताम् ॥ १५. १५ ॥

प्रसन्ना सा तदा देवी प्रत्यक्षं दर्शनं ददौ।
प्रसन्नायां देवतायां राजा वव्रे वरं नृप ॥ १५. १७ ॥

ज्ञानं तद्विमलं देहि येन मोक्षो भवेदिति।
नेत्रेषु सर्वभूतानां निवासो मे भवेदिति ॥ १५. १८ ॥

15.13. 'தேவசிரேஷ்டர்களே! எல்லாப்பிராணிகளுடைய திருஷ்டிகளிலும் எனக்கு வாசம் ஏற்படட்டும். எல்லாப்பிராணிகளுடைய கண்களிலும் வாயு வடிவில் நான் வசிக்க விரும்புகிறேன்.'

15.14. இங்ஙனம் கூறப்பெற்ற தேவர்கள் நிமியின் ஜீவனை நோக்கிக் கூறியதாவது: மகாராஜனே! மங்கள வடிவினளான ஸர்வேச்வரீ தேவியை நீ பிரார்த்தித்துக் கொள்.

15.15. 'இந்த யாகத்தால் சந்தோஷமடைந்த அவள் உன்னுடைய விருப்பத்தை அருள்வாள்.' தேவர்களால் இங்ஙனம் கூறப்பெற்ற நிமி பரதேவதையைப் பிரார்த்தித்தான்.

15.17. அரசே! அப்பொழுது பிரீதியடைந்திருந்த தேவி பிரத்யக்ஷமாய் தரிசனமளித்தாள். அவ்வரசனும் பிரஸன்னமான தெய்வத்திடம் பின்வருமாறு வரம் கேட்டுக் கொண்டான்.

15.18. 'எதனுல் எனக்கு மோக்ஷம் கிட்டுமோ அந்தப் பரிசுத்தமான ஞானத்தை எனக்கு அளித்தருள வேண்டும். எல்லாப்பிராணிகளுடைய கண்களிலும் எனக்கு வாசம் ஏற்படும்படியும் அருள வேண்டும்.'

ततः प्रसन्ना देवेशी प्रोवाच जगदम्बिका।
ज्ञानं ते विमलं भूयात्प्रारब्धस्यावशेषतः ॥ १५. १९ ॥
नेत्रेषु सर्वभूतानां निवासोऽपि भविष्यति।
निमिषं यान्ति चक्षूंषि त्वत्कृतेनैव देहिनाम् ॥ १५. २० ॥
तव वासात्सनिमिषा मानवाः पशवस्तथा।
पतंगाश्च भविष्यन्ति पुनश्चानिमिषाः सुराः ॥ १५. २१ ॥
इति दत्त्वा वरं तस्मै तदा श्री वरदेवता।
आमन्त्र्य च मुनीन् सर्वांस्तत्रैवान्तर्हिताऽभवत् ॥ १५. २२ ॥
अन्तर्हितायां देव्यान्तु मुनयस्तत्र संस्थिताः।
विचिन्त्य विधिवत्सर्वे निमेर्देहं समाहरन् ॥ १५. २३ ॥
अरणिं तत्र संस्थाप्य ममन्थु-र्मन्त्रवत्तदा।
मन्त्रहोमैर्महात्मानः पुत्रहेतोर्निमेरथ ॥ १५. २४ ॥

15.19–20. தேவேச்வரியான ஜகதாம்பிகை மகிழ்ச்சியுடன் கூறியதாவது: 'பிராரப்தம் முடிவுற்றதும் உனக்கு மாசற்ற ஞானமுண்டாகும், எல்லாப்பிராணிகளுடைய கண்களிலும் உனக்கு வாசமும் ஏற்படும். உன்னாலேயே உடல் படைத்தவர்களுடைய கண்கள் இமை கொட்டும் இயற்கையுடையனவாகும்.

15.21. உன்னுடைய வாசத்தால் மனிதர்கள் இமை கொட்டுபவர்களாவார்கள்; அப்படியே மிருகங்களும் பறவைகளும்; ஆனால் தேவர்கள் மட்டும் இமை கொட்டமாட்டார்கள்.

15.22. இங்ஙனம் அவனுக்கு வரமளித்துவிட்டு முனிவர்களனைவரையும் அனுக்கிரகித்துவிட்டுப் பரதேவதையானவள் அங்கேயே மறைந்து விட்டாள்.

15.23–24. தேவி மறைந்தபின் முனிவர்களனைவரும் ஒன்று கூடியாலோசித்து விதிப்படி நிமியின் தேகத்தை ஸம்ஸ்காரம் செய்யுமுன் (அதிலிருந்து வம்ச விருத்தியைக் கருதி)அவ்வுடல் மீது அரணிக்கட்டையை வைத்து மந்திரங்களைக் கூறிக் கடைந்து நிமியிடமிருந்து புத்திரன் தோன்றக் காரணமான மந்திர ஹோமங்களை அம்மஹாத்மாக்கள் செய்யவே அதனின்று ஸர்வலக்ஷணஸம்பன்னனும் ஸாக்ஷாத்தாக வந்த இன்னொரு நிமியே போலும் ஒரு புத்திரன் தோன்றினான்.

अरण्यां मथ्यमानायां पुत्रः प्रादुरभूत्तदा ।
सर्वलक्षणसंपन्नः साक्षान्निमिरिवापरः ॥ १५. २५ ॥

अरण्या मथनाज्जात-स्तस्मान्मिथिरिति स्मृतिः ।
येनाऽयं जनकाज्जातस्तेनाऽसौ जनकोऽभवत् ॥ १५. २६ ॥

विदेहस्तु निमिर्जातो यस्मात्तस्मात्तदन्वये ।
समुद्भूतास्तु राजानो विदेहा इति कीर्तिताः ॥ १५. २७ ॥

एवं निमिसुतो राजा प्रथितो जनकोऽभवत् ।
नगरी निर्मिता तेन गंगातीरे मनोहरा ॥ १५. २८ ॥

मिथिलेति सुविख्याता गोपुराट्टालसंयुता ।
धनधान्य-समायुक्ता हट्टशालाविराजिता ॥ १५. २९ ॥

15.26. அரணிக்கட்டையின் (மதனத்தால்) கடைசலால் தோன்றியதால் அவனுக்கு 'மிதி' என்றும், ஜனகன் என்ற புனைப் பெயருடைய நிமியிடம் பிறந்ததால் 'ஜனகன்' என்றும் இவன் பெயர் பெற்றவனானான்.

15.27. நிமி தேகத்தையிழந்து (தேக அபிமானத்தையும் விட்டு) 'விதேஹ'னாய் விட்டதால் அவனுடைய வம்சத்தில் தோன்றிய அரசர்கள் 'விதேஹர்கள்' எனக் கூறப் படலாயினர்.

15.28. நிமியின் புத்திரனான ஜனகன் பிரசித்தமான அரசனானான். கங்கைக் கரையில் மனதைக் கவரும் அழகுடைய நகரம் ஒன்று அவனால் நிர்மாணம் செய்யப்பட்டது.

15.29. அந்நகரம் மிதிலை எனப் புகழ்பெற்றது. கோபுரம் அரண்மனை முதலியவற்றுடன் கூடியதாயும், தன தானியங்கள் நிறைந்ததாயும் கடைவீதிகளுடன் பிரகாசிப்பதாயுமிருந்தது.

वंशेऽस्मिन्येऽपि राजानस्ते सर्वे जनकास्तथा।
विख्याता ज्ञानिनः सर्वे विदेहाः परिकीर्तिताः॥ १५. ३० ॥

राजोवाच —

ज्ञात्वा धर्मस्य विज्ञानं कथमिक्ष्वाकुसंभवः।
क्रोधस्य वशमापन्नः शप्तवान् ब्राह्मणं गुरुम्॥ १५. ३५ ॥

व्यास उवाच —

क्षमाऽपि दुर्लभा राजन् प्राणिभिरजितात्मभिः।
क्षमावान् दुर्लभो लोके सुसमर्थो विशेषतः॥ १५. ३६ ॥

ज्ञानं तु द्विविधं प्रोक्तं शाब्दिकं प्रथमं स्मृतम्।
वेदशास्त्रार्थविज्ञानात् तद्भवेद्बुद्धियोगतः॥ १५. ५१ ॥

15.30. அந்த வம்சத்தில் பிறந்த அரசர்கள் எவர்களோ அவர்கள் எல்லோருமே ஞானவான்களாகவும் ஜனகர் என்றும் விதேஹர் என்று புகழ்பெற்றவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

அரசன் கூறியது—

15.35. தர்மத்தைப்பற்றிய அனுபவ ஞானத்தையடைந்தவராயும் இக்ஷ்வாகு குலத்தில் தோன்றியவராயுமிருந்த அரசன் கோபத்திற்கு வசப்பட்டு பிராம்மணரும் குருவுமாகிய வசிஷ்டரை எங்ஙனம் சபிக்கலானார்.

வியாஸர் கூறியது—

15.36. அரசே! தன்னடக்கமில்லாத பிராணிகளால் பொறுமை அடைதற்கரிது. உலகில் பொறுமையுள்ளவனும் ஸமர்த்தனும் விசேஷமாய்க் கிடைத்தலரிது.

15.51. ஞானம் இரண்டுவகை எனக் கூறப்பட்டுள்ளது முதலாவது 'சாப்திகம்'; அது வேத சாஸ்திரங்களின் அர்த்தங்களை புத்தியின் உதவியால் அறிவதால் ஏற்படும்.

अनुभवाख्यं द्वितीयं तु ज्ञानं तद्दुर्लभं नृप।
तत्कर्म यन्न बन्धाय सा विद्या या विमुक्तये ॥ १५. ५५ ॥

आयासायाऽपरं कर्म विद्याऽन्या शिल्पनैपुणम्।
शीलं परहितत्वं च कोपाऽभावः क्षमा धृतिः ॥ १५. ५६ ॥

सन्तोषं चेति विद्यायाः परिपाकोज्ज्वलं फलम्।
विद्यया तपसा वाऽपि योगाभ्यासेन भूपते ॥ १५. ५७ ॥

कामक्रोधादयो भावाश्चित्तजाः परिकीर्तिताः।
ते तदा न भवत्येव यदा वै निर्जितं मनः ॥ १४. ५६ ॥

तस्मात्तु निमिना राजन्न क्षमा विहिता मुनौ।
यथा ययातिना पूर्वं कृता शुक्रे कृतागसि ॥ १५. ६० ॥

15.55. இரண்டாவது 'அனுபவம்' அரசே! இந்த ஞானம் துர்லபம். எது கட்டுப்படுத்தாதோ அதுவே கர்மம். எது முக்தி ஸாதனமோ அதுவே வித்தை.

15.56–59. மற்ற கர்மம் ஆயாஸம் மட்டுமே. மற்றவித்தை தொழில் திறமை மட்டுமே. பிறர்க்கு நன்மையை நாடும் குணமும், கோபமின்மையும், பொறுமையும் தைரியமும், ஸந்தோஷமும் வித்தையின் முதிர்ச்சி பிரகாசிக்கும் பொழுது ஏற்படும் பயன். அரசே வித்தையாலும் தவத்தாலும் யோகப்பயிற்சியாலும் மனது ஜயிக்கப்பட்டால் இயற்கையாக சித்தத்தில் முளைக்கும் காமம் கோபம் முதலியவை இல்லாமற் போம்.

15.60. அரசே! இக்காரணத்தால் தான் நிமியால் முனிவர் பொருட்டு முன்பு யயாதியால் தனக்குச் சாபமிட்ட சுக்ராசாரியாரிடம் எப்படி பொறுமை காட்டப்பட்டதோ அப்படி காட்டப்படவில்லை.

भृगुपुत्रेण शप्तोऽपि ययातिर्नृपसत्तमः ।
न शशाप मुनिं क्रोधाज्जरां राजा गृहीतवान् ॥ १५. ६१ ॥

कश्चित् सौम्यो भवेत्कश्चित्क्रूरो भवति पार्थिव ।
स्वभावभेदान्नृपते कस्य दोषोऽत्र कल्प्यते ॥ १५. ६२ ॥

हैहया भार्गवान् पुर्वं धनलोभात्पुरोहितान् ।
ब्राह्मणान्मूलतः सर्वांश्चिच्छिदुः क्रोधमूर्च्छिताः ॥ १५. ६३ ॥

जनमेजय उवाच —

कुले कस्य समुत्पन्नाः क्षत्रिया हैहयाश्च ये ।
ब्रह्महत्यामनादृत्य निजघ्नुर्भार्गवांश्च ये ॥ १६. १ ॥

15.61. பிருகு புத்திரராகிய சுக்கிராசாரியாரால் சபிக்கப்பட்ட பொழுதும் சிறந்த அரசனாகிய யயாதி கோபித்து முனிவருக்கு எதிர்சாபம் தரவில்லை. சாபத்தால் ஏற்பட்ட மூப்பை அங்கீகரித்துக் கொண்டான்.

15.62. அரசே! சிலர் நல்ல மனது படைத்தவர்களாயிருக்கிறார்கள்; சிலர் கொடிய மனது படைத்தவர்களாயிருக்கிறார்கள். அது இயற்கையில் ஏற்பட்ட வேற்றுமை. இதில் யாரிடம் தோஷத்தைக் கற்பிக்கலாம்.

15.63. பூர்வத்தில் ஹைஹயர் என்ற அரசகுலத்தினர் பிருகுவம்சத்தினராயும் புரோகிதர்களாயுமிருந்த பிராம்மணர்களைப் பொருளாசையும் கோபமும் மேலிட்டு அனைவரையும் வேருடன் அழிக்கலாயினர்.

ஜனமேஜயர் கூறியது—

16.1. பிரும்மஹத்தி தோஷம் பீடிக்கும் என்பதையும் எண்ணிப்பாராமல் பிருகு குலத்தவரைக் கொன்ற அந்த ஹைஹயர் என்ற க்ஷத்திரியர்கள் எக்குலத்திற் பிறந்தவர்கள்.

वैरस्य कारणं तेषां किं मे ब्रूहि पितामह।
निमित्तेन विना क्रोधं कथं कुर्वन्ति सत्तमाः ।। १६. २ ।।

सूत उवाच —

इति पृष्टस्तदा तेन राज्ञा सत्यवतीसुतः।
उवाच परमप्रीतः कथां संस्मृत्य चेतसा ।। १६. ६ ।।

व्यास उवाच —

कार्तवीर्येति नाम्नाऽभूद्धैहयः पृथिवीपतिः।
सहस्रबाहुर्बलवानर्जुनो धर्मतत्परः ।। १६. ८ ।।

दत्तात्रेयस्य शिष्योऽभूदवतारो हरेरिव।
सिद्धः सर्वार्थदः शाक्तो भृगूणां याज्य एव सः ।। १६. ९ ।।

16.2. பிதாமகரே! அவர்களுடைய விரோதத்திற்குக் காரணம் என்ன? கூறுங்கள். மேலோர்கள் நிமித்தமில்லாமல் எங்ஙனம் கோபங்கொள்வார்கள்?

சூதர் கூறியது—

16.6. ஸத்யவதி புத்திரராகிய வியாஸர் இங்ஙனம் அரசனால் வினவப்பெற்றதும் பழைய கதையை ஞாபகப் படுத்திக்கொண்டு பிரீதிமிக்கவராய்க் கூறலானார்.

வியாஸர் கூறியது—

16.8. கார்த்தவீரியன் எனப் பெயர் பெற்ற ஹைஹய வம்சத்தோன் அரசனாயிருந்தான். அவன் ஆயிரம் கைகள் படைத்தவன், பலவான், தருமத்திலூக்கமுடையவன். அர்ஜுனன் என்ற பெயரும் அவனுக்குண்டு.

16.9. தத்தாத்ரேயருடைய சிஷ்யனாகவும் ஹரியின் அம்சமுள்ளவன் போலும், சித்திகளையடைந்தவனாகவும் தான தருமங்கள் செய்பவனாகவும் சக்தி பூஜை செய்பவனாகவும் பிருகுவம்சத்தோரைப் புரோகிதர்களாய்க் கொண்டவனாகவுமிருந்தான்.

स्वर्याते नृपशार्दूले कार्तवीर्यार्जुने पुनः।

हैहया निर्धना जाताः कालेन महता नृप ॥ १६. १२ ॥

धनकार्यं समुत्पन्नं हैहयानां कदाचन।

याचिष्णवोऽभिजग्मुस्तान् भृगूंस्ते हैहया नृप ॥ १६. १३ ॥

न ददुः प्रार्थितं विप्राः पादवृद्ध्यापि याचिताः।

नास्तीति वादिनः स्तब्धाः दुःखितान्वीक्ष्य याज्यकान्
॥ १६. ३४ ॥

धनं प्राप्तं कार्तवीर्याद्रक्षितं केन हेतुना।

न कृताः क्रतवः किं तैर्दानं चार्थिषु भूरिशः ॥ १६. ३५ ॥

16.12. அரசே! அரசசிரேஷ்டனாகிய கார்த்தவீரியார்ஜுனன் சுவர்க்கம் புகுந்து நெடுநாட்களுக்குப் பின் ஹைஹயர்கள் செல்வங்குறைந்தவர்களானார்கள்.

16.13. ஒரு சமயம் காரியத்தின் நிமித்தம் பொருள் தேவைப்படவே ஹைஹயர்கள் தங்கள் புரோகிதர்களான பிருகு வம்ஸத்தோரிடம் யாசிக்கச் சென்றனர்.

16.14. அங்ஙனம் யாசிக்கப்பெற்ற பிராம்மணர்கள் கேட்டதைக் கொடுக்கவில்லை. சிறிதும் இல்லையென்று மறுத்து விட்டனர். யாகஞ்செய்து முன்னாட்களில் தானஞ் செய்துள்ள அரசர்கள் துக்க மடைந்து வந்த பொழுதும் பிராம்மணர்கள் அசையவில்லை.

16.35. 'கார்த்தவீரியனிடமிருந்து அடையப்பட்ட பொருள் இவர்களால் எதற்காகச் சேமித்து வைக்கப் பட்டுளது' இவர்கள் யாகங்களையும் செய்யவில்லை. நாடி வந்தவர்களுக்கு தாராளமாகத் தானமும் செய்யவில்லை.

न संचितव्यं विप्रैस्तु धनं क्वापि कदाचन।
राज्ञाऽसौ सर्वथा दण्ड्यो वंचको दुःखभाङ् नरः ॥ १६. ४१ ॥

तस्माद्वयं गुरूनेतान् वंचकान् ब्राह्मणाधमान्।
हन्तुं समुद्यताः सर्वे न क्रोधव्यं महात्मभिः ॥ १६. ४२ ॥

भयार्ता भृगुपत्न्यस्तु हिमवन्तं धराधरम्।
प्रपेदिरे रुदन्त्यश्च वेपमानाः कृशा भृशम् ॥ १६. ४४ ॥

एवं ते हैहयै-र्विप्राः पीडिता धनकामुकैः।
निहताश्च यथाकामं संरब्धैः पापकर्मभिः ॥ १६. ४५ ॥

16.41. 'பிராம்மணர்களால் தனம் எங்கும் ஒரு பொழுதும் சேமித்து வைக்கப்படுதல் கூடாது. அப்படிப் பட்ட வஞ்சகன் எப்படியும் அரச தண்டனைக்குரியவனுகி துக்கத்தையனுபவிப்பான்.

16.42. 'ஆகையால் நாங்கள் எல்லோரும் வஞ்சகர் களாகிய இந்தப் பிராம்மணுதமர்களை குருவம்ஸத்தவரா யினும் கொல்லப் போகிறோம். மகாத்மாக்கள் கோபிக்கக் கூடாது' (என்று ஹைஹயர் கூறி அவர்களை இம்சிக்கத் தொடங்கினுர்)

16.44. பிருகுகுல ஸ்திரீகள் பயத்தால் பீடிக்கப்பட்டு மிக மெலிந்து அழுது நடு நடுங்கிக்கொண்டு இமயமலையை அடைந்தனர்.

16.45. இவ்வாறு பொருளில் பேராசை கொண்டவர் களும் பாவத் தொழிலில் வேகமாய்த் தலைப்பட்டவர்க ளுமான ஹைஹயர்களால் பிராம்மணர்கள் பீடிக்கப்பட்டு இஷ்டப்படி கொல்லப்பட்டார்கள்.

भृगुपत्न्यो यदा राजन् हिमवन्तं गिरिं गताः।
भयत्रस्ता निमग्नाशा हैहयैः पीडिता भृशम् ॥ १७. ५ ॥

गौरीं तत्र तु संस्थाप्य मृन्मयीं सरितस्तटे।
उपोषणपराश्चक्रुर्निश्चयं मरणं प्रति ॥ १७. ६ ॥

स्वप्ने गत्वा तदा देवी प्राह ता प्रमदोत्तमाः।
युष्मासु मध्ये कस्याश्चिद्भविता चोरुजः पुमान् ॥ १७. ७ ॥

मदंशशक्तिसंभिन्नः स वः कार्यं विधास्यति।
इत्यादिश्य पराम्बा सा पश्चादन्तर्हिताऽभवत् ॥ १७. ८ ॥

17.5–6. அரசே ஹைஹயர்களால் மிகவும் பீடிக்கப்பட்டு நம்பிக்கையிழந்து பயத்தால் நடுங்கி இமயமலை சென்ற பிருகுபத்தினிகள் அங்கே நதிக்கரையில் மண்ணினுல் கௌரியின் உருவத்தைச் செய்து வைத்து அவள் முன்னிலையில் உண்ணுவிரதமிருந்து உயிர்விடுவதாய் நிச்சயித்தனர்.

17.7–8. அவர்கள் கனவில் பராம்பிகையான தேவி தோன்றி 'உத்தமஸ்திரீகளே! உங்களுக்குள் ஒருத்தியின் துடையிலிருந்து ஒரு புத்திரன் பிறக்கப்போகிருன். அவன் என்னுடைய சக்தியைப் பெற்று உங்களுடைய காரியத்தை நிறைவேற்றுவான்' என்று கூறிவிட்டு அங்கேயே மறைந்து போனுள்.

जागृतास्तु ततः सर्वा मुदमापुर्वरांगनाः ।
काचित्तासां भयोद्विग्ना कामिनी चतुरा भृशम् ।। १७. ६ ।।

दधार चोरुणैकेन गर्भं सा कुलवृद्धये ।
भित्त्वोरुं निर्जगामाऽऽशु गर्भः सूर्य इवापरः ।। १७. १५ ।।

मुष्णन् दृष्टीः क्षत्त्रियाणां तेजसा बालकः शुभः ।
दर्शनाद्बालकस्याशु सर्वे जाता विलोचनाः ।। १७. १६ ।।

बभ्रमुर्गिरिदुर्गेषु जन्मान्धा इव क्षत्रियाः ।
चिन्तितं मनसा सर्वैः किमेतदिति सांप्रतम् ।। १७. १७ ।।

सर्वे चक्षुर्विहीना यज्जाताः स्म बालदर्शनात् ।
ब्राह्मण्यास्तु प्रभावोऽयं सतीव्रतबलं महत् ।। १७. १८ ।।

17.9–16. அச்சிறந்த ஸ்திரீகள் எல்லோரும் விழித்துக் கொண்டதும் மகிழ்வெய்தினர். அவர்களுள் மிகவும் பயப்பட்டுக் கொண்டிருந்த ஒரு அழகி தனது ஒரு துடையில் குலவிருத்தி செய்யும் கருவைத் தரிப்பவளானாள். அந்தக் கர்ப்பமும் அவள் துடையைப் பிளந்து கொண்டு இன்னொரு சூரியனைப் போல் சீக்கிரமே வெளிப்பட்டது. அங்ஙனம் தோன்றிய அழகான பாலகன் தன்னொளியால் (பகைவர்களான) க்ஷத்திரியர்களின் கண்களை அபகரித்தான். பாலகனைப் பார்த்த மாத்திரத்தில் அவர்கள் எல்லோரும் உடனே கண்ணிழந்தவர்களானார்கள்.

17.17. அந்த க்ஷத்திரியர்கள் மலைகளிலும் குகைகளிலும் பிறவிக் குருடர்களைப் போல் திக்குமுக்காடினர். இவ்வாறு இப்பொழுது எங்ஙனம் நிகழ்ந்ததென்று அவர்களனைவரும் மனதில் ஆலோசித்தனர்.

17.18. 'பாலனைக் கண்டவுடன் நாமெல்லோரும் கண்ணிழந்தவர்களானதால் அது பிராம்மணஸ்திரீயின் மகிமையாயிருக்க வேண்டும். பதிவிரதையின் விரதபலம் மகத்தானது' எனத் தீர்மானித்தனர்.

ब्राह्मणीं शरणं जग्मुर्हैहया गतचेतसः।
प्रणेमुस्तां भयत्रस्तां कृतांजलिपुटाश्च ते ॥ १७. २० ॥

शरणं ते प्रपन्नाः स्मो देहि चक्षूंषि मानदे।
अतः परं न कर्तव्यमीदृशं कर्म कर्हिचित् ॥ १७. २५ ॥

भार्गवाणां तु सर्वेषां सेवकाः स्मो वयं किल।
अज्ञानाद्यत्कृतं पापं क्षन्तव्यं तत्त्वयाऽधुना ॥ १७. २७ ॥

इति तेषां वचः श्रुत्वा ब्राह्मणी विस्मयान्विता।
तानाह प्रणतान् दुःस्थानाश्वास्य गतलोचनान् ॥ १७. २९ ॥

भगवत्याः प्रसादेन जातोऽयं मम बालकः।
तेजसा यस्य दिव्येन चक्षूंषि मुषितानि च ॥ १७. ३६ ॥

17.19. மனமுடைந்த ஹைஹயர்கள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த பிராம்மணஸ்திரீயைச் சரணடைந்து கைகளைக் கூப்பிக்கொண்டு அவளை நமஸ்கரித்தனர்.

17.25. 'மதிப்பிற்குரியவளே! உன்னுடைய அருளை நாடி நாங்கள் சரணடைந்துள்ளோம். எங்களுக்குக் கண்களை அளி. இனி ஒரு பொழுதும் நாங்கள் இம்மாதிரி செயல்புரியமாட்டோம்.

17.27. 'நாங்கள் பார்க்கவ குலத்தினரனைவருக்கும் சேவகர்களாவோம். அறியாமையால் எந்தப் பாவம் செய்யப்பட்டதோ அதை இப்பொழுது மன்னித்தருள வேண்டும்.

17.29. பிராம்மண ஸ்திரீ அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்டு ஆச்சரியம் மிக்கவளாய்க் கண்ணிழந்து தவித்துத் தன்னை வணங்கி நிற்கும் அவர்களுக்குத் தேறுதல் கூறுபவளாய்ப் பின் வருமாறு மொழிந்தாள்.

17.36. 'பகவதியின் திருவருளால் இந்த என் பாலகன் தோன்றியுள்ளான். அவனுடைய தெய்வீக ஒளியால் உங்கள் கண்கள் கவரப்பட்டுள்ளன.

तस्मादौर्वं सुतं मेऽद्य याचध्वं विनयान्विताः ।
प्रणिपातेन तुष्टोऽसौ दृष्टिं वः प्रतिमोक्ष्यति ॥ १७. ३७ ॥

तच्छ्रुत्वा वचनं तस्या हैहयास्तुष्टुवुश्च तम् ।
प्रणेमुर्विनयोपेता ऊरुजं मुनिसत्तमम् ॥ १७. ३८ ॥

स सन्तुष्टो बभूवाऽथ तानुवाच विचक्षुषः ।
गच्छध्वं स्वगृहान् भूपा ममाख्यानकृतं वचः ॥ १७. ३९ ॥

अवश्यंभावि भावास्ते भवन्ति देवनिर्मिताः ।
नाऽत्र शोकस्तु कर्तव्यः पुरुषेण विजानता ॥ १७. ४० ॥

पूर्ववद्दृष्टयः सर्वे प्राप्नुवन्तु यथासुखम् ।
व्रजन्तु विगतक्रोधा भवनानि यथासुखम् ॥ १७. ४१ ॥

17.37. 'ஆகையால் என் துடையில் தோன்றிய இப் புத்திரனையே இப்பொழுது விநயத்துடன் அணுகி யாசியுங்கள். உங்கள் வணக்கத்தால் மகிழ்ச்சியுற்று அவன் உங்களுக்குப் பார்வையைத் திருப்பியளிப்பான்.'

17.38. அவளுடைய அவ்வார்த்தையைக் கேட்டு ஹைஹயர்கள் துடையில் தோன்றிய முனிசிரேஷ்டரான ஔர்வர் என்ற அக்குழந்தையைத் துதித்து விநயத்துடன் வணங்கினர்.

17.39–40. அவர் சந்தோஷித்துக் கண்ணிழந்த ஹைஹயர்களை நோக்கிக் கூறியதாவது: 'அரசர்களே! நீங்கள் வீடு சென்று நான் சொல்லுகிறபடி நடவுங்கள். தெய்வத்தின் நியமனப்படி நடக்க வேண்டியது நடந்தே தீரும். அறிவுள்ள புருஷன் அதற்கு வருந்துதல் கூடாது.

17.41. 'முன்போல் ரிஷிகளெல்லோரும் அவர்களுக்குரிய வழியில் இன்புற்றிருக்கட்டும். நீங்கள் கோபத்தை விட்டு இஷ்டப்படி வீடு செல்லுங்கள்.'

इति तेन समादिष्टा हैहया प्राप्तलोचनाः ।
और्वमामन्त्र्य जग्मुस्ते सदनानि यथारुचि ।। १७. ४२ ।।

ब्राह्मणी तं सुतं दिव्यं गृहीत्वा स्वाश्रमं गता ।
पालयामास भूपाल तेजस्विन-मतन्द्रिता ।। १७. ४३ ।।

एवं ते कथिता राजन् भृगूणां तु विनाशनम् ।
लोभाविष्टैः क्षत्रियैश्च यत्कृतं पातकं किल ।। १७. ४४ ।।

17.42. இப்படி அவரால் கட்டளையிடப்பட்ட ஹைஹயர்கள் மீண்டும் கண்பார்வையைப் பெற்று ஔர்வரிடம் விடைபெற்று அவரவர் விருப்பப்படி அவரவர் வீடுகளுக்குச் சென்றனர்.

17.43. அரசே! பிராம்மணஸ்திரீயும் தெய்வீகமான ஒளிமிகுந்த அப்புத்திரனை எடுத்துக் கொண்டு தனது ஆசிரமம் சென்று மிகுந்த அக்கறையுடன் அவனைப் போஷித்துப் பாவித்து வந்தாள்.

17.44. அரசே! லோபத்தினால் மதியிழந்து க்ஷத்திரியர்களால் என்ன பாதகம் இழைக்கப்பட்டதென்பதும் எங்ஙனம் பிருகுகுலத்திற்கழிவு ஏற்பட்டதென்பதும் இவ்வாறாக உமக்குக் கூறப்பட்டது.

।। इति श्रीदेवीभागवते षष्ठस्कन्धे सप्तदशोऽध्यायः ।।

।। कर्मगतिवर्णनं समाप्तम् ।।

இங்ஙனம் ஸ்ரீதேவிபாகவதத்தில் ஆறாவது
ஸ்கந்தத்தில் பதினேழாவது
அத்தியாயம் முற்றும்.

கர்மகதி வர்ணனம் முற்றும்.

॥ हैहय चरित्रम् ॥ २५ ॥

व्यास उवाच —

हैहयानां समुत्पत्तिं शृणु भूप सविस्तरम् ।
पुरातनां सुपुण्यां च कथां पापप्रणाशिनीम् ॥ १७. ४९ ॥

कस्मिंश्चित्समये भूप सूर्यपुत्रः सुशोभनः ।
रेवन्तेति च विख्यातो रूपवानमितप्रभः ॥ १७. ५० ॥

उच्चैः श्रवसमारुह्य हयरत्नं मनोहरम् ।
जगाम विष्णुसदनं वैकुण्ठं भास्करात्मजः ॥ १७. ५१ ॥

भगवद्दर्शनाकांक्षी हयारूढो यदा गतः
हयस्थस्तु तदा दृष्टो लक्ष्म्याऽसौ रविनन्दनः ॥ १७. ५२ ॥

25. ஹைஹய சரித்திரம்

வியாசர் கூறியது—

17.49. அரசே! புராதனமானதும் புண்ணியமானதும் பாவத்தைப் போக்குவதுமான ஹைஹயர்களின் உற்பத்தியைப் பற்றிய கதையை விரிவாகக் கூறுகிறேன். கேட்பாயாக.

17.50–51. அரசே! அளவற்ற காந்தியுடையவனும் அழகுபடைத்தவனும், மங்கள வடிவினனும், புகழ்மிக்கவனுமான ரேவந்தன் எனும் சூரிய புத்திரன் ஒரு சமயம் குதிரைகளிற் சிறந்ததும் மனதைக் கவர்வதுமான உச்சிரவஸ் எனும் தேவலோகக் குதிரைமேல் ஏறிக்கொண்டு மகாவிஷ்ணுவின் இருப்பிடமாகிய வைகுண்டம் சென்முன்.

17.52. பகவானைத்தரிசிக்க விரும்பி குதிரையேறி வந்த அந்த சூரிய புத்திரன் லக்ஷ்மிதேவியின் கண்ணில் பட்டான்.

रमा वीक्ष्य हयं दिव्यं भ्रातरं सागरोद्भवम्।
रूपेण विस्मिता तस्य तस्थौ स्तंभितलोचना ॥१७.५३॥

भगवानपि तं दृष्टवा हयारूढं मनोहरम्
आगच्छन्तं रमां विष्णुः पप्रच्छ प्रणयात्प्रभुः ॥१७. ५४॥

कोऽयमायाति चार्वाङ्गि हयारूढ इवापरः।
स्मरतेजस्तनुः कान्ते मोहयन् भुवनत्रयम् ॥ १७. ५५ ॥

प्रेक्षमाणा तदा लक्ष्मीस्तच्चित्ता दैवयोगतः।
नोवाच वचनं किंचित्पृष्टाऽपि च पुनःपुनः ॥१७. ५६॥

17.54. பாற்கடலில் தன்னுடன் பிறந்த சகோதரனைப் போன்ற அந்த தெய்வீகக் குதிரையையும் அதன் மேலிருந்த அழகனுடைய வடிவையுங் கண்டு ரமாதேவி கண்ணிமை கொட்டாது நின்ருள்.

17.54. பிரபுவாகிய பகவான் விஷ்ணுவும் குதிரை மேலிருந்த அவ்வழகனைப் பார்த்து அங்கு வந்துகொண்டிருந்த ரமாதேவியை நோக்கி அன்புடன் பின்வருமாறு வினவினர்.

17.55. 'அழகிய அங்கம் படைத்தவளே! பிரியே! குதிரைமேல் ஏறிக்கொண்டு இன்னொரு மன்மதனைப் போன்ற ஒளிபொருந்திய உடலுடன் மூவ்வுலகையும் மயக்கிக் கொண்டு வரும் இவன் யார்?'

17.56. அவனையே பார்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மி அதிலேயே சித்தம் லயித்தவளாய் தெய்வ வசத்தால் திருப்பித் திருப்பிக் கேட்கப்பட்டும் பதிலேதும் பேசவில்லை.

अश्वासक्तमतिं वीक्ष्य कामिनीमतिमोहिताम्।
पश्यन्तीं परमप्रेम्णा चंचलाक्षीं च चंचलाम्॥ १७. ५७॥

तामाह भगवान् क्रुद्धः किं पश्यसि सुलोचने।
मोहिता च हरिं दृष्ट्वा पृष्टा नैवाऽभिभाषसे॥ १७. ५८॥

सर्वत्र रमसे यस्माद्रमा तस्माद्भविष्यसि।
चंचलत्वाच्चलेत्येवं सर्वथैव न संशयः॥ १७. ५९॥

प्राकृता च यथा नारी नूनं भवति चंचला।
तथा त्वमपि कल्याणि स्थिरा नैव कदाचन॥ १७. ६०॥

त्वं हयं मत्समीपस्था समीक्ष्य यदि मोहिता।
वडवा भव वामोरु मर्त्यलोकेऽतिदारुणे १ ७. ६१॥

17.57.58. குதிரையின் மேல் மோகமடைந்து ஆவலுடனும் பரமப் பிரேமையுடனும் அதையே பார்த்துக் கொண்டிருப்பவளும் சஞ்சலமான இயல்பும் பார்வையும் உடையவளும் ஆகிய நாயகியை நோக்கி பகவான் கோபத்துடன், 'அழகிய கண்படைத்தவளே! குதிரையைக் கண்டு மதிமயங்கி என்ன பார்க்கிறாய்? என்றால் வினவப்பட்டும் நீ பேசக்காணோம்.

17.59. 'நீ எப்பொழுதும் எங்கும் ரமிப்பதால் 'ரமா' எனும் பெயருடையவளாகவும், சஞ்சலத்தன்மை உடைமையால் 'சலா' எனும் பெயருடையவளாகவும் ஆகப் போகிறாய். இதில் சந்தேகமில்லை.

17.60. கல்யாணி! சஞ்சலமான பாமரஸ்திரிகளைப் போல் நீயும் ஒரு பொழுதும் ஸ்திரமாயிருக்கமாட்டாய்.

17.61. 'இடை அழகியவளே! நீ என் பக்கத்திலிருக்கும் போதே ஒரு குதிரையைப் பார்த்து மோஹத்தையடைந்ததால் நீ கொடிய மானிட உலகில் ஒரு பெண் குதிரையாகப் போகக் கடவாய்.'

इति शप्ता रमा देवी हरिणा दैवयोगतः।
रुरोद वेपमाना सा भयभीताऽतिदुःखिता ।। १७. ६२ ।।

तमुवाच रमा नाथं शंकिता चारुहासिनी।
प्रणम्य शिरसा देवं स्वपतिं विनयान्विता ।। १७. ६३ ।।

देवदेव जगन्नाथ करुणाकर केशव।
स्वल्पेऽपराधे गोविन्द कस्माच्छापं ददासि मे ।। १७. ६४ ।।

न कदाचिन्मया दृष्टः क्रोधस्ते हीदृशः प्रभो।
क्वगतस्ते मयि स्नेहः सहजो न तु नश्वरः ।। १७. ६५ ।।

प्रसादं कुरु देवेश शापादस्मात्सुदारुणात्।
कदा मुक्ता समीपं ते प्राप्नोमि सुखदं विभो ।। १७. ६८ ।।

17.62–63. விதிவசத்தால் விஷ்ணுவால் இங்ஙனம் சபிக்கப்பட்ட ரமா தேவி மிகுந்த துக்கத்தையடைந்து பயத்தால் நடுங்கிக் கொண்டும் அழுது கொண்டும் எப்பொழுதும் அழகிய சிரிப்புடைய அவள் தயக்கத்துடன் தேவதேவனாகிய தன் நாயகனைப் பணிவுடன் தலையால் வணங்கிப் பின்வருமாறு கூறினாள்.

17.64. ‘தேவதேவா! ஜகந்நாதா! கருணைக்கடலே! கேசவா! கோவிந்தா! சிறிய பிழைக்கு ஏன் எனக்குச் சாபமளித்து விட்டீர்கள்?

17.65. ‘பிரபுவே! இப்படிப்பட்ட கோபத்தை நான் உங்களிடம் ஒரு பொழுதும் கண்டதில்லையே. என்னிடம் உங்களுக்கு இயல்பாகவுள்ள சிநேகம் எங்கு போய் விட்டது? அது அழிவுடையதன்றே.

17.68. ‘தேவநாயகரே! பிரபுவே! எனக்கிரங்கி அருள் புரியுங்கள். இக்கொடிய சாபத்தினின்று நான் எப்பொழுது விடுபட்டு இன்பந்தரும் உங்கள் அருகாமையை அடைவேன்?’

हरिरुवाच—

यदा ते भविता पुत्रः पृथिव्यां मत्समः प्रिये।

तदा मां प्राप्य तन्वंगि सुखिता त्वं भविष्यसि ।। १७. ६९ ।।

जनमेजय उवाच —

इति शप्ता भगवता सिन्धुजा कोपयोगतः ।

कथं सा वडवा जाता रेवन्तेन च किं कृतम् ।। १८. १ ।।

व्यास उवाच —

रेवन्तस्तु रमां दृष्टवा शप्तां देवेन कामिनीम् ।

भयार्तः प्रययौ दूरात्प्रणम्य जगतां पतिम् ।। १८. ८ ।।

ஹரி கூறியது—

17.69. 'பிரியே! மெல்லிய உடல்படைத்தவளே! பூலோகத்தில் சென்றபின் எனக்குச் சமமான புத்திரன் உன்னிடம் எப்பொழுது தோன்றுகின்றானோ அப்பொழுது நீ என்னை மீண்டும் அடைந்து இன்புறுவாய்.'

ஜனமேஜயன் கூறியது—

18.1. கோபமெழுந்த பகவானால் இவ்வாறு சபிக்கப்பட்ட லக்ஷ்மி எப்படிப் பெண்குதிரை வடிவு கொண்டாள்? ரேவந்தன் என்ன செய்தான்?

வியாசர் கூறியது—

18.8. தேவதேவரால் காமினியாகிய ரமா சபிக்கப்பட்டதைக் கண்டு ஜகத்பதியை தூரத்திலிருந்தே வணங்கிவிட்டு பயம் மேலிட்டவனாய் ரேவந்தன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

पितुः सकाशं त्वरितो वीक्ष्य कोपं जगत्पतेः ।
निवेदयामास कथां भास्कराय सशापजाम् ॥ १८. ९ ॥

दुःखिता सा रमा देवी प्रणम्य जगदीश्वरम् ।
आज्ञप्ता मानुषं लोकं प्राप्ता कमललोचना ॥ १८. १० ॥

सूर्यपत्न्या तपस्तप्तं यत्र पूर्वं सुदारुणम् ।
तत्रैव सा ययावाशु वडवारूपधारिणी ॥ १८. ११ ॥

कालिन्दी-तमसासंगे सुपर्णाक्षस्य चोत्तरे ।
सर्वकामप्रदे स्थाने सुरम्यवनमण्डिते ॥ १८. १२ ॥

तत्र स्थिता महादेवं शंकरं वांछितप्रदम् ।
दध्यौ चैकेन मनसा शूलिनं चन्द्रशेखरम् ॥ १८. १३ ॥

18.9. ஜகத்பதியின் கோபத்தைப் பார்த்து விரைவில் தன் தந்தையாகிய சூரியனிடம் சென்று சாபத்தைப் பற்றிய வரலாற்றைத் தெரிவித்தான்.

18.10. கமலக் கண் படைத்த ரமா தேவி ஜகதீசுவரனை நமஸ்கரித்துவிட்டு துக்கத்துடன் ஆக்ஞைப்படி மானிட லோகத்தை யடைந்தாள்.

18.11. சூரிய பத்தினியால் முன்பு எவ்விடத்தில் தவஞ் செய்யபட்டதோ அவ்விடத்திற்குப் பெண் குதிரை வடிவில் விரைந்து சென்றாள்.

18.12–13. யமுனையும் தமஸா நதியும் சேருமிடத்தில் ஸுபர்ணாக்ஷம் எனும் க்ஷேத்திரத்திரத்திற்கு வடக்கில் எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விக்கக் கூடிய ஸ்தானத்தில் மனதிற்கினிய வன மத்தியில் இருந்து கொண்டு மங்களங்களை யளிப்பவரும் விருப்பத்தைப் பூர்த்தி செய்பவரும் சூலபாணியும், சந்திரனைக் தலையிலணிந்தவருமான மகாதேவரை ஒருமைப்பட்ட மனதுடன் தியானிக்கலானாள்.

ध्यायमाना परं देवं वैराग्यं समुपाश्रिता ।
दिव्यं वर्षसहस्रं तु गतं तत्र महीपते ।। १८. १७ ।।

ततस्तुष्टो महादेवो वृषारूढ-स्त्रिलोचनः ।
प्रत्यक्षोऽभून्महेशानः पार्वतीसहितः प्रभुः ।। १८. १८ ।।

तत्रैत्य सगणः शंभुस्तामाह हरिवल्लभाम् ।
तपस्यन्तीं महाभागा-मश्विनीरूपधारिणीम् ।। १८. १९ ।।

नारायणस्तु सर्वेषां सेव्यो योग्यः सदैव हि ।
तं त्यक्त्वा देवदेवेशं किं मां ध्यायसि सिन्धुजे ।। १८. २४ ।।

लक्ष्मीरुवाच —

आशुतोष महाभाग शप्ताऽहं पतिना शिव ।
मां समुद्धर देवेश शापादस्माद्दयानिधे ।। १८. २५ ।।

18.17. அரசே! வைராக்கியத்தைக் கைக்கொண்டு அங்ஙனம் அவள் தியானிக்கையில் ஆயிரம் தேவ வருஷங்கள் கழிந்தன.

18.18. ஸந்தோஷமடைந்த மகேசுவரரும் பிரபுவும் முக்கண்ணருமான மகாதேவர் பார்வதி தேவியுடன் விருஷபாருடராய்ப் பிரத்தியக்ஷமானார்.

18.19. சம்புவானவர் தமது கணங்களுடன் அங்ஙனம் எழுந்தருளிப் பெண்குதிரை வடிவந்தரித்துத் தவம் செய்பவளும் விஷ்ணு பத்தினியான அந்தப் பெருமாட்டியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்.

18.24. பாற்கடலில் உதித்தவளே! தேவர்களுக்கு தேவியான ஈசுவரி! நாராயணர் எல்லோராலும் எல்லாக் காலத்திலும் வணங்கி வழிபடுதற்குரியவர். அந்த தேவ நாயகரை விட்டு ஏன் என்னை தியானம் செய்கிறாய்?

லக்ஷ்மி தேவி கூறியது—

18.25. விரைவில் மகிழ்ந்தருள் புரியும் பெருமானே! சிவனே! தேவர்களின் ஈசனே! தயா நிதியே! நான் என் நாயகரால் சபிக்கப்பட்டுள்ளேன். அச்சாபத்திலிருந்து என்னைக் கரையேற்ற வேண்டும்.

मयैतद्गिरिजाकान्त ज्ञातं पत्युः पुरो हर।
यस्त्वं सोऽसौ पुनर्योऽसौ स त्वं नास्त्यत्र संशयः ॥ १८. ३१ ॥

एकत्वं च मया ज्ञात्वा मया ते स्मरणं कृतम्।
अन्यथा मम दोषस्त्वामाश्रयन्त्या भवेच्छिव ॥ १८. ३२ ॥

शिव उवाच—

कथं ज्ञातस्त्वया देवि मम तस्य च सुन्दरि।
ऐक्यभावो हरेर्नूनं सत्यं मे वद सिन्धुजे ॥ १८. ३३ ॥

लक्ष्मीरुवाच—

एकदा देवदेवेश विष्णुर्ध्यानपरो रहः।
दृष्टो मया तपः कुर्वन् पद्मासनगतो यदा ॥ १८. ३९ ॥

18.31. ஹரனே! கிரிஜாகாந்தா! என் பதியிடமிருந்து ஏற்கனவே நான் தெரிந்து கொண்டுள்ளதாவது: நீரே அவர், அவரே நீர். இதில் சந்தேகமில்லை.

18.32. இவ் வொற்றுமையை உணர்ந்தே என்னால் உங்களுடைய தியானம் செய்யப்பட்டது. சிவனே! அங்ஙன மில்லாதிருந்தால் உம்மை ஆசிரயித்த எனக்கு தோஷ மேற்படும்.

சிவன் கூறியது—

18.33. தேவி! சுந்தரி! பாற்கடலில் உதித்தவளே! எனக்கும் ஹரியாகிய அவருக்குமுள்ள ஐக்கிய பாவம் உண்மை என்பது நிச்சயம். அது எவ்வாறு உன்னால் அறிந்து கொள்ளப்பட்டது என்பதை எனக்குக் கூறு.

லக்ஷ்மி கூறியது—

18.39. தேவர்களுக்கு தேவரான ஈசுவரரே! ஒரு சமயம் விஷ்ணுவானவர் இரகசியமாக பத்மாஸனத்தில் அமர்ந்து தியானத்திலிருந்து கொண்டு தவஞ் செய்தது என்னால் காணப்பட்டது.

तदाऽहं विस्मिता देवं तमपृच्छं पतिं किल।
त्वं किं ध्यायसि सर्वेश संशयोऽयं महान्मम ॥ १८. ४३ ॥

विष्णुरुवाच—

शृणुकान्ते प्रवक्ष्यामि यं ध्यायामि सुरोत्तमम्।
आशुतोषं महेशानं गिरिजावल्लभं हृदि ॥ १८. ४४ ॥

कदाचिद्देवदेवो मां ध्यायत्यमितविक्रमः।
ध्यायाम्यहं च देवेशं शंकरं त्रिपुरान्तकम् ॥ १८. ४५ ॥

शिवस्याहं प्रियः प्राणः शंकरस्तु तथा मम।
उभयोरन्तरं नास्ति मिथः संसक्तचेतसोः ॥ १८. ४६ ॥

18.43. அப்பொழுது நான் வியப்படைந்து என் பதியாகிய தேவரைப் பின்வருமாறு வினவினேன்: 'ஸர்வேசுவரரே! நீங்கள் என்ன தியானம் செய்கிறீர்கள்? எனக்கு இது பெரிய சந்தேகம்.'

விஷ்ணு கூறியது

18.44. 'பிரியே கேள், எந்த தேவசிரேஷ்டரை தியானம் செய்கிறேன் என்று கூறுகிறேன். நான் இருதயத்தில் தியானம் செய்வது பார்வதிநாயகரும் விரைவில் சந்தோஷிப்பவருமான மகேசுவரரை.

18.45. 'அளவு கடந்த சக்திவாய்ந்த அந்த தேவதேவர் என்னை தியானம் செய்கிறார். தேவர்களின் ஈசுவரரும் திரிபுரஸம்ஹாரம் செய்தவருமான அந்த சங்கரரை நான் தியானம் செய்கிறேன்.

18.46. 'சிவனுக்கு நான் பிரியமான பிராணன். எனக்கும் சங்கரர் அப்படியே. சித்தம் ஒருமித்த எங்களிருவரிடை வேற்றுமை இல்லை.'

व्यास उवाच—

इति श्रियो वचः श्रुत्वा प्रत्युवाच महेश्वरः।
स्वस्था भव पृथुश्रोणि तुष्टोऽहं तपसा तव ॥ १८. ५० ॥

समागमस्ते पतिना भविष्यति न संशयः।
अत्रैव हयरूपेण भगवान् जगदीश्वरः ॥ १८. ५१ ॥

आगमिष्यति ते कामं पूर्णं कर्तुं मयेरितः।
पुत्रस्ते भविता सुभ्रु नारायणसमः क्षितौ ॥ १८. ५४ ॥

एकवीरेति नाम्नाऽसौ ख्यातिं यास्यति ते सुतः।
तस्मात्तु हैहयो वंशो भुवि विस्तारमेष्यति ॥ १८. ५६ ॥

வியாஸர் கூறியது—

18.50. லக்ஷ்மியின் இவ்வார்த்தையைக் கேட்டு மகேசுவரர் கூறியதாவது: 'பெருத்த இடைபடைத்தவளே! உன்னுடைய தவத்தால் நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். நீ கவலையற்றிரு.

18.51–54. 'உன் பதியுடன் சேர்க்கை இங்கேயே ஏற்படும், சந்தேகமில்லை. ஜகதீசுவரராகிய பகவான் என்னால் தூண்டப்பட்டு உன்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்விக்க இங்கு வருவார். அழகிய நுதல் படைத்தவளே! நாராயணருக்குச் சமமான புத்திரன் உனக்கு இப்புவியில் தோன்றப் போகிறான்.

18.56. 'இந்த உன் புத்திரன் ஏகவீரன் என்ற பெயருடன் கீர்த்தியை அடையப் போகிறான். அவனால் ஹைஹய வம்சம் பூமியில் விஸ்தாரமடையப் போகிறது.

परन्तु विस्मृताऽसि त्वं हृदिस्थां परमेश्वरीम् ।
मदान्धा मत्तचित्ता च तेन ते फलमीदृशम् ॥ १८. ५७ ॥

अतस्तद्दोषशान्त्यर्थं हृदिस्थां परदेवताम् ।
शरणं याहि सर्वात्मभावेन जलधेः सुते ॥ १८. ५८ ॥

इति दत्वा वरं देव्यै भगवान् शैलजापतिः ।
अन्तर्धानं गतः साक्षादुमया सहितः शिवः ॥ १८. ५९ ॥

साऽपि तत्रैव चार्वंगी संस्थिता कमलासना ।
ध्यायन्ती चरणाम्भोजं देव्याः परमशोभनम् ॥ १८. ६० ॥

प्रेमगद्गदया वाचा तुष्टाव च मुहुर्मुहुः ।
प्रतीक्षमाणा भर्तारं हयरूपधरं हरिम् ॥ १८. ६१ ॥

18.57. 'இன்னொரு விஷயம். உன் இருதயத்தில் குடி கொண்டுள்ள பரமேசுவரியை நீ மதத்தால் குருடாகி அறிவிழந்து மறந்து விட்டாய். அதனுல் தான் உனக்கு இப்படிப்பட்ட பயன் ஏற்பட்டுள்ளது.

18.58. 'கடலரசன் பெண்ணே! ஆகையால் தோஷ சாந்தியின் பொருட்டு முழுமனத்துடன் உன் இருதயத்தி லுள்ள பரதேவதையைச் சரணடைவாயாக.'

18.59. பார்வதி நாயகராகிய பகவான் சிவன் இவ்வாறு லக்ஷ்மிதேவிக்கு வரமளித்துவிட்டு அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உமாதேவியுடன் மறைந்து விட்டார்.

18.60. அழகிய அங்கம் படைத்த லக்ஷ்மியும் அங்கேயே கமலாஸனத்திலிருந்துகொண்டு தேவியின் பரம மங்களமான திருவடித்தாமரைகளை தியானம் செய்யலானுள்.

18.61. குதிரைவடிவுடன் வரப்போகும் பர்த்தாவான ஹரியை எதிர்பார்த்துக்கொண்டு அன்பினுல் தழதழத்த சொற்களால் பரதேவதையை அடிக்கடி துதித்தாள்.

तस्यै दत्त्वा वरं शंभुः कैलासं त्वरितो ययौ।
रम्यं देवगणैर्जुष्ट-मप्सरोभिश्च मण्डितम ॥ १९. १ ॥

तत्र गत्वा चित्ररूपं गणं कार्यविशारदम्।
प्रेषयामास वैकुण्ठे लक्ष्मीकार्यार्थसिद्धये ॥ १९. २ ॥

हरिराकर्ण्य तद्वाक्यं चित्ररूपस्य भारत।
तथेत्युक्त्वा तु दूतं तं प्रेषयामास शंकरम् ॥ १९. ३५ ॥

गते दूतेऽथ भगवान् वैकुण्ठात्कामसंयुतः।
जगाम धृत्वा तत्राऽऽशु वाजिरूपं मनोहरम् ॥ १९. ३६ ॥

यत्र सा वडवारूपं कृत्वा तपति सिन्धुजा।
विष्णुस्तं देशमासाद्य तामपश्यद्धयीं स्थिताम् ॥ १९. ३७ ॥

19.1. அவளுக்கு வரமளித்துவிட்டுச் சம்புவானவர் அழகியதும் தேவகணங்கள் நிரம்பியதும் அப்ஸரஸ்திரீகளால் சூழப்பட்டதுமான கைலாயத்திற்கு விரைவில் சென்றார்.

19.2. அங்கு சென்றதும் தமது கணங்களுள் காரியத்தில் வல்லவனான சித்ரரூபன் என்பவனை லக்ஷ்மியின் காரியசித்திக்காக வைகுண்டத்திற்கு (நாராயணருக்குச் செய்தி சொல்லி) அனுப்பினார்.

19.35. பாரதா! சித்ரரூபன் கூறிய செய்தியைக் கேட்டு ஹரியானவர் 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிச் சங்கரரிடம் அந்த தூதனைத் திருப்பியனுப்பினார்.

19.36. தூதன் சென்றபின் பகவான் ஆசை மேலிட்டவராய் அழகியதும் வேகமானதுமான குதிரைவடிவெடுத்துக் கொண்டு விரைவில் வைகுண்டத்திலிருந்து புறப்பட்டார்.

19.37. கடலரசன் பெண்ணாகிய லக்ஷ்மி பெண் குதிரை வடிவில் எங்கு தவஞ்செய்து கொண்டிருந்தாளோ அந்த இடத்தை விஷ்ணு அடைந்து அவளைக் கண்டார்.

तयोस्तु संगमस्तत्र प्रवृत्तो मन्मथार्तयोः।
कालिन्दी-तमसासंगे पावने लोकविश्रुते ॥ १९. ३९ ॥

सगर्भा सा तदा जाता वाडवा हरिवल्लभा।
सुषुवे सुन्दरं बालं तत्रैव सुगुणोत्तरम् ॥ १९. ४० ॥

तामाह भगवान्वाक्यं प्रहस्य समयाश्रितम्।
त्यजाऽद्य वाडवं देहं पूर्वदेहा भवाधुना ॥ १९. ४१ ॥

गमिष्यावः स्ववैकुण्ठ-मावां कृत्वा निजं वपुः।
तिष्टत्वत्र कुमारोऽयं त्वया जातः सुलोचने ॥ १९. ४२ ॥

19.39. புகழ்பெற்றதும் புனிதமானதுமான அந்த யமுனா தமஸா ஸங்கம க்ஷேத்திரத்தில் காமவசப்பட்ட அவர்களிடை ஸங்கமம் ஏற்பட்டது.

19.40. குதிரைவடிவு கொண்ட விஷ்ணுபத்னி கருத் தரித்து நற்குணத்திற் சிறந்த அழகிய பாலனை அங்கேயே பெற்றாள்.

19.41-42. (குழந்தை பிறந்ததும் வைகுண்டம் திரும்ப வேண்டும் என்ற) முன்ஸங்கேதத்தின்படி பல வந்தமாக பகவான் அவளிடம் பின்வருமாறு கூறினார்: 'இப்பொழுது பெண்குதிரை உடலை விட்டு உடனே முன் வடிவை எடுத்துக்கொள். நாமிருவரும் சுயவடிவு கொண்டு நமது வைகுண்டம் செல்வோம். அழகிய கண்படைத்தவளே! உன்னிடம் பிறந்த இந்தக் குமாரன் இங்கேயே இருக் கட்டும்.

तुर्वसुर्नाम विख्यातो ययातितनुजो भुवि।
हरिवर्मेति पित्राऽस्य कृतं नाम सुविश्रुतम् ॥ १९. ५१ ॥

स राजा पुत्रकामोऽद्य तपस्तपति पावने।
तीर्थे वर्षशतं जातन्तस्य वै कुर्वतस्तपः ॥ १९. ५२ ॥

तस्यार्थे निर्मितः पुत्रो मयाऽयं कमलालये।
तत्र गत्वा नृपं सुभ्रु प्रेरयिष्यामि साम्प्रतम् ॥ १९. ५३ ॥

तस्मै दास्याम्यहं पुत्रं पुत्रकामाय कामिनि।
गृहीत्वा स्वगृहं राजा प्रापयिष्यति बालकम् ॥ १९. ५४ ॥

इत्याश्वास्य प्रियां पद्मां कृत्वा रक्षां च बालके।
विमानवरमारुह्य प्रययौ प्रियया सह ॥ १९. ५५ ॥

19.51–52. 'இப்புவியில் யயாதிபுத்திரனும் துர்வஸு எனப் புகழ் பெற்றவனும், தந்தையால் ஹரிவர்மா எனப் பிரசித்தியான பெயரிடப்பட்டவனுமாகிய அரசன் புத்திரனை வேண்டிப் பரிசுத்தமான தீர்த்தத்தில் தவஞ்செய்து கொண்டிருக்கிறான். அவனுக்குத் தவத்தில் நூறு வருஷம் கழிந்து விட்டது.

19.53–54. 'கமலவாஸினி! அவன் பொருட்டே என்னால் இப்புத்திரன் உண்டாக்கப்பட்டான். புருவம் அழகியவளே! அங்கு சென்று இப்பொழுது அவ்வரசனை நான் தூண்டுகிறேன். காமினி! புத்திரனை வேண்டி நிற்கும் அவனுக்கு இப்புத்திரனை அளிக்கிறேன். அவன் இப்பாலகனை எடுத்துக் கொண்டு போய் அரண்மனையில் சேர்ப்பான்.'

19.55. இவ்வாறு பிரியையான லக்ஷ்மிக்குத் தேறுதல் கூறி பாலகனுக்கும் இரக்ஷையை ஏற்படுத்திவிட்டுச் சிறந்த விமானத்திலேறிக்கொண்டு லக்ஷ்மியுடன் புறப்பட்டார்.

तदैव कमलाकान्तो लक्ष्म्या सह जगद्गुरुः ।
विमानवरमारूढो जगाम नृपतिं प्रति ॥ २०. २७ ॥

दृष्टस्तदा तेन नृपेण विष्णुः
समुत्तरंस्तत्र विमानमुख्यात् ।
जहर्ष राजा हरिदर्शनेन
पपात भूमौ खलु दण्डवच्च ॥ २०. २८ ॥

ततो नृपस्तं प्रणिपत्य पादयोः
प्रोवाच विष्णुं पुरतः स्थितं च ।
तपस्तु तप्तं हि मया सुतार्थे
पुत्रं ददस्वाऽऽत्मसमं मुरारे ॥ २०. ३३ ॥

20.27. ஜகத்குருவாகிய கமலாகாந்தர் லக்ஷ்மியுடன் அப்பொழுதே விமானத்தில் அரசனிடம் வந்து சேர்ந்தார்.

20.28. விஷ்ணு வந்து விமானத்தினின்று இறங்குவதை அரசன் கண்டான். ஹரியின் தர்சனத்தால் மகிழ்ச்சி பொங்க அவன் பூமியில் தண்டம் போல் விழுந்து நமஸ்கரித்தான்.

20.33. பாதங்களில் நமஸ்கரித்துப் பின்பு அவ்வரசன் தன் முன் நின்ற விஷ்ணுவிடம் பின்வருமாறு பிரார்த்தித்தான்: 'முராரே! பிள்ளை வேண்டி நான் தவஞ்செய்தேன். தேவரீரைப் போன்ற புத்திரனை எனக்குத் தந்தருள வேண்டும்.'

श्रुत्वा नृपप्रार्थित-मादिदेव-
स्तमाह राजान-ममोघवाक्यम्।
ययातिसूनो व्रज तत्र तीर्थे
कलिन्दकन्या-तमसाप्रसंगे ॥ २० ३४ ॥

मयाऽद्य पुत्रस्तु यथेप्सितस्ते
तत्रैव मुक्तोऽस्त्यमित-प्रभावः।
लक्ष्म्याः प्रसूतो मम वीर्यजश्च
कृतस्तवार्थेऽथ गृहाण राजन् ॥ २०. ३५ ॥

स तत्र गत्वाऽतिमनोहरं तं
ददर्श बालं भुवि खेलमानम्।
मुखे निवेश्यैककरेण कृत्वा
श्लक्ष्णं पदांगुष्ठ-मनन्यसत्त्वः ॥ २०. ३८ ॥

20.34. அரசன் பிரார்த்தனையைக் கேட்டு ஆதிதேவர் அவனிடம் பின்வரும் பழுதுபடாத வார்த்தையைக் கூறினர். 'யயாதிகுமாரனே ! யமுனையும் தமஸா நதியும் ஸங்கமமாகும் க்ஷேத்திரத்திற்குச் செல்.

20.35. 'உன்னால் விரும்பப்பட்ட பிரகாரம் என்னால் இப்பொழுது அங்கே விடப்பட்டுள்ளான். அவன் அளவு கடந்த மகிமை வாய்ந்தவன். என் வீரியத்தால் லக்ஷ்மியிடம் பிறந்தவன். உனக்காகவே அவன் தோற்றுவிக்கப்பட்டவன். அரசே ! அவனை நீ எடுத்துக்கொள்.'

तं वीक्ष्य पुत्रं मदनस्वरूपं
नारायणांशं कमलाप्रसूतम् ।
हरिप्रभावं हरिवर्मनामा
हर्षप्रफुल्लानन-पंकजोऽभूत् ॥ २०. ३९ ॥

त्वमेव संसार-समुद्र-नौका–
रूपः कृतः पुत्र लक्ष्मीधरेण ।
इत्येवमुक्त्वा नृपतिः सुतं तं
मुदा समादाय ययौ गृहाय ॥ २०. ४४ ॥

20.38. அவன் அங்கு சென்று மிகவும் மனதிற்கினிய அந்த பாலனைக் கண்டான். ஒப்புயர்வற்ற அப்பாலகன் அழகிய கால் கட்டைவிரலை ஒரு கையால் பிடித்து வாயில் வைத்துக் கொண்டு தரையில் விளையாடிக் கொண்டிருந்தான்.

20.39. நாராயணாம்சம் பொருந்தியவனும் லக்ஷ்மியால் பெற்றெடுக்கப்பட்டவனும் பகவத்பிரபாவமுடையவனும் மன்மதன் போன்று அழகியவனுமான அப்புத்திரனை ஹரி வர்மா என்ற அவ்வரசன் பார்த்து ஆனந்தத்தால் கண்கள் தாமரை போல் மலர்ந்தவனானான்.

20.44. 'நீயே ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுவதற்குக் கப்பல் போன்றவன். புத்திரா! லக்ஷ்மீதரரால் இந்த ரூபத்துடன் தோன்றியவன்' என்று கூறி அரசன் அம்மகனை மகிழ்ச்சியுடன் எடுத்துக் கொண்டு வீடு சென்றான்.

गृहं समृद्धं सचिवैः समेतः
सुतं समादाय मुदा कराभ्याम् ।
राज्ञ्यै ददौ चाऽथ सुतं मनोज्ञं
सद्यः प्रसूतं च मनोभवाभम् ॥ २०. ४८ ॥

राज्ञी गृहीत्वाऽभिनवं तनूजं
पप्रच्छ राजान-मनिन्दिता सा ।
राजन् कुतश्चैष सुतः सुजन्मा
प्राप्तस्त्वया मन्मथतुल्यरूपः ॥ २०. ४९ ॥

नृपस्तदोवाच मुदाऽन्वितोऽसौ
प्रिये रमेशेन सुतोऽस्ति मह्यम् ।
लोलाक्षि दत्तः कमलासमुत्थो
जनार्दनांशोऽयमहीनसत्त्वः ॥ २०. ५० ॥

20.48–49. (தனது நகரத்தில் வரவேற்கப்பெற்ற) அவ்வரசன் மந்திரிமார்களுடன் எல்லாச் செல்வங்களும் நிறைந்த அரண்மனையில் புத்திரனைக் கைகளில் ஏந்திக் கொண்டு புகுந்து இராணியிடம் கொடுத்தான். அப்பொழுதே பிறந்தவனும், மனதிற்கினியவனும், மன்மதன் போல் பிரகாசிப்பவனும் ஆகிய அந்நூதன புத்திரனை வாங்கிக் கொண்டு மாசற்ற இராணியானவள் 'அரசே! மன்மதன் போன்று அழகனாய் நற்பிறவியெடுத்த இப்புத்திரனை எங்கு பெற்றீர்கள்?' என்று அரசனை வினவினாள்.

20.50. மகிழ்ச்சியுடன் கூட அரசன் கூறுவான்: 'பிரியே! சலிக்கும் கண்களையுடையவளே! இப்புத்திரன் ரமா நாயகரால் எனக்களிக்கப்பட்டான். அவன் லக்ஷ்மியால் பெற்றெடுக்கப்பட்டவன். விஷ்ணுவின் அம்சம் பொருந்தியவன். அவரினும் குறைவுபடாத சக்தி வாய்ந்தவன்.'

सा तं गृहीत्वा मुदमाप राज्ञी
राजा चकारोत्सव-मद्भुतं च।
ददौ च दानं किल याचकेभ्यो
गीतानि वाद्यानि बहूनि नेदुः ॥ २०.५१ ॥

कृत्वोत्सवं भूपतिरात्मजस्य
नामैकवीरेति चकार विश्रुतम्।
सुखं च संप्राप्य मुदान्वितोऽसौ
ननन्द देवाधिप-तुल्यवीर्यः ॥ २०. ५२ ॥

जातकर्मादिसंस्कारांश्चकार नृपतिस्तदा।
दिने दिने जगामाशु वृद्धिं बालः सुलालितः ॥ २१. १ ॥

20.51. அவ்வரசி குழந்தையைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைந்தாள். அரசன் அற்புதமான உற்சவம் கொண்டாடி யாசகர்களுக்கு தானமளித்தான். பலவகை கீதங்களும், வாத்தியங்களும் முழங்கின.

20.52. அரசன் புத்திரனுக்கு உற்சவத்தை நடத்தி பிரபலமான ஏகவீரன் என்ற நாமத்தைச் சூட்டினன். தேவராஜனுக்குச் சமமான வீரியம் படைத்த அவன் இன்புற்று மகிழ்ச்சி நிறைந்தவனாய் விளங்கினன்.

21.1. அரசன் ஜாதகர்மா முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்தான். பாலகன் சீராட்டப் பெற்று நாள் தோறும் விரைவாக வளர்ச்சியடைந்தான்.

अधीतवेदं पुत्रं तं राजधर्मविशारदम् ।
दृष्ट्वा तस्याभिषेकाय मतिं चक्रे जनाधिपः ॥ २१. ६ ॥

जलमानीय तीर्थेभ्यः सागरेभ्यश्च पार्थिवः ।
स्वयं चकार विधिवदभिषेकं शुभे दिने ॥ २१. ९ ॥

एकवीरं नृपं कृत्वा संमान्य सचिवानथ ।
भार्यया सह भूपालः प्रविवेश वनं वशी ॥ २१. ११ ॥

मैनाकशिखरे राजा कृत्वा तार्तीयमाश्रमम् ।
नित्यं पत्रफलाहार-श्चिन्तयामास पार्वतीम् ॥ २१. १२ ॥

एवं स नृपतिः कृत्वा दिष्टान्ते सह भार्यया ।
मृतोऽसौ वासवं लोकं गतः पुण्येन कर्मणा ॥ २१. १३ ॥

21.6. (நாளடைவில்) வேதாத்தியயனம் செய்து ராஜ தர்மத்திலும் தேர்ச்சி பெற்றவனுகிய புத்திரனைப்பார்த்து அரசன் அவனுக்கு அபிஷேகம் செய்ய எண்ணினன்.

21.9. அரசன் சமுத்திரங்களிலிருந்தும் புண்ணிய தீர்த்தங்களிலிருந்தும் ஜலம் கொணர்ந்து தானே முறைப்படி ஒரு சுபதினத்தில் அபிஷேகத்தைச் செய்தான்.

21.11. ஏகவீரனை அரசனுக்கிவிட்டு, மந்திரிமார்களுக்கும் வெகுமானம் செய்து விட்டு இந்திரியங்களை அடக்கியவனாய் மனைவியுடன் வனம் புகுந்தான்.

21.12. மைநாக மலையுச்சியில் வானப்பிரஸ்தாசிரமத்தை அனுஷ்டிப்பவனாய் இலைகளையும் பழங்களையும் ஆஹாரமாய்க் கொண்டு எப்பொழுதும் பார்வதி தேவியை தியானிப்பவனானான்.

21.13. இங்ஙனம் மனைவியுடன் தவஞ்செய்து காலம் முடிவுற்ற பொழுது உடலை நீத்துப் புண்ணிய கருமப் பயனாய் இந்திரலோக மெய்தினன்.

एकवीरोऽथ धर्मज्ञः प्राप्य राज्यमनुत्तमम् ।
बुभुजे विविधान् भोगान् सचिवैश्च सुमानितः ॥ २१. १६ ॥

एकस्मिन् दिवसे राजा मन्त्रिपुत्रैः समन्वितः ।
जगाम जाह्नवीतीरे हयारूढः प्रतापवान् ॥ २१. १७ ॥

संपश्यन् पादपान् रम्यान् कोकिलालापसंयुतान् ।
पुष्पितान् फलसंयुक्तान् षट्पदालिविराजितान् ॥ २१. १८ ॥

पंकजं चातिगन्धाढ्य-मपश्यदवनीपतिः ।
दक्षिणे जलजस्याऽथ पार्श्वे कमललोचनाम् ॥ २१. २३ ॥

21.16. தர்மந்தெரிந்த ஏகவீரன் ஒப்புயர்வற்ற அரசை யடைந்து மந்திரிகளால் போற்றப் பெற்று பலவகையான போகங்களை யனுபவித்தான்.

27.17—18. புகழ்மிக்க அவன் ஒரு நாள் மந்திரி குமாரர் களுடன் குதிரைமீதேறிக் கொண்டு கங்கைக்கரைக்குச் சென்று புஷ்பங்களும் பழங்களும் நிறைந்தவைகளும், வண்டுகள் மொய்ப்பவைகளும், குயில்களின் கீதத்துடன் கூடியவைகளும், மனதிற்கினியவையுமான மரங்களைப் பார்த்துக் கொண்டு உலவினான்.

21.23. அப்பொழுது அவ்வரசன் அதிகமான வாசனை யுடன் கூடிய ஒரு தாமரைப் பூவையும் அதன் வலது பக்கத்தில் தாமரை போன்ற கண்படைத்த ஒரு நங்கையையுங் கண்டான்.

कनकाभां सुकेशीं च कंबुग्रीवां कृशोदरीम्।
बिम्बोष्ठीं सुन्दरीं किंचित्समुद्यत्सुपयोधराम् ॥ २१. २४ ॥

सुनासां चारुसर्वांगी-मपश्यत्कन्यकां नृपः।
रुदतीं तां सखीं त्यक्त्वा विह्वलां दुःखपीडिताम्
॥ २१. २५ ॥

साश्रुनेत्रां क्रन्दमानां विजने कुररीमिव।
संवीक्ष्य राजा पप्रच्छ कन्यकां शोककारणम् ॥ २१. २६ ॥

न राज्ये मम तन्वंगि पीडां कोऽपि करोत्यलम्।
न भयं व्याघ्रसिंहेभ्यो न भयं कस्यचिद्भवेत् ॥ २१. ३१ ॥

21.24–25. அக்கன்னிகை பொன் நிறத்தினளாயும், அழகிய கேசமுடையவளாயும், கழுத்தில் மூன்றுரேகைகள் பிரகாசிப்பவளாயும், நுண்ணிய இடையும் சிவந்த உதடும் உடையவளாயும், நகில் சற்று உதிக்கும் பருவத்தினளாயும், மூக்கும் மற்றெல்லா உறுப்புக்களும் நன்கமையப் பெற்ற வளாயும் இருக்கக் கண்டான். அவள் அருகில் தோழி எவளுமின்றி துக்கத்தால் பீடிக்கப்பட்டு மனம் நொந்து அழுது கொண்டிருந்தாள்.

21.26. ஜன நடமாட்டமில்லாத இடத்தில் கண் ணீரைப் பெருக்கிக் கொண்டு குரரீப் பக்ஷியைப் போல் கதறிக் கொண்டிருந்த அக்கன்னிகையைப் பார்த்து அரசன் அவளு டைய சோகத்திற்குக் காரணத்தைக் கேட்டான்.

21.31. 'மெலிந்தவளே! என்னுடைய ராஜ்யத்தில் எவனும் பிறரை பீடிக்க இயலாது. புலி, சிங்கங்களிட மிருந்தும் எவருக்கும் பயம் கிடையாது.

विशाललोचने ब्रूहि करोमि तव चिन्तितम्।
इत्युक्ते वचने राज्ञा श्रुत्वोवाच मृदुस्वना ॥ २१. ३४ ॥

शृणु राजेन्द्र वक्ष्यामि मम शोकस्य कारणम्।
विपत्तिरहितः प्राणी कथं रुदति भूपते ॥ २१. ३५ ॥

प्रब्रवीमि महाबाहो यदर्थं रुदती त्वहम्।
तव राज्यादन्ये देशे राजा परमधार्मिकः ॥ २१. ३६ ॥

रैभ्यो नाम महाराजः सन्तानरहितो भृशम्।
तस्य भार्या सुविख्याता रुक्मरेखेति नामतः ॥ २१. ३७ ॥

अपुत्रा दुःखिता कान्तमित्युवाच पुनः पुनः।
किं जीवितेन मे नाथ धिग्वृथा जीवितं मम ॥ २१. ३८ ॥

21.34. 'பரந்த கண்படைத்தவளே! உன்னுடைய எண்ணத்தை நான் முடித்துவைக்கிறேன். அதை என்னிடம் கூறு' என்று அரசனுல் கூறப்பட்ட வசனத்தைக் கேட்டு அவள் மெதுவான குரலில் பதிலுரைக்கலானுள்.

21.35. 'அரசசிரேஷ்டரே! என் சோகத்தின் காரணத்தைக் கூறுகிறேன், கேளும். ஆபத்தில்லாத பிராணி ஏன் அழவேண்டும்?

21.36–38. 'பெருந்தோள் படைத்தவரே! ஏன் அழுகிறேன் என்பதைக் கூறுகிறேன். உம்முடைய தேசமல்லாத வேரூரு தேசத்தில் பரமதார்மிகனுன ஒரு அரசன் இருந்தான். அந்த மகாராஜன் பெயர் ரைப்யன். அவனுக்குப் பிள்ளை இல்லை. ருக்மரேகா என்று பெயர் பெற்ற அவனுடைய மனைவி புத்திரனில்லாத துக்கத்தால் கணவனை நோக்கி அடிக்கடி பின்வருமாறு கூறுவாள்; 'நாதா! என் வாழ்க்கை வீண். நான் ஜீவித்திருப்பதால் என்ன பயன்?'

इत्येवं भार्यया भूपः प्रेरितो मखमुत्तमम् ।
चकार ब्राह्मणांस्तज्ज्ञानाहूय विधिवत्तदा ।। २१. ३९ ।।

हूयमाने घृतेऽत्यर्थं पावकादतिसुप्रभात् ।
आविर्बभूव चावंगी कन्यका शुभलक्षणा ।। २१. ४१ ।।

होता प्रोवाच राजानं गृहीत्वा तां सुमध्यमाम् ।
राजन् पुत्रीं गृहाणेमां सर्वलक्षणसंयुताम् ।। २१. ४५ ।।

नाम्ना चैकावली लोके ख्याता पुत्री भविष्यति ।
सुखितो भव भूपाल पुत्र्या पुत्रसमानया ।। २१. ४६ ।।

मुदं च परमां प्राप नृपभार्या सुतान्विता ।
उत्सवस्तद्दिने तस्य प्रवृत्तः सुतजन्मजः ।। २१. ५३ ।।

21.39: 'இவ்வாறு மனைவியால் தூண்டப்பட்ட அரசன் யாகத்தின் விதிகளையறிந்த பிராம்மணர்களைக் கூப்பிட்டு முறைப்படி ஒரு சிறந்த யாகத்தைச் செய்தான்.

21.41. 'நெய்யால் பூர்ணாஹுதி செய்யும் பொழுது அக்னியிலிருந்து மிகுந்த ஒளியுடன் கூடியவளும் சுபலக்ஷணங்கள் பொருந்தியவளும் அழகிய அங்கங்கள் படைத்தவளுமான ஒரு கன்னிகை ஆவிர்ப்பவித்தாள்.

21.45–46. 'ஹோமம் செய்தவர் இடையழகுவாய்ந்த அக்கன்னிகையை எடுத்து அரசனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்: 'அரசே! எல்லா லக்ஷணங்களுடனும் கூடிய இந்தப்புத்திரியை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தப்புத்திரி ஏகாவளீ என்ற பெயருடன் உலகில் பிரசித்தியடையப் போகிறாள். புத்திரனுக்குச் சமமான இப்புத்திரியால் நீர் இன்புற்றிரும்.'

21.53. 'அரசபத்னி அப்புத்திரியைப் பெற்றுப் பரம ஸந்தோஷமடைந்தாள். அன்று அக்குழந்தையின் ஜன்மோத்ஸவம் கொண்டாடப்பட்டது.

पुत्री पुत्रसमाऽत्यर्थं बभूव वल्लभा किल।
राज्ञो मन्त्रिसुता चाहं सुबुद्धे मन्मथाकृते ॥ २१. ५४ ॥

यशोवती च मे नाम समानं वय आवयोः।
वयस्याऽहं कृता राज्ञा क्रीडनाय तया सह ॥ २१. ५५ ॥

क्रीडार्थं जाह्नवी तोये नित्यमायाति याति च।
प्रातरुत्थाय तन्वंगी चलिता च सखीयुता ॥ २२. १ ॥

अहमप्यनया सार्धं गंगातीरे समागता।
सहसैव तदाऽऽयातो दानवो बलसंयुतः ॥ २२. ४ ॥

कालकेतुरिति ख्यातो राक्षसैर्बहुभिर्युतः।
रक्षकान् दूरतः कृत्वा जग्राहाम्बुजलोचनाम् ॥ २२. १० ॥

21.54. 'மன்மதனைப் போன்றவரே! புத்தியிற் சிறந்தவரே! புத்திரனுக்கொப்பான அப்புத்திரி சிறப்பு மிக்கவளாய் வளர்ந்தாள். நான் அரசனுடைய மந்திரியின் பெண்.

21.55. 'என் பெயர் யசோவதி. நாங்கள் ஸம வயது உள்ளவர்கள். அவளுடன் விளையாட்டுத் தோழியாக அரசனுல் நான் செய்யப்பட்டேன்.

22.1. 'அம்மெல்லியாள் நாள்தோறும் காலையில் எழுந்து தோழிகளுடன் கூட உலவுவதற்கும், கங்கை நீரில் விளையாடுவதற்கு வருவதும் போவதுமாயிருந்தாள்.

22.4. 'ஒரு நாள் அவளுடன் நான் கங்கைக்கரைக்கு வந்தேன். திடீரென்று பலம் மிக்க ஒரு அசுரன் அங்கு வந்தான்.

22.10. 'காலகேது என அவன் பிரசித்தி பெற்றவன். பலராட்சஸர்கள் சூழ அவன் வந்து எங்கள் காப்பாளர்களை விரட்டியடித்துத் தாமரைக் கண்ணியான அரசபுத்திரியைக் கவர்ந்தான்.

त्यजैनां मां गृहाणेति मया चोक्तोऽपि दानवः ।
न मां जग्राह कामार्तस्तां गृहीत्वा विनिःसृतः ॥ २२. ११ ॥

पृष्ठतोऽहं गता तत्र यत्र नीता सखी मम ।
साऽपि मामागतां वीक्ष्य किंचित्स्वस्थाऽभवत्तदा ॥ २२. १६ ॥

स मामाह कालकेतुः प्रीतिपूर्वमिदं वचः ।
समाश्वासय भीतां त्वं सखीं चंचललोचनाम् ॥ २२. १९ ॥

प्राप्तं ममाऽद्य नगरं देवलोकसमं प्रिये ।
दासोऽस्मि तव रत्या हि कस्मात्क्रन्दसि कातरा ॥ २२. २० ॥

इत्युक्त्वा मां सखीपार्श्वे समारोप्य रथोत्तमे ।
जगाम तरसा दुष्टः पुरे स्वस्य मनोहरे ॥ २२. २१ ॥

22.11. 'அவளை விட்டுவிடு. என்னைக் கொண்டு போ' என்று நான் கூறியும் அவ்வசுரன் என்னைப் பிடிக்காமல் அவளை மட்டும் காம வெறியுடன் தூக்கிக் கொண்டு சென்றான்.

22.16. 'என்தோழி எங்கு கொண்டு போகப்பட்டாளோ அங்கு நானும் பின்னாலேயே போனேன். நான் வந்ததை அவள் கண்டு சற்று மனந்தேறியவளானாள்.

22.19. 'காலகேது பிரீதியுடன் என்னிடம் இவ்வார்த்தையைக் கூறினான்: 'சஞ்சலமான பார்வையுள்ள உன் தோழி பயந்திருக்கிறாள். நீ அவளைச் சமாதானப்படுத்து.

22.20. 'பிரியமானவளே! இப்பொழுது என்னுடைய நகரம் வந்து விட்டது. அது தேவலோகதிற்குச் சமமானது. உன்னிடம் ஆசை கொண்ட நான் உனக்கு அடிமை. பயந்து ஏன் அழுகிறாய்?' (என்று நான் கூறியதாகக் கூறு).

22.21. 'இங்ஙனம் சொல்லி என் தோழியருகில் என்னையும் அவனுடைய சிறந்த தேரில் வைத்துக் கொண்டு அந்த துஷ்டன் தன்னுடைய மனோஹரமான நகரத்திற்கு விரைந்து சென்றான்'.

एकावलीं तथा मां च संस्थाप्य धवले गृहे।
राक्षसान् गृहरक्षार्थं कल्पयामास कोटिशः ॥ २२. २२ ॥

उवाच विनयादेनां सखीं क्षामोदरीं प्रियाम्।
कृशोदरि त्वया मन्त्रो निक्षिप्तोऽस्ति ममोपरि ॥ २२. २८ ॥

तेन मे हृदयं कान्ते हृतं ते वशतां गतम्।
भज मां कामबाणेन पीडितं विवशं भृशम् ॥ २२. २९ ॥

एकावल्युवाच —

पित्राऽहं कल्पिता पूर्वं दातुं राजसुताय वै।
हैहयस्तु महाभाग स मया मनसा वृतः ॥ २२. ३१ ॥

22.22. ஒரு வெண்மையான வீட்டில் ஏகாவளியையும் என்னையும் வைத்து அவ்வீட்டின் காவலுக்குக் கோடிக்கணக்கான அரக்கர்களை நியமித்தான்.

22.28-29. என்னுடைய பிரியமான தோழி பட்டினியால் மெலிந்திருந்தவளையணுகி வணக்கத்துடன் அவ்வரக்கன் ‘இடைமெலிந்தவளே! நீ என் மேல் மந்திரம் போட்டு விட்டாய். பிரியே! அதனால் என்னுடைய இருதயம் கவரப்பட்டு உன் வசமாகிவிட்டது. காமனுடைய கணையால் பீடிக்கப்பட்டு முற்றும் தன்வயமிழந்துள்ள என்னை நீ சேர வேண்டும்’ என்று கூறினான்.

ஏகாவளீ கூறியது—

22.31. குணசீலரே! என்னுடைய தந்தையால் நான் ஹைஹயன் என்னும் அரசகுமாரனுக்குக் கொடுப்பதாய் ஸங்கல்பம் செய்யப்பட்டவள். நானும் அவரையே மனதால் வரித்து விட்டேன்.

कथमन्यं भजे कान्तं त्यक्त्वा धर्मं सनातनम् ।
कन्याधर्मं विहायाऽद्य वेत्सि शास्त्रविनिश्चयम् ।। २२. ३२ ।।

तत्र तिष्ठति दुःखार्ता सखी मे प्राणवल्लभा ।
तेनाऽहं विरहेणाऽत्र रारटीमि सुदुःखिता ।। २२. ३६ ।।

एकवीर उवाच —

कथं त्वमत्र संप्राप्ता पुरात्तस्य दुरात्मनः ।
विस्मयो मे महानत्र तत्त्वं ब्रूहि वरानने ।। २२. ३७ ।।

हैहयो नाम राजाऽहं नान्योऽस्मि पृथिवीपतिः ।
अहं तामानयिष्यामि तं हत्वा राक्षसाधमम् ।। २२. ४० ।।

22.32. ஸநாதனமான கன்யா தர்மத்தைக் கைவிட்டு இப்பொழுது வேறொருவரைக் கணவராக நான் எப்படி கருதுவேன்? சாஸ்திரத்தின் நிச்சயம் உமக்குத் தெரியும்.

22.36. என் உயிர்ச்சிநேகிதி இவ்வாறு துக்கத்தி லாழ்ந்து அங்கு இருக்கிருள். அவளிடமிருந்து பிரிந்த துக் கத்தினுல் நான் இங்கு அழுது கொண்டிருக்கிறேன்.

ஏகவீரன் கூறியது—

22.37. அக்கொடியவனுடைய பட்டிணத்திலிருந்து நீ இங்கு எப்படி வந்தாய்? அழகிய முகம் படைத்தவளே! இது எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. உண்மையைக் கூறு.

22.40. நான் தான் ஹைஹயன் என்ற பெயருடைய அரசன். நான் வேறொருவனுமல்லன். அந்த இழிவான அரக்கனைக் கொன்று அவளை அழைத்து வருகிறேன்.

ब्रूहि मे गमनोपायं पुरे तस्याऽतिदुर्गमे ।
कथं त्वमागता तस्मात्संकटादत्र तद्वद ।। २२. ४६ ।।

यशोवत्युवाच —

बालभावान्मया मन्त्रो भगवत्या विशाम्पते ।
प्राप्तोऽस्ति ब्राह्मणात् सिद्धात्सबीज-ध्यानपूर्वकः ।। २२.४७ ।।

तत्राऽवस्थितया राजन्मया चित्ते विचारितम् ।
आराधयामि सततं चण्डिकां चण्डविक्रमाम् ।। २२. ४८ ।।

सा देवी सेविता कामं बन्धमोक्षं करिष्यति ।
भक्तानुकम्पिनी शक्तिः समर्था सर्वसाधने ।। २२. ४९ ।।

22.46. அடைதற்குக் கடினமான அப்பட்டிணத்திற்குச் செல்லும் உபாயத்தை எனக்குச் சொல். சங்கடமான அவ்விடத்திலிருந்து நீ எப்படி வந்தாய்? அதைச்சொல்.

யசோவதி கூறியது—

22.47. அரசே! நான் என் குழந்தைப் பருவத்திலேயே ஸித்தபுருஷரான ஒரு பிராம்மணரிடமிருந்து பீஜம், தியானம் முதலியவற்றுடன் கூடிய பகவதியின் மந்திரத்தைப் பெற்றவள்.

22.48. அரசே! அங்கிருக்கும் பொழுது என் மனதில் பின்வருமாறு யோசனை தோன்றிற்று: 'பராக்கிரமம் மிக்க சண்டிகாதேவியை நான் எப்பொழுதும் வழிபடுகிறேன்.

22.49. 'அப்படி ஸேவிக்கப்பட்ட தேவியானவள் நான் விரும்பும் வண்ணம் இக்கட்டிலிருந்து விடுதலை யளிப்பாள். பக்தர்களுக்கு இரங்கும் பராசக்தி எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவள்.

इति संचिन्त्य मनसा देवीं विश्वेश्वरीं शिवाम् ।
ध्यात्वा रक्ताम्बरां सौम्यां सुरक्तनयनां हृदि ।। २२.५१ ।।

संस्मृत्य मनसा रूपं मन्त्रजाप्यपराऽभवम् ।
उपासिता मया देवी मासमेकं समाधिना ।। २२. ५२ ।।

स्वप्ने मम समायाता भक्तिभावेन तोषिता ।
मामाहाऽमृतया वाचा किं सुप्तासीति चण्डिका ।। २२. ५३ ।।

उत्तिष्ठ याहि तरसा गंगातीरं मनोहरम् ।
आगमिष्यति तत्राऽसौ हैहयो नृपपुंगवः ।। २२. ५४ ।।

22.51–52. 'இப்படி மனதில் எண்ணி மங்களவடிவினளும் விச்வேசுவரியுமாகிய தேவியை சிவப்பாடையணிந்து சிவந்த கண்களுடன் அழகு மிகுந்தவளாய் இருதயத்தில் தியானித்து அவ்வடிவில் நிலையாகச் சித்தத்தை நிறுத்தி மந்திரத்தை ஜபிப்பவளாக ஆனேன். அப்படி ஒரு மாதம் அடங்கிய மனத்துடன் தேவியானவள் என்னால் உபாசிக்கப்பட்டாள்.

22.53-54. 'என்னுடைய பக்தியால் சந்தோஷித்து என் கனவில் தோன்றிய சண்டிகையானவள் அமுதம் போன்ற மொழியில் என்னிடம் 'தூங்குகிறாயா ? எழுந்திரு. மனதிற்கினிய கங்கைக்கரைக்கு விரைந்து செல். அரச சிரேஷ்டனான ஹைஹயன் அங்கு வந்து சேருவான்.

एकवीरो महाबाहुः सर्वशत्रुविमर्दनः।
दत्तात्रेयेण मन्मन्त्रो महाविद्याभिधः परः ॥ २२. ५५ ॥

दत्तोऽस्मै सोऽपि सततं मामुपास्तेऽति भक्तितः।
मय्यासक्तमतिर्नित्यं मम पूजापरायणः ॥ २२. ५६ ॥

मामेव सर्वभूतेषु ध्यायन्नास्ते च मत्परः।
स ते दुःखविनाशं वै करिष्यति महामतिः ॥ २२. ५७ ॥

मासुतो विहरंस्तत्र तव त्राता भविष्यति।
हत्वा तं राक्षसं घोरं मोचयिष्यति मानिनीम् ॥ २२. ५८ ॥

इत्युक्त्वाऽन्तर्दधे देवी प्रबुद्धाऽहं तदैव हि।
कथितं स्वप्नवृत्तान्तं देव्याश्चाराधनं तथा ॥ २२. ५९ ॥

22.55–56. 'பெருந்தோள் படைத்த ஏகவீரன் எல்லாச் சத்துருக்களையும் வெல்லக் கூடியவன். தத்தாத்ரேயரால் மஹாவித்தை எனப்படும் என்னுடைய மந்திரம் உபதேசிக்கப்பெற்று அதனால் என்னை எப்பொழுதும் மிகவும் பக்தியுடன் உபாசித்து வருகிறான். இடைவிடாது என்னிடம் நிலைத்த மனமுடையவன். என் பூஜையையே உயர் நலமாய்க் கருதுபவன்.

22.57. 'என்னைச் சரணடைந்து என்னையே எல்லா உயிர்களிலும் தியானம் செய்து வருகிறான். அச்சிறந்த மதிமான் உங்களுடைய துக்கத்தைப் போக்குவான்.

22.58. 'அவன் மகாலக்ஷ்மியின் புத்திரன். கங்கைக் கரையில் விளையாட்டாக வந்து உன்னைக் காப்பவனாவான். அந்தக் கொடிய அரக்கனைக் கொன்று உன் தோழியை விடுவிப்பான்.'

22.59. 'இங்ஙனம் கூறிவிட்டு தேவி மறைந்து விட்டாள். நான் அப்பொழுதே விழித்துக் கொண்டு என் தோழியிடம் நான் தேவியை ஆராதித்ததையும், தேவி கனவில் கூறிய விருத்தாந்தத்தையும் கூறினேன்.

प्रसन्नवदना जाता श्रुत्वा सा कमलेक्षणा ।
विशेषेण च सन्तुष्टा मामुवाच शुचिस्मिता ॥ २२. ६१ ॥

गच्छ तत्र त्वरायुक्ता कुरु कार्यं मम प्रिये ।
इत्याज्ञप्ता तया चाऽहं सख्या वै प्रेमयुक्तया ॥ २२. ६२ ॥

चालिताऽहं ततः शीघ्रं महादेवीप्रसादतः ।
मार्गज्ञानं शीघ्रगतिर्मया प्राप्ता नृपात्मज ॥ २२. ६४ ॥

एकवीर उवाच —

एकावल्या वचः प्रोक्तं दानवाग्रे मया वृतः ।
हैहयस्तं विना नान्यं वृणोमीति विनिश्चयः ॥ २३. ६ ॥

तेन वाक्येन तन्वङ्गि भृत्योऽहमधुना कृतः ।
त्वया तस्याः सुकेशान्ते ब्रूहि किं करवाणि वाम् ॥ २३. ७ ॥

22.61–64. அரசகுமாரரே! கமலக்கண்படைத்த அவள் அதைக் கேட்டு முக மலர்ச்சியடைந்தாள். விசேஷ மகிழ்ச்சியுடன் புன்முறுவல் பூத்தவளாய் என்னை நோக்கி, 'விரைவில் அங்கு செல். எனக்குப் பிரியமானவளே! செய்ய வேண்டிய காரியத்தைச் செய்,' என்று கட்டளையிடவே, அன்பு மிக்க தோழியால் ஏவப்பட்ட நான் மகாதேவியின் அருளால், வழியைப்பற்றிய ஞானமும் சீக்கிரமாய் வழியைக் கடக்கும் திறமையும் பெற்று விரைவில் இங்கு வந்து சேர்ந்தேன்.

ஏகவிரன் கூறியது—

23.6–7. மென்மையான அங்கம் படைத்தவளே! அரக்கன் முன்னிலையில் 'ஹைஹயர் என்னால் வரிக்கப் பெற்றவர். அவரையல்லாது வேறுயாரையும் கணவனாய் ஏற்க மாட்டேன் என்பது நிச்சயம்' என்று எந்த வார்த்தை ஏகாவளியால் சொல்லப்பட்டதோ அதனால் நான் இப்பொழுது அவளுக்கு அடிமையாகி விட்டேன். கூந்தல் அழகியவளே! உனக்கும் அவளுக்கும் நான் என்ன செய்ய வேண்டுமோ அதைக் கூறு.

वद मां त्वं विशालाक्षि तत्र प्रापयितुं क्षमा।
प्रापयाऽऽशु सखी ते सा यत्र तिष्ठति सुन्दरि ॥ २३. ९ ॥

विमुक्तदुःखां कृत्वाऽऽशु प्रापयिष्यामि ते पुरम्।
पित्रे चाऽस्याः प्रदास्यामि कन्यामेकावलीमहम् ॥ २३. ११ ॥

पश्चाद्विवाहं कर्ताऽसौ राजा पुत्र्याः परन्तपः।
एवं ते मनसः कामो मम चापि प्रियंवदे ॥ २३. १२ ॥

भविष्यति स संपूर्णः साधनेन तवाऽधुना।
दर्शयाऽऽशु पुरं तस्य पश्य मे त्वं पराक्रमम् ॥ २३. १३ ॥

यशोवत्युवाच —

मन्त्रं गृहाण राजेन्द्र भगवत्यास्तु सिद्धिदम्।
दर्शयिष्यामि तस्याऽद्य पुरं राक्षसपालितम् ॥ २३. १६ ॥

23.9. 'அகன்ற கண்படைத்தவளே! சுந்தரி! அங்கு சேருவதற்கு வழியைக் கூறு. உன் தோழி எங்கிருக்கிருளோ அங்கு என்னைச் சீக்கிரம் கொண்டுபோய்ச் சேர்.

23.11. 'கன்னிப் பெண்ணுகிய ஏகாவளியின் துன்பத்தைப் போக்கி அவளை அவளுடைய ஊருக்கு விரைவில் கொண்டு போய்ச் சேர்த்து அவளுடைய தந்தையிடம் ஒப்புவிக்கிறேன்.

23.12. 'பிறகு ஜயசிலரான அரசன் புத்திரியின் விவாகத்தை நடத்துபவராவார். இன்மொழியாளே! இது தான் உன் மனதிலுள்ள ஆசை. என்னுடைய ஆசையும் அது தான்.

23.13. 'இப்பொழுது உன்னுடைய சாதனத்தால் அவ்வெண்ணம் பூர்த்தியடையப் போகிறது. அவளிருக்கும் பட்டணத்தைச் சீக்கிரம் காட்டு. பிற்பாடு என் பராக்கிரமத்தைப்பார்'

யசோவதி கூறியது—

23.16. அரசசிரேஷ்டரே! ஸித்தியளிக்கும் பகவதியின் மந்திரத்தை கிரகித்துக் கொள்ளும். அந்த அரக்கனுல் பாலிக்கப்பட்ட பட்டணத்தை இப்பொழுதே காட்டுகிறேன்.

सज्जो भव महाभाग गमनाय मया सह ।
सैन्येन महता युक्त-स्तत्र युद्धं भविष्यति ॥ २३. १७ ॥

व्यास उवाच —

श्रुत्वा तद्वचनं वीरो मन्त्रं जग्राह सत्वरः ।
दत्तात्रेयाद्दैवयोगात्प्राप्ता ज्ञानिवराच्छुभात् ॥ २३. २० ॥

योगेश्वरी महामन्त्रं त्रिलोकीतिलकाभिधम् ।
तेन सर्वज्ञता जाता सर्वान्तश्चारिता यथा ॥ २३. २१ ॥

तया सह जगामाशु पुरं तस्य सुदुर्गमम् ।
रक्षितं राक्षसैर्घोरैः पातालमिव पन्नगैः ॥ २३. २२ ॥

23.17. மகாபாக்கியசாலியே! பெருஞ்சைனியத்துடன் என்னுடன் கூடச் செல்லுவதற்குச் சித்தமாகலாம். அங்கு யுத்தம் ஏற்படும்.

வியாஸர் கூறியது—

23.20–22. அவ்வீரன் அவ்வார்த்தையைக் கேட்டு ஞானிகளிற் சிறந்தவரும் மங்கள வடிவினருமாகிய தத்தாத்ரேயரிடமிருந்து தெய்வாதீனமாய் அடையப் பெற்றதும், 'த்ரிலோகீ திலகம்' எனப் பெயர் பெற்றதுமான யோகேச்வரீ மஹாமந்திரத்தை விரைவில் பெற்றுக் கொண்டான். அதனுல் அவள் அனைவருடைய எண்ணங்களையும் அறியக் கூடியவளாயும் அனைத்துள்ளும் புகுந்து சஞ்சரிக்கக் கூடியவளாயும் எப்படி இருந்தாளோ அச்சக்தியை இவனுமடைந்து அவளுடன் அடைதற்கு மிகவும் கடினமான அவ்வரக்கனுடைய பட்டணத்தை சீக்கிரமே அடைந்தான். பாதாளம் ஸர்ப்பங்களால் காக்கப்படுவது போல் அது கொடிய அரக்கர்களால் காக்கப்பட்டிருந்தது.

तमायान्तं समालोक्य दूतास्तस्य भयातुराः।
क्रोशन्तोऽभिययुः पार्श्वं कालकेतोस्तरस्विनः ॥ २३. २४ ॥

दूता ऊचुः —

किं स्वस्थोऽसि महाराज समीपे सैन्यमागतम्।
निर्गच्छ नगरात्तूर्णं सैन्येन महतावृतः ॥ २३. ४२ ॥

व्यास उवाच —

इति तेषां वचः श्रुत्वा कालकेतु-र्महाबलः।
रथ-मारुह्य त्वरितो निर्ययौ स्वपुराद्बहिः ॥ २३. ४३ ॥

एकवीरोऽपि सहसा हयारूढः प्रतापवान्।
आगतस्तत्र कामिन्या विरहेण समाकुलः ॥ २३. ४४ ॥

23.24. அரக்கனுடைய தூதர்கள் அவன் வருவதைக் கண்டு பயத்தால் நடுங்கிக் கூக்குரலிட்டுக் கொண்டு காலகேதுவிடம் வேகமாய் ஓடினார்கள்.

தூதர்கள் கூறியது—

23.42. மகாராஜரே! நீங்கள் என்ன கவலையற்றிருக்கிறீர்களே! சைனியம் நெருங்கி வந்துவிட்டது. நகரத்தை விட்டு வெளியே சீக்கிரம் பெரிய சைனியத்துடன் செல்லுங்கள்.

வியாஸர் கூறியது—

23.43–44. அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு மகாபலவானான காலகேது தேரில் ஏறிக் கொண்டு பட்டணத்துக்கு வெளியே விரைந்து சென்றான். பிரதாபவானாகிய ஏகவீரனும் காதலியின் பிரிவாற்றாமையால் வருத்தத்துடன் குதிரைமேல் ஏறிக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தான்.

युद्धं तयोरभूत्तत्र वृत्र-वासवयोरिव।
शस्त्रास्त्रै-र्बहुधा मुक्तै-रादीपितदिगन्तरम् ॥२३.४५॥

वर्तमाने तदा युद्धे कातराणां भयावहे।
गदया ताडयामास दैत्यं सिन्धुसुतासुतः ॥ २३.४६॥

स गतासुः पपातोर्व्यां वज्राहत इवाचलः।
पलायित्वा गताः सर्वे राक्षसा भयपीडिताः॥. २३.४७॥

यशोवती ततो गत्वा वेगादेकावलीं तदा।
उवाच मधुरां वाणीं विस्मिता मुदिता भृशम्॥ २३.४८॥

एह्यालि नृपपुत्रेण दानवोऽसौ निपातितः।
एकवीरेण धीरेण युद्धं कृत्वा सुदारुणम् ॥ २३.४९॥

23.45. இந்திரனுக்கும் விருத்ராசுரனுக்கும் நிகழ்ந்தது போல் அவர்களிடை அப்பொழுது யுத்தம் ஏற்பட்டது. வெகுவாய் விடப்பட்ட சஸ்திரங்களும் அஸ்திரங்களும் திசைகளை யெல்லாம் வியாபித்தன.

23.46. அஞ்சுபவர் நெஞ்சத்தில் அச்சத்தை விளைக்கும் அந்த யுத்தம் அவ்வாறு நிகழ்கையில் அவ்வசுரனை லக்ஷ்மீ தேவியின் புத்திரனுன ஏகவீரன் கதையால் அடித்தான்.

23.47. வஜ்ராயுதத்தால் வீழ்த்தப்பட்ட மலைபோல் அவன் உயிர்துறந்து பூமியில் விழுந்தான். அரக்கர்களனை வரும் பயத்தால் பீடிக்கப்பட்டு ஓட்டம் பிடித்தார்கள்.

23.48. அப்பொழுது யசோவதியானவள் வேகமாக ஏகாவளியிடம் சென்று புன்முறுவலுடன் மகிழ்ச்சி பொங்க மதுரமான வார்த்தையை மொழிந்தாள்.

23.49. 'அன்புக்குரியவளே! வா! தீரனும் அரச குமாரனுமாகிய ஏகவீரனுல் அரக்கனுடன் கடுமையான யுத்தம் செய்யப்பட்டு அரக்கன் கொன்று வீழ்த்தப்பட்டான்.

स्कन्धावारेऽप्यसौ राजा तिष्ठत्यद्य श्रमातुरः ।
दर्शनं कांक्षमाणस्ते श्रुतरूपगुणस्तव ॥ २३. ५० ॥

कथिता त्वं मया पूर्वं तस्याग्रे जाह्नवीतटे ।
पूर्णानुरागः संजातस्तेनाऽसौ विरहातुरः ॥ २३. ५१ ॥

वांछति त्वां चारुरूपां द्रष्टुं नृपतिनन्दनः ।
सा तस्या वचनं श्रुत्वा गमनाय मनोदधे ॥ २३. ५२ ॥

यशोवत्या युता तत्र नरयानस्थिता ययौ ।
स्कन्धावारेऽतिमलिना मलिनाम्बरधारिणी ॥ २३. ५५ ॥

तामागतां विशालाक्षीं दृष्ट्वा राजसुतोऽब्रवीत् ।
दर्शनं देहि तन्वंगि तृषिते नयने मम ॥ २३. ५६ ॥

23.50. 'களைப்பாறிக் கொண்டு அரசகுமாரர் இப்பொழுது கூடாரத்திலிருக்கிறார். உன்னுடைய வடிவழகையும் குணங்களையும் பற்றிக் கேள்வியுற்ற அவர் உன்னைக் காண விரும்புகிறார்.

23.51. 'கங்கைக் கரையில் முன்பு அவரைச் சந்தித்ததும் அவரிடம் உன்னைப்பற்றிச் சொன்னேன். அதனால் அவருக்குப் பரிபூர்ணமான அன்பு உன்னிடம் உண்டாகி பிரிவாற்றாமையால் வருந்துகிறார்.

23.52–55. 'அரசகுமாரர் அழகுமிக்க உன்னைக் காண அவாவுகிறார்.' யசோவதி கூறிய இவ்வார்த்தையைக் கேட்டு ஏகாவளி அவளுடன் கூட ஒரு பல்லக்கில் சென்றாள். அவள் கூடாரத்தையணுகிய பொழுது மாசுபடிந்த ஆடையும் மாசுபடிந்த மேனியும் உடையவளாயிருந்தாள்.

23.56. விசாலமான கண்படைத்த அவள் வந்துவிட்டதைக் கண்ட அரசகுமாரன் 'மெல்லியாளே! உன்னைக் காணத்துடிக்கும் என் கண்களுக்கு உன்னுடைய தரிசனத்தைக் கொடு' என்று கூறினான்.

कामातुरं च तं वीक्ष्य तां च लज्जाभरावृताम्।
नीतिज्ञा शिष्टमार्गज्ञा तमुवाच यशोवती ॥ २३. ५७ ॥

कालं प्रतीक्ष्य राजेन्द्र नयैनां पितुरन्तिकम्।
स विवाहविधिं कृत्वा दास्यतीति विनिश्चयः ॥ २३. ५८ ॥

स तस्या वचनं तथ्यं मत्वा सैन्यसमन्वितः।
समेतः कामिनीभ्यां तु ययौ तत्पितुराश्रमम् ॥ २३. ५९ ॥

राजपुत्रीं तथाऽयातां श्रुत्वा प्रेमसमन्वितः।
प्रययौ संमुखस्तूर्णं सचिवैः परिवेष्टितः ॥ २३. ६० ॥

बहुभिर्दिवसैर्दृष्टा पुत्री सा मलिनाम्बरा।
यशोवत्या तु वृत्तान्तः कथितो विस्तरात्पुनः ॥ २३. ६१ ॥

23.57–58. அவள் வெட்கத்தால் தன்னை மறைத்துக் கொண்டிருப்பதையும் அவன் காமத்தால் பீடிக்கப்பட்டவனுயிருப்பதையும் கண்ணுற்றவளும் நீதிநெறியையும் நல்லோர்களுடைய வழியையும் அறிந்தவளுமான யசோவதி அவனிடம் கூறியதாவது: 'அரசசிரேஷ்டரே! உரிய காலத்தை எதிர்பார்த்து இவளை அவள் தகப்பனுரருகில் அழைத்துச் செல்லும். அவர் விதிப்படி விவாகம் செய்து இவளை உமக்களிப்பார் என்பது நிச்சயம்.'

23.59. அவள் கூறியதைக் கேட்ட அரசகுமாரன் அதை ஏற்று சைனியத்துடன் காதலியை அழைத்துக் கொண்டு அவளுடைய தந்தையிருக்குமிடம் சென்றுன்.

23.60. அரசகுமாரி அவ்வாறு அழைத்துவரப் படுகிறுள் என்பதைக் கேட்ட அரசன் பிரேமை மிக்கவனுய்த் தன்னுடைய மந்திரிகள் புடைசூழ விரைவாக எதிர் கொண்டு சென்றுன்.

23.61. வெகுநாள் கழித்துப்பார்க்கப்பட்டவளும் மாசுபடிந்த ஆடையுடன் கூடியவளுமான தன் புத்திரியின் விருத்தாந்தத்தை யசோவதியானவள் விரிவாய்க் கூற அரசன் கேட்டான்.

एकवीरं मिलित्वाऽसौ गृहमानीय चाऽऽदरात् ।
पुण्येह्नि कारयामास विवाहं विधिपूर्वकम् ॥ २३. ६२ ॥

पारिबर्हं ततो दत्त्वा संपूज्य विधिवत्तदा ।
पुत्रीं विसर्जयामास यशोवत्या समन्विताम् ॥ २३. ५३ ॥

एवं विवाहे संवृत्ते रमापुत्रो मुदान्वितः ।
गृहं प्राप्य बहून् भोगान् बुभुजे प्रियया समम् ॥ २३. ६४ ॥

बभूव तस्यां पुत्रस्तु कृतवीर्याभिधः किल ।
तत्सुतः कार्तवीर्यस्तु वंशोऽयं कथितो मया ॥ २३. ६५ ॥

॥ इति श्रीदेवीभागवते षष्ठस्कन्धे त्रयोविंशोऽध्यायः ॥

॥ हैहयचरित्रं समाप्तम् ॥

23.62. ஏகவீரனைச் சந்தித்து அவனை மிகுந்த ஆதரவுடன் தனது அரண்மனைக்கு அழைத்து வந்து சுபதினத்தில் முறைப்படி விவாகத்தை நடத்தினன்.

23.63. சீர்களை வழங்கி முறைப்படி பூஜித்துப் புத்திரியை யசோவதியுடன் சேர்த்து அனுப்பிவைத்தான்.

23.64. இவ்வாறு விவாஹம் முடிந்து மகிழ்ச்சியுடன் கூடியவனாய் லக்ஷ்மீபுத்திரனாகிய ஏகவீரன் தன் வீடு சேர்ந்து பிரியமான மனைவியுடன் பலவிதமான போகங்களை அனுபவித்தான்.

23.65. அவனுக்குக் கிருதவீர்யன் என்ற புத்திரன் தோன்றினன். அவனுடைய புத்திரன் கார்த்தவீரியன். இவ்வாருக இவ்வம்சம் என்னல் விளக்கிக் கூறப்பட்டது.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவதத்தில் ஆருவது ஸ்கந்தத்தில் இருபத்துமூன்ருவது அத்தியாயம் முற்றும்.

ஹைஹய சரித்திரம் முற்றும்.

॥ योगमाया माहात्म्यम् ॥ २६ ॥

राजोवाच —

विचित्रमिद-माख्यानं कथितं भवता मम।
हैहयानां समुत्पत्तिर्विस्तराद्विस्मयप्रदा ॥ २४. २ ॥

परं कौतूहलं मेऽत्र यद्विष्णुः कमलापतिः।
देवदेवो जगन्नाथः सृष्टिस्थित्यन्तकारकः ॥ २४. ३ ॥

सोऽप्यश्वभावमापन्नो भगवान् हरिरच्युतः।
परतन्त्रः कथं जातः स्वतन्त्रः पुरुषोत्तमः ॥
एतन्मे संशयं ब्रह्मञ्छेत्तुमर्हसि सांप्रतम् ॥ २४.४ ॥

26. யோகமாயா மாகாத்மியம்

அரசன் கூறியது—

24.2. ஹைஹயர்களின் வரலாற்றைப் பற்றியதும் வியக்கத்தக்கதும் விசித்திரமானதுமான இவ்வாக்கியானம் விரிவாகத் தங்களால் எனக்கெடுத்துரைக்கப்பட்டது.

24.3–4. விஷ்ணுவும் லக்ஷ்மீபதியும் தேவதேவரும் ஜகந்நாதரும், சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரகர்த்தாவும் அச்சுதரும் ஹரியுமான அந்த பகவானுங்கூடப் புருஷோத்தமராயும் ஸ்வதந்திரராயுமிருந்தும் எப்படிப் பரதந்திரரைப் போல் குதிரை வடிவை அடைந்தார்? இதில் எனக்குள்ள சந்தேகத்தை இப்பொழுது தீர்த்தருளக் கோருகிறேன். பிரும்மஸ்வரூபியே! அதை அறிய எனக்கு மிகவும் ஆவலாயிருக்கிறது.

व्यास उवाच —

श्रृणु राजन् प्रवक्ष्यामि सन्देहस्यास्य निर्णयम्।
यथा श्रुतं मया पूर्वं नारदान्मुनिसत्तमात् ॥ २४. ६ ॥

ब्रह्मणो मानसः पुत्रो नारदो नाम तापसः।
सर्वज्ञः सर्वगः शान्तः सर्वलोकप्रियः कविः॥
तमपृच्छ-महं राजन्यत्पृष्टोऽहं त्वयाऽधुना ॥ २४. १३ ॥

इति मे वचनं श्रुत्वा नारदः परमार्थवित्।
मामाह च स्मितं कृत्वा पृच्छन्तं मोहकारणम् ॥ २६. १॥

नारद उवाच —

पाराशर्य पुराणज्ञ किं पृच्छसि सुनिश्चयम्।
संसारेऽस्मिन्विना मोहं कोऽपि नास्ति शरीरवान् ॥ २६. २ ॥

வியாஸர் கூறியது—

24.6. அரசே! இந்தச் சந்தேகத்தைப்பற்றிய தெளிவை முனிசிரேஷ்டரான நாரதரிடமிருந்து முன்பு நான் எப்படிக் கேட்டுள்ளேனோ அதைக் கூறுகிறேன், கேளும்.

24.13. பிரம்மாவின் மானஸபுத்திரர் நாரதர் எனப் பெயர் பெற்ற தபோதனர். அவர் எல்லாமறிந்தவர், எங்கும் செல்பவர், அமைதியுடையவர், உலகனைத்திற்கும் பிரியமானவர், தீர்க்கதரிசி. அரசே! நீர் இப்பொழுது என்னிடம் கேட்ட அதே கேள்வியை நான் அவரிடம் கேட்டேன்.

26.1. பரமார்த்த உண்மையை உணர்ந்த நாரதர் மதிமயக்கத்தின் காரணத்தை வினவிய என்னைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டு விடையளித்தார்.

நாரதர் கூறியது—

26.2. பராசரபுத்திரரே! புராண ஞானம் படைத்தவரே! நீர் என்ன நிச்சயத்தைக் கேட்கிறீர்? இந்த சம்சாரத்தில் உடல் படைத்தவர்களில் மதிமயக்கமில்லாதவர் எவருமில்லை.

ब्रह्मा विष्णुस्तथा रुद्रः सनकः कपिलस्तथा ।
मायया वेष्टिताः सर्वे भ्रमन्ति भववर्त्मनि ॥ २६. ३ ॥

ज्ञानिनं मां जनो वेत्ति भ्रान्तोऽहं सर्वलोकवत् ।
शृणु मे पूर्ववृत्तान्तं प्रब्रवीमि सुनिश्चितम् ॥ २६. ४ ॥

एकदा पर्वतश्चाहं देवलोकान्महीतलम् ।
प्राप्तौ विलोकनार्थाय भारतं खण्डमुत्तमम् ॥ २६. ६ ॥

शपथं देवलोकात्तु कृत्वा पूर्वं परस्परम् ।
चलितौ समयं चेमं संमन्त्र्य निश्चयेन वै ॥ २६. ८ ॥

चित्तवृत्तिस्तु वक्तव्या यादृशी यस्य जायते ।
शुभा वाप्यशुभा वाऽपि न गोप्तव्या कदाचन ॥ २६. ९ ॥

26.3. பிரம்மா, அவ்வாறே விஷ்ணு, ருத்ரர், ஸநகர், கபிலர் எல்லோருமே மாயையால் மூடப்பட்டவர்களாய்ப் பிறவிமார்க்கத்தில் மயக்கத்தை அடைகிறுர்கள்.

26.4. உலகம் என்னை ஞானி எனக் கருதுகிறது. மற்ற எல்லோரையும் போல் நானும் மதிமயங்கியவனே. என்னுடைய பூர்வவிருத்தாந்தம் ஒன்று நிகழ்ந்தபடி கூறு கிறேன், கேளும்.

26.6. ஒரு சமயம் பர்வதரும் நானும் உத்தமமான பரதக்கண்டத்தைப் பார்ப்பதற்காக தேவலோகத்திலிருந்து பூலோகம் வந்தோம்.

26.8. தேவலோகத்திலிருந்து புறப்படுவதற்கு முன்பே நாங்கள் ஒருவர்க்கொருவர் கூடிப்பேசி திடமான ஒரு ஸங்கேதத்தைச் செய்து கொண்டோம்.

26.9. அதாவது சித்தத்தில் எப்படிப்பட்ட எண்ணம் உதித்தாலும் அது நல்லதாயிருந்தாலும் தீயதாயிருந்தாலும் ஒரு பொழுதும் மறைக்காமல் சொல்லிவிடவேண்டும்.

एवं भ्रमन्तौ लोकेऽस्मिन् ग्रीष्मान्ते समुपागते ।
संजयस्य पुरं रम्यं संप्राप्तौ नृपतेः पुनः ॥ २६. १२ ॥

तेन संपूजितौ भक्त्या राज्ञा संमानितौ भृशम् ।
स्थितौ तत्र गृहे तस्य चातुर्मास्यं महात्मनः ॥ २६. १३ ॥

दमयन्तीति विख्याता तस्य पुत्री महीपतेः ।
आज्ञप्ता परिचर्यार्थं सुदती सुन्दरी भृशम् ॥ २६. १७ ॥

अहं वीणाकरे कृत्वा साधयित्वा स्वरोत्तमम् ।
गायत्रं साम सुस्वाद-मगां कर्णरसायनम् ॥ २६. २२ ॥

राजपुत्री तु तच्छ्रुत्वा सामगानं मनोहरम् ।
बभूव मयि रागाढ्या प्रीतियुक्ता विशारदा ॥ २६. २३ ॥

26.12. இப்படி உலகைச் சுற்றிவருகையில் கிரீஷ் மருதுவின் முடிவில் ஸஞ்ஜயன் எனும் அரசனுடைய அழகிய பட்டணத்தை யடைந்தோம்.

26.13. அவ்வரசனால் மிகுதியும் கௌரவப்படுத்தப் பட்டு பக்தியுடன் பூஜிக்கப்பட்டோம். அம்மகாத்மாவின் வீட்டில் சாதுர்மாஸ்யத்திற்குத் தங்கினோம்.

26.17. அவ்வரசனுடைய புத்திரி, தமயந்தி எனப் புகழ் பெற்றவள், மிகுந்த அழகுபடைத்தவள் எங்களுக்குப் பணி விடை செய்ய அரசனால் கட்டளையிடப்பட்டாள்.

26.22. நான் வீணையைக் கையில் வைத்துக் கொண்டு உத்தமமான ஸ்வரத்துடன் சங்கீதம் பயின்று செவிக்கமுதம் போன்ற காயத்ரம் எனும் ஸாமகானத்தைப்பாடி அனுபவித் தேன்.

26.23. மனதைக் கவரும் அந்த ஸாமகானத்தைக் கேட்டு ஸங்கித ஞானம் படைத்த அந்த ராஜபுத்திரி என் னிடம் பற்றும் அன்பும் கொண்டவளானாள்.

विलोकयति मां प्रेम्णा सुन्दरी न च पर्वतम् ।
ततोऽस्यास्तादृशं दृष्ट्वा पर्वतः प्रेमकारणम् ।। २६. २८ ।।

मनसा चिन्तयामास किमेतदिति विस्मितः ।
पप्रच्छ मां रहः सम्यग् ब्रूहि नारद सर्वथा ।। २६. २६ ।।

पृष्टोऽहं पर्वतेनेदं कारणं तु हठाद्यदा ।
तदाऽहं ह्रीसमाक्रान्तः संजातश्चाब्रुवं पुनः ।। २६. ३४ ।।

पर्वतैषा विशालाक्षी पतिं मां कर्तुमुद्यता ।
ममापि मानसो भावो वर्ततेऽस्यां विशेषतः ।। २६. ३५ ।।

तच्छ्रुत्वा वचनं सत्यं पर्वतः कोपसंयुतः ।
मामुवाच मुनिर्वाक्यं धिग् धिगिति पुनः पुनः ।। २६. ३६ ।।

26.28–29. அவ்வழகி என்னைப் பிரேமையுடன் பார்ப்பது போல் பர்வதரைப் பார்க்க மாட்டாள். அவள் அப்படியிருப்பதைக் கண்டு பர்வதர் பிரேமைக்கு காரணத்தை யோசிப்பவராய் வியப்புடன் இது என்ன என்று மனதில் சிந்தித்து, என்னை நோக்கி ‘நாரதரே! இந்த ரகசியத்தை எப்படியும் எனக்கு நீர் விளக்கிக் கூற வேண்டும்’ என்றார்.

26.34. கட்டாயமாய்க் காரணம் கூறும்படி பர்வதரால் கேட்கப்பட்ட நான் வெட்கம் மேலிட்ட போதிலும் நிகழ்ந்ததைக் கூறினேன்.

26.35. ‘பர்வதரே! பரந்த கண்படைத்த இவள் என்னைப் பதியாக அடைய முயன்று வருகிறாள். எனக்கும் மனதின் நோக்கம் விசேஷமாக அவள் பாலுள்ளது.’

26.36. உண்மையான அவ்வார்த்தையைக் கேட்டுப் பர்வதமுனிவர் கோபம் மேலிட்டவராய் என்னை நோக்கி ‘பாவி! பாவி!’ என்று அடிக்கடி நிந்தித்தார்.

प्रथमं शपथान् कृत्वा वंचितोऽहं त्वया यतः।
भव वानरवक्त्रस्त्वं शापाच्च मम मित्रध्रुक् ॥ २६. ३७ ॥

इति शप्तस्तु तेनाऽहं कुपितेन महात्मना।
सहसा ह्यभवं क्रूरः शाखामृगमुखस्तदा ॥ २६. ३८ ॥

मयापि न कृता तस्मिन् क्षमा तु भगिनीसुते।
सोऽपि शप्तोऽति कोपाद्वै मा स्वर्गे ते गतिः किल ॥ २६. ३९ ॥

स्वल्पेऽपराधे यस्मान्मां शप्तवानसि पर्वत।
तस्मात्तवाऽपि मन्दात्मन् मृत्युलोके स्थितिः किल ॥ २६. ४० ॥

पर्वतस्तु गतस्तस्मान्नगराद्विमना भृशम्।
अहं वानरवक्त्रस्तु संजातस्तत्क्षणादपि ॥ २६. ४१ ॥

26.37. முதலில் சபதஞ் செய்து விட்டு 'நான் உம்மால் வஞ்சிக்கப்பட்டமையால், மித்ரத்துரோகியான நீர் எனது சாபத்தால் குரங்கு முகமுடையவராகக் கடவீர்' என்றார்.

26.38. கோபங்கொண்ட மகாத்மாவாகிய அவரால் இவ்வாறு சபிக்கப்பட்ட நான் உடனே கொடிய குரங்கு முகமுடையவனானேன்.

26.39. என்னுடைய சகோதரியின் புத்திரராகிய அவரும் என்னால் மன்னிக்கப்படவில்லை. 'சுவர்க்கத்திற்குச் செல்லும் வழி உமக்கு அடைக்கப்படட்டும்' என்று கோபம் மூண்ட என்னால் சபிக்கப்பட்டார்.

26.40. 'பர்வதரே! மந்தபுத்தியுடையவரே! சிறிய பிழைக்கு என்னை நீர் சபித்ததால், உமக்கும் மானிட உலகிலேயே இருப்பு ஏற்படட்டும்' என்றேன்.

26.41. பர்வதர் மிகவும் மனம் நொந்து அந்த நகரத்தை விட்டுப் போய்விட்டார். அந்த நிமிஷத்திலிருந்து நான் குரங்கு முகமுடையவனாயிருந்தேன்.

किं ब्रवीमि महाभाग मायायाश्चरितं महत् ।
दुःखितोऽहं भृशं तत्र पर्वते रुषिते गते ॥ २६. ४५ ॥

पुनः सेवापराऽत्यर्थं राजपुत्री ममाऽभवत् ।
गतेऽथ पर्वते कामं स्थितस्तत्रैव सद्मनि ॥ २६. ४६ ॥

संजयोऽथ सुतां दृष्ट्वा किंचित्प्रकटयौवनाम् ।
विवाहार्थे राजसुतामपृच्छत्सचिवं तदा ॥ २६. ४८ ॥

पितुश्चिकीर्षितं ज्ञात्वा दमयन्ती तदा नृपम् ।
धात्र्या मुखेन वाक्यज्ञा तमुवाच रहः स्थितम् ॥ २६. ५३ ॥

धात्र्युवाच —

दमयन्ती महाराज पुत्री ते मामथाब्रवीत् ।
पितरं ब्रूहि धात्रेयि वचनान्मे सुखान्वितम् ॥ २६. ५४ ॥

26.45. பெருமைமிக்கவரே! மாயையின் மகத்தான செயலைப்பற்றி நான் என்ன சொல்லட்டும்? பர்வதர் கோபித்துக் கொண்டு சென்றபின் நான் அங்கு மிகுந்த துக்கத்துடனிருந்தேன்.

26.46. அரசகுமாரி மீண்டும் எனக்கு அதிகமான பணிவிடை செய்பவளானாள். பர்வதர் சென்றபின் நான் இஷ்டப்படி அவ்வீட்டிலேயே இருந்து வந்தேன்.

26.48. ஸஞ்ஜய மகாராஜன் தன் மகள் யௌவனம் சிறிது வளர்ச்சியுற்றதைக் கவனித்து மந்திரியிடம் ராஜ புத்திரியின் விவாஹத்தைப் பற்றி யோசித்தார்.

26.53. தந்தையின் விருப்பத்தையறிந்தவளும், சொல் வன்மை வாய்ந்தவளுமான தமயந்தி தன் செவிலித் தாய் மூலம் இரகசியமாக அரசனுக்குக் தனதெண்ணத்தைத் தெரிவித்தாள்.

செவிலித்தாய் கூறியது—

26.54. மகாராஜரே! உமது புத்திரி தமயந்தியானவள் என்னிடம் பின்வருமாறு கூறினாள்: 'என் தந்தை இன்புற்றிருக்கும் பொழுது, தாயே! என் வார்த்தைகளை அவருக்குத் தெரிவி.

मया वृतोऽयं मेधावी नारदो महतीयुतः ।
नारदोहितया कामं नान्यः कोऽपि प्रियो मम ।। २६. ५५ ।।

नारद उवाच —

तत्पुत्र्या वचनं श्रुत्वा राजा धात्रीमुखात्ततः ।
भार्यां प्रोवाच कैकेयीं समीपस्थां सुलोचनाम् ।। २७. १ ।।

इति भर्तृवचः श्रुत्वा जननी तामथाब्रवीत् ।
क्व ते रूपं मुनिः क्वासौ वानरास्योऽधनः पुनः ।। २७. २ ।।

वरस्ते राजपुत्रोऽस्तु मा कुरु त्वं वृथा हठम् ।
पिता ते दुःखमाप्नोति श्रुत्वा धात्री-मुखाद्वचः ।। २७. ६ ।।

26.55. 'மஹதீ எனும் வீணையுடன் கூடிய மேதாவி யாகிற நாரதரை நான் வரித்து விட்டேன். நாரதரே எனக்குப் பிரியமானவருமாவார். எனக்குப் பிடித்தவர் வேறு எவருமில்லை.'

நாரதர் கூறியது—

27.1. செவிலித்தாய் மூலம் தன் புத்திரியின் வார்த்தையைக் கேட்ட அரசன் தன்னையணுகியவளும் அழகிய கண்படைத்தவளுமான கைகேயீ எனும் மனைவியிடம் அதைக் கூறினான்.

27.2. கணவன் கூறியதைக் கேட்ட அவள் தன் மகளிடம் பின்வருமாறு கூறினாள்; 'உன்னுடைய அழகு எங்கே, அந்தக்குரங்கு முகம் படைத்த முனிவன் எங்கே? அவன் மேலும் பொருளற்றவன்'.

27.9. 'உனக்கு வரனாக ஒரு ராஜபுத்திரன் இருக்க வேண்டும். நீ வீணாகப்பிடிவாதம் செய்யாதே. செவிலித் தாய் மூலம் உன் வார்த்தையைக் கேட்டு உன் தந்தை துக்கமடைந்திருக்கிறார்.'

इति मातुर्वचः श्रुत्वा दमयन्ती भृशातुरा।
मातरं प्राह तन्वंगी मयि सा कृतनिश्चया ॥ २७. १४ ॥

किं मुखेन च रूपेण मूर्खस्य च धनेन किम्।
किं राज्येनाविदग्धस्य रसमार्गाविदोऽस्य च ॥ २७. १५ ॥

पिता मे किं न जानाति नारदस्य गुणान् बहून्।
द्वितीयः सामगो नाऽस्ति त्रिषु लोकेषु तत्समः ॥ २७. २६ ॥

इति पुत्र्या वचः श्रुत्वा राज्ञी राज्ञे न्यवेदयत्।
आग्रहं सुन्दरी ज्ञात्वा सुताया नारदे मुने ॥ २७. ३० ॥

विवाहं कुरु राजेन्द्र दमयन्त्याः शुभे दिने।
मुनिना स च सर्वज्ञो वृतोऽसौ मनसाऽनया ॥ २७. ३१ ॥

27.14. தாயின் சொல்லைக் கேட்ட மெல்லியாளான தமயந்தி மிகவும் மனம் வருந்தி என்னிடம் நிச்சய புத்தி யுடையவளாய்த் தாயிடம் பின்வருமாறு கூறினாள்.

27.15. 'முகத்தாலோ ரூபத்தாலோ ஆவதென்ன? புத்தியில்லாத ஒருவனுடைய பணத்தாலாவதென்ன? திறமையற்றவனும் இன்பரஸத்தின் வழியறியாதவனுமான ஒருவனுடைய ராஜ்யத்தால்தான் ஆவதென்ன?

27.26. 'நாரதருடைய பல சிறந்த குணங்களை என் பிதா அறியாதவரா? மூவ்வுலகிலும் அவருக்குச் சமமாய் ஸாமகானம் செய்யக் கூடிய இரண்டாவது மனிதர் கிடை யாது.'

27.30–31. புத்திரியின் இவ்வார்த்தையைக் கேட்டு அரசி அரசனிடம் தெரிவித்தாள். அவ்வழகிய இராணி தன் பெண்ணுக்கு நாரத முனிவரிடம் உள்ள பிடிவாதமான எண்ணத்தை உணர்ந்து 'அரச சிரேஷ்டரே! சுபதினத்தில் தமயந்திக்கு முனிவருடன் விவாகத்தை நடத்திவிடுங்கள். அவர் எல்லாமறிந்தவர். இவள் அவரையே மனதால் வரித்து விட்டாள்' என்று கூறினாள்.

इति संचोदितो राज्ञ्या संजयः पृथिवीपतिः।
चकार विधिवत्सर्वं विधिं वैवाहिकं ततः॥ २७. ३२॥

एवं दारग्रहं कृत्वा वानरास्यः परन्तप।
स्थितस्तत्रैव मनसा दह्यमानेन चाऽन्वहम्॥ २७. ३३॥

दमयन्ती तु मां वीक्ष्य प्रफुल्लवदनाम्बुजा।
शोकं वानरवक्त्रत्वान्न चकार कदाचन॥ २७. ३५॥

एवं गच्छति काले तु सहसा पर्वतो मुनिः।
कुर्वंस्तीर्थान्यनेकानि द्रष्टुं मां समुपागतः॥ २७. ३६॥

कृतदारं वानरास्यं दीनं चिन्तातुरं भृशम्।
दयावान्मामुवाचेदं पर्वतो मातुलं कृशम्॥ २७. ३८॥

27.32. பூமியையாளும் ஸஞ்ஜயன் அரசியால் இவ்வாறு தூண்டப்பட்டு முறைப்படி விவாகச்சடங்குகளை எல்லாம் நடத்துவித்தார்.

27.33. எதிரிகளை எரிப்பவரே! இவ்வாறு மனைவியுடன் கூடிக் குரங்கு முகத்துடன் நான் அங்கேயே இருந்த போதிலும் இடைவிடாது மனது தவித்துக் கொண்டிருந்தது.

27.35. தமயந்தியோ தாமரை போன்ற மலர்ந்த முகத்துடன் என்னைப் பார்த்து ஒரு பொழுதும் குரங்கு முகத்திற்காக வருத்தப் படவில்லை.

27.36. இப்படி காலஞ் சென்று கொண்டிருக்கையில் பர்வதமுனிவர் பல க்ஷேத்திரங்களை தரிசித்து விட்டுத் திடீரென என்னைப் பார்க்க வந்தார்.

27.38. விவாகமானவனும், வானரமுகத்தினனும், எளியவனும், கவலையால் மிகவும் பீடிக்கப்பட்டவனும், இளைத்தவனுமாகிய என்னைப்பார்த்து தயை மேலிட்ட பர்வதர் அவருக்கு மாமனாகிய என்னிடம் பின்வருமாறு கூறினார்.

मया नारद कोपात्त्वं शप्तोऽसि मुनिसत्तम।
निष्कृतिं तस्य शापस्य करोम्यद्य निशामय॥ २७. ३९॥

भव त्वं चारुवदनो मम पुण्येन नारद।
दृष्ट्वा राजसुतां चित्ते कृपा जाता ममाऽधुना॥ २७. ४०॥

मयाऽपि प्रवणं चित्तं कृत्वा श्रुत्वाऽस्य भाषितम्।
अनुग्नहः कृतः सद्यस्तस्य शापस्य तत्क्षणात्॥ २७. ४१॥

भागिनेय तवाऽप्यस्तु गमनं सुरसद्मनि।
शापस्यानुग्रहः कामं कृतोऽयं पर्वताऽधुना॥ २७. ४२॥

जातोऽहं चारुवदनो वचनात्तस्य पश्यतः।
राजपुत्री तु सन्तुष्टा मातरं प्राह सत्वरम्॥ २७. ४३॥

27.39. 'முனிசிரேஷ்டராகிய நாரதரே! கோபத்தால் என்னுல் நீர் சபிக்கப்பட்டீர். அந்தச் சாபத்தை இபபொழுது மாற்றிவிடுகிறேன், பாரும்.

27.40. 'நாரதரே! என்னுடைய புண்ணியத்தால் நீர் மீண்டும் அழகிய முகமுடையவராக ஆவீர். அரச குமாரியைப் பார்த்து என் மனதில் இப்பொழுது கிருபை ஏற்பட்டு விட்டது.'

27.41. அவருடைய வார்த்தையைக் கேட்டு எனக்கும் மனதில் இரக்கம் ஏற்பட்டு அவருக்கு நானிட்டிருந்த சாபத்தையும் உடனே மாற்றி அனுக்ரஹம் செய்தேன்.

27.42. 'மருமகரே! பர்வதரே! உமக்கும் சுவர்க்கம் செல்வது தடையற்றதாகட்டும். இவ்வாறு இப்பொழுது சாபத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது'.

27.43. அவருடைய வசனத்தால் நான் அழகிய முக முடையவனுய் ஆகிவிட்டதைக் கண்ட அரசகுமாரி சந்தோஷமடைந்து தாயிடம் விரைந்து சென்று பின்வரு மாறு கூறினுள்.

मातस्ते सुमुखो जातो जामाता च महाद्युतिः ।
वचनात्पर्वतस्याद्य मुक्तशापो मुनेरभूत् ॥ २७. ४४ ॥

तच्छ्रुत्वा वचन राज्ञ्या कथितं तत्र राजनि ।
ययौ द्रष्टुं मुनिं तत्र संजयः प्रीतिमांस्तदा ॥ २७. ४५ ॥

धनं समर्पितं राज्ञा सन्तुष्टेन तदा महत् ।
मह्यंच भागिनेयाय पारिबर्हं महात्मना ॥ २७. ४६ ॥

एतत्ते सर्वमाख्यातं वर्तनं यत्पुरातनम् ।
मायया बलमाहात्म्यं ह्यनुभूतं यथा मया ॥ २७. ४७ ॥

संसारेऽस्मिन् महाभाग मायागुणकृतेऽनृते ।
तनुभृत्तु सुखी नास्ति न भूतो न भविष्यति ॥ २७. ४८॥

27.44. 'அம்மா! உங்கள் மாப்பிள்ளை அழகிய முக முடையவராகி மிகுந்த ஒளியுடன் விளங்குகிறார். பர்வத முனிவரின் வார்த்தையால் இப்பொழுது அவர் சாபம் நீங்கியவராகி விட்டார்.'

27.45. அவ்வார்த்தையைக் கேட்டதும் அரசியால் அது அரசருக்குத் தெரிவிக்கப்பட்டது. மிகுந்த பிரீதியுடன் ஸஞ்ஜயன் முனிவரைப் பார்ப்பதற்கு வந்தார்.

27.46. மகிழ்ச்சியடைந்த மகாத்மாவாகிய அரசனால் எனக்கும் என் மருமகரான பர்வதருக்கும் பொருள் ஸன் மானம் செய்யப்பட்டது.

27.47. மாயையின் வலிமையையும் மாகாத்மியத்தை யும் நான் புராதன காலத்தில் எப்படி அனுபவித்தறிந்தேன் என்ற வரலாறு முழுவதும் இங்ஙனம் உனக்குக் கூறியாயிற்று.

27.48. மகாபாக்கியசாலியே! மாயையின் குணங் களால் ஆக்கப்பட்ட பொய்யான இந்த ஸம்ஸாரத்தில் உடல் படைத்தவர்களில் சுகமுள்ளவன் என்று ஒருவனும் இல்லை, இருந்ததுமில்லை, இருக்கப் போவதுமில்லை.

कामक्रोधौ तथा लोभो मत्सरो ममता तथा।
अहंकारो मदः केन जिताः सर्वे महाबलाः ॥ २७. ४९ ॥
सत्त्वं रजस्तमश्चैव गुणास्त्रय इमे किल।
कारणं प्राणिनां देहसंभवे सर्वथा मुने ॥ २७. ५० ॥
कस्मिंश्चित्समये व्यास वनेऽहं विष्णुना सह।
गच्छन् हास्यविनोदेन स्त्रीभावं गमितः क्षणात् ॥ २७. ५१ ॥
राजपत्नीत्वमापन्नो मायाबलविमोहितः।
पुत्राः प्रसूता बहवो गेहे तस्य नृपस्य ह ॥ २७. ५२ ॥

व्यास उवाच —

संशयोऽयं महान्साधो श्रुत्वा ते वचनं किल।
कथं नारीत्व-मापन्नस्त्वं मुने ज्ञानवान् भृशम् ॥ २७. ५३ ॥

27.49. காமம், கோபம், உலோபம், மாச்சரியம் அகங்காரம், மமகாரம், மதம் இவை யாரால்தான் ஜயிக்கப் பட்டன. எல்லாமே வலிமை மிகுந்தவை.

27.50. முனிவரே! பிராணிகளின் தேக உற்பத்திக்கு ஸத்துவம், ரஜஸ், தமஸ் என்ற இம் முக்குணங்கள்தான் எப்பொழுதும் காரணம்.

27.51. வியாஸரே! ஒரு சமயம் காட்டில் நான் விஷ்ணுவுடன் கூட ஹாஸ்யத்தோடும் விநோதமாகவும் செல்லுகையில் ஒரு கணத்தில் ஸ்திரீத்தன்மையை அடைந் தேன்.

27.52. மாயாபலத்தால் மதிமயங்கி நான் ஒரு சமயம் ஒரு அரசனுக்குப் பத்தினியாகி அவ்வரசனுடைய அரண்மனையில் பல புத்திரர்களையும் கூடப் பெற்றேன்.

வியாஸர் கூறியது—

27.53. முனிவரே! ஸாதுவே! உம்முடைய வார்த் தையைக் கேட்டு எனக்குப் பெரிய சந்தேகம் உண்டாயிருக் கிறது. சிறந்த ஞானவானாகிய நீர் எப்படி பெண் தன் மையை அடைந்தீர்கள்?

एतदाख्याहि चरितं मायाया महदद्भुतम् ।
मोहितं च यथा सर्वमिदं स्थावरजंगमम् ॥ २७.५५ ॥

नारद उवाच —

कदाचित्सत्यलोकाद्वै श्वेतद्वीपे मनोहरे।
गतोऽहं दर्शनाकांक्षी हरेरद्भुतकर्मणः ॥ २८. ३ ॥

दृष्टो मया देवदेवश्चक्रपाणिर्गदाधरः ।
लक्ष्म्या सह विलासिन्या क्रीडमानो मुदायुतः ॥ २८. ६ ॥

वीक्ष्य मां कमलादेवी गताऽन्तर्धान-मन्तिकाम् ।
सुप्रिया वासुदेवस्य वरचामीकरप्रभा ॥ २८. ८ ॥

अन्तर्गृहगतां दृष्ट्वा सिन्धुजां व्यञ्जनान्विताम् ।
मया पृष्टो देवदेवो वनमाली जगत्प्रभुः ॥ २८. ९ ॥

27.55. அசைவதும் அசையாததுமாகிய இவ்வுலகெல்லாம் எந்த மாயையின் மயக்கத்திற்குள்ளாயிருக்கிறதோ அந்த மாயையின் மிகவும் அற்புதமான இந்த சரித்திரத்தை எனக்கு எடுத்துக் கூறுங்கள்.

நாரதர் கூறியது—

28.3. அற்புதமான லீலைகள் புரியும் ஹரியைக் காணும் ஆவலுடன் நான் ஒரு சமயம் ஸத்தியலோகத்திலிருந்து மனோஹரமான ச்வேதத்வீபத்திற்குச் சென்றேன்.

28.6. சக்ரபாணியும் கதாதரருமாகிய தேவதேவர் அங்கு அழகுமிக்க லக்ஷ்மீதேவியுடன் மகிழ்ச்சிபொங்க விளையாடிக் கொண்டிருக்கக் கண்டேன்.

28.8. வாசுதேவருக்குப் பிரியமானவளும் பொன் போலொளிரும் மேனி படைத்தவளுமான லக்ஷ்மீதேவி என்னைக்கண்டதும் உள்ளே போய் மறைந்துவிட்டாள்.

28.9. அழகுமிக்க தேவி வீட்டினுள் சென்று விட்டதைக் கண்டு வனமாலையணிந்தவரும் தேவதேவருமான உலக நாயகரை நான் பின்வருமாறு வினவினேன்.

भगवन् देवदेवेश पद्मनाभ सुरारिहन् ।
कथं च मा गता दृष्ट्वा मामागच्छन्तमन्तिकाम् ॥ २८. १० ॥

नाहं विटो न वा धूर्तस्तापसोऽहं जगद्गुरो।
जितेन्द्रियो जितक्रोधो जितमायो जनार्दन ॥ २८. ११ ॥

निशम्य वचनं किंचिद्गर्वयुक्तं जनार्दनः।
उवाच मां स्मितं कृत्वा वीणावन्मधुरां गिरम् ॥ २८. १२ ॥

नारदैवं विदा नीतिर्न स्थातव्यं कदाचन ।
पतिं विनाऽन्यसान्निध्ये कस्यचिद्योषया क्वचित् ॥ २८. १३ ॥

माया सुदुर्जया विद्वन् योगिभिर्जितमारुतैः।
सांख्यविद्भिर्निराहारैस्तापसैश्च जितेन्द्रियैः ॥ २८. १४ ॥

28.10. 'பகவானே! தேவநாயகரே! பத்மநாபா! தேவசத்துருக்களையழிப்பவரே! நான் நெருங்குவதைக் கண்டு ஏன் லக்ஷ்மீதேவி இடம் விட்டகல வேண்டும்.

28.11. 'ஜகத்குருவே! ஜனார்த்தனரே! நான் ஸ்திரீ லோலனல்லன், துஷ்டனல்லன், தவஞ்செய்பவன், இந்திரியங்களை ஜயித்தவன், கோபத்தை ஜயித்தவன், மாயையை வென்றவன்.'

28.12. சற்று கர்வத்துடன் கூடிய அவ்வார்த்தையைக் கேட்டு ஜனார்த்தனர் புன்முறுவல் பூத்து வீணையின் ஒலி போன்ற இனியகுரலில் பின்வருமாறு என்னிடம் கூறினார்.

28.13. 'நாரதரே! நீதியை உணர்ந்த எந்த ஸ்திரீயாலும் ஒரு பொழுதும் ஓரிடத்திலும் கணவனல்லாத மற்றவர் முன்னிலையில் தங்கக் கூடாது.

28.14. வித்வானே! பிராணனை ஜயித்த யோகிகளாயினும், ஸாங்கிய ஞானம் படைத்தவர்களாயினும் ஆகாரமில்லாமல் தவஞ் செய்பவர்களாயினும், இந்திரியங்களை ஜயித்தவர்களாயினும் எவராலும் மாயை ஜயிக்க முடியாதவள்.

देवैश्च मुनिशार्दूल यत्त्वयोक्तं वचोऽधुना।
जितमायोऽस्मि गीतज्ञ नैवं वाच्यं कदाचन ॥ २८. १५ ॥

नाहं शिवो न वा ब्रह्मा जेतुं तां प्रभवोऽप्यजाम्।
मुनयः सनकाद्याश्च कस्त्वं केऽन्ये क्षमा जये ॥ २८. १६ ॥

देवदेहं नृदेहं वा तिर्यग्देहमथापि वा।
बिभृयाद्यः शरीरं च स कथं तां जयेदजाम् ॥ २८. १७ ॥

त्रियुतस्तां कथं मायां जेतुं शक्तः पुमान् भवेत्।
वेदविद्योगविद्वाऽपि सर्वज्ञो विजितेन्द्रियः ॥ २८. १८ ॥

कालोऽपि तस्या रूपं हि रूपहीनः स्वरूपकृत्।
तद्वशे वर्तते देही विद्वान्मूर्खोऽथ मध्यमः ॥ २८. १९ ॥

28.15. 'முனிசிரேஷ்டரே! சங்கீத நிபுணரே! தேவர்களாலும் ஜயிக்க முடியாதவள். 'நான் மாயையை ஜயித்தவன்' என்று நீர் இப்பொழுது சொன்ன வார்த்தை எதுவோ அப்படி ஒரு பொழுதும் சொல்லக் கூடாது.

28.16. 'நானோ, சிவனோ, பிரம்மாவோ அந்த மாயையை ஜயிக்கும் சக்தியுடையவர்களல்லர். ஸநகாதி முனிவர்களும் அப்படியே. நீரோ மற்றவர்களோ எப்படி ஜயிக்கும் சக்தி பெற்றவர்களாவீர்கள்?

28.17. 'தேவதேகமோ, மானிடதேகமோ, மற்ற பிராணிகளின் தேகமோ, ஒரு ஜீவன் தேகத்தைத் தாங்கும் வரை எங்ஙனம் மாயையை ஜயித்தவனாவான்?

28.18. 'முக்குணங்களுடன் கூடிய புருஷன் வேதங் கற்றவனாகவும் யோகமறிந்தவனாகவும், எல்லா மறிந்தவனாக வும், இந்திரியங்களை ஜயித்தவனாகவும் இருந்தாலும் மாயையை ஜயிக்கும் சக்தி உடையவனாக எப்படி ஆவான்?

28.19. 'ரூபமில்லாததும் ஸ்வரூபத்தை உண்டாக்கு வதுமான காலம் அந்த மாயையின் ரூபம். கற்றவனும் கல்லாதவனும் நடுவலவனும், தேகம் படைத்த எல்லோருமே அதற்கு வசப்பட்டவர்கள்.

कालः करोति धर्मज्ञ कदाचिद्विकलं पुनः।
स्वभावात्कर्मतो वाऽपि दुर्ज्ञेयं तस्य चेष्टितम् ॥ २८. २० ॥

नारद उवाच —

इत्युक्त्वा विरतो विष्णुरहं विस्मयमानसः।
तमब्रुवं जगन्नाथं वासुदेवं सनातनम् ॥ २८. २१ ॥

रमापते कथं रूपा माया सा कीदृशी पुनः।
कियद्बला क्वसंस्थाना कस्याधारा वदस्व मे ॥ २८. २२ ॥

द्रष्टुकामोऽस्मि तां मायां दर्शयाऽऽशु महीधर।
ज्ञातुमिच्छामि तां सम्यक्प्रसादं कुरु मापते ॥ २८. २३ ॥

28.20. 'தர்மந் தெரிந்தவரே! காலம் ஒவ்வாரு சமயத்தில் இயற்கையாகவோ கர்மவசத்தாலோ கலவரத்தை விளைக்கிறது. அதின் செயலை அறிவது வெகு கடினம்.'

நாரதர் கூறியது

28.21. இவ்வாறு கூறிவிட்டு விஷ்ணு மௌனமானார். நான் வியப்படைந்த மனத்துடன் ஸநாதனரும் ஜகந்நாதருமான வாசுதேவரைப் பின் வருமாறு வினவினேன்.

28.22. 'லக்ஷ்மீபதியே! மாயையின் ரூபம் என்ன? அது எப்படிப்பட்டது? அதன் பலமென்ன? இருப்பிடமெது? ஆதாரமெது? இதையெல்லாம் எனக்குக் கூறியருளுதல் வேண்டும்.

28.23. 'லக்ஷ்மீபதியே! பூபதியே! நான் அந்த மாயையை நன்றாக அறிய விரும்புகிறேன், காண விரும்புகிறேன். சீக்கிரமே காட்டியருளும்.'

विष्णुरुवाच —

त्रिगुणा साऽखिलाधारा सर्वज्ञा सर्वसम्मता।
अजेयाऽनेकरूपा च सर्वं व्याप्य स्थिता जगत् ॥ २८. २४ ॥

दिदृक्षा यदि ते चित्ते नारदारोहणं कुरु।
गरुडे मत्समेतोऽद्य गच्छावोऽन्यत्र सांप्रतम् ॥ २८. २५ ॥

दर्शयिष्यामि ते मायां दुर्जयामजितात्मभिः।
दृष्ट्वा तां ब्रह्मपुत्र त्वं विषादे मा मनः कृथाः ॥ २८. २६ ॥

नारद उवाच —

इत्युक्त्वा देवदेवो मां सस्मार विनतासुतम्।
स्मृतमात्रस्तु गरुडस्तदागाद्धरिसन्निधौ ॥ २८. २७ ॥

விஷ்ணு கூறியது—

28.24. அவள் முக்குணவடிவினள், அனைத்திற்கும் ஆதாரமாகியவள், எல்லாமறிந்தவள், எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவள், ஜயிக்கமுடியாதவள், பலவடிவெடுப்பவள், உலகனைத்தையும் வியாபித்து நிற்பவள்.

28.25. நாரதரே! என்னுடன் கூட வாரும். கருடன் மேலேறி இப்பொழுதே இன்னொரு இடத்திற்குச் செல்வோம். உனக்கு அப்படிப் பார்க்கும் ஆசை மனதிலிருந்தால் என் பின் ஏறிக்கொள்ளும்.

28.26. தங்களையே ஜயிக்காதவர்களால் ஜயிக்கமுடியாத மாயையை இப்பொழுதே உனக்குக் காட்டுகிறேன். பிரும்ம புத்திரரே! அவளைக் கண்டு நீ மனதில் துக்கிக்கக் கூடாது.

நாரதர் கூறியது—

28.27. தேவதேவர் என்னிடம் இவ்வாறு கூறிவிட்டு கருடனை நினைத்தார். நினைத்தமாத்திரத்தில் அங்கு ஹரி ஸந்நிதிக்கு கருடன் வந்து சேர்ந்தார்.

आगतं गरुडं वीक्ष्य आरुरोह जनार्दनः।
समारोप्य च मां पृष्ठे गमनाय कृतादरः॥ २८. २८॥

चलितो विनतापुत्रो वैकुण्ठाद्वायुवेगवान्।
प्रेरितो यत्र कृष्णेन गन्तुकामेन काननम्॥ २८. २९॥

महावनानि दिव्यानि सरांसि सरितस्तथा।
पुरग्रामकरादींश्च खेटखर्वडगोव्रजान्॥ २८. ३०॥

तत्र रम्यं सरो दिव्यं दृष्टं पंकजमण्डितम्।
शुचि मृष्टजलं भृंगयूथनादविराजितम्॥ २८. ३३॥

मामाह भगवान् वीक्ष्य तडागं परमाद्भुतम्।
स्पर्धकं चोदधेः क्षीरं मृष्टं वारि विशेषतः॥ २८. ३५॥

28.28. கருடன் வந்ததைக் கண்ணுற்று ஜனார்த்தனர் அவர் மேல் ஏறிக் கொண்டார். என்னையும் பின்னால் ஏற்றிக் கொண்டு புறப்படலானார்.

28.29. விநதையின் புத்திரரான கருடன் வைகுண்டத்திலிருந்து வாயு வேகத்தில் கிளம்பினார். கிருஷ்ணனால் எங்கு போகவேண்டுமென்று ஏவப்பட்டாரோ அந்த வனத்தை நோக்கிச் சென்றார்.

28.30. பெரிய வனங்களையும், தெய்வீகமான நீர்நிலைகளையும், ஆறுகளையும், நகரங்களையும், பட்டணங்களையும் கிராமங்களையும், பள்ளத்தாக்குகளையும், இடைச் சேரிகளையும் கடந்தோம்.

28.33. தெய்வீகமான அழகியதொரு குளம் காணப்பட்டது. அதில் தாமரை நிறைந்திருந்தது. ஜலம் இனிமையாகவும் சுத்தமாகவும் காணப்பட்டது. வண்டுக் கூட்டங்கள் நாதத்துடன் விளங்கிற்று.

28.35. மிக அற்புதமானதும் பாற்கடலுடன் போட்டி போடுவது போன்ற சிறந்த சுத்தஜலம் நிறைந்ததுமான அந்தத் தடாகத்தைப் பார்த்து பகவான் என்னிடம் பின்வருமாறு கூறினார்.

विष्णुरुवाच —

पश्य नारद गम्भीरं सरः सारसनादितम्।
अत्र स्नात्वा गमिष्याव: कान्यकुब्जं पुरोत्तमम् ॥ २८. ३७ ॥

नारद उवाच —

इत्युक्त्वा गरुडादाशु मामुत्तार्य व्यतारयत्।
मामुवाच मुने स्नानं कुरु त्वं विमले जले ॥ २८. ३९ ॥

पश्चादहं करिष्यामि तडागेऽस्मिन् सुपावने।
साधूनामिव चेतांसि जलानि निर्मलानि च ॥ २८. ४० ॥

सुरभीणि परागैस्तु पंकजानां विशेषतः।
इत्युक्तोऽहं भगवता मुक्त्वा वीणां मृगाजिनम् ॥ २८. ४१ ॥

स्नानाय कृतधीस्तीरे गतः प्रेमसमन्वितः।
पादौ प्रक्षाल्य हस्तौ च शिखां बद्ध्वा कुशग्रहम्
॥ २८. ४२ ॥

விஷ்ணு கூறியது—

28.37. நாரதரே! ஹம்ஸங்களின் நாதத்துடன் கூடிய இந்த கம்பீரமான தடாகத்தைப் பாரும். இதில் ஸ்நானம் செய்துவிட்டு உத்தமநகரமாகிய கான்யகுப்ஜம் செல்வோம்.

நாரதர் கூறியது—

28.39. இங்ஙனம் கூறிவிட்டு விரைவில் என்னை கருடன் மேலிருந்து இறக்கிவிட்டுத் தானும் இறங்கினார். பின்பு 'முனிவரே! இந்த நிர்மலமான ஜலத்தில் ஸ்நானம் செய்யும்' என்று என்னிடம் கூறினார்.

28.40. 'பிற்பாடு இந்தப் புனிதமான தடாகத்தில் நான் ஸ்நானம் செய்கிறேன். இந்த ஜலம் ஸாதுக்களின் சித்தம் போல் நிர்மலமாயிருக்கிறது.

28.41–42. 'தாமரையின் மகரந்தத்தூளால் சிறந்த வாசனையுடன் கூடியிருக்கிறது' என்று பகவானால் கூறப் பெற்ற நான் வீணையையும் மான் தோலையும் வைத்து விட்டுப் பிரீதியுடன் தடாகத்தில் ஸ்நானம் செய்யும் எண்ணத்துடன் கால் கைகளைச் சுத்தம் செய்து கொண்டு சிகையை முடிந்து கொண்டு தர்ப்பையைக் கையில் வைத்துக் கொண்டு;

कृत्वाऽऽचम्य शुचिस्तोये स्नातवानस्मि तज्जले ।
यदा तस्मिञ्जले रम्ये स्नातोऽहं पश्यतो हरेः ॥ २८. ४३ ॥

विहाय पौरुषं रूपं प्राप्तः स्त्रीत्व-मनुत्तमम् ।
हरिर्गृहीत्वा वीणां मे तथा कृष्णाजिनं शुभम् ॥ २८. ४४ ॥

आरुह्य गगनं तूर्णं जगाम स्वगृहं क्षणात् ।
ततोऽहं स्त्रीत्वमापन्नश्चारुभूषणभूषितः ॥ २८. ४५ ॥

तत्क्षणान्मनसो जाता पूर्वदेहस्य विस्मृतिः ।
विस्मृतोऽसौ जगन्नाथो महती विस्मृता पुनः ॥ २८. ४६ ॥

संप्राप्य मोहिनीरूपं तडागान्निर्गतो बहिः ।
अपश्यं नलिनीजुष्टं सरस्तद्विमलोदकम् ॥ २८. ४७ ॥

28.43–45. ஆசமனம் செய்து விட்டுப் பரிசுத்தமான நீரில் ஸ்நானம் செய்தேன். ஹரியானவர் பார்த்துக் கொண்டிருக்கவே அவ்வினிய ஜலத்தில் எப்பொழுது ஸ்நானம் முடித்தேனோ, அப்பொழுது நான் புருஷரூபம் நீங்கிச் சிறந்ததொரு ஸ்திரீ வடிவமுடையவனானேன். ஹரியானவர் என்னுடைய வீணையையும் அழகிய மான்தோலையும் எடுத்துக் கொண்டு விரைவில் கருடன் மேலேறி ஆகாய மார்க்கமாய்ச் சென்று விட்டார். நான் அழகிய ஆபரணங்களாலலங் கரிக்கப்பெற்ற ஒரு ஸ்திரீயாக அங்கு நின்றேன்.

28.46. அந்தக் கணத்திலேயே முந்திய உடலின் நினைவு மனதை விட்டு நீங்கிவிட்டது. ஜகந்நாதனோ, மஹதீ என்ற வீணையோ ஒன்றும் ஞாபகமில்லை.

28.47. மோஹினீ ரூபத்தையடைந்த நான் தடாகத்திலிருந்து வெளிவந்து தாமரை நிறைந்ததும் மாசற்ற நீருடையதுமான அந்த தடாகத்தைப் பார்த்தேன்.

सहसा दृक्पथं प्राप्तस्तत्र तालध्वजो नृपः ।
गजाश्वरथवृन्दैश्च संवृतो रथसंस्थितः ॥ २८. ४९ ॥

युवा भूषणसंवीतो देहवानिव मन्मथः ।
वीक्ष्य मां भूपतिस्तत्र दिव्यभूषणभूषिताम् ॥ २८. ५० ॥

राकाचन्द्रमुखीं योषां विस्मयं परमं गतः ।
पप्रच्छ काऽसि कल्याणि कस्य पुत्री सुरस्य वा ॥ २८. ५१ ॥

मानुषस्य च वा कान्ते गन्धर्वस्योरगस्य च ।
एकाकिनी कथं बाला रूपयौवनभूषिता ॥ २८. ५२ ॥

विवाहिताऽथ कन्या वा सत्यं वद सुलोचने ।
किं पश्यसि सुकेशान्ते तडागेऽस्मिन् सुमध्यमे ॥ २८. ५३ ॥

28.49. அப்பொழுதே தாலத்வஜன் எனப் பெயர் பெற்ற ஒரு அரசன் யானை, குதிரை, தேர் முதலியவை புடை சூழத் தேரின் மேல் ஏறிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்.

28.50–53. அவர் யௌவன புருஷனாகவும், ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றவனாகவும் மன்மதனே உருக் கொண்டு வந்தவர் போலுங் காணப்பட்டார். தெய்வீக மான ஆபரணங்களணிந்து பூர்ண சந்திரன் போன்ற முகம் படைத்து விளங்கும் ஸ்திரீயாகிய என்னை அவ்வரசன் அங்கே கண்டு மிக்க வியப்படைந்து ‘மங்கள வடிவினளே! அழகு மிக்கவளே! நீ யார்? யாருடைய புத்திரி? நீ தேவஸ்திரீயா, மனுஷ்ய ஸ்திரீதானா? அல்லது கந்தர்வரையோ நாகரையோ சேர்ந்தவளா? சிறுமியும் ரூபமும் யௌவனமும் நிறைந்த வளுமான நீ எப்படி இங்கு தனியே இருக்கிறாய்? நீ கல்யாணமானவளா, கன்னிப் பெண்ணா? கண்ணழகு படைத்தவளே! கூந்தலழகு படைத்தவளே! இடையழகு படைத்தவளே! இந்தத் தடாகத்தில் என்ன பார்க்கிறாய்? உண்மையைக் கூறு’ என்று கேள்விகளைக் கேட்டார்.

चिकीर्षितं पिकालापे ब्रूहि मन्मथमोहिनि।
भुंक्ष्व भोगान् मरालाक्षि मया सह कृशोदरि ॥ २८. ५४ ॥

इत्युक्तोऽहं तदा तेन राज्ञा तालध्वजेन च।
विमृश्य मनसाऽत्यर्थं तमुवाच विशांपते ॥ २९. १ ॥

राजन्नाहं विजानामि पुत्री कस्येति निश्चयम्।
पितरौ क्व च केन स्थापिता च सरोवरे ॥ २९. २ ॥

दैवमेव परं राजन्नास्त्यत्र पौरुषं मम।
धर्मज्ञोऽसि महीपाल यथेच्छसि तथा कुरु ॥ २९. ४ ॥

तवाधीनाऽस्म्यहं भूप न मे कोऽप्यस्ति पालकः।
न पिता न च माता च न स्थानं न च बान्धवाः ॥ २९. ५ ॥

28.54. 'மன்மத மோகினி! குயில் போன்ற குரலுடையவளே! உன் விருப்பத்தைக் கூறு. அன்னம் போன்ற கண் படைத்தவளே! மெலிந்த வயிறுடையவளே! என்னுடன் போகங்களை அனுபவி'.

29.1–2. தாலத்வஜன் என்ற அவ்வரசனால் இவ்வாறு கூறப்பெற்ற நான் அப்பொழுது மனதில் முழுதும் ஆராய்ந்து அவ்வரசனிடம் பின் வருமாறு கூறினேன். 'அரசே! நான் யாருடைய புத்திரி என்பதை அறியேன். என் தாய் தந்தையர் யார் என்பதையோ, எவரால் இந்தத் தடாகத்தில் நிறுத்தப் பட்டேன் என்பதையோ நிச்சயமாக நான் அறியேன்.

29.4. 'அரசே! இது தெய்வாதீனமாய் நிகழ்ந்தது. இதில் என்னுடைய முயற்சி எதுவுமில்லை. நீர் தர்மம் தெரிந்தவர். பூபாலரே! எப்படி இஷ்டமோ அப்படிச் செய்யவும்.

29.5. 'அரசே! நான் உமக்கு வசப்பட்டவள். தந்தையோ தாயோ பந்துக்களோ என்னைக்காப்பவர் எவருமில்லை. எனக்கு இருப்பிடமும் இல்லை.'

मुदितोऽसौ गृहे नीत्वा मां तदा पृथिवीपतिः।
विवाहविधिना राजा शुभे लग्ने शुभे दिने ॥ २९. १० ॥

उपयेमे च मां तत्र हुतभुक्सन्निधौ ततः।
तस्याहं वल्लभा जाता प्राणेभ्योऽपि गरीयसी ॥ २९. ११ ॥

व्यासाहं तेन संसक्ता क्रीडारसवशीकृता।
स्मृतवान् पूर्वदेहं न पुंभावं मुनिजन्म च ॥ २९. १७ ॥

ममैवायं पतिर्योषाऽह पत्नीषु प्रिया सती।
पट्टराज्ञी विलासज्ञा सफलं जीवितं मम ॥ २९. १८ ॥

इति चिन्तयती तस्मिन् प्रेमबद्धा दिवानिशम्।
क्रीडासक्ता सुखे लुब्धा तं स्थिता वशवर्तिनी ॥ २९. १९ ॥

29.10–11. மகிழ்ச்சியடைந்த அரசன் என்னை அரண்மனைக்கு அழைத்துச் சென்று நல்ல நாளில் சுப வேளையில் விவாகமுறைப்படி அக்னியின் முன்பு கல்யாணம் செய்து கொண்டார். அவருக்குப் பிராணனை விடப் பிரியமான மனைவியாகி விட்டேன்.

29.17. வியாஸரே ! நான் அவரிடம் பற்றுக் கொண்டு விளையாட்டுகளால் வசப்படுத்தப்பட்டு என்னுடைய பூர்வ தேகத்தையோ புருஷத்தன்மையையோ முனிப் பிறவியையோ எண்ணவேயில்லை.

29.18–19. 'இவர் என்னுடைய பதி. நான் ஸ்திரீ. இவருடைய பிரியமான கற்புவாய்ந்த பத்னி, பட்டமகிஷி, அவருக்கு மகிழ்வூட்டத் தெரிந்தவள், என்னுடைய பிறவி பயனுடையதாயிற்று' என்று இவ்வாறு சிந்தித்துக் கொண்டு அவரிடம் இரவு பகலாய்ப் பிரேமையால் கட்டுப்பட்டு விளையாட்டில் பற்றுவைத்துச் சுகத்தில் பேராசை கொண்டு அவருக்கு வசமாகி நடப்பவளாய் இருந்தேன்.

विस्मृतं ब्रह्मविज्ञानं ब्रह्मज्ञानं च शाश्वतम् ।
धर्मशास्त्रपरिज्ञानं तदासक्तमना स्थिता ॥ २९. २० ॥

एवं द्वादश पुत्राश्च प्रसूता भूपसंमताः ।
मोहितोऽहं तदा तेषां प्रीत्या पालनलालने ॥ २९. २९ ॥

पुनरष्टसुताः काले काले जाताः स्वरूपिणः ।
गार्हस्थ्यं मे ततः पूर्णं संपन्नं सुखसाधनम् ॥ २९. ३० ॥

तेषां दारक्रियाः काले कृता राज्ञा यथोचिताः ।
स्नुषाभिश्च तथा पुत्रैः परिवारो महानभूत् ॥ २९. ३१ ॥

ततः पौत्रादिसंभूतास्तेऽपि क्रीडारसान्विताः ।
आसन्नानारसोपेता मोहवृद्धिकरा भृशम् ॥ २९. ३२ ॥

29.20. அப்படி நான் பற்றுக் கொண்டு நிற்கையில் பிரம்ம விஞ்ஞானம் ஞாபகமில்லை, அழியாத பிரம்ம ஞானமுமில்லை, தர்மசாஸ்திர ஞானமுமில்லை.

29.29. அரசனுக் கொப்பான பிள்ளைகள் பன்னிரண்டு பேர்கள் எனக்குப் பிறந்தார்கள். அவர்களைப் பிரீதியுடன் பரிபாலிப்பதிலும் அவர்களுடன் குலாவுவதிலும் நான் மதி மயங்கியிருந்தேன்.

29.30. மறுபடியும் எட்டுப் பிள்ளைகள் காலக்கிரமத்தில் நல்ல அழகுள்ளவர்களாய்ப் பிறந்தார்கள். கிருஹஸ்த தர்மம் எனக்குப் பரிபூர்ணமாகிச் சுகசாதனம் நிறைந்ததாயிற்று.

29.31. நாளடைவில் முறைப்படி அரசனால் பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்யப்பட்டது. பிள்ளைகளுடனும் நாட்டுப்பெண்களுடனும் கூடிய பரிவாரம் பெரிதாயிற்று.

29.32. பின்பு பேரன்மார்கள் தோன்றினார்கள். அவர்களும் உலகலீலைகளில் களிப்பவர்களாய்ப் பலவிதமான ருசிகளுடன் கூடியவர்களாய் மிகவும் மோகத்தை வளர்ப்பவர்களானார்கள்.

कदाचित्सुखमैश्वर्यं कदाचिद्दुःखमद्भुतम् ।
पुत्रेषु रोगजनितं देहसन्तापकारकम् ।। २९. ३३ ।।

परस्परं कदाचित्तु विरोधोऽभूत्सुदारुणः ।
पुत्राणां वा वधूनां च तेन सन्ताप-संभवः ।। २९. ३४ ।।

नारदोऽहं भगवता वंचितो मायया किल ।
न कदाचिन्मयाऽप्येवं चिन्तितं मनसा किल ।। २९. ३९ ।।

अथ कश्चिन्नृपः कामं दूरदेशाधिपो महान् ।
अरातिभावमापन्नः पतिना सह मानद ।। २९. ४१ ।।

कृत्वा सैन्यसमायोगं रथैश्च वारणैर्युतम् ।
आजगाम कान्यकुब्जे पुरे युद्धमचिन्तयत् ।। २९. ४२ ।।

वेष्टितं नगरं तेन राज्ञा सैन्ययुतेन च ।
मम पुत्राश्च पौत्राश्च निर्गता नगरात्तदा ।। २९. ४३ ।।

29.33. சிலசமயம் சுகம், ஐசுவரியம், சிலசமயம் துக்கம், புத்திரர்களிடம் உடலை வருத்தும் வியாதி எல்லாம் அதிசயமாயிருந்தது.

29.34. சிலசமயம் புத்திரர்களிடையும் மருமக்களிடையும் கடுமையான விரோதம் ஏற்பட்டு மன எரிச்சல்.

29.39. 'நான் நாரதன், பகவானுடைய மாயையால் வஞ்சிக்கப்பட்டுள்ளேன்' என்ற எண்ணம் என் மனதில் ஒரு பொழுதும் தோன்றவே இல்லை.

29.41. இப்படியிருக்கையில் தூரதேசத்து அரசன் யாரோ ஒருவன் என்னுடைய நாயகனிடம் பகை கொண்டவனுனான்.

29.42. யானைகளுடனும் தேர்களுடனும் சேனையைச் சேர்த்துக் கொண்டு கான்யகுப்ஜ நகரத்தின் மேல் போர் புரிவதற்காகப் படையெடுத்து வந்தான்.

29.43. அவ்வரசனுல் சைனியத்தைக் கொண்டு நகரம் முற்றுகையிடப்பட்டது. என்னுடைய பிள்ளைகளும் பேரன்மார்களும் நகரத்தை விட்டு வெளிச்சென்றுர்கள்.

संग्रामस्तुमुलस्तत्र कृतस्तैस्तेन पुत्रकैः।
हता रणे सुताः सर्वे वैरिणा कालयोगतः ॥ २९. ४४ ॥

राजा भग्नस्तु संग्रामादागतः स्वगृहं पुनः।
विललापाऽहमायुष्मञ्छोकसागरसंप्लवे ॥ २९. ४७ ॥

एतस्मिन्नन्तरे तत्र भगवान्मधुसूदनः।
कृत्वा रूपं द्विजस्याऽगाद् वृद्धः परमशोभनः ॥ २९. ४९ ॥

ब्राह्मण उवाच —

किं विषीदसि तन्वंगि भ्रमोऽयं प्रकटीकृतः।
मोहेन कोकिलालापे पतिपुत्र-गृहात्मके ॥ २९. ५० ॥

कात्वं कस्याः सुताः केऽमी चिन्तयात्मगतिं पराम्।
उत्तिष्ठ रोदनं त्यक्त्वा स्वस्था भव सुलोचने ॥ २९. ५२ ॥

29.44. அவர்களால் பகைவனுடன் கடுமையாக யுத்தஞ் செய்யப்பட்டது. எனினும் கால வசத்தால் பகைவனல் அவர்களெல்லோரும் கொல்லப்பட்டார்கள்.

29.47. என்னுடைய நாயகர் தோல்வியுற்றுப் போர்க் களத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பினர். நான் சோகக் கடலில் மூழ்கிக் கதறினேன்..

29.49. இந்த சமயத்தில் ஒரு வயது சென்ற பிராம்மண வடிவத்தை எடுத்துக் கொண்டு பரம மங்கள மூர்த்தியான பகவான் மதுசூதனர் அங்கு வந்து சேர்ந்தார்.

பிராம்மணர் கூறியது—

29.50. உடல் மெலிந்த பெண்ணே! ஏன் வருந்துகிருய்? குயில் போன்ற பேச்சுடையவளே! பதி யென்றும் புத்திரனென்றும் வீடு என்றும் ஏற்பட்ட இம் மதிமயக்கம் ஒரு பிரமை என்று தெளிவாக்கப்பட்டுளது.

29.52. நீ யார்? புத்திரர்கள் யாருடையவர்கள்? அவர்கள்தான் யாவர்? உத்தமமான ஆத்மாவின் கதியைச் சிந்தித்துப்பார். அழகிய கண்படைத்தவளே! அழுகையை விட்டு எழுந்திரு. ஆத்மாவில் நிலே பெற்றுக் கவலேயற்றிரு.

कोटिशस्ते मृताः पुत्रा जन्मजन्म समुद्भवाः।
पितरः पतयश्चैव भ्रातरो जामयस्तथा ॥ २९. ५९ ॥

केषां दुःखं त्वया कार्यं भ्रमेऽस्मिन्मानसोद्भवे।
वितथे स्वप्नसदृशे तापदे देहिनामिह ॥ २९. ६० ॥

इति तस्य वचः श्रुत्वा तीर्थे पुरुषसंज्ञके।
प्रविष्टा स्नातुकामाऽहं प्रेरिता तत्र विष्णुना ॥ २९. ६१ ॥

मज्जनादेव तीर्थेषु पुमान् जातः क्षणादपि।
हरिर्वीणां करे कृत्वा स्थितस्तीरे स्वदेहवान् ॥ २९. ६२ ॥

उन्मज्ज्य च मया तीरे दृष्टः कमललोचनः।
प्रत्यभिज्ञा तदा जाता मम चित्ते द्विजोत्तम ॥ २९. ६३ ॥

29.59. ஒவ்வொரு பிறவியிலும் உனக்குப் பிறந்த புத்திரர்கள் கோடிக் கணக்கில் மாண்டு போயிருக்கின்றனர். அவ்வாறே தான் பிதிரர்களும், நாயகர்களும், சகோதரர் களும் சகோதரிகளும்.

29.60. வீணனதும் கனவிற் கொப்பானதும் இங்கு உடல்படைத்தவர்க்குத் துன்பத்தைத் தருவதும் மனதில் உதித்ததுமான இந்த பிரமையில் உன்னல் யாருக்காக துக்கப்படவேண்டும்?

29.61. இப்படி அவருடைய வார்த்தையைக் கேட்டுப் புருஷதீர்த்தம் என்ற ஒரு தீர்த்தத்தில்அவ் விஷ்ணுவால் ஸ்நானம் செய்யும்படி ஏவப்பட்ட நான் அப்படிச் செய்ய விரும்பி அதில் புகுந்தேன்.

29.62. தீர்த்தத்தில் முழுகிய மாத்திரத்தில் ஒரு கணத்தில் நான் புருஷனுகிவிட்டேன். ஹரியானவர் தன் னுடைய ஸ்வரூபத்துடன் கையில் வீணையை வைத்துக் கொண்டு கரையில் நின்முர்.

29.63. முழுகியெழுந்த என்னுல் கரையில் கமலக் கண்ணன் காணப்பட்டதும் என் சித்தத்தில் பழைய நினைவு வந்து விட்டது.

संचिन्तितं मया तत्र नारदोऽहमिहागतः ।
हरिणा सह स्त्रीभावं प्राप्तो मायाविमोहितः ।। २९. ६४ ।।

इति चिन्तापरश्चाहं यदा जातस्तदा हरिः ।
मामाह नारदाऽऽगच्छ किं करोषि जले स्थितः ।। २९. ६५ ।।

विस्मितोऽहं तदा स्मृत्वा स्त्रीभावं दारुणं भृशम् ।
पुनः पुरुषभावश्च संपन्नः केन हेतुना ।। २९. ६६ ।।

मां दृष्ट्वा नारदं विप्रं विस्मितोऽसौ महीपतिः ।
क्व गता मम भार्या सा कुतोऽयं मुनिसत्तमः ।। ३०. १ ।।

उभयं मे गतं कान्ते पुत्रास्त्वं प्राणवल्लभा ।
तथाऽपि मरणं नास्ति दुःखितस्य भृशं प्रिये ।। ३०. ९ ।।

29.64. 'நான் நாரதன். ஹரியுடன் அங்கு வந்தேன். மாயையால் மயங்கி ஸ்த்ரீத்தன்மையை அடைந்தேன்' என்று என்னால் எண்ணப்பட்டது.

29.65. நான் இப்படிச் சிந்தையிலாழ்ந்திருக்கையில் ஹரியானவர் 'நாரதா! வா. ஜலத்தில் நின்றுகொண்டு என்ன செய்கிறாய்?'' என்று கூறினார்.

29.66. மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கிய ஸ்திரீத் தன்மையை நினைத்துப்பார்த்து மீண்டும் புருஷத்தன்மை அடைந்ததையும் எண்ணி அது எக்காரணத்தாலென்று வியப்புள்ளவனானேன்.

30.1. விப்ரனாகிய நாரதனாய் விளங்கிய என்னைப் பார்த்து அரசன் 'என் மனைவி எங்கு போனாள்? இந்த முனிசிரேஷ்டன் எங்கிருந்து வந்தான்' என்று ஆச்சரிய முடையவனானான்.

30.9. 'பிரியே! மனதிற்கினியாளே! எனக்குப் புத்திரர்களும் போய் விட்டார்கள், பிராணநாயகியாகிய நீயும் போய் விட்டாய். இரண்டையும் இழந்து மிகுந்த துக்கத்திலாழ்ந்துள்ள எனக்கு அப்படியும் சாவு வரவில்லை.'

एवं विलपमानं तं राजानं भगवान् हरिः।
निवारयामास तदा वचनैर्युक्तियोजितैः॥ ३०. १३ ॥

न दृष्टौ पितरावस्यास्त्वया प्राप्ता सरोवरे।
काकताली प्रसंगेन यद्भूतं तत्तथागतम्॥ ३०. १८ ॥

मा शोकं कुरु राजेन्द्र कालो हि दुरतिक्रमः।
कालयोगं समासाद्य भुंक्ष्व भोगान् गृहे यथा॥ ३०. १९ ॥

जिह्वोपस्थरसो राजन् पशुयोनिषु वर्तते।
ज्ञानं मानुषे देहे वै नाऽन्यासु च कुयोनिषु॥ ३०. २६ ॥

तस्माद्गच्छ गृहं त्यक्त्वा शोकं कान्तासमुद्भवम्।
मायेयं भगवत्यास्तु यया संमोहितं जगत्॥ ३०. २७ ॥

30.13. இப்படிப் பிரலாபிக்கும் அரசனை பகவான் ஹரியானவர் யுக்திக்குப் பொருத்தமான வார்த்தைகளால் தேற்றினர்.

30.18. 'இவளுடைய பெற்றோர்கள் காணப்படவில்லை. உன்னால் இவள் நீர் நிலையில் 'காகதாளீ' நியாயத்தில் அடையப்பட்டாள். எது எப்படி வந்ததோ அது அப்படி போய்விட்டது.

30.19. 'அரசசிரேஷ்டனே! வருத்தப்படாதே. காலம் எவராலும் கடக்க முடியாதது. காலத்திற்குத் தக்கபடி வரும் போகங்களை அனுபவித்துக் கொண்டு வீட்டிலிரு.

30.26. 'அரசே! நாக்கு ருசியும் உபஸ்தருசியும் மிருகப் பிறவிகளிலும் இருக்கின்றன. ஞானம் மானிட தேகத்தில் மட்டும் உளது. மற்ற தாழ்ந்த பிறவிகளில் இல்லை.

30.27. 'ஆகையால் மனைவியால் ஏற்பட்ட இந்த விசனத்தை உதறிவிட்டு வீட்டிற்குப் போ. எவளால் இவ்வுலகம் மோகத்திலாழ்த்தப் பட்டுளதோ அந்த பகவதியின் மாயை இது.'

नारद उवाच —

इत्युक्तो हरिणा राजा प्रणम्य कमलापतिम्।
कृत्वा स्नानविधिं सम्यग् जगाम निजमन्दिरम् ॥ ३०. २८ ॥

दत्त्वा राज्यं स्वपौत्राय प्राप्य निर्वेदमद्भुतम्।
वनं जगाम भूपालस्तत्त्वज्ञानमवाप च ॥ ३०. २९ ॥

गते राजन्यहं वीक्ष्य भगवन्तमधोक्षजम्।
तमब्रुवं जगन्नाथं हसन्तं मां पुनः पुनः ॥ ३०. ३० ॥

वंचितोऽहं त्वया देव ज्ञातं मायाबलं महत्।
स्मरामि चरितं सर्वं स्त्रीदेहे यत्कृतं मया ॥ ३०. ३१ ॥

நாரதர் கூறியது—

30.28. இங்ஙனம் ஹரியால் உபதேசிக்கப் பெற்ற அரசன் லக்ஷ்மீபதியை நமஸ்கரித்து முறைப்படி நன்ருக ஸ்நானம் செய்து விட்டுத் தனதரண்மனைக் கேகினுன்.

30.29. அரசாட்சியைத் தனது பேரனிடம் கொடுத்து விட்டு அற்புதமான வைராக்கியமுடையவனுய் வனஞ் சென்று அவ்வரசன் தத்துவ ஞானத்தை யடைந்தான்.

30.30. அரசன் சென்றபின் என்னைப்பார்த்து மீண்டும் மீண்டும் நகைக்கும் அதோக்ஷஜரும் உலகநாயகருமாகிய பகவானைப் பார்த்து நான் பின்வருமாறு கூறினேன்.

30.31. 'தேவதேவா ! உம்மால் நான் வஞ்சிக்கப் பட்டேன். மகத்தான மாயாபலம் என்னுல் அறியப்பட்டது. ஸ்திரீதேகத்தில் என்னுல் எது எல்லாம் செய்யப்பட்டதோ அதையெல்லாம் நான் எண்ணிப்பார்க்கிறேன்.

विष्णुरुवाच —

पश्य नारद मायावि-विलासोऽयं महामते।
देहेषु सर्वजन्तूनां दशा भेदाह्यनेकशः ॥ ३०. ३८ ॥
जाग्रत्स्वप्न-सुषुप्तिश्च तुरीया देहिनां दशा।
तथा देहान्तरे प्राप्ते सन्देहः कीदृशः पुनः ॥ ३०. ३९ ॥
सुप्तो नरो न जानाति न शृणोति वदत्यपि।
पुनः प्रबुद्धो जानाति सर्वं ज्ञानमशेषतः ॥ ३०. ४० ॥
स्वप्ने कोऽपि न जानाति भ्रमोऽयमिति निश्चयः।
तथा तथैव विभवो मायाया दुर्गमः किल ॥ ३०. ४५ ॥
तस्मान्मोहो न कर्तव्यः संसारेऽस्मिन्मुनीश्वर।
मायाविनिर्मितेऽसारे ऽपारे परमदुर्घटे ॥ ३०. ५२ ॥

விஷ்ணு கூறியது—

30.38. நாரதா ! மகாமதிமானே ! இந்தப் பிரபஞ்சம் ஒரு மாயாவியின் விளையாட்டைப் போன்றது. எல்லாப் பிராணிகளின் தேகங்களிலும் பற்பலவிதமான நிலைகள் ஏற்படுகின்றன.

30.39. விழிப்பு, கனவு, உறக்கம், துரீயம் என்பவை தேகம் படைத்தவர்களின் நிலைகள். அவ்வாறே தேகத்தின் முடிவும் ஒரு நிலை. இதில் சந்தேகப்படுவதற் கொன்றுமில்லை.

30.40. உறங்கும் மனிதன் ஒன்றையும் உணர்வதில்லை, கேட்பதில்லை, பேசுவதில்லை. விழித்தெழுந்ததும் மிச்சமில்லாமல் அறிவனைத்தையுமறிகிறான்.

30.45. கனவில் எவனும் இது பிரமை என்று நிச்சயமாக அறிவதில்லை. அப்படித்தான் மாயையின் லீலையும் அறியமுடியாதது.

30.52. முனீசுவரா ! மாயையால் கற்பனை செய்யப்பட்டதும் ஸாரமற்றதும் கரைகாணமுடியாததும் முடிவு காண முடியாததும் ஆகிய இந்த ஸம்ஸாரத்தில் மோஹத்தை யடையக் கூடாது.

इत्युक्त्वा भगवांस्तस्मिंस्तडागेऽतिमनोहरे।
आरुह्य गरुडं गन्तुं वैकुण्ठे च मनो दधे ॥ ३१.४ ॥

मामुवाच रमाकान्तो यथेष्टं गच्छ नारद।
एहि वा मम लोकं स्वं यथारुचि तथा कुरु ॥ ३१.५ ॥

ब्रह्मलोकं गतश्चाह-मापृच्छ्य मधुसूदनम्।
भगवानपि देवेशस्तत्क्षणाद्गरुडासनः ॥ ३१.६ ॥

वैकुण्ठमगमत्तूर्णं मामादिश्य यथा सुखम्।
ततोऽहं पितृसदनं गतो याते जनार्दने ॥ ३१.७ ॥

चिन्तयन् सकलं दुःखं सुखंच परमाद्भुतम्।
तावत्पृष्टो मुने पित्रा वीक्ष्य चिन्तातुरं तु माम् ॥ ३१.८ ॥

31.4. இவ்வாறு கூறிவிட்டு பகவான் அந்த மனோஹரமான தடாகக் கரையிலிருந்து வைகுண்டம் செல்ல எண்ணியவராய்க் கருடன் மேலேறினார்.

31.5. லக்ஷ்மீகாந்தர் என்னை நோக்கி 'நாரதரே! நீர் இஷ்டப்படி செல்லலாம். அல்லது என்னுடன் என்னுலகம் வரலாம். எப்படி விருப்பமோ அப்படிச் செய்யலாம்'. என்று கூறினார்.

31.6—7. நான் மதுஸூதனரிடம் பிரம்மலோகம் செல்ல விடைபெற்றுக் கொண்டேன். சுகமாகச் செல்ல எனக்குத்தரவளித்துவிட்டு தேவநாயகரான பகவானும் அக்கணமே கருடாரூடராய் விரைவில் வைகுண்டமேகினார். ஜனார்த்தனர் சென்றதும் நான் பிதாவின் இருப்பிடம் சென்றேன்.

31.8. முனிவரே! மிகவும் அற்புதமான துக்கம், சுகம் எல்லாவற்றையும் பற்றி யோசித்துக் கொண்டே செல்லவே, கவலை மேலிட்ட என்னைப் பார்த்து என் பிதாவால் பின்வருமாறு வினவப்பட்டேன்.

क्वगतोऽसि महाभाग कस्माच्चिन्तातुरः सुत ।
स्वस्थं नैवाद्य पश्यामि मनस्ते मुनिसत्तम ॥ ३१. ९ ॥

इति पृष्टस्तदा पित्रा बृस्यां समुपवेश्य च ।
तमब्रुवं स्ववृत्तान्तं मायाबलसमुद्भवम् ॥ ३१. ११ ॥

एतन्मायाबलं ब्रह्मन्न जानेऽहं दुरत्ययम् ।
ज्ञानहानिकरं जातं मूलं मोहस्य विस्फुटम् ॥ ३१. १६ ॥

अनुभूतं मया सर्वं ज्ञातं सर्वं शुभाशुभम् ।
कथं त्वं जितवांस्तात तमुपायं वदस्व मे ॥ ३१. १७ ॥

ब्रह्मोवाच —

दुर्जयैषा सुरैः सर्वै-र्मुनिभिश्च महात्मभिः ।
तापसै-र्ज्ञानयुक्तैश्च योगिभिः पवनाशनैः ॥ ३१. १९ ॥

31.9. 'மகாபாக்கியசாலியே! எங்கு சென்றிருந்தாய்? மகனே! எக்காரணத்தால் சித்தங்கலங்கியிருக்கிறாய்? முனிவர்களிற் சிறந்தவனே! உன் மனது இப்பொழுது அமைதியாயில்லை என நான் காண்கிறேன்.'

31.11. இங்ஙனம் தந்தையால் வினவப்பெற்ற நான் ஆசனத்திலமர்ந்து மாயாபலத்தால் ஏற்பட்ட எனது விருத்தாந்தத்தை அவரிடம் கூறினேன்.

31.16. 'பிரும்மதேவரே! கடக்க முடியாத இந்த மாயையின் பலத்தை நான் அறியவில்லை. இது ஞானத்தை யழிப்பது, மோஹத்திற்கு மூலம் என்பது தெளிவு.

31.17. 'என்னால் எல்லாம் அனுபவிக்கப்பட்டது, சுபம், அசுபம் எல்லாம் அறியப்பட்டது. பிதாவே! நீங்கள் எப்படி மாயையை ஜயித்தவரானீர்கள்? அந்த உபாயத்தை எனக்குக் கூற வேண்டும்.'

பிரம்மா கூறியது—

31.19. தேவர்களனைவர்களாலும் மஹாத்மாக்களான முனிவர்களாலும், ஞானம் நிறைந்த தபஸ்விகளாலும் காற்றைப் புசித்து வாழும் யோகிகளாலும் இவள் ஜயிக்க முடியாதவள்.

नाहं तां सर्वथा ज्ञातुं शक्तो मायां महाबलाम्।
विष्णुर्ज्ञातुं न शक्तश्च तथ शंभुरुमापतिः॥ ३१. २०॥

शोकं मा कुरु मेधाविंस्तत्र मायामहाबले।
न चैव विस्मयः कार्यो वयं सर्वे विमोहिताः॥ ३१. २२॥

नारद उवाच —

पित्रेत्युक्तस्तदा व्यास तमापृच्छ्य गतस्मयः।
आगतोऽस्म्यत्र पश्यन्वै तीर्थानि प्रवराणि च॥ ३१. २३॥

तस्मात्त्वमपि सन्त्यज्य मोहं कौरवनाशजम्।
कालक्षयं सुखासीनः स्थानेऽस्मिन् कुरुसत्तम॥ ३१. २४॥

अवश्यमेव भोक्तव्यं कृतं कर्म शुभाशुभम्।
निश्चयं हृदये कृत्वा विचरस्व यथासुखम्॥ ३१. २५॥

31.20. மகாபலம் வாய்ந்த அந்த மாயையை அறிந்து கொள்ள எவ்வாற்ருனும் நான் சக்தி வாய்ந்தவனல்லன்; விஷ்ணுவும் அறியும் சக்திபடைத்தவரல்லர்; உமாபதியான சம்புவும் அப்படியே.

31.22. மேதாவியே! மகாமாயையின் பலத்தைப் பற்றிய அவ்விஷயத்தில் துக்கப்படாதே. வியப்பையும் அடையாதே. நாம் எல்லோரும் மயக்கப்பட்டவர்களே யாவோம்.

நாரதர் கூறியது—

31.23. வியாஸரே! என் பிதாவால் இங்ஙனம் கூறப் பெற்ற பின் நான் கர்வத்தை விட்டுப் பிரபலமான புண்ணிய க்ஷேத்திரங்களை தரிசித்துக் கொண்டு இங்கு வந்துள்ளேன்.

31.24–25. குருசிரேஷ்டரே! ஆகையால் நீரும் கௌரவர்களின் நாசத்தால் விளைந்த மோஹத்தைக் காலத்தை வீணுக்குவதெனக்கண்டு விலக்கி இந்த ஸ்தானத்தில் சுகமாயிருந்துகொண்டு செய்யப்பட்ட வினை சுபமாயினும் அசுபமாயினும் அனுபவிக்க வேண்டியதே என இருதயத்தில் நிச்சயம் செய்துகொண்டு இஷ்டப்படி சஞ்சரியும்.

व्यास उवाच —

इत्युक्त्वा नारदो राजन् गतो मां प्रतिबोध्य च ।
अहं तच्चिन्तयन्वाक्यं यदुक्तं मुनिना तदा ॥ ३१. २६ ॥

स्थित: सरस्वतीतीरे कल्पे सारस्वते वरे ।
कालातिवाहनायैतत्कृतं भागवतं मया ॥ ३१. २७ ॥

पुराणमुत्तमं भूप सर्वसंशयनाशनम् ।
नानाख्यान-समायुक्तं वेदप्रामाण्यसंश्रितम् ॥ ३१. २८ ॥

सन्देहोऽत्र न कर्तव्यः सर्वथा नृपसत्तम ।
यथेन्द्रजालिक: कश्चित्पांचालीं दारवीं करे ॥ ३१. २९ ॥

कृत्वा नर्तयते कामं स्वेच्छया वशवर्तिनी ।
तथा नर्तयते माया जगत्स्थावरजंगमम् ॥ ३१. ३० ॥

வியாஸர் கூறியது—

31.26–27. அரசே! நாரதர் இவ்வாறு கூறி எனக்குப் போதனை செய்து விட்டுச் சென்று விட்டார். அம்முனிவர் கூறிய வார்த்தை எதுவோ அதையே சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஸரஸ்வதி நதிக்கரையில் சிறந்த ஸாரஸ்வத கல்பத்தில் காலத்தைச் சிறந்த முறையில் செலவிடுவதற்காக என்னால் இந்த பாகவதம் செய்யப்பட்டது.

31.28. அரசே! இந்த உத்தமமான புராணம் எல்லாச் சந்தேகங்களையும் போக்குவது. பல வரலாறுகளுடன் கூடியது. வேதப் பிரமாணத்தை ஆசிரயித்தது.

31.29–30. அரசசிரேஷ்டரே! இதில் ஒரு பொழுதும் சந்தேகப்படக்கூடாது. எப்படி இந்திரஜாலக்காரன் ஒருவன் மரபொம்மையைக் கையில் வைத்துக் கொண்டு தனக்கு வசமாயியங்கும் அதைத் தன்னிஷ்டப்படி ஆட்டுவிப்பானோ அப்படி மாயை அசைவதும் அசையாதது மடங்கிய இவ்வுலகை ஆட்டுவிக்கிறாள்.

ब्रह्मादिस्तम्बपर्यन्तं सदेवासुरमानुषम् ।
पंचेन्द्रिय-समायुक्तं मनश्चित्तानुवर्तनम् ॥ ३१. ३१ ॥

गुणास्तु कारणं राजन् सर्वेषां सर्वथा त्रयः ।
कार्यं कारणसंयुक्तं भवतीति विनिश्चयः ॥ ३१. ३२ ॥

भिन्नभिन्नस्वभावास्ते गुणा मायासमुद्भवाः ।
शान्तो घोरस्तथा मूढस्त्रयस्तु विविधा यतः ॥ ३१. ३३ ॥

तत्समेतः पुमान्नित्यं तद्विहीनः कथं भवेत् ।
न भवत्येव संसारे रहितस्तन्तुभिः पटः ॥ ३१. ३४ ॥

तथा गुणैस्त्रिभिर्हीनो न देहीति विनिश्चयः ।
देवदेहो मनुष्यो वा तिरश्चो वा नराधिप ॥ ३१. ३५ ॥

31.31. பிரம்மா முதல் சிறு புழுவரை தேவர் அசுரர் மனிதர் எல்லோருமே ஐந்து இந்திரியங்களுடன் கூடிய மனது சித்தம் ஆகியவற்றின் வசப்பட்டுழல்பவர்கள்.

31.32. அரசே! எல்லோருக்குமே எப்பொழுதுமே மூன்று குணங்கள் தான் காரணம். காரியமெல்லாம் அந்தக் காரணத்தால் நிகழ்கிறதென்பது நிச்சயம்

31—33—35. அரசே! மாயையில் தோன்றிய குணங்கள் வெவ்வேருன இயல்புடையவை. சாந்தம், கோரம், மூடம் என்று மூன்று குணங்களும் வேறுபட்டுள்ள காரணத்தால் அவற்றுடன் எப்பொழுதும் கூடியுள்ள புருஷன் அவ்வியல் பற்றவனுக எப்படி ஆவான்? எப்படி துணியானது நூலை விட்டு விலகியிருக்காதோ அப்படி ஸம்ஸாரத்தில் முக் குணங்களை விட்டு நீங்கி உடல் படைத்த எந்த ஜீவனும் அது தேவ தேகமாயினும், மனித தேகமாயினும், குறுக்கே வளரும் பிராணியாயினும், இருக்காதென்பது நிச்சயம்.

गुणैर्विरहितो न स्यान्मृद्विहीनो घटो यथा।
ब्रह्मा विष्णुस्तथा रुद्रस्त्रयश्चामो गुणाश्रयाः ।। ३१. ३६ ।।

अन्येषां चैव का वार्ता संसारेऽस्मिन्नृपोत्तम।
मायाधीनं जगत्सर्वं सदेवासुरमानुषम् ।। ३१. ४६ ।।

सा च माया परे तत्त्वे संविद्रूपेति सर्वदा।
तदधीना प्रेरिता च तेन जीवेषु सर्वदा ।। ३१. ४८ ।।

ततो मायाविशिष्टां तां संविदं परमेश्वरीम्।
मायेश्वरीं भगवतीं सच्चिदानन्दरूपिणीम् ।। ३१. ४९ ।।

ध्यायेत्तथाऽऽराधयेच्च प्रणमेच्च जपेदपि।
तेन सा सदया भूत्वा मोचयत्येव देहिनम् ।। ३१. ५० ।।

31.36. மண்ணில்லாமல் குடம் இல்லாதவாறு குணங்களை விட்டு நீங்கி எதுவுமில்லை. பிரம்மா விஷ்ணு அவ்வாறே ருத்திரன் ஆகிய இம் மூவரும் கூட குணத்தை ஆசிரயித்தவர்களே.

31.46. அரசசிரேஷ்டரே! இந்த ஸம்ஸாரத்தில் மற்றவர்களைப் பற்றி என்ன வார்த்தை? தேவர் அசுரர் மனிதர் உள்பட உலகனைத்தும் மாயைக்கு அதீனமே.

31.48. அந்த மாயை எப்பொழுதும் ஜீவனிடம் அறிவு வடிவமான பரதத்துவத்திலொடுங்கி அதற்கு வசப் பட்டதாய் அதனால் ஏவப்பட்டதாய் இருக்கும்.

31.49–50. ஆகையால் அந்த மாயையுடன் கூடிய ஸம் வித் (அறிவு) ரூபமானவளும் மாயைக்கு ஈசுவரியும் அனைத் திற்கும் மேம்பட்ட ஈசுவரியும், ஸச்சிதானந்த ரூபிணியுமான பகவதியை தியானம் செய்ய வேண்டும், பூஜை செய்ய வேண்டும், நமஸ்கரிக்க வேண்டும், ஜபம் செய்ய வேண்டும். அதனால் தயையுடன் கூடியவளாகி பகவதியானவள் உடலில் உறையும் ஜீவனை விடுவிப்பாள்.

स्वमायां सन्तरत्येव स्वानुभूतिप्रदानतः ।
भुवनं खलु माया स्या-दीश्वरी तस्य नायिका ।। ३१. ५१ ।।

भुवनेशी ततः प्रोक्ता देवी त्रैलोक्यसुन्दरी ।
तद्रूपे यदि सक्तं स्याच्चित्तं भूमिपते सदा ।। ३१. ५२ ।।

मायया किं भवेत्तत्र सदसद्भूतया नृप ।
तस्मान्माया-निरासार्थं नान्यद्वै देवतान्तरम् ।। ३१. ५३ ।।

समर्थं तु विना देवीं सच्चिदानन्दरूपिणीम् ।
तमोराशिं नाशयितुं शक्तं नैव तमो भवेत् ।। ३१. ५४ ।।

किंतु भानुप्रभा चन्द्रविद्युद्वह्निप्रभादयः ।
तस्मान्मायेश्वरीमम्बां स्वप्रकाशां तु सं वदम् ।।

31.51. தன்னுடைய அனுபவத்தை (பக்தர்களுக்கு) அளித்து (தேவியானவள்) தன்மாயையையும் தாண்டுவிக்கிருள். புவனம் மாயை; ஈசுவரி அதன் நாயகி.

31.52.55. அதனுல் தேவியானவள் புவனேசுவரி என்றும் த்ரைலோக்ய சுந்தரி என்றும் கூறப்படுகிருள். அரசே! அவளுடைய ரூபத்தில் சித்தம் எப்பொழுதும் பற்றுள்ளதாயிருக்குமாயின் காரியகாரணரூபமான மாயையால் என்ன ஆகும்? ஸச்சிதானந்த ரூபிணியான தேவியல்லாமல், மாயையைப் போக்குவதற்கு வேறு தேவதைகளுக்கு ஸாமர்த்தியமில்லை. இருளின் கூட்டத்தைப் போக்குவதற்கு இருளுக்குச் சக்தியில்லை. ஆனுல் சூரியப் பிரபை, சந்திரன், மின்னல், அக்னியின் பிரபை முதலியவற்றிற்குச் சக்தி உண்டு. ஆகையால் ஸ்வயம் பிரகாச ரூபிணியும், ஞான ரூபிணியும், மாயேசுவரியுமான அம்பிகையை மாயா குணத்தினின்று விடுதலை யடைவதற்காக மிகுந்த பக்தியுடன் ஆராதிக்கவேண்டும்.

आराधयेदतिप्रीत्या मायागुणनिवृत्तये ॥ ३१. ५५ ॥
इति सम्यङ् मयाऽऽख्यातं वृत्रासुरवधादिकम् ।
यत्पृष्टं राजशार्दूल किमन्यच्छ्रोतु-मिच्छसि ॥ ३१. ५६ ॥

पूर्वार्धोऽयं पुराणस्य कथितस्तव सुव्रत ।
यत्र देव्यास्तु महिमा विस्तारेणोपपादितः ॥ ३१. ५७ ॥

एतद्रहस्यं श्रीमातु-र्न देयं यस्य कस्यचित् ।
देयं भक्ताय शान्ताय देवीभक्तिरताय च ॥
शिष्याय ज्येष्ठपुत्राय गुरुभक्तियुताय च ॥ ३१. ५९ ॥

इदमखिलकथानां सारभूतं पुराणं
निखिलनिगमतुल्यं सप्रमाणानुविद्धम् ।
पठति परमभावाद्यः शृणोतीह भक्त्या
स भवति धनवान्वै ज्ञानवान्मानवोऽत्र ॥ ३१. ६० ॥

31.56. ராஜசிரேஷ்டனே! இவ்வாறாக நீ கேட்ட விருத்ராஸுரவதம் முதலிய வரலாறு என்னால் நன்கு எடுத்துரைக்கப்பட்டது. வேறு என்ன கேட்க விரும்பு கிறாய்?

31.57. நல்ல விரதமுடையவனே! தேவியின் மஹிமையை விஸ்தாரமாய் விளக்குவதும் புராணத்தின் முதல் பாதியுமாகிய இது உனக்குக் கூறப்பட்டது.

31.59. ஸ்ரீமாதாவைப் பற்றிய இரகசியமாகிய இதை எவனோ ஒருவனுக்குக் கொடுத்துவிடக்கூடாது. அன்புடையவனும் அமைதியுடையவனும் தேவிபக்தனும் ஆகிய சிஷ்யனுக்கும் முதல் புத்திரனுக்கும் குருபக்தியுடன் கூடியவனுக்கும் கொடுக்கவேண்டும்.

31.60. இது எல்லாக் கதைகளின் ஸாரமாய் விளங்கும் புராணம். ஸகல வேதங்களுக்கும் ஸமம். பிரமாணத்தைத் தன்னுள்ளடக்கிக் கொண்டிருப்பது. சிறந்த பாவனையுடன் எவன் படிக்கிறானோ, பக்தியுடன் எவன் கேட்கிறானோ அந்த மனிதன் தனவானாகவும் ஞானவானாகவும் இங்கு விளங்குவான்.

॥ इति श्रीदेवीभागवते महापुराणे अष्टादशसाहस्र्यां संहितायां षष्टस्कन्धे योगमाया-माहात्म्ये एकत्रिंशोऽध्यायः ॥

॥ पूर्वार्धं समाप्तम् ॥

இங்ஙனம் பதினெண்ணுயிரம் சுலோகங்களடங்கிய ஸ்ரீதேவீபாகவத மஹாபுராணத்தில் ஆருவது ஸ்கந்தத்தில் யோகமாயாமாகாத்மியத்தை விளக்கும் முப்பத்தோராவது அத்தியாயம் முற்றும்.

முதல் பாதி இத்துடன் முடிவு.

ஏழாவது ஸ்கந்தம்

॥ सप्तमः स्कन्धः ॥

॥ सृष्टिवर्णनम् ॥ २७ ॥

सूत उवाच —

श्रुत्वैतां तापसाद् दिव्यां कथां राजा मुदान्वितः।
व्यासं पप्रच्छ धर्मात्मा परीक्षितसुतः पुनः ॥ १.१ ॥

जनमेजय उवाच —

स्वामिन् सूर्यान्वयानां च राज्ञां वंशस्य विस्तरम्।
तथा सोमान्वयानां च श्रोतुकामोऽस्मि सर्वथा ॥ १.२ ॥

ते हि सर्वे पराशक्ति-भक्ता इति मया श्रुतम्।
देवी-भक्तस्य चरितं शृण्वन्कोऽस्ति विरक्तिभाक् ॥ १.४ ॥

27. சிருஷ்டி வர்ணனே

ஸௌதர் கூறியது—

1.1. பரீக்ஷித்தின் குமாரனும் தர்மாத்மாவுமாகிய அரசன் தபோநிதியான வியாஸரிடமிருந்து இந்த திவ்யமான கதையைக் கேட்டு மகிழ்ச்சி நிறைந்தவனுய் மீண்டும் அவரை கேட்கலானுன்.

ஜனமேஜயன் கூறியது—

1.2. பூஜைக்குரியவரே! சூரியவம்ச அரசர்களின் வரலாற்றையும் சந்திரவம்ச அரசர்களின் வரலாற்றையும் விஸ்தாரமாய்க் கேட்க விரும்புகிறேன்.

1.4. அவர்கள் எல்லோருமே பராசக்தி பக்தர்கள் என்று நான் கேள்விப்பட்டுள்ளேன். தேவீபக்தர்களின் சரித்திரத்தைக் கேட்டு அதிலிருந்து விலகுபவர் யார் உளர்?

व्यास उवाच —

निशामय महाराज विस्तराद्गदतो मम ।
सोमसूर्यान्वयानां च तथान्येषां समुद्भवम् ॥ १. ६ ॥

विष्णोर्नाभि-सरोजाद्वै ब्रह्माभूच्चतुराननः ।
तपस्तप्त्वा समाराध्य महादेवीं सुदुर्गमाम् ॥ १. ७ ॥

तया दत्तवरो धाता जगत्कर्तुं समुद्यतः ।
ससर्ज मानसान् पुत्रान् सप्तसंख्यान् प्रजापतिः ॥ १. ८ ॥

मरीचिरंगिराऽत्रि-वसिष्ठः पुलकः क्रतुः ।
पुलस्त्यश्चेति विख्याताः सप्तैते मानसाः सुताः ॥ १. १० ॥

रुद्रो रोषात्समुत्पन्नोऽप्युत्संगान्नारदोऽभवत् ।
दक्षोऽङ्गुष्ठात्तथाऽन्येऽपि मानसाः सनकादयः ॥ १. ११ ॥

வியாஸர் கூறியது—

1.6. மகாராஜனே! சூரியவம்சத்துதித்தவர்களைப் பற்றியும் சந்திரவம்சத்துதித்தவர்களைப் பற்றியும் பிறரைப் பற்றியும் விஸ்தாரமாய்க் கூறுகிறேன், கேள்.

1.7–9. விஷ்ணுவின் நாபிகமலத்திலிருந்து நான்முகப் பிரம்மா தோன்றினர். அவர் தவஞ் செய்து அடைதற்கரிய மகாதேவியை நன்கு ஆராதித்து அவளிடமிருந்து வரம் பெற்றவராய் உலகைச் சிருஷ்டிக்கத் தொடங்கினர்.

1.10. மரீசி, அங்கிரஸ், அத்ரி, வஸிஷ்டர், புலகர், க்ரது, புலஸ்தியர் என்று பெயர் பெற்ற இவர்கள் எழுவரும் அவருடைய மானஸ புத்திரர்கள்.

1.11. அவருடைய கோபத்திலிருந்து ருத்ரர் தோன்றினர். மடியிலிருந்து நாரதர் தோன்றினர். கட்டை விரலிலிருந்து தக்ஷர் தோன்றினர். அவ்வாறே ஸநகர் முதலியோரும் மானஸ புத்திரர்கள்.

वामांगुष्ठाद्दक्षपत्नी जाता सर्वांगसुन्दरी।
वीरिणीनाम-विख्याता पुराणेषु महीपते ।। १. १२ ।।

असिक्नीति च नाम्ना सा यस्यां जातोऽथ नारदः।
देवर्षि-प्रवरः कामं ब्रह्मणो मानसः सुतः ।। १. १३ ।।

जनमेजय उवाच —

कथं दक्षस्य पत्न्यां तु वीरिण्यां नारदो मुनिः।
जातो हि ब्रह्मणः पुत्रो धर्मज्ञस्तापसोत्तमः ।। १. १५ ।।

व्यास उवाच —

ब्रह्मणाऽसौ समादिष्टो दक्षः सृष्ट्यर्थ-मादितः।
प्रजाः सृजेति सुभृशं वृद्धिहेतोः स्वयंभुवा ।। १. १८ ।।

1.12. இடது கட்டைவிரலினின்று தக்ஷருடைய பத்னியும் ஸர்வாங்கஸுந்தரியும் புராணங்களில் பிரசித்தி பெற்ற பெயருடையவளுமான வீரிணீ என்பவள் தோன்றினாள்.

1.13. அவளுக்கு அஸிக்னீ எனவும் பெயர். தேவரிஷி சிரேஷ்டரும் பிரும்மாவின் மானஸபுத்திரருமான நாரதர் அவளிடம் (மறுபடி) பிள்ளையாகப் பிறந்தார்.

ஜனமேஜயர் கூறியது—

1.15. பிரம்மபுத்திரரும் தர்மந்தெரிந்தவரும் தவசிரேஷ்டருமான நாரதமுனிவர் தக்ஷபத்னியான வீரிணியிடம் எப்படிப் பிறந்தார்?

வியாஸர் கூறியது—

1.18. ஆதியில் சிருஷ்டி விஷயத்தில் தக்ஷர் ஸ்வயம்புவான பிரம்மாவால் 'நிறைய விருத்தியாகும்படிப் பிரஜைகளை உற்பத்தி செய்' என்று கட்டளையிடப்பட்டார்.

ततः पंचसहस्रांश्च जनयामास वीर्यवान् ।
दक्षः प्रजापतिः पुत्रान् वीरिण्यां बलवत्तरान् ॥ १. १९ ॥

दृष्ट्वा तान्नारदः पुत्रान् सर्वान् वर्धयिषून् प्रजाः ।
उवाच प्रहसन्वाचं देवर्षिः कालनोदितः ॥ १. २० ॥

भुवः प्रमाण-मज्ञात्वा स्रष्टुकामाः प्रजाः कथम् ।
लोकानां हास्यतां यूयं गमिष्यथ न संशयः ॥ १. २१ ॥

नारदेनैव-मुक्तास्ते हर्यश्वा दैवयोगतः ।
तलं सर्वं परिज्ञातुं वचनान्नारदस्य च ॥ १. २६ ॥

प्राच्यां केचिद्गतः कामं दक्षिणस्यां तथाऽपरे ।
प्रतीच्या-मुत्तरस्यां तु कृतोत्साहाः समन्ततः ॥ १. २७ ॥

1.19. அதன்மேல் வீரியவானுன தக்ஷப்பிரஜாபதி பலம் மிகுந்த ஐயாயிரம் புத்திரர்களே வீரிணியிடம் உற்பத்தி செய்தார்.

1.20–21. அந்தப் புத்திரர்களெல்லாம் (நாளடைவில்) பிரஜைகளே விருத்தி செய்ய இச்சையுள்ளவர்களாயிருப்பதைக் கண்ட தேவரிஷி நாரதர் காலத்தால் தூண்டப்பட்டு அவர்களேப் பார்த்து பரிகசிப்பவர் போல் பின் வருமாறு கூறினுர்:

'பூவுலகின் பிரமாணத்தைத் தெரிந்து கொள்ளாமல் எப்படி நீங்கள் சிருஷ்டியில் ஆசை கொண்டீர்கள்? உலகத்தோரின் பரிகாசத்திற்கு நீங்கள் இடமாவீர்கள் என்பதில் சந்தேகமில்லே.'

1.26–27. நாரதரால் தெய்வாதீனமாய் இவ்வாறு கூறப் பெற்ற ஹர்யச்வர்கள் என்ற அப்புத்திரர்கள் நாரதருடைய சொற்படி பூமி முழுவதையும் பார்த்துத் தெரிந்து கொள்ளும் பொருட்டு சிலர் கிழக்கில் சென்றுர்கள், சிலர் தெற்கில் சென்றுர்கள்; பிறர் மேற்கிலும் வடக்கிலுமாக எல்லோருமே எல்லா திக்குகளிலும் உற்சாகத்துடன் சென்றுவிட்டார்கள்.

दक्षः पुत्रान् गतान् दृष्ट्वा पीडितस्तु शुचा भृशम् ।
अन्यानुत्पादयामास प्रजार्थं कृतनिश्चयः ॥ १. २८ ॥

तेऽपि तत्रोद्यताः कर्तुं प्रजार्थ-मुद्यमं सुताः ।
नारदः प्राह तान् दृष्ट्वा पूर्वं यद्वचनं मुनिः ॥ १. २९ ॥

श्रुत्वा वाक्यं मुनेस्तेऽपि मत्वा सत्यं विमोहिताः ।
जग्मुः सर्वे यथा पूर्वं भ्रातरश्चलितास्तथा ॥ १. ३० ॥

तान्सुतान् प्रस्थितान् दृष्ट्वा दक्षः कोपसमन्वितः ।
शशाप नारदं रोषात्पुत्रशोकसमुद्भवात् ॥ १. ३१ ॥

नाशिता मे सुता यस्मात्तस्मान्नाश-मवाप्नुहि ।
पापेनानेन दुर्बुद्धे गर्भवासं व्रजेति च ॥ १. ३२ ॥

1.28. புத்திரர்கள் போய்விட்டதைக் கண்ட தக்ஷர் துக்கத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டு மீண்டும் பிரஜைகளை உற்பத்தி செய்வதில் நிச்சயமான எண்ணத்துடன் வேறு புத்திரர்களை உண்டாக்கினார்.

1.29. அந்தப்புத்திரர்களும் பிரஜைகளைச் சிருஷ்டிக்க ஏவப்பட்டு அதற்கு ஆயத்தமாயிருக்கையில் நாரதமுனிவர் அவர்களைப்பார்த்து முன்பு (அவர்களுடைய சகோதரர்களுக்கு எந்த வார்த்தையைக் கூறினாரோ அதையே கூறினார்.

1.30. முனிவரின் வாக்கியத்தைக் கேட்டு அவர்கள் அதை ஸத்யம் எனக்கண்டு மோகம் நீங்கிச் சகோதரர்கள் முன்பு சென்றது போலவே எல்லோரும் சென்று விட்டார்கள்.

1.31. அவர்கள் அவ்வாறு போய் விட்டதைக் கண்ட தக்ஷர் கோபம் மேலிட்டவராய்ப் புத்திர சோகத்தாலேற்பட்ட ரோஷத்தினால் நாரதரைச் சபித்தார்.

1.32. ‘என்னுடைய புத்திரர்கள் பாழாக்கப்பட்டதால் நீ பாழாய்ப் போகக்கடவாய். புத்திகெட்டவனே! இந்தப் பாவத்தால் நீ கர்ப்ப வாஸத்தை அடைவாய்.

पुत्रो मे भव कामं त्वं यतो मे भ्रंशिताः सुताः ।
इति शप्तस्ततो जातो वीरिण्यां नारदो मुनिः ॥ १. ३३ ॥

षष्टिर्भूयोऽसृजत्कन्या वीरिण्यामिति नः श्रुतम् ।
शोकं विहाय पुत्राणां दक्षः परमधर्मवित् ॥ १. ३४ ॥

तासां त्रयोदश प्रादात्कश्यपाय महात्मने ।
दश धर्माय सोमाय सप्तविंशति भूपते ॥ १. ३५ ॥

द्वेचैव भृगवे प्रादाच्चतस्रोऽरिष्टनेमिने ।
द्वेचैवांगिरसे कन्ये तथैवांगिरसे पुनः ॥ १. ३६ ॥

तासां पुत्राश्च पौत्राश्च देवाश्च दानवास्तथा ।
जाता बलसमायुक्ताः परस्परविरोधकाः ॥ १. ३७ ॥

1.33. 'என் புத்திரர்கள் நிலைதவறச் செய்யப் பட்ட காரணத்தால் நீ என் புத்திரனாக ஆவாய்' என்றிவ்வாறு சபிக்கப்பட்டு நாரதமுனிவர் வீரிணியிடம் பிறக்கலானார்.

1.34. தர்மத்தை அறிந்தவர்களிற் சிறந்தவரான தக்ஷர் புத்திரர்களின் சோகத்தை விட்டு மறுபடியும் வீரிணியிடம் அறுபது பெண்களைப் பெற்றார் என்று கேள்விப் படுகிறோம்.

1.35. அரசே! அவர்களில் பதின்மூன்று பேரை மகாத்மாவாகிய கசியபருக்குக் கொடுத்தார். தருமருக்குப் பத்துப் பேரையும் சந்திரனுக்கு இருபத்தேழுபேரையும் கொடுத்தார்.

1.36. பிருகுவுக்கு இரண்டு பேரையும், அரிஷ்டநேமிக்கு நாலு பேரையும், அங்கிரஸுக்கு இரண்டு கன்னிகைகளையும் கொடுத்தார். மறுபடி அங்கிரஸுக்கு இன்னும் இரண்டு பேரையும் கொடுத்தார்.

1.37. அவர்களுடைய புத்திரர்களும் பௌத்திரர்களுமே தேவர்களும் அசுரர்களுமாவர். அவர்கள் பலம் மிகுந்தவர்களாய் ஒருவருக்கொருவர் விரோதமடைந்தனர்.

रागद्वेषान्विताः सर्वे परस्परविरोधिनः ।
सर्वे मोहावृताः शूरा ह्यभवन्नतिमायिनः ॥ १.३८ ॥

1.38. அவர்கள் எல்லோரும் சூரர்களெனினும் மிகுந்த மாயைக்குட்பட்டவர்களாய் மோகத்திலாழ்ந்தவர்களாய் ஆசையும் கோபமும் மிக்கவர்களாய் ஒருவருக்கொருவர் பகைமையை வளர்த்துக் கொண்டனர்.

॥ इति सृष्टिवर्णनं नाम प्रथमोऽध्यायः ॥

இங்ஙனம் சிருஷ்டி வர்ணனை என்ற முதல் அத்தியாயம் முற்றும்.

॥ सुकन्योपाख्यानम् ॥ २८ ॥

जनमेजय उवाच —

मामाख्याहि महाभाग राज्ञां वंशं सुविस्तरम् ।
सूर्यान्वय-प्रसूतानां धर्मज्ञानां विशेषत: ॥ २. १ ॥

व्यास उवाच —

शृणु भारत वक्ष्यामि रविवंशस्य विस्तरम् ।
यथा श्रुतं मया पूर्वं नारदादृषिसत्तमात् ॥ २. २ ॥

ब्रह्मा पूर्वं जगत्कर्ता नाभिपंकजसंभव: ।
विष्णोरिति पुराणेषु प्रसिद्धः परिकीर्तितः ॥ २. ३ ॥

28. ஸுகன்யோபாக்யானம்

ஜனமேஜயன் கூறியது—

2.1. மகாபுருஷரே! சூரியவம்சத்துதித்தவர்களும் தருமந் தெரிந்தவர்களில் சிறந்தவர்களுமான அரசர்களின் வரலாற்றை விரிவாய் எனக்குக் கூறியருளுதல் வேண்டும்.

வியாஸர் கூறியது—

2.2. பாரதா! ரிஷிசிரேஷ்டராகிய நாரதரிடமிருந்து முன்பு நான் கேட்டுள்ளபடி சூரியவம்ச விஸ்தாரத்தைக் கூறுகிறேன், கேள்.

2.3. ஆதியில் விஷ்ணுவின் உந்திக்கமலத்திலுதித்தவர் உலக கர்த்தாவாகிய பிரம்மா என்பது புராணங்களில் பிர சித்தமாய்க் கூறப்பட்டுளது.

तपस्तप्त्वा स विश्वात्मा वर्षाणामयुतं पुरा।
सृष्टिकामः शिवां ध्यात्वा प्राप्य शक्तिमनुत्तमाम् ॥ २.१२।

पुत्रानुत्पादयामास मानसाञ्छुभलक्षणान्।
मरीचिः प्रथितस्तेषा-मभवत्सृष्टिकर्मणि ॥ २.१३॥

तस्य पुत्रोऽतिविख्यातः कश्यपः सर्वसम्मतः।
त्रयोदशैव तस्यासन् भार्या दक्षसुताः किल ॥ २.१४॥

देवाः सर्वे समुत्पन्ना दैत्या यक्षाश्च पन्नगाः।
पशवः पक्षिणश्चैव तस्माच्छृष्टिस्तु काश्यपी ॥ २.१५॥

देवानां प्रथितः सूर्यो विवस्वन्नाम तस्य तु।
तस्य पुत्रः सविख्यातो वैवस्वतमनु-र्नृपः ॥ २.१६॥

2.12—13. உலகின் ஆத்மாவாகிய அவர் முன்பு பத்தாயிரம் வருஷம் தவம் செய்து சிருஷ்டி செய்யும் விருப்பத்துடன் மங்களாம்பிகையை தியானித்து ஒப்புயர்வற்ற சக்தியை யடைந்து, நல்ல லக்ஷணங்கள் பொருந்திய மானஸ புத்திரர்களை உற்பத்தி செய்தார். அவர்களுள் மரீசி என்பவர் சிருஷ்டித் தொழிலில் புகழ்பெற்றவரானார்.

2.14. அவருடைய புத்திரராகிய காசியபர் மிகக் கீர்த்திவாய்ந்தவர், எல்லோருக்கும் பிரியமானவர். தக்ஷ புத்திரிகளாகிய பதின்மூன்று பேர் அவருடைய மனைவிகளாயினர்.

2.15. எல்லா தேவர்களும் தைத்தியர்களும் யக்ஷர்களும் நாகர்களும் அவரிடமிருந்தே தோன்றினர். பசுக்களும் பக்ஷிகளும் அங்கனமே. இது காச்யபீ சிருஷ்டி.

2.16. தேவர்களில் பிரசித்தமானவர் சூரியன். அவருக்கு விவஸ்வான் எனவும் பெயர். அவருடைய புத்திரன் கீர்த்திவாய்ந்த வைவஸ்வதமனு என்ற அரசர்.

तस्य पुत्रस्तथेक्ष्वाकुः सूर्यवंशविवर्धनः।
नवाऽभवन् सुतास्तस्य मनोरिक्ष्वाकुपूर्वजाः ॥ २. १७ ॥

तेषां नामानि राजेन्द्र शृणुष्वैकमनाः पुनः।
इक्ष्वाकुरथ नाभागो धृष्टः शर्यातिरेव च ॥ २. १८ ॥

नरिष्यन्त-स्तथा प्रांशु-र्नृगो दृष्टश्च सप्तमः।
करूषश्च पृषध्रश्च नवैते मानवाः स्मृताः ॥ २. १९ ॥

इक्ष्वाकुस्तु मनोः पुत्रः प्रथमः समजायत।
तस्य पुत्रशतं चासीज्ज्येष्ठो विकुक्षिरात्मवान् ॥ २. २० ॥

नवानां वंशविस्तारं संक्षेपेण निशामय।
शूराणां मनुपुत्राणां मनोरन्तरजन्मनाम् ॥ २. २१ ॥

2.17. அவருடைய புத்திரரும் அங்ஙனமே சூரியவம்சத்தை விருத்தி செய்த இக்ஷ்வாகு. அந்த மனுவிற்கு இக்ஷ்வாகு முதலிய ஒன்பது புத்திரர்கள் தோன்றினுர்கள்.

2.18. அரசசிரேஷ்டரே! மேலும் அவர்களுடைய பெயர்களைக் கூறுகிறேன், கவனமாய்க் கேளும்: இக்ஷ்வாகு, நாபாகன், த்ருஷ்டன், சர்யாதி.

2.19. நரிஷ்யந்தன், ப்ராம்சு, ந்ருகன், த்ருஷ்டன் ஏழாவது; கருஷன், ப்ருஷத்ரன். இவர்கள் ஒன்பது பேரும் மனு புத்திரர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

2.20. மனுவின் முதல் புத்திரராக இக்ஷ்வாகு தோன்றினுர். அவருக்கு நூறு புத்திரர்கள். விகுக்ஷி என்ற முதல் புத்திரன் ஆத்ம ஞானியாயிருந்தான்.

2.21. மனுவே வேறு பிறவியெடுத்தாற்போன்றவர்களும் சூரர்களுமான ஒன்பது மனு புத்திரர்களுடைய வம்ச சரித்திரத்தைச் சுருக்கமாய்க் கூறுகிறேன், கேள்.

नाभागस्य तु पुत्रोऽभूदम्बरीषः प्रतापवान् ।
धर्मज्ञः सत्यसन्धश्च प्रजापालनतत्परः ।। २. २२ ।।

धृष्टात्तु धार्ष्टकं क्षत्त्वं ब्रह्मभूत-मजायत ।
संग्रामकातरं सम्यग्ब्रह्मकर्मरतं तथा ।। २. २३ ।।

शर्यातिस्तनयश्चाभूदानर्तो नाम विश्रुतः ।
सुकन्या च तथा पुत्री रूपलावण्यसंयुता ।। २. २४ ।।

च्यवनाय सुता दत्ता राज्ञाऽप्यन्धाय सुन्दरी ।
मुनिः सुलोचने जातस्तस्याः शीलगुणेन ह ।।
विहितो रविपुत्राभ्या-मश्विभ्यामिति नः श्रुतम् ।। २. २५ ।।

2.22. நாபாகனுடைய புத்திரன் அம்பரீஷன் தர்மந் தெரிந்தவன் என்றும் ஸத்தியந் தவருதவன் என்றும் பிரஜைகளைப் பாலிப்பதில் மிகுந்த ஊக்கமுள்ளவன் என்றும் புகழ் பெற்றவனுக இருந்தான்.

2.23. த்ருஷ்டனுடைய புத்திரன் தார்ஷ்டகன். இவன் க்ஷத்திரியனுயினும் போருக்கஞ்சுபவனுயும் பிராம் மணர்களுடைய கருமங்களில் பிரியமுடையவனுயும் பிராம் மணனைப் போலிருந்தான்.

2.24. சர்யாதிக்கு ஆநர்த்தன் என்று புகழ் பெற்ற புத்திரனும் ரூபலாவண்யங்களுடன் கூடிய ஸுகன்யை என்ற புத்திரியும் தோன்றினர்கள்.

2.25. அழகுமிக்க அப் பெண் குருடராயிருந்த ச்யவ னர் என்ற முனிவருக்கு அரசனுல் கொடுக்கப்பட்டாள். அவளுடைய நன்னடத்தையாலும் நற்குணத்தாலும் அம் முனிவர் கண் பார்வையைப் பெற்றவரானுர். இது சூரிய புத்திரர்களாகிய அசுவினீ தேவதைகளின் அருளால் நிகழ்ந்த தெனக் கேட்டுள்ளோம்.

जनमेजय उवाच —

सन्देहोऽयं महान् ब्रह्मन् कथायां कथितस्त्वया ।
यद्राजा मुनयेऽन्धाय दत्ता पुत्री सुलोचना ।। २. २६ ।।

व्यास उवाच —

नगरान्नातिदूरेऽभूत्सरो मानस-सन्निभम् ।
तत्समीपे शुभे देशे पादपानां गणावृते ।
भार्गवश्च्यवनः शान्तस्तापसः संस्थितो मुनिः ।। २. ४० ।।

जलपानादिरहितो ध्यायन्नास्ते पराम्बिकाम् ।
स वल्मीकोऽभवद्राजन् लताभिः परिवेष्टितः ।। २. ४३ ।।

कालेन महता राजन् समाकीर्णः पिपीलिकैः ।
तथास संवृतो धीमान् मृतपिण्ड इव सर्वतः ।। २. ४४ ।।

ஜனமேஜயர் கூறியது—

2.26. பிரும்ம சிரேஷ்டரே! நீர் சொல்லுங்கதையில் அரசன் அழகிய புத்திரியைக் குருடராகிய முனிவருக்குக் கொடுத்தார் என்பது எனக்குப் பெரிய சந்தேகத்தை உண்டாக்குகிறது. (அதை விவரித்துக் கூற வேண்டும்.)

வியாஸர் கூறியது—

2.40. அரசனுடைய நகரத்திற்கு வெகு தூரமில்லாமல் மானஸஸரஸ் போன்ற ஒரு பெரிய ஏரி இருந்தது. மரங்கள் நிறைந்து அழகாயிருந்த அவ்விடத்திற்குச் சமீபத்தில் பிருகுவம்சத்தவரான சியவன முனிவர் என்பவர் அமைதியுடன் தவத்திலாழ்ந்திருந்தார்.

2.43. ஜலபானங்கூட இல்லாமல் அவர் பராம்பிகையை தியானிப்பவராயிருந்தார். அவர் மீது ஒரு புற்றுத் தோன்றி அது கொடிகளால் மூடப்பட்டதாயிற்று.

2.44. அரசே! கரையான் நிறைந்த அப்புற்றினுல் நாற்புறமும் சூழப்பபெற்ற அந்த தீமான் மண்கட்டி போல் (உயிரற்ற பிண்டம் போல்) இருந்தார்.

कदाचित्स महीपालः कामिनीगण-संवृतः ।
आजहार सरो राजन्विहर्तु-मिदमुत्तमम् ।। २. ४५ ।।

सुकन्या वनमासाद्य विजहार सखीवृता ।
चंक्रममाणा वल्मीकं च्यवनस्य समाददन् ।। २. ४८ ।।

क्रीडासक्तोपविष्टा सा वल्मीकस्य समीपतः ।
ददर्श चास्य रन्ध्रे वै खद्योत इव ज्योतिषी ।। २. ४९ ।।

किमेतदिति संचिन्त्य समुद्धर्तुं मनोदधे ।
गृहीत्वा कण्टकं तीक्ष्णं त्वरमाणा कृशोदरी ।। २. ५० ।।

तां वीक्ष्य सुदतीं तत्र क्षामकण्ठस्तपोनिधिः ।
तामभाषत कल्याणीं किमेतदिति भार्गवः ।। २. ५२ ।।

दूरं गच्छ विशालाक्षी तापसोऽहं वरानने ।
मा भिन्दस्वाऽद्य वल्मीकं कण्टकेन कृशोदरी ।। २. ५३ ।।

2.45. அரசே! ஒரு சமயம் (சர்யாதி என்ற) அம் மகாராஜன் ஸ்திரீகணங்கள் சூழ அந்தச் சிறந்த ஏரியில் விளையாடுவதற்காக வந்தான்.

2.48. (அவனுடைய பெண்) ஸுகன்யை வனத்தினுட் சென்று தன் தோழிகளுடன் விளையாடினாள். சுற்றிவருகையில் சியவனருடைய புற்றைக் கண்டாள்.

2.49. விளையாட்டிற்காக அதனருகில் சென்று பார்க்கையில் அதின் துவாரத்தில் மின்மினிப் பூச்சிபோல் இரண்டு ஒளியைக் கண்டாள்.

2.50—53. அது என்ன வென்று அறிய வேண்டு மென்ற எண்ணம் அவள் மனதிலுதித்தது. அவ்வழகி ஒரு கூரான முள் குச்சியை எடுத்துக் கொண்டு வேகத்துடன் வருவதைக் கண்ணுற்றவரும் தொண்டை வரண்டவருமான பிருகு குலத்தவச் செல்வர் 'நீ என்ன செய்கிறாய்? பரந்த கண்படைத்த பெண்ணே! சிறந்த முகம் படைத்தவளே! எட்டிப்போ. நான் தவஞ் செய்பவன். முள் குச்சியால் புற்றை உடைக்காதே' என்று அவளிடம் (மெல்லியகுரலில்) கூறினார்.

तेनेदं प्रोच्यमानाऽपि सा चाऽस्य न शृणोति वै ।
किमु खल्विद-मित्युक्त्वा निर्बिभेदास्य लोचने ॥ २. ५४ ॥

दैवेन नोदिता भित्त्वा जगाम नृपकन्यका ।
क्रीडन्ती शंकमाना सा किं कृतं तु मयेति च ॥ २. ५५ ॥

चुक्रोध स तथा विद्ध-नेत्रः परममन्युमान् ।
वेदनाभ्यर्दितः कामं परितापं जगाम ह ॥ २. ५६ ॥

शकृन्मूत्रनिरोधोऽभूत्सैनिकानां तु तत्क्षणात् ।
विशेषेण तु भूपस्य सामात्यस्य समन्ततः ॥ २. ५७ ॥

चिन्तयामास भूपालः कारणं दुःखसम्भवे ।
विचिन्त्याह ततो राजा सैनिकान् स्वजनांस्तथा ॥ २. ५९ ॥

2.54. அவரால் இவ்வாறு சொல்லப்பட்டும் அவள் காதில் அது விழவில்லை. 'இது என்ன?' என்று சொல்லிக் கொண்டே அவருடைய கண்களில் குத்திவிட்டாள்.

2.55. விதிவசமாய் இவ்வாறு அவர் கண்ணைக் குத்தி விட்டு அவ்வரசகுமாரி விளையாடிக் கொண்டே 'என்னால் என்ன செய்யப்பட்டது?' என்ற சந்தேகத்துடன் சென்று விட்டாள்.

2.56. கண்குத்தப்பட்டு வேதனையால் பீடிக்கப்பட்ட அவர் மிகுந்த கோபத்தையும் தாபத்தையுமடைந்தார்.

2.57. அந்த நொடியிலிருந்து எங்கும் சேனையிலிருந்தவர்களுடைய மலஜலம் கட்டுப்பட்டுப் போயிற்று. முக்கியமாக மந்திரிகளுடன் கூட அரசனுக்கும் அங்ஙனமே ஆயிற்று.

2.59. அந்த துக்கம் ஏற்படக் காரணம் என்னவென்று அரசன் சிந்தித்துப் பார்த்தான். யோசித்து விட்டு அவன் சேனையிலுள்ளவர்களையும் தன்னுடைய சொந்த ஜனங்களையும் பார்த்துப் பின் வருமாறு சொன்னான்.

सरसः पश्चिमे भागे वनमध्ये महातपाः ।
च्यवनस्तापसस्तत्र तपश्चरति दुश्चरम् ॥ २. ६१ ॥

केनाप्यपकृतं तत्र तापसेऽग्नि समप्रभे ।
तस्मात्पीडा समुत्पन्ना सर्वेषामिति निश्चयः ॥ २. ६२ ॥

इति पृष्टास्तमूचुस्ते सैनिका वेदनार्दिताः ।
मनोवाक्काय जनितं न विद्मोऽपकृतं वयम् ॥ २. ६५ ॥

पीड्यमानं जनं वीक्ष्य पितरं दुःखितं तथा ।
विचिन्त्य शूलभेदं सा सुकन्या चेदमब्रवीत् ॥ ३. २ ॥

वने मया पितस्तत्र वल्मीको वीरुधावृतः ।
क्रीडन्त्या सुदृढो दृष्टश्छिद्रद्वय-समन्वितः ॥ ३. ३ ॥

2.61. 'ஏரிக்கு மேற்குப்பக்கம் வனமத்தியில் மகா தபஸ்வியான சியவனர் செய்தற்கரிய தவத்தைச் செய்து கொண்டிருக்கிறார்.

2.62. 'அக்னிக்குச் சமமான தேஜஸ்ஸுடைய அந்தத் தபஸ்விக்கு யாராலாவது தீங்கு செய்யப் பட்டிருக்க வேண்டும். அதனால் தான் எல்லோருக்கும் இந்தப் பீடை ஏற்பட்டிருக்கிறதென்பது நிச்சயம்.'

2.65. வேதனையால் பீடிக்கப் பெற்ற சைனிகர்கள் இங்ஙனம் கேட்கப்பட்டபொழுது 'மனத்தாலோ வாக்காலோ காயத்தாலோ நாங்கள் எவரும் தீங்கிழைத்ததாகத் தெரியவில்லை' என்று கூறினர்.

3.2. ஜனங்கள் பீடிக்கப்பட்டிருப்பதையும் தன் தந்தை துக்கத்துள்ளாயிருப்பதையும் பார்த்துத் தான் முள் குச்சியால் குத்தியதையும் எண்ணிப்பார்த்து ஸுகன்யை தந்தையிடம் இவ்வாறு கூறினாள்.

3.3. 'அப்பா! வனத்தில் விளையாடுகையில் ஒரு புற்றைக் கண்டேன். அது கொடிகளால் மூடப்பட்டு இரண்டு துவாரங்களுடன் திடமாயிருந்தது.

तत्र खद्यातवद्दीप्त ज्योतिषी वीक्षिते मया।
सूच्या विद्धे महाराज पुनः खद्योतशंकया ॥ ३. ४ ॥

जलक्लिन्ना तदा सूची मया दृष्टा पितः किल।
हाहेति च श्रुतः शब्दो मन्दो वल्मीकमध्यतः ॥ ३. ५ ॥

तदाऽहं विस्मिता राजन् किमेतदिति शंकया।
न जाने किं मया विद्धं तस्मिन्वल्मीकमण्डले ॥ ३. ६ ॥

राजा श्रुत्वा तु शर्यातिः सुकन्यावचनं मृदु।
मुनेस्तद्धेलनं ज्ञात्वा वल्मीकं क्षिप्र-मभ्यगात् ॥ ३. ७ ॥

तत्राऽपश्यत्तपोवृद्धं च्यवनं दुःखितं भृशम्।
स्फोटयामास वल्मीकं मुनिदेहावृतं भृशम् ॥ ३. ८ ॥

3.4. 'அரசே! அதினுள் மின்மினிப்பூச்சி போல் ஒளி விடும் ஏதோ இரண்டைக் கண்டு அது மின்மினி என்ற சந்தேகத்துடன் ஊசிபோல் கூரான குச்சியால் குத்தினேன்.

3.5. 'அப்பா! அக்குச்சி ஜலம் பட்டாற் போல் நனைந்திருந்ததைக் கண்டேன். புற்றின் மத்தியிலிருந்து 'ஹா! ஹா!' என்ற ஒரு சப்தமும் மெதுவாகக் கேட்டது.

3.6. 'அரசே! அப்பொழுது நான் இது என்ன என்று சந்தேகித்து வியப்படைந்தேன். அந்தப் புற்றில் என்னால் குத்தப்பட்டது என்னவென்று நான் அறியவில்லை.'

3.7. சர்யாதிமகாராஜா ஸுகன்யையின் மெதுவான வார்த்தையைக் கேட்டு அது முனிவர்க்குச் செய்யப்பட்ட அபசாரம் என்றறிந்து விரைவில் புற்றிருக்குமிடம் சென்றான்.

3.8. தவப்பெரியோரான சியவனர் அங்கு மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அம்முனிவர் உடலை மூடிக் கொண்டிருந்த புற்றைப் பிளந்தான்.

प्रणम्य दण्डवद्भूमौ राजा तं भार्गवं प्रति ।
तुष्टाव विनयोपेत-स्तमुवाच कृतांजलिः ॥ ३. ९ ॥

पुत्र्या मम महाभाग क्रीडन्त्या दुष्कृतं कृतम् ।
अज्ञानाद्बालया ब्रह्मन् कृतं तत्क्षन्तु-मर्हसि ॥ ३. १० ॥

च्यवन उवाच —

राजन्नाहं कदाचिद्वै करोमि क्रोधमण्वपि ।
न मयाऽद्यैव शप्तस्त्वं दुहित्रा पीडने कृते ॥ ३. ११ ॥

नेत्रे पीडासमुत्पन्ना मम चाऽद्य निरागसः ।
तेन पापेन जानामि दुःखितस्त्वं महीपते ॥ ३. १२ ॥

3.9. பிருகுகுல முனிவரை அரசன் தடிக்கம்பு போல் பூமியில் வீழ்ந்து வணங்கி கை கூப்பிக் கொண்டு துதித்து விநயத்துடன் பின்வருமாறு அவரிடம் கூறினுன்.

3.10. 'மகிமை மிக்கவரே! பிரம்மஸ்வரூபியே! என்னுடைய புத்திரியால் விளேயாட்டாகத் தீமை இழைக்கப் பட்டது, அறியாத சிறு பெண்ணுல் செய்யப்பட்ட அதைப் பொறுத்தருள வேண்டும்.'

சியவனர் கூறியது—

3.11. அரசே! நான் ஒருபொழுதும் அணுவளவு கூடக் கோபங்கொள்வதில்லே. இப்பொழுதும் உன் பெண்ணுல் ஏற்பட்ட பீடைக்காக நான் உன்னேச் சபிக்க வில்லே.

3.12. ஒரு பாவமுஞ்செய்யாத எனக்கு இப்பொழுது கண்களில் பீடை ஏற்பட்டுள்ளது. அரசே! அந்தப் பாவத்தால் தான் நீர் இப்பொழுது துக்கத்துள்ளாயிருக் கிறீர் என்று அறிகிறேன்.

किं करोमि महीपाल नेत्रहीनो जरावृतः।
अन्धस्य परिचर्यां च कः करिष्यति पार्थिव ॥ ३. १४ ॥

देहि मे परिचर्यार्थं कन्यां कमललोचनाम्।
करिष्यामि तपश्चाहं सा मे सेवां करिष्यति ॥ ३. १९ ॥

व्यास उवाच —

शर्यातिर्वचनं श्रुत्वा मुनेश्चिन्तातुरोऽभवत्।
न दास्येऽप्यथवा दास्ये किंचिन्नोवाच भारत ॥ ३. २३ ॥

सचिवांश्च समादाय मन्त्रं चक्रेऽतिदुःखितः।
भो मन्त्रिणो ब्रुवन्त्वद्य किं कर्तव्यं मयाऽधुना ॥ ३. ३२ ॥

तदा चिन्ताकुलं वीक्ष्य पितरं मन्त्रिणस्तदा।
सुकन्यार्त्विंगितं ज्ञात्वा प्रहस्येद-मुवाच ह ॥ ३. ३३ ॥

3.14. அரசே! மூப்பினால் சூழப்பட்டுக் கண்ணையும் இழந்துவிட்ட நான் என்ன செய்வேன்? குருடனுக்கு யார் பணிவிடை செய்பவர்?

3.19. கமலக் கண்படைத்த உமது பெண்ணை எனது பணிவிடைக்கு நீர் கொடுப்பீரானால் அவள் எனக்குச் சேவை புரிவாள், நானும் தொடர்ந்து தவம் செய்வேன்.

வியாஸர் கூறியது—

3.23. அரசே! முனிவரின் வார்த்தையைக் கேட்டு சர்யாதி கவலை மேலிட்டவரானான்! கொடுக்க மாட்டேன்' என்றோ 'கொடுக்கிறேன்' என்றோ ஒன்றும் சொல்லவில்லை.

3.32. மிகுந்த துக்கத்துடன் மந்திரிகளுடன் கூடி ஆலோசனை செய்தான். 'மந்திரிமார்களே! என்னால் இப்பொழுது செய்யத்தக்கது என்ன? கூறுங்கள்' என்றான்.

3.33. கவலையால் கலங்கும் தந்தையையும் மந்திரிகளையும் பார்த்து ஸுகன்யை இங்கிதமறிந்து புன்சிரிப்புடன் இவ்வாறு கூறலானாள்.

अहं गत्वा मुनिं तत्र समाश्वास्य मयार्दितम् ।
करिष्यामि प्रसन्नं तमात्मदानेन वै पितः ॥ ३. ३६ ॥

तामुवाच प्रसन्नात्मा सचिवानां च शृण्वताम् ।
कथं पुत्रि त्वमन्धस्य परिचर्यां वनेऽबला ॥ ३. ३७ ॥

करिष्यसि जरार्तस्य क्रोधनस्य विशेषतः ।
भवितव्यं भवत्येव धैर्यं नैव त्यजाम्यहम् ॥ ३. ४३ ॥

सुस्थिरा भव सुश्रोणि न दास्येऽन्धाय कर्हिचित् ।
राज्यं तिष्ठतु वा यातु देहोऽयं च तथैव मे ॥ ३. ४४ ॥

सुकन्या तं तदा प्राह श्रुत्वा तद्वचनं पितुः ।
न मे चिन्ता पितः कार्या देहि मां मुनयेऽधुना ॥ ३. ४६ ॥

3.36. 'அப்பா! நான் அங்கு முனிவரிடம் சென்று என்னால் துன்புறுத்தப்பட்ட அவரைச் சமாதானப்படுத்தி என்னையே அவருக்கு அர்ப்பணம் செய்து அவரை மகிழும் படி செய்கிறேன்.'

3.37–43. 'மகளே! அபலையாகிய நீ வனத்தில் குருட ராகியவரும் மேலும் மூப்பால் பீடிக்கப்பட்டவரும் கோப முள்ளவரும் ஆகிய அவருக்கு எப்படிப் பணிவிடை செய் வாய்? நடப்பது நடந்தே தீரும். நான் தைரியத்தைக் கைவிடமாட்டேன்.

3.44. 'இடையழகு வாய்ந்த பெண்ணே! நீ திட மாயிரு. உன்னை நான் குருடருக்குக் கொடுக்கமாட்டேன். இராஜ்யம் இருந்தால் இருக்கட்டும் அல்லது போனால் போகட்டும்; அப்படியே என்னுடைய தேகமும்.'

3.46. தந்தையின் அவ்வார்த்தையைக் கேட்டு ஸுகன்யை அப்பொழுது அவரிடம் கூறியதாவது: 'அப்பா! என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். இப்பொழுதே முனிவருக்கு என்னைக் கொடுத்து விடுங்கள்.

सुखं भवतु सर्वेषां लोकानां मत्कृतेन हि।
सेवयिष्यामि सन्तुष्टा पतिं परमपावनम् ॥ ३. ४७ ॥

सती धर्मपराचाहं चरिष्यामि सुसम्मतम्।
न भोगेच्छास्ति मे तात स्वस्थं चित्तं ममानघ ॥ ३. ४९ ॥

तच्छ्रुत्वा भाषितं तस्या मन्त्रिणो विस्मयं गताः।
राजा च परमप्रीतो जगाम मुनिसन्निधौ ॥ ३. ५० ॥

गत्वा प्रणम्य शिरसा तमुवाच तपोधनम्।
स्वामिन् गृहाण पुत्रीं मे सेवार्थं विधिवद्विभो ॥ ३. ५१ ॥

इत्युक्त्वाऽस्मै ददौ पुत्रीं विवाहविधिना नृपः।
प्रतिगृह्य मुनिः कन्यां प्रसन्नो भार्गवोऽभवत् ॥ ३. ५२ ॥

3.47. 'என்னால் எல்லா ஜனங்களுக்கும் சுகம் ஏற்படட்டும். பரமபாவனரான பதியை நான் சந்தோஷத்துடன் சேவிப்பேன்.

3.49. 'தருமத்தில் ஊன்றிய புத்தியுடன் முழுமனத்துடன் நான் பதிவிரதா தர்மத்தை அனுஷ்டிப்பேன். அப்பா! எனக்கு போகத்தில் ஆசையில்லை. பாவமற்றவரே! என் மனது நிம்மதியாயிருக்கிறது.'

3.50. அவளால் பேசப்பட்டதைக் கேட்டு மந்திரிகள் வியப்படைந்தனர். அரசனும் மிகுந்த பிரீதியுடன் முனிவரின் ஸந்நிதிக்குச் சென்றான்.

3.51. சென்று தவச்செல்வரைத் தலையால் வணங்கி 'ஸ்வாமி! பெருமை வாய்ந்தவரே! உமது சேவைக்காக என் புத்திரியை விதிப்படி ஏற்றுக் கொள்ளும்' என்று கூறினான்.

3.52. இங்ஙனம் கூறிவிட்டு அரசன் விவாக முறைப்படி புத்திரியை அவருக்குக் கொடுத்தான். பிருகு குல முனிவர் கன்னிகையை கிரகித்துக் கொண்டு மகிழ்ச்சி நிறைந்தவரானார்.

परिबर्हं न जग्राह दीयमानं नृपेण ह ।
कन्यामेवाऽग्रहीत्कामं परिचर्यार्थ-मात्मनः ॥ ३. ५३ ॥

प्रसन्नेऽस्मिन् मुनौ जातं सैनिकानां सुखं तदा ।
राज्ञश्च परमाह्लादः संजातस्तत्क्षणादपि ॥ ३. ५४ ॥

दत्त्वा पुत्रीं यदा राजा गमनाय गृहं प्रति ।
मतिं चकार तन्वंगी तदोवाच नृपं सुता ॥ ३. ५५ ॥

गृहाण मम वासांसि भूषणानि च मे पितः ।
वल्कलं परिधानाय प्रयच्छाजिनमुत्तमम् ॥ ३. ५६ ॥

वेषं तु मुनिपत्नीनां कृत्वा तपसिसेवनम् ।
करिष्यामि तथा तात तथा ते कीर्तिरच्युता ॥ ३. ५७ ॥

भविष्यति भुवः पृष्ठे तथा स्वर्गे रसातले ।
परलोकसुखायाऽहं चरिष्यामि दिवानिशम् ॥ ३. ५८ ॥

3.53. அரசனால் கொடுக்கப்பட்ட சீர்ப் பொருள்களை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தனது பணிவிடைக்காக விரும்பிக் கன்னிகையை மட்டும் ஏற்றுக் கொண்டார்.

3.54. அம்முனிவர் மகிழ்வடைந்ததும் அக்கணமே படையாட்களுக்கு ஏற்பட்டிருந்த நோய் நீங்கி அவர்கள் சுகமெய்தினர். அரசனுக்கும் பரம ஸந்தோஷம் உண்டாயிற்று.

3.55–56. புத்திரியைக் கொடுத்து விட்டு அரசன் செல்வதற்கு எண்ணிய பொழுது அம் மெல்லியாள் 'அப்பா! என்னுடைய வஸ்திரங்களையும் பூஷணங்களையும் நீங்கள் எடுத்துப் போங்கள். நான் உடுத்துக் கொள்ளச் சிறந்த மான் தோலையும் மரவுரியையும் கொடுங்கள்.

3.57–58. 'முனிபத்னிகளைப் போன்ற வேஷத்துடன் நான் தபஸ்விக்கு அவர்களைப் போல் சேவை புரிகிறேன். அப்பா! உங்களுக்கு அதனால் அழியாத கீர்த்தியானது பூதலத்திலும் சுவர்க்கத்திலும் ரஸாதலத்திலும் ஏற்படும். பரலோக சுகத்தை நாடி நான் இரவு பகலாய் நன்கு நடந்து கொள்வேன்.

दत्त्वाऽन्धाय च वृद्धाय सुन्दरीं युवतीं तु माम् ।
चिन्ता त्वया न कर्तव्या शीलनाशसमुद्भवा ।। ३. ५९ ।।

अरुन्धती वसिष्ठस्य धर्मपत्नी यथा भुवि ।
तथैवाहं भविष्यामि नात्र कार्या विचारणा ।। ३. ६० ।।

अनसूया यथा साध्वी भार्याऽत्रेः प्रथिता भुवि ।
तथैवाऽहं भविष्यामि पुत्री कीर्तिकरी तव ।। ३. ६१ ।।

सुकन्या-वचनं श्रुत्वा राजा परमधर्मवित ।
दत्त्वाऽजिनं रुरोधाऽऽशु वीक्ष्य तां चारुहासिनीम् ।। ३. ६२ ।।

तामापृच्छ्य महीपालो मन्त्रिभिः परिवारितः ।
ययौ स्वनगरं राजा मुक्त्वा पुत्रीं शुचार्ऽपिताम् ।। ३. ६४ ।।

3.59. 'அழகிய யுவதியாகிய என்னைக் குருடராகிய கிழவருக்குக் கொடுத்து விட்டதாக எண்ணி நல்ல பண்பை நாசம் செய்யும் கவலைக்கு நீங்கள் இடந்தரலாகாது.

3.60. 'வசிஷ்டருக்கு தர்மபத்னியான அருந்ததி எப்படி இருந்தாளோ அப்படியே நான் பூமியில் இருக்கப் போகிறேன். இதைப்பற்றி யோசிக்க வேண்டியதில்லை.

3.61. 'அத்ரியின் மனைவியான அனஸூயா எப்படி பூமியில் ஸாத்வீ எனப் பெயரெடுத்தாளோ அப்படியே உங்கள் புத்திரியாகிய நான் ஆவேன்.'

3.62. ஸுகன்யையின் வார்த்தையைக் கேட்டு தருமந் தெரிந்தவர்களிற் சிறந்த அரசன் அவளுக்கு மான் தோல் ஆடையளித்துவிட்டுப் புன்முறுவலுடன் நின்ற அவளைப் பார்த்து உடனே அழுது விட்டான்.

3.64. மந்திரிமார்களால் சூழப்பெற்ற அரசன் அவளிடம் சொல்லிக் கொண்டு, துக்கத்துடன் அர்ப்பணம் செய்யப்பட்ட அவளை விட்டுப் பிரிந்து தனது நகரம் சென்றான்.

गते राजनि सा बाला पतिसेवापरायणा ।
बभूव च तथाग्नीनां सेवने धर्मतत्परा ॥४. १॥

कस्मिश्चिदथ काले तु रविजावश्विनावुभौ ।
च्यवनस्याश्रमाभ्याशे क्रीडमानौ समागतौ ॥ ४. २६ ॥

जले स्नात्वा तु तां कन्यां निवृत्तां स्वाश्रमं प्रति ।
गच्छन्तीं चारु सर्वांगीं रविपुत्रावपश्यताम् ॥ ४. २७ ॥

तां दृष्ट्वा देवकन्याभां गत्वाचान्तिक-मादरात् ।
ऊचतुः समभिद्रुत्य नासत्यावतिमोहितौ ॥ ४. २८ ॥

क्षणं तिष्ठ वरारोहे प्रष्टुं त्वां गजगामिनि ।
आवां देवसुतौ प्राप्तौ ब्रूहि सत्यं शुचिस्मिते ॥ ४. २९ ॥

4.1. அரசன் சென்றபின் அப்பெண் பதிசேவையில் ஊன்றிய மனத்தினளாகவும் அவ்வாறே அக்னிகளைப் பூஜிப்பவளாகவும் தருமத்தில் நிலை பெற்றவளாகவும் இருந்தாள்.

4.26. சிறிது காலஞ் சென்றபின் சூரியபுத்திரர்களாகிய இரண்டு அசுவினீ தேவர்களும் விளையாட்டாக சியவனருடைய ஆசிரமத்திற்குச் சமீபத்தில் வந்து சேர்ந்தனர்.

4.27. ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு தனது ஆசிரமத்தை நோக்கித் திரும்பி வருபவளும் எல்லா அங்கங்களிலும் அழகுமிக்கவளும் ஆகிய அப்பெண்ணைச் சூரியபுத்திரர்கள் கண்ணுற்றனர்.

4.28. தேவகன்னிகை போன்ற அவளைப் பார்த்து அவளருகில் விரைவுடன் விரும்பிச் சென்று அசுவினீ தேவர்கள் மோகமடைந்தவர்களாய்ப் பின் வருமாறு கூறினர்.

4.29. 'யானை போல் நடக்கும் பெண்ணழகியே! ஒரு நொடிப் பொழுது நில். உன்னை ஒன்று கேட்க விரும்புகிறோம். புன் முறுவலால் அழகியவளே! உண்மையைக் கூறு. நாங்கள் தேவ குமாரர்கள்.

पुत्री कस्य पतिः कस्ते कथ-मुद्यान-मागता ।
एकाकिनी तडाकेऽस्मिन् स्नानार्थं चारुलोचने ॥ ४. ३० ॥

तयोरिति वचः श्रुत्वा राजकन्याऽतिसुन्दरी ।
तावुवाच त्रपाक्रान्ता देवपुत्रौ नृपात्मजा ॥ ४. ३९ ॥

शर्याति-तनयां मां वां वित्तं भार्यां मुनेरिह ।
च्यवनस्य सतीं कान्तां पित्रा दत्तां यदृच्छया ॥ ४. ४० ॥

पतिरन्धोऽस्ति मे देवौ वृद्धश्चातीव तापसः ।
तस्य सेवा-महोरात्रं करोमि प्रीतमानसा ॥ ४. ४१ ॥

कौ युवां किमिहायातौ पतिस्तिष्ठति चाश्रमे ।
तत्राऽऽगत्य प्रकुरुत तमाश्रमं चाद्य पावनम् ॥ ४. ४२ ॥

4.30. 'நீ யாருடைய புத்ரி? உன் கணவன் யார்? அழகிய கண் படைத்தவளே! இந்தத் தடாகத்தில் ஸ்நானம் செய்ய இந்த உத்யானத்திற்கு நீ எப்படி தனியாக வந்தாய்?'

4.39. அவர்களுடைய இவ்வார்த்தையைக் கேட்டுக் கட்டழகியாகிய ராஜகுமாரி தேவகுமாரர்களிடம் வெட்கம் மேலிட்டவளாய்ப் பின்வருமாறு கூறினாள்.

4.40. 'சர்யாதியின் பெண்ணாகவும் ச்யவன முனிவரின் மனைவியாகவும், அவருக்கு என் பிதாவால் தெய்வ வசமாய்க் கொடுக்கப்பட்டவளென்றும், அவரையனுசரித்து நிற்கும் பிரியமான பதிவிரதை என்றும் என்னை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

4.41. 'தேவர்களே! என்னுடைய பதி கண்ணிழந்தவர், வயதான தபஸ்வி. அவருக்கு இரவு பகலாய்ப் பிரீதியுடன் நான் பணிவிடை செய்து வருகிறேன்.

4.42. 'நீங்கள் யார்? இங்கு எதற்காக வந்தீர்கள்? என்னுடைய பதி ஆசிரமத்திலிருக்கிறார். அங்கு இப்பொழுது வந்து அவ்வாசிரமத்தைப் புனிதமாக்குங்கள்.'

तदाकर्ण्य वचो दस्रावूचतुस्तां नराधिप ।
कथं त्वमपि कल्याणि पित्रा दत्ता तपस्विने ।। ४. ४३ ।।

वृथा वृतस्तेन भृशं न शोभसे
नवं वयः प्राप्य सुनृत्यपण्डिते ।
मनोभवेनाऽऽशु शराः सुसंहिताः
पतन्ति कस्मिन् पतिरीदृशस्तव ।। ४. ४७ ।।

किं सेवसे भाग्यविवर्जितं तं
समुज्झितं पोषणरक्षणाभ्याम् ।
त्यक्त्वा मुनिं सर्वसुखापवर्जितं
भजाऽनवद्यांग्युभयोस्त्वमेकम् ।। ४. ५१ ।।

तयोस्तद्भाषितं श्रुत्वा वेपमाना नृपात्मजा ।
धैर्य-मालम्ब्य तौ तत्र बभाषे मितभाषिणी ।। ५. १ ।।

4.43. அரசே! அதைக் கேட்ட அசுவினீ தேவர்கள் அவளை நோக்கி 'மங்கள வடிவினளே! உன் பிதாவால் எப்படி நீ ஒரு தபஸ்விக்குக் கொடுக்கப்பட்டாய்?

4.47—51. 'அவரால் வீணாகக் கட்டிக் கொள்ளப்பட்டு வெகுவாய் நீ சோபிக்கவில்லை. நன்றாய் நடனக்கலையில் தேர்ந்து புதிய யௌவனப்பருவத்தையடைந்துள்ள நீ மன்மத பாணங்களுக்கிலக்காகி வருந்துவாய். இப்படிப்பட்ட பதியை நீ எதற்காகச் சேவிக்கிறாய்? குற்றமற்ற அங்கம் படைத்தவளே! போஷணையும் இரக்ஷணையும் செய்ய மாட்டாதவரும் பாக்கியமிழந்தவரும் சுகமனைத்துமற்றவரும் ஆகிய முனிவரை விட்டு நீ எங்களுக்குள் ஒருவரை ஏற்றுக் கொள்.'

5.1. ராஜபுத்திரியாகிய அவள் அவர்கள் அவ்வாறு பேசியதைக் கேட்டு நடுக்கமுற்றுப் பின் தைரியத்தைக் கைக்கொண்டு சுருங்கப் பேசும் அவள் பின்வருமாறு கூறினாள்.

कुलकन्या पतिं त्यक्त्वा कथमन्यं भजेन्नरम् ।
असारेऽस्मिन् हि संसारे जानन्तौ धर्मनिर्णयम् ॥ ५. ५ ॥

यथेच्छं गच्छतं देवौ शापं दास्यामि वाऽनघौ ।
सुकन्याऽहं च शर्यातेः पतिभक्तिपरायणा ॥ ५. ६ ॥

इत्याकर्ण्य वचस्तस्या नासत्यौ विस्मितौ भृशम् ।
तावब्रूतां पुनस्त्वेनां शंकमानौ भयं मुनेः ॥ ५. ७ ॥

जानीहि प्रमदे नूनमावां देवभिषग्वरौ ।
युवानं रूपसंपन्नं प्रकुर्याव: पतिं तव ॥ ५. ८ ॥

ततस्त्रयाणामस्माकं पतिमेकतमं वृणु ।
समानरूपदेहानां मध्ये चातुर्यपण्डिते ॥ ५. १० ॥

5.5—6. 'தேவர்களே! ஒரு குலப்பெண் பதியைவிட்டு வேறு ஒரு மனிதனை எப்படி நாடுவாள்? அஸாரமான இந்த ஸம்ஸாரத்தில் தரும நிர்ணயத்தை அறிந்தவர்கள் நீங்கள். உங்கள் விருப்பப்படி இவ்விடம் விட்டுப் போகலாம். (இல்லையேல்) பாவமற்ற உங்களுக்கு சாபங்கொடுப்பேன். நான் சர்யாதியின் பெண்ணான ஸுகன்யை. பதிபக்தியில் நிலை பெற்றவள்.'

5.7. அவளுடைய இவ்வார்த்தையைக் கேட்டு மிகவும் வியப்புற்ற அசுவினி தேவர்கள் முனிவரிடமிருந்து பயம் ஏற்படும் என்று சந்தேகித்தவர்களாய் மீண்டும் அவளிடம் பின்வருமாறு கூறினர்.

5.9. 'பெண்ணே! நாங்கள் நிச்சயமாக தேவ வைத்தியர்கள் என்று தெரிந்து கொள். உன்னுடைய பதியை நாங்கள் யௌவன முடையவராகவும் அழகு மிக்கவராகவும் செய்து விடுகிறோம்.

5.10. 'திறமை மிக்கவளே! அதன் பின் ஸமான ரூபமும் தேகமும் உடைய எங்கள் மூவருக்குள் ஒருவரை நீ பதியாக ஏற்றுக் கொள்ளலாம்.'

सा तयोर्वचनं श्रुत्वा विस्मिता स्वपतिं तदा ।
गत्वोवाच तयोर्वाक्यं ताभ्यामुक्तं यदद्भुतम् ।। ५. ११ ।।

च्यवन उवाच —

गच्छ कान्तेऽद्य नासत्यौ वचनान्मम सुव्रते ।
आनयस्व समीपं मे शीघ्रं देवभिषग्वरौ ।। ५. १८ ।।

व्यास उवाच —

एवं सा समनुज्ञाता तत्र गत्वा वचोऽब्रवीत् ।
क्रियतामाशु नासत्यौ समयेन सुरोत्तमौ ।। ५. १९ ।।

तच्छ्रुत्वा चाश्विनौ वाक्यं तस्यास्तौ तत्र चाऽऽगतौ ।
ऊचतू राजपुत्रीं तां पतिस्तव विशत्वपः ।। ५. २१ ।।

5.11. அவள் அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு ஆச்சரியம் மேலிட்டவளாய்த் தன் பதியிடம் சென்று அவர்கள் சொன்ன அற்புதமான விஷயத்தைத் தெரிவித்தாள்.

ச்யவனர் கூறியது—

5.18. நல்ல விரதம் பூண்டவளே! பிரியமானவளே! உடனே போய் நான் சொன்னதாக அச்சிறந்த தேவ வைத்தியர்களான அசுவினீ தேவர்களை என்னருகில் சீக்கிரம் அழைத்துவா.

வியாஸர் கூறியது—

5.19. இவர் அனுமதிபெற்ற அவள் அங்கு சென்று 'அசுவினீ தேவர்களே! நீங்கள் கூறிய ஸங்கேதப் படி சீக்கிரம் செய்யலாம்' என்று கூறினாள்.

5.21. அவளுடைய வார்த்தையைக் கேட்ட அசுவினீ தேவர்கள் அங்கு சென்றனர். ராஜபுத்திரியிடம் 'உன் பதி நீரில் முழுகட்டும்' என்றனர்.

रूपार्थं च्यवनस्तूर्णं ततोऽम्भः प्रविवेश ह।
अश्विनावपि पश्चात्तत्प्रविष्टौ सर उत्तमम् ॥ ५. २२ ॥

ततस्ते निःसृतास्तस्मात्सरसस्तत्क्षणात्त्रयः।
तुल्यरूपा दिव्यदेहा युवानः सदृशाः किल ॥ ५. २३ ॥

तेऽब्रुवन् सहिताः सर्वे वृणीष्व वरवर्णिनि।
अस्माकमीप्सितं भद्रे पतिं त्वममलानने ॥ ५. २४ ॥

सा तु संशयमापन्ना वीक्ष्य तान् सदृशाकृतीन्।
अजानती पतिं सम्यग्व्याकुला समचिन्तयत् ॥ ५. २६ ॥

इति संचिन्त्य मनसा परां विश्वेश्वरीं शिवाम्।
दध्यौ भगवतीं देवीं तुष्टाव च कृशोदरी ॥ ५. ३० ॥

5.22. நல்ல ரூபத்தைப் பெறுவதற்காக ச்யவனரும் சீக்கிரமே நீரில் பிரவேசித்தார். அசுவினீ தேவர்களும் அவருக்குப்பின் அந்த உத்தமமான தடாகத்தில் பிரவேசித்தார்கள்.

5.23. அடுத்தகணமே மூவரும் திவ்யதேகம் படைத்தவர்களாகவும் யௌவன புருஷர்களைப் போன்றவர்களாகவும் சமான ரூபமுடையவர்களாகவும் அந்தத் தடாகத்திலிருந்து வெளிவந்தார்கள்.

5.24. 'மங்கள வடிவினளே! மாசற்ற முகமுள்ளவளே! சிறந்த மேனி படைத்தவளே! எங்களுக்குள் உனக்கு விருப்பமான பதியை நீ வரிக்கலாம்' என்று எல்லோரும் ஒன்றுகூடிச் சொன்னார்கள்.

5.26. சமான உருப்படைத்த அவர்களைக் கண்டு சந்தேகம் மேலிட்டவளாகவும் தன் பதியைத் தெளிவுற அறிந்து கொள்ள முடியாதவளாகவும் இருந்த அவள் கவலை மேலிட்டவளாய் யோசனையில் ஆழ்ந்தாள்.

5.30. மெல்லிய இடைபடைத்த அவள் யோசித்து மங்கள வடிவினளான விசுவேசுவரியை தியானித்து அந்த பகவதீ தேவியைத் துதித்தாள்.

सुकन्योवाच ·—

शरणं त्वां जगन्मातः प्राप्तास्मि भृशदुःखिता ।
रक्ष मेऽद्य सतीधर्मं नमामि चरणौ तव ।। ५. ३१ ।।

नमः पद्मोद्भवे देवि नमः शंकरवल्लभे ।
विष्णुप्रिये नमो लक्ष्मि वेदमातः सरस्वति ।। ५. ३२ ।।

पतिं दर्शय मे मातर्मग्नास्मिञ्छोकसागरे ।
देवाभ्यां चरितं कूटं कं वृणोमि विमोहिता ।। ५. ३८ ।।

व्यास उवाच —

एवं स्तुता तदा देवी तथा त्रिपुरसुन्दरी ।
हृदयेऽस्यास्तदा ज्ञानं ददावाशु सुखोदयम् ।। ५. ३९ ।।

ஸுகன்யை கூறியது—

5.31. உலகின் அன்னையே! நான் மிகுந்த துக்கத்திலாழ்ந்து உன்னைச் சரணடைந்துள்ளேன். இப்பொழுது என்னுடைய பதிவிரதாதர்மத்தை நீ காத்தருள வேண்டும். உன் திருவடிகளில் நமஸ்கரிக்கிறேன்.

5.32. தாமரையிலுதித்தவளும் விஷ்ணுவுக்குப் பிரியமானவளுமான லக்ஷ்மியே, நமஸ்காரம். சங்கர பத்னியே, நமஸ்காரம். வேதமாதாவான ஸரஸ்வதியே! நமஸ்காரம்.

5.38. தாயே! எனக்கு என் பதியைக் காட்டு. நான் சோகக்கடலில் மூழ்கியுள்ளேன். தேவர்களுடைய நடத்தை மறைவாயுள்ளது. மதிமயங்கியுள்ள நான் யாரை வரிப்பேன்?

வியாஸர் கூறியது—

5.39. இவ்வாறு துதிக்கப்பட்ட திரிபுரஸுந்தரீ தேவி அவளுடைய இருதயத்தில் இன்பம் உதிப்பதற்குக் காரணமான ஞானத்தை விரைவில் அளித்தாள்.

प्रसमीक्ष्य तु तान्सर्वान्वव्रे बाला स्वकं पतिम् ।
वृतेऽत्र च्यवने देवौ सन्तुष्टौ तौ बभूवतुः ॥ ५. ४१ ॥

सतीधर्मं समालोक्य संप्रीतौ ददतुर्वरम् ।
भगवत्याः प्रसादेन प्रसन्नौ तौ सुरोत्तमौ ॥ ५. ४२ ॥

लब्ध्वा तु च्यवनो रूपं नेत्रे भार्यां च यौवनम् ।
हृष्टोऽब्रवीन्महातेजास्तौ नासत्याविदं वचः ॥ ५. ४४ ॥

आत्मनो ऋणमोक्षाय देवेशौ नूतनस्य च ।
प्रार्थितं वां प्रदास्यामि यदलभ्यं सुरासुरैः ॥ ५. ४९ ॥

श्रुत्वा तौ मुनेर्वाक्य-मभिमन्त्र्य परस्परम् ।
तमूचतुर्मुनिश्रेष्ठं सुकन्यासहितं स्थितम् ॥ ५. ५० ॥

5.41. அப்பொழுது அவர்களை உற்று நோக்கி அப் பெண் தன் பதியை வரித்தாள். சியவனர் வரிக்கப்பட்டதும் தேவர்கள் மகிழ்வெய்தியவர்களானார்கள்.

5.42. பதிவிரதா தர்மத்தைக் கண்டு சந்தோஷித்த வர்களும் பகவதியின் அருளால் பிரசன்னமானவர்களுமான தேவசிரேஷ்டர்கள் வரமளித்தனர்.

5.44. மஹாதேஜஸ்வியான சியவனர் நல்ல ரூபத்தை யும் யௌவனத்தையும் கண்களையும் மனைவியுடன் பெற்று மகிழ்ச்சி நிறைந்தவராய் அசுவினீ தேவர்களிடம் பின் வருமாறு கூறினார்.

5.49. 'புத்துயிர் பெற்ற என்னுடைய கடனைத் தீர்த்துக் கொள்வதற்காக தேவர்களாகிய நீங்கள் விரும்பிக் கேட்கக் கூடியது எதுவாயினும் தேவர்களாலும் அசுரர் களாலும் அடைய முடியாததாயினும் கொடுக்க விரும்பு கிறேன்.'

5.50. முனிவருடைய அவ்வார்த்தையைக் கேட்டு அவர்கள் ஒருவருக்கொருவர் யோசித்துக் கொண்டு ஸுகன்யாஸமேதராய் நிற்கும் ரிஷிசிரேஷ்டரிடம் பின்வருமாறு கூறினார்கள்.

मुने पितुः प्रसादेन सर्वं नो मनसेप्सितम् ।
उत्कण्ठा सोमपानस्य वर्तते नौ सुरैः सह ॥ ५. ५१ ॥
भिषजाविति देवेन निषिद्धौ चमसग्रहे ।
शक्रेण वितते यज्ञे ब्रह्मणः कनकाचले ॥ ५. ५२ ॥
तस्मात्त्वमपि धर्मज्ञ यदि शक्तोऽसि तापस ।
कार्यमेतद्धि कर्तव्यं वांछितं नौ सुसम्मतम् ॥ ५. ५३ ॥
च्यवनस्तु तयोः प्राह तच्छ्रुत्वा वचनं मृदु ।
यदहं रूपसंपन्नो वयसा च समन्वितः ॥ ५. ५६ ॥
कृतो भवद्भ्यां वृद्धः सन्भार्यां च प्राप्तवानिति ।
तस्माद्युवां करिष्यामि प्रीत्याऽहं सोमपायिनौ ॥ ५. ५७ ॥
मिषतो देवराजस्य सत्यमेतद्ब्रवीम्यहम् ।
राज्ञस्तु वितते यज्ञे शर्याति-रमितद्युतेः ॥ ५ ५८ ॥

5.51. 'முனிவரே! எங்கள் பிதாவின் அருளால் மனதில் விரும்பியதெல்லாம் எங்களுக்கு நிறைந்துள்ளது. தேவர்களுடன் கூடி ஸோமபானம் செய்ய வேண்டும் என்ற ஆசைமட்டும் அதிகமாயுளது.

5.52. 'பிரம்மாவைக் குறித்து மேருமலையில் இந்திரனால் செய்யப்பட்ட பிரசித்தமான யக்ஞத்தில் நாங்கள் வைத்தியர்கள் என்ற காரணத்தால் ஸோமபான காலத்தில் விலக்கப்பட்டோம்.

5.53. 'தபஸ்வியே! தர்மந்தெரிந்தவரே! ஆகையால் உங்களுக்கு ஸாமர்த்தியமிருந்தால் எங்களுக்குப் பிரியமானதென்று விரும்பப்பட்ட இந்தக் காரியத்தைச் செய்து தாருங்கள்.'

5.56—58. அவர்களுடைய அவ்வார்த்தையைக் கேட்டு சியவனர் மெதுவாகப் பின் வருமாறு பேசினார்: 'கிழவனாயிருந்த நான் உங்களால் அழகும் யௌவன வயதும் படைத்தவனாகி மனைவியுடன் கூடியவனாகவும் செய்யப்பட்டமையால் பிரீதியுடன் உங்களை ஸோமபானத்திற்குரியவர்களாய் இந்திரன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அளவு கடந்த மகிமைவாய்ந்த சர்யாதிமகாராஜனுடைய விஸ்தாரமான யக்ஞத்தில் செய்கிறேன். இது ஸத்தியம் என்று கூறுகிறேன்.'

इत्याकर्ण्य वचो हृष्टौ तौ दिवं प्रति जग्मतुः ।
च्यवनस्तां गृहीत्वा तु जगामाश्रममण्डलम् ॥ ५. ५९ ॥

जनमेजय उवाच —

च्यवनेन कथं वैद्यौ तौ कृतौ सोमपायिनौ ।
मानुषस्य बलं कीदृग्देवराजबलं प्रति ॥ ६. १ ॥

व्यास उवाच —

कदाचिदथ चर्यातिभार्या चिन्तातुरा भृशम् ।
पतिं प्राह वेपमाना वचनं रुदती प्रिया ॥ ६. ६ ॥

राजन् पुत्री त्वया दत्ता मुनयेऽन्धाय कानने ।
गच्छ नाथ मुनेस्तावदाश्रमं द्रष्टुमादरात् ॥ ६. ८ ॥

5.59. இந்த வார்த்தையைக் கேட்டு மகிழ்வுடன் அவர்கள் தேவலோகம் சென்றனர். சியவனர் மனைவியை அழைத்துக் கொண்டு தனது ஆசிரமச்சூழலுக்குச் சென்றார்.

ஜனமேஜயர் கூறியது—

6.1. வைத்தியர்களாகிய அவர்கள் எவ்வாறு ஸோம பானத்திற் குரியவர்களாகச் சியவனரால் செய்யப்பட்டார் கள்? தேவராஜனுடைய பலத்திற்கெதிராக மனிதனு டைய பலம் எம்மாத்திரம்?

வியாஸர் கூறியது—

6.6. சர்யாதியின் பிரியமான மனைவி (சிறிது காலத் திற்குப் பின்) ஒரு சமயம் மிகவும் கவலை மேலிட்டவளாய் நடுங்கிக் கொண்டும் அழுது கொண்டும் தன் பதியிடம் பின்வருமாறு கூறினாள்.

6.8. 'அரசே! வனத்தில் குருடராயிருந்த முனிவ ருக்கு உங்களால் புத்திரியானவள் கொடுக்கப் பட்டாள். நாதரே! அந்த முனிவரது ஆசிரமத்தை ஆதரவுடன் மீண்டும் பார்க்கப் போகலாம்.'

गत्वाऽऽश्रमसमीपे तु तमपश्यन्महीपतिः ।
नवयौवनसंपन्नं देवपुत्रोपमं मुनिम् ॥ ६. १३ ॥

तं विलोक्यामराकारं विस्मयं नृपतिर्गतः ।
निहतोऽसौ मुनिर्वृद्धस्त्वनयाऽन्यः पतिः कृतः ॥ ६. १५ ॥

सा दृष्ट्वा तं जगामाऽऽशु सुकन्या पितुरन्तिके ।
गत्वा पप्रच्छ भूपालं प्रेमपूरितमानसा ॥ ६. २३ ॥

किं विचारयसे राजंश्चिन्ताव्याकुलिताननः ।
उपविष्टं मुनिं वीक्ष्य युवान-मम्बुजेक्षणम् ॥ ६. २४ ॥

एह्येहि पुरुषव्याघ्र प्रणमस्व पतिं मम ।
मा विषादं नृपश्रेष्ठ साम्प्रतं कुरु मानव ॥ ६. २५ ॥

6.13. அவ்வாறே ஆசிரம சமீபம் சென்றதும் அரசன் அங்கு புதிய யௌவனத்துடன் கூடியவரும் தேவ குமாரரைப் போன்றவருமான ஒரு முனிவனைக் கண்டான்.

6.15. தேவ வடிவினரான அவரைக்கண்டு ஆச்சரியம் மேலிட்ட அரசன் 'கிழட்டு முனிவர் கொல்லப் பட்டு இவளால் வேறு ஒருவர் புருஷனாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்க வேணும்' என்று எண்ணினான்.

6.23—25. ஸுகன்யை அரசராகிய தந்தையைப் பார்த்ததும் அவரருகில் விரைந்து சென்று அன்பு நிறைந்த மனதுடன் அவரிடம் கேட்டாள்: 'தாமரை போன்ற கண்களுடையவராய் யௌவன புருஷராய் உட்கார்ந்திருக்கும் முனிவரைப் பார்த்து கவலையால் கலங்கிய முகத்துடன் என்ன யோசிக்கிறீர்கள்? புருஷ சிரேஷ்டரே! வாருங்கள், வாருங்கள். என் கணவரை வணங்குங்கள். அரசசிரேஷ்டரே! இப்பொழுது மனதில் ஒன்றும் வருந்த வேண்டாம்.'

राजोवाच —

क्व मुनिश्च्यवनः पुत्रि वृद्धोऽन्धस्तापसोत्तमः।
कोऽयं युवा मदोन्मत्तः सन्देहोऽत्र महान्मम ॥ ६. २७ ॥

सुकन्योवाच —

च्यवनोऽसौ मुनिस्तात जामाता ते न संशयः।
अश्विभ्या-मीदृशः कान्तः कृतः कमललोचनः ॥ ६. ३२ ॥

नाहं तव सुता तात तथा स्यां पापकारिणी।
यथा त्वं मन्यसे राजन्विमूढो रूपसंशये ॥ ६. ३४ ॥

प्रणम त्वं मुनिं राजन् भार्गवं च्यवनं पितः।
आपृच्छ कारणं सर्वं कथयिष्यति विस्तरम् ॥ ६. ३५ ॥

அரசன் கூறியது—

6.27. பெண்ணே! கிழவரும் குருடரும் தவசிரேஷ்டருமான சியவன முனிவர் எங்கே? கொழுப்பேறியுள்ள இந்த யௌவன புருஷன் யார்? எனக்கு இது பெரிய சந்தேகமாயிருக்கிறது.

ஸுகன்யை கூறியது—

6.32. 'அப்பா! இவர் சியவன முனிவரே, உங்கள் மாப்பிள்ளையே, சந்தேகமில்லை. தாமரைக் கண்படைத்தவராய் அழகுமிக்கவராய் இவ்வாறு அசுவினீ தேவர்களால் செய்யப்பட்டார்.

6.34. அரசே! உங்கள் பெண்ணாகிய நான் நீங்கள் ரூபஸம்சயத்தால் எப்படி எண்ணுகிறீர்களோ அப்படிப்பட்ட பாவச் செயல் செய்பவளாகமாட்டேன்.

6.35. அரசே! பிதாவே! பிருகு குலத்தவரான சியவன முனிவரை வணங்கி அவரையே காரணம் கேளுங்கள். எல்லாவற்றையும் விரிவாகக் கூறுவார்.

इति श्रुत्वा वचः पुत्र्याः शर्यातिस्त्वरितस्तदा।
प्रणनाम मुनिं तत्र गत्वा पप्रच्छ सादरम् ॥ ६. ३६ ॥

च्यवन उवाच —

नासत्यावत्र सम्प्राप्तौ देवानां भिषजावुभौ।
उपकारः कृतस्ताभ्यां कृपया नृपसत्तम ॥ ६. ३९ ॥

मया ताभ्यां वरो दत्त उपकारस्य हेतवे।
करिष्यामि मखे राज्ञो भवन्तौ सोमपायिनौ ॥ ६. ४० ॥

एवं मया वयः प्राप्तं लोचने विमले तथा।
स्वस्थो भव महाराज संविशस्वासने शुभे ॥ ६. ४१ ॥

6.36. புத்திரியின் இவ்வார்த்தையைக் கேட்டுச் சர்யாதி விரைந்து சென்று முனிவரை நமஸ்கரித்து ஆதரவுடன் வினவினுர்.

சியவனர் கூறியது—

6.39. அரசசிரேஷ்டரே! தேவவைத்தியர்களான இரு அசுவினீ தேவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் கிருபை கூர்ந்து உபகாரம் செய்தார்கள்.

6.40. அவர்கள் செய்த உபகாரத்தின் காரணமாக, 'உங்களை நான் அரசர் செய்யும் யாகத்தில் ஸோமபானத்திற்கு உரியவர்களாகச் செய்கின்றேன்' என்ற வரமும் என்னுல் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

6.41. மகாராஜரே! இவ்வாருகக் குற்றமற்ற கண்களும் இளமையான வயதும் என்னுல் அடையப்பட்டன. மனதைச் சமாதானம் செய்து கொள்ளுங்கள். மங்களமான ஆஸனத்தில் உட்காருங்கள்.

व्यास उवाच —

इत्युक्तः स तु विप्रेण सभार्यः पृथिवीपतिः ।
सुखोपविष्टः कल्याणीः कथाश्चक्रे महात्मना ॥ ६. ४२ ॥

अथैनं भार्गवः प्राह राजानं परिसान्त्वयन् ।
याजयिष्यामि राजंस्त्वां संभारानुपकल्पय ॥ ६. ४३ ॥

मया प्रतिश्रुतं ताभ्यां कर्तव्यौ सोमपौ युवाम् ।
तत्कर्तव्यं नृपश्रेष्ठ तव यज्ञेऽतिविस्तरे ॥ ६. ४४ ॥

सम्मान्य च्यवनं राजा जगाम नगरं प्रति ।
सभार्यश्चातिसन्तुष्टः कुर्वन् वार्तां मुनेः किल ॥ ६. ४७ ॥

प्रशस्तेऽहनि यज्ञीये सर्वकामसमृद्धिमान् ।
कारयामास शर्यातिर्यज्ञायतन-मुत्तमम् ॥ ६. ४८ ॥

வியாஸர் கூறியது—

6.42. பிராம்மண ரிஷியால் இவ்வாறு கூறப்பெற்ற அரசன் மனைவியுடன் சுகமாயமர்ந்து அம்மகாத்மாவுடன் மங்களமான பேச்சுக்களைப் பேசினர்.

6.43. இவ்வரசரைச் சமாதானப் படுத்திய பார்க்கவ முனிவர் ''அரசே! நான் உங்களுக்கு யாகம் செய்து வைக்கிறேன். அதற்கு வேண்டிய பொருள்களைச் சேகரியுங்கள்.

6.44. ''அரசசிரேஷ்டரே! 'உங்களிருவரையும் ஸோமபானத்துக்கு உரியவர்களாய்ச் செய்கிறேன்' என்று என்னுல் அவர்களுக்கு எந்த வாக்களிக்கப்பட்டதோ அது மிகவும் விஸ்தாரமான உங்கள் யாகத்தில் பூர்த்தியாக வேண்டும்.''

6.47–48. அரசன் சியவனருக்கு மரியாதை செய்துவிட்டு மகிழ்ச்சி பொங்கும் மனத்துடன் மனைவியை அழைத்துக்கொண்டு தன் நகரம் சென்ருன். முனிவருடைய வார்த்தையை நிறைவேற்றுபவனுய் ஒரு நல்ல நாளில் உத்தமமான யாகசாலையை நிர்மாணம் செய்து எல்லாப் பொருள்களையும் சேகரிக்க ஏற்பாடு செய்தான்.

समानीय मुनीन् पूज्यान् वसिष्ठप्रमुखानसौ ।
भार्गवो याजयामास च्यवनः पृथिवीपतिम् ॥ ६. ४९ ॥

अगृह्णच्च्यवनः सोम-मश्विनोर्देवयोस्तदा ।
शक्रस्तं वारयामास मा गृहाणैतयोर्ग्रहम् ॥ ६. ५३ ॥

च्यवन उवाच —

माऽवमंस्था महात्मानौ रूपद्रविणवर्चसा ।
यौ चक्रतुर्मां मघवन् बृन्दारकमिवापरम् ॥ ७. ३ ॥

इन्द्र उवाच —

भिषजौ नार्हतः कामं ग्रहं यज्ञे कथंचन ।
यदि दित्ससि मन्दात्मन् शिरश्छेत्स्यामि सांप्रतम् ॥ ७. ५ ॥

6.49. மகிமை வாய்ந்த வசிஷ்டர் முதலிய முனிவர்களை வரவழைத்து பிருகு குலத்தினராகிய சியவனர் அரசனுக்கு யாகத்தைச் செய்வித்தார்.

6.53. அப்பொழுது சியவனர் அசுவினீ தேவர்களுக்கு ஸோமபானமளித்தார். 'இவர்களுக்கு அளிக்கக் கூடாது' என்று இந்திரன் தடுத்தான்.

சியவனர் கூறியது—

7.3. 'அழகுச் செல்வம் நிறைந்த மகாத்மாக்களான இவர்களை அவமதிக்கக் கூடாது. தேவேந்திரரே! இவர்கள் என்னை வேறொரு தேவனைப் போல் ஆக்கியவர்கள்.'

இந்திரன் கூறியது—

7.5. யாகத்தில் ஒருபொழுதும் இஷ்டப்படி ஸோமபானம் பெறுவதற்கு வைத்தியர்களுக்கு உரிமை இல்லை. மந்த புத்தியுடையவரே! நீர் கொடுத்தால் நான் உமது தலையை இப்பொழுது கொய்து விடுவேன்.

व्यास उवाच —

अनादृत्य तु तद्वाक्यं वासवस्य च भार्गवः ।
ग्रहं तु ग्राहयामास भर्त्सयन्निव तं भृशम् ॥ ७. ६ ॥

इन्द्रोऽपि प्राक्षिपत्कोपाद्वज्रमस्मै स्वमायुधम् ।
पश्यतां सर्वदेवानां सूर्यकोटिसमप्रभम् ॥ ७. १० ॥

प्रेरितं चाशनिं प्रेक्ष्य च्यवनस्तपसा ततः ।
स्तंभयामास वज्रं स शक्रस्यामिततेजसः ॥ ७. १२ ॥

इन्द्र उवाच —

सोमपावश्विनावेतौ त्वत्कृतौ च सदैव हि ।
भविष्यतश्च शर्यातेः कीर्तिस्तु विपुला भवेत् ॥ ७. ३४ ॥

வியாஸர் கூறியது—

7.6. இந்திரனுடைய அவ்வார்த்தையைப் பொருட் படுத்தாமல் பார்கவர் அவனையும் பயமுறுத்துபவர் போல் ஸோமபானத்தை அளித்தார்.

7.10. எல்லா தேவர்களும் பார்த்துக் கொண்டிருக் கையில் இந்திரன் கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய தனது வஜ்ராயுதத்தை அவர் மேல் கோபத்துடன் விடுத் தான்.

7.12. ஏவப்பட்ட வஜ்ராயுதத்தைக் கண்ணுற்ற சியவனர் அப்பொழுது தன் தவத்தால் வீரியம் மிக்க இந் திரனுடைய வஜ்ரத்தை அசையாமலிருக்கும்படி செய்து விட்டார்.

இந்திரன் கூறியது—

7.34. உம்மால் ஸோமபானத்துக்குரியவர்களாக்கப் பெற்ற அசுவினி தேவர்கள் இனி எப்பொழுதுமே அவ் வுரிமை உடையவர்களாயிருக்கட்டும். சர்யாதியின் கீர்த் தியும் எங்கும் பரவட்டும்.

मया यद्धि कृतं कर्म सर्वथा मुनिसत्तम ।
परीक्षार्थं तु विज्ञेयं तव वीर्यप्रकाशनम् ॥ ७. ३५ ॥

व्यास उवाच —

एवमुक्तस्तु शक्रेण च्यवनः परमार्थवित् ।
संजहार ततः कोपं समुत्पन्नं विरोधजम् ॥ ७. ३७ ॥

ततस्तु संस्कृतं सोमं वासवाय महात्मने ।
अश्विभ्यां सर्वधर्मात्मा पाययामास भार्गवः ॥ ७. ४० ॥

सरस्तदपि विख्यातं जातं यूपविमण्डितम् ।
आश्रमस्तु मुनेः सम्यक्पृथिव्यां विश्रुतोऽभवत् ॥ ७. ४२ ॥

॥ इति सुकन्योपाख्यानं समाप्तम् ॥

7.35. முனிசிரேஷ்டரே! எப்படியும் உம்முடைய வீரியத்தைப் பிரகாசப்படுத்துவதற்காகப் பரிக்ஷை செய்யும் பொருட்டே என்னுடைய செயலானது செய்யப்பட்டது என்று நீங்கள் அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வியாஸர் கூறியது—

7.37. இங்ஙனம் இந்திரனுல் கூறப்பெற்ற சியவனர் பரமார்த்தத்தை உணர்ந்தவராதலால் விரோதத்தால் எழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டார்.

7.40. எல்லா தருமங்களையுமுணர்ந்த பார்க்கவர் ஸம்ஸ்காரம் செய்யப்பட்ட ஸோமரஸத்தை இந்திரனுக்கும் அசுவினீ தேவர்களுக்கும் பானம் செய்வித்தார்.

7.42. பிரசித்தமான அந்தத் தடாகமும் யூபஸ்தம்பம் நாட்டப் பெற்ற முனிவரின் ஆசிரமமும் பூமியில் நல்ல புகழ் பெற்றதாக ஆயின.

இங்ஙனம் ஸுகன்யோபாக்யானம் முற்றும்.

॥ सूर्यवंशचरित्रम् ॥ २९ ॥

शर्यातिरपि सन्तुष्टो ह्यभवत्तेन कर्मणा ।
यज्ञं समाप्य नगरे जगाम सचिवैर्वृतः ॥ ७.४३ ॥

राज्यं चकार धर्मज्ञो मनुपुत्रः प्रतापवान् ।
आनर्तस्तस्य पुत्रोऽभूदानर्ता-द्रेवतोऽभवत् ॥ ७. ४४ ॥

सोऽन्तः समुद्रे नगरीं विनिर्माय कुशस्थलीम् ।
आस्थितो भुङ्क्त विषयानानर्तादी-नरिन्दमः ॥ ७. ४५ ॥

तस्य पुत्रशतं जज्ञे ककुद्मि ज्येष्ठमुत्तमम् ।
पुत्री च रेवती नाम्ना सुन्दरी शुभलक्षणा ॥ ७. ४६ ॥

29. ஸூர்யவம்ச சரித்திரம் (தொடர்ச்சி)

7.43. அந்தக் கர்மாவால் சர்யாதியும் மகிழ்ச்சி நிறைந்தவரானுன். யாகத்தைப் பூர்த்தி செய்துவிட்டு நகரத்திற்கு மந்திரிகளுடன் சென்ருன்.

7.44. பிரதாபவானும் மனுபுத்திரனும் தர்மந் தெரிந்தவனுமான அவன் அரசாட்சியை நன்கு நடத்தினுன். அவன் புத்திரன் ஆனர்த்தன். ஆனர்த்தனிடம் ரேவதன் தோன்றினுன்.

7.45. சத்துருவை அடக்குபவனே! அவன் கடல் நடுவில் குசஸ்தலீ என்ற நகரத்தை நிர்மாணம் செய்து அதிலிருந்து கொண்டு ஆனர்த்தம் முதலிய தேசங்களை அனுபவித்து வந்தான்.

7.46. அவனுக்கு நூறு புத்திரர்கள்; அவர்களுள் மூத்தவனும் சிறந்தவனும் ககுத்மி; ரேவதி என்பவள் புத்திரி; அவள் அழகுடையவளாகவும் சுபலக்ஷணங்களுடைய வளாகவுமிருந்தாள்.

विचिन्त्य मनसा राजा कस्मै देया मया सुता ।
गत्वा पृच्छामि ब्रह्माणं सर्वज्ञं सुरपूजितम् ॥ ७. ४९ ॥
इति संचिन्त्य स भूपालः सुतामादाय रेवतीम् ।
ब्रह्मलोकं जगामाशु प्रष्टुकामः पितामहम् ॥ ७. ५० ॥
पुत्र्या वरं परिप्रष्टुं ब्रह्मलोकं गतो यदा ।
आवर्तमाने गान्धर्वे स्थितो लब्धक्षणः क्षणम् ॥ ८. २० ॥
समाप्ते तत्र गान्धर्वे प्रणम्य परमेश्वरम् ।
दर्शयित्वा सुतां तस्मै स्वाभिप्रायं न्यवेदयत् ॥ ८. २१ ॥
वरं कथय देवेश कन्येयं मम पुत्रिका ।
देया कस्मै मया ब्रह्मन् प्रष्टुं त्वां समुपागतः ॥ ८. २२ ॥

7.49–50. அவ்வரசன் 'இப்பெண்ணை யாருக்குக் கொடுக்கலாம்?' என்று மனதில் நன்கு ஆலோசித்து விட்டு 'தேவர்களால் பூஜிக்கப் பெற்றவரும் எல்லாமறிந்தவருமான பிரும்மாவிடம் சென்று கேட்கிறேன்' என்று எண்ணிப் பெண் ரேவதியையும் அழைத்துக் கொண்டு பிரம்மாவைக் கேட்கும் ஆசையுடன் விரைவில் பிரும்ம லோகம் சென்றார்.

8.20. வரனைப் பற்றிக் கேட்கப் புத்திரியுடன் அவர் பிரம்ம லோகம் சென்ற பொழுது கந்தர்வர்களின் ஆடல் பாடல்கள் நடந்து கொண்டிருந்ததால் சிறிது நேரம் காத்திருந்தார்.

8.21. ஆடல் பாடல் முடிந்ததும் பிரம்மாவை நமஸ்கரித்துத் தன் பெண்ணை அவருக்குக் காட்டித் தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

8.22. 'தேவ நாயகரே! இவள் என் புத்திரி, கன்னிகை. இவளுக்கு ஒரு வரனைச் சொல்லுங்கள். பிரம்ம தேவரே! என்னால் இவள் யாருக்குக் கொடுக்கப்பட வேண்டும்? உங்களைக் கேட்கத்தான் இங்கு வந்துள்ளேன்.

44

बहवो राजपुत्रा मे वीक्षिताः कुलसम्भवाः ।
कस्मिंश्चिन्मे मनः कामं नोपतिष्ठति चंचलम् ॥ ८. २३ ॥

तस्मात्त्वां देवदेवेश प्रष्टुमत्रागतोऽस्म्यहम् ।
तदाज्ञापय सर्वज्ञ योग्यं राजसुतं वरम् ॥ ८. २४ ॥

ब्रह्मोवाच —

राजपुत्रा स्त्वया राजन् वरा ये हृदये कृताः ।
ग्रस्ताः कालेन ते सर्वे सपितृपौत्रबान्धवाः ॥ ८. २७ ॥

सप्तविंशतिमोऽद्यैव द्वापरस्तु प्रवर्तते ।
वंशजास्ते मृताः सर्वे पुरी दैत्यै-र्विलुण्ठिता ॥ ८. २८ ॥

8.23. 'நற்குலத்துதித்த பல அரச குமாரர்கள் என்னுல் பார்க்கப்பட்டார்கள். சஞ்சலமான எனது மனம் எவரிடமும் பிடிப்புக் கொள்ளவில்லை.

8.24. 'தேவதேவரே! அதனுல் உங்களைக் கேட்க இங்கு நான் வந்துள்ளேன். எல்லாமறிந்தவரே! தகுதியான வரனுக ஒரு அரசகுமாரனைக் குறிப்பிட்டு எனக்குக் கட்டளை இடவேண்டும்.'

பிரம்மா கூறியது—

8.27. அரசரே! எந்த அரசகுமாரர்கள் உம்மால் இருதயத்தில் வரனுகக் கருதப்பட்டார்களோ அவர்கள் எல்லோரும் தகப்பன் பேரன் பந்துக்கள் அனைவருடன் காலத்தால் விழுங்கப்பட்டவர்களாய் விட்டார்கள்.

8.28. இப்பொழுது (பூலோகத்தில்) இருபத்தெட்டாவது மன்வந்தரத்தில் துவாபரயுகம் நடைபெறுகிறது. உம்முடைய வம்சத்திலுதித்தவர்களெல்லாம் இறந்து விட்டார்கள். உமது பட்டணமும் அசுரர்களால் கைப்பற்றப்பட்டது.

सोमवंशोद्भवस्तत्र राजा राज्यं प्रशास्ति हि ।
उग्रसेन इति ख्यातो मथुराधिपतिः किल ।। ८. २९ ।।

अंशावतरणं तत्र गदितं सुरसत्तमैः ।
वासुदेवः समुत्पन्नः कृष्णः कमललोचनः ।। ८. ३४ ।।

तस्याग्रजः सविख्यातो बलदेवो हलायुधः ।
शेषांशो मुसली वीरो वरोऽस्तु तव सम्मतः ।। ८. ४३ ।।

संकर्षणाय देह्याशु कन्यां कमललोचनाम् ।
रेवतीं बलभद्राय विवाहविधिना ततः ।। ८. ४४ ।।

दत्वा पुत्रीं नृपश्रेष्ठ गच्छ त्वं बदरिकाश्रमम् ।
तपस्तप्तुं सुरारामं पावनं कामदं नृणाम् ।। ८. ४५ ।।

8.29. சந்திரவம்சத்திலுதித்த அரசன் உக்ரசேனன் எனப் பெயர் பெற்றவன். அங்கு மதுரைக்கு அதிபதியாக அரசாட்சி செய்கிறுன்.

8.34. அங்கு பகவான் வாசுதேவர் தேவசிரேஷ்டர்களுடன் வாக்களித்தபடி கமலக் கண்ணனை கிருஷ்ணனுக அம்சாவதாரம் செய்துள்ளார்.

8.43. அவருடைய தமயன் கலப்பை ஆயுதந்தாங்கிய பலதேவர் எனப் பெயர் பெற்றவர். அவ்வீரர் ஆதி சேஷனுடைய அம்சம். அவர் உம் மனதிற்கியைந்த வரன் ஆவார்.

8.44. ஸங்கர்ஷனர் என்றும் பலபத்ரர் என்றும் பெயர் பெற்ற அவருக்குச் சீக்கிரமே நீர் தாமரைக் கண்ணியான உமது பெண் ரேவதியை விவாக முறைப்படி கொடும்.

8.45. அரசசிரேஷ்டரே! புத்திரியைக் கொடுத்து விட்டு நீர் தவஞ் செய்வதற்கு தேவர்கள் வசிக்கும் புனிதமான இடமும் மனிதர்க்கு விரும்பியதை அளிக்க வல்லதுமான பதரிகாசிரமத்திற்குச் செல்லும்.

व्यास उवाच —

इति राजा समादिष्टो ब्रह्मणा पद्मयोनिना।
जगाम तरसा राजन् द्वारकां कन्ययान्वितः ॥ ८. ४६ ॥

ददौ तां बलदेवाय कन्यां वै शुभलक्षणाम्।
तपस्तप्त्वा तपस्तीव्रं नृपतिः कालपर्यये।
जगाम त्रिदशावासं त्यक्त्वा देहं सरित्तटे ॥ ८. ४७ ॥

राजोवाच —

कन्या वृद्धा न संजाता राजा वाऽतितरां नु किम्।
एतावन्तं तथा काल-मायुः पूर्णं तयोः कथम् ॥ ८. ४८ ॥

व्यास उवाच —

न जरा क्षुत् पिपासा त्रा न मृत्युर्न भयं पुनः।
न तु ग्लानिः प्रभवति ब्रह्मलोके सदाऽनघ ॥ ८. ४९ ॥

வியாஸர் கூறியது—

8.46. அரசே! கமலத்திலுதித்த பிரம்மாவால் இவ்வாறு கட்டளையிடப்பட்ட அவ்வரசர் சுபலக்ஷணம் பொருந்திய தன் பெண்ணுடன் துவாரகை சென்று அவளை பலதேவருக்குக் கொடுத்தார்.

8.47. பின்பு அவ்வரசர் கடுமையான தவஞ் செய்து நாளடைவில் நதிக்கரையில் உடலை நீத்து தேவலோகம் சென்றார்.

அரசன் கூறியது—

8.48. அவ்வளவு காலமானபோது அக்கன்னிகைக்கு கிழட்டுப்பருவம் வரவில்லையா? அரசனும் அதற்கு மேல் கிழவராயிருக்க வேண்டுமே. ஆயுள்தான் எப்படி அவ்வளவு நீண்டது?

வியாஸர் கூறியது—

8.49. பாவமற்றவனே! பிரம்மலோகத்தில் மூப்பு, பசி, தாகம், மரணம், பயம், சிரமம் முதலியவை எப்பொழுதும் உண்டாவதே இல்லை.

मनोश्चक्षुवतः पुत्र उत्पन्नो वीर्यवत्तरः।
इक्ष्वाकुरिति विख्यातः सूर्यवंशकरस्तु सः ॥ ८. ५१ ॥

वंशार्थं तप आतिष्ठद्देवीं ध्यात्वा निरन्तरम्।
नारदस्योपदेशेन प्राप्य दीक्षामनुत्तमाम् ॥ ८. ५२ ॥

तस्य पुत्रशतं राजन्निक्ष्वाकोरिति विश्रुतम्।
विकुक्षिः प्रथमस्तेषां बलवीर्यसमन्वितः ॥ ८. ५३ ॥

शशाद इति विख्यातो नाम्ना जातो नृपात्मजः।
पितर्युपरते राज्यं प्राप्तं तेन महात्मना ॥ ९. ९ ॥

शशादस्याऽभवत्पुत्रः ककुत्स्थ इति विश्रुतः।
तस्यैव नामभेदाद्वै इन्द्रवाहः पुरंजयः ॥ ९. ११ ॥

8.51. ஞானிகளிற் சிறந்த மனுவிற்கு வீரியம் மிக்க இக்ஷ்வாகு புத்திரனுக உதித்தான். அவன் சூரியவம்சத்தை வளர்ப்பவனுயும் கீர்த்திமிக்கவனுயுமிருந்தான்.

8.52. நாரதருடைய உபதேசத்தால் ஒப்புயர்வற்ற தீக்ஷையைப் பெற்று தேவியை இடைவிடாது தியானிப்பவனுய் வம்சவிருத்தியின் பொருட்டுத் தவஞ் செய்தான்.

8.53. அரசே! அந்த இக்ஷ்வாகுவிற்கு நூறு பிள்ளைகள் பிறந்தனர் என்று கேள்விப்படுகிறோம். அவர்களில் முதல்வன் பலமும் வீரியமும் மிக்க விகுக்ஷி என்பவன்.

9.9. அந்த அரசபுத்திரன் (முயல் மாம்ஸத்தை உண்டதால்) சசாதன் எனவும் பெயர் பெற்றவனுன். தந்தை காலமான பின் அம்மகாத்மாவினுல் அரசாட்சி அடையப் பட்டது.

9.11. சசாதனுக்கு ககுத்ஸ்தன் புத்திரனுய்ப் பிறந்து புகழ் பெற்றவனுனன். அவனுக்கு இந்திரவாஹன் என்றும் புறஞ்ஜயன் என்றும் பெயர் ஏற்பட்டது.

ककुत्स्थस्याभवत्पुत्रो धर्मपत्न्यां महाबलः।
अनेनाविश्रुतस्तस्य पृथुः पुत्रश्च वीर्यवान् ॥ ९. ३१ ॥

विष्णोरंशः स्मृतः साक्षात्पराशक्तिपदार्चकः।
विश्वरन्धिस्तु विज्ञेयः पृथोः पुत्रो नराधिपः ॥ ९. ३२ ॥

चन्द्रस्तस्य सुतः श्रीमान् राजा वंशकरः स्मृतः।
तत्सुतो युवनाश्वस्तु तेजस्वी बलवत्तरः ॥ ९. ३३ ॥

श्रावस्तो युवनाश्वस्य जज्ञे परमधार्मिकः।
श्रावस्ती निर्मिता तेन पुरी शक्रपुरीसमा ॥ ९. ३४ ।

यौवनाश्वसुतः श्रीमान् मान्धातेति महीपतिः।
मातृगर्भे न जातोऽसावुत्पन्नो जनकोदरे ॥ ९. ४१ ॥

9.31. ககுத்ஸ்தனுக்கு தர்மபத்னியிடம் மகாபல சாலியான ஒரு புத்திரன் பிறந்தான். அவன் வீரியவானு கவும் புகழ் பெற்றவனுகவும் பிருது என்ற பெயருடன் விளங்கினுன்.

9.32. பராசக்தியின் பாத சேவையில் ஈடுபட்டிருந்த அவன் ஸாக்ஷாத் விஷ்ணுவின் அம்சம் எனக் கருதப்படுகிறுன். பிருதுவின் புத்திரன் விச்வரந்தி எனும் அரசன்.

9.33. அவனுடைய புத்திரன் வம்சத்தை விருத்தி செய்த ஸ்ரீமானுன சந்திரன் என்பவன். அவனுடைய புத்திரன் பலமும் வீரியமும் மிகுந்த யுவனுச்வன்.

9.34. யுவனுச்வனுக்கு சிராவஸ்தன் என்று பரமதார் மிகனுன புத்திரன் தோன்றினுன். இந்திரனுடைய நகரம் போன்ற சிராவஸ்தி எனும் பட்டணம் அவனுல் நிர்மாணம் செய்யப்பட்டது.

9.41. (சிராவஸ்தனுக்குப் பின் சாவந்தன், பிருஹ தச்வன், குவலயாச்வன், திருடாச்வன், ஹர்யச்வன், நிகும் பன், பிரேஸேனஜித், யௌவனுச்வன் முதலியவர்கள் அந்தப் பரம்பரையில் தோன்றி அரசு புரிந்தனர்). யௌவனுச்வனு டைய புத்திரன் ஸ்ரீமானுன மாந்தாதா என்ற அரசன். அவன் தாயின் கர்ப்பத்திலிருந்து பிறக்கவில்லை. தந்தை வயிற்றிலிருந்து பிறந்தான்.

मन्त्रितो वेदमन्त्रैश्च पुत्रार्थं तस्य भूपतेः ।
राजा तद्यज्ञसदनं प्रविष्टस्तृषितो निशि ॥ ९. ५६॥

भार्यार्थं संस्कृतं विप्रै-र्मन्त्रितं विधिनोद्धृतम् ।
पीतं राज्ञा तृषार्तेन तदज्ञानान्नृपोत्तम ॥ ९. ५८ ॥

गर्भं दधार नृपतिस्ततो मन्त्रबलादथ ।
ततः काले स उत्पन्नः कुक्षिं भित्वाऽस्य भूपतेः ॥ ९. ६१ ॥

देवानां कृपया तत्र न ममार महीपतिः ।
कं धास्यति कुमारोऽयं मन्त्रिणश्चुक्रुशुर्भृशम् ॥ ९. ६२ ॥

तदेन्द्रो देशिनीं प्रादान्मान्धातेत्यवदद्वचः ।
सोऽभवद्बलवान् राजा मान्धाता पृथिवीपतिः ॥ ९. ६३ ॥

9.56. யௌவனுச்வ ராஜாவுக்கு புத்திரப் பேறுண்டாகும் பொருட்டு (கலசஸ்தாபனம் செய்து) வேதமந்திரங்களால் மந்திரஜபம் செய்யப்பட்டு வந்தது. இரவு வேளையில் அரசன் தாகம் மேலிட்டவனுய் யாகசாலையில் புகுந்தான்.

9.58. அரசசிரேஷ்டனே! விதியினுல் தூண்டப்பட்ட அவ்வரசன் தாகத்தின் உபத்திரவத்தால் தன் மனைவிக்காக ஸம்ஸ்காரம் செய்து பிராம்மணர்களால் மந்திரிக்கப் பட்டிருந்த தீர்த்தத்தை அறியாமல் குடித்து விட்டான்.

9.61. மந்திரத்தின் வீரியத்தால் அவ்வரசன் கர்ப்பம் தரித்தான். பிறகு நாளடைவில் அவனுடைய வயிற்றைப் பிளந்து கொண்டு புத்திரன் பிறந்தான்.

9.62. தேவர்களுடைய கிருபையால் அப்பொழுது அரசன் மரிக்கவில்லை. மந்திரிமார்கள் இக்குழந்தை யாரிடம் முலைப்பாலுண்ணும் என்று மிகுந்த கவலையுடன் விசாரித்தனர்.

9.63. அப்பொழுது இந்திரன் '(மாம் தாதா) இவன் என்னை ஊட்டுபவன்' என்று பொருள்படக் கூறித் தனது ஆள்காட்டிவிரலைச் சுவைக்கக் கொடுத்தான். அவன் தான் பலவானுகி மாந்தாதா என்ற பூபதியாக விளங்கினுன்.

तस्य बिन्दुमती भार्या शशबिन्दोः सुताऽभवत् ।
तस्यामुत्पादयामास मान्धाता द्वौ सुतौ नृप ॥ १०.४ ॥

पुरुकुत्सं सुविख्यातं मुचुकुन्दं तथाऽपरम् ।
पुरुकुत्सात्ततोऽरण्यः पुत्रः परमधार्मिकः ॥ १०.५ ॥

पितृभक्तिरतश्चाभूद् बृहदश्वस्तदात्मजः ।
हर्यश्वस्तस्य पुत्रोऽभूद्धार्मिकः परमार्थवित् ॥ १०.६ ॥

तस्यात्मजस्त्रिधन्वाभूदरुणस्तस्य चात्मजः ।
अरुणस्य सुतः श्रीमान् सत्यव्रत इति श्रुतः ॥ १०.७ ॥

सोऽभूदिच्छाचरः कामी मन्दात्माह्यचतिलोलुपः ।
स पापात्मा विप्रभार्यां हृतवान् काममोहितः ॥ १०.८ ॥

10.4. சசபிந்துவின் புத்திரியான பிந்துமதி என்பவள் அவனுக்கு மனைவியானாள். அவளிடம் மாந்தாதா இரண்டு புத்திரர்களைப் பெற்றார்.

10.5. அவர்களில் முதல்வன் புகழ்பெற்ற புருகுத்ஸன். மற்றவன் முசுகுந்தன் என்பவன். புருகுத்ஸனிடம் பரம தார்மிகனான அரண்யன் புத்திரனாகத் தோன்றினான்.

10.6. அவன் பிதிருபக்தி உடையவனாயிருந்தான். அவனுடைய புத்திரன் பிருஹதச்வன். அவனுடைய புத்திரன் பரமார்த்த ஞானம் படைத்தவனும் தார்மிகனுமான ஹர்யச்வன்.

10.7. அவன் புத்திரன் த்ரிதன்வா. த்ரிதன்வாவின் புத்திரன் அருணன். அருணனுடைய குமாரன் ஸத்திய விரதன் எனப் பெயர் பெற்ற சீமான் எனக் கேள்விப்படுகிறோம்.

10.8. அவன் இஷ்டப்படி நடப்பவனாயும் காமுகனாயும் மந்த புத்தியுடையவனாயும் மிகவும் சஞ்சலமான மனதுடையவனாயும் இருந்தான். ஒரு சமயம் அந்தப் பாவி காமத்தால் மோகித்து ஒரு பிராம்மணன் மனைவியை அபகரித்தான்.

सत्यव्रतो ह्यकस्माच्च कस्यचित्कारणान्नृप ।
वसिष्ठे चाऽधिकं मन्युं धारयामास नित्यदा ॥ १०. ४८ ॥

त्याज्यमानं वने पित्रा धर्मिष्ठं च प्रियं सुतम् ।
न वारयामास मुनिर्वसिष्ठः कारणेन ह ॥ १०. ४९ ॥

कस्मिंश्चिद्दिवसेऽरण्ये मृगाभावे महीपतिः ।
वसिष्ठस्य गां दोग्ध्री-मपश्यद्वनमध्यगाम् ॥ १०. ५१ ॥

तां जघान क्षुधार्तस्तु क्रोधान्मोहाच्च दस्युवत् ।
वसिष्ठस्तु हतां दोग्ध्रीं ज्ञात्वा क्रुद्धस्तमब्रवीत् ॥ १०. ५४ ॥

दुरात्मन् किं कृतं पापं धेनुघातात्पिशाचवत् ।
एवं ते शंकवः क्रूराः पतन्तु त्वरितास्त्रयः ॥ १०. ५५ ॥

10.48. அரசே! அந்த ஸத்யவிரதன் நிமித்தமில்லாமல் ஏதோ காரணத்தைத் தன் மனதில் கொண்டு வசிஷ்டரிடம் எப்பொழுதும் அதிகமான கோபங் கொண்டவனுயிருந்தான்.

10.49. தன் தந்தையால் காட்டிற்குத் துரத்தப்பட்ட பொழுது 'தர்மிஷ்டனும் பிரியனுமான புத்திரன் துரத்தப்பட்டதை வசிஷ்டமுனிவர் தடுக்கவில்லையே' என்பது அவன் கொண்ட காரணம்.

10.51. அவ்வரச புத்திரன் ஒரு நாள் காட்டில் வேட்டைக்கு மிருகம் கிடைக்காமல் போன பொழுது வசிஷ்டருடைய பால் பசுவை வனமத்தியில் கண்டான்.

10.54. பசியால் பீடிக்கப்பட்ட அவன் கோபமும் மோகமும் மேலிட்டவனுய்த் திருடனைப் போல் அப்பசுவைக் கொன்முன். தன் பசு கொல்லப்பட்டதைக் கண்ட வசிஷ்டர் கோபம் மூண்டு அவனைப்பார்த்துப் பின்வருமாறு கூறினுர்.

10.55. 'துராத்மாவே! பிசாசைப் போல் பசுவைக் கொன்று எவ்வளவு பெரிய பாவம் செய்துவிட்டாய். இதனுல் உன்மேல் கொடிய சாபங்களாகிய ஈட்டிகள் மூன்று விரைவில் விழட்டும்.

गोवधाहार हरणात् पितुः क्रोधात्तथा भृशम् ।
त्रिशंकुरिति नाम्ना वै भुवि ख्यातो भविष्यसि ॥
पिशाचरूप-मात्मानं दर्शयन्सर्वदेहिनाम् ॥ १०. ५६ ॥

सत्यव्रतस्तथा शप्तः पिशाचत्वमवाप्तवान् ।
तस्मिन्नेवाश्रमे तस्थौ देवीभक्तपरायणः ॥ ११. २ ॥

कदाचिन्नृपतिस्तत्र जप्त्वा मन्त्रं नवाक्षरम् ।
होमार्थं ब्राह्मणान् गत्वा प्रणम्योवाच भक्तितः ॥ ११. ३ ॥

सत्यव्रतोऽहं नृपतेः पुत्रो ब्रह्मविदांवराः ।
कार्यं मम विधातव्यं सर्वथा सुखहेतवे ॥ ११. ६ ॥

10.56. 'ஆகாரத்திற்காகப் பசுவைக் கொன்றது, பிராம்மணபத்னியை அபகரித்தது, தந்தையின் கடுங்கோபத்திற்காளானது ஆகிய மூன்று பாவங்களால் நீ இப்புவியில் த்ரிசங்கு எனப் பெயரெடுத்து எல்லோருக்கும் உன்னுடைய பிசாசு ருபத்தைக் காட்டிக் கொண்டு அலேவாய்.'

11.2. அவ்வாறு சபிக்கப்பட்ட ஸத்யவிரதன் பிசாசு வடிவத்தை அடைந்தான். தான் முன்னிருந்த ஆசிரமத்திலேயே இருந்து கொண்டு (ஏதோ பூர்வ புண்ணியவசத்தால்) தேவிபக்தியில் ஈடுபடுபவனுயினுன்.

11.3. ஒரு சமயம் அவ்வரச குமாரன் நவாக்ஷரீ மந்த்ர ஜபம் செய்துவிட்டு ஹோமம் செய்வதற்காக பிராம்மணர்களே பக்தியுடன் நாடி நமஸ்கரித்து அவர்களிடம் பின் வருமாறு கூறினுன்.

11.6. 'வேதவிற்பன்னர்களே! நான் அரசபுத்திரன், ஸத்யவிரதன், எனக்குச் சுகத்தைத் தரக்கூடிய காரியத்தை நீங்கள் எப்படியாவது நடத்தித் தரவேண்டும்'.

तच्छ्रुत्वा ब्राह्मणास्तत्र तमूचुर्नृपतेः सुतम् ।
शप्तस्त्वं गुरुणा प्राप्तं पिशाचत्वं त्वयाऽधुना ॥ ११.७ ॥

न यागार्होऽसि तस्मात्त्वं वेदेष्वनधिकारतः ।
पिशाचत्वमनुप्राप्तं सर्वलोकेषु गर्हितम् ॥ ११.८ ॥

तन्निशम्य वचस्तेषां राजा दुःखमवापह ।
धिग्जीवितमिदं मेऽद्य किं करोमि वने स्थितः ॥ ११.९ ॥

पित्रा चाहं परित्यक्तः शप्तश्च गुरुणा भृशम् ।
राज्याद्भ्रष्टः पिशाचत्व-मनुप्राप्तः करोमि किम् ॥ ११.१० ॥

तदा पृथुतरां कृत्वा चितां काष्ठैर्नृपात्मजः ।
सस्मार चण्डिकां देवीं प्रवेशमनुचिन्तयन् ॥ ११.११ ॥

11.7. பிராம்மணர்கள் அவ்வரசபுத்திரனுடைய வார்த்தையைக் கேட்டு அவனிடம் பின்வருமாறு கூறினர்கள். 'நீ குருவால் சபிக்கப்பட்டுள்ளாய். இப்பொழுது உன்னல் பிசாசு வடிவம் அடையப்பட்டுளது.

11.8. 'ஆகையால் நீ யாகம் செய்யத் தகுதி உடையவனல்லன். வேதங்களில் அதிகாரமில்லாதவன். எல்லா உலகங்களிலும் இகழப்படும் பிசாசுத் தன்மை உன்னல் அடையப்பட்டுள்ளது.'

11.9. அவ்வரசபுத்திரன் அவர்கள் சொல்லியதைக் கேட்டு துக்கமடைந்தான். 'இவ்வாழ்வைச் சுட வேண்டும். வனத்திலிருந்து கொண்டு இப்பொழுது நான் என்ன செய்வேன் ?

11.10. 'தந்தையால் தள்ளிவிடப்பட்டேன். குருவால் மிகுதியும் சபிக்கப்பட்டேன். இராஜ்யத்திலிருந்து வெளியேற்றப்பட்டேன். பிசாசத்தன்மையும் அடைந்துள்ளேன். என்ன செய்வேன் ?'

11.11. அரசகுமாரன் மிகப் பெரிதாகச் சிதையை விறகுகளால் அடுக்கி அதில் புக எண்ணிக் கொண்டு சண்டிகாதேவியை தியானித்தான்.

ज्ञात्वा भगवती तं तु मर्तुकामं महीपतिम् ।
आजगाम तदाकाशं प्रत्यक्षं तस्य चाग्रतः ।। ११. १२ ।।

देव्युवाच —

किं ते व्यवसितं साधो हुताशे मा तनुं त्यज ।
स्थिरो भव महाभाग पिता ते जरसान्वितः ।। ११. १५ ।।

राज्यं दत्त्वा वने तुभ्यं गन्तास्ति तपसे किल ।
विषादं त्यज हे वीर परश्वोऽहनि भूपते ।। ११. १६ ।।

नेतुं त्वामागमिष्यन्ति सचिवाश्च पितुस्तव ।
मत्प्रसादात् पिता च त्वामभिषिच्य नृपासने ।
जित्वा कामं ब्रह्मलोकं गमिष्यत्येष निश्चयः ।। ११. १७ ।।

11.12. அவன் உயிரைவிட விரும்பியதை அறிந்த பகவதி அவன் முன் ஆகாயத்தில் பிரத்யக்ஷமாய் எழுந்தருளினாள்.

தேவி கூறியது—

11.15. ஸாதுவே! என்ன நிச்சயித்தாய்? நெருப்பில் உயிரைவிடாதே. பாக்கியசாலியே! தைரியத்தைக் கைக்கொள். உன் தந்தை மூப்பை அடைந்து விட்டார்.

11.16—17. உனக்கு இராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு வனத்திற்குத் தவத்திற்குச் செல்லப் போகிறார். மனவருத்தத்தை விடு. வீரா! நாளையன்று மறுநாள் உன் தந்தையின் மந்திரிமார்கள் உன்னையழைத்துப் போக வரப் போகிறார்கள். என்னருளால் அரசபீடத்தில் உனக்கு அபிஷேகம் செய்துவிட்டு ஆசைகளை ஜயித்து உன் தந்தை பிரம்மலோகம் செல்வார்; இது நிச்சயம்.

इत्युक्त्वा तं तदा देवी तत्रैवान्तरधीयत ।
अयोध्यायां तदाऽऽगत्य नारदेन महात्मना ॥
वृत्तान्तः कथितः सर्वो राज्ञे सत्वरमादितः ॥ ११. १८ ॥

श्रुत्वा राजाऽथ पुत्रस्य तं तथा मरणोद्यमम् ।
खेदमाधाय मनसि शुशोच बहुधा नृपः ॥ ११. १९ ॥

अभिषिच्य सुतं राज्ये औरसं पालनक्षमम् ।
वनं यास्यामि शान्तोऽहं तपसे कृतनिश्चयः ॥ ११. २७ ॥

इत्युक्त्वा मन्त्रिणः सर्वान् प्रेषयामास पार्थिवः ।
तस्यैवानयनार्थं हि प्रीतिप्रवणमानसः ॥ ११. २८ ॥

ते गत्वा तं समाश्वास्य मन्त्रिणः पार्थिवात्मजम् ।
अयोध्यायां महात्मानं मानपूर्वं समानयन् ॥ ११. २९ ॥

11.18. இவ்வாறு கூறிவிட்டு தேவி அங்கேயே அப்பொழுதே மறைந்தாள். மகாத்மாவாகிய நாரதர் அயோத்திக்குச் சென்று இந்த விருத்தாந்தம் அனைத்தையும் ஆதியிலிருந்து சீக்கிரமே அரசனுக்குத் தெரிவித்தார்.

11.19. புத்திரன் உயிரை விட முயன்றதைக் கேட்ட அரசன் மனதில் கவலைமிக்கவனாய் வெகுவாகத் துக்கித்தான்.

11.27. 'என் வயிற்றில் பிறந்தவனும் ஆளும் சக்தி உடையவனுமான என் குமாரனை இராஜ்யத்தில் அபிஷேகம் செய்துவிட்டு மனவமைதியுடன் தவஞ் செய்ய நிச்சயித்து நான் வனம் செல்லுகிறேன்'.

11.28. என்றிவ்வாறு கூறிவிட்டு அரசன் மந்திரிகளனைவரையும் அவனை அழைத்து வருவதற்கு அன்பு பொங்கும் மனத்துடன் அனுப்பி வைத்தான்.

11.29. அம் மந்திரிகள் சென்று அரசகுமாரனுக்குத் தேறுதல் கூறி அம்மகாத்மாவை மரியாதையுடன் அயோத்திக்கு அழைத்து வந்தனர்.

पुण्येऽह्नि विधिवत्तस्मै ददावासनमुत्तमम्।
अभिषिच्य सुतं राज्ये त्रिशंकुं विधिवत्पिता ॥ १२. ४ ॥

राजोवाच —

कथं मुक्तः पिशाचत्वादित्येतत्संशयः प्रभो।
न सिंहासनयोग्यो हि भवेच्छापसमन्वितः ॥ १२. ९ ॥

व्यास उवाच —

वसिष्ठेन च शप्तोऽसौ सद्यः पैशाचतां गतः।
दुर्वेषश्चाति दुर्धर्षः सर्वलोकभयंकरः ॥ १२. ११ ॥

यदैवोपासिता देवी भक्त्या सत्यव्रतेन ह।
तया प्रसन्नया राजन् दिव्यदेहः कृतः क्षणात् ॥ १२. १२ ॥

12.4. ஒரு சுபதினத்தில் அரசன் தன் புத்திரன் த்ரிசங்குவை முறைப்படி அபிஷேகம் செய்து அவனுக்கு ஒப்பற்ற அரசபீடத்தை விதிப்படி அளித்தான்.

ஜனமேஜயன் கூறியது—

12.9. பிரபுவே! பிசாசுத்தன்மையினின்று எப்படி அவன் விடுபட்டான் என்பது எனக்குச் சந்தேகம். சாபத்துடன் கூடியிருப்பவன் சிம்மாஸனமேறுவதற்குத் தகுதியற்றவனன்றோ?

வியாஸர் கூறியது—

12.11-12. அரசே! வசிஷ்டரால் சபிக்கப்பட்டு உடனே பிசாசுத்தன்மையடைந்தவனும் கொடிய உருப்படைத்தவனும் எல்லோரும் கண்டு பயப்படக் கூடியவனுமாயினும் அசைவுறுமல் எப்பொழுது அந்த ஸத்தியவிரதன் பக்தியுடன் தேவியை உபாசிப்பவனுயினுனே அப்பொழுது அவன் பிரஸன்னமாகிய தேவியால் ஒரு நொடியில் திவ்விய தேகம் படைத்தவனுய்ச் செய்யப்பட்டான்.

पिशाचत्वं गतं तस्य पापं चैव क्षयं गतम्।
विपाप्मा चातितेजस्वी सम्भूतस्तत्कृपामृतात् ॥ १२. १३ ॥

वसिष्ठोऽपि प्रसन्नात्मा जातः शक्तिप्रसादतः।
पितापि च बभूवास्य प्रेमयुक्तस्त्वनुग्रहात् ॥ १२. १४ ॥

राज्यं शशास धर्मात्मा मृते पितरि पार्थिवः।
ईजे च विविधैर्यज्ञै-र्देवदेवीं सनातनीम् ॥ १२. १५ ॥

तस्य पुत्रो बभूवाथ हरिश्चन्द्रः सुशोभनः।
लक्षणैः शास्त्र-निर्दिष्टैः संयुतश्चातिसुन्दरः ॥ १२. १६ ॥

युवराजं सुतं कृत्वा त्रिशंकुः पृथिवीपतिः।
मानुषेण शरीरेण स्वर्गं भोक्तुं मनोदधे ॥ १२. १७ ॥

12.13. தேவியின் கிருபையாகிற அமுதத்தால் அவனுடைய பிசாசுத்தன்மை அகன்று விட்டது, அவனுடைய பாவமும் அழிந்துவிட்டது. பாவமற்றவனாய் ஒளிமிகுந்தவனாய் அவன் விளங்கினான்.

12.14. பராசக்தியின் அருளால் வசிஷ்டரும் சந்தோஷமடைந்தார். அதே அனுக்கிரகத்தால் தந்தையும் பிரியம் மிக்கவரானார்.

12.15. தந்தை இறந்தபின் அவன் தர்மாத்மாவாகிய அரசனாய் இராஜ்யத்தை ஆண்டான். ஸநாதனியான தேவதேவியைப் பலவகையான யக்ஞங்களால் பூஜித்தான்.

12.16. மங்கள வடிவினனும் சாஸ்திரங்கள் கூறும் லக்ஷணங்கள் நிறைந்தவனுமான ஹரிச்சந்திரன் அவனுக்குப் புத்திரனாய்த் தோன்றினான்.

12.17. பூபாலனாகிய த்ரிசங்கு (நாளடைவில்) தனது புத்திரனை யுவராஜாவாகச் செய்து விட்டு மனித சரீரத்துடன் தேவலோக சுகத்தை அனுபவிக்க மனதில் ஆசை கொண்டான்.

वसिष्ठस्याश्रमं गत्वा प्रणम्य विधिवन्नृपः।
उवाच वचनं प्रीतः कृतांजलिपुटस्तदा ।। १२. १८ ।।

राजोवाच —

ब्रह्मपुत्र महाभाग सर्वमन्त्रविशारद।
विज्ञप्तिं मे सुमनसा श्रोतुमर्हसि तापस ।। १२. १९ ।।

इच्छा मेऽद्य समुत्पन्ना स्वर्गलोकसुखाय च।
अनेनैव शरीरेण भोगान् भोक्तु-ममानुषान् ।। १२. २० ।।

समर्थोऽसि मुनिश्रेष्ठ कुरु कार्यं ममाधुना।
प्रापयाऽऽशु मखं कृत्वा देवलोके दुरासदम् ।। १२. २३ ।।

12.18. அவ்வரசன் வசிஷ்டருடைய ஆசிரமம் சென்று அவரை முறைப்படி வணங்கிக் கைகூப்பிக் கொண்டு பிரீதியுடன் பின்வருமாறு கூறினான்.

அரசன் கூறியது—

12.19. பிரம்மபுத்திரரே! மகாபாக்கியசாலியே! மந்திரங்களனைத்திலும் வல்லவரே! தபஸ்வியே! என்னுடைய விக்ஞாபனத்தை நல்ல மனதுடன் கேட்டருள வேண்டும்.

12.20. இந்தச்சரீரத்துடன் மனிதர்களுக்குக் கிட்டாத சுவர்க்கலோக போகங்களையும் சுகத்தையும் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசை மனதில் எழுந்துள்ளது.

12.23. முனிசிரேஷ்டரே! நீர் திறமைவாய்ந்தவர். எனக்கு இக்காரியத்தை இப்பொழுது செய்து வைக்க வேண்டும். தேவலோகத்தில் அடைதற்கரிய இதை ஒரு யாகம் செய்வித்து எனக்குக் கூட்டிவைக்க வேண்டும்.

वसिष्ठ उवाच —

राजन् मानुषदेहेन स्वर्गे वासः सुदुर्लभः।
मृतस्य हि ध्रुवं स्वर्गः कथितः पुण्यकर्मणा ।। १२. २४ ।।

व्यास उवाच —

इत्याकर्ण्य वचस्तस्य राजा परमदुर्मनाः।
उवाच वचनं भूयो वसिष्ठं पूर्वरोषितम् ।। १२. २६ ।।

न त्वं याजयसे ब्रह्मन् गर्वविशाच्च मां यदि।
अन्यं पुरोहितं कृत्वा यक्ष्येऽहं किल सांप्रतम् ।। १२. २७ ।।

तच्छ्रुत्वा वचनं तस्य वसिष्ठः कोपसंयुतः।
शशाप भूपतिं चेति चण्डालो भव दुर्मते ।। १२. २८ ।।

வசிஷ்டர் கூறியது—

12.24. அரசே! மனிததேகத்துடன் சுவர்க்கத்தில் வாசம் அடைதற்கரிது. இறந்தவனுக்கே புண்ணியகர்மாவால் சுவர்க்கம் என்று நிச்சயமாய்க் கூறப்பட்டுள்ளது.

வியாஸர் கூறியது—

12.26. அவருடைய இவ்வார்த்தையைக் கேட்டு அரசன் மிகவும் மனம் நொந்தவனாய் முன்னாலேயே கோபமடைந்திருந்த வசிஷ்டரிடம் மீண்டும் பின்வருமாறு கூறலானான்.

12.27. 'பிராம்மணரே! கர்வம் மேலிட்டதால் நீங்கள் எனக்கு யாகம் செய்விக்காவிட்டால் வேறொருவரைப் புரோகிதராய்ச் செய்துகொண்டு நான் இப்பொழுது யாகம் செய்யப் போகிறேன்.'

12.28. அரசனுடைய அவ்வார்த்தையைக் கேட்ட வசிஷ்டர் கோபத்துடன் 'புத்தி கெட்டவனே! நீ சண்டாளனாகப் போகக் கடவாய்' என்று அவனைச் சபித்தார்.

45

त्रिशंकुः पक्कणे दीनः संस्थितः श्वपचाकृतिः ।
आगच्छन्तं मुनिं दृष्ट्वा विस्मितोऽसौ नराधिपः ॥
दण्डवन्निपपातोर्व्यां पादयोस्तरसा मुनेः ॥ १३.५३ ॥

राजोवाच —

मया संप्रार्थितः पूर्वं वसिष्ठो मखहेतवे ।
मां याजय मुनिश्रेष्ठ करोमि मखमुत्तमम् ॥ १३. ५७ ॥

यथेष्टं कुरु विप्रेन्द्र यथा स्वर्गं व्रजाम्यहम् ।
अनेनैव शरीरेण शक्रलोकं सुखालयम् ॥ १३. ५८ ॥

कोपं कृत्वा वसिष्ठोऽसौ मामाहेति सुदुर्मते ।
मानुषेण हि देहेन स्वर्गवासः कुतस्तव ॥ १३. ५९ ॥

13.53. சண்டாள ரூபத்தையடைந்த திரிசங்கு எளிமையுடன் சேரியிலிருக்கையில் முனிவர் (விசுவாமித்திரர்) வருவதைக் கண்ணுற்றுத் தரையில் தடிக்கம்பு போல் விரைந்து அவருடைய பாதங்களில் விழுந்தான்.

அரசன் கூறியது—

13.57. ''யாகத்தின் பொருட்டு என்னால் முன்பு வசிஷ்டர் பின்வருமாறு வேண்டிக் கொள்ளப் பட்டார்: 'முனிசிரேஷ்டரே! நான் உத்தமமான யாகம் செய்ய விரும்புகிறேன். எனக்கு யாகத்தை நடத்திக் கொடுங்கள்.

13.58. ''பிராம்மணசிரேஷ்டரே! நான் இந்த சரீரத்துடனேயே இன்பம் நிறைந்ததும் இந்திரலோகமுமான சுவர்க்கத்திற்குப் போக விரும்புகிறேன். அதற்கு வேண்டியதை உங்கள் இஷ்டப்படி செய்யவேண்டும்.'

13.59. ''வசிஷ்டர் கோபங்கொண்டு 'புத்தி கெட்டவனே! மானிடசரீரத்துடன் சுவர்க்க வாசம் உனக்கு எங்ஙனம் கிட்டும்?' என்று என்னிடம் கூறினார்.

पुनर्मयोक्तो भगवान्स्वर्गलुब्धेन चाऽनघ।
अन्यं पुरोहितं कृत्वा यक्ष्येऽहं यज्ञमुत्तमम् ॥ १३. ६० ॥
तदा तेनैव शप्तोऽहं चाण्डालो भव पामर।
इत्येतत्कथितं सर्वं कारणं शापसंभवम् ॥ १३. ६१ ॥
मम दुःखविनाशाय समर्थोऽसि मुनीश्वर।
कौशिकोऽपि निराकर्तुं शापं तस्य व्यचिन्तयत् ॥ १३. ६२ ॥
विचिन्त्य मनसा कृत्यं गाधिसूनुर्महातपाः।
प्रकल्प्य यज्ञसंभारान् मुनी-नामन्त्रयत्तदा ॥ १४. १ ॥
मुनयस्तं मखं ज्ञात्वा विश्वामित्र-निमन्त्रिताः।
नाऽऽगताः सर्व एवैते वसिष्ठेन निवारिताः ॥ १४. २ ॥

13.60. ''சுவர்க்கத்தில் பேராசை கொண்ட என்னுல் வசிஷ்ட பகவான் மேலும் பின்வருமாறு கூறப்பட்டார்: 'பாவமற்றவரே! வேருெருவரைப் புரோகிதராய்க் கொண்டு நான் உத்தமமான யாகத்தைச் செய்யப் போகிறேன்.'

13.61. ''அப்பொழுது 'அறிவில்லாதவனே! நீ சண்டாளனுகப்போ' என்று அவரால் நான் சபிக்கப்பட்டேன். சாபம் எற்பட்ட காரணம் முழுவதும் இவ்வாருகக் கூறிவிட்டேன்.

13.62. ''முனீசுவரரே! என்னுடைய துக்கத்தைப் போக்குவதற்கு நீர் வல்லவர்.'' கௌசிகர் அவனுடைய சாபத்தை நீக்குவதற்கு வழியைச் சிந்தித்தார்.

14.1. காதிபுத்திரரும் மகாதபஸ்வியுமான விசுவாமித்திரர் செய்ய வேண்டியதை மனதில் நிச்சயித்துக்கொண்டு யாகத்திற்கு வேண்டிய பொருள்களை ஏற்பாடு செய்து முனிவர்களை அழைத்தார்.

14.2. அந்த யாகத்தைப் பற்றி அறிந்த முனிவர்கள் அனைவரும் விசுவாமித்திரரால் அழைக்கப்பட்டும் வசிஷ்டரால் தடுக்கப்பட்டவர்களாய் வரவில்லை.

गाधिसूनुस्तदाज्ञाय विमनाश्चातिदुःखितः ।
आजगामाश्रमं तत्र यत्रासौ नृपतिः स्थितः ॥ १४. ३ ॥

तमाह कौशिकः क्रुद्धो वसिष्ठेन निवारिताः ।
नागता ब्राह्मणाः सर्वे यज्ञार्थं नृपसत्तम ॥ १४. ४ ॥

पश्य मे तपसः सिद्धिं यथा त्वं सुरसद्मनि ।
प्रापयामि महाराज वांछितं ते करोम्यहम् ॥ १४. ५ ॥

इत्युक्त्वा जलमादाय हस्तेन मुनिसत्तमः ।
ददौ पुण्यं तदा तस्मै गायत्रीजपसंभवम् ॥ १४. ६ ॥

दत्त्वाऽथ सुकृतं राज्ञे तमुवाच महीपतिम् ।
यथेष्टं गच्छ राजर्षे त्रिविष्टप-मतन्द्रितः ॥ १४. ७ ॥

पुण्येन मम राजेन्द्र बहुकालार्जितेन च ।
याहि शक्रपुरीं प्रीतः स्वस्ति तेऽस्तु सुरालये ॥ १४. ८ ॥

14.3. விசுவாமித்திரர் அதையறிந்து துக்கம் மேலிட்டவராய் அரசன் இருந்த ஆசிரமத்திற்குச் சென்றார்.

14.4. 'அரச சிரேஷ்டரே! வசிஷ்டரால் தடுக்கப்பட்டு பிராம்மணர்கள் அனைவரும் யாகத்திற்கு வரவில்லை' என்று கோபத்துடன் விசுவாமித்திரர் கூறினார்.

14.5. 'மகாராஜனே! என் தவத்தின் சித்தியை நீர் பாரும். உம்மை நான் தேவலோகத்தை அடையச் செய்கிறேன். உமது விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைக்கிறேன்.'

14.6. இவ்வாறு கூறிவிட்டுக் கையில் ஜலத்தை எடுத்துக் கொண்டு முனிசிரேஷ்டர் காயத்ரீ ஜபத்தால் ஸம்பாதித்திருந்த புண்ணியத்தை அவனுக்கு தானம் செய்தார்.

14.7–8. அரசனுக்கு புண்ணியத்தைக் கொடுத்துவிட்டு 'ராஜரிஷியே! தாமதமின்றி நீர் இஷ்டப்படி சுவர்க்கம் செல்லலாம். வெகுகாலமாய்ச் சேகரித்த என் புண்ணியத்தால் மகிழ்வுடன் நீர் இந்திரனுடைய பட்டணத்திற்குப் போகலாம். தேவலோகத்தில் உமக்கு மங்களமுண்டாகட்டும்' என்று கூறினார்.

इत्युक्तवति विप्रेन्द्रे त्रिशंकुस्तरसा ततः ।
उत्पपात यथा पक्षी वेगवांस्तपसो बलात् ॥ १४. ९ ॥

सहसोत्थाय शक्रस्तमपश्यत्पुरुषाधमम् ।
ज्ञात्वा त्रिशंकुमपि स निर्भर्त्स्य तरसाऽब्रवीत् ॥ १४. १२ ॥

श्वपच क्व समायासि देवलोके जुगुप्सितः ।
याहि शीघ्रं ततो भूमौ नाऽत्र स्थातुं त्वयोचितम्
॥ १४. १३ ॥

इत्युक्तः स्खलितः स्वर्गाच्छक्रेणामित्रकर्शन ।
निपपात तदा राजा क्षीणपुण्यो यथाऽमरः ॥ १४. १४ ॥

पुनश्चुक्रोश भूपालो विश्वामित्रेति चासकृत् ।
पतामि रक्ष दुःखार्तं स्वर्गाच्छलित-माशुगम् ॥ १४. १५ ॥

14.9. இப்படி கூறப் பெற்ற அரசசிரேஷ்டனுன த்ரிசங்கு விரைவில் அங்கிருந்து ஒரு பக்ஷியைப் போல் கிளம்பி தவத்தின் வலிமையால் வேகமாகச் சென்ருன்.

14.12. த்ரிசங்குவைக் கண்டு எழுந்த இந்திரன் அவன் மனிதரில் கடையோனென உணர்ந்து அவனே பய முறுத்திப் பின்வருமாறு விரைந்து கூறினுன்.

14.13. 'சண்டாளா! வெறுக்கப்பட்ட நீ எங்கே தேவ லோகத்திற்கு வருகிருய்? சீக்கிரமாக பூமிக்குத் திரும்பிப் போ. இங்கு இருப்பதற்கு நீ தகுதியுடையவனல்லன்'.

14.14. பகைவரையழிப்பவனே! இங்ஙனம் சொல்லி சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்ட அரசன் புண்ணியந் தேய்ந்த தேவனைப் போல் அப்பொழுது கீழ் நோக்கி வீழ்ந்தான்.

14.15. அவ்வரசன் பலமுறை 'விசுவாமித்ரரே! நான் விழுகிறேன்' என்று கதறினுன். 'சுவர்க்கத்திலிருந்து நழுவி வேகமாய் விழுபவனும் துன்பத்தால் பீடிக்கப்பட்ட வனுமான என்னைக் காப்பாற்றும்.'

तस्य तत्क्रन्दितं राजन् पततः कौशिको मुनिः ।
श्रुत्वा तिष्ठेति होवाच पतन्तं वीक्ष्य भूपतिम् ।। १४. १६ ।।

वचनात्तस्य तत्रैव स्थितोऽसौ गगने नृपः ।
मुनिस्तपः प्रभावेण चलितोऽपि सुरालयात् ।। १४. १७ ।।

विश्वामित्रोऽप्यपः स्पृष्ट्वा चकारेष्टिं सुविस्तराम् ।
विधातुं नूतनाम् सृष्टिं स्वर्गलोकं द्वितीयकम् ।। १४. १८ ।।

तस्योद्यमं तथा ज्ञात्वा त्वरितस्तु शचीपतिः ।
तत्राजगाम सहसा मुनिं प्रति तु गाधिजम् ।। १४. १९ ।।

किं ब्रह्मन् क्रियते साधो कस्मात्कोपसमाकुलः ।
अलं सृष्टचा मुनिश्रेष्ठ ब्रूहि किं करवाणि ते ।। १४. २० ।।

14.16. அரசே! அவ்வாறு விழும் அவனுடைய கதறலைக் கேட்ட கௌசிக முனிவர் வீழ்ந்து கொண்டிருக்கும் அரசனை நோக்கி 'நில்' என்று கூறினார்.

14.17. அவருடைய வசனத்தால் அரசன் ஆகாயத்தில் அங்கேயே நின்றான். தேவலோகத்திலிருந்து தள்ளப்பட்டபோதிலும் முனிவருடைய தவமகிமையால் அங்ஙனம் நின்றான்.

14.18. விசுவாமித்திரர் ஜலத்தைத் தொட்டு இரண்டாவதாகப் புதியதொரு சுவர்க்கலோகத்தைச் சிருஷ்டிப்பதற்காக விஸ்தாரமான ஒரு யாகத்தைச் செய்யத் தொடங்கினார்.

14.19. அவருடைய அம்முயற்சியையறிந்த இந்திரன் விரைவில் அம் முனிவரிருக்குமிடம் வந்து சேர்ந்தான்.

14.20. 'பிராம்மணரே! ஸாதுவே! என்ன செய்கிறீர்? எதற்காகக் கோபக்கலக்கம்? முனிசிரேஷ்டரே! சிருஷ்டி முயற்சிபோதும். நான் உமக்கு என்ன செய்ய வேண்டும், சொல்லும்.'

विश्वामित्र उवाच —

स्वं निवासं महीपालं च्युतं त्वद्भुवनाद्विभो।
नयस्व प्रीतियोगेन त्रिशकुं चातिदु:खितम् ॥ १४. २१ ॥

व्यास उवाच —

तस्य तं निश्चयं ज्ञात्वा तुराषाडतिशंकित:।
ततो बलं विदित्वोग्र-मोमित्योवाच वासव: ॥ १४. २२ ॥

दिव्यदेहं नृपं कृत्वा विमानवरसंस्थितम्।
आपृच्छ्य कौशिकं शक्रोऽगमन्निजपुरीं तदा ॥ १४. २३ ॥

गते शक्रे तु वै स्वर्गं त्रिशंकुसहिते तत:।
विश्वामित्र: सुखं प्राप्य स्वाश्रमे सुस्थिरोऽभवत् ॥ १४. २४ ॥

हरिश्चन्द्रोऽथ तच्छ्रुत्वा विश्वामित्रोपकारकम्।
पितु: स्वर्गमनं कामं मुदितो राज्यमन्वशात् ॥ १४. २५ ॥

விசுவாமித்திரர் கூறியது—

14.21. விபுவே! உம்முடைய உலகிலிருந்து நழுவி மிகுந்த துக்கத்திலாழ்ந்திருக்கும் த்ரிசங்கு மகாராஜனை பிரீதியுடன் உமது வாசஸ்தானத்திற்கு அழைத்துச் செல்லும்.

வியாஸர் கூறியது—

14.22. அவருடைய உக்கரமான பலத்தையும் பிடிவாதத்தையும் அறிந்த இந்திரன் அதற்கு பயந்து 'அப்படியே ஆகட்டும்' என்று கூறினான்.

14.23. பிறகு அரசனுக்கு திவ்யதேகத்தைக் கொடுத்து விமானத்தில் உட்காரவைத்து கௌசிகரிடம் விடை பெற்றுக் கொண்டு இந்திரன் தன்னுடைய பட்டணம் சென்றான்.

14.24. த்ரிசங்குவுடன் இந்திரன் சுவர்க்கம் சென்ற பின் விசுவாமித்திரர் மனதில் நிம்மதியுடன் தமதாசிரமத்தில் நிலை பெற்றுச் சுகமாயிருந்தார்.

14.25. பிறகு விசுவாமித்திரரின் உதவியால் தந்தை விரும்பியபடி சுவர்க்கம் சென்றதைக்கேட்டு ஹரிச்சந்திரன் சந்தோஷமடைந்தவனாய் அரசாட்சியை நடத்தினான்.

சூரிய வம்ச சரித்திரம் (ஹரிச்சந்திரன்)

த்ரிசங்கு புத்திரன் ஹரிச்சந்திரனுக்கு வெகு நாள் கடந்தும் புத்திரன் பிறக்கவில்லை. அவன் வசிஷ்டரிடம் சென்று அக்குறை நீங்க ஏதாவது ஒரு வழி கூற வேண்டு மென்று பிரார்த்தித்தான். அவர் வருணதேவனை உபாசிக்கச் சொல்லவே அப்படியே கங்கைக்கரை சென்று வருணனைக் குறித்துத் தவஞ் செய்தான். வருணபகவான் பிரத்ய க்ஷமாகி 'உன் இஷ்டப்படி நல்லபுத்திரன் பிறப்பான். ஆனால் புத்திரனை யாகத்தில் நீ எனக்கே அளித்து விட வேண்டும். அப்படியானல் வரங்கொடுக்கிறேன்' என்றான். ஹரிச்சந்திரன் பிள்ளையில்லை என்ற குறை நீங்கினல் போதும் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம் என்று அதற்கொப்பினன்.

பிள்ளை பிறந்தது. சில நாள் கழித்து வருணன் பிராம் மண வேஷத்தில் வந்து, 'நீ வாக்களித்தபடி பிள்ளையைக் கொடு' என்று கேட்டான். 'கொடுக்கிறேன். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளும்' என்றான். புத்திர னுக்கு 'லோஹிதன்' என்று பெயர் வைத்து நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்து வந்தான். கொஞ்சகாலங்கழித்து மறுபடி வருணன் வந்தான். ஹரிச் சந்திரன் 'உபநயனம் செய்தபின் கொடுக்கிறேன்' என்றான். வருணன் போனபின் 'இவரிடம் நான் பிள்ளை பெற்றதும் போதும், இப்போது இவராற்படும் பாடும் போதும். அன்று பிள்ளை கொடுக்குந் தெய்வமாய் வந்த இவர் இன்று அவனுக்கு யமன் போல் வருகின்றார்' என்று எண்ணி வருந்தினன். உபநயனமானதும் வருணன் வந்தான். 'ஸமாவர்த்தனம் செய்யாவிடில் உபநயனம் செய்தும் பயனில்லை; அது ஒன்றுமட்டும் முடியும் வரை பொறுத்தரு ளும்' என்று அரசன் வேண்டினன். வருணபகவான் 'நீ வெகு சாமர்த்தியசாலி. நான் வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி என்னை ஏமாற்றி வருகிறாய். உன் வார்த்தைப்படி ஸமாவர்த்தனம் முடிந்ததும் வேறொ ன்றுஞ் சொல்லாமல் தந்துவிடு. இப்போது நான் போய் வருகிறேன்' என்றான்.

இதை யெல்லாம் இப்பொழுது உணர்ந்து கொண்ட லோஹிதன் 'நான் இனி இங்கிருப்பேனாயின் வாழ முடியாது. வருணன் விடப்போவதில்லை. ஆகையால் நான் ஒடிப்போவது நலம்' என்று எண்ணி நாட்டைவிட்டு ஓடிவிட்டான். பிறகு வருணன் வந்தான். அரசன் அவனிடம் 'நீர் அடிக்கடி

வந்து போகும் காரணத்தை அறிந்து கொண்டு உமக்குப் பயந்து அவன் ஓடிப் போய் விட்டான்' என்ருன். வருணன் கோபங் கொண்டு அவனுக்கு மகோதரம் எனும் வியாதி வரவேண்டும் என்று சாபங்கொடுத்தான்.

வியாதியால் வருந்திய அரசன் சுனச்சேலன் எனும் ஒரு ஏழைப் பிராம்மணப் பிள்ளையைப் பணங்கொடுத்து வாங்கி அவனை வருணனுக்கு அளிக்க முயன்ருன். அவனுக்கு வருணனைத் துதிக்கும் மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்து அதன் மூலம் வருணனே பிரீதியடைந்து அவனை விடுவிக்கும் படி அவனுடைய அம்மானுன விசுவாமித்திர மகரிஷி உதவி புரிந்தார். இப்பிள்ளையைப் பணத்திற்கு வாங்கி வருணனுக்குக் கொடுக்க முயன்ற ஹரிச்சந்திரனிடம் அது முதல் விசுவாமித்திரருக்கு வெறுப்பு ஏற்பட்டது. வருணன் அரசனை மன்னித்துவிட்டான். அதன் பிறகு லோஹிதாஸன் தந்தையிடம் திரும்பிவந்தான். ஹரிச்சந்திரனுடைய துன்பம் ஒரு கொடிய கனவு போல் ஒருமாதிரி முடிவுற்றது.

॥ हरिश्चन्द्रोपाख्यानम् ॥

राजसूयं क्रतुवरं चकार नृपसत्तमः।
वसिष्ठं पूजयित्वाऽथ होतार-मकरोद्विभुः ॥ १७. ४५ ॥

समाप्ते त्वथ यज्ञेशे वसिष्ठोऽतीव पूजितः।
शक्रस्य सदनं रम्यं जगाम मुनिरादरात् ॥ १७. ४६ ॥

विश्वामित्रोऽपि तत्रैव वसिष्ठेन च संगतः।
मिलित्वा तौ स्थितौ देवसदने मुनिसत्तमाः ॥ १७. ४७ ॥

विश्वामित्र उवाच —

क्वेयं पूजा त्वया प्राप्ता महती मुनिसत्तम।
कृता केन महाभाग सत्यं ब्रूहि ममाऽन्तिके ॥ १७. ४८ ॥

ஹரிச்சந்திர உபாக்கியானம்

17.45–46. அரசசிரேஷ்டனான ஹரிச்சந்திரன் கிரதுக்களில் சிறந்த ராஜஸூய யாகத்தைச் செய்தான். அதில் வசிஷ்டரைப் பூஜித்து ஹோதாவாக வைத்துக் கொண்டான். உத்தமமான அந்த யாகம் முடிந்ததும் அரசனால் மிகவும் மரியாதை செய்யப் பெற்ற வசிஷ்டர் இந்திரனுடைய இருப்பிடமாகிய தேவலோகத்தைக் காண விரும்பி அங்கு சென்றார்.

17.47. அங்கு அவருக்கும் விசுவாமித்திரருக்கும் சந்திப்பு ஏற்பட்டது. அவ்விரு முனிசிரேஷ்டர்களும் சேர்ந்து சிறிது காலம் தேவலோகத்திலிருந்தனர்.

விசுவாமித்திரர் கூறியது (அவரணிந்திருந்த விருதைப் பார்த்து)—

17.48. முனிசிரேஷ்டரே! இந்தச் சிறந்த சன்மானம் எங்கு கிடைத்தது? மகாபாக்கியசாலியே, இது யாரால் அளிக்கப்பட்டது? என்னிடம் உண்மையைக் கூறும்.

वसिष्ठ उवाच —

यजमानोऽस्ति मे राजा हरिश्चन्द्रः प्रतापवान् ।
राजसूयः कृतस्तेन राज्ञा प्रवरदक्षिणः ॥ १७. ५० ॥

नेदृशोऽस्ति नृपश्चान्यः सत्यवादी धृतव्रतः ।
दाता च धर्मशीलश्च प्रजारंजनतत्परः ॥ १७. ५१ ॥

तस्य यज्ञे मया पूजा प्राप्ता कौशिकनन्दन ।
हरिश्चन्द्रसमो राजा न भूतो न भविष्यति ॥ १७. ५२ ॥

विश्वामित्र उवाच —

एवं स्तौषि नृपं मिथ्यावादिनं कपटप्रियम् ।
वंचितो वरुणो येन प्रतिश्रुत्य वरं पुनः ॥ १७. ५५ ॥

வசிஷ்டர் கூறியது—

17.50. என்னுல் யாகம் செய்விக்கப் பெற்றவர் பிரதாபவானுன ஹரிச்சந்திர மகாராஜா. மிகுந்த தக்ஷிணையுடன் அவ்வரசனுல் ராஜஸூய யாகம் செய்யப் பட்டது.

17.51. அவனைப் போல் ஸத்தியந்தவருதவனும், திடவிருதமுடையவனும், கொடையாளியும், தருமசீலனும் பிரஜைகளை மகிழ்விப்பதிலேயே ஊக்கங் கொண்டவனுமான வேறெருு அரசனும் இல்லை.

17.52. கௌசிக நந்தனரே! அவனுடைய யாகத்தில் என்னுல் இந்த சன்மானம் அடையப்பட்டது. ஹரிச் சந்திரனைப் போன்ற அரசன் இதுவரை இருந்ததில்லை, இனிமேலும் இருக்கப் போவதில்லை.

விசுவாமித்திரர் கூறியது—

17.55. வருணபகவானுக்கு வாக்குக் கொடுத்துப் பிறகு அவரை வஞ்சித்தவனும் பொய் சொல்லுபவனும் கபடத்தில் பிரியமுள்ளவனுமான அரசனை நீர் இவ்வாறு புகழ்கிறீர்.

अहं चेत्तं नृपं सद्यो न करोम्यतिसंस्तुतम् ।
असत्यवादिनं काम-मदातारं महाखलम् ॥ १७. ५७ ॥

आजन्मसंचितं सर्वं पुण्यं मम विनश्यतु ।
अन्यथा त्वत्कृतं सर्वं पुण्यं त्विति पणावहे ॥ १७. ५८ ॥

कलहं कृत्वा ततस्तौ तु विवदन्तौ मुनी तदा ।
स्वाश्रमं स्वर्गलोकाच्च गतौ परमकोपनौ ॥ १७. ५९ ॥

कदाचित्तु हरिश्चन्द्रो मृगयार्थं वनं ययौ ।
मध्याह्नसमये राजा संप्राप्तो विजने वने ॥ १८. ४३ ॥

तृषितः क्षुधितोऽत्यर्थं बभूव श्रान्तवाहनः ।
किं करोमि क्व गच्छामि न सहायोऽस्ति मे वने ॥ १८. ४५ ॥

17.57--58. உம்மால் அதிகமாய்ப் புகழப் பட்டவனும் மிகவும் துஷ்டனும் ஒன்றுங் கொடாதவனும் ஆகிய அவ் வரசனை நான் உடனே அஸத்தியாவாதியென நிரூபிக்காவிட்டால் நான் பிறந்ததிலிருந்து செய்து சேமித்த எனது புண்ணியம் முழுதும் அழிந்து போகட்டும். இன்றேல் உம்மால் செய்யப்பட்ட புண்ணியம் முழுதும் அழியட்டும். இப்படி ஒப்பந்தம் செய்து கொள்வோம்.

17.59. முனிவர்களிருவரும் விவாதம் செய்து இப்படிப் பந்தயம் போட்டுக் கொண்டு தேவலோகத்திலிருந்து மிகுந்த கோபத்துடன் தத்தம் ஆசிரமங்களுக்குச் சென்றனர்.

18.43. ஒரு சமயம் ஹரிச்சந்திரன் வேட்டையாடுவதற்காக வனஞ் சென்றான். நடுப்பகல் நேரத்தில் அரசன் ஜனசஞ்சாரமில்லாத ஒரு இடத்தை அவ்வனத்திலடைந்தான்.

18.45. பசியாலும் தாகத்தாலும் மிகவும் வாடித் தன் வாகனமும் களைப்படைந்ததாகி 'என்ன செய்வேன், எங்கு செல்வேன், வனத்தில் எனக்கு உதவி ஏதுமில்லையே' என்று யோசித்தான்.

एवं चिन्तयतस्तत्र विपिने जनवर्जिते ।
राजा चिन्तातुरोऽपश्यन्नदीं सुविमलोदकाम् ।। १८. ४६ ।।

वीक्ष्य तां मुदितो राजा पाययित्वा तुरंगमम् ।
अश्वादुत्तीर्य विमलं पपौ पानीयमुत्तमम् ।। १८. ४७ ।।

विश्वामित्रस्तु सम्प्राप्तो वृद्धब्राह्मणरूपधृक् ।
ननाम वीक्ष्य राजा तं प्रीतिपूर्वं द्विजोत्तमम् ।। १८. ४९ ।।

क्षुधितस्तृषितश्चाहं सैन्यभ्रष्टस्त्विहागतः ।
न जाने पुरमार्गं च तथा सैन्यगतिं मुने ।। १८. ५५ ।।

पन्थानं दर्शय विभो व्रजामि नगरं प्रति ।
ममात्र भाग्ययोगेन प्राप्तस्त्वं विजने वने ।। १८. ५६ ।।

18.46. இங்ஙனம் கவலைமிக்க அவ்வரசன் சிந்தித்து கொண்டிருக்கும் பொழுது ஜனமில்லாத அக்காட்டில் நல்ல தெளிந்த நீருடன் கூடிய ஒரு நதியைக் கண்ணுற்ருன்.

18.47. அதைக் கண்டு மகிழ்ந்து அரசன் குதிரைக்குத் தண்ணீர் காட்டி விட்டுக் குதிரையினின்று இறங்கித் தானும் உத்தமமான தண்ணீரைப் பருகினுன்.

18.49. கிழட்டுப் பிராம்மண வேஷத்தில் அங்கு விசுவாமித்திரர் வந்து சேர்ந்தார். அந்த பிராம்மண சிரேஷ்டரைக் கண்டதும் அரசன் அவரை நமஸ்கரித்தான்.

18.55. 'நான் பசியாலும் தாகத்தாலும் வாடுகிறேன். சைனியத்தினின்று பிரிந்து இங்கு வந்துள்ளேன். முனிவரே! சைனியம் போனவழி தெரியவில்லை. ஊறுக்குச் செல்லும் வழியும் தெரியவில்லை.

18.56. 'பிரபுவே! நகரத்திற்கு வழியைக் காட்டியருளும். என் பாக்கியவசத்தால் இங்கு இந்த ஜன நடமாட்டமில்லாத வனத்தில் உம்மையடைந்துள்ளேன்.

अयोध्याधिपतिश्चाहं हरिश्चन्द्रोऽतिविश्रुतः।
राजसूयस्य कर्ता च वांछितार्थप्रदः सदा ॥ १८. ५७ ॥

धनेच्छा यदि ते ब्रह्मन् यज्ञार्थं द्विजसत्तम।
आगन्तव्य-मयोध्यायां दास्यामि विपुलं धनम् ॥ १८. ५८ ॥

इति तस्य वचः श्रुत्वा भूपतेः कौशिको मुनिः।
प्रहस्य प्रत्युवाचेदं हरिश्चन्द्रं तदा नृप ॥ १९. १ ॥

राजंस्तीर्थ-मिदं पुण्यं पावनं पापनाशनम्।
स्नानं कुरु महाभाग पितॄणां तर्पणं तथा ॥ १९. २ ॥

कालः शुभतमोऽस्तीह तीर्थे स्नात्वा विशांपते।
दानं ददस्व शक्त्याऽत्र पुण्यतीर्थेऽति पावने ॥ १९. ३ ॥

18.57. 'நான் அயோத்தியின் மன்னன்; புகழ் பெற்ற ஹரிச்சந்திரன்; ராஜசூய யாகம் செய்தவன்; வேண்டுவார் வேண்டுவதை எப்பொழுதும் அளிப்பவன்.

18.58. 'பிராம்மண சிரேஷ்டரே! உங்களுக்கு தனத்தில் இச்சையிருக்குமேயானல் என்னுடன் அயோத்திக்கு வாருங்கள். உங்களுக்கு நிறைய தனம் தருகிறேன்' என்று கூறினன்.

19.1. அரசே! அவ்வரசனுடைய இந்த வார்த்தையைக் கேட்ட கௌசிகமுனிவர் சிரித்து விட்டு ஹரிச்சந்திரனை நோக்கிப் பின்வருமாறு பதிலளித்தார்.

19.2. 'அரசே! இந்த தீர்த்தம் புண்ணியமானது, புனிதமானது, பாவத்தைப் போக்கவல்லது. மகாபாக்கியசாலியே! இதில் ஸ்நானம் செய்து பிதிருக்களுக்குத் தர்ப்பணமும் செய்.

19.3. 'அரசே! இது மிகவும் சுபவேளை. புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மிகவும் பரிசுத்தமான இவ்விடத்திலேயே சக்திக்கியைந்தவாறு தானமும் செய்.

आगमिष्याम्यहं मार्गदर्शनार्थं तवाऽनघ।
त्वया सहाऽद्य काकुत्स्थ त्वद्दानेन तोषितः ॥ १९. ६ ॥

राजा स्नानविधिं कृत्वा सन्तर्प्य पितृदेवताः।
विश्वामित्र-मुवाचेदं स्वामिन् दानं ददामि ते ॥ १९. ९ ॥

यदिच्छसि महाभाग तत्ते दास्यामि सांप्रतम्।
गावो भूमिं हिरण्यं च गजाश्व-रथवाहनम् ॥ १९. १० ॥

नाऽदेयं मे किमप्यस्ति कृतमेतद्व्रतं पुरा।
राजसूये मखश्रेष्ठे मुनीनां सन्निधावपि ॥ १९. ११ ॥

19.6. 'பாவமற்றவனே! காகுத்ஸ்தா! உனது தானத்தால் மகிழ்வுற்ற நான் உன்னுடன் கூட உனக்கு வழி காட்டுவதற்காக வருகிறேன்.'

19.9. அரசன் விதிப்படி ஸ்நானம் செய்து பித்ரு தேவதைகளுக்குத் தர்ப்பணமும் செய்து விசுவாமித்திரரிடம் 'ஸ்வாமி! தானம் தருகிறேன்' என்று கூறினன்.

19.10–11. 'மகாபுருஷரே! எதை விரும்புகிறீரோ அதை இப்பொழுது தருகிறேன். பசுக்களோ, பூமியோ, பொன்னே, யானை குதிரை தேர் முதலிய வாகனமோ, கொடுக்கமுடியாதது என்னிடம் எதுவுமில்லை. முன்பே என்னல் சிறந்த யாகமாகிய ராஜசூயத்தில் முனிவர்களின் முன்னிலையில் இந்த விரதம் கைக் கொள்ளப்பட்டது.'

विश्वामित्र उवाच —

मया पूर्वं स्मृता राजन् कीर्तिस्ते विपुला भुवि।
वसिष्ठेन च संप्रोक्ता दाता नास्ति महीतले ॥ १९. १३ ॥

हरिश्चन्द्रो नृपश्रेष्ठ: सूर्यवंशे महीपतिः।
तादृशो नृपतिर्दाता न भूतो न भविष्यति ॥ १९. १४ ॥

अतस्त्वां प्रार्थयाम्यद्य विवाहो मेऽस्ति पार्थिव।
पुत्रस्य च महाभाग तदर्थं देहि मे धनम् ॥ १९. १५ ॥

व्यास उवाच —

तथेति च प्रतिज्ञाय नोवाचाल्पं वचस्तथा।
तेन दर्शित-मार्गोऽसौ नगरं प्रतिजग्मिवान् ॥ १९. २१ ॥

விசுவாமித்திரர் கூறியது—

19.13–14. அரசே! ஏற்கெனவே பூமியில் பரவியுள்ள உனது கீர்த்தி என் ஞாபகத்திலிருந்தது. ''இந்த பூதலத்தில் ஹரிச்சந்திரனைப் போன்ற கொடையாளி இல்லை. சூரியவம்சத்தில் சிறந்து விளங்கும் அவனைப் போன்ற கொடையாளியான அரசன் இதுவரை இருந்ததில்லை, இனியும் வரப் போவதில்லை'' என்று வசிஷ்டராலும் எனக்குக் கூறப்பட்டிருக்கிறது.

19.15. அரசரே! மகாபாக்கியசாலியே! ஆகையால் உம்மை நான் இப்பொழுது பிரார்த்திக்கிறேன். என் புத்திரனுடைய விவாகம் வர இருக்கிறது. அதற்காக எனக்குப் பொருள் கொடும்.

வியாஸர் கூறியது—

19.21. 'அப்படியே ஆகட்டும்' என்று பிரதிக்ஞை செய்து விட்டு அதற்குமேல் ஒரு சிறிதும் அரசன் பேசவில்லை. ரிஷியால் வழிகாட்டப்பட்டு நகரம் சேர்ந்தான்.

विश्वामित्रोऽपि राजानं वंचयित्वाऽश्रमं ययौ ।
कृतोद्वाहविधिस्तावद्विश्वामित्रोऽब्रवीन्नृपम् ।
वेदीमध्ये नृपाद्य त्वं देहि दानं यथेप्सितम् ॥ १९. २२ ॥

राज्यं देहि महाराज वराय सपरिच्छदम् ।
गजाश्वरथ-रत्नाढ्यं वेदीमध्येऽति पावने ॥ १९. २५ ॥

मोहितो मायया तस्य श्रुत्वा वाक्यं मुनेर्नृपः ।
दत्तमित्युक्तवान् राज्यमविचार्य यदृच्छया ॥ १९. २६ ॥

गृहीतमिति तं प्राह विश्वामित्रोऽतिनिष्ठुरः ।
दक्षिणां देहि राजेन्द्र दानयोग्यां महामते ॥ १९. २७ ॥

दक्षिणारहितं दानं निष्फलं मनुरब्रवीत् ।
तस्माद्दानफलाय त्वं यथोक्तां देहि दक्षिणाम् ॥ १९. २८ ॥

19.22. விசுவாமித்திரரும் அரசனை அப்படி வஞ்சித்து விட்டுத் தமதாசிரமம் போய்ச் சேர்ந்தார். விவாக முகூர்த்தத்தை முடித்தபின் அரசனிடம் வந்து 'இப்பொழுது கல்யாண மேடையில் விரும்பியபடி தானத்தைக் கொடும்.

19.25. 'மகாராஜனே! யானை, குதிரை, தேர், ரத்தினம் முதலியவற்றுடன் உமது ராஜ்யத்தை வரனுக்குப் புனிதமான மேடையின் நடுவில் தானம் செய்யும்'.

19.26. முனிவருடைய மாயா வார்த்தையைக் கேட்டு மதிமயங்கி, ஆலோசிக்காமல் திடீரென்று 'ராஜ்யம் கொடுக்கப்பட்டது' என்று கூறிவிட்டான்.

19.27. விசுவாமித்திரர் தானத்தை ஏற்றுக் கொண்டதாய்க் கூறிப் பிறகு கடுஞ்சித்தத்துடன் 'அரச சிரேஷ்டரே! மகாமதிமானே! தானத்திற்குப் பொருத்தமான தக்ஷிணையைக் கொடும்.

19.28. 'தக்ஷிணையில்லாத தானம் பயனற்றதென்று மனு கூறியுள்ளார். ஆகையால் தானம் பயனுடையதாவதற்கு நீர் கூறியுள்ள முறைப்படி தக்ஷிணையைக் கொடும்,

इत्युक्तस्तु तदा राजा तमुवाचातिविस्मितः ।
ब्रूहि किं यद्धनं तुभ्यं देयं स्वामिन् मयाऽधुना ॥ १९. २९ ॥

विश्वामित्रस्तु तच्छ्रुत्वा तमाह मेदिनीपतिम् ।
हेमभारद्वयं सार्धं दक्षिणां देहि सांप्रतम् ॥ १९. ३२ ॥

दास्यामीति प्रतिश्रुत्य तस्मै राजातिविस्मितः ।
चिन्तयन् स्वकृतं कर्म ययावन्तःपुरे ततः ॥ १९. ३४ ॥

प्रातरुत्थाय चिन्तार्थो यावत्सन्ध्यादिकाः क्रियाः ।
करोति नृपतिस्तावद्विश्वामित्रः समागतः ॥ १९. ४५ ॥

विश्वामित्र उवाच —

राजंस्त्यजस्व राज्यं मे देहि वाचा प्रतिश्रुतम् ।
सुवर्णं स्पृश्य राजेन्द्र सत्यवाग्भव सांप्रतम् ॥ १९. ४७ ॥

19.29. இங்ஙனம் கூறப்பட்ட அரசன் மிகவும் வியப் படைந்து 'ஸ்வாமி! என்னால் இப்பொழுது உமக்குக் கொடுக்கப்பட வேண்டிய பொருள் எவ்வளவு என்பதைக் கூறும்' என்றான்.

19.32. விசுவாமித்திரர் அதைக் கேட்டு அரசனிடம் 'இரண்டரை பாரம் பொன் தக்ஷிணையாக இப்பொழுது கொடும்' என்றார்.

19.34. 'கொடுக்கிறேன்' என்று வாக்களித்து விட்டு அரசன் ஆச்சரியத்தில் மூழ்கியவனாய்த் தனது செயலையும் சிந்தித்துக் கொண்டு அந்தப்புரம் சென்றான்.

19.45. காலையிலெழுந்து அரசன் கவலை மேலிட்டவனாய் ஸந்தியா வந்தனம் முதலிய கிரியைகளைச் செய்து கொண்டிருக்கையில் விசுவாமித்திரர் வந்து சேர்ந்தார்.

விசுவாமித்திரர் கூறியது—

19.47. அரசே! இராஜ்யத்தை என்னிடம் விட்டு விடும். வாக்களித்த பொன்னையும் கையால் தொட்டு இப்பொழுதே கொடுத்து விட்டு ஸத்தியமான வாக்குப் படைத்தவராவீர்.

हरिश्चन्द्र उवाच —

स्वामिन् राज्यं तवेदं मे मयादत्तं किलाऽधुना।
त्यक्त्वाऽन्यत्र गमिष्यामि मा चिन्तां कुरु कौशिक
॥ १९. ४८ ॥

सर्वस्वं मम ते ब्रह्मन् गृहीतं विधिवद्विभो।
सुवर्णदक्षिणां दातु-मशक्तो ह्यधुना द्विज ॥ १९. ४९ ॥

दानं ददामि ते तावद् यावन्मे स्याद्धनागमः।
पुनश्चेत्कालयोगेन तदा दास्यामि दक्षिणाम् ॥ १९. ५० ॥

व्यास उवाच —

इत्युक्त्वा नृपतिः प्राह पुत्रं भार्यां च माधवीम्।
राज्यमस्मै प्रदत्तं वै मया वेद्यां सुविस्तरे ॥ १९. ५१ ॥

हस्त्यश्वरथसंयुक्तं रत्नहेमसमन्वितम्।
त्यक्त्वा त्रीणि शरीराणि सर्वं चास्मै समर्पितम् ॥ १९. ५२ ॥

ஹரிச்சந்திரன் கூறியது—

19.48. ஸ்வாமி! இதோ இப்பொழுதே என்னால் கொடுக்கப்பட்ட இந்த இராஜ்யம் உம்முடையதாய் விட்டது. கௌசிகரே! அதைவிட்டு நான் வேறிடம் செல்லுகிறேன். யோசிக்க வேண்டாம்.

19.49. பிராம்மணரே! பிரபுவே! என்னுடைய சொத்து அனைத்தையும் விதிப்படி நீர் கிரகித்துக் கொண்டு விட்டதால் பொன் தக்ஷிணையைக் கொடுக்க இப்பொழுது சக்தியற்றவனாயிருக்கிறேன்.

19.50. எனக்கு தனம் கிட்டியதும் உமக்கு தானத்தைக் கொடுத்து விடுகிறேன். காலப் போக்கில் மீண்டும் பொருள் கிடைத்ததும் தக்ஷிணையை அளித்து விடுகிறேன்

வியாஸர் கூறியது—

19.51–52. இங்ஙனம் கூறிவிட்டு அரசன் புத்திரனையும் மாதவி என்ற மனைவியையும் பார்த்து 'யானை, குதிரை தேர், ரத்னம், பொன் முதலியவற்றுடன் கூடிய இராஜ்யம் விசாலமான மேடையில் தானமாக இவருக்கு என்னால் கொடுக்கப்பட்டதாய்விட்டது. நம்முடைய உடல்கள் மூன்று நீங்கலாக அனைத்தும் இவர்க்கு ஸமர்ப்பணம் செய்தாயிற்று.

त्यक्त्वाऽयोध्यां गमिष्यामि कुत्रचिद्वनगह्वरे ।
गृह्णत्विदं मुनिः सम्यग्राज्यं सर्वसमृद्धिमत् ॥ १६. ५३ ॥

इत्याभाष्य सुतं भार्यां हरिश्चन्द्रः स्वमन्दिरात् ।
विनिर्गतः सुधर्मात्मा मानयंस्तं द्विजोत्तमम् ॥ १६. ५४ ॥

व्रजन्तं भूपतिं वीक्ष्य भार्यापुत्रावुभावपि ।
चिन्तातुरौ सुदीनास्यौ जग्मतुः पृष्ठतस्तदा ॥ १६. ५५ ॥

हाहाकारो महानासीन्नगरे वीक्ष्य तांस्तथा ।
चुक्रुशुः प्राणिनः सर्वे साकेतपुरवासिनः ॥ १६. ५६ ॥

हा राजन् किं कृतं कर्म कुतः क्लेशः समागतः ।
वंचितोऽसि महाराज विधिनाऽपण्डितेन ह ॥ १६. ५७ ॥

19.53. 'அயோத்தியை விட்டு ஏதாவதொரு காட்டில் மறைவான இடத்தில் சென்று வசிக்கப் போகிறேன். எல்லாச் செல்வங்களும் நிறைந்த இந்த இராஜ்யத்தை நன்ருக முனிவர் கைப்பற்றிக் கொள்ளட்டும்.'

19.54. சிறந்த தர்மாத்மாவாகிய ஹரிச்சந்திரன் மகனுக்கும் மனைவிக்கும் இவ்வாறு கூறிவிட்டு அந்த பிராம் மணசிரேஷ்டருக்கு மரியாதை செலுத்திவிட்டு அரண் மனையிலிருந்து வெளியேறினன்.

19.55. வெளிச்செல்லும் அரசனைக் கண்ணுற்று மனைவியும் மகனுமாகிய இருவரும் கவலை மேலிட்டவர் களாய் வாடிய முகத்துடன் பின் தொடர்ந்து சென்றனர்.

19.56. அவர்களைக் கண்டு நகரத்து மக்கள் 'ஹா! ஹா!' என்று கூச்சலிட்டனர். அயோத்தியில் வசித்த பிராணிகள் எல்லாம் கதறின.

19.57. 'அரசரே! என்ன செயல் செய்யப்பட்டது, எங்கிருந்து துன்பம் வந்தது? மகாராஜரே! மதியில்லாத விதியால் நீர் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்.'

निनिन्दुर्ब्राह्मणं तं तु दुराचारं पुरौकसः।
धूर्तोऽयमिति भाषन्तो दुःखार्ता ब्राह्मणादयः ॥ १९. ५८ ॥

निर्गत्य नगरात्तस्माद्विश्वामित्रः क्षितीश्वरम्।
गच्छन्तं तमुवाचेदं समेत्य निष्ठुरं वचः ॥ १९. ५९ ॥

दक्षिणायाः सुवर्णं मे दत्त्वा गच्छ नराधिप।
नाऽहं दास्यामि वा ब्रूहि मया त्यक्तं सुवर्णकम् ॥ १९. ६० ॥

राज्यं गृहाण वा सर्वं लोभश्चेद्धृदि वर्तते।
दत्तं चेन्मन्यसे राजन् देहि यत्तत्प्रतिश्रुतम् ॥ १९. ६१ ॥

एवं ब्रुवन्तं गाधेयं हरिश्चन्द्रो महीपतिः।
प्रणिपत्य सुदानात्मा कृतांजलिपुटोऽब्रवीत् ॥ १९. ६२ ॥

19.58. பட்டணத்து ஜனங்கள் அந்த பிராம்மணனைக் கெட்ட நடத்தையுள்ளவன் என்று நிந்தித்தனர். பிராம்மணர் முதலியவர்கள் துக்கத்தால் பீடிக்கப்பட்டு அவர் மோசக்காரர் என்று பேசிக் கொண்டனர்.

19.59. அந்நகரத்திலிருந்து வெளிச் சென்று விசுவாமித்திரர் போய்க் கொண்டிருக்கும் அரசனை நெருங்கிப் பின்வரும் கடுமையான வார்த்தைகளைப் பேசினார்.

19.60. 'அரசரே! தக்ஷிணைக்கான தங்கத்தைக் கொடுத்து விட்டுப் போம். இல்லையேல் 'நான் கொடுக்க மாட்டேன்' என்றாவது சொல்லும். நான் தங்கத்தைப் பற்றிய பேச்சை விட்டு விடுகிறேன்.

19.61. 'அல்லது உள்ளத்தில் உலோபமிருக்குமேயானால் இராஜ்யம் முழுவதையும் திருப்பி எடுத்துக் கொள்ளும். அரசரே! கொடுக்கப்பட்டதென்று கருதினால் வாக்களித்ததைக் கொடும்.'

19.62. தானத்திற் சிறந்த ஹரிச்சந்திர மகாராஜா இவ்விதம் பேசும் காதி புத்திரரான முனிவரை வணங்கிக் கைகூப்பிக்கொண்டு பின்வருமாறு கூறினார்.

हरिश्चन्द्र उवाच —

अदत्त्वा ते हिरण्यं वै न करिष्यामि भोजनम्।
प्रतिज्ञा मे मुनिश्रेष्ठ विषादं त्यज सुव्रत ॥ २०.१ ॥

सूर्यवंशसमुद्भूतः क्षत्रियोऽहं महीपतिः।
राजसूयस्य यज्ञस्य कर्ता वांछितदो नृषु ॥ २०. २ ॥

कथं करोमि नाकारं स्वामिन् दत्त्वा यदृच्छया।
अवश्यमेव दातव्य-मृणं ते द्विजसत्तम ॥ २०. ३ ॥

विश्वामित्र उवाच —

कुतस्ते भविता राजन् धनप्राप्तिरतः परम्।
गतं राज्यं तथा कोशो बलं चैवार्थसाधनम् ॥ २०.५ ॥

ஹரிச்சந்திரன் கூறியது—

20.1. முனிசிரேஷ்டரே! நல்ல விரதமுடையவரே! மனக்கலக்கத்தை விடும். உமக்குப் பொன்னைக் கொடுக்காமல் நான் சாப்பிடப் போவதில்லை. இது என் பிரதிக்ஞை.

20.2. நான் சூரியவம்சத்திற் பிறந்தவன், க்ஷத்திரியன், அரசன், இராஜசூய யாகம் செய்தவன். மனிதர்களுக்கு வேண்டியதையளிப்பவன்.

20.3. ஸ்வாமி! பிராம்மண சிரேஷ்டரே! இஷ்டப் பட்டு தானம் செய்தபின் இல்லையென்ற சொல்லை நான் எப்படிச் சொல்வேன்? உமது கடன் கட்டாயம் கொடுக்க வேண்டியதே ஆகும்.

விசுவாமித்திரர் கூறியது

20.5. அரசரே! இனிமேல் உமக்கு எங்கிருந்து தனம் கிட்டப் போகிறது? இராஜ்யம் போயிற்று, பொக்கிஷம் போயிற்று, பொருளைத் தேடக் கூடிய பலமும் போய்விட்டது.

तस्मात्कथय भूपाल न दास्यामीति सांप्रतम्।
त्यक्त्वाशां महतीं कामं गच्छाम्यह-मतः परम् ॥ २०. ७ ॥

हरिश्चन्द्र उवाच —

मम देहोऽस्ति भार्यायाः पुत्रस्य च ह्यनामयः।
क्रीत्वा देहं तु त नूनमृणं दास्यामि ते द्विज ॥ २०. १० ॥

ग्राहकं पश्य विप्रेन्द्र वाराणस्यां पुरि प्रभो।
दासभावं गमिष्यामि सदारोऽहं सपुत्रकः ॥ २०. ११ ॥

विश्वामित्र उवाच —

मदीयां दक्षिणां राजन् न दास्यति भवान् यदि।
अस्ताचलगते ह्यर्के शप्स्यामि त्वामतो ध्रुवम् ॥ २१. ९ ॥

20.7. 'அரசரே! ஆகையால் இப்பொழுது 'கொடுக்க மாட்டேன்' என்று கூறிவிடும். நான் என்னுடைய பெரிய ஆசையை விட்டு விட்டு அதன் பின் இஷ்டப்படி போய் விடுவேன்.

ஹரிச்சந்திரன் கூறியது—

20.10. பிராம்மணரே! என்னுடைய தேகமிருக்கிறது. மனைவியின் தேகமிருக்கிறது. நோயற்ற புத்திரனுடைய தேகமிருக்கிறது. தேகத்தை விற்று உம்முடைய கடனை நிச்சயமாகத் தீர்ப்பேன்.

20.11. பிராம்மண சிரேஷ்டரே! பிரபுவே! என் மனைவியுடனும் புத்திரனுடனும் நான் அடிமையாய்ப் போகிறேன். காசிநகரில் எங்களை வாங்கிக் கொள்ளக் கூடியவரைப் பாரும்.

விசுவாமித்திரர் கூறியது—

21.9. நீர் என்னுடைய தக்ஷிணையைக் கொடுக்கா விட்டால் சூரியன் அஸ்தமிக்கும் பொழுது உம்மை நிச்சய மாய்ச் சபித்துவிடுவேன்.

इत्युक्त्वा स ययौ विप्रो राजाचासीद् भयातुरः ।
दुःखीभूतोऽवने निःस्वो नृशंसमुनिनार्ऽदितः ॥ २१. १० ॥

एतस्मिन्नन्तरे तत्र ब्राह्मणो वेदपारगः ।
ब्राह्मणैर्बहुभिः सार्धं निर्ययौ स्वगृहाद्बहिः ॥ २१. ११ ॥

ततो राज्ञी तु तं दृष्ट्वा आयान्तं तापसंस्थितम् ।
उवाच वाक्यं राजानं धर्मार्थसहितं तदा ॥ २१. १२ ॥

पत्न्युवाच —

अहं शास्याच पत्याच रक्ष्याचैव महाद्युते ।
मन्मौल्यं संगृहीत्वाऽथ गुर्वर्थं संप्रदीयताम् ॥ २१. २४ ॥

21.10. இங்ஙனம் கூறிவிட்டு பிராம்மணன் போன பின் அரசன் பயம் மேலிட்டவனுனன். இரக்கமற்ற முனிவரால் பீடிக்கப்பட்டுத் தன்னைக் காத்துக் கொள்ளப் பொருளேதுமின்றி அவன் துக்கத்திலாழ்ந்தான்.

21.11. அந்த வேளையில் வேதத்தைக் கரைகண்ட ஒரு பிராம்மணர் வேறு பல பிராம்மணர்களுடன் தன் வீட்டிலிருந்து வெளி வந்தார்,

21.12. வந்து கொண்டிருந்த அவரைக் கண்ணுற்ற அரசி தவித்துக் கொண்டு நின்ற அரசனிடம் அறமும் பொருளும் நிறைந்த பின்வரும் வார்த்தையைச் சொன்னுள்.

மனைவி கூறியது—

21.24. மதியிற் சிறந்தவரே! நான் பதியால் காப்பதற்கும் கட்டளையிடுதற்கும் உரியவள். என்னை விற்று வரும் விலையை வாங்கி குருவிற்குச் சேர வேண்டிய பொருளைக் கொடுத்து விடுங்கள்.

व्यास उवाच —

स तदा नोद्यमानस्तु राजा पत्न्या पुनः पुनः ।
प्राह भद्रे करोम्येष विक्रियं ते सुनिर्घृणः ॥ २२. १ ॥

नृशंसैरपि यत्कर्तुं न शक्यं तत्करोम्यहम् ।
यदि ते भ्राजते वाणी वक्तु-मीदृक् सुनिष्ठुरम् ॥ २२. २ ॥

एवमुक्त्वा ततो राजा गत्वा नगर-मातुरः ।
बाष्पगद्गदकण्ठस्तु ततो वचनमब्रवीत् ॥ २२. ३ ॥

भो भो नागरिकाः सर्वे शृणुध्वं वचनं मम ।
कस्यचिद्यदि कार्यं स्याद्दास्या प्राणेष्टया मम ॥
स ब्रवीतु त्वरायुक्तो यावत्स्वं धारयाम्यहम् ॥ २२. ४ ॥

வியாஸர் கூறியது—

22.1. பத்னியால் அடிக்கடி அங்ஙனம் தூண்டப்பட்ட அரசன் 'நல்லாளே! சற்றும் இரக்கமின்றி நான் உன்னை விலை கூறத் துணிகிறேன்.

22.2. 'இப்படிப்பட்ட கடுஞ்சொல் உன்வாயிலிருந்தே வருவதால் கொடியவர்களும் எதைச் செய்யமாட்டார்களோ அதை நான் செய்யப் போகிறேன்' என்று கூறினன்.

22.3. இப்படிக் கூறிவிட்டு அரசன் துயரம் மேலிட்டவனாய் நகரினுட் சென்று கண்ணீரால் தொண்டை தழுதழுத்தவனாய்ப் பின்வருமாறு பேசலானன்.

22.4. 'நகரவாசிகளே! என் வார்த்தையைச் சற்று கேளுங்கள். என்னுடைய பிராணநாயகியான ஸ்திரீயை வேலைக்காரியாய்க் கொண்டு காரியம் செய்து கொள்வதில் யாருக்காவது நோக்கமிருந்தால் அவர் சொல்லட்டும். அவசர நிமித்தத்தால் அவர் தரும் பொருளை நான் ஏற்றுக் கொள்வேன்.'

तं शब्दं सहसा श्रुत्वा कौशिको विप्ररूपधृक् ।
वृद्धरूपं समास्थाय हरिश्चन्द्र-मभाषत ।
समर्पयस्व मे दासी-महं क्रेता धनप्रदः ।। २२. ८ ।।

अस्ति वित्त-मतुल सुकुमारी च मे प्रिया ।
गृहकर्म न शक्नोति कर्तु-मस्मात्प्रयच्छ मे ।। २२. ९ ।।

कर्मणश्च वयोरूपशीलानां तव योषितः ।
अनुरूपमिदं वित्तं गृहाणार्पय मेऽबलाम् ।। २२. ११ ।।

इत्याकर्ण्य वचस्तस्य हरिश्चन्द्रो महीपतिः ।
दुःखेन महताऽऽविष्टो न चैनं किंचिदब्रवीत् ।। २२. १४ ।।

22.8. விருத்தப் பிராம்மண வடிவமெடுத்துக்கொண்டு அங்கு வந்திருந்த கௌசிகர் அவ்வார்த்தையைக் கேட்டு ஹரிச்சந்திரனிடம் பின்வருமாறு கூறினர். 'எனக்கு வேலைக் காரியாகக் கொடு. நான் பொருள் கொடுத்து வாங்கிக் கொள்கிறேன்.

22.9. 'என் மனைவி மெதுவான உடல் படைத்தவள். வீட்டுவேலை செய்யச் சக்தியில்லாமலிருக்கிருள். எனக்கு நிறையப் பணம் இருக்கிறது. ஆகையால் எனக்கு இவளைக் கொடு'

22.11. 'உன் மனைவியின் வயதுக்கும் ரூபத்துக்கும் குணத்துக்கும் செயல் திறமைக்கும் தக்கபடி இந்தப் பொருளை வாங்கிக் கொண்டு அவளை என்னிடம் ஒப்புவித்து விடு.'

22.14. அவருடைய இவ்வார்த்தையைக் கேட்டு ஹரிச்சந்திர மகாராஜன் பெருந்துக்கத்தால் பீடிக்கப்பட்டு அவருக்கு மறுமொழியேதும் சொல்லாமலிருந்தான்.

तथैव तस्य तद्वित्तं पुरः क्षिप्तं पटे पुनः ।
प्रगृह्य बालकं मात्रा सहैकस्थ-मबन्धयत् ॥
प्रतस्थे स गृहं क्षिप्रं तया सह मुदान्वितः ॥ २२. २४ ॥
प्रदक्षिणां तु सा कृत्वा जानुभ्यां प्रणतास्थिता ॥
बाष्पपर्याकुला दीना त्विदं वचन-मब्रवीत् ॥ २२. २५ ॥
यदि दत्तं यदि हुतं ब्राह्मणास्तर्पिता यदि ।
तेन पुण्येन मे भर्ता हरिश्चन्द्रोऽस्तु वै पुनः ॥ २२. २६ ॥
पादयोः पतितं दृष्ट्वा प्राणेभ्योऽपि गरीयसीम् ।
हाहेति च वदन् राजा विललापाकुलेन्द्रियः ॥ २२. २७ ॥
नीयमानौ तु तौ दृष्ट्वा भार्या-पुत्रौ स पार्थिवः ।
विललापातिदुःखार्तो निश्वस्योष्णं पुनः पुनः ॥ २२. ३६ ॥

22.24. பிராம்மணர் கொடுப்பதாய்ச் சொன்ன பொருளை அரசன் முன் அவன் வஸ்திரத்தில் கொட்டி விட்டு தாயுடன் பிள்ளையையும் சேர்த்துக் கட்டி அவர்களைக் கூட்டிக் கொண்டு மகிழ்வுடன் தமது வீட்டை நோக்கிப் புறப்படலானார்.

22.25. அவள் கணவனுக்குப் பிரதக்ஷிணம் செய்து முழந்தாளிட்டு நமஸ்கரித்து கண்களில் நீர் பெருகப் பரிதாபத்துடன் பின்வருமாறு கூறினாள்.

22.26. 'தானம் செய்ததும் ஹோமம் செய்ததும் பிராம்மணர்களைத் திருப்தி செய்ததும் உண்மையானால் அந்தப் புண்ணியத்தால் எனக்கு மீண்டும் பர்த்தாவான ஹரிச்சந்திரருடன் கூடுதல் ஏற்பட வேண்டும்.'

22.27. பாதங்களில் விழுந்து கிடக்கும் பிராணனை விடப் பிரியமான அவளைப் பார்த்து அரசன் 'ஹா! ஹா!' என்று அலறிப் பொறிகலங்கி வாய்விட்டழலானான்.

22.36. மனைவியும் புத்திரனும் பிரிந்து அழைத்துக் கொண்டு போகப்படுவதைக் கண்டு அரசன் மிகுந்த துக்கத்திலாழ்ந்து மேன் மேலும் உஷ்ணமான பெருமூச்சு விட்டுப் பிரலாபித்தான்.

यां न वायुर्न-वाऽऽदित्यो न चन्द्रो न पृथग्जनाः ।
दृष्टवन्तः पुरा पत्नीं सेयं दासीत्वमागता ॥ २२. ३७ ॥

सूर्यवंशप्रसूतोऽयं सुकुमार-करांगुलिः ।
संप्राप्तो विक्रयं बालो धिङ् मामस्तु सुदुर्मतिम् ॥ २२. ३८ ॥

हा प्रिये हा शिशो वत्स ममानार्यस्य दुर्नयः ।
दैवाधीन-दशां प्राप्तो न मृतोऽस्मि तथाऽपि धिक् ॥ २२. ३९ ॥

एवं विलपतो राज्ञोऽग्रे विप्रोऽन्तरधीयत ।
वृक्षगेहादिभिस्तुंगैस्तावादाय त्वरान्वितः ॥ २२. ४० ॥

अत्रान्तरे मुनिश्रेष्ठस्त्वाजगाम महातपाः ।
सशिष्यः कौशिकेन्द्रोऽसौ निष्ठुरः क्रूरदर्शनः ॥ २२. ४१ ॥

22.37. 'காற்றோ, சூரியனோ, சந்திரனோ, மற்ற ஜனங்களோ எந்தத் தனது பத்தினியை இதற்கு முன் பார்த்தது கூட இல்லையோ அவளே இப்பொழுது அடிமையாகிவிட்டாள்.

22.38. 'மிகவும் மெதுவான கை விரல்கள் படைத்தவனும் சூரியவம்சத்துதித்தவனுமான இந்த பாலன் விலைக்கு விற்கப்பட்டான். புத்தி கெட்ட என்னைச் சுட வேண்டும்

22.39. 'ஹா! ப்ரியே! ஹா! குழந்தாய்! மகனே! கொடியோனுன நான் இழைத்த அநீதிதான் எப்படிப் பட்டது! தெய்வவசமாய் இந்நிலையை அடைந்த நான் இன்னும் சாகவில்லையே! என்னைச் சுட வேண்டும்.'

22.40. இப்படி அரசன் பிரலாபித்துக் கொண்டிருக்கையில் அவன் முன்பிருந்து அவ்விருவரையும் கூட்டிக் கொண்டு வீடுகளையும் மரங்களையும் கடந்து பிராம்மணர் மறைந்து போனார்.

22.41. அதற்குள் மகாதபஸ்வியும் முனிசிரேஷ்டருமான கௌசிகப் பெரியார் கடும் பார்வையுடனும் நிஷ்டுரப் பேச்சுடனும் சிஷ்யன் பின் தொடர அங்கு வந்து சேர்ந்தார்.

विश्वामित्र उवाच —

या त्वयोक्ता पुरा राजन् राजसूयस्य दक्षिणा ।
तां ददस्व महाबाहो यदि सत्यं पुरस्कृतम् ॥ २२. ४२ ॥

हरिश्चन्द्र उवाच —

नमस्करोमि राजर्षे गृहाणेमां स्वदक्षिणाम् ।
राजसूयस्य यागस्य या मयोक्ता पुरानघ ॥ २२. ४३ ॥

विश्वामित्र उवाच —

अशस्तं नैव गृह्णामि शस्तमेव प्रयच्छ मे ।
द्रव्यस्यागमनं राजन् कथयस्व यथातथम् ॥ २२. ४६ ॥

விசுவாமித்திரர் கூறியது—

22.42. அரசரே! பெருந்தோள்படைத்தவரே! ராஜஸூய தக்ஷிணை எது கொடுப்பதாய் முன்பு கூறினீரோ அதை ஸத்தியத்தை முன்னிட்டு இப்பொழுது கொடும்.

ஹரிச்சந்திரன் கூறியது—

22.43. ராஜரிஷியே! பாவமற்றவரே! நமஸ்கரிக்கிறேன். உமது தக்ஷிணையை, ராஜஸூயயாகத்தில் முன்பு நான் கொடுப்பதாய்ச் சொன்னதை, இதோ வாங்கிக் கொள்ளும்.

விசுவாமித்திரர் கூறியது—

22.46. புனிதமில்லாததை நான் ஏற்கமாட்டேன். புனிதமானதைத் தான் எனக்குக் கொடுக்க வேண்டும். அரசே! இந்த திரவியம் வந்தவாறு எப்படி என்பதை உள்ளபடி கூறும்.

राजोवाच —

मया देवी तु सा भार्या विक्रीता कोटिसम्मितैः ।
निष्कैः पुत्रो रोहिताख्यो विक्रीतोऽर्बुदसंख्यया ॥
विप्रैकादशकोटचस्त्वं सुवर्णस्य गृहाण मे ॥ २२. ४७ ॥

ऋषिरुवाच —

राजसूयस्य यज्ञस्य नैषा भवति दक्षिणा ।
अन्यदुत्पादय क्षिप्रं संपूर्णा येन सा भवेत् ॥ २२. ५० ॥

राजोवाच —

अन्यद्दास्यामि भगवन् कालः कश्चित्प्रतीक्ष्यताम् ।
अधुनैवास्ति विक्रीता पत्नी पुत्रश्च बालकः ॥ २२. ५३ ॥

அரசன் கூறியது—

22.47. என் மனைவியான அந்த தேவியைக் கோடிப் பொன்னுக்கு நான் விற்றேன். பிள்ளை ரோகிதன் என் பவனைப் பத்துக் கோடிப் பொன்னுக்கு விற்றேன், பதினொரு கோடிப் பொன்னை நீர் என்னிடமிருந்து வாங்கிக் கொள்ளும்.

ரிஷி கூறியது—

22.50. ராஜஸூயயாகத்திற்கு இந்த தக்ஷிணை போதாது. எப்படி அது பூர்த்தியாகுமோ அப்படி மிகுதியையும் ஸம்பாதிக்க ஏற்பாடு செய்.

அரசன் கூறியது—

22.53. பகவானே! மிகுதியையும் கொடுக்கிறேன். சிறிது காலம் பொறுத்திரும். மனைவியையும் புத்திரனையும் இப்பொழுது தானே விற்றிருக்கிறேன்.

विश्वामित्र उचाव —

चतुर्भागः स्थितो योऽयं दिवसस्य नराधिप ।
एष एव प्रतीक्ष्यो मे वक्तव्यं नोत्तरं तथा ॥ २२. ५४ ॥

व्यास उवाच —

तमेवमुक्त्वा राजानं निर्घृणं निष्ठुरं वचः ।
तदादाय धनं पूर्णं कुपितः कौशिको ययौ ॥ २३. १ ॥

विश्वामित्रे गते राजा ततः शोकमुपागतः ।
श्वासोच्छ्वासं मुहुः कृत्वा प्रोवाचोच्चै-रधोमुखः ॥ २३. २ ॥

वित्तक्रीतेन यस्यार्तिर्मया प्रेतेन गच्छति ।
स ब्रवीतु त्वरायुक्तो यामे तिष्ठति भास्करः ॥ २३. ३ ॥

விசுவாமித்திரர் கூறியது—

22.54. அரசரே! பகல் போதில் இன்னும் கால் பங்கு இருக்கிறது. அதுவரை தான் பொறுப்பேன். அதற்குமேல் தவணை சொல்லக்கூடாது.

வியாஸர் கூறியது—

23.1. கருணையின்றி வன்னெஞ்சுடன் இம்மாதிரி வார்த்தையை அரசனிடம் பேசிவிட்டு அந்த தனத்தை முழுவதையும் எடுத்துக் கொண்டு கோபத்துடன் கௌசிகர் சென்றார்.

23.2. விசுவாமித்திரர் சென்ற பின் அரசன் சோகம் மேலிட்டவனாய் அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டு தலைகுனிந்தவனாய்ப் பின்வருமாறு உரக்கக் கூவினான்.

23.3. என்னை விலைக்கு வாங்குவதால் யாருக்காவது கஷ்டம் குறைந்து பயனேற்படுமேயானால் அவர் சூரியன் அஸ்தமிக்க ஒரு யாமத்திற்குள் விரைவில் தெரிவிக்கவும்.

अथाजगाम त्वरितो धर्मश्चाण्डालरूपधृक् ।
हस्तजर्जरयष्टिश्च शवमाल्यैरलंकृतः ।। २३. ५ ।।

चाण्डाल उवाच —

अहं गृह्णामि दासत्वे भृत्यार्थः समहान्मम ।
क्षिप्र-माचक्ष्व मौल्यं किमेतत्ते संप्रदीयते ।। २३. ६ ।।

हरिश्चन्द्र उवाच —

ब्राह्मणः क्षत्रियोवाऽपि गृह्णत्विति मतिर्मम ।
उत्तमस्योत्तमो धर्मो मध्यमस्य तु मध्यमः ।
अधमस्याऽधमश्चैव इति प्राहु-र्मनीषिणः ।। २३. १० ।।

23.5. உடனே தர்ம தேவதை சண்டாள ரூபந் தரித்துக் கையில் கிழட்டுத் தடியுடனும் சவமாலை அலங்காரத்துடனும் வந்து தோன்றிற்று.

சண்டாளன் கூறியது—

23.6. எனக்கு வேலையாள் மிகவும் அவசியமாயிருக்கிறது. அடிமையாக நான் வாங்கிக் கொள்ளுகிறேன். விலை எவ்வளவு, சீக்கிரம் கூறு. அதை நான் உனக்குக் கொடுக்கிறேன்.

ஹரிச்சந்திரன் கூறியது—

23.10. பிராம்மணனாவது க்ஷத்திரியனாவது வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது என் எண்ணம். உத்தமனை உத்தமனும் மத்யமனை மத்யமனும் அதமனை அதமனும் ஏற்பது தான் தருமம் என்று நியாயமறிந்தவர்கள் கூறுவார்கள்.

व्यास उवाच —

तस्यैवं वदतः प्राप्तो विश्वामित्रस्तपोनिधिः।
इदानीमेव मे वित्तं न प्रदास्यसि चेन्नृप।
दिनेऽर्धघटिकाशेषे तत्त्वां शापाग्निना दहे ॥ २३. २० ॥

हरिश्चन्द्र उवाच —

प्रसादं कुरु विप्रर्षे कष्टश्चाण्डालसंकरः।
भवेयं वित्तशेषेण तव कर्मकरो वशः ॥ २३. २२ ॥

विश्वामित्र उवाच —

चाण्डालागच्छ मद्दास-मौल्यं किं मे प्रयच्छसि।
गृहाण दासं मौल्येन मया दत्तं तवाधुना ॥ २३. २७ ॥

வியாஸர் கூறியது—

23.20. அவன் அப்படி சொல்லிக் கொண்டிருக்கையில் தவச் செல்வரான விசுவாமித்திரர் வந்து சேர்ந்தார். அவர் கூறினர்; 'பகல் அரை நாழிப் பொழுதுதான் உளது. இப்பொழுதே நீ என் பணத்தைக் கொடுக்காவிட்டால் உன்னை நான் சாபாக்னியால் எரித்துவிடுவேன்'.

ஹரிச்சந்திரன் கூறியது—

23.22. பிரம்மரிஷியே! அருள் புரியும். மீதியுள்ள பணத்திற்கு நான் உமக்கு வேலையாளாக உமது வசமாய் விடுகிறேன். சண்டாளனுடன் கலப்பது கஷ்டமாயிருக்கிறது.

விசுவாமித்திரர் கூறியது—

23.27. சண்டாளா! இங்கு வா. என் அடிமையாகிய இவனை இப்பொழுது உனக்கு விலைக்குக் கொடுக்கிறேன். வாங்கிக் கொள். எனக்கு எவ்வளவு பணம் கொடுப்பாய்?

47

व्यास उवाच —

ततो रत्नसहस्राणि सुवर्णमणिमौक्तिकैः।
चाण्डालेन प्रदत्तानि जग्राह द्विजसत्तमः ॥ २३. ३१ ॥

चाण्डालवचनं कार्य-मद्यप्रभृति ते नृप।
स्वस्ति तेऽस्त्विति प्रोच्य तदादाय धनं ययौ ॥ २३. ३८ ॥

सूत उवाच —

कस्मिंश्चिदथ काले तु मृतचैलापहारकः।
हरिश्चन्द्रोऽभवद्राजा श्मशाने तद्वशानुगः ॥ २४. १५ ॥

வியாஸர் கூறியது—

23.31. சண்டாளனால் கொடுக்கப்பட்ட பொன்மணி முத்துக்களுடன் கூடிய ஆயிரம் ரத்தினங்களை பிராம்மணோத் தமர் வாங்கிக் கொண்டார்.

23.38. 'அரசரே! இப்பொழுதிலிருந்து நீர் சண்டாளன் சொல்படி நடக்கவேண்டும். உனக்குச் சுக முண்டாகட்டும்' என்று கூறிவிட்டு அவர் தனத்தை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்.

ஸூதர் கூறியது—

24.15. சிறிது காலத்திற்கெல்லாம் ஹரிச்சந்திர மகாராஜன் அவனுடைய வசமாகி மயானத்தில் பிணங்களின் ஆடைகளை அபஹரிக்கும் தொழிலில் அமர்ந்தவனானன்.

स राजा तत्र संप्राप्तो दुःखादेव-मशोचत ।
हा भृत्या मन्त्रिणो यूयं क्व तद्राज्यं कुलोचितम् ।
हा प्रिये पुत्र मे बाल मां त्यक्त्वा मन्दभाग्यकम् ॥ २४. २५ ॥

ब्राह्मणस्य कोपेन गता यूयं क्व दूरतः ।
विना धर्मं मनुष्याणां जायते न शुभं क्वचित् ॥ २४. २६ ॥

यत्नतो धारयेत्तस्मात्पुरुषो धर्ममेव हि ।
इत्येवं चिन्तयंस्तत्र चाण्डालोक्तं पुनः पुनः ॥ २४. २७ ॥

न रात्रौ न दिवा शेते हाहेति प्रवदन्मुहुः ।
एवं द्वादश मासास्तु नीता वर्षशतोपमाः ॥ २४. ३३ ॥

एकदा तु गतो रन्तुं बालकैः सहितो बहिः ।
वाराणस्या नातिदूरे रोहिताख्यः कुमारकः ॥ २५. १ ॥

24.25–26. அவ்வரசன் அங்கிருந்து கொண்டு துக்கத்தால் பின் வருமாறு வருந்தினன்: 'பணியாட்களே! மந்திரிமார்களே! நீங்கள் எங்கு மறைந்தீர்கள்? குலத்திற்கு உசிதமான அந்த ராஜ்யம் எங்கே? மந்த பாக்கியனை என்னை விட்டுப் பிரியமான பத்தினியே, புத்திரா, குழந்தாய், நீங்கள் பிராம்மணருடைய கோபத்தால் தூரத்தில் எங்கு போனீர்கள்? தருமமில்லாமல் மனிதர்களுக்கு சுபம் என்பது ஒரு பொழுதும் உண்டாகாது.

24.27–33. 'ஆகையால் புருஷன் முயற்சியுடன் தருமத்தையே தான் கைக்கொள்ள வேண்டும்' என்று இங்ஙனம் எண்ணிக் கொண்டு சண்டாளன் கூறியதையும் திருப்பித் திருப்பி நினைத்துக் கொண்டு இரவிலோ பகலிலோ அவன் படுக்கவில்லை. அடிக்கடி 'ஹா! ஹா!' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே இருந்தான். இப்படி பன்னிரண்டு மாதங்கள் நூறு வருஷங்களைப்போல் கழிந்தன.

25.1. ரோஹிதன் எனும் குமாரன் ஒரு சமயம் காசி நகருக்கு வெளியே சிறிது தூரத்தில் மற்ற சிறுவர்களுடன் கூடி விளையாடச் சென்றான்.

क्रीडां कृत्वा ततो दर्भान् ग्रहीतु-मुपचक्रमे ।
विश्वामित्राज्ञया तावत्कृष्णसर्पो भयावहः ॥ २५. ७ ॥

महाविषो महाघोरो वल्मीकान्निर्गतस्तदा ।
तेनासौ बालको दष्टस्तदैव च पपात ह ॥ २५. ८ ॥

रोहिताख्यं मृतं दृष्ट्वा ययुर्बाला द्विजालयम् ।
त्वरिता भयसंविग्नाः प्रोचुस्तन्मातुरग्रतः ॥ २५. ९ ॥

हे विप्रदासि ते पुत्रः क्रीडां कर्तुं बहिर्गतः ।
अस्माभिस्सहितस्तत्र सर्पदष्टो मृतस्ततः ॥ २५. १० ॥

इति सा तद्वचः श्रुत्वा वज्रपातोपमं तदा ।
पपात मूर्च्छिता भूमौ छिन्नेव कदली यथा ॥ २५. ११ ॥

25.7–8. விளையாடியபின் தர்ப்பை சேகரிக்கத் தொடங்கினான். அப்பொழுது விசுவாமித்திரரின் ஏவுதலால் கொடிய விஷமும் கொடிய பயங்கரமான ரூபமும் உடைய ஒரு கரிய நாகம் புற்றிலிருந்து வெளிப்பட்டது. அதனால் அந்த பாலகன் கடிக்கப்பட்டு அப்பொழுதே தரையில் சாய்ந்தான்.

25.9. ரோஹிதன் இறந்து விட்டதைக் கண்ட சிறுவர்கள் பயத்தால் நடுங்கிக் கொண்டு பிராம்மணர் வீட்டுக்கு விரைந்து சென்று ரோஹிதனுடைய தாயார் முன்னிலையில் பின் வருமாறு கூறினார்கள்.

25.10. 'பிராம்மணர் வீட்டு வேலைக்காரியே! உன் மகன் எங்களுடன் கூட விளையாடுவதற்காக வெளியே வந்தவன் அங்கு பாம்பு கடித்து இறந்து விட்டான்.'

25.11. இடிவிழுந்தாற் போன்ற அவ்வார்த்தையைக் கேட்ட அவள் முறிந்து போன வாழைமரம் போல் மூர்ச்சித்துத் தரையில் சாய்ந்தாள்.

अथ तां ब्राह्मणो रुष्टः पानीयेनाभ्यषिंचत।
मुहूर्ताच्चेतनां प्राप्ता ब्राह्मणस्तामथाब्रवीत् ॥ २५. १२ ॥

अलक्ष्मीकारकं निन्द्यं जानती त्वं निशामुखे।
रोदनं कुरुषे दुष्टे लज्जा ते हृदये न किम् ॥ २५. १३ ॥

रुदिता कारणं प्राह विप्रं गद्गदया गिरा।
स्वामिन् मम सुतो बालः सर्पदष्टो मृतो बहिः ॥ २५. १७ ॥

अनुज्ञां मे प्रयच्छस्व द्रष्टुं यास्यामि बालकम्।
इत्युक्त्वा कारणं बाला पुनरेव रूरोद ह ॥ २५. १८ ॥

अथाह कुपितो विप्रः क्रोधसंरक्तलोचनः।
किं ते पुत्रेण मे कार्यं गृहकर्म कुरुष्व मे ॥ २५. २६ ॥

25.12. அதைக் கண்டு கோபம் மூண்ட பிராம்மணன் அவள் மேல் தண்ணீரைக் கொட்டினான். சிறிது நேரத்தில் பிரக்ஞை வந்து எழுந்த அவளை நோக்கி பிராம்மணன் பின்வருமாறு கூறினான்.

25.13. 'ஸந்தியா காலத்தில் அழுவது நிந்திக்கத் தக்கது, அலக்ஷ்மீகரமானது என்று உனக்குத் தெரியாதா? புத்திகெட்டவளே! அழுகிறாயே, உனக்கு இருதயத்தில் வெட்கமில்லையா?'

25.17. அழுது கொண்டே தழுதழுத்த குரலில் அவள் பிராம்மணனிடம் காரணம் கூறினாள். 'ஸ்வாமி! என்னுடைய மகன், சிறுவன் வெளியே பாம்பு கடித்து இறந்து விட்டான்.

25.18. 'சிறுவனைப் பார்க்கப் போகிறேன். எனக்கு உத்திரவு கொடுங்கள்' என்று காரணங் கூறிவிட்டு அவள் மறுபடி அழத் தொடங்கினாள்.

25.26. கோபம் கொண்ட பிராம்மணன் கோபத்தால் கண் சிவந்தவனாய் 'உன் புத்திரனால் எனக்கென்ன காரியம்? என் வீட்டு வேலையைச் செய்' என்று கூறினான்.

एवमुक्त्वा स्थिता धैर्याद् गृहकर्म चकार ह।
ब्राह्मणेनाथ सा प्रोक्ता पुत्रपार्श्वं व्रजाधुना ॥ २५. २८ ॥

तस्य दाहादिकं कृत्वा पुनरागच्छ सत्वरम्।
ततस्त्वेकाकिनी रात्रौ विलपन्ती जगाम ह ॥ २५. २९ ॥

वाराणस्या बहिर्गत्वा क्षणाद्दृष्ट्वा निजं सुतम्।
शयानं रंगवद्भूमौ काष्ठ-दर्भ-तृणोपरि ॥ २५. ३१ ॥

विललापातिदुःखार्ता शब्दं कृत्वा सुनिष्ठुरम्।
हा बाल हा शिशो वत्स हा कुमारक सुन्दर ॥ २५. ३२ ॥

हा राजन् क्व गतोऽसि त्वं पश्येमं बालकं निजम्।
प्राणेभ्योऽपि गरीयांसं भूतले पतितं मृतम् ॥ २५. ३७ ॥

25.28–29. இப்படி கூறப் பெற்ற அவள் தைரியத்தை கைக் கொண்டு வீட்டு வேலையைச் செய்து முடித்தாள். பிறகு பிராம்மணனால் இங்ஙனம் சொல்லப்பட்டாள். 'இப் பொழுது உன் புத்திரன் பக்கம் போகலாம். அவனுடைய தகனக்கிரியை முதலியவற்றை முடித்து விட்டு மீண்டும் சீக்கிரமே திரும்பிவா.'

25.31–32. காசி நகரத்திற்கு வெளியே உடனே சென்று கட்டை, தர்ப்பை, புல் முதலியவற்றின் மேல் மேடான தரையில் சயனித்துக் கிடக்கும் புதல்வனைக் கண்டு துக்கம் மேலெழக் கொடுமையை நினைந்து 'பாலகனே! குழந்தாய்! வத்ஸா! குமாரா! அழகா!' என்று கதறிப் புலம்பினாள்.

25.37. 'அரசே! நீர் எங்கு சென்றுவிட்டீர்? உம்முடைய இந்த பாலகனைப் பாரும். உயிரினும் மிக்க இவன் உயிர் துறந்து பூதலத்தில் வீழ்ந்து கிடக்கின்றானே.

हा देव किं मयाऽकृत्यं कृतंपूर्वं भवान्तरे।
तस्य कर्मफलस्येह न पारमुपलक्षये ।। २५. ५५ ।।

एवं तस्या विलापं ते श्रुत्वा नगरपालका:।
जागृतास्त्वरितास्तस्या पार्श्वमीयु: सुविस्मिता: ।। २५. ५६ ।।

का त्वं बालश्च कस्याऽयं पतिस्ते कुत्र तिष्ठति ।
एकैव निर्भया रात्रौ यस्मात्त्वमिह रोदिषि ।। २५. ५७ ।।

एवमुक्ताऽथ सा तन्वी न किंचिद्वाक्यमब्रवीत् ।
अथ ते शंकितास्तस्यां रोमांचिततनूरुहा: ।। २५. ५९ ।।

सन्त्रस्ता: प्राहुरन्योन्य-मुद्धृतायुधपाणय: ।
नूनं स्त्री न भवत्येषा यत: किंचिन्न भाषते ।। २५. ६१ ।।

तस्माद्वध्या भवेदेषा यत्नतो बालघातिनी ।
आकृष्य पक्वणे नीता चाण्डालाय समर्पिता ।। २५. ६४ ।।

25.55. 'தெய்வமே! முன்பிறவியில் என்னால் என்ன பாவம் செய்யப்பட்டதோ? அதன் பயனை இங்கு நான் இப்பொழுது காண்கிறேன்.'

25.56. அவளுடைய இந்தப்பிரலாபத்தைச் செவியுற்ற நகரக் காவலர்கள் விழிப்புற்று ஆச்சரியம் மேலிட்டவர்களாய் அவள் இருந்த இடத்திற்கு விரைந்து சென்றார்கள்.

25.57. 'நீ யார்? இவன் யாருடைய புதல்வன்? உன் நாயகன் எங்கே இருக்கிறான்? இரவில் ஒருத்தியாக பயமில்லாமல் இங்கே அழுது கொண்டு நீ எக்காரணம் பற்றி வந்தாய்?'

25.59—64. மெலிந்த அவள் இங்ஙனம் வினவப்பட்டும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அதனால் அவளிடம் சந்தேகம் மேலிட்ட அவர்கள் பயத்தினால் உடல் சிலிர்க்க ஆயுதங்களைக் கைகளில் உயர்த்திப் பிடித்துக் கொண்டு பின் வருமாறு பேசிக் கொண்டார்கள். 'இவள் மானிட ஸ்திரீ யல்லள் என்பது' நிச்சயம். எதுவும் பேசக் காணோம். குழந்தையைக் கொன்ற இந்தப் பிசாசு கொல்லப்பட வேண்டும்' என்று அவளைப் பிடித்து இழுத்துப் போய்ச் சேரித்தலைவனான சண்டாளனிடம் ஒப்புவித்தார்கள்.

चाण्डालःप्राह तां दृष्ट्वा ज्ञातेयं लोकविश्रुता ।
न दृष्टपूर्वा केनापि लोकडिम्भान्यनेकधा ॥ २५. ६६ ॥

भक्षितान्यनया भूरि भवद्भिः पुण्यमार्जितम् ।
ख्यातिर्वः शाश्वती लोके गच्छध्वं च यथासुखम् ॥ २५. ६७ ॥

हरिश्चन्द्रमथोवाच वाचा परुषया तदा ।
रे दास वध्यता-मेषा दुष्टात्मा मा विचारय ॥ २५. ७१ ॥

तद्वाक्यं भूपतिः श्रुत्वा वज्रपातोपमं तदा ।
वेपमानोऽथ चाण्डालं प्राह स्त्रीवधशंकितः ॥ २५. ७२ ॥

न शक्तोऽहमिदं कर्तुं प्रेष्यं देहि ममापरम् ।
असाध्यमपि यत्कर्म तत्करिष्ये त्वयोदितम् ॥ २५. ७३ ॥

25.66–67. சண்டாளன் அவளைக் கண்டதும், 'இவளைப் பற்றி உலகம் வெகுவாய்க் கேள்விப்பட்டிருக்கிறது; ஆனால் இதுவரை எவராலும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவளால் ஏராளமான குழந்தைகள் பக்ஷிக்கப்பட்டிருக்கின்றன. உங்களால் புண்ணியம் ஸம்பாதிக்கப்பட்டது. உங்களுடைய புகழ் உலகில் என்றும் நிலைத்திருக்கும். இனி நீங்கள் இஷ்டப்படி போகலாம்' என்று கூறினன்.

25.71. பின்பு ஹரிச்சந்திரனிடம் கடுமையாகப் பின்வருமாறு கூறினன். 'அடே! வேலைக்காரா! இந்த துஷ்ட ஜீவன் கொல்லப்பட வேண்டும். ஒன்றும் யோசிக்காதே.'

25.72. இடி விழுந்தாற் போன்ற அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் பெண் கொலைக்கஞ்சிச் சண்டாளனிடம் நடுக்கத்துடன் பின்வருமாறு கூறினன்.

25.73. 'இதைச் செய்ய என்னலாகாது. வேறு ஏவலை அளியும். உம்மால் கூறப்பட்ட அந்தக் கருமம் எவ்வளவு கடினமாயிருந்தாலும் செய்கிறேன்.'

चाण्डाल उवाच —

निर्लज्ज तव चेदस्ति किंचित्पापभयं हृदि ।
किमर्थं दासतां यातश्चाण्डालस्य तु वेश्मनि ।। २५. ८८ ।।

गृहाणैमं ततः खड्ग-मस्याश्छिन्धि शिरोऽम्बुजम् ।
एवमुक्त्वाऽथ चाण्डालो राज्ञे खड्गं न्यवेदयत् ।। २५. ८९ ।।

न जानाति नृपः पत्नीं सा न जानाति भूपतिम् ।
अब्रवीद् भृशदुःखार्ता स्वमृत्युमभिकांक्षती ।। २६. ३ ।।

चाण्डाल श्रृणु मे वाक्यं किंचित् त्वं यदि मन्यसे ।
मृतस्तिष्ठति मे पुत्रो नाऽतिदूरे बहिः पुरात् ।। २६. ४ ।।

तं दहामि हतं यावदानयित्वा तवान्तिकम् ।
तावत्प्रतीक्ष्यतां पश्चादसिना घातयस्व माम् ।। २६. ५ ।।

சண்டாளன் கூறியது—

25.88. ‘வெட்கங் கெட்டவனே! இருதயத்தில் உனக்குப் பாவச் செயலில் பயம் கொஞ்சமேனுமிருந்தால் எதற்காகச் சண்டாளன் வீட்டில் அடிமையாக வந்தாய்?

25.89. ‘இந்தக் கத்தியை எடுத்துக் கொண்டு இவளுடைய தலையை வெட்டி விடு’ என்று சொல்லிவிட்டுச் சண்டாளன் அரசனுக்குக் கத்தியைக் காட்டினன்.

26.3—5. அரசன் பத்தினியைத் தெரிந்து கொள்ளவில்லை. அவளும் அரசனைத் தெரிந்து கொள்ளவில்லை. தன்னுடைய மரணத்தை விரும்பியவளும் மிகுதியான துக்கத்தில் ஆழ்ந்தவளுமான அவள் கூறுவாள்: ‘சண்டாளா! இஷ்டமிருந்தால் நான் சொல்வதைச் சற்றுக் கேள். ஊருக்கு வெளியில் என் புத்திரன் இறந்து கிடக்கிறன். அது வெகு தூரமில்லை. இறந்து போன அவனை உன்னருகில்கொணர்ந்து நான் தகனம் செய்யும் வரை பொறுத்துக் கொள். பிறகு என்னைக் கத்தியால் கொன்று விடு.’

तेनाथ बाढ-मित्युक्त्वा प्रेषिता बालकं प्रति ।
सा जगामातिदुःखार्ता विलपन्ती सुदारुणम् ॥ २६. ६ ॥

श्मशान-भूमिमागत्य बालं स्थाप्याविशद्भुवि ।
भूमौ निपतितं बालं दृष्ट्वाऽऽशीविषपीडितम् ॥ २६. १३ ॥

नरेन्द्रलक्षणोपेत-मचिन्तय-दसौ नृपः ।
अहो कष्टं नरेन्द्रस्य कस्याप्येष कुले शिशुः ॥
जातो नीतः कृतान्तेन कालपाशाद् दुरात्मना ॥ २६. १७ ॥

एवं दृष्ट्वाऽथ तं बालं मातुरंके प्रसारितम् ।
स्मृति-मभ्यागतो राजा हाहेत्यश्रूण्यपातयत् ॥ २६. १८ ॥

ततो राज्ञी महादुःखावेशादिदमभाषत ।
हा वत्स कस्य पापस्य त्वपध्यानादिदं महत् ॥ २६. २० ॥

26.6. அவன் ஒப்புக் கொண்டு அவளை பாலகனிடம் அனுப்பியதும் அவள் மிகுந்த துக்கத்துடன் வருந்திப் பிரலாபித்துக் கொண்டு சென்றாள்.

26.13–17. மயானத்திற்குத் திரும்பி வந்து பாலகனை மடியில் வைத்துக் கொண்டு அவள் உட்கார்ந்தாள். பாம்பின் கடி விஷத்தால் பீடிக்கப்பட்டு கிடத்தப்பட்டிருந்த பாலகனை அரசலக்ஷணங்களுடன் கூடியவனாயிருப்பதைக் கண்டு அரசன் பின்வருமாறு எண்ணினான்: 'ஐயோ! கஷ்டம்! ஏதோ ஒரு அரசகுலத்தில் பிறந்தவன் இவன். கொடியவனான காலனுடைய பாசத்தால் உயிர் கவரப்பட்டிருக்கிறான்.'

26.18. தாயின் மடியில் மலர்த்தப் பட்டிருந்த பாலகனை இவ்வாறு பார்த்துப் பேசுகையில் அரசனுக்குப் பழைய ஞாபகமெழவே அவன் 'ஹா! ஹா!' என்று அலறிக் கண்ணீர் பெருக்கினான்.

26.20. அரசியும் துக்கம் பீரிட்டெழப் பின்வருமாறு கதறினாள்: 'ஐயோ! குழந்தாய்! எந்தப் பாவியுடைய சாபத்தால் இந்தப் பெரியதும் கொடியதுமான துக்கம் வந்துதித்தது என்று காண முடியவில்லையே!

दुःखमापतितं घोरं तद्रूपं नोपलभ्यते ।
हा नाथ राजन्भवता मामपास्य सुदुःखिताम् ।
कस्मिन् संस्थीयते स्थाने विश्रब्धं केन हेतुना ।। २६. २१ ।।

राज्यनाशः सुहृत्त्यागो भार्यातनयविक्रयः ।
हरिश्चन्द्रस्य राजर्षेः किं विधातः कृतं त्वया ।। २६. २२ ।।

इति तस्या वचः श्रुत्वा राजास्थानच्युतस्तदा ।
प्रत्यभिज्ञाय देवीं तां पुत्रं च निधनं गतम् ।। २६. २३ ।।

कष्टं ममैव पत्नीयं बालकश्चापि मे सुतः ।
ज्ञात्वा पपात सन्तप्तो मूर्च्छामतिजगाम ह ।। २६. २४ ।।

सा च तं प्रत्यभिज्ञाय तामवस्थामुपागतम् ।
मूर्च्छिता निपपातार्ता निश्चेष्टा धरणीतले ।। २६. २५ ।।

26.21. 'நாதா! அரசே! இப்படி துக்கத்திலாழ்ந்த என்னை விட்டு நீர் எந்த இடத்தில் கவலையற்றிருக்கிறீர்? அதற்கென்ன காரணமோ தெரியவில்லையே.

26.22. 'பிரம்ம தேவரே! இராஜரிஷியாகிய ஹரிச்சந்திர மகாராஜனுக்கு அரசின் அழிவு, உற்றார் உறவினர் பிரிவு, மனைவி மகன் விற்பனை என்ற ஈதெல்லாம் உம்மால் எதற்காகச் செய்யப்பட்டது?'

26.23–24. அவளுடைய இவ்வார்த்தையைக் கேட்டவனும் அரசிழந்தவனுமாகிய ஹரிச்சந்திரன் அவளைத் தன்னுடைய தேவியெனவும் இறந்தவன் தன் புத்திரனெனவும் அறிந்து, 'ஐயோ! கஷ்டம் இவள் என் பத்தினியாயிற்றே! இந்த பாலகனும் என் புத்திரனல்லவா?' என்று கதறித் தாபம் மேலிட்டவனாய் மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தான்.

26.25. அவளும் அரசனைத் தெரிந்து கொண்டு அதே மூர்ச்சாவஸ்தையை யடைந்து துன்புற்று பூமியில் விழுந்து அசைவின்றிக் கிடந்தாள்.

चेतनां प्राप्य राजेन्द्रो राजपत्नी च तौ समम् ।
विलेपतुः सुसन्तप्तौ शोकभारेण पीडितौ ॥ २६. २६ ॥

राज्ञ्युवाच —

राजन् स्वप्नोऽथ तथ्यं वा यदेतन्मन्यते भवान् ।
तत्कथ्यतां महाभाग मनो वै मुह्यते मम ॥ २६. ४८ ॥

यद्येतदेवं धर्मज्ञ नास्ति धर्मे सहायता ।
तथैव विप्रदेवादिपूजने सत्यपालने ॥ २६. ४९ ॥

नास्ति धर्मः कुतः सत्यं नार्जवं नाऽनृशंसता ।
यत्र त्वं धर्मपरमः स्वराज्यादवरोपितः ॥ २६. ५० ॥

26.26. அரசசிரேஷ்டனும் அரசபத்தினியுமான அவ்விருவரும் உணர்ச்சியைப் பெற்றபின் சோகத்தின் பளுவைத் தாங்கமாட்டாமல் தவித்துப் புலம்பினர்.

அரசபத்தினி கூறியது—

26.48. அரசே! இது கனவா அல்லது உண்மையா? பெருமைமிக்கவரே! இது என்னவென்று தாங்கள் கருதுகிறீர்? என் மனது மயக்கத்திலாழ்ந்துளது.

26.49. தர்மந்தெரிந்தவரே! இது உள்ளபடி உண்மையானல் தருமத்தில் ஸஹாயமுண்டு என்பது பொய். பிராம்மண பூஜையும் தேவ பூஜையும் ஸத்தியத்தைப் பரிபாலிப்பதும் அங்ஙனமே.

26.50. தருமத்தைக் கடைப்பிடித்த நீர் உமது அரசையிழந்ததால் தருமம் என்பது இல்லை. ஸத்தியம் எங்கே? நேர்மையுமில்லை, கருணையுமில்லை.

सूत उवाच —

इति तस्या वचः श्रुत्वा निःश्वस्योष्णं सगद्गदः ।
कथयामास तन्वंग्यै यथा प्राप्तः श्वपाकताम् ।। २६. ५१ ।।

रुदित्वा सा तु सुचिरं निःश्वस्योष्णं सुदुःखिता ।
स्वपुत्रमरणं भीरुर्यथावत्तं न्यवेदयत् ।। २६. ५२ ।।

हरिश्चन्द्र-मथो प्राह शैव्या गद्गदया गिरा ।
कुरुष्व स्वामिनः प्रेष्यं छेदयित्वा शिरो मम ।। २६. ५४ ।।

माऽसत्यं तव राजेन्द्र परद्रोहस्तु पातकम् ।
मया च पूजिता गौरी देवा विप्रास्तथैव च ।।
भविष्यसि पतिस्त्वं मे ह्यन्यस्मिन् जन्मनि प्रभो
।। २६. ५७ ।।

ஸூதர் கூறியது—

26.51. அவளுடைய இவ்வார்த்தையைக் கேட்டு வெதும்பிப் பெருமூச்செறிந்து வாய்குழற அரசன் மெல்லியாளாகிய அவளிடம் தான் சண்டாளத் தன்மையை யடைந்த வரலாற்றைக் கூறினான்.

26.52. பயந்தவளான அவளும் துக்கத்தால் வெதும்பி வெகு நேரமழுது புத்திரன் மரணமெய்திய வரலாற்றைத் தெரிவித்தாள்.

26.54. பின்பு சந்திரமதி ஹரிச்சந்திரனிடம் தழு தழுத்த குரலில் 'என் தலையை வெட்டி உங்கள் யஜமானன் ஏவலைப்பூர்த்தி செய்துவிடுங்கள்' என்று கூறினாள்.

26.57. 'அரசசிரேஷ்டரே! பிறருக்கு துரோகம் செய்த பாதகமும் அஸத்தியமும் உங்களைத் தொடர வேண்டாம். என்னால் கௌரி பூஜிக்கப் பட்டிருக்கிறாள். அவ்வாறே தேவர்களும் பிராம்மணர்களும் பூஜிக்கப்பட்டிருக்கிறார்கள். பிரபுவே! மறுபிறவியில் நீங்களே எனக்குப் பதியாவீர்கள்.'

राजोवाच —

प्रिये न रोचते दीर्घ कालं क्लेशं मयाऽशितुम्।
सोऽहं सुतशरीरेण दीप्यमाने हुताशने।
निपतिष्यामि तन्वंगि क्षन्तव्यं तन्मयाऽधुना ॥ २६. ६६ ॥

अनुज्ञाताऽथ गच्छ त्वं विप्रवेश्म शुचिस्मिते।
यदि दत्तं यदि हुतं गुरवो यदि तोषिताः ॥ २६. ६७ ॥

संगमः परलोके मे निजपुत्रेण चेत्त्वया।
यन्मयासहता किंचिद्रहसि त्वां शुचिस्मिते।
अशेषमुक्तं तत्सर्वं क्षन्तव्यं मम यास्यतः ॥ २६. ७० ॥

राजपत्नीति गर्वेण नावज्ञेयः स मे द्विजः।
सर्वयत्नेन तोष्यः स्यात्स्वामी दैवतवच्छुभे ॥ २६. ७१ ॥

அரசன் கூறியது—

26.66. மெல்லியாளே! பிரியே! என்னால் நெடுங் காலம் இந்த துக்கத்தை அனுபவிக்க இயலாது. ஆகையால் நான் புத்திர சரீரம் அக்னியில் எரியும் பொழுது அதில் விழுந்து விடுகிறேன். அதை நீ இப்பொழுது மன்னித்து விடு.

26.67—70. என்னால் அனுமதிக்கப்பட்டு மனதைத் தேற்றிக் கொண்டு நீ பிராம்மணர் வீட்டுக்குத் திரும்பிப் போ. தானம் செய்ததும் ஹோமம் செய்ததும் குருமார்கள் பிரீதி யடைந்ததும் உண்மையானால் உன்னுடனும் என் மகனுடனும் பரலோகத்தில் எனக்கு ஸங்கமம் ஏற்படட்டும். இரகசியத்தில் சகிக்க முடியாத எந்த வார்த்தையாவது சிறிதளவு என்னால் சொல்லப்பட்டிருந்தாலும் மரணத்தருவாயிலிருக்கும் என்னை அதற்காக நீ மன்னித்து விடவேண்டும்.

26.71. நீ ராஜபத்தினி என்ற கருவத்தால் ஒரு பொழுதும் பிராம்மணரை அவமதித்து விடாதே. மங்கள மானவளே! முழுமுயற்சியுடன் யஜமானர் தெய்வத்தைப் போல் பிரீதி செய்வதற்குரியவராவார்.

राज्ञ्युवाच —

अहमप्यत्र राजर्षे निपतिष्ये हुताशने ।
दुःखभारासहादेव सह यास्यामि वै त्वया ॥ २६. ७२ ॥

त्वया सह मम श्रेयो गमनं नाऽन्यथा भवेत् ।
सह स्वर्गं च नरकं च त्वया भोक्ष्यामि मानद ॥
श्रुत्वा राजा तदोवाच एवमस्तु पतिव्रते ॥ २६. ७४ ॥

ततः कृत्वा चितां राजा आरोप्य तनयं स्वकम् ।
भार्यया सहितो राजा बद्धांजलिपुटस्तदा ॥ २७. १ ॥

चिन्तयन् परमेशानीं शताक्षीं जगदीश्वरीम् ।
पंचकोशान्तरगतां पुच्छब्रह्मस्वरूपिणीम् ॥ २७. २ ॥

ராஜபத்னி கூறியது—

26.72. இராஜரிஷியே! நானும் இங்கு உங்களுடன் அக்னியில் விழுந்து விடுகிறேன். துக்கத்தின் பளுவைத் தாங்க முடியாத நான் உங்களுடன் வந்து விடுகிறேன்.

26.74. 'உங்களுடன் செல்வதுதான் எனக்கு உயர் நலம். அது வேறு விதமாயிருக்க முடியாது. சுவர்க்கமோ நரகமோ உங்களுடன் கூடவே அனுபவிப்பேன்.' இதைக் கேட்ட அரசன் 'பதிவிரதையே! அப்படியே நடக்கட்டும்' என்று கூறினன்.

27.1–2. பிறகு அரசன் சிதையை அடுக்கி அதன் மேல் தன் மகனைப் படுக்கவைத்து மனைவியுடன் கை கூப்பிக் கொண்டு பஞ்சகோசமத்தியில் புச்சப்ரஹ்மஸ்வரூபிணி யாகவும், சதாக்ஷீ எனப் பெயர் பெற்ற ஜகதீசுவரியாகவும், பரமேசுவரியாகவும்;

रक्तांबरपराधीनां करुणारससागराम् ।
नानायुधधरा-मम्बां जगत्पालनतत्पराम् ।। २७. ३ ।।

तस्य चिन्तयमानस्य सर्वे देवाः सवासवाः ।
धर्मं प्रमुखतः कृत्वा समाजग्मुस्त्वरान्विताः ।। २७. ४ ।।

आगत्य सर्वे प्रोचुस्ते राजञ्छृणु महाप्रभो ।
अहं पितामहः साक्षाद्धर्मश्च भगवान्स्वयम् ।। २७. ५ ।।

साध्यासविश्वे मरुतो लोकपालाः सचारणाः ।
नागाः सिद्धाः सगन्धर्वा रुद्राश्चैव तथाश्विनौ ।। २७. ६ ।।

एते चान्ये च बहवो विश्वामित्रस्तथैव च ।
विश्वत्रयेण यो मैत्रीं कर्तुमिच्छति धर्मतः ।
विश्वामित्रः स तेऽभीष्ट-माहर्तुं सम्यगिच्छति ।। २७. ७ ।।

27.3–4. சிவப்பாடையணிந்தவளும், கருணைக்கடல் போன்றவளும், பல விதமான ஆயுதங்களைத் தரித்தவளும், உலகத்தைப் பரிபாலிப்பதில் ஊன்றியவளும் ஆகிய அம்பிகையை தியானிக்கையில் எல்லா தேவர்களும் இந்திரனுடன் தர்மராஜனை முன்னிட்டுக் கொண்டு விரைவில் அங்கு வந்து கூடினார்கள்.

27.5–7. அங்ஙனம் எழுந்தருளிய அவர்கள் பின் வருமாறு கூறினார்கள்: 'அரசே! பிரபுவே! கேளும். நான் பிரம்மா. இவர் ஸாக்ஷாத் தர்ம தேவதை. இவர்கள் விச்வே தேவர்களுடன் ஸாத்தியர்களும் மருத்துக்களும் லோகபாலர்களும் சாரணர்களும் நாகர்களும் சித்தர்களும் கந்தர்வர்களும் ருத்திரர்களும் அசுவினி தேவர்களும், இன்னும் பலரும். விசுவாமித்திரரும் வந்திருக்கிறார். மூவுலகுடனும் தர்ம மார்க்கத்தில் எவர் நட்புடையவராயிருக்க விரும்பினாரோ அந்த விசுவாமித்திரர் உனக்குச் சிறந்த வகையில் மனோரதத்தைப் பூர்த்தி செய்விக்க விரும்புகிறார்.

ततोऽमृतमयं वर्ष-मपमृत्यु-विनाशनम् ।
इन्द्रः प्रासृज-दाकाशाच्चितामध्यगते शिशौ ॥ २७. ११ ॥

समुत्तस्थौ मृतः पुत्रो राज्ञस्तस्य महात्मनः ।
सुकुमारतनुः स्वस्थः प्रसन्नः प्रीतमानसः ॥ २७. १२ ॥

ततो राजा हरिश्चन्द्रः परिष्वज्य सुतं तदा ।
सभार्यः स्वश्रिया युक्तो दिव्यमाल्याम्बरावृतः ॥ २७. १३ ॥

स्वस्थः संपूर्णहृदयो मुदा परमयावृतः ।
बभूव तत्क्षणादिन्द्रो भूपं चैव-मभाषत ॥ २७. १४ ॥

सभार्यस्त्वं सपुत्रश्च स्वर्लोकं सद्गतिं पराम् ।
समारोह महाभाग निजानां कर्मणां फलम् ॥ २७. १५ ॥

27.11. சிதையின் நடுவிலிருந்த குழந்தைமேல் அப்பொழுது இந்திரன் அபமிருத்யுவைப் போக்கும் அமிருத மழையைப் பொழிந்தான்.

27.12. மகாத்மாவாகிய அரசனுடைய புத்திரன் மரித்தவன் அழகிய உடலுடன் சொஸ்தனாய் மலர்ந்த முகமுடையவனாய்ச் சந்தோஷம் நிறைந்த மனத்தினனாய் எழுந்தான்.

27.13–14. அப்பொழுது ஹரிச்சந்திர மகாராஜன் மகனைத் தழுவிக் கொண்டு மனைவியுடன் தனது இயற்கைப் பொலிவுடன் கூடியவனாய்த் தெய்வீகமான ஆடைகளும் மாலைகளுந் தரித்தவனாய்ச் சொஸ்தனாய் மகிழ்ச்சி நிறைந்த மனத்தினனாய் விளங்கினான். அதே சமயத்தில் இந்திரன் அரசனிடம் பின் வருமாறு கூறினான்.

27.15. 'மஹாபாக்கியசாலியே! உனது நற்கருமங்களின் பயனாய் உனக்குரியதாயிருக்கும் உயர்ந்த ஸத்கதியான சுவர்க்கலோகத்திற்கு மனைவியுடனும் மகனுடனும் ஏறிச் செல்லலாம்'

हरिश्चन्द्र उवाच —

देवराजाननुज्ञातः स्वामिना श्वपचेन हि ।
अकृत्वा निष्कृतिं तस्य नारोक्ष्ये वै सुरालयम् ॥ २७. १६ ॥

धर्म उवाच —

तवैवं भाविनं क्लेशमवगम्यात्ममायया ।
आत्मा श्वपाचतां नीतो दर्शितं तच्च पक्वणम् ॥ २७. १७ ॥

सूत उवाच —

राज्येऽभिषिच्य तनयं रोहिताख्यं महामनाः ।
अयोध्याख्ये पुरे रम्ये हृष्टपुष्टजनान्विते ॥ २७. ३६ ॥

तनयं सुहृदश्चापि प्रतिपूज्याऽभिनन्द्य च ।
पुण्येन लभ्यां विपुलां देवादीनां सुदुर्लभाम् ॥ २७. ३७ ॥

संप्राप्य कीर्ति-मतुलां विमाने स महीपतिः ।
आसांचक्रे कामगमे क्षुद्रघण्टाविराजिते ॥ २७. ३८ ॥

ஹரிச்சந்திரன் கூறியது—

27.16. தேவராஜரே! எனது யஜமானராகிய சண்டாளனுடைய அனுமதியில்லாமலும் அவருக்கு நன்றி செலுத்தாமலும் தேவலோகத்திற்கு நான் செல்லமாட்டேன்.

தர்மதேவதை கூறியது—

27.17. உனக்கு வரவிருந்த துன்பத்தை உணர்ந்து கொண்டு நானே எனது ஆத்மமாயையால் சண்டாளவடிவெடுத்துவந்து அந்தச் சேரியையும் தோற்றுவித்தேன்.

ஸூதர் கூறியது—

27.36–38. பெரிய மனது படைத்த அரசன் தனது புத்திரனாகிய ரோஹிதனுக்கு மகிழ்ச்சி பொங்கும் மக்கள் நிறைந்ததும் அழகியதுமான அயோத்திமாநகரில் இராஜ்யாபிஷேகம் செய்து விட்டு அவனிடமும் நண்பர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு சந்தோஷமாகப் புண்ணியத்தால் அடையப் பெற்றதும் பரந்ததும் தேவர்கள் முதலியோருக்கும் அடைதற்கரியதுமான ஒப்புயர்வற்ற கீர்த்தியை யடைந்து அவ்வரசன் சிறுமணிகளால் அலங்கரிக்கப் பெற்ற இஷ்டப்படி செல்வதுமான விமானத்தில் ஏறினான்.

एतत्ते सर्वमाख्यातं हरिश्चन्द्रस्य चेष्टितम् ।
यः शृणोति च दुःखार्तः स सुखं लभतेऽन्वहम् ॥ २७. ४१ ॥

27.41. இவ்வாறாக ஹரிச்சந்திரனுடைய சரித்திரம் முழுதும் உனக்குக் கூறப்பட்டது. துக்கத்தால் பீடிக்கப் பட்ட ஒருவன் இதைக் கேட்டால் தொடர்ச்சியாக சுகத்தை யடைவான்.

॥ सूर्यवंशचरित्रे हरिश्चन्द्रोपाख्यानं समाप्तम् ॥

ஸூர்ய வம்ச சரித்திரத்தில் ஹரிச்சந்திர

உபாக்கியானம் முற்றும்.

॥ पराशक्ति-प्रभाव-वर्णनम् ॥ ३१ ॥

जनमेजय उवाच —

विचित्रमिदमाख्यानं हरिश्चन्द्रस्य कीर्तितम् ।
शताक्षी-पादभक्तस्य राजर्षेर्धार्मिकस्य च ॥ २८. १ ॥

शताक्षी सा कुतो जाता देवी भगवती शिवा ।
तत्कारणं वद मुने सार्थकं जन्म मे कुरु ॥ २८. २ ॥

व्यास उमाच —

दुर्गमाख्यो महादैत्यः पूर्वं परमदारुणः ।
हिरण्याक्षान्वये जातो रुरुपुत्रो महाखलः । ॥ २८. ५ ॥

31. பராசக்திப்ரபாவ வர்ணனை

ஜனமேஜயன் கூறியது—

28.1. சதாக்ஷியின் திருவடிகளில் பக்தி பூண்டவரும் ராஜரிஷியும் தார்மிகருமான ஹரிச்சந்திரனுடைய சரிதம் கூறப்பட்டது. இது விசித்திரமானது.

28.2. மங்கள வடிவினளும் பகவதியுமான அந்த சதாக்ஷி தேவி எப்படித் தோன்றினுள்? முனிவரே! அக்காரணத்தைக் கூறி என் பிறவியைப் பயனுடையதாய்ச் செய்யும்.

வியாஸர் கூறியது—

28.5. முன்னொருகாலத்தில் மிகவும் கொடியவஞன ஒரு அசுரன் இருந்தான். அவன் பெயர் துர்க்கமன்; ஹிரண்யாக்ஷன் பரம்பரையில் தோன்றியவன்; ருரு புத்திரன், மகாபலசாலி.

निर्जरा सजरा जाता हविर्भागाद्यभावतः ।
रुरोध स तदा दैत्यो नगरीममरावतीम् ॥ २८. १८ ॥

अशक्तास्तेन ते योद्धुं वज्रदेहासुरेण च ।
पलायनं तदा कृत्वा निर्गता निर्जराः क्वचित् ॥ २८. १९ ॥

अग्नौ होमाद्यभावात्तु वृष्टयभावोऽप्यभून्नृप ।
वृष्टेरभावे संशुष्कं निर्जलं चापि भूतलम् ॥ २८. २१ ॥

अनर्थे त्वेवमुद्भूते ब्राह्मणाः शान्ततेजसः ।
गत्वा हिमवतः पार्श्वे रिराधयिषवः शिवाम् ॥ २८. २४ ॥

समुद्धर महेशानि संकटात्परमोत्थितात् ।
जीवनेन विनाऽस्माकं कथं स्यात् स्थितिरम्बिके ॥ २८. २९ ॥

28.18. அவ்வசுரன் அமராவதி நகரத்தை முற்றுகை யிட்டான். மூப்பற்றவர்கள் எனப் பெயர் பெற்ற தேவர்கள் ஹவிர்ப்பாகம் முதலியவையின்மையால் மூப்புடையவர் களாயினர்.

28.19. அதனுல் அவர்கள் வஜ்ரதேகம் படைத்த அசுரனுடன் போர்புரியச் சக்தியற்றவர்களாய்ப் புறங்காட்டி எங்கேயோ ஓடி ஒளிந்தனர்.

28.21. அரசே! அக்னியில் ஹோமங்கள் நடைபெறு மற் போனமையால் மழை பெய்யாமற் போயிற்று. மழை யின்மையால் பூமி உலர்ந்து நீரில்லாததாயிற்று.

28.24. இப்படி அனர்த்தம் விளைந்த பொழுது சாந்த மான தேஜஸுடைய பிராம்மணர்கள் இமயமலையின் பக்கம் சென்று மங்கள ஸ்வரூபியான அம்பிகையைப் பூஜித்தனர்.

28.29. 'அம்பிகே! மஹேசுவரி! கொடியதாய் எழுந் துள்ள இந்தச் சங்கடத்திலிருந்து எங்களைக் கைதூக்கி விடு. பிழைக்க வழியில்லாமல் எங்களுடைய நிலை என்ன ஆகும்?

प्रसीद त्वं महेशानि प्रसीद जगदम्बिके ।
अनन्तकोटिब्रह्माण्डनायिके ते नमो नमः ॥ २८. ३० ॥

इति संप्रार्थिता देवी भुवनेशी महेश्वरी ।
अनन्ताक्षिमयं रूपं दर्शयामास पार्वती ॥ २८. ३३ ॥

बाणमुष्टिं च कमलं पुष्पपल्लवमूलकान् ।
शाकादीन् फलसंयुक्तानन्तरससंयुतान् ॥ २८. ३५ ॥

क्षुत्तृड्जरापहान् हस्तै-र्बिभ्रती च महाधनुः ।
सर्वसौन्दर्यसारं तद्रूपं लावण्यशोभितम् ॥ २८. ३६ ॥

मोचयामास लोकेषु वारिधाराः सहस्रशः ।
नवरात्रं महावृष्टि-रभून्नेत्रोद्भवैर्जलैः ॥ २८. ३८ ॥

28.30. 'மஹேசுவரி ! அருள்புரிவாய். ஜகதம்பிகையே ! அருள்புரிவாய். எண்ணிறந்த பிரம்மாண்டங்களின் நாயகியே ! உனக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.'

28.33. புவனேசுவரியும் மகேசுவரியுமான பார்வதீ தேவி இங்ஙனம் வேண்டிக் கொள்ளப்பட்டு எண்ணிறந்த கண் படைத்த வடிவுடன் காட்சியளித்தாள்.

28.35. அவள் கைகளில் பாணங்களின் கற்றையும், தாமரையும், பூக்கள், இலைகள், வேர்கள், கீரைகள், அளவற்ற ரஸம் நிறைந்த பழங்கள் ஆகியவை இருந்தன.

28.36. பசி, தாகம், மூப்பு முதலியவற்றைப் போக்கும் சிறந்ததொரு வில்லைக் கையில் தாங்குபவளாய் அழகனைத்தின் ஸாரமாய் அழகின் பிரகாசமாய் அவ்வுருவம் விளங்கிற்று.

28.38. அவளுடைய கண்ணிலிருந்து பெருகிய ஜலத்தால் உலகங்களில் ஆயிரக்கணக்கான நீரோட்டங்களை ஒன்பது இரவுபகல் தோற்றுவித்தாள்.

कामयानन्तरसै-र्युक्तान् या नवीनोद्भवं ददौ ।
शाकंभरीति नामाऽपि तद्दिनात्समभून्नृप ।। २८. ४७ ।।

ततः कोलाहले जाते दूतवाक्येन बोधितः ।
ससैन्यः सायुधो योद्धुं दुर्गमाख्योऽसुरो ययौ ।। २८. ४८ ।।

ततो देवी-शरीरात्तु निर्गतास्तीव्रशक्तयः ।
कालिका तारिणी बाला त्रिपुरा भैरवी रमा ।
बगला चैव मातंगी तथा त्रिपुरसुन्दरी ।। २८. ५५ ।।

कामाक्षी तुलजा देवी जम्भिनी मोहिनी तथा ।
छिन्नमस्ता गुह्यकाली दशसाहस्रबाहुका ।। २८. ५६ ।।

द्वात्रिंशच्छक्तयश्चान्याश्चतुष्षष्टिमिताः पराः ।
असंख्यातास्ततो देव्यः समुद्भूतास्तु सायुधाः ।। २८. ५७ ।।

28.47. அரசே ! விரும்பப்படுவனவும் அளவற்ற ரஸத்துடன் கூடியவையுமான புதிய உணவுச் செடிகளைத் தோற்றுவித்ததால் அந்த நாளிலிருந்து அவளுக்கு சாகம்பரீ என்ற நாமம் ஏற்பட்டது.

28.48. அதன் மேல் எங்கும் மகிழ்ச்சியின் ஆரவாரம் ஏற்படவே அதை தூதர்களின் வாக்கியத்தால் உணர்ந்த துர்க்கமன் என்ற அசுரன் ஆயுதங்களுடனும் சேனையுடனும் போருக்குக் கிளம்பினுன்.

28.55. அப்பொழுது தேவியின் சரீரத்திலிருந்து தீவிரமான சக்திகள் வெளிப் போந்தனர்: காளிகா, தாரிணீ, பாலா, த்ரிபுரா, பைரவீ, ரமா, பகலா, மாதங்கீ, த்ரிபுரஸுந்தரீ.

28.56. காமாக்ஷீ, துலஜாதேவி, ஜம்பினீ, மோஹினீ, சின்னமஸ்தா, பத்தாயிரம் கைகள் படைத்த குஹ்யகாளீ.

28.57. இன்னும் முப்பத்திரண்டு சக்திகளும், வேறு அறுபத்தி நான்கு சக்திகளும், எண்ணிறந்த உருவங் கொண்ட தேவிமார்களும் ஆயுதங்களுடன் தோன்றினர்.

ततोऽभवन्महद्युद्धं देव्या दैत्यस्य चोभयोः ।
तस्य तेजस्तु निर्गत्य देवीरूपे विवेश ह ॥ २८. ६६ ॥
हते तस्मिन् महावीर्ये शान्तमासीज्जगत्त्रयम् ।
ततो ब्रह्मादयःसर्वे तुष्टुवुर्जगदम्बिकाम् ॥ २८. ६७ ॥

देवा ऊचुः —

जगद्भ्रम-विवर्तैककारणे परमेश्वरि ।
नमः शाकम्बरि शिवे नमस्ते शतलोचने ॥ २८. ६९ ॥
अनन्तकोटिब्रह्माण्डजननीं दिव्यविग्रहाम् ।
बह्मविष्णवादिजननीं सर्वभावैर्नता वयम् ॥ २८. ७२ ॥

28.66. அதன் மேல் அசுரனும் தேவியுமாகிய இருவரிடை யுத்தம் ஏற்பட்டது. முடிவில் அவனுடைய உடலிலிருந்து ஒரு ஒளி கிளம்பி தேவியின் ரூபத்தில் புகுந்தது.

28.67. மகாவீரியம் படைத்த அவன் அத்துடன் மடிந்து மூவுலகும் அமைதியுடையதாயிற்று. அப்பொழுது பிரம்மா முதலிய தேவர்களனைவரும் ஜகதம்பிகையைத் துதித்தனர்.

தேவர்கள் கூறியது—

28.69 உலகின் சுழற்சிக்கு ஒரே காரணமாய் விளங்கும் பரமேசுவரி! சாகம்பரி! உனக்கு நமஸ்காரம்! சிவபத்தினியே! சதாக்ஷியே! உனக்கு நமஸ்காரம்.

28.72. எண்ணிறந்த பிரம்மாண்ட கோடிகளின் தாயாக திவ்ய வடிவு கொண்டவளும், பிரம்மா விஷ்ணு முதலியோரைத் தோற்றுவித்தவளுமான உன்னை எல்லா வாற்றாலும் நாங்கள் நமஸ்கரிக்கிறோம்.

देव्युवाच —

पूज्याहं सर्वदा सेव्या युष्माभिः सर्वदैव हि ।
नातः परतरं किंचित्कल्याणायोपदिश्यते ॥ २८. ७७ ॥

पठनीयं ममैतद्धि माहात्म्यं सर्वदोत्तमम् ।
तेन तुष्टा भविष्यामि हरिष्यामि तथाऽऽपदः ॥ २८. ७८ ॥

दुर्गमासुरहन्त्रीत्वाद् दुर्गेति मम नाम यः ।
गृह्णाति च शताक्षीति मायां भित्त्वा व्रजत्यसौ ॥ २८. ७९ ॥

व्यास उवाच —

इत्युक्त्वाऽन्तर्हिता देवी देवानां चैव पश्यताम् ।
सन्तोषं जनयत्येवं सच्चिदानन्दरूपिणी ॥ २८. ८० ॥

தேவி கூறியது—

28.77. உங்களால் எப்பொழுதும் நான் பூஜிக்கப் படுதல் வேண்டும். உங்களுடைய நன்மைக்கு இதைத் தவிர வேறு எதுவும் வேண்டியதில்லை.

28.78. தலைசிறந்த என்னுடைய இம்மாகாத்மியத்தை எப்பொழுதும் பாராயணம் செய்ய வேண்டும். அதனால் சந்தோஷமடைந்த நான் ஆபத்துக்களைப் போக்குவேன்.

28.79. துர்க்கமன் என்ற அசுரனை வதைத்ததால் எனக்கு ஏற்பட்ட துர்க்கை என்ற நாமத்தையும் சதாக்ஷீ என்ற நாமத்தையும் எவன் ஜபிக்கிறானோ அவன் மாயையைக் கடந்து செல்கிறான்.

வியாஸர் கூறியது—

28.80 இவ்வாறு கூறிவிட்டு தேவியானவள் தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து விட்டாள். ஸச்சிதானந்த ரூபிணியான தேவி இங்ஙனம் ஸந்தோஷத்தை உண்டாக்குகிறாள்.

तामविज्ञाय राजेन्द्र नैव मुक्तो भवेन्नरः ।
यदा चर्मवदाकाशं वेष्टयिष्यन्ति मानवाः ॥
तदा शिवामविज्ञाय दुःखस्यान्तो भविष्यति ॥ २९. १० ॥

अत एव श्रुतौ प्राहुः श्वेताश्वतरशाखिनः ।
ते ध्यानयोगानुगता अपश्यन् देवात्मशक्तिं स्वगुणैर्निगूढाम्
॥ २९. ११ ॥

तस्मात्सर्वप्रयत्नेन जन्मसाफल्यहेतवे ।
लज्जया वा भयेनाऽपि भक्त्या वा प्रेमयुक्तया ॥ २९. १२ ॥

सर्वसंगं परित्यज्य मनो हृदि निरुध्य च ।
तन्निष्ठस्तत्परो भूया-दिति वेदान्तडिण्डिमः ॥ २९.१३ ॥

29.10. அரசசிரேஷ்டா! அவளை அறியாமல் மனிதன் முக்தி எய்த இயலாது. எப்பொழுது மனிதர்கள் தோலைப் போல் ஆகாயத்தைச் சுருட்டக் கூடியவர்களாவார்களோ அப்பொழுது சிவபத்னியான தேவியை அறியாமல் துக்கத்தின் முடிவைக் காண்பார்கள்.

29.11. அதனால்தான் சுவேதாசுவதர சாகையைப் படித்தவர்கள் வேதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: 'தனது குணங்களில் மறைந்திருக்கும் தேவாத்ம சக்தியான பரதேவதையை தியானயோகத்தைக் கைக்கொண்ட அவர்கள் கண்டு கொண்டனர்.'

29.12–13. ஆகையால் பிறவிப் பயனை எய்துதற்கு எல்லாவகையிலும் முயன்று, வெட்கத்தாலோ, பயத்தாலோ, பிரேமை மிகுந்த பக்தியாலோ எல்லாப் பற்றுக்களையும் ஒழித்து மனதை இருதயத்தில் நிறுத்தி வேறு சிந்தையில்லாமல் அந்த நிஷ்டையில் நிலை பெற வேண்டும் என்பது வேதாந்தத்தின் முழக்கம்.

येन केन मिषेणापि स्वपंस्तिष्ठन्व्रजन्नपि ।
कीर्तयेत्सततं देवीं स वै मुच्येत बन्धनात् ।। २९. १४ ।।

आराधय पराशक्तिं प्रपंचोल्लासवर्जिताम् ।
तस्यां चित्तलयो यः स तस्या आराधनं स्मृतम् ।। २९. १६ ।।

जनमेजय उवाच —

गौरी-लक्ष्मी-सरस्वत्यो दत्ताः पूर्वं पराम्बया ।
हराय हरये तद्वन्नाभिपद्मोद्भवाय च ।। २९. १९ ।।

तुषाराद्रेश्च दक्षस्य गौरी कन्येति विश्रुतम् ।
क्षीरोदधेश्च कन्येति महालक्ष्मीरिति स्मृतम् ।। २९. २० ।।

मूलदेव्युद्भवानां च कथं कन्यात्व-मन्ययोः ।
असंभाव्य-मिदं भाति संशयोऽत्र महामुने ।। २९. २१ ।।

29.14. எந்தச் சாக்கிலாவது உறங்கிக் கொண்டோ, நின்று கொண்டோ, நடந்து கொண்டோ, தேவியை எப்பொழுதும் ஒருவன் துதிக்கட்டும். அவன் தளைகளினின்றும் விடுபடுவான் என்பது நிச்சயம்.

29.16. பிரபஞ்ச லீலையைக் கடந்து நிற்கும் பராசக்தியை ஆராதிப்பாயாக. அவளிடம் சித்தம் லயிப்பதே அவளுடைய ஆராதனை என்று கூறப்படும்.

ஜனமேஜயன் கூறியது—

29.19. பராம்பிகையால் ஆதியில் கௌரியும், லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் முறையே ஹரனுக்கும் ஹரிக்கும் பிரம்மாவுக்கும் கொடுக்கப்பட்டனர்.

29.20. கௌரியானவள் இமவானுக்குப் புத்திரியாகவும் தக்ஷனுக்கும் புத்திரியாகவும் இருந்தாள் என்றும், மஹாலஷ்மி ஸமுத்திர ராஜனின் புத்திரி என்றும் கூறப்படுகிறது.

29.21. ஆதிமூலமான பராம்பிகையினிடம் உதித்த இவர்கள் எவ்வாறு பிறர்க்குப் பெண்ணாயினர்? மகா முனிவரே! இது பொருத்தமற்றதாய்த் தோன்றுவதால் இதில் எனக்குச் சந்தேகம்.

व्यास उवाच —

देवी त्रयं यदा देवत्रयायादात्पराम्बिका।
तदा प्रभृति ते देवाः सृष्टिकार्याणि चक्रिरे ॥ २९. २४ ॥

कस्मिश्चित्समये राजन् दैत्या हालाहलाभिधाः।
महापराक्रमा जातास्त्रैलोक्यं तैर्जितं क्षणात् ॥ २९. २५ ॥

कामारिः कैटभारिश्च युद्धोद्योगं च चक्रतुः।
महताऽथ प्रयत्नेन ताभ्यां ते दानवा हताः ॥ २९. २८ ॥

स्वस्वस्थानेषु गत्वा तावभिमानं च चक्रतुः।
स्वशक्त्योर्निकटे राजन्यद्वशादेव ते हताः ॥ २९. २९ ॥

வியாஸர் கூறியது—

29.24. பராம்பிகையானவள் மூன்று தேவிமார்களையும் எப்பொழுது மும்மூர்த்திகளுக்கும் கொடுத்தாளோ அது முதல் அந்த தேவர்கள் சிருஷ்டி முதலிய காரியங்களைச் செய்து வந்தனர்.

29.25. அரசே! ஒரு சமயம் ஹாலாஹலர் எனப் பெயர் பெற்ற அசுரர்கள் தோன்றி மகா பராக்கிரமசாலி களாய் விளங்கிய பொழுது மூவுலகங்களும் நொடிப் பொழு தில் அவர்களால் ஜயிக்கப்பட்டன.

29.28. காமனை வென்ற ருத்திரனும் கைடபனை வென்ற விஷ்ணுவும் அவனை எதிர்த்துப் போர் தொடங்கினர். அவர்களுடைய பெரும் பிரயத்தினத்தால் அவ்வசுரர்கள் கொல்லப்பட்டனர்.

29.29. அரசே! ருத்திரனும் விஷ்ணுவும் தத்தமிருப் பிடஞ் சென்று, தம்முடைய சக்திகளாகிய எவர்களுடைய வசத்தால் அசுரர்களைக் கொன்று வெற்றியடைந்தார்களோ அவர்களருகாமையிலிருந்து கொண்டே தாங்கள் வென்ற தாய் கர்வம் கொண்டனர்.

अभिमानं तयोर्ज्ञात्वाच्छलहास्यं च चक्रतुः।
महालक्ष्मीश्च गौरी च हास्यं दृष्ट्वा तयोस्तु तौ ॥ २९. ३० ॥

देवावतीव संक्रुद्धौ मोहितावादिमायया।
दुरुत्तरं च ददतु-रवमानपुरस्सरम् ॥ २९. ३१ ॥

ततस्ते देवते तस्मिन् क्षणे त्यक्त्वा तु तौ पुनः।
अन्तर्हिते चाभवतां हाहाकारस्तदाह्यभूत् ॥ २९. ३२ ॥

ब्रह्मा चिन्तातुरो जातः किमेतत्समुपस्थितम्।
पराशक्ति-प्रकोपात्तु जातमेतदितिस्म ह ॥ २९. ३७ ॥

जानंस्तदा सावधानः पद्मजोऽभून्नृपोत्तम।
ततस्तयोस्तु स्वस्थ्यर्थं मन्वादीन्स्वसुतानथ ॥ २९. ३९ ॥

आह्वयामास धर्मात्मा सनकादींश्च सत्वरः।
उवाच वचनं तेभ्यः सन्नतेभ्यस्तपोनिधिः ॥ २९. ४० ॥

29.30-31. அவர்களுடைய கர்வத்தைக் கண்டு கௌரியும் மகாலக்ஷ்மியும் ஏளனமாய்ச் சிரித்தனர். ஆதி மாயையால் மோக மடைந்திருந்த தேவர்களிருவரும் அவர் களுடைய பரிஹாஸத்தைக் கண்டு கடுங் கோபங் கொண்டு தேவிகளை அவமானப் படுத்தித் தகாத வார்த்தைகளைப் பேசினர்.

29.32. தேவிகளிருவரும் அதே கணத்தில் அவர்களை விட்டு விலகி மறைந்து விட்டனர். அப்பொழுது 'ஹா ! ஹா !' என்ற ஆச்சரிய ஒலி கிளம்பிற்று.

29.37. இது என்ன இப்படியாகிவிட்டதே என்று பிரம்மா கவலையிலாழ்ந்தார். இது பராசக்தியின் கோபத்தின் விளைவு என்பதை உணர்ந்தார்.

29.39–40. அரசசிரேஷ்டரே ! அதை அறிந்த தவச் செல்வரும் தர்மாத்மாவுமாகிய பிரம்மா ஸாவதான முடையவராய் அவர்களுடைய நன்மைக்காகத் தன் குமாரர் களாகிய ஸநகாதி, மனு முதலியவர்களை விரைவில் கூப்பிட்டு அவர்கள் வணங்கி நிற்க அவர்களிடம் பின்வருமாறு கூறினர்.

शिवविष्णू च विक्षिप्तौ पराशक्तिप्रकोपतः ।
तस्मात्तां परमां शक्तिं यूयं सन्तोषयन्त्वथ ।। २६. ४१ ।।

अत्यद्भुतं तपः कृत्वा भक्त्या परमया युताः ।
यथा तौ पूर्ववृत्तौ च स्यातां शक्तियुतावपि ।। २६. ४२ ।।

पितामहवचः श्रुत्वा गताः सर्वे वनान्तरे ।
रिराधयिषवः सर्वे दक्षाद्या विमलान्तराः ।। २६. ४५ ।।

ततः प्रसन्ना सा देवी प्रोवाच पिकभाषिणी ।
वरं ब्रूत महाभागा वरदाऽहं सदामता ।। ३०. ८ ।।

तस्यास्तु वचनं श्रुत्वा हरविष्णवोस्तनोः शमम् ।
तयोस्तच्छक्तिलाभं च वव्रिरे नृपसत्तम ।। ३०. ६ ।।

29.41. 'பராசக்தியின் கோபத்தால் சிவனும் விஷ்ணுவும் விலக்கப்பட்டுள்ளனர். ஆகையால் நீங்கள் அப்பராசக்தியைக் சந்தோஷப்படுத்த வேண்டும்.

29.42. 'பரமபக்தியுடன் கூடியவர்களாய் மிக அற்புதமான தவத்தைச் செய்து மீண்டும் அவ்விருவரும் எவ்வாற்ருல் முன் போலவே சக்தியுடன்' கூடியவர்களாவார்களோ, அப்படிச் செய்யவேண்டும்.'

29.45. பிரம்மாவின் வார்த்தையைக் கேட்டு தக்ஷன் முதலானவர்கள் எல்லோரும் மாசற்ற மனத்துடன் வனத்துட் புகுந்து தேவியை ஆராதித்தனர்.

30.8. அதனுல் பிரஸன்னமான தேவியானவள் குயில் போன்ற குரலில் பின்வருமாறு கூறினுள். 'மகாபாக்கியசாலிகளே! வரமளிப்பவளாய்க் கருதப்படுபவள் நான். உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள்.'

30.9. அரசசிரேஷ்டரே! அவர்கள் அவ்வார்த்தையை கேட்டு ஹரிஹரர்களின் சரீரத்திற்குச் சாந்தியையும் அவர்கள் மீண்டும் சக்திகளைப் பெறுவதையும் வரமாய் வேண்டினர்.

दक्षोऽथ पुनरप्याह जन्म देवि कुले मम।
भवेत्तवाम्ब येनाहं कृतकृत्यो भवे इति ॥ ३०. १० ॥

देव्युवाच —

मच्छक्त्योरवमानाच्च जाताऽवस्था तयोर्द्वयोः।
नैतादृशः प्रकर्तव्यो मेऽपराधः कदाचन ॥ ३०. १२ ॥

अधुना मत्कृपालेशाच्छरीरे स्वस्थता तयोः।
भविष्यति च ते शक्ती त्वद्गृहे क्षीरसागरे॥
जनिष्यतस्तत्र ताभ्यां प्राप्स्यतः प्रेरिते मया ॥ ३०. १३ ॥

व्यास उवाच —

इत्युक्त्वाऽन्तर्दधे देवी मणिद्वीपाधिवासिनी।
दक्षाद्या मुनयः सर्वे ब्रह्माणं पुनराययुः ॥ ३०. १७ ॥

30.10. தக்ஷப் பிரஜாபதி மேலும் கூறினார்: 'தேவி! அம்பிகையே! எதனால் நான் கிருத கிருத்யனாவேனோ அவ்வண்ணம் உனது அவதாரம் என் குலத்தில் ஏற்படவேண்டும்.'

தேவி கூறியது—

30.12. 'ஹரிஹரர்களாகிய இருவரும் என்னுடைய சக்திகளை அவமதித்ததால் இப்படிப்பட்ட அவஸ்தை அவர்களுக்கேற்பட்டது. இனியொருபொழுதும் இப்படிப்பட்ட அபராதம் எனக்கு நிகழாதிருக்க வேண்டும்.

30.13. இப்பொழுது என்னுடைய கிருபையின் ஒரு அம்சத்தால் அவர்களுக்குச் சரீரத்தில் சொஸ்த மேற்படும். அவர்களுடைய சக்திகள் உன் கிருஹத்திலும் ஸமுத்திர ராஜனிடத்திலும் பிறப்பார்கள். பிறகு என்னால் பிரேரணை செய்யப்பட்டு அவர்களை அடைவார்கள்.

வியாஸர் கூறியது—

30.17. மணித்துவீபத்தில் வசிக்கும் தேவியானவள் இவ்வாறு கூறிவிட்டு மறைந்து விட்டாள். தக்ஷன் முதலியவர்களும் முனிவர்களும் எல்லோரும் மறுபடி பிரம்மாவிடம் சென்றனர்.

कदाचिदथ काले तु महः शाक्तमवातरत्।
दक्षगेहे महाराज त्रैलोक्येऽप्युत्सवोऽभवत्॥ ३०. २०॥

तस्या नाम सतीं चक्रे सत्यत्वात्परसंविदः।
ददौ पुनः शिवायाऽथ तस्य शक्तिस्तु याऽभवत्॥ ३०. २३॥

सा पुनर्ज्वलने दग्धा दैवयोगान्मनोर्नृप।
पुनश्च हिमवत्पृष्ठे प्रादुरासीत्तु तन्महः॥ ३०. ३७॥

जनमेजय उवाच —

दह्यमाने सतीदेहे जाते किमकरोच्छिवः।
प्राणाधिका सती तस्य तद्वियोगेन कातरः॥ ३०. ३८॥

30.20. மகாராஜரே! சிறிது காலத்திற்குப்பின் தக்ஷன் வீட்டில் பராசக்தி அவதரித்தாள். மூவுலகிலும் உத்ஸவம் கொண்டாடப்பட்டது.

30.23–37. அரசே! பரமஞான வடிவினளான அவளுக்கு ஸதி எனப் பெயரிடப்பட்டது. அவளை தக்ஷன் சிவனுக்குக் கொடுத்தான். சிவனுடைய சக்தியாகிய அவள் தெய்வாதீனமாய் (தக்ஷயாகத்தில்) யோகாக்னியால் எரிக்கப் பட்டாள். பின்பு அந்தப் பேரொளி இமயமலையில் உதித்தது.

ஜனமேஜயன் கூறியது—

30.38. ஸதி தேவியின் சரீரம் எரிக்கப்பட்டபொழுது பிராணனுக்கும் அதிகப் பிரியமான அவளுடைய பிரிவால் துன்புற்ற சிவன் என்ன செய்தார்?

व्यास उवाच —

अपश्यत्तां सतीं वह्नौ दह्यमानां तु चित्कलाम् ।
स्कन्धेप्यारोपयामास हा सतीति वदन्मुहुः ।। ३०. ४४ ।।

बभ्राम भ्रान्तचित्तः सन्नानादेशेषु शंकरः ।
तदा ब्रह्मादयो देवाश्चिन्तामापुरनुत्तमाम् ।। ३०. ४५ ।।

विष्णुस्तु त्वरया तत्र धनुरुद्यम्य मार्गणैः ।
चिच्छेदावयवान् सत्यास्तत्तत्स्थानेषु तेऽपतन् ।।
तत्तत्स्थानेषु तत्रासीन्नानामूर्तिधरो हरः ।। ३०. ४६ ।।

जनमेजय उवाच —

यानि स्थानानि तानि स्युः सिद्धपीठानि चानघ ।
कतिसंख्यानि नामानि कानि तेषां च मे वद ।। ३०. ५१ ।।

வியாஸர் கூறியது—

30.44–45. சித்கலை வடிவினளான ஸதீ தேவி எரிக்கப் பட்டதைக் கண்ட சங்கரர் 'ஸதீ! ஸதீ!' என்று அடிக்கடி பிரலாபித்துக் கொண்டு அவளுடைய சரீரத்தை தன் தோளில் தூக்கிக் கொண்டவராய்ச் சித்தப் பிரமை யுடன் பல தேசங்களில் சுற்றித் திரிந்தார். அப்பொழுது பிரம்மா முதலிய தேவர்கள் சொல்லொணுக் கவலையடைந் தனர்.

30.46. விஷ்ணுவானவர் வில்லை எடுத்துக் கொண்டு விரைந்து வந்து அம்புகளால் ஸதியின் உடலைச் சோதித்தார். எந்தெந்த இடங்களில் அவ்வுடலின் பகுதிகள் வீழ்ந்தனவோ அந்தந்த இடங்களில் சிவனும் பல மூர்த்திவடிவங்களில் தோன்றி நிலை பெறுபவராஞர்.

ஜனமேஜயன் கூறியது—

30.51. பாவமற்றவரே! ஸித்தபீடங்களாகிய அவை எந்தெந்த ஸ்தானங்கள்? அவை எத்தனை? அவைகளின் பெயரென்ன? விளக்கிக் கூறவேண்டும்.

व्यास उवाच —

वाराणस्यां विशालाक्षी गौरीमुखनिवासिनी ।
क्षेत्रे वै नैमिशारण्ये प्रोक्ता सा लिंगधारिणी ॥ ३०. ५५ ॥

प्रयागे ललिता प्रोक्ता कामुकी गन्धमादने ।
रुक्मिणी द्वारवत्या तु राधा वृन्दावने वने ॥ ३०. ६९ ॥

देवकी मथुरायां तु पाताले परमेश्वरी ।
चित्रकूटे तथा सीता विन्ध्ये विन्ध्याधिवासिनी ॥ ३०. ७० ॥

गायत्री वेदवदने पार्वती शिवसन्निधौ ।
देवलोके तथेन्द्राणी ब्रह्मास्येषु सरस्वती ॥ ३०. ८१ ॥

सूर्यबिम्बे प्रभा नाम मातॄणां वैष्णवी मता ।
चित्ते ब्रह्मकला नाम शक्तिः सर्वशरीरिणाम् ॥ ३०. ८३ ॥

வியாஸர் கூறியது—

30.55. வாரணஸியில் கௌரியின் முகம் விசாலாக்ஷி என்ற பெயரோடு வசிக்கிறது. நைமிசாரணிய க்ஷேத்திரத்தில் லிங்கதாரிணீ எனக் கூறப்படுகிறாள்.

30.69. பிரயாகையில் லலிதா எனப்படுகிறாள்; கந்த மாதனத்தில் காமுகி; துவாரகையில் ருக்மிணீ; பிருந்தா வனத்தில் ராதா.

30.70. வட மதுரையில் தேவகீ; பாதாளத்தில் பர மேச்வரீ; சித்ரகூடத்தில் ஸீதா; விந்தியத்தில் விந்தியாதி வாஸினீ.

30.81. வேத முகத்தில் காயத்ரீ; சிவஸந்நிதியில் பார்வதி; தேவலோகத்தில் இந்த்ராணீ; பிரம்மாவின் முகத் தில் ஸரஸ்வதி;

30.83. சூரிய பிம்பத்தில் பிரபா எனப் பெயர்; மாத்ருகைகளுக்குள் வைஷ்ணவீ: சித்தத்தில் பஹ்ம்கலா எனப் பெயர்; எல்லா சரீரங்களிலும் சக்தியாய் விளங்கு கிறாள்.

इमान्यष्टशतानि स्युः पीठानि जनमेजय ।
तत्संख्याकास्तदीशन्यो देव्यश्च परिकीर्तिताः ।। ३०. ८४ ।।

जनमेजय उवाच —

धराधराधीशमौलावाविरासीत्परं महः ।
यदुक्तं भवता पूर्वं विस्तरात्तद्वदस्व मे ।। ३१. १ ।।

व्यास उवाच —

शृणु राजन् पुरा वृत्तं सतीदेहेऽग्निभर्जिते ।
भ्रान्तः शिवस्तु बभ्राम क्वचिद्देशे स्थिरोऽभवत् ।। ३१. ४ ।।

प्रपंचभानरहितः समाधिगतमानसः ।
ध्यायन् देवीस्वरूपं तु कालं निन्ये स आत्मवान् ।। ३१. ५ ।।

30.84. ஜனமேஜயா! இவ்வாறுகப் பீடங்கள் நூற்றெட்டு. அவ்வவ்விடங்களில் ஈசுவரியாய் விளங்கும் தேவியின் மூர்த்தங்களும் நூற்றெட்டேயாம் எனக் கூறப் பட்டுள்ளன.

ஜனமேஜயன் கூறியது—

31.1. மலையரசாகிய இமயத்தின் உச்சியில் பராசக்தியின் ஒளியானது தோன்றிற்றென்று முன்பு தங்களால் கூறப்பட்டது. அதை விரிவாய்க் கூறியருள வேண்டுகிறேன்.

வியாஸர் கூறியது—

31.4. அரசே! முந்தைய வரலாற்றைக் கூறுகிறேன். கேளும். ஸதீதேவியின் சரீரம் அக்னியில் எரிந்த பின் சிவன் மனங்கலங்கியவராய் அலைந்து விட்டு ஓரிடத்தில் ஸ்திரமாய் அமர்ந்தார்.

31.5. ஆத்ம நிஷ்டராகிய அவர் பிரபஞ்ச உணர்வில்லாமல் அடங்கிய மனத்தினராய் தேவியின் ஸ்வரூபத்தை தியானித்துக் கொண்டு காலத்தைக் கழித்தார்.

सौभाग्यरहितं जातं त्रैलोक्यं सचराचरम् ।
शक्तिहीनं जगत्सर्वं साब्धिद्वीपं सपर्वतम् ॥ ३१. ६ ॥

आनन्दः शुष्कतां यातः सर्वेषां हृदयान्तरे ।
उदासीनाः सर्वलोकाश्चिन्ताजर्जरचेतसः ॥ ३१. ७ ॥

अथास्मिन्नेव काले तु तारकाख्यो महासुरः ।
ब्रह्मदत्तवरो दैत्योऽभवत् त्रैलोक्यनायकः ॥ ३१. १० ॥

शिवौरसस्तु यः पुत्रः स ते हन्ता भविष्यति ।
इति कल्पितमृत्युः स देवदेवैर्महासुरः ॥ ३१. ११ ॥

शिवौरससुताऽभावाज्जगर्ज च ननन्द च ।
तेन चोपद्रुताः सर्वे स्वस्थानात्प्रच्युताः सुराः ॥ ३१. १२ ॥

31.6. கடலும் மலையும் துவீபமும் கூடின உலகனைத்தும் சக்தியிழந்து சராசரப்ரபஞ்சம் மூவுலகிலும் ஸௌபாக்ய மற்றதாயிற்று.

31.7. எல்லோருடைய இருதயமும் உலர்ந்து ஆனந்தம் வற்றி எல்லோரும் உதாசீனர்களாகவும் கவலையால் அரிக்கப்பட்ட சித்தமுடையவர்களாயுமிருந்தனர்.

31.10. அதே காலத்தில் தாரகன் என்ற ஒரு பெரிய அசுரன் பிரம்ம தேவனிடம் பெற்ற வரத்தால் மூவுலகையும் ஆள்பவனானான்.

31.11. தேவதேவரான பிரம்மாவிடம் அவன் பெற்ற வரத்தில் சிவனுடைய தேஜஸ்ஸில் பிறக்கும் புத்திரனன்றி வேறு எவராலும் அவனுக்கு மரணமில்லை என்று ஏற்பட்டிருந்தது.

31.12. சிவனுடைய தேஜஸ்ஸில் புத்திரன் உண்டாகப் போவதில்லை என்ற நம்பிக்கையால் அவன் மகிழ்பவனாகவும் கர்ஜிப்பவனாகவும் இருந்தான். தேவர்களெல்லாம் அவனால் உபத்திரவிக்கப்பட்டு தங்கள் ஸ்தானங்களிலிருந்து நழுவியவர்களானார்கள்.

शिवौरससुताभावाच्चिन्तामापुर्दुरत्ययाम् ।
नांगना शंकरस्यास्ति कथं तत्सुतसंभवः ॥ ३१. १३ ॥

अस्माकं भाग्यहीनानां कथं कार्यं भविष्यति ।
इति चिन्तातुराः सर्वे जग्मुर्वैकुण्ठमण्डले ॥ ३१. १४ ॥

शशंसुर्हरिमेकान्ते स चोपायं जगाद ह ।
कुतश्चिन्तातुराः सर्वे कामकल्पद्रुमा शिवा ॥ ३१. १५ ॥

जागर्ति भुवनेशानी मणिद्वीपाधिवासिनी ।
अस्माकमनयादेव तदुपेक्षाऽस्ति नान्यथा ॥ ३१. १६ ॥

शिक्षैवेयं जगन्मात्रा कृताऽस्मच्छिक्षणाय च ।
तस्माद्यूयं परांबां तां शरणं यात मा चिरम् ।
निर्व्याजया चित्तवृत्त्या सा वः कार्यं विधास्यति ॥ ३१. १९ ॥

31.13. 'சங்கரருக்கு ஸ்திரீ இல்லே. அவருக்குப் புத்திரன் உண்டாவதெப்படி?' என்று அவருக்குப் புத்திர னில்லாத நிலேயை எண்ணி தேவர்கள் மிகுந்த கவலேக்குள் ளானுர்கள்.

31.14. 'பாக்கிய ஹீனர்களாகிய நம்முடைய காரியம் எப்படி ஆகப் போகிறதோ?' என்று சிந்தையிலாழ்ந்தவர் களாய் எல்லோரும் வைகுண்ட லோகம் சென்ருர்கள்.

31.15–19. தனிமையில் வைகுண்டநாதனேத் துதித் தார்கள். அவர் அவர்களுக்கு உபாயம் கூறினுர். 'நீங்களெல் லோரும் எதற்காகக் கவலேப்பட வேண்டும்? மங்களாம் பிகை ஆசையைப் பூர்த்தி செய்விக்கும் கற்பக விருக்ஷமா யிற்றே. புவனேசுவரியும் மணித்துவீப வாஸினியுமான அவள் உறங்கி விடவில்லே. நாம் நாடாமையால் அவள் உபேக்ஷயாயிருக்கிருள். வேறு காரணமில்லே. இது ஜகன் மாதாவால் ஏற்பட்ட சிக்ஷை. நமக்குப் பாடங்கற்பிப்பதற் காக இது செய்யப்பட்டுள்ளது. ஆகையால் நீங்கள் அந்தப் பராம்பிகையைக் காரணத்தைத் தேடாத சித்த விருத்தி யுடன் விரைவில் சரணமடையுங்கள். அவள் உங்கள் காரியத்தை நிறைவேற்றுவாள்'.

इत्यादिश्य सुरान् सर्वान् महाविष्णुः स्वजायया ।
संयुतो निर्जगामाशु देवैः सह सुराधिपः ॥ ३१. २० ॥

आजगाम महाशैलं हिमवन्तं नगाधिपम् ।
अभवंश्च सुराः सर्वे पुरश्चरणकर्मिणः ॥ ३१. २१ ॥

हृल्लेखया पराशक्तेः पूजां चक्रुरतन्द्रिताः ।
इत्येव बहुवर्षाणि कालोऽगाज्जनमेजय ॥ ३१. २५ ॥

अकस्माच्चैत्रमासीय नवम्यां च भृगोर्दिने ।
प्रादुर्बभूव पुरतस्तन्महः श्रुतिबोधितम् ॥ ३१. २६ ॥

आद्यन्तरहितं तत्तु न हस्ताद्यंगसंयुतम् ।
न च स्त्रीरूपमथवा न पुंरूपमथोभयम् ॥ ३१. २९ ॥

तावत्तदेव स्त्रीरूपेणाऽऽभादिव्यं मनोहरम् ।
अतीव रमणीयांगीं कुमारीं नवयौवनाम् ॥ ३१. ३० ॥

31.20. இவ்வாறு எல்லா தேவர்களிடமும் கூறிவிட்டு மகாவிஷ்ணுவானவர் தன் பத்தினியுடன் கூடியவராய் இந்திரனுட்பட்ட தேவர்களுடன் விரைவில் புறப்பட்டார்.

31.21. மலையரசாகிய பெரிய இமயமலைக்குச் சென்று தேவர்களனைவரும் புரச்சரணகர்மாவை மேற்கொண்டனர்.

31.25. கவனக் குறைவின்றி ஆர்வத்துடன் பராசக்தியைப் பூஜித்தார்கள். ஜனமேஜயரே! இவ்வாறு பல வருஷகாலஞ் சென்றது.

31.26. ஒரு சமயம் சித்திரை மாதம் நவமி திதியும் வெள்ளிக்கிழமையும் கூடிவந்தபொழுது அவர்கள் முன் சுருதிகள் புகழும் பேரொளி தோன்றிற்று.

31.29. அடியும் முடியுமற்றதாயும் கை முதலிய அவயவங்களற்றதாயும், பெண்ணென்றோ ஆணென்றோ இரண்டுமென்றோ இல்லாததாயும் அது முதலில் காணப்பட்டது.

31.30. பின்பு அதுவே மனதைக் கவரும் திவ்யப் பிரகாசத்துடன் கூடிய அழகான நவயௌவன ஸ்திரீ ரூபமாய்த் தென்பட்டது.

पाशांकुश-वराभीतिचतुर्बाहुं त्रिलोचनाम् ।
अव्याजकरुणामूर्तिं ददृशुः पुरतः सुराः ॥ ३१. ४२ ॥

देवा ऊचुः —

नमो देव्यै महादेव्यै शिवायै सततं नमः ।
नमः प्रकृत्यै भद्रायै नियताः प्रणताः स्म ताम् ॥ ३१. ४४ ॥

महालक्ष्म्यै च विद्महे सर्वशक्त्यै च धीमहि ।
तन्नो देवी प्रचोदयात् ॥ ३१. ४८ ॥

नमः प्रणवरूपायै नमो ह्रींकारमूर्तये ।
नानामन्त्रात्मिकायै ते करुणायै नमो नमः ॥ ३१. ५३ ॥

31.42. பாசம், அங்குசம், வரமுத்திரை, அபயமுத்திரை ஆகியவற்றைத் தரித்த நான்கு கைகளுடனும் முக்கண்ணுடனும் காரணம் வேண்டாத கருணை பொழியும் முகத்துடன் விளங்கும் அம் மூர்த்தியை தேவர்கள் தங்கள் முன்பு கண்டனர்.

தேவர்கள் கூறியது—

31.44. தேவிக்கு நமஸ்காரம். சிவ பத்தினியான மகாதேவிக்கு எப்பொழுதும் நமஸ்காரம். பிரகிருதிஸ்வரூபிணிக்கு நமஸ்காரம். மங்கள வடிவினளான அவளை மனதை ஒரு முகப்படுத்தி வணங்குகிறோம்.

31.48. மகாலக்ஷ்மியாக அறிகிறோம்; ஸர்வ சக்தியாக தியானிக்கின்றோம்; அந்த தேவி எங்களுடைய புத்தி சக்திகளைத் தூண்டி விடட்டும்.

31.53. பிரணவ ரூபிக்கு நமஸ்காரம்; ஹ்ரீங்கார மூர்த்திக்கு நமஸ்காரம்; பலவேறு மந்திர வடிவில் விளங்குபவளுக்கு நமஸ்காரம்; கருணையே உருக் கொண்டவளுக்கு நமஸ்காரம்.

श्रीदेव्युवाच —

मम शक्तिस्तु या गौरी भविष्यति हिमालये ।
शिवाय सा प्रदेया स्यात् सा वः कार्यं विधास्यति ।। ३१. ६४ ।।

हिमालयो हि मनसा मामुपास्तेऽतिभक्तितः ।
ततस्तस्य गृहे जन्म मम प्रियकरं मतम् ।। ३१. ६५ ।।

शृण्वन्तु निर्जराः सर्वे व्याहरन्त्या वचो मम ।
यस्य श्रवणमात्रेण मद्रूपत्वं प्रपद्यते ।। ३२. १ ।।

अहमेवास पूर्वं तु नान्यत्किंचिन्नगाधिप ।
तदात्मरूपं चित्संवित्परब्रह्मैकनामकम् ।। ३२. २ ।।

ஶ்ரீதேவி கூறியது

31.64. என்னுடைய சக்தியான கௌரி இமயமலையில் தோன்றுவாள். அவள் சிவனுக்குக் கொடுக்கப்படுவாள். அவள் உங்களுடைய காரியத்தை நிறைவேற்றுவாள்.

31.65. ஹிமவான் என்னை மனதில் நிறைந்த பக்தியுடன் ஆராதிக்கிறான். அதனால் அவர் வீட்டில் பிறப்பது எனக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது.

32.1. 'தேவர்களெல்லோரும் நான் சொல்லப் போகும் வார்த்தையைக் கேட்கட்டும். அதைக் கேட்ட மாத்திரத்தில் ஒருவன் என்னுடைய ஸாரூப முக்தியை அடைவான்' என்று தேவி தேவர்களையும் ஹிமவானையும் பார்த்துக் கூறினாள்.

32.2. 'மலையரசே! ஆதியில் ஆத்மஸ்வரூபமாயும் சித்ஸ்வரூபமாயும் ஸம்வித்ஸ்வரூபமாயும் பிரம்மம் எனப்பட்ட ஒரே பொருளாகவும் நானே இருந்தேன். என்னைத் தவிர வேறொன்றுமில்லை.

अप्रतर्क्यमनिर्देश्य-मनौपम्य-मनामयम् ।
तस्य काचित्स्वत:सिद्धा शक्तिर्मायेति विश्रुता ।। ३२. ३ ।।
न सती सा नासती सा नोभयात्मा विरोधतः ।
एतद्विलक्षणा काचिद्वस्तु भूताऽस्ति सर्वदा ।। ३२. ४ ।।
केचित्तां तप इत्याहुस्तमः केचिज्जडं परे ।
ज्ञानं मायां प्रधानं च प्रकृतिं शक्तिमप्यजाम् ।। ३२. ९ ।।
विमर्श इति तां प्राहुः शैवशास्त्रविशारदाः ।
अविद्यामितरे प्राहु-र्वेदतत्त्वार्थचिन्तकाः ।। ३२. १० ।।
सर्वकर्मघनीभूत-मिच्छाज्ञानक्रियाश्रयम् ।
ह्रींकारमन्त्रवाच्यं तदादितत्त्वं तदुच्यते ।। ३२. २६ ।।

32.3. அந்த பிரம்மநிலே தர்க்கத்திற் கெட்டாதது, சுட்டிக் காட்ட வொண்ணுதது, உவமையற்றது, நோயற்றது; அதனிடம் இயல்பாகவே ஒரு சக்தி உண்டு; அதற்கு மாயை எனப் பெயர்.

32.4. அது உளதென்பதுவுமன்று, இலதென்பதுவு மன்று; இருவகைப் பட்டதுமன்று. அது பொருந்தாமை யால் இப்படி விலக்ஷணமான ஒன்ருக அது எப்பொழுது முளது.

32.9. இதனைச் சிலர் தபஸ் என்றும், சிலர் தமஸ் என்றும், இன்னும் சிலர் ஜடம் என்றும் கூறுவர்; பிறர் ஞானம் என்றும், மாயை என்றும், பிரதானம் என்றும், பிரகிருதி என்றும், சக்தி என்றும், அஜா (பிறப்பற்றவள்) என்றும் கூறுவர்.

32.10. சைவ சாஸ்திர வல்லவர்கள் அதை விமர்சம் எனக் கூறுவர். வேத தத்துவார்த்தத்தை ஆராயும் பிறர் அவித்தை என்பர்.

32.26. எல்லாக்கருமங்களேயும் தன்னுள்ளடக்கிக் கொண்டிருப்பதாயும் இச்சை, ஞானம், கிரியை எனும் சக்தி களுக்கிருப்பிடமாயும் ஹ்ரீங்காரமந்திரத்தால் சொல்லப்படு வதாயும் உள்ளது ஆதிதத்துவம் எனக் கூறப்படுகிறது.

ज्ञानेन्द्रियाणि पंचैव पंच कर्मेन्द्रियाणि च ।
प्राणादि पंचकं चैव धिया च संहितं मनः ।। ३२. ४१ ।।

एतत्सूक्ष्मशरीरं स्यान्ममलिंगं यदुच्यते ।
तत्र या प्रकृतिः प्रोक्ता सा राजन् द्विविधा स्मृता ।। ३२. ४२ ।।

सत्त्वात्मिका तु माया स्यादविद्या गुणमिश्रिता ।
स्वाश्रयं या तु संरक्षेत्सा मायेति निगद्यते ।। ३२. ४३ ।।

तस्यां यत्प्रतिविम्बं स्याद् बिम्बभूतस्य चेशितुः ।
स ईश्वरः समाख्यातः स्वाश्रयज्ञानवान् परः ।। ३२. ४४ ।।

32.41–42. ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கருமேந்திரியங்கள், ஐந்து பிராணன்கள், புத்தி, மனது ஆகியவையின் சேர்க்கை ஸூக்ஷ்மசரீரம் எனப்படும். இவற்றின் ஸமஷ்டியே என்னுடைய லிங்க சரீரம் எனப்படுவது. அரசே ! பிரகிருதி என எது கூறப்படுகிறதோ அது இருவகைப்படும்.

32.43. ஸத்துவ வடிவானது மாயை எனப்படும். எல்லா குணங்களுடன் கலந்தது அவித்தை எனப்படும். தனக்கு ஆசிரயமானதை எது ரக்ஷிக்குமோ அது மாயை எனக் கூறப்படுகிறது.

32.44. அனைத்தையும் ஆளும் பரமாத்மாவின் பிரதிபிம்பம் மாயையால் தோன்றுவது எதுவோ அது ஈசுவரன் எனப்படுவது. அந்த பரமேசுவரன் தனது ஆசிரிய ஞானமுடையவன்.

सर्वज्ञः सर्वकर्ता च सर्वानुग्रहकारकः ।
अविद्यायां तु यत्किंचित्प्रतिबिम्बं नगाधिप ॥ ३२. ४५ ॥
तदेव जीवसंज्ञं स्यात्सर्वदुःखाश्रयं पुनः ।
द्वयोरपीह संप्रोक्तं देहत्रयमविद्यया ॥ ३२. ४६ ॥
देहत्रयाभिमानाच्चाप्यभून्नामत्रयं पुनः ।
प्राज्ञस्तु कारणात्मा स्यात्सूक्ष्मदेही तु तैजसः ॥ ३२. ४७ ॥
स्थूलदेही तु विश्वाख्यस्त्रिविधः परिकीर्तितः ।
एवमीशोऽपि संप्रोक्त ईशसूत्रविराट् पदैः ॥ ३२. ४८ ॥
प्रथमो व्यष्टिरूपस्तु समष्ट्यात्मा परः स्मृतः ।
स हि सर्वेश्वरः साक्षाज्जीवानुग्रहकाम्यया ॥ ३२. ४९ ॥
करोति विविधं विश्वं नानाभोगाश्रयं पुनः ।
मच्छक्तिप्रेरितो नित्यं मयि राजन् प्रकल्पितः ॥ ३२. ५० ॥

32.45–48. அனைத்தையும் அறிபவன், அனைத்தையும் செய்பவன், அனைவருக்கும் அருள் புரிபவன். மலையரசே! அவித்தையில் தோன்றும் சிறிய பிரதிபிம்பம் எதுவோ அது ஜீவன் எனப்படுவது. எல்லா துக்கத்திற்கும் இருப்பிடமானது. ஜீவன், ஈசுவரன் ஆகிய இருவருக்குமே அவித்தையாலும் மாயையாலும் ஏற்பட்ட மூன்று சரீரங்களில் அபிமானத்தால் பெயர் மூன்ருக உளது. காரண தேகத்தால் ப்ராக்ஞன் என்றும் ஸூக்ஷ்ம தேகத்தால் தைஜஸன் என்றும் ஸ்தூல தேகத்தால் விசுவன் என்றும் ஜீவனுக்குப் பெயர் மூன்ருகக் கூறப்படும். அவ்வாறே ஈசுவரனுக்கும் ஈசன் என்றும் ஸூத்ராத்மா என்றும் விராட் என்றும் பெயர் மூன்ருகும்.

32.49–50. முதலில் கூறிய ஜீவன் தனியான (வியஷ்டி) ரூபமுடையவன்; ஈசுவரன் (ஸமஷ்டி) அனைத்தின் வடிவாயுமிருப்பவன். அந்த ஸர்வேசுவரன் சாசுவதமாய் என்னிடம் நிலை பெற்றுள்ள சக்தியினுல் தூண்டப்பட்டு ஜீவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் எண்ணத்துடன் விதவிதமான இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கிருர்.

जीवेश्वरविभागश्च कल्पितो माययैव तु ।
घटाकाश-महाकाश-विभागः कल्पितो यथा ॥ ३३. ८ ॥

तथैव कल्पितो भेदो जीवात्मपरमात्मनोः ।
यदा जीवबहुत्वं च माययैव न च स्वतः ॥ ३३. ९ ॥

तथेश्वरबहुत्वं च मायया न स्वभावतः ।
देहेन्द्रियसंघातवासनाभेदभेदिता ॥ ३३. १० ॥

अविद्या जीवभेदस्य हेतुर्नाऽन्यः प्रकीर्तितः ।
गुणानां वासनाभेदभेदिताया धराधर ॥ ३३. ११ ॥

माया सा परभेदस्य हेतुर्नान्यः कदाचन ।
मयि सर्वमिदं प्रोतमोतं च धरणीधर ॥ ३३. १२ ॥

33.8–10. ஜீவன், ஈசுவரன் என்ற இந்தப் பாகுபாடு மாயையினாலேயே கற்பிக்கப்பட்டது; குடத்திலுள்ள ஆகாசமும் மகாகாசமும் எப்படி பிரித்துக் கற்பனை செய்யப்படுகிறதோ அப்படியே ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் பேதம் கற்பிக்கப்படுகிறது. எப்படி ஜீவர்கள் பலர் என்பது மாயையால் ஏற்பட்டதோ உண்மையில் இல்லையோ அப்படியே தான் ஈசுவரர் பலர் என்பதும் மாயையால் ஏற்பட்டதேயன்றி உண்மையில் இல்லை. இது தேகம் இந்திரியங்களின் கூட்டம் ஆகியவற்றின் வாஸனா பேதத்தால் ஏற்பட்ட வேற்றுமை.

33.11. மலையரசே! குணங்களின் வாஸனா பேதங்களால் ஏற்பட்ட ஜீவ பேதத்திற்கு அவித்தை தான் காரணம், வேறெதுவுமன்று எனக் கூறப்படுகிறது.

33.12. ஈசுவரனிடம் பேதத்திற்கு மாயைதான் காரணம். ஒரு பொழுதும் வேறு காரணமில்லை. பூமியை தாங்குபவரே! என்னிடம் இது எல்லாம் (வஸ்திரத்தில் நூல் போல்) குறுக்கிலும் நெடுக்கிலும் கோர்க்கப்பட்டுளது.

अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्याहं सर्वदा स्थिता ।
न तदस्ति मया त्यक्तं वस्तु किंचिच्चराचरम् ॥ ३३. १६ ॥

हिमाचल उवाच —
यथा वदसि देवेशि समष्टयात्मवपुस्त्विदम् ।
तथैव द्रष्टुमिच्छामि यदि देवि कृपा मयि ॥ ३३. २० ॥

व्यास उवाच —
इति तस्य वचः श्रुत्वा सर्वेदेवाः सविष्णवः ।
ननन्दु-र्मुदितात्मानः पूजयन्तश्च तद्वचः ॥ ३३. २१ ॥

अथ देवमतं ज्ञात्वा भक्तकामदुघा शिवा ।
अदर्शयन्निजं रूपं भक्तकामप्रपूरिणी ॥ ३३. २२ ॥

33.16. அவ்வனைத்தையும் நான் உள்ளும் புறமும் வியாபித்துக் கொண்டு எப்பொழுதும் நிலை பெற்று நிற்கிறேன். சராசரப் பிரபஞ்சத்தில் நானில்லாத வஸ்து எதுவுமில்லை.

இமவான் கூறியது—

33.20. தேவர்களின் ஈசுவரியே! உன்னுடைய ஸமஷ்டியான ஆத்ம வடிவெனக் கூறப்பட்டது எதுவோ அதை அவ்வாறே நான் காண விரும்புகிறேன். தேவி! என்னிடம் கிருபையுண்டானல் (காட்டியருள வேண்டும்).

வியாஸர் கூறியது—

33.21. அவருடைய அவ்வார்த்தையைக் கேட்டு மகாவிஷ்ணுவுடன் எல்லா தேவர்களும் மகிழ்ச்சி யடைந்தார்கள். சந்தோஷம் நிறைந்த மனதுடன் அவ்வார்த்தையைக் கொண்டாடினர்கள்.

33.22. பக்தர்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்விக்கும் காமதேனு போன்ற மங்களாம்பிகை தேவர்களுடைய விருப்பத்தையறிந்து தன்னுடைய உண்மை வடிவைக் காட்டியருளினள்.

अपश्यंस्ते महादेव्या विराड्रूपं परात्परम् ।
द्यौर्मस्तकं भवेद्यस्य चन्द्रसूर्यौ च चक्षुषी ।। ३३. २३ ।।

दिशः श्रोत्रे वचो वेदाः प्राणो वायुः प्रकीर्तितः ।
विश्वं हृदयमित्याहुः पृथिवी जघनं स्मृतम् ।। ३३. २४ ।।

नभस्तलं नाभिसरो ज्योतिश्चक्रमुरस्थलम् ।
महर्लोकस्तु ग्रीवास्या जनलोको मुखं स्मृतम् ।। ३३. २५ ।।

तपोलाको रराटिस्तु सत्यलोकादधः स्थितः ।
इन्द्रादयो बाहवः स्युः शब्दः श्रोत्रं महेशितुः ।। ३३. २६ ।।

अतलादि महालोकाः कटयधोभागतां गताः ।
एतादृशं महारूपं ददृशुः सुरपुंगवाः ।
सहस्रशीर्षनयनं सहस्रचरणं तथा ।। ३३. ३७ ।।

33.23. உயர்வற உயர்ந்த மகாதேவியின் விராட் ரூபத்தை அவர்கள் காணப்பெற்றனர். வான் முகடு அவ் வுருவின் தலையாயிருந்தது. சந்திர சூரியர்கள் கண்களா யிருந்தனர்.

33.24. திசைகள் காதுகள், வாக்கு வேதங்கள், பிராணன் வாயு எனக் கூறப்படுகின்றன. உலகனைத்தும் உள்ளம் எனப்படுகிறது. பூமி இடுப்பாகக் கொள்ளப் படுகிறது.

33.25. ஆகாயம் நாபிமடுவாகவும், ஜோதிர் மண் டலம் மார்பாகவும், மஹர் லோகம் கழுத்தாகவும், ஜன லோகம் முகமாகவும் கூறப்பட்டுளது.

33.26–37. ஸத்யலோகத்திற்குக் கீழுள்ள தபோலோ கமாவது நெற்றி. மஹேச்வரிக்கு இந்திரன் முதலானவர்கள் கைகள், சப்தம் காது. அதலம் முதலிய உலகங்கள் இடுப் பிற்குக் கீழுள்ள பாகங்களாகின்றன. ஆயிரக்கணக்கான கண்களும் ஆயிரக்கணக்கான கால்களும் உடைய இப்படிப் பட்ட பெரிய வடிவை தேவசிரேஷ்டர்கள் கண்டார்கள்.

कोटिसूर्यप्रतीकाशं विद्युत्कोटिसमप्रभम् ।
भयंकरं महाघोरं हृदक्षणोस्त्रासकारकम् ॥ ३३. ३८ ॥

देवा ऊचुः—

कोपं संहर देवेशि सभयारूपदर्शनात् ।
का ते स्तुतिः प्रकर्तव्या पामरैर्निर्जरैरिह ॥ ३३. ४३ ॥

नमस्ते भुवनेशानि नमस्ते प्रणवात्मिके ।
सर्ववेदान्तसंसिद्धे नमो ह्रींकारमूर्तये ॥ ३३. ४५ ॥

नमः पुरस्तात्पृष्ठे च नमस्ते पार्श्वयोर्द्वयोः ।
अध ऊर्ध्वं चतुर्दिक्षु मातर्भूयो नमो नमः ॥ ३३. ५२ ॥

33.38. கோடி சூரியப் பிரகாசமும் கோடி மின்னல்களின் பிரபையும் உடையதாய் பயங்கரமாய் மகா கோரமாய்க் கண் பார்க்கக் கூசுவதாய் இருதயத்தை நடுக்குவதாய் அது இருந்தது.

தேவர்கள் கூறியது—

33.43. தேவர்களின் ஈசுவரியே! கோபத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும். இந்த ரூபத்தைப் பார்த்து நாங்கள் பயமடைந்துள்ளோம். அறிவில்லாத தேவர்களாகிய எங்களுக்கு உன்னை எப்படித் துதிப்பதென்பது தெரியவில்லை.

33.45. புவனேசுவரி! உனக்கு நமஸ்காரம். பிரணவ ஸ்வரூபியே! உனக்கு நமஸ்காரம். வேதாந்தம் அனைத்திலும் சித்திக்கும் பொருளே! ஹ்ரீங்கார மூர்த்தியே! நமஸ்காரம்.

33.52. உனக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம். உனது இரு பக்கங்களுக்கும் நமஸ்காரம். கீழும் மேலும் நான்கு திசைகளிலும், தாயே! மீண்டும் மீண்டும் உனக்கு நமஸ்காரம்.

उपसंहर देवेशि रूपमेतदलौकिकम् ।
तदेव दर्शयाऽस्माकं रूपं सुन्दरसुन्दरम् ॥ ३३. ५३ ॥

व्यास उवाच —

इति भीतान् सुरान् दृष्ट्वा जगदम्बा कृपार्णवा ।
संहृत्य रूपं घोरं तद्दर्शयामास सुन्दरम् ॥ ३३. ५४ ॥

पाशांकुशवराभीतिधरं सर्वांगकोमलम् ।
करुणापूर्णनयनम् मन्दस्मितमुखाम्बुजम् ॥ ३३. ५५ ॥

दृष्ट्वा तत्सुन्दरं रूपं तदा भीतिविवर्जिताः ।
शान्तचित्ताः प्रणेमुस्ते हर्षगद्गदनिःस्वनाः ॥ ३३. ५६ ॥

33.53. தேவ நாயகியே! உலக இயல்பை மீறிய இவ்வுருவைக் கரந்து கொண்டு அழகிற்கும் அழகு செய்யும் உனது ரூபத்தை எங்களுக்குக் காட்டி அருள்வாய்.

வியாஸர் கூறியது—

33.54. கருணைக் கடலாகிய ஜகதம்பிகையானவள் தேவர்கள் பயந்திருப்பதைக் கண்டு கோர ரூபத்தை மறைத்து அழகிய வடிவைக் காட்டினுள்.

33.55. அது பாசம் அங்குசம் வரமுத்திரை அபய முத்திரை ஆகியவற்றைக் கைகளில் தரிப்பதாய் பூப்போன்ற அங்கங்களுடையதாய் கருணை நிறைந்த கண்களுடன் கூடிய தாய் புன்முறுவல் பூத்த முகமுடையதாயிருந்தது.

33.56. அந்த அழகிய ரூபத்தைக் கண்ட தேவர்கள் பயம் நீங்கியவர்களாய் சாந்த சித்தர்களாய் மகிழ்ச்சியுடன் கலகலவென்று ஆரவாரஞ் செய்து நமஸ்கரித்தனர்.

हिमालय उवाच —

योगं वद महेशानि सांगं संवित्प्रदायकम् ।
कृतेन येन योग्योऽहं भवेयं तत्त्वदर्शने ।। ३५. १ ।।

श्रीदेव्युवाच —

न योगो नभसः पृष्ठे न भूमौ न रसातले ।
ऐक्यं जीवात्मनोराहुर्योगं योगविशारदाः ।। ३५. २ ।।

तत्प्रत्यूहाः षडाख्याता योगविघ्नकरानघ ।
कामक्रोधौ-लोभमोहौ-मदमात्सर्यसंज्ञकौ ।। ३५. ३ ।।

योगांगैरेव भित्त्वा तान् योगिनो योगमाप्नुयुः ।
यमं नियम-मासन-प्राणायामौ ततः परम् ।। ३५. ४ ।।

प्रत्याहारं धारणाख्यं ध्यानं सार्धं समाधिना ।
अष्टांगान्याहुरेतानि योगिनां योगसाधने ।। ३५. ५ ।।

இமவான் கூறியது—

35.1. மகேசுவரி! எந்த யோக சாதனமானது ஞானத்தையளிப்பதோ, எதை அனுஷ்டிப்பதால் நான் தத்துவ தரிசனத்திற்குத் தகுதி உடையவனுவேனே அந்த யோக மார்க்கத்தை அங்கங்களுடன் கூறியருளப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீதேவி கூறியது—

35.2. யோகம் என்பது மேலுலகிலோ நடுவுலகிலோ பூமியிலோ பாதாளத்திலோ இல்லை. ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியந்தான் யோகம் என்று யோக நிபுணர்கள் கூறுகிருர்கள்.

35.3. பாவமற்றவரே! யோகத்திற்கு இடையூறு விளைப்பனவாய் ஆறு கூறப்படுகின்றன. அவை காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் எனப் படுவன.

35.4-5. யோகத்தின் அங்கங்களால் அவ்விடையூறுகளை உடைத்து யோகிகள் யோக சித்தியைப் பெறுகின்றனர். யமம், நியமம், ஆஸனம், பிராணுயாமம், அதன்மேல் பிரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்பவை யோகிகளுக்கு யோகசாதனத்திற்குப் பயன்படும் அங்கங்களாம்.

50

अहिंसा-सत्य-मस्तेयं ब्रह्मचर्यं दयाऽर्जवम्।
क्षमा-धृति-र्मिताहारः शौचं चेति यमा दश ।। ३५. ६ ।।

तपः सन्तोष आस्तिक्यं दानं देवस्य पूजनम्।
सिद्धान्त-श्रवणं चैव ह्री-र्मतिश्च जपो हुतम् ।। ३५. ७ ।।

दशैते नियमाः प्रोक्ता मया पर्वतनायक।
पद्मासनं स्वस्तिकं च भद्रं वज्रासनं तथा।
वीरासनमिति प्रोक्तं क्रमादासनपंचकम् ।। ३५. ८ ।।

इडयाऽऽकर्षयेद्वायुं बाह्यं षोडशमात्रया।
धारयेत्पूरितं योगी चतुः षष्टयातु मात्रया ।। ३५. १५ ।।

सुषुम्नामध्यगं सम्यग्द्वात्रिंशन्मात्रया शनैः।
नाड्या पिंगलया चैव रेचयेद्योगवित्तमः ।। ३५. १६ ।।

35.6. அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம் (கள்ளாமை), பிரம்மசரியம், தயை, ஆர்ஜவம் (நேர்மை), பொறுமை, தைரியம், மிதமான ஆகாரம், சௌசம் (சுத்தம்) என யமங்கள் பத்து.

35.7-8. மலையரசே! தவம், ஸந்தோஷம் (போது மென்ற மனம்), ஆஸ்திக்யம், தானம், தேவ பூஜை, ஸித் தாந்த சிரவணம், வெட்கம் (படாடோபமின்மை), தெளிந்த மனம், ஜபம், ஹோமம் ஆகிய பத்தும் நியமம் என என்னுல் கூறப்பட்டது. பத்மாஸனம், ஸ்வஸ்திகாஸனம், பத்ரா ஸனம், வஜ்ராஸனம், வீராஸனம் என்று வரிசையாகக் கூறப்பட்ட ஆஸனங்கள் ஐந்து.

35.15-16. *இடையால் (அதாவது வலது நாசியால்) வெளிக் காற்றைப் பதினாறு மாத்திரையளவு உள்ளே இழுத்து யோகியானவன் அறுபத்து நாலு மாத்திரையளவு ஸுஷும்ந நாடியின் மத்தியில் நிறுத்த வேண்டும். பிறகு முப்பத்திரண்டு மாத்திரையளவு பிங்கலையால் மூச்சை (அதாவது இடது நாசியால்) யோகத்தையறிந்தவன் வெளியே விடவேண்டும்.

---

* இடா-நாம்னீது யா நாடீ வாமமார்க்கே வ்யவஸ்திதா ।
ஸுஷும்நயாம் ஸமாச்லிஷ்ய தக்ஷநாஸாபுடே கதா ॥
இடா நாடியாவது ஸுஷும்நநாடிக்கு இடதுபுறமாகச் சென்று வலது நாசியில் சேர்வது.

प्राणायाममिमं प्राहु-र्योगशास्त्रविशारदा:।
भूयोभूय: क्रमात्तस्य बाह्यमेवं समाचरेत् ।। ३५. १७ ।।

जपध्यानादिभि: सार्धं सगर्भं तं विदुर्बुधा:।
तदपेतं विगर्भं च प्राणायामं परे विदु: ।। ३५. १९ ।।

इन्द्रियाणां विचरतां विषयेषु निरर्गलम्।
बलादाहरणं तेभ्य: प्रत्याहारोऽभिधीयते ।। ३५. २१ ।।

अंगुष्ठ-गुल्फ-जानूरु-मूलाधार-लिंगनाभिषु।
हृद्ग्रीवा-कण्ठदेशेषु लम्बिकायां ततो नसि ।। ३५. २२ ।।

भ्रूमध्ये मस्तकेमूर्ध्नि द्वादशान्ते यथाविधि।
धारणं प्राणमरुतो धारणेति निगद्यते ।। ३५. २३ ।।

35.17. யோகசாஸ்திர நிபுணர்கள் இதைப் பிராணு யாமம் எனக் கூறுகின்றனர். கிரமமாக இதைத் திருப்பித் திருப்பிச் செய்ய வேண்டும். இவ்வாறே வெளியிலும் மூச்சை நிறுத்தவேண்டும்.

35.19. ஜபத்துடனும் தியானத்துடனும் கூடியதை ‘ஸகர்ப்பம்’ என்று அறிந்தோர் கூறுவர். அப்படியல்லாததை ‘விகர்ப்பப் பிராணுயாமம்’ எனக் கூறுவர்.

35.21. கட்டுக் கடங்காமல் விஷயங்களில் திரியும் இந்திரியங்களே வலிய இழுத்து நிறுத்துதல் பிரத்யாஹாரம் எனப்படும்.

35.22. கால் கட்டைவிரல், கணுக்கால், முழங்கால், துடை, மூலாதாரம், குஹ்யம், கொப்பூழ் ஆகியவற்றிலும், இருதயம், கழுத்து கண்டப் பிரதேசங்களிலும் உள்நாக் கிலும், மூக்கிலும்;

35.23. புருவமத்தியிலும் தலை உச்சியிலும் துவாத சாந்தஸ்தானத்திலும் முறைப்படி பிராணவாயுவை நிறுத் துதல் தாரணே எனப்படும்.

समाहितेन मनसा चैतन्यान्तरवर्तिना ।
आत्मन्यभीष्टदेवानां ध्यानं ध्यानमिहोच्यते ॥ ३५. २४ ॥

समत्वभावना नित्यं जीवात्मपरमात्मनोः ।
समाधिमाहु-र्मुनयः प्रोक्तमष्टांगलक्षणम् ॥ ३५. २५ ॥

इदानीं कथये तेऽहं मन्त्रयोगमनुत्तमम् ।
विश्वं शरीरमित्युक्तं पंचभूतात्मकं नग ॥
चन्द्रसूर्याग्नितेजोभिर्जीवब्रह्मैक्यरूपकम् ॥ ३५. २६ ॥

तिस्रः कोटयस्तदर्धेन शरीरे नाडयो मताः ।
तासु मुख्या दश प्रोक्तास्ताभ्यस्तिस्रो व्यवस्थिताः
॥ ३५. २८ ॥
प्रधाना मेरुदण्डेऽत्र चन्द्रसूर्याग्निरूपिणी ।
इडा वामे स्थिता नाडी शुभ्रा तु चन्द्ररूपिणी ॥ ३५. २९ ॥

35.24. அறிவு குகைக்குள் அடங்கிய மனதால் தன்னுடைய இஷ்ட தெய்வத்தைச் சிந்தித்திருத்தல் தியானம் எனப்படும்.

35.25. ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தை அனுபவித்தல் ஸமாதி என்று முனிவர்கள் கூறுகின்றனர். இவ்வாறாக அஷ்டாங்க யோகலக்ஷணம் கூறப்பட்டது.

35.26. இப்பொழுது உமக்கு நான் ஒப்புயர்வற்ற மந்திர யோகத்தைக் கூறுகிறேன். மலையரசே! பஞ்ச பூதங்களாலான சரீரம் சந்திர சூரிய அக்னிகளுடன் கூடிப் பிரபஞ்சமே உருவெடுத்ததாயும் ஜீவப் பிரம்ம ஐக்கிய ஸ்வரூபமாயும் விளங்குகிறது.

35.28. இச்சரீரத்தில் மூன்றரைக் கோடி நாடிகள் உள்ளன. அவற்றுள் பத்து முக்கியமானவை என்றும் அவற்றுள்ளும் மூன்று சிறந்தவை என்றும் கொள்ளப்படும்.

35.29. மேரு தண்டத்தில் உள்ள முக்கியமான நாடிகள் சந்திர சூரிய அக்னி வடிவானவைகள். இடது பக்கமுள்ள 'இடா' நாடி வெள்ளையான சந்திரவடிவானது.

शक्ति रूपा तु सा नाडी साक्षादमृतविग्रहा ।
दक्षिणे या पिंगलाख्या तुपुंरूपा सूर्यविग्रहा ॥ ३५. ३० ॥

सर्वतेजोमयी सा तु सुषुम्ना वह्निरूपिणी ।
तस्या मध्ये विचित्राख्ये इच्छाज्ञानक्रियात्मकम् ॥ ३५. ३१ ॥

मध्ये स्वयंभूलिंगं तु कोटिसूर्यसमप्रभम् ।
तदूर्ध्वं मायाबीजं तु हरात्मा बिन्दुनादकम् ॥ ३५. ३२ ॥

तदूर्ध्वं तु शिखाकारा कुण्डली रक्तविग्रहा ।
देव्यात्मिका तु सा प्रोक्ता मदभिन्ना नगाधिप ॥ ३५. ३३ ॥

तद्बाह्ये हेमरूपाभं वादिसान्त चतुर्दलम् ।
द्रुतहेमसमप्रख्यं पद्मं तत्र विचिन्तयेत् ॥ ३५. ३४ ॥

35.30. அது சக்திருபம்; அமிருதமே நேரில் உரு வெடுத்தாற் போன்றது. வலது பக்கம் 'பிங்களா' நாடி எதுவோ அது புருஷருபம், ஸூரிய விக்ரஹம்.

35.31–32. அனைத்தொளிவடிவான 'ஸுஷும்ன' நாடி அக்னி ருபம். விசித்ரா எனும் அதன் மத்தியில் இச்சாஞானக்ரியாத்மகமானதும் கோடி சூரியனுக்கு நிகரான ஒளியுடன் கூடியதுமான ஸ்வயம்புலிங்கம் உளது. அதற்கு மேல் பிந்து நாத வடிவானதும் சிவாத்மகமுமான மாயாபீஜம் (ஹ்ரீம்) உளது.

35.33. மலையரசே! அதற்குமேல் சிவப்பான அனற் சிகையைப் போல் பிரகாசிக்கும் குண்டலினி சக்தியின் ஸ்தானம். அக்குண்டலினி சக்தி தேவியின் ஸ்வருபமே எனக் கூறப்படுவது. அது என்னைக் காட்டிலும் வேறன்று.

35.34. அதற்கு வெளிப்புறத்தில் 'வ–ச–ஷ–ஸ' என்ற அக்ஷரங்களுடன் கூடிய நாலிதழ்க் கமலத்தை உருக்கிய பொன்னிறமானதாய் தியானிக்க வேண்டும்.

तदूर्ध्वं त्वनलप्रख्यं षड्दलं हीरकप्रभम्।
बादिलान्त षडर्णेन स्वाधिष्ठान-मनुत्तमम्॥ ३५. ३५ ॥

मूलमाधारषट्कोणं मूलाधारं ततो विदुः।
स्वशब्देन परं लिंगं स्वाधिष्ठानं ततो विदुः॥ ३५. ३६ ॥
तदूर्ध्वं नाभिदेशे तु मणिपूरं महाप्रभम्।
मेघाभं च विद्युदाभं च बहुतेजोमयं ततः॥ ३५. ३७ ॥

मणिवद्भिन्नं तत्पद्मं मणिपद्मं तथोच्यते।
दशभिश्च दलैर्युक्तं डादिफान्ताक्षरान्वितम्॥ ३५. ३८ ॥

विष्णुनाधिष्ठितं पद्मं विष्णवालोकनकारणम्।
तदूर्ध्वेऽनाहतं पद्ममुद्यदादित्य-सन्निभम्॥ ३५. ३९ ॥

35.35. அதற்கு மேல் அக்னிப் பிழம்பு போன்றதும் வயிரம் போல் ஜ்வலிப்பதும் 'ப' முதல் 'ல' வரை உள்ள ஆறு அக்ஷரங்களுடன் கூடியதுமான ஆறுதள கமலமாகிய ஒப்பற்ற ஸ்வாதிஷ்டானம் உளது.

35.36. ஆதாரமாயிருக்கும் அறு கோணம் வேர் போன்றிருப்பதால் மூலாதாரம் என அதை அறிகின்றனர். 'ஸ்வ' எனும் சப்தத்தால் உத்தமமான அடையாளம் குறிக்கப்படும்; அதனால் ஸ்வாதிஷ்டானம் என அறிகின்றனர்.

35.37. அதற்கு மேல் நாபிப் பிரதேசத்தில் மகாப் பிரகாசமுள்ள மேகம் போன்றதும் மின்னல் போன்றதும் மிகுந்த தேஜோமயமானதுமான மணிபூரம் உளது.

35.38. அந்தக் கமலம் இரத்னம் பிளந்தாற் போலிருப்பதால் மணிபத்மம் எனவும் கூறப்படுகிறது. அது பத்து இதழ்களுடனும் 'ட' முதல் 'ப' வரை உள்ள அக்ஷரங்களுடனும் கூடியது.

35.39. அது விஷ்ணுவால் இருப்பிடமாய்க் கொள்ளப்பட்ட கமலம்; விஷ்ணுவை ஸாக்ஷாத்கரிக்கக் காரணமாயுள்ளது. அதற்கு மேல் உதிக்கின்ற சூரியனைப் போல் பிரகாசிக்கும் அநாஹதம்.

कादिठान्तदलैरर्कपत्रैश्च समधिष्ठितम् ।
तन्मध्ये बाणलिंगं तु सूर्यायुत-समप्रभम् ॥ ३५. ४० ॥

शब्दब्रह्ममयं शब्दानाहतं तत्र दृश्यते ।
अनाहताख्यं तत्पद्मं मुनिभिः परिकीर्तितम् ॥ ३५. ४१ ॥

आनन्दसदनं तत्तु पुरुषाधिष्ठितं परम् ।
तदूर्ध्वं तु विशुद्धाख्यं दलं षोडशपंकजम् ॥ ३५. ४२ ॥

स्वरैः षोडशभिर्युक्तं धूम्रवर्णं महाप्रभम् ।
विशुद्धं तनुते यस्माज्जीवस्य हंसलोकनात् ॥ ३५. ४३ ॥

विशुद्धं पद्ममाख्यात-माकाशाख्यं महाद्भुतम् ।
आज्ञाचक्रं तदूर्ध्वं तु आत्मनाऽधिष्ठितं परम् ॥ ३५. ४४ ॥

35.40. 'க' முதல் 'ட' வரை உள்ள அக்ஷரங்களுடன் பன்னிரண்டு இதழ்களுடையதாய் விளங்கும் அதன் மத்தியில் பத்தாயிரம் சூரியப் பிரகாசமான பாண லிங்கம் உளது.

35.41. அடித்து உண்டாக்கப்படாத பிரம்மமயமான சப்தம் அங்கு அனுபவிக்கப்படுகிறது. அதனுல் அக்கமலம் முனிவர்களால் அனுஹதம் எனக் கூறப்படுகிறது.

35.42. அது பரமபுருஷனுறையும் ஆனந்த ஸதனம். அதற்கு மேல் பதினுறிதழ்க் கமலமாகிய விசுத்தம் என்பதுளது.

35.43–44. அது பதினுறு உயிரெழுத்துக்களுடன் கூடி புகை வண்ணத்தில் ஒளிமிகுந்து விளங்குவது. அங்கு ஜீவனுக்கு ஹம்ஸ தரிசனம் எனும் பிரம்மானுபவம் ஏற்பட்டு அவன் விசேஷமான சுத்தத்தை யடைவதால் இது விசுத்த கமல மென்றும் மகா அற்புதமான ஆகாச மென்றும் கூறப்படும். அதற்கு மேல் ஆத்மாவின் சிறந்த அதிஷ்டான மான ஆக்ஞா சக்ரம் உளது.

आज्ञासंक्रमणं तत्र तेनाज्ञेति प्रकीर्तितम् ।
द्विदलं हक्षसंयुक्तं पद्मं तत्सुमनोहरम् ।। ३५. ४५ ।।

कैलासाख्यं तदूर्ध्वं तु रोधिनी तु तदूर्ध्वतः ।
एवं त्वाधारचक्राणि प्रोक्तानि तव सुव्रत ।। ३५. ४६ ।।

सहस्रारयुतं बिन्दुस्तानं तदूर्ध्वमीरितम् ।
इत्येतत्कथितं सर्वं योगमार्गमनुत्तमम् ।। ३५. ४७ ।।

आदौ पूरकयोगेनाप्याधारे योजयेन्मनः ।
गुदमेढ्रान्तरे शक्तिस्तामाकुंच्य प्रबोधयेत् ।। ३५. ४८ ।।

लिंगभेदक्रमेणैव विन्दुचक्रं च प्रापयेत् ।
शंभुना तां परां शक्ति-मेकीभूतां विचिन्तयेत् ।। ३५. ४९ ।।

35.45. அங்கு அறிவைக்கடந்த அனுபவ நிலை ஏற்படுவதால் அது ஆக்ஞா எனக் கூறப்பட்டது. அது ஹ, க்ஷ என்ற அக்ஷரங்களுடன் கூடியதாய் மனதை மிகுதியும் கவர்வதாய் உள்ள இரண்டிதழ்க்கமலம்.

35.46. அதற்கு மேல் கைலாஸம்; அதற்கும் மேல் ரோதினி. நல்ல விரதமுடையவரே! இவ்வாறு ஆதார சக்ரங்கள் கூறப்பட்டன.

35.47. அதற்கு மேல் ஆயிரம் இதழ்களுடன் கூடிய பிந்து ஸ்தானம். இவ்வாருக ஒப்புயர்வற்ற யோக மார்க்கம் முழுதும் வர்ணிக்கப்பட்டது.

35.48. ஆதியில் பூரக யோகத்தால் மனதை ஆதாரத்தில் நிறுத்தவேண்டும். குதத்திற்கும் குறிக்கும் இடையில் உள்ள சக்தியை இழுத்து விழிக்கச் செய்யவேண்டும்.

35.49. சக்ரங்களை வரிசையாக ஊடுருவிச் செல்லும்படி செய்து அதை பிந்து சக்ரத்தில் சேர்க்க வேண்டும். சம்புவுடன் அந்தப் பராசக்தி ஒன்றியிருப்பதை தியானிக்க வேண்டும்.

तत्रोत्थितामृतं यत्तु द्रुतलाक्षारसोपमम् ।
पाययित्वा तु तां शक्तिं मायाख्यां योगसिद्धिदाम्
॥ ३५. ५० ॥

षट् चक्रदेवतास्तत्र सन्तर्प्यामृतधारया ।
आनयेत्तेन मार्गेण मूलाधारं ततः सुधीः ॥ ३५. ५१ ॥

एवमभ्यस्यमानस्याऽप्यहन्यहनि निश्चितम् ।
पूर्वोक्तदूषिता मन्त्राः सर्वे सिध्यन्ति नाऽन्यथा ॥ ३५. ५२ ॥

जरामरणदुःखाद्यै-र्मुच्यते भवबन्धनात् ।
ये गुणाः सन्ति देव्या मे जगन्मातुर्यथा तथा ॥ ३५. ५३ ॥

ते गुणाः साधकवरे भवन्त्येव न चाऽन्यथा ।
इत्येवं कथितं तात वायुधारणमुत्तमम् ॥ ३५. ५४ ॥

35.50–51. அங்கிருந்து பெருகும் அரக்கு லாக்ஷாரஸம் போன்ற அமுதம் எதுவோ அதனுல் யோக சித்திதரும் மாயை எனும் அந்த சக்திக்குப் பானம் செய்வித்து ஆறு சக்ர தேவதைகளேயும் அமிருத தாரையால் திருப்தி செய்வித்து புத்திசாலியானவன் அதே மார்க்கத்தில் மூலா தாரத்திற்குத் திருப்பி அழைத்துவரவேண்டும்.

35.52. இவ்வாறு நிச்சயபுத்தியுடன் நாள் தோறும் அப்பியசிப்பவனுக்கு அவன் ஏற்கெனவே உபதேசம் பெற்று பயனளியாமலிருந்த மந்திரங்களெல்லாம் சித்தியாகின்றன. சித்திக்கு வேறு வழியில்லே.

35.53–54. மூப்பு சாவு துன்பம் முதலியவற்றுடன் கூடிய ஸம்ஸாரப் பிணிப்பிலிருந்து அவன் விடுபடுகிருன். உலகிற்குத் தாயும் தேவியுமான என்னிடத்தில் உள்ள குணங்கள் எவையோ அவையெல்லாம் சிறந்த ஸாதகனி டத்தில் உண்டாகின்றன. அதில் மாறுதலில்லே. இவ்வா ருக உமக்கு உத்தமமான வாயுவை நிறுத்துவது கூறப் பட்டது.

इदानीं धारणाख्यं तु शृणुष्वाऽवहितो मम।
दिक्कालाद्यनवच्छिन्नदेव्यां चेतो विधाय च ॥ ३५. ५५ ॥

तन्मयो भवति क्षिप्रं जीवब्रह्मैक्य-योजनात्।
अथवा समलं चेतो यदि क्षिप्रं न सिद्ध्यति ॥ ३५. ५६ ॥

तदाऽवयवयोगेन योगी योगान् समभ्यसेत्।
मदीय हस्तपादादावंगे तु मधुरे नग ॥ ३५. ५७ ॥

चित्तं संस्थापयेन्मन्त्री स्थानस्थानजयात्पुनः।
विशुद्धचित्तः सर्वस्मिन् रूपे संस्थापयेन्मनः ॥ ३५. ५८ ॥

यावन्मनो लयं याति देव्यां संविदि पर्वत।
तावदिष्टमनुं मन्त्री जपहोमैः समभ्यसेत् ॥ ३५. ५९ ॥

35.55–58. இனி என்னிடமிருந்து தாரணை எனும் அங்கத்தை ஒன்றுபட்ட மனத்துடன் கேட்பீராக. தேசம் காலம் முதலியவற்றால் பிளவுபடாத தேவியிடம் சித்தத்தை வைத்து ஜீவனையும் பிரம்மத்தையும் ஒன்று படுத்துவதால் ஒருவன் விரைவில் தன்மயமாய் ஆய்விடு கிறான். ஆனால் மனது அழுக்குடையதாயிருந்து சீக்கிரம் சித்தி ஏற்படாவிட்டால் அப்பொழுது அவயவயோகத்தால் யோகியானவன் யோகம் பழக வேண்டும். மலையரசே! என்னுடைய மதுரமான கை கால் முதலிய அவய்வங்களில் சித்தத்தை மந்திரஜபத்துடன் நிறுத்தி அந்தந்த ஸ்தானத்தை ஜயித்தபின் பரிசுத்தமான மனதுடன் உருவம் முழுவதிலும் கவனத்தை ஸ்தாபிக்க வேண்டும்.

35.59. மலையரசே! தேவியின் ஞானத்தில் மன மானது லயிக்கும் வரை இஷ்ட மந்திரத்தை ஜபங்களாலும் ஹோமங்களாலும் ஒருவன் அப்பியசிக்க வேண்டும்.

मन्त्राभ्यासेन योगेन ज्ञेयज्ञानाय कल्पते ।
न योगेन विना मन्त्रो न मन्त्रेण विना हि सः ॥ ३५. ६० ॥

द्वयोरभ्यास योगो हि ब्रह्मसंसिद्धिकारणम् ।
तमः परिवृते गेहे घटो दीपेन दृश्यते ॥ ३५. ६१ ॥

इति योगविधिः कृत्स्नः सांगः प्रोक्तो मयाऽधुना ।
गुरूपदेशतो ज्ञेयो नान्यथा शास्त्रकोटिभिः ॥ ३५. ६२ ॥

मत्पूजा कोटिफलदं सकृन्मज्ज्ञानिनोऽर्चनम् ।
कुलं पवित्रं तस्यास्ति जननी कृतकृत्यका ॥
विश्वंभरा पुण्यवती चिल्लयो यस्य चेतसः ॥ ३६. १९ ॥

35.60. மந்திராப்பியாசத்தாலும் யோகத்தாலும் ஒருவன் அறிய வேண்டியதை அறிவதற்குரியவனுகிருன். யோகமில்லாமல் மந்திரமில்லே. மந்திரமில்லாமல் யோக மில்லே.

35.61. இரண்டையும் அப்பியசிக்கும் யோகமே பிரம்மஸம்ஸித்திக்குக் காரணம். இருள் சூழ்ந்த வீட்டில் உள்ள ஒரு குடம் தீபத்தால் காணப்படுகிறது. (யோகாப் பியாசம்தான் இருள் சூழ்ந்த ஸம்ஸாரத்தில் ஞானதீபம்).

35.62. இங்ஙனம் யோகவிதி முழுவதும் அங்கங்களுடன் என்னுல் இப்பொழுது உமக்குக் கூறப்பட்டது. குருவின் உபதேசத்தாலேயே இது அறியப்பட வேண்டும். மற்றபடி கோடிக்கணக்கான சாஸ்திரங்களாலும் இதை அறிய வியலாது.

36.19. என்னேப் பற்றிய ஞானத்தை யறிந்தவரைப் பூஜித்தல் எனக்குக் கோடி பூஜை செய்த பலனேத்தரும். எவருடைய சித்தம் சித் சக்தியில் லயித்ததோ அவர் பிறந்த குலம் புனிதமானது, அவருடைய தாய் செய்ய வேண்டி யதைச் செய்து முடித்தவளாவாள், அவர் பிறவியால் பூமியே புண்ணியம் செய்ததாகிறது.

यस्य देवे पराभक्तिर्यथा देवे तथा गुरौ ।
तस्यैते कथिताह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ।। ३६. २२ ।।

तस्मात्सर्वप्रयत्नेन श्रीगुरुं तोषयेन्नग ।
कायेन मनसा वाचा सर्वदा तत्परो भवेत् ।। ३६. २७ ।।

परानुरक्तया मामेव चिन्तयेद्यो ह्यतन्द्रितः ।
स्वाभेदेनैव मां नित्यं जानाति न विभेदतः ।। ३७. १५ ।।

मद्रूपत्वेन जीवानां चिन्तनं कुरुते तु यः ।
यथा स्वस्यात्मनि प्रीतिस्तथैव च परात्मनि ।। ३७. १६ ।।

36.22. எவருக்கு தெய்வத்திடம் உத்தம பக்தி இருக்கிறதோ, தெய்வத்திடம் போலவே குருவிடமும் பக்தி இருக்கிறதோ அந்த மகாத்மாவிற்கு இங்கு கூறப்பட்ட அர்த்தங்களெல்லாம் தாமாகவே பிரகாசிக்கும்.

36.27. மலையரசே! ஆகையால் எல்லாவகையாலும் முயன்று ஸ்ரீ குருவை ஸந்தோஷப்படுத்த வேண்டும். உடலாலும் மனதாலும் வாக்காலும் எப்பொழுதும் அவருக்கு வசமாக வேண்டும்.

37.15. பராபக்தியுடன் என்னையே எவன் சோம்பலின்றி தியானிக்கின்றானோ அவன் என்னை எப்பொழுதும் தானாகவே இருப்பதாய் அறிகிறான்; வேறன்று என்பதைக் காண்கிறான்.

37.16. எவன் ஜீவர்களை யெல்லாம் என்னுடைய ரூபம் எனச் சிந்திக்கின்றானோ அவனுக்குத் தன்னுடைய ஆத்மாவில் உள்ள அன்பைப் போலவே பிறருடைய ஆத்மாக்களிலும் ஏற்படுகிறது.

चैतन्यस्य समानत्वान्न भेदं कुरुते तु यः ।
सर्वत्र वर्तमानानां सर्वरूपां च सर्वदा ।। ३७. १७ ।।

नमते यजते चैवाचाण्डालान्त-मीश्वरम् ।
न कुत्राऽपि द्रोहबुद्धिं कुरुते भेदवर्जनात् ।। ३७. १८ ।।

अहंकारादिरहितो देहतादात्म्यवर्जनात् ।
प्रारब्धे यथा यच्च क्रियते तत्तथा भवेत् ।। ३७. २५ ।।

भक्तेस्तु या पराकाष्ठा सैव ज्ञानं प्रकीर्तितम् ।
वैराग्यस्य च सीमा सा ज्ञाने तदुभयं यतः ।। ३७. २८ ।।

घृतमिव पयसि निगूढं भूते भूते च वसति विज्ञानम् ।
सततं मन्थयितव्यं मनसा मन्थानभूतेन ।। ३७. ४४ ।।

37.17–25. சைதன்யம் சமமானதால் எவன் எங்கும் இயங்கும் எல்லா ரூபத்தையும் எப்பொழுதும் வேற்றுமைப் படுத்துவதில்லையோ சண்டாளன் முதல் அனைத்துயிரினும் முள்ள ஈசுவரனை நமஸ்கரித்துப் பூஜிக்கின்றானோ, பேதத்தை யொழித்துவிட்டமையால் எவ்விடத்தும் துரோக புத்தியே இல்லாதவனோ, தேகமே ஆத்மா என்ற அஞ்ஞானம் நீங்கியதால் அஹங்காரம் முதலியவையற்றவனோ அவன் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அவன் எண்ணியவாறு அது கைகூடும்.

37.28. பக்தியின் உயர்ந்த எல்லை எதுவோ அதுவே ஞானம் என்று கூறப்படும். வைராக்கியத்திற்கும் அதுதான் எல்லை. பக்தி வைராக்கியம் ஆகிய இரண்டும் ஞானத்தில் ஒடுங்கும்.

37.44. பாலில் நெய் மறைந்திருப்பது போல் உயிர் தோறும் விக்ஞானம் மறைந்திருக்கிறது. மனதாகிற மத்தைக் கொண்டு அதை எப்பொழுதும் கடைய வேண்டும்.

ज्ञानं लब्ध्वा कृतार्थः स्यादिति वेदान्तडिण्डिमः ।
सर्वमुक्तं समासेन किं भूयः श्रोतुमिच्छसि ॥ ३७. ४५ ॥

हिमालय उवाच —

देवदेवि महेशानि करुणासागरेऽम्बिके ।
ब्रूहि पूजाविधिं सम्यग्यथावदधुना निजम् ॥ ३९. १ ॥

श्रीदेव्युवाच —

द्विविधा मम पूजा स्याद् बाह्याचाभ्यन्तराऽपि च ।
बाह्याऽपि द्विविधा प्रोक्ता वैदिकी तान्त्रिकी तथा ॥ ३९. ३ ॥

वैदिक्यर्चाऽपि द्विविधा मूर्तिभेदेन भूधर ।
वैदिकी वैदिकैः कार्या वेददीक्षासमन्वितैः ॥
तन्त्रोक्तदीक्षावद्भिस्तु तान्त्रिकी संश्रिता भवेत् ॥ ३९. ४ ॥

37.45. ஞானத்தையடைந்த பின்னரே ஒருவன் கிருதார்த்தனுகிறுன் என்று வேதாந்தம் பறையறைகிறது. அனைத்தையும் சுருக்கமாய்க் கூறியாயிற்று. மேலும் என்ன கேட்க விரும்புகிறீர் ?

ஹிமவான் கூறியது—

39.1. தேவர்களின் நாயகியே ! மகேசுவரி ! கருணைக் கடலே ! அம்பிகையே ! உனது பூஜா விதியை முறைப்படி தெளிவாக இப்பொழுது கூறியருளுதல் வேண்டும்.

ஸ்ரீதேவி கூறியது—

39.3. என்னுடைய பூஜை 'பாஹ்யம்', 'அந்தரம்' அதாவது வெளிப்படை, மானஸம் என இருவகைப்படும். பாஹ்ய பூஜையும் வைதிகம் தாந்த்ரிகம், என இருவகை யாகக் கூறப்பட்டுளது.

39.4. மலையரசே ! வைதிக பூஜையும் (விசுவரூபம், விக்ரஹரூபம் என்ற) மூர்த்தி பேதத்தால் இருவகைப்படும். வைதிகமுறை வேதத்தைக் கற்று வேத தீக்ஷையுடன் கூடிய வர்களால் கைக்கொள்ளப் படவேண்டும். தந்திரத்தில் கூறிய தீக்ஷையுடன் கூடியவர்களால் தந்திர முறை அனுஷ்டிக்கப்பட வேண்டும்.

तत्र या वैदिकी प्रोक्ता प्रथमा तां वदाम्यहम् ।
यन्मे साक्षात्परं रूपं दृष्टवानसि भूधर ॥ ३९. ७ ॥

अनन्तशीर्षनयन-मनन्तचरणंमहत् ।
तदेव पूजयेन्नित्यं नमेद्ध्यायेत्स्मरेदपि ॥ ३९. ८ ॥

तदेव चेतसा पश्य जप ध्यायस्व सर्वदा ।
अनन्यया प्रेमयुक्तभक्त्या मद्भावमाश्रितः ॥ ३९. ११ ॥

श्रुतिस्मृतिविरुद्धानि तामसान्येव सर्वशः ।
वामं कापालकं चैव कौलकं भैरवागमः ॥ ३९. २७ ॥

तत्र वेदाविरुद्धांशोप्युक्त एव क्वचित्क्वचित् ।
वैदिकैस्तद्ग्रहे दोषो न भवत्येव कर्हिचित् ॥ ३९. ३१ ॥

39.7–8. வைதிக பூஜையில் எது முதலாகக் குறிப்பிடப்பட்டதோ அதை நான் கூறுகிறேன். மலையரசே! கணக்கற்ற தலைகளும் கண்களும் கால்களும் உடைய மஹத்தான என்னுடைய எந்த விசுவரூபம் உம்மால் நேரில் காணப்பட்டதோ அதையே எப்பொழுதும் பூஜிக்கவும் நமஸ்கரிக்கவும் தியானிக்கவும் வேண்டும்.

39.11. அதையே மனதால் எப்பொழுதும் பார்த்து வேறொன்றை நாடாத பிரேமபக்தியுடன் என்னிடம் பாவனையை நிறுத்தி ஜபமும் தியானமும் செய்வீராக.

39.27. சுருதிக்கும் ஸம்ருதிக்கும் முரணான வாமம், காபாலகம், கௌலகம், பைரவம் முதலிய ஆகமங்கள் கூறும் வழிபாடுகள் முற்றும் தாமஸமானவை.

39.31. அவற்றிலும் ஆங்காங்கு சிற்சில பகுதிகள் வேதத்துடன் முரண்படாதவையாய்க் கூறப்பட்டிருக்கும். அப்பகுதிகளை வைதிகர்கள் ஏற்பதால் ஒருபொழுதும் தோஷமில்லை.

सर्वथा वेदभिन्नार्थे नाऽधिकारी द्विजो भवेत् ।
वेदाधिकारहीनस्तु भवेत्तत्राधिकारवान् ।। ३९. ३२ ।।

सर्वैषणाः परित्यज्य मामेव शरणं गताः ।
सर्वभूतदयावन्तो मानाऽहंकारवर्जिताः ।। ३९. ३४ ।।

मच्चित्ता मद्गतप्राणा मत्स्थानकथने रताः ।
सन्न्यासिनो वनस्थाश्च गृहस्था ब्रह्मचारिणः ।। ३९. ३५ ।।

उपासते सदा भक्त्या योगमैश्वरसंज्ञितम् ।
तेषां नित्याभियुक्ताना-महमज्ञानजं तमः ।। ३९. ३६ ।।

ज्ञानसूर्यप्रकाशेन नाशयामि न संशयः ।
इत्थं वैदिकपूजायाः प्रथमाया नगाधिप ।।
स्वरूपमुक्तं संक्षेपाद् द्वितीयाया अथो ब्रुवे ।। ३९. ३७ ।।

39.32. வேதத்திற்கு முரணான கருத்துள்ள வழிகளில் துவிஜன் ஒருபொழுதும் அதிகாரியாக மாட்டான். வேதத்தில் அதிகாரமில்லாதவனே அவ்வழிபாடுகளுக்கு அதிகாரியாவான்.

39.34–37. (அற்ப) ஆசைகளைத் துறந்து என்னையே சரண் அடைந்தவர்களாய், எல்லா உயிர்களிடத்தும் தயை உடையவர்களாய், கர்வமும் அகங்காரமும் அற்றவர்களாய் என்னிடம் சித்தத்தை வைத்தவர்களாய், என்னை உயிரைப் போல்நேசிப்பவர்களாய், என்னுடைய ஸ்தானத்திலும் கதைகளிலும் விருப்பம் மிகுந்தவர்களாய் ஸந்நியாஸிகளும் வானப்பிரஸ்தர்களும் கிருஹஸ்தர்களும் பிரும்மசாரிகளும் எப்பொழுதும் பக்தியுடன் சிவயோகம் எனப்படும் முறையில் என்னை உபாசிக்கிறார்கள். என்றும் ஒரு நிலைப்பட்டு யோகம் பழகும் அவர்களுடைய அஞ்ஞான இருளை நான் ஞானமெனும் சூரியப் பிரகாசத்தால் போக்கி விடுகிறேன். இதில் சந்தேகமில்லை. மலையரசே! இங்ஙனம் வைதிக பூஜையில் முதல்வகையின் ஸ்வரூபம் சுருக்கமாய்க் கூறப்பட்டது. இனி இரண்டாவது வகையைக் கூறுகிறேன்.

मूर्तौ वा स्थण्डिले वाऽपि तथा सूर्येन्दुमण्डले ॥
जलेऽथवा बाणलिंगे यन्त्रे वाऽपि महापटे ।
तथा श्रीहृदयाम्भोजे ध्यात्वा देवीं परात्पराम् ॥ ३९. ३९ ॥
सगुणां करुणापूर्णां तरुणीमरुणारुणाम् ।
सौन्दर्यसारसीमां तां सर्वावयवसुन्दराम् ॥ ३९. ४० ॥
शृंगार-रससंपूर्णां सदा भक्तार्तिकातराम् ।
प्रसादसुमुखीमम्बां चन्द्रखण्डशिखण्डिनीम् ॥ ३९. ४१ ॥
पाशांकुशवराभीति-धरामानन्दरूपिणीम् ।
पूजयेदुपचारैश्च यथावित्तानुसारतः ॥ ३९. ४२ ॥
यावदान्तरपूजाया-मधिकारो भवेन्नहि ।
तावद्बाह्यामिमां पूजां श्रयेज्जाते तु तां त्यजेत् ॥ ३९. ४३ ॥

39.39—42. பூமியில் ஒரு விக்கிரகத்திலோ, அல்லது சூரிய சந்திர மண்டலத்திலோ, ஜலத்திலோ, பாணலிங்கத்திலோ, யந்திரத்திலோ, சிறந்த படத்திலோ அழகிய இருதயத் தாமரையிலோ பரத்திற்கும் பரமான தேவியைக் கல்யாண குணங்களுடன் கூடியவளாயும், கருணை நிறைந்தவளாயும், யௌவனப் பருவத்தினளாயும், உதிக்கும் சூரியனைப் போல் சிவந்தவளாயும், அழகின் எல்லையாயும், எல்லா அங்கங்களும் அழகு பொலிவதாயும், சிருங்காரரஸம் நிறைந்தவளாயும், எப்பொழுதும் பக்தர்களின் துன்பங்களைத் துடைப்பவளாயும், அருள் பொழியும் முகம் படைத்த தாய் போன்றவளாயும், சந்திரகலையைச் சிரசில் தரித்தவளாயும், பாசம் அங்குசம் வர முத்திரை அபய முத்திரை ஆகியவற்றைக் கைகளில் தரித்தவளாயும், ஆனந்தமே உருக்கொண்டவளாயும் விளங்குபவளாய்த் தியானித்துச் செல்வத்திற்கியைந்தவாறு உபசாரங்களால் பூஜிக்க வேண்டும்.

39.43. எதுவரை உள்முகமான பூஜைக்குத் தகுதி ஏற்படவில்லையோ அதுவரை இந்த பாஹியபூஜையை அனுஷ்டிக்க வேண்டும்; தகுதி ஏற்பட்டபின் அதை விட்டு விடலாம்.

आभ्यन्तरा तु या पूजा सा तु संविल्लयः स्मृतः ।
संविदेव परं रूप-मुपाधिरहितं मम ।। ३९. ४४ ।।

अतः संविदि मद्रूपे चेतः स्थाप्यं निराश्रयम् ।
संविद्रूपातिरिक्तं तु मिथ्या मायामयं जगत् ।। ३९. ४५ ।।

अतः संसारनाशाय साक्षिणी-मात्मरूपिणीम् ।
भावयेन्निर्मनस्केन योगयुक्तेन चेतसा ।। ३९. ४६ ।।

अतः परं बाह्यपूजा विस्तारः कथ्यते मया ।
सावधानेन मनसा शृणु पर्वतसत्तम ।। ३९. ४७ ।।

प्रातरुत्थाय शिरसि सस्मरेत्पद्ममुज्ज्वलम् ।
कर्पूराभं स्मरेत्तत्र श्रीगुरुं निजरूपिणम् ।। ४०. १ ।।

39.44. அந்தரபூஜை என்பது ஞானத்தில் லயம் எனக் கூறப்படுகிறது. உபாதிகள் நீங்கிய ஞானமே என்னுடைய உத்தம ரூபம்.

39.45. என்னுடைய அந்த ஞான ஸ்வரூபத்தில் வேறு பிடிப்பேதுமின்றி சித்தம் நிலைத்தபொழுது மாயா மயமான உலகம் பொய்யாக ஒழியும்.

39.46. ஆகையால் ஸம்ஸாரம் ஒழிவதற்கு ஸாக்ஷிணியாயும் ஆத்மரூபிணியாயும் இருக்கும் என்னை யோகப் பயிற்சியால் மனதின் அலைகள் அடங்கிய சித்தத்தால் பாவிக்க வேண்டும்.

39.47. இனி பாஹ்ய பூஜையின் விஸ்தாரம் என்னால் விளக்கிக் கூறப்படும். பர்வதராஜரே! ஸாவதானமான மனத்துடன் கேட்பீராக.

40.1. காலையிலெழுந்ததும் சிரசில் ஜ்வலிக்கும் தாமரையைச் சிந்திக்க வேண்டும். அதில் கர்ப்பூரவர்ணமான ஸ்ரீகுருவின் ஸ்வரூபத்தை தியானம் செய்ய வேண்டும்.

सुप्रसन्नं लसद्भूषा भूषितं शक्तिसंयुतम् ।
नमस्कृत्य ततो देवीं कुण्डलीं संस्मरेद् बुधः ॥ ४०.२ ॥
प्रकाशमानं प्रथमे प्रयाणे प्रतिप्रयाणेऽप्यमृतायमानाम् ।
अन्तः पदव्यामनुसंचरन्ती-मानन्दरूपा-मबलां प्रपद्ये
॥ ४०. ३ ॥
ध्यात्वैवं तच्छिखामध्ये सच्चिदानन्दरूपिणीम् ।
मां ध्यायेदथ शौचादि क्रियाः सर्वाः समापयेत् ॥ ४०. ४ ॥
अह्निहोत्रं ततो हुत्वा मत्प्रीत्यर्थं द्विजोत्तमः ।
होमान्ते स्वासने स्थित्वा पूजासंकल्प-माचरेत् ॥ ४०. ५ ॥
भूतशुद्धिं पुरा कृत्वा मातृका न्यासमेव च ।
हृल्लेखा-मातृकान्यासं नित्यमेव समाचरेत् ॥ ४०. ६ ॥

40.2. பிரகாசிக்கும் ஆபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றவரும் சக்தியுடன் கூடியவரும் பிரஸன்னமானவருமாகிய அவரை நமஸ்கரித்துவிட்டுப் பிறகு புத்திமான் குண்டலினி தேவியை தியானம் செய்ய வேண்டும்.

40.3. முதல் பிரயாணத்தில் (மேலே செல்லுகையில்) பிரகாசிப்பவளும் திரும்பிவரும் பொழுது அமிருதவடிவினளும் (ஸுஷும்னையில்) உள்பாதையில் சஞ்சரிப்பவளும் ஆனந்த ரூபிணியும் மாசற்றவளுமான அவளைச் சரணடைகின்றேன்.

40.4. இப்படி தியானித்து அதன் உச்சியின் நடுவில் ஸச்சிதானந்த ரூபிணியான என்னை தியானிக்க வேண்டும். பிறகு சௌசம் முதலிய கிரியைகளை யெல்லாம் முடிக்க வேண்டும்.

40.5. பிறகு துவிஜசிரேஷ்டன் என்னுடைய பிரீதிக்காக அக்னிஹோத்ரம் செய்து ஹோமத்தின் முடிவில் தனது ஆஸனத்திலமர்ந்து பூஜாஸங்கல்பம் செய்து கொள்ள வேண்டும்.

40.6. பூத சுத்தியை முதலில் செய்து கொண்டு மாத்ருகாநியாஸத்தையும் ஹ்ருல்லேகா மாத்ருகா நியாஸத்தையும் (பின்வருமாறு) நித்தியம் செய்யவேண்டும்.

मूलाधारे हकारं च हृदये च रकारकम् ।
भ्रूमध्ये तद्वदीकारं ह्रींकारं मस्तके न्यसेत् ॥ ४०. ७ ॥

तत्तन्मन्त्रोदितानन्यान् न्यासान् सर्वान् समाचरेत् ।
कल्पयेत्स्वात्मनो देहे पीठं धर्मादिभिः पुनः ॥ ४०. ८ ॥

ततो ध्यायेन्महादेवीं प्राणायामैर्विजृम्भिते ।
हृदम्भोजे मम स्थाने पंचप्रेतासने बुधः ॥ ४०. ९ ॥

ब्रह्मा विष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ।
एते पंचमहाप्रेताः पदमूले मम स्थिताः ॥ ४०. १० ॥

पंचभूतात्मका ह्येते पंचावस्थात्मका अपि ।
अहं त्वव्यक्तचिद्रूपा तदतीताऽस्मि सर्वथा ॥ ४०. ११ ॥

40.7. மூலாதாரத்தில் ஹகாரத்தையும் இருதயத்தில் ரகாரத்தையும் புருவமத்தியில் ஈகாரத்தையும் ஹ்ரீங்காரத்தைத் தலையிலும் நியாஸம் செய்ய வேண்டும்.

40.8. அந்தந்த மந்திரங்களிலுதிக்கும் மற்ற நியாஸங்களனைத்தையும் செய்ய வேண்டும். ஆத்மாவிற்குப் பீடத்தை தர்மம் முதலியவற்ருல் தேகத்தில் கற்பிக்க வேண்டும்.

40.9. பிறகு பிராணுயாமத்தால் மலர்ந்த இருதய கமலத்தில் பஞ்சப்ரேதாஸனமாகிய என்னுடைய ஸ்தானத்தில் மகாதேவியாகிய என்னை தியானம் செய்யவேண்டும்.

40.10. பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசுவரன், ஸதாசிவன் ஆகியோர் பஞ்சப்ரேதம் எனப்படுவோர். அவர்கள் என் பாதமூலத்திலிருப்பவர்கள்.

40.11. அவர்கள் பஞ்சமகாபூதங்களின் வடிவினரும் ஐந்து அவஸ்தைகளின் வடிவினரும் ஆவர். நானே எப்பொழுதும் அந்நிலைகளைக் கடந்து வெளிப்படையாய்த் தோன்ருத சித்ரூபிணி.

ततो विष्टरतां याताः शक्तितन्त्रेषु सर्वदा।
ध्यात्वैवं मानसैर्भोगैः पूजयेन्मां जपेदपि ॥ ४०. १२ ॥

जपं समर्प्य श्रीदेव्यै ततोऽर्घ्यस्थापनं चरेत्।
पात्रासादनकं कृत्वा पूजाद्रव्याणि शोधयेत् ॥ ४०. १३ ॥

जलेन तेन मनुनाचाऽस्त्रमन्त्रेण देशिकः।
दिग्बन्धं च पुरा कृत्वा गुरून्नत्वा ततः परम् ॥ ४०. १४ ॥

तदनुज्ञां समादाय बाह्यपीठे ततः परम्।
हृदिस्थां भावितां मूर्तिं मम दिव्यां मनोहराम् ॥ ४०. १५ ॥

आवाहयेत् ततः पीठे प्राणस्थापनविद्यया।
आसनावाहने चार्घ्यं पाद्याद्याचमनं तथा ॥ ४०. १६ ॥

स्नानं वासोद्वयं चैव भूषणानि च सर्वशः।
गन्धपुष्पं यथा योग्यं दत्त्वा देव्यै स्वभक्तितः ॥ ४०. १७ ॥

40.12. ஆகையால் இவர்கள் சக்திதந்திரங்களில் எப்பொழுதும் எனக்கு ஆசனமாய்க் கூறப்படுகின்றனர். இப்படி தியானித்து மானஸ போகங்களால் என்னைப் பூஜித்து ஜபமும் செய்யவேண்டும்.

40.13—17. ஜபத்தை ஸ்ரீ தேவிக்கு ஸமர்ப்பணம் செய்து பிறகு அர்க்கியஸ்தாபனம் செய்ய வேண்டும். பாத்ரஸாதனம் செய்து அந்த தீர்த்தத்தாலும் அஸ்திர மந்திரத்தாலும் தேசிகன் பூஜாதிரவியங்களைப் புனிதமாக்க வேண்டும். திக்பந்தம் செய்து கொண்டு பிறகு குருவை நமஸ்கரித்து அவருடைய அனுமதியைப் பெற்று இருதயத்தில் பாவிக்கப் பெற்ற என்னுடைய திவ்யமான மனோஹர மூர்த்தியை வெளிப்பீடத்தில் பிராணஸ்தாபன வித்தையின்படி (பிராணப் பிரதிஷ்டை முறைப்படி) ஆவாஹனம் செய்ய வேண்டும். ஆஸனம், அர்க்கியம், பாத்யம், ஆசமனம், ஸ்நானம், இரண்டு வஸ்திரங்கள், ஆபரணங்கள், கந்தம், புஷ்பம் முதலிய அனைத்தையும் தகுந்த முறையில் தேவிக்கு உள்ளன்புடன் அளிக்க வேண்டும்.

यन्त्रस्थाना-मावृतीनां पूजनं सम्यगाचरेत् ।
प्रतिवारमशक्तानां शुक्रवारो नियम्यते ।। ४०. १८ ।।

मूलदेवीप्रभारूपाः स्मर्तव्या अंगदेवताः ।
तत्प्रभापटलव्याप्तं त्रैलोक्यं च विचिन्तयेत् ।। ४०. १९ ।।

पुनरावृत्तिसहितां मूलदेवीं च पूजयेत् ।
गन्धादिभिः सुगन्धैस्तु तथा पुष्पैः सुवासितैः ।।४० २० ।।

नैवेद्यै स्तर्पणैश्चैव ताम्बूलैर्दक्षिणादिभिः ।
तोषयेन्मां त्वत्कृतेन नाम्नां साहस्रकेण च ।। ४०. २१ ।।

कवचेन च सूक्तेनाऽहं रुद्रेभिरिति प्रभो ।
देव्यथर्वशिरोमन्त्रै-र्हृल्लेखोपनिषद्भवैः ।। ४०. २२ ।।

महाविद्या-महामन्त्रैस्तोषयेन्मां मुहुर्मुहुः ।
क्षमापयेज्जगद्धात्रीं प्रेमार्द्रहृदयो नरः ।। ४०. २३ ।।

40.18. யந்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஆவரண தேவதைகளை நன்கு பூஜிக்க வேண்டும். தினந்தோறும் செய்யச் சக்தியில்லாதவர்களுக்கு வெள்ளிக்கிழமை நியமிக்கப் படுகிறது.

40.19. மூலதேவியின் பிரபை வடிவினர்களாய் அங்க தேவதைகளை பாவிக்க வேண்டும். அவர்களுடைய ஒளியால் மூவுலகும் வியாபிக்கப்பட்டிருப்பதாய் தியானிக்க வேண்டும்.

40.20–23. பிறகு ஆவரண தேவதைகளுடன் கூடிய மூலதேவியை நறுமணம் மிக்க சந்தனம் முதலியவற்றாலும் நல்ல வாசனையுள்ள புஷ்பங்களாலும் நைவேத்தியங்களாலும் தர்ப்பணங்களாலும் தாம்பூலங்களாலும், தக்ஷிணைகளாலும் திருப்தி செய்விக்க வேண்டும். பிரபுவே! உம்மால் செய்யப் பட்ட ஸஹஸ்ரநாமத்தாலும் கவசத்தாலும் 'அஹம் ருத் ரேபி:' எனும் ஸூக்தத்தாலும் தேவியின் அதர்வவேத உபநிஷத மந்திரங்களாலும், புவனேசுவரி உபநிஷதங் களிலுள்ள மஹா வித்யை மஹா மந்திரம் முதலியவை களாலும் அடிக்கடி என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டும். அன்பு கசியும் இருதயத்துடன் ஜகத்தாத்ரியாகிய என்னிடம் குறைகளைக் கூறி மனிதன் மன்னிப்பைக் கேட்கவும் வேண்டும்.

पुलकांकितसर्वांगै-र्बाष्परुद्धाक्षिनिःस्वनः।
नृत्यगीतादिघोषेण तोषयेन्मां मुहुर्मुहुः ॥ ४०. २४ ॥

वेदपारायणैश्चैव पुराणैः सकलैरपि।
प्रतिपाद्या यतोऽहं वै तस्मात्तैस्तोषयेच्च माम् ॥ ४०. २५ ॥

निजं सर्वस्वमपि मे सदेहं नित्यशोऽर्पयेत्।
नित्यहोमं ततः कुर्याद् ब्राह्मणांश्च सुवासिनीः ॥ ४०. २६ ॥

वटुकान् पामरा-नन्यान् देवीबुद्ध्यातु भोजयेत्।
नत्वा पुनः स्वहृदये व्युत्क्रमेण विसर्जयेत् ॥ ४०. २७ ॥

सर्वं हृल्लेखया कुर्यात्पूजनं मम सुव्रत।
हृल्लेखा सर्वमन्त्राणां नायिका परमा स्मृता ॥ ४०. २८ ॥

40.24. மயிர்கூச்செறியும் அங்கங்களுடனும் பாஷ்பம் நிறைந்த கண்களுடனும் தழுதழுத்த குரலுடனும் ஆடல் பாடல் முதலிய கோஷங்களுடனும் என்னை அடிக்கடி திருப்தி செய்விக்க வேண்டும்.

40.25. வேதபாராயணங்களாலும் எல்லாப்புராணங்களையும் படிப்பதாலும் என்னுடைய பூஜை பூர்த்தியாவதால் அவற்ருலும் என்னைச் சந்தோஷப்படுத்த வேண்டும்.

40.26–27. உடலுடன் உடைமையனைத்தையும் எப்பொழுதும் எனக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். தினந்தோறும் ஹோமம் செய்து பிறகு பிராம்மணர்களையும் ஸுமங்கலிகளையும் பிரம்மசாரிகளையும் மற்றும் ஏழை எளியவர்களையும் அவர்களெல்லாம் தேவியின் ஸ்வரூபம் என்ற பாவனையுடன் போஜனம் செய்விக்க வேண்டும். நமஸ்கரித்து முடிவில் தனது இருதயத்தில் ஸம்ஹார முத்திரையால் என்னை எழுந்தருளச் செய்ய வேண்டும்.

40.28. சிறந்த விரதமுடையவரே! என்னுடைய பூஜை முழுவதையும் ஹ்ரீம் எனும் பீஜமந்திரத்தால் செய்ய வேண்டும். 'ஹ்ரீம்' என்பது எல்லா மந்திரங்களுக்கும் உத்தமமான நாயகி எனக் கூறப்படுகிறது.

. हृल्लेखा-दर्पणे नित्यमहं तत्प्रतिबिम्बिता ।
तस्माद्धृल्लेखया दत्तं सर्वमन्त्रैः समर्पितम् ॥ ४०. २९ ॥

गुरुं संपूज्य भूषाद्यैः कृतकृत्यत्व-मावहेत् ।
य एवं पूजयेद्देवीं श्रीमद्भुवनसुन्दरीम् ॥ ४०. ३० ॥

न तस्य दुर्लभं किंचित्कदाचित्क्वचिदस्ति हि ।
देहान्ते तु मणिद्वीपं मम यात्येव सर्वथा ॥ ४०. ३१ ॥

ज्ञेयो देवीस्वरूपोऽसौ देवा नित्यं नमन्ति तम् ।
इति ते कथितं राजन् महादेव्या प्रपूजनम् ॥ ४०. ३२ ॥

विमृश्यैतदशेषेणऽप्यधिकारानुरूपतः ।
कुरु मे पूजनं तेन कृतार्थस्त्वं भविष्यसि ॥ ४०. ३३ ॥

40.29. ஹ்ரீம் எனும் மந்திரமாகிய கண்ணுடியில் என் பிரதிபிம்பம் எப்பொழுதும் காணப்படும். ஆகையால் அம்மந்திரத்தால் அளிக்கப்பட்டது எல்லா மந்திரங்களாலும் ஸமர்ப்பிக்கப்பட்டதாகும்.

40.30–32. குருவையும் ஆபரணம் முதலியவற்ருல் பூஜித்து ஒருவன் கிருதகிருத்யனுக (செய்ய வேண்டியதை யெல்லாம் பரிபூர்ணமாய்ச் செய்தவனுக) ஆவான். ஸ்ரீபுவனசுந்தரியாகிய தேவியை எவன் இவ்வாறு பூஜிக்கிருனே அவனுக்கு எங்கும் எக்காலத்தும் கிடைக்காத பொருள் ஒரு சிறிதும் இல்லை. உடலை விட்டபின் என்னுடைய மணித்துவீபத்தை எப்படியும் அடைவான். அவன் தேவியின் ஸ்வரூபமே என்று உணர வேண்டும். நித்திய வாழ்வு படைத்த தேவர்கள் அவனை வணங்குவார்கள்.

40.33. இதை நன்கு ஆராய்ந்துணர்ந்து உம்முடைய தகுதிக்குத்தக்க முறையில் என்னுடைய பூஜையைச் செய்வீராக. அதனுல் நீர் கிருதார்த்தராவீர்.

इदं तु गीताशास्त्रं मे नाऽशिष्याय वदेत्क्वचित् ।
नाऽभक्ताय प्रदातव्यं न धूर्ताय च दुहृदे ॥ ४०. ३४ ॥

देयं भक्ताय शिष्याय ज्येष्ठपुत्राय चैव हि ।
सुशीलाय सुवेषाय देवीभक्तियुताय च ॥ ४०. ३५ ॥

व्यास उवाच —

इत्युक्त्वा सा भगवती तत्रैवाऽन्तरधीयत ।
देवाश्च मुदिताः सर्वे देवीदर्शनतोऽभवन् ॥ ४०. ३८ ॥

ततो हिमालये जज्ञे देवी हैमवती तु सा ।
या गौरीति प्रसिद्धाऽसीद्दत्ता सा शंकराय च ॥ ४०. ३९ ॥

40.34. (தேவீ கீதை* எனும்) என்னுடைய இந்த கீதா சாஸ்திரத்தை சிஷ்யனல்லாதவனுக்கு ஒரு பொழுதும் சொல்லக் கூடாது. பக்தியில்லாதவனுக்கும் நன்னடத்தை யில்லாதவனுக்கும் கெட்ட எண்ணமுடையவனுக்கும் இதைக் கொடுக்கலாகாது.

40.35. பக்தனுகிய சிஷ்யனுக்கும் ஜேஷ்ட புத்திர னுக்கும் நல்ல குணமுள்ளவனுக்கும் நல்ல நடையுடை உள்ள வனுக்கும் தேவிபக்தி உடையவனுக்கும்தான் இதை உப தேசிக்க வேண்டும்.

வியாஸர் கூறியது—

40.38. இப்படி கூறிவிட்டு அந்த பகவதி அங்கேயே மறைந்து விட்டாள். தேவியின் தரிசனத்தால் தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சி நிறைந்தவர்களானுர்கள்.

40.39. பிறகு இமவானிடம் தேவியானவள் தோன்றி ஹைமவதி என்றும் கௌரீ என்றும் பிரசித்தமாய் விளங்கிச் சங்கரருக்குக் கொடுக்கப்பட்டாள்.

---

*அத்தியாயம் 32 முதல் 40 வரை தேவீ கீதை எனப்படும்.

ततः स्कन्दः समुद्भूतस्तारकस्तेन पातितः ।
समुद्रमन्थने पूर्वं रत्नान्यासुर्नराधिप ॥ ४०. ४० ॥

तत्र देवैः स्तुता देवी लक्ष्मी प्राप्त्यर्थ-मादरात् ।
तेषामनुग्रहार्थाय निर्गता तु रमा ततः ॥ ४०. ४१ ॥

वैकुण्ठाय सुरैर्दत्ता तेन तस्य शमोऽभवत् ।
इति ते कथितं राजन् देवीमाहात्म्यमुत्तमम् ॥ ४०. ४२ ॥

गौरीलक्ष्म्योः समुत्पत्तिविषयं सर्वकामदम् ।
न वाच्यं त्वेतदन्यस्मै रहस्यं कथितं यतः ॥ ४०. ४३ ॥

40.40–41. அவளிடம் ஸ்கந்தர் பிறந்தார். தாரகாசுரன் ஸ்கந்தரால் கொல்லப்பட்டான். அரசே! பிறகு பாற்கடலைக் கடைந்த பொழுது ரத்னங்கள் தோன்றியதும் லக்ஷ்மியை அடைவதற்காக தேவர்களால் பராசக்தி ஆதரவுடன் துதிக்கப்பட்டாள். அவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு அதினின்று ரமாதேவி வெளி வந்தாள்.

40.42. வைகுண்டநாதரான விஷ்ணுவுக்கு தேவர்களால் அவள் ஸமர்ப்பிக்கப்பட்டாள். அதனால் அவருக்குப் பரமசாந்தி ஏற்பட்டது. அரசே! இங்ஙனம் உமக்கு உத்தமமான தேவீமாகாத்மியம் கூறப்பட்டது.

40.43. எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விக்கும் கௌரீ, லக்ஷ்மீ ஆகியோரின் தோற்றத்தைப் பற்றிய இவ்வரலாறு உமக்குக் கூறப்பட்டது. ரகசியமானதால் மற்றவர்க்கு (பக்தியில்லாதவர்க்கு) சொல்லக் கூடாது.

सर्वमुक्तं समासेन यत्पृष्टं तत्त्वयानघ ।
पवित्रं पावनं दिव्यं किं भूयः श्रोतुमिच्छसि ॥ ४०. ४५ ॥

॥ पराशक्ति प्रभाववर्णनं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कन्धः समाप्तः ॥

40.45. பாவமற்றவனே! நீ கேட்டதெல்லாம் சுருக்கமாய்க் கூறியாயிற்று. இது புனிதமானது, பரிசுத்தமளிப்பது, தெய்வீகமானது. மேலும் என்ன கேட்க விரும்புகிறுய்?

பராசக்தி ப்ரபாவ வர்ணனம் முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவத மகாபுராணத்தில் ஏழாவது ஸ்கந்தம் முற்றும்.

எட்டாவது ஸ்கந்தம்

॥ अष्टमः स्कन्धः ॥

॥ भूगोळवर्णनम् ॥ ३२ ॥

जनमेजय उवाच —

अधुना श्रोतुमिच्छामि सा देवी जगदम्बिका ।
मन्वन्तरेषु सर्वेषु यद्यद्रूपेण पूज्यते ॥ १.२ ॥

व्यास उवाच —

शृणु राजन् प्रवक्ष्यामि देव्याराधनमुत्तमम् ।
यत्कृतेन श्रुतेनापि नरः श्रेयोऽत्र विन्दते ॥ १.५ ॥

एवमेतन्नारदेन पृष्टो नारायणः पुरा ।
तस्मै यदुक्तवान् देवो योगचर्या-प्रवर्तकः ॥ १.६ ॥

எட்டாவது ஸ்கந்தம்

32. பூகோள வர்ணனை

ஜனமேஜயர் கூறியது—

1.2. ஜகதம்பிகையாகிய அந்த தேவி எல்லா மன்வந்தரங்களிலும் எந்தெந்த ரூபத்தில் பூஜிக்கப்படுகிருள் என்பதை இப்பொழுது கேட்க விரும்புகிறேன்.

வியாஸர் கூறியது—

1.5. தேவியின் உத்தமமான ஆராதனத்தைக் கூறுகிறேன், அரசே! கேள். அதைச் செய்தாலும் அதைப் பற்றிக் கேட்டாலுங் கூட மனிதன் உயர்ந்த நன்மையை அடைவான்.

1.6. (இப்பொழுது நீ கேட்ட) இதே கேள்வி முன்பு நாரதரால் நாராயணரிடம் கேட்கப்பட்டது. யோகமார்க்கப் பிரவர்த்தகரான அந்த தேவதேவர் நாரதருக்கு என்ன கூறினரோ (அதை உனக்குக் கூறுகிறேன்).

नारायण उवाच —

मनुः स्वायम्भुवस्त्वाद्यः पद्मपुत्रः प्रतापवान्।
शतरूपापतिः श्रीमान् सर्वमन्वन्तराधिपः ॥ १. १९ ॥

स मनुः पितरं देवं प्रजापतिमकल्मषम्।
भक्त्या पर्यचरत्पूर्वं तमुवाचात्मभूः सुतम् ॥ १. २० ॥

पुत्र पुत्र त्वया कार्यं देव्याराधनमुत्तमम्।
तत्प्रसादेन ते तात प्रजासर्गः प्रसिद्ध्यति ॥ १. २१ ॥

एवमुक्तः प्रजास्रष्ट्रा मनुः स्वायम्भुवो विराट्।
जगद्योनिं तदा देवीं तपसाऽतर्पयद्विभुः ॥ १. २२ ॥

நாராயணர் கூறியது—

1.19. ஆதிமனுவும் பிரம்மபுத்திரருமாகிய ஸ்வாயம்புவர் கீர்த்தி படைத்தவர். சதரூபையின் பதியாகிய அவர் ஸ்ரீமானுகவும் எல்லாமன்வந்தரங்களுக்கும் முதல் அதிபதியாகவுமிருந்தார்.

1.20. அம்மனுவானவர் தன் தந்தையாகிய களங்கமற்ற பிரம்ம தேவரை பக்தியுடன் ஆதியில் சேவித்தார். பிரம்மா தமது குமாரராகிய அவருக்குப் பின்வருமாறு உபதேசித்தார்.

1.21. 'மகனே! மகனே! உன்னுல் செய்யப்பட வேண்டியது உத்தமமான தேவியின் ஆராதனம். குழந்தாய்! அவளுடைய அருளால் உனக்குப் பிரஜைகளின் சிருஷ்டியானது சித்திக்கும்.'

1.22. இவ்வாறு பிரஜாபதியால் கூறப் பெற்றவரும் பிரபுவும் மகாராஜருமான ஸ்வாயம்புவமனு ஜகன்மாதாவான தேவியைத் தவத்தால் திருப்தி செய்வித்தார்.

तुष्टाव देवीं देवेशीं समाहितमतिः किल।
आद्यां मायां सर्वशक्तिं सर्वकारणकारणाम् ॥ १. २३ ॥

मनुरुवाच —

नमो नमस्ते देवेशि जगत्कारणकारणे।
शंखचक्रगदाहस्ते नारायण हृदाश्रिते ॥ १. २४ ॥

सर्वमंगलमांगल्ये शिवे सर्वार्थसाधिके।
शरण्ये त्र्यम्बके गौरि नारायणि नमोऽस्तु ते ॥ १. २८ ॥

स्तोष्ये त्वां च नमस्यामि पूजयामि जपामि च।
ध्यायामि भावये वीक्षे श्रोष्ये देवि प्रसीद मे ॥ १. ३३ ॥

1.23. எல்லாக் காரணத்திற்கும் மூலகாரணமாகியவளும் எல்லாச் சக்திவடிவாகியவளும் ஆதிதேவியும் மாயையுமான தேவேச்வரியை அடங்கிய மனத்துடன் துதித்தார்.

மனு கூறியது—

1.24. தேவர்கள் நாயகியே! உலகின் தோற்றத்திற்கு காரணமாகியவளே! சங்கம், சக்ரம், கதை ஆகியவற்றைக் கைகளில் தாங்கியவளே! நாராயணனுடைய இருதயத்தில் உறைபவளே!

1.28. எல்லாமங்களங்களிலும் மங்களப் பொருளாய் விளங்குபவளே! எல்லா நன்மைகளையும் அளிப்பவளே! எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்விப்பவளே! சரணடைதற்குரியவளே! மூன்று கண்களை உடையவளே! நாராயணி தேவியே! உனக்கு நமஸ்காரம்.

1.33. தேவி! உன்னைப் போற்றுகிறேன், நமஸ்கரிக்கிறேன், பூஜிக்கிறேன், ஜபிக்கிறேன், தியானம் செய்கிறேன், பாவனை செய்கிறேன், தரிசிக்கிறேன், கேட்கிறேன். எனக்கருள் புரிவாய்.

श्रीदेव्युवाच —

वरं वरय राजेन्द्र ब्रह्मपुत्र यदिच्छसि ।
प्रसन्नाऽहं स्तवेनाऽत्र भक्त्याचाराधनेन च ॥ १. ३८ ॥

मनुरुवाच —

यदि देवि प्रसन्नासि भक्त्या कारुणिकोत्तमे ।
तदा निर्विघ्नतः सृष्टिः प्रजायाः स्यात्तवाऽऽज्ञया ॥ १. ३९ ॥

श्रीदेव्युवाच —

प्रजासर्गः प्रभवतु ममाऽनुग्रहतः किल ।
निर्विघ्नेन राजेन्द्रे वृद्धिश्चाप्युत्तरोत्तरम् ॥ १. ४० ॥

नारायण उवाच —

एवं दत्त्वा वरान् देवी मनवे ब्रह्मसूनवे ।
अन्तर्धानं गताचाऽसीत्पश्यतस्तस्य धीमतः ॥ १. ४३ ॥

ஸ்ரீதேவி கூறியது—

1.38. அரசசிரேஷ்டனே! பிரம்மபுத்திரனே! இங்கு உன்னுடைய ஸ்தோத்திரத்தாலும் பக்தியாலும் ஆராதனத்தாலும் நான் பிரசன்னமாயுள்ளேன். நீ விரும்பும் வரத்தைக் கேட்டுக் கொள்ளலாம்.

மனு கூறியது—

1.39. உத்தமமான கருணை புரியுந்தேவியே! பக்தியினால் பிரசன்னமாகிய நீ உனது கட்டளையால் பிரஜைகளின் சிருஷ்டி இடையூறில்லாமல் நிகழும்படி அருள் புரிவாயாக.

ஸ்ரீதேவி கூறியது—

1.40. அரசசிரேஷ்டனே! என்னுடைய அனுக்கிரகத்தால் பிரஜைகளின் சிருஷ்டி விக்னமில்லாமல் ஏற்பட்டு மேன்மேலும் விருத்தியடையட்டும்.

நாராயணர் கூறியது—

1.43. பிரம்மபுத்திரராகிய மனுவுக்கு தேவியானவள் இவ்வாறு வரமளித்துவிட்டு புத்திமானான அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்து விட்டாள்.

अथ लब्धवरो राजा ब्रह्मपुत्रः प्रतापवान् ।
ब्रह्माणमब्रवीत्तात स्थानं मे दीयतां रहः ॥ १. ४४ ॥

यत्राहं समधिष्ठाय प्रजाः स्रक्ष्यामि पुष्कलाः ।
यक्ष्यामि यज्ञदेवेशं तत्समादिश मा चिरम् ॥ १. ४५ ॥

इति पुत्रवचः श्रुत्वा प्रजापति पतिर्विभुः ।
चिन्तयामास सुचिरं कथं कार्यं भवेदिदम् ॥ १. ४६ ॥

एवं मीमांसतस्तस्य पद्मयोनेः परन्तप ।
मन्वादिभिर्मुनिवरै-र्मरीच्याद्यैः समन्ततः ॥ २. १ ॥

ध्यायतस्तस्य नासाग्राद्विरंचेः सहसाऽनघ ।
वाराहपोतो निरगादेकांगुलप्रमाणतः ॥ २. २ ॥

1.44. புகழ்மிக்கவரும் பிரம்மபுத்திரருமான அரசர் இங்ஙனம் வரம் பெற்று பிரம்மாவை அணுகி 'ஐயனே! எனக்கு ஒரு ரஹஸ்யமான ஸ்தானத்தை அளியும்.

1.45. அங்கு நிலைபெற்று நான் குறைவின்றி பிரஜைகளைச் சிருஷ்டிக்கிறேன். யக்ஞதேவரை யாகத்தால் பூஜிக்கிறேன். அதற்கு எனக்கு விரைவில் வழிகாட்டியருளும்.'

1.46. புத்திரனுடைய இவ்வார்த்தையைக் கேட்டு பிரபுவான பிரம்மா இந்தக் காரியம் எப்படிச் செவ்வனே முடியும் என்று நெடுநேரம் ஆலோசித்தார்

2.1–2. பகையை வெல்பவரே! பாவமற்றவரே! அப்படி ஆலோசிக்கையில், மனு முதலியவர்களுடனும் மரீசி முதலிய முனிவர்களுடனும் கூடியிருந்த அந்த பிரம்மாவின் மூக்கின் நுனியிலிருந்து திடீரென ஒரு விரற்கடைப் பிரமாணமுள்ள சிறு பன்றிக்குட்டி உருவம் வெளித்தோன்றிற்று.

तस्यैव पश्यतः स्वस्थः क्षणेन किल नारद ।
करिमात्रं प्रववृधे तदद्भुततमं ह्यभूत् ॥ २. ३ ॥

विरंचिं हर्षयामास संहतांश्च द्विजोत्तमान् ।
स्वगर्ज-शब्दमात्रेण दिक्प्रान्तमनुनादयन् ॥ २. ८ ॥

छन्दोमयैः स्तोत्रवरै-र्ऋक्सामाथर्वसंभवैः ।
वचोभिः पुरुषं त्वाद्यं द्विजेन्द्राः पर्यवाकिरन् ॥ २. १० ॥

अन्तर्जलगतां भूमिं सर्वसत्त्वाश्रयां तदा ।
भूमिं स देवेदेवेशो दंष्ट्रयोदाजहार ताम् ॥ २. १५ ॥

तं दृष्ट्वा देवदेवेशो विरंचिः समनुः स्वराट् ।
तुष्टाव वाग्भिर्देवेशं दंष्ट्रोद्धृतवसुन्धरम् ॥ २. १७ ॥

2.3. நாரதா! அமைதியாக அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு நொடியில் அது யானையளவிற்கு வளர்ந்தது. அது மிகவும் ஆச்சரியப்படும்படி இருந்தது.

2.8. தன்னுடைய கர்ஜனை ஒலியால் திசைகளை யெல்லாம் எதிரொலிக்கும்படி செய்து அது பிரம்மாவையும் அங்கு கூடியிருந்த துவிஜ சிரேஷ்டர்களையும் மகிழ்வித்தது.

2.10. (அது விஷ்ணுவின் அவதாரம் என்று கண்டு கொண்ட) துவிஜ சிரேஷ்டர்கள் ருக், ஸாம, அதர்வ வேத மயமான ஸ்தோத்திரங்களால் அவ்வாதிபுருஷனைத் துதித்தார்கள்.

2.15. பிறகு தேவதேவேசராகிய அவர் எல்லா ஜீவ ராசிகளுக்கும் இருப்பிடமாகிய பூமி ஜலத்திற்குள் மறைந்து போயிருந்ததைத் தனது கோரப்பல்லினால் மேலே தூக்கி வந்தார்.

2.17 தேவர்களின் பிரபுவான பிரம்மா உலகையாளும் ஸ்வாயம்புவமனுவுடன் பூமியைக் கோரப்பல்லில் தூக்கிக் கொண்டிருக்கும் அந்த தேவநாயகரைப் பார்த்து அவரைத் துதித்தார்.

जितं ते पुण्डरीकाक्ष भक्तानामार्तिनाशन ।
खर्वीकृतसुराधार सर्वकामफलप्रद ॥ २. १८ ॥

इयं च धरणो देव शोभते वसुधा तव ।
पद्मिनीव सुपत्राढ्या मतंगज-करोद्धृता ॥ २. १९ ॥

नमस्तुभ्यं भगवते जगदीशाय कुमहे ।
यस्यांशभागाः सर्वेहि जाता देवाः सहस्रशः ॥ २. ३३ ॥

तत्रैवाऽभ्यागतं दैत्यं हिरण्याक्षं महासुरम् ।
रुन्धान-मध्वनो भीमं गदया ताडयद्धरिः ॥ २. ३५ ॥

तद्रक्तपंकदिग्धांगो भगवानादिपूरुषः ।
उद्धृत्य धरणीं देवो दंष्ट्रया लीलयाऽप्सु ताम् ॥
निवेश्य लोकनाथेशो जगाम स्थानमात्मनः ॥ २. ३६ ॥

2.18. 'தாமரைக் கண்ணு! பக்தர்களின் துன்பத்தைப் போக்குபவரே! தாழ்மையடைந்த தேவர்களுக்கு ஆதார மானவரே! எல்லா ஆசைகளின் பயனையும் அளிப்பவரே! உமக்கு வெற்றியுண்டாகட்டும்.

2.19. 'உம்மிடத்தில் இந்த பூமியானது ஒரு யானை தன் துதிக்கையில் சிறந்த இதழ்களுடன் கூடிய தாமரையைத் தூக்கிவைத்துக் கொண்டாற் போலிருக்கிறது.

2.33. 'எவருடைய அம்சத்தின் அம்சமாய் ஆயிரக் கணக்கான தேவர்களெல்லாம் தோன்றியவர்களாவார்களோ அந்த உலக நாயகரும் பகவானுமாகிய உமக்கு நமஸ்காரம் செய்கின்றேன்.'

2.35. அங்கு வந்த பயங்கரமான மகாஅசுரனுகிய ஹிரண்யாக்ஷன் வழியை மறித்த பொழுது அவனைக் கதையால் அடித்துக் கொன்றுர்.

2.36. அவனுடைய இரத்தம் சிதறி அதனுல் பூசப் பெற்ற சரீரத்தையுடைய ஆதிபுருஷராகிய பகவான் விளையாட்டாக பூமியைக் கோரப்பல்லால் தூக்கி ஜலத்தின் மேல் இருக்கச் செய்து விட்டு தமது ஸ்தானத்திற்குச் சென்று விட்டார்.

महीं देवः प्रतिष्ठाप्य यथा स्थाने च नारद ।
वैकुण्ठलोकमगमद् ब्रह्मोवाच स्वमात्मजम् ॥ ३.१ ॥

स्वायम्भुव महाबाहो पुत्र तेजस्विनां वर ।
स्थाने महीमये तिष्ठ प्रजाः सृज यथोचितम् ॥ ३.२ ॥

प्रजाः सृजत पुत्रेति पितुराज्ञां समादधत् ।
स्वायम्भुवः प्रजासर्ग-मकरोत्पृथिवीपतिः ॥ ३.९ ॥

प्रियव्रतोत्तानपादौ मनुपुत्रौ महौजसौ ।
कन्यास्तिस्रः प्रसूताश्च तासां नामानि मे शृणु ॥ ३.१० ॥

आकूतिः प्रथमा कन्या द्वितीया देवहूतिका ।
तृतीया च प्रसूतिर्हि विख्याता लोकपावनी ॥ ३.११ ॥

3.1–2. நாரதா! ஆதிதேவர் பூமியை பிரதிஷ்டை செய்துவிட்டு தமது ஸ்தானமாகிய வைகுண்ட லோகத்திற் கேகியதும் தனது புத்திரனாகிய ஸ்வாயம்புவரிடம் பிரம்மா கூறியதாவது: 'பெருந்தோள் படைத்தவனே! புத்திரா! தேஜஸ்விகளிற் சிறந்தவனே! இந்த பூமியாகிற ஸ்தானத்திலிருந்து கொண்டு தகுதியான முறையில் பிரஜைகளைச் சிருஷ்டிப்பாயாக.'

3.9. பூபாலராகிய ஸ்வாயம்புவர் தனது தந்தை பிரஜைகளைச் சிருஷ்டிக்கும்படி இட்ட கட்டளையை ஏற்று அவ்வாறே செய்தார்.

3.10. பிரியவரதன், உத்தானபாதன் என்று மகாவீரியம் படைத்தவர்கள் இருவர் மனுவின் புத்திரர்கள்; மூன்று பெண்களும் பிறந்தனர். அவர்களுடைய பெயர்களைக் கூறுகிறேன். கேள்.

3.11. ஆகூதி முதற் பெண், தேவஹூதி இரண்டாவது, உலகைப்பாவனமாக்குபவளும் ப்ரஸூதி எனப் பெயர் பெற்றவளும் மூன்றாவது.

आकूतिं रुचये प्रादात्कर्दमाय च मध्यमाम् ।
दक्षायाऽदात्प्रसूतिं च यासां लोक इमाः प्रजाः ॥ ३. १२ ॥

रुचे प्रजज्ञे भगवान् यज्ञो नामाऽऽदिपूरुषः ।
आकूत्यां देवहूत्यां च कपिलोऽसौ च कर्दमात् ॥ ३. १३ ॥

सांख्याचार्यः सर्वलोके विख्यातः कपिलो विभुः ।
दक्षात्प्रसूत्यां कन्याश्च बहुशो जज्ञिरे प्रजाः ॥ ३. १४ ॥

यासां सन्तानसंभूता देवतिर्यङ् नरादयः ।
प्रसूता लोकविख्याताः सर्वे सर्गप्रवर्तकाः ॥ ३. १५ ॥

यज्ञश्च भगवान् स्वायंभुवमन्वन्तरे विभुः ।
मनुं ररक्ष रक्षोभ्यो यामैर्देवगणैर्वृतः ॥ ३. १६ ॥

3.12. ஆகூதியை ருசி என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்தார். நடுவலவளைக் கர்த்தமருக்குக் கொடுத்தார். ப்ரஸூதியை தக்ஷருக்குக் கொடுத்தார். இவர்களிடமிருந்தே உலகிலுள்ள இப்பிரஜைகளெல்லாம் தோன்றினர்.

3.13. ருசிக்கு ஆகூதியிடம் ஆதிபுருஷராகிய பகவான் யக்ஞர் என்ற பெயருடன் அவதரித்தார். கர்த்தமருக்கு தேவஹூதியிடம் கபிலர் அவதரித்தார்.

3.14. பிரபுவாகிய கபிலர் ஸாங்கியதர்சனத்தின் ஆசாரியராக உலகெங்கும் பிரசித்தியடைந்தார். தக்ஷருக்குப் பிரஸூதியிடம் பல பெண்கள் பிரஜைகளாகத் தோன்றினர்.

3.15. அவர்களிடம் தேவர்கள், திர்யக்ஜாதிகள், மனிதர்கள் முதலியோர் ஸந்ததிகளாய்த் தோன்றி எல்லோரும் உலகில் கீர்த்தி பெற்றவர்களாகவும் சிருஷ்டியை வளர்ப்பவர்களாகவும் விளங்கினர்.

3.16. பிரபுவாகிய பகவான் யக்ஞர் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் யாமர்கள் எனும் தேவகணங்களால் சூழப் பெற்றவராய் அரக்கர்களிடமிருந்து மனுவைக் காப்பாற்றினார்.

कपिलोऽपि महायोगी भगवान् स्वाऽऽश्रमे स्थितः ।
देवहूत्यै परं ज्ञानं सर्वाविद्यानिवर्तकम् ।। ३. १७ ।।

सविशेषं ध्यानयोग-मध्यात्मज्ञाननिश्चयम् ।
कापिलं शास्त्रमाख्यातं सर्वाज्ञानविनाशनम् ।। ३. १८ ।।

उपदिश्य महायोगी स ययौ पुलहाश्रमम् ।
अद्यापि वर्तते देवः सांख्याचार्यो महाशयः ।। ३. १९ ।।

मनोः स्वायम्भुवस्यासीज्ज्येष्ठपुत्रः प्रियव्रतः ।
पितुः सेवापरो नित्यं सत्यधर्मपरायण ।। ४. १ ।।

प्रजापतेर्दुहितरं सुरूपां विश्वकर्मणः ।
वर्हिष्मतीं चोपयेमे समानां शीलकर्मभिः ।। ४. २ ।।

3.17–19. மகாயோகியான பகவான் கபிலர் தமது ஆசிரமத்தில் இருந்து கொண்டு அக்ஞானமனைத்தையும் போக்குவதும் அவித்தையை நிவர்த்திப்பதும் விசேஷமான தியான யோகத்துடன் கூடியதும் கபில சாஸ்திரம் எனப் பிரசித்திபெற்றதும் அத்தியாத்மஞான நிச்சயமாகியதுமான உத்தம ஞானத்தை தேவஹூதிக்கு உபதேசித்துவிட்டுப் புலஹாசிரமம் சென்றார். இன்றும் புகழ்மிக்கவரும் ஸாங்கிய யோகாசாரியருமான அந்த கபில தேவர் அங்கு இருக்கிறார்.

4.1. ஸ்வாயம்புவமனுவின் ஜேஷ்டபுத்திரராயிருந்தவர் பிரியவிரதர். அவர் ஸத்ய தர்மத்தையே கடைப்பிடித்தவராயும் பித்ருசேவையில் எப்பொழுதும் ஊக்கமுள்ளவராயுமிருந்தார்.

4.2. அவர் விச்வகர்மா என்னும் பிரஜாபதியின் பெண்ணும் அழகுவாய்ந்தவளுமான பர்ஹிஷ்மதீ என்பவளை விவாஹம் செய்து கொண்டார் அவள் குணத்தாலும் நடத்தையாலும் அவருக்கு ஒத்தவளாயிருந்தாள்.

तस्यां पुत्रान् दश गुणैरन्वितान् भावितात्मनः ।
जनयामास कन्यां चोर्जस्वतीं च यवीयसीम् ॥ ४. ३ ॥

एतेषां दशपुत्राणां त्रयोऽप्यासन् विरागिणः ।
अपरस्यां च जायायां त्रयः पुत्राश्च जज्ञिरे ॥ ४. ७ ॥

उत्तमस्तामसश्चैव रैवतश्चेति विश्रुताः ।
मन्वन्तराधिपतय एते पुत्रा महौजसः ॥ ४. ८ ॥

प्रियव्रतः स राजेन्द्रो बुभुजे जगतीमिमाम् ।
प्रथमो जम्बुद्वीपाख्यो यः क्षीरोदेन वेष्टितः ।
तत्पतिं विदधे राजा पुत्रमाग्नीध्रसंज्ञकम् ॥ ४. २० ॥

प्लक्षद्वीपे द्वितीयेऽस्मिन् द्वीपेक्षुरसंप्लुते ।
जातस्तदधिपः प्रैयव्रत इध्मादिजिह्वकः ॥ ४. २१ ॥

4.3. அவளிடம் குணவான்களும் ஆத்ம நாட்டமுடையவர்களுமான பத்துப் புத்திரர்களையும் இளையவளான ஊர்ஜஸ்வதீ என்ற பெண்ணையும் பெற்றார்.

4.7–8. பத்துப் புத்திரர்களில் மூன்றுபேர் வைராக்கிய சீலர்களாயிருந்தனர். மற்றொரு மனைவியிடம் மூன்று புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் உத்தமன், தாமஸன், ரைவதன் எனப் பிரசித்தி பெற்றவர்கள். மகாதேவஸ்விகளான அப்புத்திரர்கள் மன்வந்தரங்களுக்கு அதிபர்களாயினர்.

4.20. ராஜசிரேஷ்டராகிய பிரியவிரதர் உலகம் முழுவதையும் ஆண்டனுபவித்தார். பிறகு உப்புக் கடலால் சூழப்பட்ட ஜம்பூத்வீபம் எனும் முதற்பகுதிக்குத் தமது புத்திரன் ஆக்னீத்ரன் என்பவனை அரசனாக்கினார்.

4.21. கரும்புரஸத்தால் சூழப்பெற்ற இரண்டாவது தீவாகிய ப்லக்ஷத்வீபத்தில் இத்மாதி ஜிஹ்வகன் என்ற பிரியவிரத புத்திரன் அதிபனானான்.

शाल्मलीद्वीप एतस्मिन् सुरोदधि-परिप्लुते ।
यज्ञबाहुं तदधिपं करोतिस्म प्रियव्रतः ॥ ४. २२ ॥

कुशद्वीपेऽतिरम्ये च घृतोदेनोपवेष्टिते ।
हिरण्यरेता राजाभूत्प्रियव्रततनूजनिः ॥ ४. २३ ॥

क्रौंचद्वीपे पंचमे तु क्षीरोदपरिसंप्लुते ।
प्रैयव्रतो घृतपृष्ठः पतिरासीन्महाबलः ॥ ४. २४ ॥

शाकद्वीपे चारुतरे दधिमण्डोदसंकुले ।
मेधातिथिरभूद्राजा प्रियव्रतसुतो वरः ॥ ४. २५ ॥

पुष्करद्वीपके शुद्धोदकसिन्धुसमाकुले ।
वीतिहोत्रो बभूवासौ राजा जनकसम्मतः ॥ ४. २६ ॥

4.22. மதுக் கடலால் சூழப்பெற்ற சால்மலித்விபத்தில் யக்ஞபாஹு என்பவனைப் பிரியவிரதர் அதிபனுக்கினர்.

4.23. நெய்க்கடலால் சூழப்பெற்றதும் அழகுமிக்கதுமான குசத்விபத்தில் பிரியவிரதரிடம் பிறந்த ஹிரண்யரேதஸ் என்பவன் அரசனுனன்.

4.24. பாற்கடல் சூழ்ந்த க்ரௌஞ்சத்விபம் எனும் ஐந்தாவது திவில் மகாபலசாலியும் க்ருதப்ருஷ்டன் எனப் பெயர் பெற்றவனுமான பிரியவிருத குமாரன் அதிபனுனன்.

4.25. தயிர்க்கடல் சூழ்ந்ததும் மிக அழகியதுமான சாகத்விபத்தில் பிரியவிரத புத்திரர்களிற் சிறந்த மேதாதிதி அரசனுனன்.

4.26. சுத்த நீரால் சூழப் பெற்ற புஷ்கரத்விபத்தில் தந்தைக்குப்பிரியமான வீதிஹோத்ரன் என்பவன் அரசனுனன்.

कन्यामूर्जस्वतीं नाम्नीं ददावुशनसे विभुः।
आसीत्तस्यां देवयानी कन्या काव्यस्य विश्रुता ॥ ४. २७ ॥

एवं विभज्य पुत्रेभ्यः सप्तद्वीपान् प्रियव्रतः।
विवेकवशगो भूत्वा योगमार्गाश्रितोऽभवत् ॥ ४. २८ ॥

देवर्षे शृणु विस्तारं द्वीपवर्षविभेदतः।
भूमण्डलस्य सर्वस्य यथा देवप्रकल्पितम् ॥ ५. १ ॥

जम्बुद्वीपः प्रथमतः प्रमाणे लक्षयोजनः।
नववर्षाणि यस्मिंश्च नवसाहस्रयोजनैः ॥ ५. ३ ॥

दीर्घाणि तत्र चत्वारि चतुरस्रमिलावृतम्।
इलावृतस्योत्तरतो नीलः श्वेतश्च शृंगवान् ॥ ५. ८ ॥

त्रयो वै गिरयः प्रोक्ता मर्यादावधयस्त्रिषु।
रम्यकाख्ये तथावर्षे द्वितीये च हिरण्मये ॥
कुरुवर्षे तृतीये तु मर्यादां व्यंजयन्ति ते ॥ ५. १० ॥

4.27. பிரபுவான பிரியவிரதர் ஊர்ஜஸ்வதி என்ற கன்னிகையை உசனுகவி எனப் பெயர் பெற்ற ரிஷிக்குக் கொடுத்தார். அவளுடைய புத்திரி தேவயானி என்பவள்.

4.28. இவ்வாறு புத்திரர்களுக்கு ஏழு துவீபங்களையும் பிரித்துக் கொடுத்தபின் பிரியவிரதர் விவேகத்தின் வசப் பட்டு யோகமார்க்கத்தைப் பின் பற்றியவரானுர்.

5.1. தேவரிஷியே! தெய்வத்தால் கற்பிக்கப்பட்ட பூமண்டலம் முழுவதும் எவ்வாறு துவீபங்களாகவும் வர்ஷங் களாகவும் பிரிக்கப்பட்டது என்பதை விரிவாகக் கூறுகிறேன், கேளும்.

5.3 முதலாவதாகிய ஜம்புத்வீபம் ஒருலக்ஷம் யோஜனே விஸ்தீர்ணமுள்ளது. இதில் ஒவ்வொன்றும் ஒன்பதாயிரம் யோஜனே பரப்புள்ள ஒன்பது வர்ஷங்கள் இருக்கின்றன.

5.8–10. அவற்றில் நான்கு நீளமானவை. இலா விருதம் என்பது சதுரமானது. இலாவிருதத்திற்கு வடக்கில் நீலமலே யென்றும் சுவேதமலே என்றும், சிருங்கவான் என்றும் மூன்று மலேகள் கூறப்படுகின்றன. இவை மூன்று வர்ஷங்களுக்கு எல்லேகளாயமைந்துள்ளன. அவை ரம்யகம், ஹிரண்மயம், குருவர்ஷம் எனப்படுவன.

इलावृताद्दक्षिणतो निषधो हेमकूटकः।
त्रयो हिमालयश्चेति प्राग्विस्तीर्णाः सुशोभनाः॥
हरिवर्षं किंपुरुषं भारतं च यथाततम्॥
विभागात्कथयन्त्येते मर्यादा गिरयास्त्रयः॥ ५. १४॥

इलावृतात्पश्चिमतो माल्वान्नाम पर्वतः।
पूर्वेण च ततः श्रीमान् गन्धमादन पर्वतः।
केतुमालाख्य-भद्राश्ववर्षयोः प्रथितौ च तौ॥ ५. १७॥

मन्दरश्च तथा मेरुमन्दरश्च सुपार्श्वकः।
कुमुदश्चेति विख्याता गिरयो मेरुपादकाः॥ ५. १८॥

तेषु वर्षेषु देवेशाः पूर्वोक्तैः स्तवनैः सदा।
पूजयन्ति महादेवीं जपध्यानसमाधिभिः॥ ८. १॥

5.14. இலாவிருதத்திற்குத் தென் பாகத்தில் கிழக்கு நோக்கி நீண்ட அழகிய மலைகளாகிய நிஷதம், ஹேமகூடம், ஹிமாலயம் என்பவை இருக்கின்றன. இம்மலைகள் மூன்றும் ஹரிவர்ஷம், கிம்புருஷம், பாரதம் எனும் வர்ஷங்களின் எல்லைகளைப் பிரித்துக் காட்டுபவை எனக் கூறப்படுகின்றன.

5.17. இலாவிருதத்திற்கு மேற்கில் உள்ளது மால்ய வான் எனும் மலை. கிழக்கில் உள்ளது அழகான கந்தமாதன பர்வதம். அவை கேதுமாலம், பத்ராச்வம் என்ற வர்ஷங்களின் எல்லைகளாய்க் கூறப்படுகின்றன.

5.18. மந்தரம், மேரு-மந்தரம், ஸுபார்ச்வகம், குமுதம் என்ற நான்கு மலைகளும் மேருமலையின் பாதங்கள் போலிருப்பன.

8.1. அந்த வர்ஷங்களில் தேவேசர்கள் முற்கூறிய ஸ்தோத்ரங்களால் எப்பொழுதும் ஜபம், தியானம், ஸமாதி, முதலியவற்றாலும் மகாதேவியைப் பூஜிக்கிறார்கள்.

नवस्वपि च वर्षेषु भगवानादिपूरुषः ।
नारायणाख्यो लोकानामनुग्रहरसैकदृक् ॥ ८. ७ ॥

देवीमाराधयन्नास्ते स च सर्वैश्च पूज्यते ।
आत्मव्यूहेनेज्ययाऽसौ सन्निधत्ते समाहितः ॥ ८. ८ ॥

इलावृते तु भगवान् पद्मजाक्षिसमुद्भवः ।
एक एव भवो देवो नित्यं वसति साऽङ्गनः ॥ ८. ९ ॥

तत्क्षेत्रे नाऽपरः कश्चित्प्रवेशं वितनोति च ।
भवान्याः शापतस्तत्र पुमान् स्त्रीभवति स्फुटम् ॥ ८. १० ॥

भवानीनाथकैः स्त्रीणामसंख्यैर्गणकोटिभिः ।
संरुध्यमानो देवेशो देवं संकर्षणं भजन् ॥ ८. ११ ॥

8.7–8. ஒன்பது வர்ஷங்களிலும் ஆதிபுருஷரான பகவான் நாராயணர் உலகங்களுக்கு அனுக்கிரகம் செய்யும் ஒரே நோக்கத்துடன் கூடியவராய் தேவியைப் பூஜித்துக் கொண்டிருக்கிறார். அவர் அதனால் எல்லோராலும் பூஜிக்கப் படுகிறார். அவர் (வாசுதேவன், பிரத்யும்னன், அநிருத்தன், ஸங்கர்ஷணன் என்று) வியூகங்களில் பூஜையிலும் ஸமாதியிலும் ஆழ்ந்திருக்கிறார்.

8.9. இலாவிருதத்தில் பிரம்மாவினுடைய புருவத்தில் தோன்றிய பரமசிவன் ஒருவரே பார்வதியுடன் என்றும் வசிக்கிறார்.

8.10. அந்த க்ஷேத்திரத்தில் வேறு புருஷர் பிரவேசிப்பதில்லை. பிரவேசித்தால் தேவியின் சாபத்தால் அந்தப் புருஷன் பெண்ணுருவை அடைவான்.

8.11. பவானிக்குப் பணிப் பெண்களான எண்ணிறந்த ஸ்திரீகணங்களால் சூழப்பெற்று தேவேசர் ஸங்கர்ஷணரை அங்கு பூஜித்துக் கொண்டிருக்கிறார்.

आत्मना ध्यानयोगेन सर्वभूतहितेच्छया ।
तां तामसीं तुरीयां च मूर्तिं प्रकृतिमात्मनः ॥ ८. १२ ॥

उपधावते चैकाग्रमनसा भगवानजः ।
ओं नमो भगवते महापुरुषाय सर्वगुणसंख्यानाय ।
अनन्तायाऽव्यक्ताय नम इति ॥ ८. १३ ॥

एवं स भगवान् रुद्रो देवं संकर्षणं प्रभुम् ।
इलावृतमुपासीत देवीगणसमाहितः ॥ ८. २० ॥

तथैव धर्मपुत्रोऽसौ नाम्ना भद्रश्रवा इति ।
तत्कुलस्याऽपि पतयः पुरुषा भद्रसेवकाः ॥ ८. २१ ॥

भद्राश्ववर्षे तां मूर्तिं वासुदेवस्य विश्रुताम् ।
हयमूर्तिभिदा तां तु हयग्रीवपदांकिताम् ॥ ८. २२ ॥

परमेण समाध्यन्यवारकेण नियन्त्रिताम् ।
एवमेव च तां मूर्तिं गृणन्त उपयान्ति च ॥ ८. २३ ॥

8.12–13. தமது தியானயோகத்தால் எல்லா உயிர்களுக்கும் நன்மையை நாடுபவராய்த் தமது இயல்பாகியதும் (வியூஹத்தில்) நான்காவதாய் விளங்குவதுமான அந்தத் தாமஸ மூர்த்தியைப் பிறப்பற்ற பகவான் ஒன்றுபட்ட மனத்துடன் உபாசிக்கிறார்: 'ஓம் நமோ பகவதே மஹாபுருஷாய ஸர்வகுணஸங்க்யானாய அனந்தாய அவ்யக்தாய நம:' என்று.

8.20. இவ்வாறு அந்த பகவான் ருத்ரர் பிரபுவாகிய ஸங்கர்ஷண தேவரை இலாவிருதத்தில் தேவீகணங்களுடன் கூடி உபாசிக்கிறார்.

8.21–23. அவ்வாறே தர்மப் பிரஜாபதியின் புத்திரரான பத்ரசிரவஸ் என்பவரும் பத்ரசிரவஸுக்குச் சேவை செய்பவர்களான அந்தக் குலத்தின் முக்கிய புருஷர்களும் பத்ராச்வ வர்ஷத்தில் ஹயக்ரீவர் என்று பிரசித்தமான வாஸுதேவரின் மூர்த்தியை ஸமாதியில் நின்று வேறு சிந்தனையின்றித் துதித்து வழிபடுகின்றனர்:

ओं नमो भगवते धर्मायाऽऽत्मविशोधनाय नम इति ॥ ८. २४ ॥

वेदान् युगान्ते तमसा तिरस्कृतान् रसातलाद्यो
नृतुरंगविग्रहः।
प्रत्याददे वै कवयेऽभियाचते तस्मै नमस्तेऽवितथेहिताय ते
॥ ८. २७ ॥

हरिवर्षे च भगवान् नृहरिः पापनाशनः।
वर्तते योगयुक्तात्मा भक्तानुग्रहकारकः ॥ ९. १ ॥

तस्य तद्दयितं रूपं महाभागवतोऽसुरः।
पश्यन् भक्तिसमायुक्तः स्तौति तद्गुणतत्त्ववित् ॥ ९. २ ॥

8.24–27. 'ஓம் நமோ பகவதே தர்மாய ஆத்ம விசோதனாய நம:' என்றும் 'யுகத்தின் முடிவில் தமோ குணத்தால் மறைந்து போன வேதங்களை ரஸாதலத்திலிருந்து மனிதக் குதிரை வடிவில் மீட்டவரும் தம்மை வேண்டிக் கொண்ட பிரம்மாவுக்கு அதை அளித்தவரும், வீண்போகாத ஸங்கல்பமுடையவருமான உமக்கு நமஸ்காரம்' என்றும்.

9.1. ஹரிவர்ஷத்தில் பக்தர்களுக்கு அனுக்ரகம் புரிப வரும் பாவத்தை நாசம் செய்பவருமான நரசிம்மமூர்த்தி யோக நிஷ்டையில் இருக்கிறார்.

9.2. மஹா பாகவதனாகிய அசுரன் (பிரஹ்லாதன்) அந்த பகவானுடைய குணத்தையும் தத்துவத்தையும் அறிந்தவனாய் பக்தியுடன் அவருடைய பிரியமான ரூபத்தைப் பார்த்துக் கொண்டு துதித்துக் கொண்டிருக்கிறான்.

ओं नमो भगवते नरसिंहाय नमस्तेजस्तेजसे आवीराविर्भव वज्रदंष्ट्र कर्माशयान् रन्धय रन्धय तमो ग्रस ग्रस ओं स्वाहा। अभयं ममाऽऽत्मनि भूयिष्ठाः ओं क्षौं ॥ ९. ३ ॥

स्वस्त्यस्तु विश्वस्य खलः प्रसीदतां
ध्यायन्तु भूतानि शिवं मिथो धिया।
मनश्च भद्रं भजतादधोक्षजे
आवेश्यतां नो मतिरप्यहैतुकी ॥ ९. ४ ॥

केतुमाले च वर्षे हि भगवान् स्मररूपधृक्।
आस्ते तद्वर्षनाथानां पूजनीयश्च सर्वदा ॥ ९. १० ॥

9.3. ('ஓம் நமோ பகவதே நரஸிம்ஹாய நமஸ்தேஜஸ் தேஜஸே ஆவிராவிர்ப்பவ வஜ்ரதம்ஷ்ட்ர கர்மாசயான் ரந்தய ரந்தய தமோக்ரஸ க்ரஸ ஓம் ஸ்வாஹா | அபயம் மமாத்மனி பூயிஷ்ட்டா: ஓம் க்ஷௌம் ||) பிரணவப் பொருளே! ஒளிக்கும் ஒளியே! நரசிம்மபகவானே! உமக்கு நமஸ்காரம். வயிரநகங்களும் வயிரம் பாய்ந்த கோரப் பற்களும் உடையவரே! எங்கள் கண்முன் காட்சியளிக்க வேண்டும். கர்ம வாஸனைகளைப் போக்கியருள்வீர். அஞ்ஞான இருளை விழுங்கியருள்வீர். விழுங்கியருள்வீர். ஓம் ஸ்வாஹா. எங்களுக்கு அபயமளித்து உள்ளத்தில் இடையறாது விளங்கிக் கொண்டிருக்க வேண்டும். ஓம் க்ஷௌம்.

9.4. 'உலகிற்கு நன்மை உண்டாகுக. துஷ்டன் மனது தெளிவடையட்டும். எல்லாப் பிராணிகளும் ஒருவர்க் கொருவர் நன்மையையே உள்ளூர விரும்பட்டும். மனது மங்களத்திலேயே நாட்டமுடையதாயிருக்கட்டும். நம்மெல் லோருடைய மதியும் வேறு ஆசையின் நிமித்தமில்லாமலேயே அதோக்ஷஜரிடம் புகலடையட்டும்.'

9.10. கேதுமால வர்ஷத்தில் பகவான் காமரூபத்தை தரித்தவராயிருக்கிறார். அந்த வர்ஷநாதர்களால் எப்பொழு தும் பூஜிக்கப்படுகிறார்.

एतेनोपासते स्तोत्रजालेन च रमाऽब्धिजा।
तद्वर्षनाथा सततं महतां मानदायिका॥
ओं ह्रां ह्रीं ह्रूं ओं नमो भगवते हृषीकेशाय
सर्वगुणविशेषै-र्विलक्षितात्मने आकूतीनां चित्तीनां चेतसां
विशेषाणां चाऽधिपतये षोडशकलाय च्छन्दोमयायाऽन्नमयाया-
ऽमृतमयाय सर्वमयाय सहसे ओजसे बलाय कान्ताय कामाय
नमस्ते उभयत्र भूयात्॥ ६. ११॥

9.11. பாற்கடலில் தோன்றியவளும் மகான்களால் போற்றப்பட்டவளும் அந்த வர்ஷத்தை ஆள்பவளுமான ரமாதேவி பின்வரும் ஸ்தோத்திரத்தால் துதிக்கிருள். ('ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் ஓம் நமோ பகவதே ஹ்ருஷீகேசாய, ஸர்வ குணவிசேஷைர் விலக்ஷிதாத்மனே ஆகூதீனும் சித்தீனும் சேதஸாம் விசேஷாணுஞ்சாதிபதயே ஷோடச கலாய,ச்சந்தோமயாய, அன்னமயாய, அம்ருதமயாய ஸர்வமயாய ஸஹஸே ஓஜஸே பலாய காந்தாய காமாய நமஸ்தேஉபயத்ரபூயாத் ||) ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரூம் ஓம் என்ற பீஜாக்ஷரங்களின் பொருளாகிய பகவான்ஹ்ருஷீகேச ருக்கு நமஸ்காரம். சிறந்த குணங்களுக்கிருப்பிடமான பொருள் களனைத்திற்கும் மூலஸ்தானமாகியவரும், க்ரியாசக்தி, ஞான சக்தி, ஸங்கல்பம், நிச்சயம் முதலிய மனோவியாபாரங்களின் நியந்தாவும், பதினாறு கலை வடிவானவரும், வேதமயமான வரும், அமிருதமயமானவரும், ஸர்வமயமானவரும், இந்திரிய வன்மை, மனோவன்மை, உடல் வன்மை வடிவினரும், உள்ளத் தைக்கவரும் காமவடிவினரும் ஆகிய உமக்கு உள் வெளியாகிய இரு புறத்தும் நமஸ்காரம் நிகழ்ந்து கொண்டே இருக்கட்டும்.

स्त्रियो व्रतैस्त्वां हृषिकेश्वरं स्वतो
  ह्याराध्य लोके पतिमाशासतेऽन्यम् ।
तासां न ते वै परिपान्त्यपत्यं
  प्रियं धनायूंषि यतोऽस्वतन्त्राः ॥ ९. १२ ॥

स वै पतिः स्यादकुतो भयः स्वतः
  समन्ततः पाति भयाऽऽतुरं जनम् ।
स एक एवेतरथा मिथो भयं
  नैवात्मलाभादधिमन्यते परम् ॥ ९. १३ ॥

रम्यके नाम वर्षे च मूर्तिं भगवतः पराम् ।
मात्स्यं देवासुरै-र्वन्द्यां मनुः स्तौति निरन्तरम् ॥ ९. १८ ॥

9.12. உலகில் பெண்கள் இயற்கையாகவே இந்திரியங்களின் பதியாகிய உம்மை விரதங்களால் ஆராதித்து வேறு பதியை வேண்டுகின்றனர். அங்ஙனமடைந்த பதிகள் சுதந்திர மற்றவர்களாதலின் அவர்களுடைய பிரியத்துக்கிடமான மக்கள், பொருள், ஆயுள் இவற்றை இரக்ஷிக்கத் திறமையற்றவர்களாயிருக்கின்றனர்.

9.13. இயற்கையாகவே எவர் எத்திக்கினின்றும் பயமற்றவராய் இருந்துகொண்டு எங்கும் சூழ்ந்த பயத்தினுல் பீடிக்கப்பட்ட ஜனங்களை இரக்ஷிக்கிருரோ அவரே பதியாவார். அப்படிப்பட்ட பதி நீர் ஒருவரே. ஆத்மலாபத்தைக் காட்டிலும் பிரிதொன்றை மேலாகக் கருதாதவர்க்கே பயமில்லை. ஏனையோர்க்குப் பிறரிடமிருந்து ஒருவருக்கொருவர் பயம் இருக்கவே இருக்கும்.

9.18. ரம்யகம் என்ற வர்ஷத்தில் தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப் பெற்ற பகவானுடைய சிறந்த மத்ஸ்ய மூர்த்தியை (வைவஸ்வத) மனுவானவர் எப்பொழுதும் துதித்துக் கொண்டிருக்கிருர்.

ओं नमो भगवते मुख्यातमाय नमः सत्त्वाय प्राणायौजसे
बलाय महामत्स्याय नमः ।।

भवान् युगान्तार्णव ऊर्मिमालिनि
क्षोणीमिमा-मोषधि-वीरुधां निधिम् ।
मया सहोरुक्रमतेऽज ओजसा
तस्मै जगत्प्राणगणात्मने नमः ।। ९. २१ ।।

हिरण्मये नाम वर्षे भगवान् कूर्मरूपधृक् ।
आस्ते योगपतिः सोऽयमर्यम्णा पूज्य ईडचते ।। १०. १ ।।

ओ नमो भगवते अकूपराय सर्वसत्त्वगुणविशेषणाय
नोपलक्षितस्थानाय नमो वर्ष्मणे नमो भूम्ने
नमोऽवस्थानाय नमस्ते ।। १०. २ ।।

9.21. ('ஓம் நமோ பகவதே முக்யதமாய நம: ஸத்வாய ப்ராணாய ஓஜஸே ஸஹஸே பலாய மஹாமத்ஸ்யாய நம:') பிரணவப் பொருளும், முதன்மைக்கும் முதலாகியவரும், ஸத்வ மூர்த்தியும், முக்கியப் பிராண வடிவினரும், இந்திரிய வன்மை, மனோவன்மை, உடல் வன்மை வடிவினரும் ஆகிய பகவான் மஹாமத்ஸ்யருக்கு நமஸ்காரம்.

10.1. ஹிரண்மயம் என்ற வர்ஷத்தில் யோகேசுவரரான பகவான் கூர்மரூபம் எடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் பிதிருகணங்களின் பதியான அர்யமாவால் பூஜிக்கப்படுகிறார்.

10.2. ('ஓம் நமோ பகவதே அகூபராய ஸர்வஸத்வ குணவிசேஷணாய நோபலக்ஷிதஸ்தானாய நமோ வர்ஷ்மணே நமோ பூம்னே நமோSவஸ்தானாய நமஸ்தே ॥') பிரணவப் பொருளும் ஸத்துவகுண பரிபூர்ணராய்க் காணமுடியாத நிலையுள்ளவரும் ஆகிய பகவானுக்கு நமஸ்காரம். காலத்தை கடந்தவர்க்கு நமஸ்காரம். எங்கும் நிறைந்து எல்லையற்றவர்க்கு நமஸ்காரம். அனைத்திற்கும் உறைவிடமாகிய உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

तथोत्तरेषु कुरुषु भगवान् यज्ञपूरुषः ।
आदिवाराहरूपोऽसौ धरण्या पूज्यते सदा ॥ १०. ६ ॥

ओं नमो भगवते मन्त्रतत्त्वलिंगाय यज्ञक्रतवे
महाऽध्वरावयवाय महावराहाय नमः कर्मशुक्लाय
त्रियुगाय नमस्ते ॥ १०. ८ ॥

किंपुरुषे वर्षेऽस्मिन् भगवन्तं दाशरथिं च सर्वेशम् ।
सीतारामं देवं श्रीहनुमानादिपूरुषं स्तौति ॥ १०. १३ ॥

10.6. உத்தரகுருவர்ஷத்தில் பகவான் யக்ஞபுருஷர் ஆதிவராஹ ரூபத்தில் பூமிதேவியால் பூஜிக்கப்படுகிறார்.

10.8. (ஓம் நமோ பகவதே மந்த்ரதத்வலிங்காய யக்ஞக்ரதவே மஹா Sத்வராவயவாய மஹாவராஹாய நம: கர்மசுக்லாய த்ரியுகா நமஸ்தே ||) பிரணவப் பொருளும், வேதமந்திரங்களின் குறிப்பால் அறியப்படுபவரும் யக்ஞமும் கிரதுவுமே வடிவெடுத்தவரும், மகத்தான யாகங்களை அவயவங்களாய்க் கொண்டவரும் ஆகிய புருஷோத்தமருக்கு நமஸ்காரம். பரிசுத்தமான கர்மஸ்வரூபியும் மூன்று யுகஸ்வரூபியுமாகிய உமக்கு நமஸ்காரம்.

10.13. கிம்புருஷ வர்ஷத்தில் ஆதிபுருஷரும் ஸர்வேசுவரரும் தசரதபுத்திரருமான பகவான் ஸீதாராமரை ஸ்ரீஹனுமார் துதிக்கிறார்.

ओं नमो भगवते उत्तमश्लोकाय नम इति ।
आर्यलक्षणशीलव्रताय नमः ।
उपशिक्षितात्मने उपासितलोकाय नमः ।
साधुवादनिकषणाय नमो ब्रह्मण्यदेवाय महापुरुषाय
महाभागाय नम इति ॥ १०. १४ ॥

मर्त्यावतारस्त्विह मर्त्यशिक्षणं
रक्षोवधायैव न केवलं विभोः ।
कुतोऽन्यथा स्याद्रमतः स्व आत्मनः
सीताकृतानि व्यसनानीश्वरस्य ॥ १०. १५ ॥

भारताख्ये च वर्षेऽस्मिनहमादिजपूरुषः ।
तिष्ठामि भवता चैव स्तवनं क्रियतेऽनिशम् ॥ ११. १ ॥

10.14. (ஓம் நமோ பகவதே உத்தம ச்லோகாய நம இதி। ஆர்யலக்ஷணசீலவ்ரதாய நம:। உபசிக்ஷிதாத்மனே உபாஸித லோகாய நம:। ஸாதுவாதநிகஷணாய நமோ ப்ரஹ்மண்ய தேவாய மஹாபுருஷாய மஹாபாகாய நம இதி ॥) பிரணவப் பொருளும் உத்தம சுலோகருமான பகவானுக்கு நமஸ்காரம். ஸத்புருஷர்களின்லக்ஷணம், சீலம், விரதம் இவற்றின் உறைவிடமாகியவர்க்கு நமஸ்காரம். உள்ளத்தையடக்கி உலகின் நன்மையைப் போற்றியவர்க்கு நமஸ்காரம். ஸாதுக்களின் தன்மைக்கு உரைகல் போன்றவர்க்கு நமஸ்காரம். பிராம்மணர்களை தெய்வமாய்க் கொண்டவர்க்கு நமஸ்காரம். மகாபுருஷரும் மகாபாக்கியவானுமாகியவர்க்கு நமஸ்காரம்.

10.15. பிரபுவின் மனுஷ்யாவதாரம் இங்கு மனிதர்களுக்கு நல்வழி காட்டுவதற்காகவேயன்றி ராக்ஷஸவதம் ஒன்றிற்காக மட்டுமன்று; அப்படியில்லா விட்டால் தனது ஸ்வரூபத்தில் ரமிக்கின்ற ஜகதீசுவரனுக்கு ஸீதையின் விசனத் தொடர்பு எங்ஙனம் கூடும்?

11.1. பாரதம் எனும் இந்த வர்ஷத்தில் (நாராயணன் எனும்) ஆதிபுருஷனாக நான் நிலை பெற்றிருக்கிறேன். (நாரதராகிய) உம்மால் எப்பொழுதும் அவ்வடிவம் துதிக்கப் படுகிறது.

ओं नमो भगवते उपशमशीलाय उपरतानात्म्याय
नमोऽकिंचनवित्ताय ऋषिऋषभाय नरनारायणाय
परमहंसपरमगुरवे आत्मारामाधिपतये नमोनम इति
॥ ११. २ ॥

एतदेव च वर्षस्य प्राधान्यं कार्यसिद्धितः ।
वदन्ति मुनयो वेदवादिनः स्वर्गवासिनः ॥ ११. २१ ॥

अहो अमीषां किमकारि शोभनं
प्रसन्न एषां स्विदुत स्वयं हरिः ।
यैर्जन्म लब्धं नृषु भारताजिरे
मुकुन्द-सेवौपयिकं स्पृहा हि नः ॥ ११. २२ ॥

11.2. ('ஓம் நமோ பகவதே உபசம சிலாய உபரதானாத்ம்யாய நமோ Sகிஞ்சனவித்தாய ருஷிருஷபாய நரநாராயணாய பரமஹம்ஸ பரமகுரவே ஆத்மாராமாதிபதயே நமோ நம இதி ॥'). பிரணவப் பொருளாகியவரும் வைராக்கிய சீலரும், தேகாத்ம எண்ணமில்லாதவரும், ஏதுமில்லாதார்க்கு எல்லாமாகிய செல்வமும், ரிஷி சிரேஷ்டரும், பரமஹம்ஸர்களின் பரமகுருவும், ஆத்மா ராமர்களின் அதிபதியும் ஆன பகவான் நரநாராயணருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

11.21. இந்த வர்ஷத்தின் முக்கியத்துவத்தையும் காரியசித்தியளிக்கும் பெருமையையும் வேதவாதிகளான முனிவர்களும் ஸ்வர்க்கவாசிகளான தேவர்களும் போற்றுகிறார்கள்.

11.22. எவர்களிடையே பகவான் ஹரியே அவதரித்தாரோ அவர்களால் எவ்வளவு புண்ணியம் செய்யப்பட்டிருக்க வேண்டும்? பாரதத்தில் மனிதப் பிறப்பையடைந்து முகுந்த சேவைக்கு அது பயன்படவேண்டுமென்பது எங்கள் ஆசை.

जम्बूद्वीपस्य चाऽष्टौ हि उपद्वीपाः स्मृताः परे ।
हयमार्गान्विशोधद्भिः सागरैः परिकल्पिताः ।। ११. ३० ।।

स्वर्णप्रस्थश्चन्द्रशुक्र आवर्तनरमाणकौ ।
मन्दरोपाख्य हरिणः पांचजन्यस्तथैव च ।। ११. ३१ ।।

सिंहलश्च लंकेति उपद्वीपाष्टकं स्मृतम् ।
जम्बुद्वीपस्य मानं हि कीर्तितं विस्तेरण च ।।
अतः परं प्रवक्ष्यामि प्लक्षादि द्वीपषट्ककम् ।। ११. ३२ ।।

प्लक्षाख्यश्च स्वयं जंबुप्रमाणो द्वीपरूपधृक् ।
प्रियव्रजात्मजस्तत्र सप्तजिह्व इति स्मृतः ।। १२. ४ ।।

विभज्य सप्तवर्षाणि स्वपुत्रेभ्यो ददौ विभुः ।
सहस्रायुः प्रमाणाश्च विविधोपमदर्शनाः ।।
स्वर्गद्वारं त्रयीविद्या विधिनाऽर्कं यजन्ति ते ।। १२. १३ ।।

11.30. ஜம்பூத்துவிபத்திற்கருகில் எட்டு உபத்துவீபங்கள் கூறப்படுகின்றன. இவை ஸகரபுத்திரர்கள் அசுவமேதக் குதிரையைத் தேடிப் பாதாளத்திற்குச் சென்றபொழுது உண்டானவை.

11.31—32. ஸ்வர்ணப்ரஸ்தம், சந்த்ரசுக்ரம், ஆவர்த்தனம், ரமாணகம், மந்தரம் எனும் ஹரிணம், பாஞ்சஜன்யம், சிம்மளம், லங்கை என்பவை அவ்வெட்டு உபத்துவீபங்களின் பெயர். ஜம்புத்துவீபத்தின் அளவு ஏற்கெனவே கூறப்பட்டது. இனி ப்லக்ஷம் முதலிய ஆறு துவீபங்களைப் பற்றிக் கூறுகிறேன்.

12.4. ப்லக்ஷம் எனும் துவீபமும் ஜம்பூத்துவிபத்தின் அளவேயாகும். அதற்குரிய பிரியவிரத புத்திரன் ஸப்தஜிஹ்வன் என்பவர்.

12.13. அந்தப்பிரபு அந்த துவீபத்தை ஏழு வர்ஷமாக பிரித்துத் தமது புத்திரர்களுக்களித்தார். அவர்கள் ஆயிரம் ஆண்டு வாழ்பவர்கள்! அநேக உலக நீதிகளை அறிந்தவர்கள்; சுவர்க்கத்துவாரமான சூரியனை வேத விதிப்படி உபாசிப்பவர்கள்.

प्रत्नस्य विष्णो रूपं च सत्यर्तस्य च ब्रह्मणः ।
अमृतस्य च मृत्योश्च सूर्यमात्मानमीमहि ॥ १२. १४ ॥

शाल्मलाख्यस्ततो द्वीपश्चास्माद् द्विगुणविस्तरः ।
तस्य द्वीपस्य नाथो हि यज्ञबाहुः प्रियव्रतात् ॥ १२. १९ ॥

जातः स एव सप्तभ्यः स्वपुत्रेभ्यो ददौ धराम् ।
तद्वर्षपुरुषाः सर्वे चातुर्वर्ण्य-समाह्वयाः ॥ १२. २५ ॥

भगवन्तं वेदमयं यजन्ते सोममीश्वरम् ।
स्वगोभिः पितृदेवेभ्यो विभजन् कृष्णशुक्लयोः ॥ १२. २७ ॥

एवं सुरोदाद् द्विगुणः स्वमानेन प्रकीर्तितः ।
घृतोदेनावृतः सोऽयं कुशद्वीपः प्रकाशते ॥ १२. २८ ॥

12.14. பழைமையானவரும் விஷ்ணுஸ்வரூபியும் (பரமார்த்த) ஸத்தியத்திற்கும் ருதத்திற்கும் (வியவகார ஸத்தியத்திற்கும்) பிரம்மத்திற்கும் அமிருதத்திற்கும் மிருத்யுவுக்கும் ஆத்மாவாகிய ஸூரியனை வழிபடுகிறோம்.

12. 19. சால்மலம் எனும் துவீபம் அதினும் இரண்டு மடங்கு விஸ்தாரமானது. பிரியவிரத புத்திரரான யக்ஞபாகு அதற்கு அதிபர்.

12.25. தானே ஏழுபுத்திரர்கள் வடிவில் தோன்றினார். அப்புத்திரர்களுக்கு பூமியை அளித்தார். அந்த வர்ஷத்தின் புருஷர்களெல்லாம் நான்கு வர்ணங்களைச் சேர்ந்தவர்கள்.

12.27. வேதஸ்வரூபியும் ஈசுவரனுமான ஸோம பகவானைப் பூஜிக்கிறார்கள். அவர் தமது கிரணங்களால் கிருஷ்ணபக்ஷத்திலும் சுக்லபக்ஷத்திலும் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் பாகமளிப்பவர்.

12.28. மது ஸமுத்திரத்திற்கப்பால் நெய்க்கடலால் சூழப்பட்ட குசத்துவீபம் உளது. அது சால்மலத் துவீபத்தைப் போல் இருமடங்கு.

यस्मिन्नास्ते कुशस्तम्बो द्वीपाख्या कारणो ज्वलन् ।
हिरण्यरेतास्तद् द्वीपपतिः प्रैयव्रतः स्वराट् ।। १२. २९ ।।

स्वपुत्रेभ्यश्च सप्तभ्यस्तद् द्वीपं समधाभजत् ।
जातवेदसरूपं तं देवं कर्मजकौशलैः ।। १२. ३६ ।।

यजन्ते देववर्याभाः सर्वे सर्वविदो जनाः ।
परस्य ब्रह्मणो साक्षाज्जातवेदोऽसि हव्यवाट् ।।
एवं यजन्ते ज्वलनं सर्वे द्वीपाधिवासिनः ।। १२. ३७ ।।

ततो बहिः क्रौंचद्वीपो द्विगुणः स्यात्स्वमानतः ।
क्षीरोदेनावृतो भाति यस्मिन् क्रौंचाद्रिरस्ति च ।।
योऽसौ गुहस्य शक्त्या च भिन्नकुक्षिः पुराभवत् ।। १३. ३ ।।

12.29. அதற்குக் காரணப் பெயரையளிக்கும் பிரகாசமான குசஸ்தம்பம் அங்குளது. பிரியவிரத புத்திரனை ஹிரண்யரேதஸ் அந்த துவீபத்திற்கு அரசன்.

12.36. தனது ஏழு புத்திரர்களுக்கும் அந்த துவீபத்தைச் சமமாகப் பிரித்துக் கொடுத்தார். தேவசிரேஷ்டர்களைப்போல் பிரகாசிப்பவர்களும், எல்லாமறிந்தவர்களுமான அவர்களனைவரும் அக்னிதேவனைச் சிறப்பான கருமங்களால் ஆராதிப்பவர்களாயிருந்தார்கள்.

12.37. 'ஹவ்யத்தை தேவர்களுக்குச் சேர்க்கும் நீர் பரப்பிரம்மத்தை அறிந்தவர்' என்று போற்றி அந்த துவீபத்தில் வசித்தவர்கள் எல்லோருமே அக்னியைப் பூஜித்தார்கள்.

13.3. அதற்கு வெளியே அதினும் இரண்டு மடங்கு பெரிதாக உளது க்ரௌஞ்சத்துவீபம். அது பாற்கடலால் சூழப்பட்டுப் பிரகாசிக்கிறது. அதில் க்ரௌஞ்சம் எனும் மலை உளது. இம்மலைதான் முன்பு குகப் பெருமானால் சக்தியாயுதத்தால் பிளக்கப்பட்டது.

घृतपृष्ठो नाम यस्य विभाति किल नायकः ।
प्रियव्रतात्मजः श्रीमान् सर्वलोकनमस्कृतः ॥ १३. ५ ॥

स्वद्वीपं तु विभज्यैव सप्तधा स्वात्मजान् ददौ ।
तत्रत्याः पुरुषा आपोमयं देवमपांपतिम् ॥
पूर्णेनांजलिना भक्त्या यजन्ते विविधक्रियाः ॥ १३. १३ ॥

आपः पुरुषवीर्याः स्थ पुनन्तीर्भूर्भुवः स्वरः ।
ता नः पुनीताऽमीवघ्नीः स्पृशतामात्मना भुवः ।
इति मन्त्रजपान्ते च स्तुवन्ति विविधैः स्तवैः ॥ १३. १४ ॥

शाकद्वीपो विशिष्टोऽयं यस्मिन् शाको महीरुहः ।
प्रैयव्रतोऽधिपस्तस्य मेधाथितिरिति स्मृतः ॥ १३. १७ ॥

13.5. பிரியவிரதபுத்திரரும் எல்லாவுலகத்தாலும் வணங்கப் பெற்ற ஸ்ரீமானுமான க்ருதபிருஷ்டர் என்பவர் இதற்கு நாயகராய் விளங்கியவர்.

13.13. அவர் அந்த துவிபத்தை ஏழாகப் பிரித்துத் தமது புத்திரர்களுக்குக் கொடுத்தார். அங்குள்ள புருஷர்கள் ஜலமயமான வருணபகவானைப் பலகிரியைகளாலும் பக்தியுடன் கூடிய பூர்ணாஞ்ஜலியாலும் பூஜிக்கிறார்கள்.

13.14. 'ஜலங்களே! நீங்கள் ஈசுவரனிடம் வீரியத்தை பெற்றவர்களாய் பூமி அந்தரிக்ஷம், ஸ்வர்கம் ஆகிய மூவுலகையும் பாவனமாக்குகிறீர்கள். ஸ்நானம் செய்பவர்களின் பாவங்களைப் போக்கும் நீங்கள் எங்களைப் பாவனமாக்குங்கள்.'

13.17. இப்படி மந்திரஜபத்தின் முடிவில் பல துதிகளால் போற்றுகிறார்கள். அடுத்தது சாகத்துவிபம். சாகம் எனும் விருக்ஷத்தால் அது விசேஷத்தையடைந்தது. பிரியவிருத புத்திரரான மேதாதிதி அதற்கு அதிபர்.

विभज्य सप्तवर्षाणि पुत्रनामानि तेषु च ।
सप्तपुत्रान् निजान् स्थाप्य स्वयं योगगतिं गतः ॥ १३. १८ ॥
तद्वर्षपुरुषाः सर्वे सत्यव्रत-ऋतुव्रतौ ।
भगवन्तं प्राणवायुं प्राणायामेन संयुताः ॥ १३. २४ ॥
यजन्ति निर्धूतरजस्तमसः परमं हरिम् ।
अन्तः प्रविश्य भूतानि यो बिभर्त्यात्मकेतुभिः ॥ १३. २५ ॥
पुष्करद्वीपनामाऽयं शाकद्वीपद्विसंगुणः ।
यत्रास्ते पुष्करभ्राजदग्निचूडानिभानि च ।
पत्राणि विशदानीह स्वर्णपत्रायुतायुतम् ॥ १३. २८ ॥
श्रीमद्भगवतश्चेदमासनं परमेष्ठिनः ।
कल्पितं लोकगुरुणा सर्वलोकसिसृक्षया ॥ १३. २९ ॥

13.18. தன்னுடைய ஏழு புத்திரர்களின் பேரால் அதை ஏழு வர்ஷங்களாக அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்களை ஸ்தாபித்துவிட்டு அவர் யோகமார்க்கத்தைக் கைக் கொண்டார்.

13.24–25. அந்த வர்ஷங்களில் உள்ள புருஷர்கள் எல்லோரும் ஸத்திய விரதர்களாகவும் கிரியா விரதர்களாகவும் இருந்துகொண்டு பிராணயாமத்துடன் கூடியவர்களாய் ரஜோகுணமும் தமோகுணமும் நீங்கியவர்களாய் பரமபுருஷராகிய ஹரியை அவர் எந்த வடிவில் எல்லா பிராணிகளிடமும் உட்புகுந்து தாங்குகிறுரோ அந்தப் பிராணவாயு வடிவினராகப் பூஜிக்கின்றனர்.

13.28. புஷ்கரத்துவிபம் என்பது சாகத்துவிபத்தைப் போல் இருமடங்கு. அங்கே பிரகாசமான ஒரு தாமரை உளது. அது அக்னிஜ்வாலைகளைப் போன்றதும் பொன் போன்று ஒளிர்வதுமான பல்லாயிரம் இதழ்களை உடையது.

13.29. இது பகவான் பிரம்மாவிற்கு ஆஸனமாக உலகை உற்பத்தி செய்ய விரும்பிய லோக குருவால் கற்பிக்கப்பட்டது.

तद्द्वीप एक एवाऽयं मानसोत्तरनामकः।
अर्वाचीन-पराचीन-वर्षयोरवधिर्गिरिः॥ १३. ३० ॥

मेरुः प्रदक्षिणीकुर्वन् भानुः पर्येति यत्र हि।
संवत्सरात्मकं चक्रं देवा अहोरात्रतो भ्रमन्॥ १३. ३३ ॥

प्रैयव्रतोऽधिपो वीतिहोत्रः स्वात्मजकद्वयम्।
वर्षद्वये परिस्थाप्य वर्षनामधरं क्रमात्॥ १३. ३४ ॥

रमणो धातकिश्चैव तत्तद्वर्षपती उभौ॥
कृताः स्वयं पूर्वजवद्भगवद् भक्तितत्पराः॥ १३. ३५ ॥

तद्वर्षपुरुषा ब्रह्मरूपिणं परमेश्वरम्।
सकर्मकेन योगेन यजन्ति परिशीलिताः॥ १३. ३६ ॥

13.30. அந்த துவீபத்தில் மானஸோத்திரம் என்ற ஒரு மலை இருக்கிறது. அது இருபக்கங்களிலுமுள்ள வர்ஷங்களுக்கு எல்லையாகும்.

13.33. தேவர்களுக்கு இரவுபகல்களை உண்டாக்கும் ஸம்வத்ஸர ரூபியான சூரியன் மேருவைப் பிரதக்ஷணம் செய்கையில் இம்மலையைச் சுற்றுகிறான்.

13.34–35. பிரியவிரத புத்திரனான வீதிஹோத்ரன் என்பவன் இதற்கு அதிபதி. அவன் ரமணன், தாதகி என்ற தன் குமாரர்கள் இருவரையும் அவர்கள் பெயர்களைக் கொண்ட இரண்டு வர்ஷங்களுக்கும் அதிபர்களாக்கினார். அவர்கள் முன்னோர்களைப் போல் பகவத்பக்தியில் ஆழ்ந்தவர்களாயிருந்தனர்.

13.36. அந்த வர்ஷத்திலுள்ள புருஷர்கள் பிரம்ம ரூபியான பரமேசுவரரைப் பூஜிக்கிறார்கள். குணதோஷங்களை ஆராய்ந்து செய்யும் கர்மத்தாலும் யோகத்தாலும் ஆராதனை புரிகிறார்கள்.

यत्तत्कर्ममयं लिंगं ब्रह्मलिंगं जनोऽर्चयेत् ।
एकान्त-मद्वयं शान्तं तस्मै भगवते नमः ।। १३. ३७ ।।

ततः परस्तादचलो लोकालोकेति नामकः ।
अतः सर्वप्राणिसंघरहिता सा च नारद ।। १४. ४ ।।

ईश्वरेण स लोकानां त्रयाणामन्तगः कृतः ।
सूर्यादीनां ध्रुवान्तानां रश्मयो यद्वशादिह ।। १४. ५ ।।

अर्वाचीनाश्च त्रींल्लोकानातन्वानाः कदाऽपि हि ।
पराचीनत्वभाजोहि न भवन्ति च नारद ।। १४. ६ ।।

भूगोलस्य चतुर्थांशो लोकालोकाचलो मुने ।
विशुद्धसत्त्वं चैश्वर्यं वर्धयन् भगवान् हरिः ।
आस्ते सिद्ध्यष्टकोपेतो विष्वक्सेनादिसंवृतः ।। १४. १२ ।।

13.37. எந்தக் கர்மமயமும் பிரம்மமயமுமான லிங்கத்தை ஜனங்கள் பூஜிக்கிருர்களோ அந்த சாந்தமும் அத்வயமும் ஏகாந்தமுமான பகவானுக்கு நமஸ்காரம்.

14.4. அதற்கப்பால் லோகாலோகம் எனும் மலே உளது. நாரதரே! அது எவ்விதமான பிராணிகளின் கூட்டமும் இல்லாதது.

14.5–6. அது ஈசுவரரால் மூவுலகங்களுக்கும் அந்த ரங்கமாய்ச் செய்யப்பட்டது. சூரியன் முதல் துருவ நக்ஷத்திரம் வரை உள்ள ஜோதிகள் கீழ் நோக்கிய ஒளியுடன் மூன்றுலகங்களேயும் பிரகாசிப்பிப்பவையாயினும் அந்த மலேக் கப்பால் செல்லக் கூடியவையாயில்லே.

14.12. முனிவரே! லோகாலோகமலே பூகோளத்தில் நாலிலொருபங்கு விஸ்தாரமுடையது. பகவான் ஹரியானவர் பரிசுத்தமான ஸத்துவத்தையும் ஐசுவரியத்தையும் வளர்ப்பவராய் அஷ்டசித்திகளுடனும் விஷ்வக்ஸேனர் முதலியவர்களுடனும் கூடியவராய் இங்கே இருக்கிருர்.

ततः परस्ताद्योगेशगतिं शुद्धां वदन्ति हि।
अण्डमध्यगतः सूर्यो द्यावाभूम्योर्यदन्तरम् ॥ १४. १६ ॥

सूर्याण्डगोलयोर्मध्ये कोटच स्युः पंचविंशतिः।
मृतेऽण्ड एष एतस्मिन् जातो मार्तण्डशब्दभाक् ॥ १४. १७ ॥

सर्वजीवनिकायानां सूर्य आत्मा दृगीश्वरः।
एतावान् भूमण्डलस्य सन्निवेश उदाहृतः ॥ १४. ३० ॥

॥ भूगोलवर्णनं समाप्तम् ॥

॥ इति श्रीदेवीभागवते महापुराणे अष्टमस्कन्धे चतुर्दशोऽध्यायः ॥

14.26–27. அதற்கப்பாலிருப்பதை யோகேசுவரர்கள் சஞ்சரிக்கும் பரிசுத்தமான பிரதேசம் என்று கூறுகிறார்கள். பூமிக்கும் வானுலகிற்க்கும் இடையில் அண்டமத்தியில் சூரியன் இருக்கிறார். சூரியனுக்கும் அண்டகோளத்திற்கும் மத்தியில் இடைவெளி இருபத்தைந்து கோடி யோஜனைகள். உயிரற்ற இந்த அண்டத்தில் தோன்றிய காரணத்தால் சூரியன் மார்த்தண்டன் எனப்படுகிறார்.

14.30. ஜீவசமூகம் அனைத்திற்கும் சூரியன் ஆத்மாவும் சாக்ஷியும் ஈசுவரனும் ஆகிறார். இங்ஙனம் பூமண்டலத்தின் இருப்பு விவரித்துக் கூறப்பட்டது.

பூகோள வர்ணனை முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவிபாகவத மகாபுராணத்தில்
எட்டாவது ஸ்கந்தத்தில்
பதினான்காவது அத்தியாயம்
முற்றும்.

॥ खगोलवर्णनम् ॥ ३२ ॥

यैर्यत्र दृश्यते भास्वान् स तेषामुदयः स्मृतः ।
तिरोभावं च यत्रैति तत्रैवास्तमनं रवेः ॥ १५. २३ ॥

नैवास्तमनमर्कस्य नोदयः सर्वदा सतः ।
उदयास्तमन-माख्यं हि दर्शनादर्शनं रवेः ॥ १५. २४ ॥

पर्येति कालचक्रात्मा द्युमणिः कालबुद्धये ।
तथा चान्ये ग्रहाः सोमादयो ये दिग्विचारिणः ॥ १५. ३० ॥

नक्षत्रैः सह चोद्यन्ति सह चाऽस्तं व्रजन्ति ते ।
प्रवहाख्यात्सदा कालचक्रं पर्येति भानुमान् ॥ १५. ३३ ॥

33. வானுலக வர்ணனை

15.23. எவர்களால் எங்கே சூரியன் காணப்படு கிறுனே அவர்களுக்கு அங்கு சூரியன் உதிப்பதாய்க் கூறப் படுகிறது. எங்கு மறைகிறுனே அங்கு சூரியனுக்கு அஸ்த மனம்.

15.24. சூரியன் எப்பொழுதும் இருப்பவனுதலால் அவனுக்கு அஸ்தமனமுமில்லை உதயமுமில்லை. காண்பதும் காணப்படாததும் உதயாஸ்தமனம் எனக் கூறப்படுகிறது.

15.30. ஆகாயத்திற்கு ரத்னம் போன்றிருக்கும் கால சக்ராத்மாவான சூரியன் காலத்தைத் தெரிவிக்கச் சுற்றி வருகிறுன். அவ்வாறேதான் திசைகளில் சுழலும் சந்திரனும் மற்ற கிரகங்களும்.

15.33. அவை நக்ஷத்திரங்களுடன் உதித்து அவற் றுடன் அஸ்தமிக்கின்றன. சூரியன் கால சக்கிரத்தை எப் பொழுதும் அனுசரித்துச் சஞ்சரிக்கிறுன்.

यस्य चक्रं रथस्यैकं द्वादशारं त्रिनाभिकम् ।
षण्नेमि कवयस्तं च वत्सरात्मक-मूचिरे ॥ १५. ३४ ॥

तैलकारकयन्त्रेण चक्रसाम्यं परिभ्रमन् ।
मानसोत्तरनाम्नीह गिरौ पर्येति चांशुमान् ॥ १५. ३६ ॥

तस्मिन्नक्षे कृतं मूलं द्वितीयोऽक्षो ध्रुवे कृतः ।
तुर्यमानेन तैलस्य यन्त्राक्षवदितीरितः ॥ १५. ३७ ॥

कृतो परितनो भागः सूर्यस्य जगतांपतेः ।
रथनीडस्तु षट्त्रिंशल्लक्षयोजनमायतः ॥ १५. ३८ ॥

तावानर्करथस्याऽत्र युगस्तस्मिन् हयाः शुभाः ।
सप्तच्छन्दोऽभिधानाच्च सूरसूतेन योजितः ॥ १५. ३९ ॥

15.34. அவனுடைய தேருக்குப் பன்னிரண்டு ஆரங்களும் மூன்று குடங்களுமுள்ள ஒரே சக்கரம். அதற்கு வட்டைகள் ஆறு. அது ஸம்வத்ஸர வடிவானதென்று பண்டிதர்கள் கூறுகிறார்கள்.

15.36. எண்ணெயாட்டும் செக்கின் சக்கரத்தைப் போல் மானஸோத்தரம் எனும் மலையைச் சூரியன் சுற்றி வருகிறான்.

15.37–38. அச்சின் ஒருமுனை சூரியனிலும் இரண்டாவது முனை துருவத்திலும் உளது. செக்கின் அச்சைப் போலுள்ள அதின் நாலில் ஒருபாகம் அகலமும் முப்பத்தாறு லக்ஷ யோஜனை நீளமும் உள்ளது உலக நாயகனான சூரியனுடைய தேர்க்கால்.

15.39. அப்படிப்பட்ட சூரியனுடைய தேர்க்காலில் ஏழு சந்தங்கள் எனப் பெயர் பெற்ற குதிரைகள் அருணனால் பூட்டப்பட்டிருக்கின்றன.

सौत्ये कर्मणि संयुक्तो वर्तते गरुडाग्रजः।
तथैव वालकिल्याख्या ऋषयोऽङ्गुष्ठपर्वकाः ॥ १५. ४० ॥

प्रमाणेन परिख्याताः षष्टिसाहस्रसंख्यकाः ।
स्तुवन्ति पुरतः सूर्यं सूक्तवाक्यैः सुशोभनैः ॥ १५. ४१ ॥

अथातः श्रूयतां चित्रं सोमादीनां गमादिकम् ।
तद्गत्यनुसृता नृणां शुभाशुभनिदर्शना ॥ १६. १ ॥

यथा कुलालचक्रेण भ्रमता भ्रमतां सह ।
तदा श्रयाणां च गति-रन्याकीटादिनां ,भवेत् ॥ १६. २ ॥

एवं हि राशिवृन्देन कालचक्रेण तेन च ।
मेरुं धुरं च सरतां प्रादक्षिण्येन सर्वदा ॥ १६. ३ ॥

ग्रहाणां भानुमुख्यानां गतिरन्यैव दृश्यते ।
नक्षत्रान्तरगामित्वाद्भान्तरे गमनं तथा ॥ १६. ४ ॥

15.40–41. கருடனுக்குத் தமயனுகிய அந்த அருணன் தேரோட்டும் பணியைப் புரிகிருன். கட்டைவிரல் பருவ அளவினரான வாலகில்யரென்னும் அறுபதினுயிரம் ரிஷிகள் சூரியன் முன்பே இருந்து கொண்டு அவரை அழகிய வேத ஸூக்தங்களால் துதிக்கின்றனர்.

16.1. இனி சந்திரன் முதலியவர்களின் அழகிய கதியைக் கேளும். அவற்றின் போக்கையனுசரித்துத் தான் மனிதர்களுக்கு சுபமானதும் அசுபமானதுமான பயன் காணப்படுகிறது.

16.2–4. குயவனுடைய சக்கரத்தைப் பற்றிக் கொண்டு அத்துடன் சுழலும் புழு முதலியவற்றின் கதி எப்படி தனியாகவும் உள்ளதோ அப்படித்தான் ராசிக் கூட்டத்துடனும் காலசக்கரத்துடனும் மேருவை எப்பொழுதும் பிரதக்ஷிணமாகச் சுற்றும் சூரியன் முதலிய கிரகங்களின் கதி வேருகவும் காணப்படுகிறது. தேஜோ மண்டலத்தில் நக்ஷத்திரங்களிடை செல்வதால் அப்படி போக்கு ஏற்படுகிறது.

गतिद्वयं चाऽविरुद्धं सर्वत्रैष विनिर्णयः ।
स एव भगवानादिपुरुषो लोकभावनः ॥ १६. ५ ॥

कालचक्रगतो भुंक्ते मासान् द्वादशराशिभिः ।
संवत्सरस्यावयवान् मासः पक्षद्वयं दिवा ॥
संवत्सरस्यावयवः कविभिश्चोपवर्णितः ॥ १६. ११ ॥

यावताऽर्धेनाकाशवीथ्यां प्रचरते रविः ॥
तं प्राक्तना वर्णयन्ति अयनं मुनिपूजिताः ॥ १६. १४ ॥

अथ यावन्नभोमण्डलं सह प्रतिगच्छति ।
कात्स्न्येंन सह भुंजीत कालं संवत्सरं विदुः ।
एवं भानोर्गतिः प्रोक्ता चन्द्रादीनां निबोधत ॥ १३. १७ ॥

16.5–11. இரண்டு விதமான கதிகளுக்கும் முரண்பாடில்லை. எல்லா விடங்களிலும் இப்படியே நிச்சயிக்கப்படுகின்றது. உலகை நடத்துவிக்கும் ஆதிபுருஷராகிய பகவானே—சூரிய வடிவில்—கால சக்கரத்திலிருந்துகொண்டு வருஷத்தின் அவயவங்களான பன்னிரண்டு ராசிகளால் மாதங்களை அனுபவிக்கிறார். வருஷத்தின் அவயவங்கள் மாதங்களும் இருபக்ஷங்களும் நாட்களும் என்று கவிகளால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

16.14. ஆகாய வீதியில் பாதியைக் கடக்க சூரியனுக்கு எவ்வளவு காலமாகிறதோ அதை முனிவர்களால் பூஜிக்கப் பெற்ற முன்னோர்கள் அயனம் என்று வர்ணிக்கின்றனர்.

16.17. ஆகாயமண்டலம் முழுவதையும் கடக்கும் காலம் வருஷம் எனப்படும். இங்ஙனம் சூரியனுடைய கதி கூறப்பட்டது. இனி சந்திரன் முதலிய கிரகங்களின் கதியைப் பற்றி அறிந்து கொள்ளும்.

पूर्यमाणकलाभिश्चामराणां प्रीतिमावहन् ।
क्षीयमाणकलाभिश्च पितॄणां चित्तरंजकः ॥ १६. २० ॥

अहोरात्राणि तन्वानः पूर्वापरसुघस्त्रकैः ।
सर्वजीवनिकायस्य प्राणो जीवः स एव हि ॥ १६. २१ ॥

भुंक्ते चैकैकनक्षत्रं मुहूर्तत्रिंशता विभुः ।
स एव षोडशकलः पुरुषोऽनादिरुत्तमः ॥ १६. २२ ॥

मनोमयोऽप्यन्नमयोऽमृतधामा सुधाकरः ।
देवपितृमनुष्यादि सरीसृप स वीरुधाम् ॥ १६. २३ ॥

प्राणाप्ययनशीलत्वात् स सर्वमय उच्यते ।
ततो भचक्रं भ्रमति योजनानां त्रिलक्षतः ॥ १६. २४ ॥

16.20. வளரும் கலைகளுடன் கூடியிருக்கும் காலத்தில் தேவர்களுக்குப் பிரீதியைச் செய்பவனும் தேயுங் கலைகளுடன் கூடியிருக்கும் பொழுது பிதிருக்களுக்கு மனமகிழ்ச்சி யளிப்பவனும் சந்திரன் இருக்கிறான்.

16.21. அவர்களுக்குப் பூர்வபக்ஷத்தைப் பகலாயும் அபரபக்ஷத்தை இரவாயும் செய்துகொண்டு பிராணி வர்க்கத்திற்குப் பிராணனும் ஜீவனும் அவனே விளங்குகிறான்.

16.22. பிரபுவாகிய சந்திரன் ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் முப்பது முகூர்த்தம் (ஒரு முகூர்த்தமாவது இரண்டு நாழிகை அல்லது நாற்பத்தெட்டு நிமிஷம்) அனுபவிக்கிறான். அவன் பதினாறு கலைகளுடன் கூடிய அனாதியான உத்தம புருஷன்.

16.23–24. அவன் மனோமயனும் அன்னமயனும் அமிருதத்திற்கிருப்பிடமாயும் அமிருதத்தை உண்டாக்குபவனும் தேவர்கள், பிதுருக்கள், மனுஷ்யர்கள் முதலியவர்களுக்கும் ஊர்வனவாகிய பாம்பு முதலியவைகட்கும் செடி கொடிகளுக்கும் பிராணனைத் திருப்தி செய்விக்கும் குணமுடையவனாதலால் ஸர்வமயன் என்று சொல்லப்படுபவனுயுமிருக்கிறான்.

ततः शुक्रो द्विलक्षेण योजनानामथोपरि ।
पुरः पश्चात्सहैवासावर्कस्य परिवर्तते ।। १६. २६ ।।

शीघ्रमन्दसमानाभिर्विचरन् विभुः ।
लोकानामनुकूलोऽयं प्रायः प्रोक्तः शुभावहः ।। १६. २७ ।।

शुक्राद्बुधः समाख्यातो योजनानां द्विलक्षतः ।
शीघ्रमन्दसमानाभिर्गतिभिः शुक्रवत्सदा ।। १६. २८ ।।

यदाऽर्काद् व्यतिरिच्येत सौम्यः प्रायेण तत्र तु ।।
अतिवाताभ्रपातानां वृष्ट्यादिभयसूचकः ।। १६. २९ ।।

16.26–27. இவன் ஒளிச்சக்கரத்தில் மூன்று லக்ஷம் யோஜனை சுற்றுகிறுன். இவனுக்கப்பால் இரண்டு லக்ஷம் யோஜனைக்கு மேல் சூரியனுக்கு முன்னும் பின்னுமாகவும் சூரியனுடனும் சீக்கிரம் மந்தம் ஸமமாகிய கதிகளுடன் பிரபுவாகிய சுக்ரன் சஞ்சரித்துக் கொண்டு சுழல்கிறுன். உலக மக்களுக்குப் பெரும்பாலும் இவன் அனுகூலனுயும் சுபத்தைச் செய்பவனுயும் உள்ளவன்.

16.28. சுக்கிரனுக்கு மேல் இரண்டு லக்ஷம் யோஜனை தூரத்தில் புதன் எனப்படுபவன் சுக்கிரனைப் போலவே சீக்கிரம் மந்தம் ஸமானம் என்ற கதிகளுடன் எப்பொழுதும் சஞ்சரிப்பவனுகச் சொல்லப்படுகிறுன்.

16.29. இவன் பெரும்பாலும் மங்களத்தைச் செய்பவனுயினும் சூரியனை அதிக்கிரமிக்கும்போது பெருங்காற்று, பெருமழை, இடி முதலிய பயத்தை அறிவிப்பவனுகிறுன்.

उपरिष्टात्ततो भौमो योजनानां द्विलक्षतः।
पक्षैस्त्रिभिस्त्रिभिः सोऽयं भुंक्ते राशीनथैकशः ।। १६. ३० ।।

द्वादशापि च देवर्षे यदि वक्रो न जायते ।
प्रायेणाशुभकृत्सोऽयं ग्रहौघानां च सूचकः ।। १६. ३१ ।।

ततो द्विलक्षमानेन योजनानां च गीष्पतिः ।
एकैकस्मिन्नथो राशौ भुंक्ते संवत्सरं चरन् ।। १६. ३२ ।।

यदि वक्रो भवेन्नैवानुकूलो ब्रह्मवादिनाम् ।
ततः शनैश्चरो घोरो लक्षद्वयपरो मितः ।। १६. ३३ ।।

योजनैः सूर्यपुत्रोऽयं त्रिंशन्मासैः परिभ्रमन् ।
एकैकराशौ पर्येति सर्वान् राशीन् महाग्रहः ।। १६. ३४ ।।

16.30–31 தேவரிஷியே! அதற்கு இரண்டு லக்ஷம் யோஜனைக்கப்பாலுள்ளது செவ்வாய் கிரகம். அது பன்னிரண்டு ராசிகளில் ஒவ்வொன்றையும், வக்ரமாய்ச் செல்லாவிட்டால், மூன்று பக்ஷங்களில் கடந்து செல்லும். அது கிரகக் கூட்டத்துள் பொதுவாக அசுபத்தைச் செய்வதாயும் சூசிப்பதாயும் உள்ளது.

16.32. அதற்கு இரண்டு லக்ஷம் யோஜனைக்கப்பால் உள்ளது வியாழன். அது ஒவ்வொரு ராசியையும் ஒரு வருஷத்தில் கடக்கும்.

16.33–34. அது வக்ரமானல் பிரம்மவாதிகளுக்கு அனுகூலமாகாது. அதற்கு இரண்டு லக்ஷம் யோஜனைக்கப் பால் உள்ளவர் கோரமான சனிபகவான். அவர் சூரிய புத்திரர், மகாக்கிரகமாகிய அவர் ஒவ்வொரு ராசியையும் முப்பது மாதங்களில் கடந்து செல்வார்.

सर्वेषामशुभो मन्दः प्रोक्तः कालविदां वरैः ।
तत उत्तरतः प्रोक्तमेकादशसुलक्षकैः ॥ १६. ३५ ॥

योजनैः परिसंख्यातं सप्तर्षीणां च मण्डलम् ।
लोकानां शं भावयन्तो मुनयः सप्त ते मुने ।
यत्तद्विष्णुपदं स्थानं दक्षिणं क्रमते च ते ॥ १६. ३६ ॥

अथर्षिमण्डलादूर्ध्वं योजनानां प्रमाणतः ।
लक्षैस्त्रयोदशमितैः परमं वैष्णवं पदम् ॥ १७. १ ॥

16.35–36. அவர் எல்லோருக்கும் அசுபத்தை விளை விப்பவர். காலக் கணக்கிடுபவர்களால் அவர் மந்தர் எனக் கூறப்படுவார். அதற்குப் பதினொரு லக்ஷம் யோஜனைக் கப்பால் ஸப்தரிஷிகளின் மண்டலம் உளது. முனிவரே! அந்த ஏழு முனிவர்களும் உலகங்களுக்கு மங்களத்தைச் செய்பவர்கள். விஷ்ணுபதம் எனும் துருவஸ்தானம் எதுவோ அதை ஸப்தரிஷிகள் பிரதக்ஷிணம் செய்கிறார்கள்.

17.1. ஸப்தரிஷி மண்டலத்திற்கு மேல் பதின்மூன்று லக்ஷம் யோஜனை தூரத்தில் உள்ளது சிறப்பான விஷ்ணுபதம்.

महाभागवतः श्रीमान् वर्तते लोकवन्दितः ।
औत्तानपदिरिन्द्रेण वह्निना कश्यपेन च ॥ १७. २ ॥

धर्मेण सह चैवाऽऽस्ते समकालयुजा ध्रुवः ।
बहुमानं दक्षिणतः कुर्वद्भिः प्रेक्षकैः सदा ॥ १७. ३ ॥

आजीव्यः कल्पजीविना-मुपास्ते भगवत्पदम् ।
ज्योतिर्गणानां सर्वेषां ग्रहनक्षत्रभादिनाम् ॥ १७. ४ ॥

कालेनाऽनिमिषेणाऽयं भ्राम्यतामव्यक्तरंहसा ।
अवष्टम्भस्थाणुरिव विहितश्चेश्वरेण सः ॥ १७. ५ ॥

17.2–5. அவ்விடத்தில் உத்தானபாதருடைய புத்திரரும் மகாபாகவதரும் ஸ்ரீமானுமான துருவர் ஒரே காலத்தில் சேர்ந்து (நக்ஷத்திர ரூபிகளாக) அவரைப் பார்க்கும் இந்திரன், அக்னி, கசியபர், தர்மர் ஆகியோரால் பிரதக்ஷிணம் செய்யப்பட்டவராயும் உலகத்தால் வந்தனம் செய்யப்பட்டவராயும் எப்பொழுதும் விளங்குகிறார். கல்பம் முடியும் வரை ஜீவிப்பவர்களுக்கு அவர் உயிர் ஸ்தானமாயிருந்துகொண்டு பகவத் பதத்தை உபாசிக்கிறார். வெளிப்படையாய்த் தெரியாத வேகத்துடன் இடைவிடாது சுழலும் கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலிய ஜோதிர்கணங்கள் அனைத்திற்கும் ஆதாரமான ஸ்தம்பம் போல் பகவானால் அவர் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறார்.

एतद्भगवतो विष्णोः सर्वदेवमयं वपुः ।
सन्ध्यायां प्रत्यहं ध्यायेत्प्रयतो वाग्यतो मुनिः ॥ १७. २७ ॥

निरिक्षमाणश्चोत्तिष्ठन्मन्त्रेणानेन धीश्वरः ।
नमो ज्योतिर्लोकाय कालायानिमिषाम्पतये
महापुरुषायाऽभिधीमहीति ॥ १७. २८ ॥

॥ खगोलवर्णनं समाप्तम् ॥

इति श्रीदेवीभागवते महापुराणे अष्टमस्कन्धे सप्तदशोऽध्यायः ॥

17.27–28. பகவான் விஷ்ணுவினுடைய ஸர்வ தேவ மய சரீரமாகிய இதை (ஜோதிர் மண்டலத்தை) தினந் தோறும் ஸந்தியாகாலத்தில் பரிசுத்தனுகவும் வாக்கை யடக்கியவனுகவும் ஜோதிர் மண்டலத்தைப் பார்த்து நின்று கொண்டு புத்திமான் 'நமோ ஜ்யோதிர்லோகாய காலாய அநிமிஷாம்பதயே மஹாபுருஷாய அபிதீமஹி' (ஜோதிர் லோக ஸ்வரூபியும் காலரூபியும் தேவர்களின் தலைவரும் மஹா புருஷருமான பகவானை தியானிக்கிறோம்) என்ற மந்திரத்தைச் சொல்லி தியானிக்கவேண்டும்.

வானுலக வர்ணனை முற்றும்.

இங்ஙனம் ஸ்ரீதேவீபாகவத மகாபுராணத்தில்
எட்டாவது ஸ்கந்தத்தில் பதினேழாவது
அத்தியாயம் முற்றும்.

குருகீதை	3	25
நாரத பக்தி ஸூத்திரங்கள்	1	75
ஜபவிதானம்	4	00
ஸந்தியாவந்தனம் (தமிழ்)	2	00
,, காலிகோ	4	00
,, ,, (நாகரம்–தமிழ்)	4	00
தேவீ ஸூக்தங்களும் உபநிஷதங்களும்	1	50
புருஷ ஸூக்தம்	2	25
பூஜாவிதானம் (தமிழ்)	8	00
,, (நாகரம்)	4	50

V. புராணங்கள்

ஷை இரண்டாம் பாகம் (ஸ்கந்தம் 10-12) பக்கம் 560	12	50

VII. ஸ்தோத்தரங்கள்

ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்	7	50
ஸௌந்தர்யலஹரீ (மூலம்) (நாகரம்–தமிழ்)	1	50
சிவானந்தலஹரீ பாஷ்யம்	4	00
(மூலம்)	1	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	50
ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யம்	10	00
,, ,, பாராயணம்	3	00
,, ,, மூலம்	2	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம்	6	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்ரம்	1	00
ஸ்ரீ வித்யா	5	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள்	2	00
சித்தி விநாயக பூஜை	0	50